பிரவீணாவின்

என் உயிரே!

என் உறவே!!

பாகம் - 1

என் உயிரே! என் உறவே!!

(பாகம் - 1)

1

காலைக் கதிரவன் தன் கரங்களினால் மெல்ல மெல்ல இருளென்னும் போர்வையினைப் பகலென்னும் மேனியிலிருந்து விலக்கிக் கொண் டிருந்தான். கதிரவனைக் கண்ட பறவைகள் அக் கதிரவனை வரவேற்கும் விதமாக ஆர்ப்பரித்துத் தங்கள் சந்தோஷத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

சென்னையின் வழக்கமான பரபரப்பு மிகுந்த காலை தொடங்கியிருந்தது. ஆனால், மைலாப்பூரில் அமைந்திருந்த அடுக்கு மாடிக் கட்டடத்தின் 4ஆவது மாடியின் ஒரு ஃப்ளாட்டில், இதையெல்லாம் கண்மூடி ரசித்துக் கொண்டே, விழிப்பு வந்த போதும், எழ மனமில்லாமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள் கீர்த்தனா என்கின்ற கீர்த்தி. இவள்தான் நம் கதாநாயகி.

கீர்த்தனா - இறைவன் மிகுந்த சந்தோஷமான தருணத்தில் படைத்த படைப்பு. அறிவு, அழகு, பண்பு, செல்வம் இவை அனைத்தும் அப்படைப்பை நிறைவு செய்யும் வண்ணம் படைத்து இவ்வுலகிற்கு அனுப்பியிருந்தான்.

அழகான அன்பான தாய், தந்தைக்குத் தவமாய்ப் பிறந்த ஒற்றை ரோஜா.

தந்தை ராகவன் வங்கி ஒன்றில் மேனேஜராக இருக்கின்றார். தன் ஒரே செல்ல மகளின் தேவைக்கும் அதிகமான வருமானம்.

தாய் மைதிலி... கீர்த்தி, ராகவ் மட்டுமே தனது உலகமாய் வாழ்பவள். ராகவனைத் திருமணம் செய்தாள் என்ற ஒரே காரணத்தால் உறவுகளினால் உதறித் தள்ளப்பட்டவள். ஆனால், அந்த மன வருத்தமெல்லாம் ராகவனின் அன்பினால் துடைக்கப்பட்டு, வாழ்க்கையை நிறைவுடனும், மகிழ்வுடனும் அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

கீர்த்தி பி.இ. (சி.எஸ்.) - படித்து முடித்து இன்று ஒரு வளர்ந்து கொண்டிருக்கும் நிலையில் உள்ள சாஃப்ட்வேர் கம்பெனியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறாள்.

"கீர்த்தி!" என்ற மைதிலியின் குரல் கீர்த்தியின் அருகாமையில் கேட்டது.

தனது தாயின் குரலைக் கேட்ட கீர்த்தி, "என்னம்மா?" என்று தூக்கக் கலக்கம் மாறாமல் சிணுங்கினாள்.

"மணி என்னாகிறது பார்! அப்புறம் லேட்டாகுதுன்னு என்னைப் படுத்துவ. எழுந்திரும்மா!" என்று கெஞ்சலுடன் எழுப்பினாள்.

ஏனென்றால், கீர்த்தியிடம் காரியம் ஆக வேண்டுமென்றால் கோபமோ அல்லது அதிகாரமோ எடுபடாது. கொஞ்சம் இலகுவாகப் பேசினால் போதும்.

மைதிலியின் குணமும் அப்படித்தான். தாயைப் போலப் பிள்ளை என்று சும்மாவா சொன்னார்கள்! மைதிலியும் அந்த

பாணியைத்தான் கடைப்பிடிப்பாள் மகளிடம். இன்றும் அப்படித்தான்.

தாயின் நெகிழ்வான குரலில் மெதுவாகக் கண்களைத் திறந்த கீர்த்தி, "டைம் என்னம்மா...? இவ்ளோ சீக்கிரம் எழுப்புறீங்க?" என்று போர்வையை விலக்காமல் வினவினாள்.

"6.30," என்ற மைதிலியிடம்,

"அம்மா! கரெக்ட்டா சொல்லுங்கம்மா..." என்றபடி மீண்டும் படுக்கையில் புரண்டாள்.

"உனக்கு வர வரக் கொழுப்பு அதிகமாயிட்டே வருது. உன்னை..." என்று பொய்யான கோபத்துடன் கடிந்தவள், "6.27 ஆகுது. போதுமா? இப்ப எழப் போகிறாயா... இல்லையா?" என்ற மைதிலியிடம்,

"அய்யோ அம்மா! இன்னும் த்ரீ மினிட்ஸ் இருக்கிறது. என் டைமை வேஸ்ட் பண்ணீட்டீங்களே..." என்று அலுத்தவள், அதற்கு மேல் எதுவும் பேசாமல் போர்வைக்குள் சரண் புகுந்தாள்.

இனி இவளிடம் பேசிப் பிரயோஜனம் இல்லை என்பதை உணர்ந்த மைதிலி, எழுந்து, "இறக்கை கட்டிப் பறக்கும்போது உனக்கு இருக்குடி!" என்று முணுமுணுத்த வாறு கிச்சனுக்குள் புகுந்தாள்.

அதன் பிறகு குளித்து முடித்து, கீர்த்தி வெளியே வந்த பொழுது, ராகவன் தன் ஜாகிங்கை முடித்து விட்டு வந்து நியூஸ் பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார்.

"குட் மார்னிங்ப்பா! இப்பத்தான் ஜாகிங் முடித்து விட்டு வருகிறீர்களா?" என்றபடி அவர் அருகில் அமர்ந்து கீர்த்தியும் பேப்பரில் கண் பதித்தாள்.

"குட் மார்னிங்டா!" என்றவர், "இன்னைக்குக் கொஞ்சம் லேட் ஆகி விட்டது," என்று கூறி, அதற்குரிய காரணத்தையும் விளக்கினார்.

"ஓ அப்படியாப்பா!" என்றவள், கிச்சனில் மும்முரமாய் வேலையில் இருந்த மைதிலியை நோக்கியவள், தன் குறும்பைத் தொடங்கினாள்.

"அப்பா!" என்று இழுத்தவள், "நீங்க இப்படி லேட் பண்ணிடுவீங்க. அப்புறம் ஆபீஸ் கிளம்பும்போது என்னமோ அம்மாவினால்தான் லேட் என்பது மாதிரி லேட் ஆகிடுச்சு... லேட் ஆகிடுச்சுன்னு கால்ல சுடுதண்ணி கொட்டுன மாதிரி குதிப்பீங்க. என்னங்கம்மா, நான் சொல்வது சரிதானே?" என்று மைதிலியையும் தன் சப்போர்ட்டாக இழுத்தாள்.

ஹாலில் அவள் பேசியது எல்லாம் மைதிலியின் காதில் விழாமல் இல்லை. தினமும் கீர்த்தி என்ன செய்வாளோ, அதையெல்லாம் தன் கணவன் செய்வது போல மாற்றிச் சொல்லிக் கொண்டிருந்த, தன் மகளின் குறும்புத் தனத்தை ரசித்தவாறே வேலை செய்து கொண்டிருந்தாள்.

கீர்த்தியோ ராகவை அத்துடன் விடுவதாக இல்லை. "ராகவ், வர வரச் சரி கிடையாது நீ! அம்மாவுக்குத் தெரியாமல் அங்க எந்தப் பெண்ணாவது கம்பெனி குடுக்குதா என்ன...! ஜாகிங் பண்ற டைம் அதிகமாயிட்டே வருதே. விடக் கூடாதே இப்படியே..." என்றபடி கண் சிமிட்டினாள்.

"ஏன்டா? இன்னைக்கு யாரும் உன்கிட்ட மாட்டலயா! நான்தான் கிடைத்தேனா?" என்றார் ராகவ் - அப்பாவியாக.

அவர்கள் இருவருக்கும் காஃபி எடுத்து வந்த மைதிலி, கீர்த்தியைப் பார்த்து, "உனக்குச் செல்லம் குடுத்து வாய் ஜாஸ்தி ஆகிவிட்டது. இந்த வாயெல்லாம் இந்த வீட்டோட நிறுத்திக்க. என் அண்ணன் வீட்டில் மானத்தை வாங்கிடாதே. பாவம் விநோத்!" என்றாள்.

கீர்த்தி சீரியஸாகவே முகத்தை வைத்துக் கொண்டு, "அப்படி ஒரு பாவம் எனக்கு ஒன்றும் வேண்டாம். உங்க மருமகனுக்கு வேற ஒரு பொண்ணைப் பாருங்க. யாரும் ஒண்ணும் இங்க அவனை மேரேஜ் பண்ண வேண்டுமென்று

ஒத்தைக் காலில் நிற்கவில்லை..." என்றவள், தனது தந்தையிடம் திரும்பி, "அப்பா, அவனை என் பெயரை ஒழுங்கா கூப்பிடச் சொல்லுங்க, முதலில்!" என்றவளிடம்,

"நீ விநோத்தை மரியாதையாகக் கூப்பிட ட்ரை பண்ணுடா." - மரியாதையாக என்ற இடத்தில் அழுத்தித் திருத்தினார்.

"இந்த விசயத்திலாவது உங்க பொண்ணை சப்போர்ட் பண்ணாம இருக்கிறீங்களே... அந்த மட்டில் எனக்குச் சந்தோசம்!" என்றாள் மைதிலி, ராகவனைப் பார்த்து.

மைதிலி கொஞ்சம் டென்ஷனாக இருப்பதை உணர்ந்த கீர்த்தி, ராகவனிடம், "அப்பா, அம்மாவுக்கு என்ன ஆச்சு? ரொம்ப சூடா இருக்காங்க!" என்று கேலியாகக் கேட்டவள், மைதிலியின் அருகில் சென்று அமர்ந்து, "அம்மா, இந்த ஜாகிங் மேட்டரெல்லாம் சும்மா. நீங்க கண்டதெல்லாம் நினைத்து ஃபீல் பண்ணாதீங்க. ராகவ் யாரையும் பார்க்க மாட்டான். ராகவைத்தான் பொண்ணுங்க பார்ப்பாங்க. அதுக்குக் காரணம் இந்த ராகவ்தான்.

"பின்னே, இந்த வயதில் தலைக்கு டை அடிச்சு, எக்சர்ஸைஸ் பண்ணி இன்னும் சின்னப் பையன் மாதிரி இருந்தா... அந்தப் பொண்ணுங்களும் என்ன பண்ணுவாங்க. ஆனா, நீ கவலைப்படாத மைதிலி! இனிமேல் ராகவ்க்கு காவலா நான் போகிறேன்..." என்ற மகளை நினைத்துச் சிரித்தாள் மைதிலி.

ஏனென்றால் 6.30க்கு எழுப்பினாலே எழச் சோம்பேறித்தனப் படுபவள், தினமும் ஐந்து மணிக்கு எழுந்து ஜாகிங் செல்லும் தனது கணவனுக்குக் காவலாகச் செல்லுவதாய்ச் சொன்னால் சிரிப்பு வராமல் என்ன செய்யும்?

தனக்குக் காவலாய் வருவதாகச் சொல்லிக் கிண்டல் அடித்துக் கொண்டிருந்த கீர்த்தியை, "ஏய்!" என்று ராகவ் துரத்த,

"அம்மா... அப்பாவிடம் இருந்து என்னைக் காப்பாத்துங்க..." என்று மைதிலியின் பின்னால் சென்று கட்டிக் கொண்டாள்.

"நான் எப்பவும் என் புருஷன் கட்சிதான்பா!" என்றபடி, கீர்த்தியைத் தன் கணவனிடம் மாட்டி விட்டாள் மைதிலி.

"இப்ப என்ன பண்ணுவீங்க மேடம்?" என்று அவளது காதைத் திருகினார் ராகவ்.

"எனக்குக் காவலா நீங்க வர்றீங்களா மேடம்! அப்புறம் வேறென்ன மேடம் பண்ணுவீங்க?" என்றவரிடம்,

"சரி, சரி. விடுங்க. எனக்கு இந்த வீட்டில் சப்போர்ட் பண்ண யாரு இருக்காங்க?

"அய்யோ கீர்த்தி, இப்படித் தனியாளா நிற்கிறாயே... உன் நிலைமை இந்த உலகத்தில் வேறு யாருக்கும் வரக் கூடாது.." என்று புலம்பியவாறே தனது அறைக்குள் சென்ற மகளை ரசித்தவாறே சிரித்தனர் அவளைப் பெற்றவர்கள்.

தனது அறைக்குள் சென்றவள் அலுவலகம் செல்லத் தயாரானாள். கண்ணாடியின் முன் நின்று தலை வாரிக் கொண்டிருந்தவளுக்கு இந்த உலகத்தின் கொடுத்து வைத்தவர்களின் பட்டியலில் தனது பெயர்தான் முதல் இடமாக இருக்க வேண்டும் என்று நினைத்த பொழுதே கண்ணாடியில் பார்த்த அவள் முகம் பூரித்திருந்தது.

பின்னே இருக்காதா! அவளைப் பொறுத்தவரை அவளது தந்தை அவளுக்கு ஒரு ஹீரோ. தாய் ஒரு தேவதை. அவள் மனம் நோகாமல் ஒவ்வொரு விஷயத்தையும் பார்த்துப் பார்த்துப் பண்ணுபவர்கள். அவளைப் பொறுத்த வரை அவளது வீடு ஒரு பிருந்தாவனம்.

அவளது கல்லூரியில் கூடப் பெரும்பாலான அவளது பேச்சு ராகவ், மைதிலியைப் பற்றித்தான் இருக்கும். அதிலும் ராகவைப் பற்றித் தினமும் ஒரு வார்த்தையாவது பேசா

விட்டால் அவளுக்குத் தூக்கம் வராது. சில நேரங்களில் மைதிலிக்குச் சுற்றியெல்லாம் போடுவாள்.

"என்னடா... என்ன விஷயம்? அம்மாவுக்கு இப்படி ஐஸ் வைக்கிறாய்!" என்று விசாரித்தால்,

"நீங்க வேறப்பா. நீங்க ஸ்மார்ட்டா, சூப்பரா இருந்துட்டு அம்மாவை பிருத்விராஜ், சம்யுக்தாவைத் தூக்கிட்டு வந்த மாதிரித் தூக்கிட்டு வந்துட்டீங்க. உங்க கதையைச் சொன்னால் என் ஃபிரெண்ட்ஸ் எல்லாம் அம்மா மேல கண்ணு வச்சுட்டாங்க..." என்றபடி, "ஊருக்கண்ணு, உலகுக் கண்ணு, தென் லாஸ்ட் இந்தக் கீர்த்திக் கண்ணு..." என்றபடி, "துப்புங்கம்மா..." என்பாள் கீர்த்தி.

"கீர்த்திம்மா! உனக்குத்தான் வேலை இல்ல. நீ பண்ற வேலைக்கெல்லாம் என்னை வேற கூட்டுச் சேர்க்கிறியா?" என்று மைதிலி பொய்யாகச் சலிப்பாள்.

"ஹேய் மைதிலி, சும்மா பந்தாப் பண்ணாதே. ஏதோ எங்க அப்பாவை மேரேஜ் பண்ணினதுனால இவ்ளோ மவுசு. இல்லைன்னா யாரு மதிக்கப் போறா!" என்று மிரட்டிப் பணிய வைப்பாள்.

"கீர்த்திம்மா... லேட் ஆகுது. லஞ்ச் பாக்ஸில் லஞ்ச் எடுத்து வச்சுட்டேன். சாப்பிட வா!" என்ற மைதிலியின் குரல் கேட்டு வேகமாய்த் தனது அலங்காரத்தை முடித்து வெளியே வந்தவள்... பேருக்கு இரண்டு வாய் போட்டுக் கொண்டு கிளம்பினாள் கீர்த்தி.

ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்தவள், பால்கனியில் நின்ற ராகவ், மைதிலியை மேலே பார்த்தபடி கையசைத்து விட்டு அவளின் அபார்ட்மெண்ட் கேட்டைத் தாண்டினாள்.

அவள் போகும்வரை பார்த்துக் கொண்டிருந்த ராகவ், மைதிலியிடம், "நம்ம கீர்த்தி எப்போதும் இப்படிச் சந்தோஷமா இருக்க வேண்டும். இதுதான் நான் கடவுளிடம் வேண்டுவது. இந்தச் சந்தோஷம் அவ போகப் போற இடத்திலயும்

இருக்கணும். அது போதும் எனக்கு..." என்றார், அவள் போன திசையைப் பார்த்தபடி.

மௌண்ட் ரோடு சிக்னலில் நின்று கொண்டிருந்த கீர்த்தி மணியைப் பார்த்த பொழுது 8.45 ஆகியிருந்தது.

'ச்சேய்...' என்று எரிச்சலுடன் சிக்னலை நோக்கியவள், இன்னும் 15 நிமிடத்தில் ஆஃபீஸில் இருக்க வேண்டுமே. இன்று லேட்தான் என்று நினைக்கும்போதே சிக்னல் மாறியிருந்தது.

வேகமாக பைக்கை ஸ்டார்ட் செய்தாள் கீர்த்தி. ஆனால், கீர்த்தியின் பின்னால் நின்றிருந்த ஒரு பைக்காரன், கிடைத்த கேப்பில் அவர்களுக்கு முன்னால் நின்று கொண்டிருந்த பேருந்தையும் தாண்டி வேகமாகச் செல்ல முயல, அவனது அவசரத்தினால், மொத்தப் போக்குவரத்தும் மீண்டும் ஸ்தம்பித்தது.

நல்ல வேளையாகப் பேருந்து ஓட்டுனரினால் உயிர்ச் சேதம் தடுக்கப்பட்டாலும் விபத்தினைத் தவிர்க்க முடியவில்லை. பைக் பேருந்தின் இடையில் மாட்டினதால், பேருந்துக்குப் பின்னால் நின்ற அத்தனை வாகனங்களும் முன்னேற வழியில்லாமல் நின்று கொண்டிருந்தன.

ஒரு வழியாக அந்தச் சிக்னலைக் கடந்த போது மணி 10-ஐ நெருங்கியிருந்தது. ஏற்கெனவே லேட் ஆகிவிட்டது என்ற எரிச்சலில் இருந்த கீர்த்தி, அந்தப் பைக்கில் வந்தவனை மனதிற்குள்ளாகத் திட்டிக் கொண்டிருந்தாள்.

என்னதான் அவசரமோ என்று நினைத்தவளுக்கு, அப்பொழுதுதான் அவளது அலுவலகம் ஞாபகம் வந்தது. போனவுடன் அவளது டீம் லீடர் கேசவனிடம் அவளது அன்றைய கால தாமதத்திற்கு விளக்கம் வேறு அளிக்க வேண்டும் என்று நினைத்தபடி, முந்தைய தினம் அலுவலகத்தில் நடந்தவற்றை நினைத்தபடி அலுவலகத்தை நோக்கி முடிந்த அளவு வேகமாகச் சென்று கொண்டிருந்தாள் கீர்த்தி.

நேற்று அவளது எம்.டி. பாலா அலுவலகம் வரவில்லை. அதனால் அவள் இருக்கும் தளத்தில் ஒரே ஆட்டம், பாட்டம். ஒருவர் கூட வேலை செய்யவில்லை. கீர்த்தி செய்து கொண்டிருந்த ப்ராஜெக்ட்டும் முடிந்து விட்டிருந்தது. அதனால் அவளும் அன்றையக் கலகலப்பில் தன் பங்கிற்குத் தனது தோழி கவியுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள்.

கவி கீர்த்தியுடன் அந்த அலுவலகத்தில் சேர்ந்தவள். சேர்ந்த நாள் முதல் அவர்கள் இருவரும் இணை பிரியாத் தோழிகள்.

கவியும் அவளுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தாலும், கவிக்குப் பாலா வராததில் கொஞ்சம் வருத்தம். அவ்வப்போது அவள் கீர்த்தியிடம் புலம்பிக் கொண்டிருந்தாள்.

"பாலா சார் இன்னைக்கு லீவ் என்று தெரிந்திருந்தால் நானும் வந்திருக்க மாட்டேன். போர் அடிக்குதுப்பா!" என்று அவள் விளையாட்டாகக் கூறினாலும், கீர்த்திக்குச் சிரிப்பாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது.

ஏனென்றால் பாலா காலையில் வரும் பொழுது மட்டுமே பார்க்க முடியும். மாலையில் கூட அரிதுதான். அவ்வப்போது சந்தேகங்களை நிவர்த்தி பண்ண வேண்டியிருந்தால் மட்டுமே தனது அறையை விட்டு வெளியே வருவான்.

கீர்த்திக்குத் தெரிந்தவரையில் அவளது இன்டர் வியூவில் மட்டுமே பேசியிருக்கிறாள். அதன் பிறகு பேசியது இல்லை. ப்ராஜெக்ட் சந்தேகம் என்றால் கூட டீம் லீடர் மூலமாகத்தான் தொடர்பு கொள்ள முடியும். அப்படிப்பட்டவன் வரவில்லை என்பதால் போர் அடிப்பதாகக் கவி சொன்ன போது கீர்த்திக்கு ஆச்சரியமும், சிரிப்பும் வராமல் என்ன செய்யும்!

நினைத்த பொழுதே கீர்த்திக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. உண்மையில் அவனுக்கு அவர்களது பெயர்கள் கூடத் தெரிந்திருக்குமா என்பதே ஆச்சரியம்.

கீர்த்தி எவ்வளவுதான் வீட்டில் வாயடித்தாலும் வெளி இடங்களில் அந்த அளவு பேச மாட்டாள். அந்தந்த இடங்களில் சூழ்நிலைக்கு ஏற்றவாறே கவனமாக நடந்து கொள்வாள். அந்த அளவுக்கு அவளது பெற்றோரின் வளர்ப்பு இருந்தது. அலுவலகத்தில் கூடத் தானுண்டு தன் வேலையுண்டு என்றுதான் இருப்பாள். அதற்காக உம்மணா மூஞ்சியாகவும் இருக்க மாட்டாள். கவிதாவிடம் மட்டுமே நெருக்கமாகப் பழகுவாள்.

கவியைக் கிண்டல் செய்வதே அலுவலகத்தில் கீர்த்தியின் பொழுது போக்கு.

காலையில் பாலா அலுவலகத்தில் நுழையும் பொழுதே கவி கீர்த்திக்குக் கால் பண்ணி விடுவாள். "கீர்த்தி, நம்ம சார் இந்த ஷர்ட்ல So Charmeo... இன்னைக்கு..." என்று பாலாவைப் பற்றி ஏதாவது கூறிய பிறகுதான் தனது பணிகளையே தொடங்குவாள்.

கீர்த்தியும் தன் பங்குக்குக் கவியைக் கிண்டல் அடித்து விட்டு போனை வைப்பாள்.

அலுவலக நினைவுகளில் மூழ்கியிருந்தவள், இன்றும் அவளது எம்.டி. பாலா வராமல் இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தபடி அலுவலக மெயின் கேட்டை அடைந்தாள். ஸ்கூட்டியை நிறுத்தி விட்டு மணியைப் பார்த்தவளுக்கு, அவளது கைக்கடிகாரம் வஞ்சகமில்லாமல் 10.45 என்று காட்டியது. தன்னை நொந்தபடி அப்போதுதான் மூடப் போன லிஃப்ட்டை நோக்கி வேகமாக நடந்தாள் கீர்த்தி. லிஃப்ட்டின் உள்ளே நுழைந்த கீர்த்திக்கு மின்சாரம் தாக்கியது போல் உடல் அதிர்ந்தது. அங்கு அவளது எம்.டி. பாலா நின்று கொண்டிருந்தான்.

சற்றுச் சுதாரித்த கீர்த்தி, "குட்... குட் மார்னிங் சார்!" என்றாள்.

அவனும் பதிலுக்குச் சற்றுப் புன்னகையுடன் சொல்லி விட்டு, "எந்த ஃப்ளோர் - 6 ஆர் 7?" என்று கேட்டான்.

ஏனென்றால் அவனது அலுவலகம் அந்த இரண்டு தளங்களில் இயங்கிக் கொண்டிருந்தது.

"7 சார்!" என்றாள் கீர்த்தி. சொல்லியபோதே தினம் தன்னைக் கடந்து போகிறான். அவள் எந்த ஃப்ளோர் என்று கூடத் தெரியாதா இவனுக்கு. திமிர் பிடித்தவன். இவனையும் போய்க் கவிக்குப் பிடிக்கிறதே என்று அவனைத் திட்டியவள், நான் அவனது அலுவலகத்தில் வேலை செய்கிறேன் என்று தெரிந்திருக்கிறதே, அந்த மட்டில் பரவாயில்லை... என்று நினைத்தபடி நின்று கொண்டிருந்தவளுக்கு, அப்போதுதான் தான் தாமதமாக வந்திருக்கிறோம் என்பது நினைவுக்கு வந்தது.

அதுவும் பாலாவிடமே மாட்டி விட்டோமே... என்ன காரணம் என்று சொல்லி விடலாமா என்று யோசித்தவள், சொல்லி விடலாம் என்று, "சார்... இன்று..." என்று அவள் ஆரம்பித்த பொழுது லிஃப்ட் ஒரு ஆட்டத்துடன் நின்றது.

அதற்குள்ளாகவா செவன்த் ஃப்ளோர் வந்து விட்டது... என்று பார்த்தவளுக்கு, ஃபோர்த் ஃப்ளோரைக் காண்பித்துக் கொண்டிருந்தது. தான் சொல்ல வந்ததை மறந்து விட்டு, "என்னாயிற்று சார்?" என்றாள் பதட்டத்துடன்.

அவனோ, அவளுக்கு எந்தப் பதிலும் சொல்லாமல், மொபைலில் கால் பண்ணிக் கொண்டிருந்தான்.

"ப்ரவீண், நான் பாலா பேசுகிறேன். இங்க ரைட் கார்னரில் ஃபர்ஸ்ட் லிஃப்ட் வொர்க் ஆகவில்லை. என்னாயிற்று என்று பார்த்துச் சரி பண்ணச் சொல்லுங்க..." என்று கீர்த்தியைப் பார்த்தபடியே பேசிக் கொண்டிருந்தான். "ஓ.கே. ப்ரவீண், சீக்கிரம்..." என்றபடி மொபைலை கட் செய்தவன், அவளைப் பார்த்துச் சிரித்தபடி,

"என்ன கீர்த்தனா, இப்படிப் பயப்படுறீங்க... ஒண்ணும் பிரச்சனை இல்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் லிஃப்ட் வொர்க் ஆகிவிடும் பயப்படாதீங்க..." என்று கூறினான்.

"இல்ல... இல்ல சார்! அதெல்லாம் ஒண்ணும் இல்ல..." என்று அவள் வாய் சொன்னாலும், அவள் கண்களில் பயமும் அத்துடன் ஆச்சரியமும் இருந்தது.

'நம்ம பெயர் கூடத் தெரிந்திருக்கிறதே...!' - வியப்புடன் பாலாவைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு அப்போதுதான் அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பது ஞாபகம் வந்தவளாய் வேகமாக வேறு திசையை நோக்கித் திரும்பியவள், காலையில் இருந்தே நேரம் சரியில்லை நமக்கு என்று நினைத்தவாறு லிஃப்ட்டை அளவெடுத்துக் கொண்டிருந்தாள்.

கைகளைக் கட்டிக் கொண்டு அவளுக்குள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவனது மொபைல் ஒலித்தது. அதை அட்டெண்ட் செய்தவன், "ஓ.கே. ப்ரவீண்! 15 மினிட்ஸ் ஆகுமா? சரி ஆகிடும்ல. இல்லை என்றால் ரிப்பேர் பண்ண வேறு ஏதாவது வழி இருக்குமா என்று பாருங்க..." என்றபடி போனை வைத்தான்.

'இன்னும் 15 மினிட்ஸா!' என்று யோசித்தவள், அவன் ஏதாவது சொல்வான் என்று அவனைப் பார்த்தாள். அவனோ எந்தப் பதிலும் சொல்லாமல் அவனது மொபைலில் ஏதோ செய்து கொண்டிருந்தான் என்பதை விட எதையோ பார்த்துக் கொண்டிருந்தான்.

நினைத்ததை விடக் கொஞ்சம் திமிர் ஜாஸ்திதான் இவனுக்கு. என்ன பிரச்சனை, எப்பொழுது லிஃப்ட் ஓர்க் ஆகும் என்று வாயைத் திறந்து சொல்ல மாட்டானோ... சரியான கல்லுளிமங்கன் என்று முணுமுணுத்தவாறே லிஃப்ட்டைச் சுற்றி நோட்டமிட்டவளுக்கு 15 நிமிடங்கள் 15 யுகமாகக் கழிந்தன.

நல்ல வேளையாகச் சொன்ன நேரத்தில் லிஃப்ட் ஓர்க் ஆனது. ஒருவாறாகக் கீர்த்தி இருக்கையில் வந்து அமர்ந்தாள். காலையிலிருந்து நடந்த நிகழ்வுகளினால் சற்று

எரிச்சலுடன் சிஸ்டமை ஆன் செய்தவள் அன்றைய வேலைகளில் மூழ்கினாள்.

மதிய உணவு இடைவேளையின் போதுதான் கவியின் அருகே சென்றாள். 'என்ன இவள், நம்ம கிட்ட காலையில் இருந்து ஒண்ணுமே பேசவே இல்லை. என்ன காரணம்...?' என்று யோசித்தபடி, "கவி, சாப்பிடப் போகலாமா?" என்று கேட்டாள்.

"ம்..." என்ற ஒற்றைச் சொல்லுடன் தலையாட்டினாள் கவி.

அவளது சோர்வான முகத்தைப் பார்த்தவள், "மேடத்துக்கு இன்னைக்கு என்ன பிரச்சனை? அதான் உங்க ஆளு தரிசனம் தந்துட்டாரே! அப்புறம் என்ன?" என்று அவளது காதருகில் குனிந்து மெதுவாகக் கூறினாள்.

"போப்பா. நானே மனசு சரியில்லாம இருக்கிறேன். நீ வேற!" என்று டல்லாகக் கூறியபடி, பாக்சை எடுத்தவளைப் பார்த்த கீர்த்திக்கு அவள் உண்மையிலேயே கவலையாக இருப்பது தெரிந்தது.

"என்ன விசயம் கவி... எனிதிங் சீரியஸ்?" என்று கேட்டாள்.

தலையை மட்டும் ஆட்டிய கவியிடம், எதுவும் பேசாமல் அவளை அழைத்துக் கொண்டு சாப்பிடும் இடம் சென்று டேபிளில் அமர்ந்தாள் கீர்த்தி. சில நிமிடங்கள் இருவரும் பேசாமல் அமர்ந்திருந்தனர்.

கவியைப் பார்த்தபடியே இருந்த கீர்த்தி அவள் எதுவும் சொல்லாமல் அமர்ந்திருந்ததால்... தானே என்னவென்று கேட்போம் என்று, "என்னப்பா... என்னாச்சு? என்னவென்று சொன்னால்தானே தெரியும்..." என்று மெதுவாக அவளிடம் ஆரம்பித்தாள்.

அதுவரை மௌனமாக இருந்த கவி, பேச ஆரம்பித்தாள்.

"கீர்த்தி, நாம இந்த ஆஃபீஸில் ஜாயின் பண்ணி எட்டு மாதம் ஆகியிருக்கும் இல்ல..." என்றவளிடம்,

"ஆமா. நம்ம ஒண்ணாத்தானே வந்தோம். அதில் என்ன கவலை உனக்கு?" என்று முறைத்தாள்.

"நீ எப்படியோ கீர்த்தி... எனக்கு இந்த ஆஃபீஸ் மிகவும் பிடிக்கும். நீ, பாலா சார், நம்ம மற்ற ஆஃபீஸ் ஃபிரெண்ட்ஸ் இப்படி எல்லாரையும் ரொம்பப் பிடிக்கும்...!" என்று நிறுத்தினாள்.

"சரி. அதுக்கென்ன?" என்று சற்றுத் தலையைச் சாய்த்துக் கேலி செய்தவளிடம்,

"நீ இப்படியெல்லாம் கேட்டால் நான் ஒண்ணும் சொல்லவில்லை. நான் எவ்வளோ சீரியசாகப் பேசுகிறேன். நீ என்னடாவென்றால் கிண்டல் பண்ணுகிறாய்!" என்றாள், ஒரு மாதிரியான குரலில்.

"ஓ.கே. ஓ.கே. இப்ப பாரு..." என்று கை கட்டி, பவ்யமான குரலில், கண்களில் தீவிரம் இருப்பது போல் பாவனை காட்டிய கீர்த்தியைப் பார்த்த கவி தன்னையும் மறந்து சிரித்து விட்டாள்.

"அம்மா தாயே, இதுதான் உங்க ஊரில் சீரியசாக இருப்பதா...? ரொம்பக் கஷ்டம்டி கீர்த்தி..." என்று சொன்னவள், தொடர்ந்து, "கடவுளே, இவளைக் கல்யாணம் பண்ணிக் கஷ்டப்படப் போற அந்தப் பாவப்பட்ட புண்ணியவானை நினைத்து ஒரே கவலையாக இருக்குதே. நீதான் காப்பாற்ற வேண்டும்..." என்றபடி, தலையில் கை வைத்தாள் கவி.

அவள் பேசி முடிக்கும்வரை காத்திருந்த கீர்த்தி, கொஞ்சமும் காத்திராமல், "ஓ! அப்போ இதுதான் உன்னோட கவலையா கவி... சரி!" என்றபடி கவியைப் போலவே, "கடவுளே, என் அருமைத் தோழி ஆசைப்பட்டதால், என்னைத் திருமணம் செய்து பாவ பலனை அனுபவிக்கப்

போறவனின் பாவத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளப்பா! என் ஃபிரெண்ட் கவி சந்தோஷப்பட வேண்டும்..." என்றவாறு, கவியிடம்,

"போதுமா கவி, அப்புறம் என்ன? உன்னுடைய வேண்டுதலுக்கு இல்லேன்னாலும் நான் ரெகமெண்ட் பண்ணுவதால் கடவுள் நிறைவேற்றுவார்..." என்று கூறியவள், தன் விளையாட்டை நிறுத்தி விட்டுக் கவியின் கைகளைப் பற்றினாள்.

"என்ன கவி, சொல்லும்மா!" என்று நெகிழ்வாகக் கேட்டாள்.

கீர்த்தியின் நெகிழ்வான குரலில் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அவளையும் அறியாமல் கண்களில் நீர் பெருகியது கவிக்கு.

தன் கைகளில் விழுந்த சூடான கண்ணீர்த் துளிகளில் அதிர்ந்தாள் கீர்த்தி.

"ஏய் கவி, என்ன இது?" என்று அவளருகில் அமர்ந்த கீர்த்தியிடம்,

"கீர்த்தி, அப்பாவுக்கு டிரான்ஸ்ஃபர் கிடைத்திருக்கிறது. அதுவும் டெல்லியில். என்னை வேலையை விடச் சொல்கிறார். தம்பிக்கு ஸ்கூலில் டி.சி. வாங்குவதுதான் அவரோட கவலை. நான் ஹாஸ்டலில் இருக்கேன் என்றாலும் விட மாட்றாங்கப்பா. டெல்லியில் வேலை தேடிக் கொள்ளலாம் என்கிறார். மனசே சரியில்ல. ஒரு மாதம்தான் இங்கே இருப்பேன் என்று நினைக்கிறேன். இந்த வார இறுதியில் பேப்பர் போட வேண்டும்..." என்று கூறி விட்டு வெளியே வெறித்தாள் கவி.

கவியின் கைகளைத் தன் மடியில் வைத்து அழுத்திய கீர்த்திக்கு, அவளது கவலையின் காரணம் புரிந்தபோது ஒன்றும் கூறத் தோன்றவில்லை. இருந்தாலும் அவளது அப்போதைய மனநிலையினை மாற்ற எண்ணியவளாய்,

"ப்ப்பூ... இவ்ளோதானா! நான் கூட என்னமோ பெரியதாகக் கூறப் போகிறாய் என்று பயந்து விட்டேன்!" என்ற கீர்த்தியைச் சட்டென நிமிர்ந்து பார்த்து முறைத்தவள்,

"அப்போ நான் போறது உனக்குக் கவலை இல்லையா?" என்று தணிந்த குரலில் கேட்டாள்.

"லூசு. நீயெல்லாம் ஒரு சாஃப்ட்வேர் எஞ்சினியர். இந்த ஃபீல்டில் இருந்து கொண்டு கம்யூனிகேஷனை நினைத்துக் கவலைப்படுகிறாய். இருக்கவே இருக்கு இமெயில், சாட், மொபைல். இதெல்லாம் விட பார்க்க வேண்டும் என்று நினைத்தால் ஒரு ஃப்ளைட்டைப் பிடித்தால் போதும். இதுக்குப் போய் இவ்ளோ ஃபீல் பண்ற...!" என்று தன் வருத்தத்தை மனதினுள்ளேயே வைத்துக் கொண்டு தோழிக்கு ஆறுதல் கூறியவள், அவள் முகம் தெளியாததால்... அவளைக் கலகலப்பாக்கப் பாலாவின் பெயரை இழுத்தாள்.

"அது என்னமோ நீ ஃபீல் பண்ணுவது கரெக்ட்தான்ம்மா. எங்க கூடவெல்லாம் நீ போன், மெயில்னு கான்டாக்ட் பண்ணிக் கொள்ளலாம். ஆனால் பாவம் எம்.டி. தரிசனம் அங்கே கிடைக்காது இல்ல. உண்மையிலேயே கஷ்டம்தான்!" என்று தோழியைச் சீண்டினாள் கீர்த்தி.

அவளது கிண்டலைப் புரிந்து கொண்ட கவி, "ஹையோ கீர்த்தி, உன் அறிவே அறிவு. கரெக்ட்டாகக் கண்டுபிடித்து விட்டாயே! போயும் போயும் உன்னையெல்லாம் பிரிஞ்சு போறேன்னு ஃபீல் பண்ணுவேனா? பாலாவைப் பத்தித்தான் என்னோட கவலை எல்லாம்..." என்று பெருமூச்சை இழுத்தாள் கவி.

"யூ..." என்றவள், "போடி... பேசாத என்கிட்ட!" என்று பொய்யாக உம்மென்று இருந்தாள் கீர்த்தி.

அதைப் பார்த்த கவி, "ஏய்... ஏய்... சும்மாதான் சொன்னேன். நீ மட்டும் கிண்டல் பண்ணலாமா?" என்று சமாதானக் கொடி நீட்டினாள்.

கீர்த்தி அவளிடம் பேச எத்தனித்தபோது, கீர்த்தியின் மொபைல் அடித்தது.

"இருடி, உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்," என்று ஆள்காட்டி விரலை உயர்த்தியபடி போனை அட்டெண்ட் செய்த கீர்த்திக்கு,

"ஹலோ குறத்தி!" என்ற விநோத்தின் குரலில் தோன்றிய அனலை மறைத்து,

"சொல்லுடா விநோத்!" என்று பல்லைக் கடித்தபடி பேசினாள்.

அதைப் பார்த்த கவி கண்ணடித்தபடி, 'ஜமாய் ஜமாய்...' என்பது போல் தலையினை ஆட்டினாள்.

"ஏய் உதை!" என்று கவியின் தலையில் தட்டியவள்,

"என் பேரை உன்னைத் தவிர இவ்ளோ கேவலமா வேற யாராலும் கூப்பிட முடியாதுடா. எத்தனை தடவை சொன்னாலும் உனக்கு ஏறாதா! என் டென்சன் ஏத்துவதே உன் வேலை!" என்று பொரிந்தவள், "என்ன இந்த டைம்ல கால் பண்ணி இருக்கிறாய்?" என்றாள்.

"இல்ல குறத்தி. சாரி சாரி. கீர்த்தி, எனக்கு இப்போ புரை ஏறியது. அதுதான் நீ என்னை நினைக்கிறாய் போல. சரி, எதுக்கு உன்னைக் கஷ்டப்படுத்த வேண்டும் என்று நானே கால் பண்ணிட்டேன். என்ன... என்னை நினைத்தாய் தானே!" என்று சாதாரணமாகக் கேட்டான்.

"ஓ, அப்படியா விநோத்! அப்போ நீ ஒரு நொடி கூட புரை ஏறாமல் இருக்க முடியாதே. எப்படி அங்கே இருக்கே?" என்றாள் பதிலுக்கு, நக்கலாக.

கீர்த்தி விநோத்திடம் பேசிக் கொண்டிருக்கும் போதே, கவி கீர்த்தியிடம் இருந்து போனைப் பறித்தாள்.

"விநோத், உங்களுக்கு அங்க என்னவோ... தெரியாது. ஆனால் என் ஃபிரெண்ட் அடிக்கடி புரை ஏறிக்

கஷ்டப்படுகிறாள். கொஞ்சம் பார்த்து நடங்க...” என்றபடி தன் பங்குக்கு அவனை வாரி அசடு வழிய வைத்தாள்.

விநோத் அவளிடம், “அதானே பார்த்தேன். கீர்த்திக்கு ஏற்ற தோழி. நான் அவளை வாரலாம் என்று பார்த்தால் செட்டா சேர்ந்துட்டீங்க. நான் தப்ப முடியுமா?” என்றவனிடம்,

“ஓ.கே. ஓ.கே. அந்தப் பயம் இருந்தால் சரி. கீர்த்தியிடம் போனைத் தருகிறேன்,” என்று சிரித்தபடி கீர்த்தி யிடம் கொடுத்தாள்.

“ம்... சொல்லு, விநோத்!” என்ற கீர்த்தியிடம்,

“ஒண்ணுமில்லப்பா. இன்னைக்கு ஈவினிங் எனக்கு மீட்டிங். அதனால் நான் நைட் கால் பண்ண முடியாதுடா. அதுதான் என்னோட அட்வான்ஸ் விஷ்சஸை சொல்லத்தான் இப்போ கால் பண்ணினேன். நாளைக்குச் சொன்னால் என்னை எரிச்சுட மாட்டாய்...” என்றவனிடம்,

“உனக்கு என்னை விட மீட்டிங் பெரிதாப் போச்சு!” என்றவள், அவனது நிலையை உணர்ந்து பிகு பண்ணாமல், “சரி... சரி. பரவாயில்லை. உன்னை மன்னித்து அருள் புரிகிறேன்!” என்றாள் விளையாட்டாய்.

“ம்... பரவாயில்லை குறத்தி! நல்லாத் தமிழ் பேசுறியே... கொஞ்சம் உங்க பாஷை பேசுவது...” என்று கேலி செய்தவனை,

“உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் புரியாதாடா! உன்னை...” என்று திட்டுவதற்கு வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருந்தவளிடம்,

“சரி.. சரி. நீ திட்டுவதற்கு வார்த்தைகளைத் தேடிக் கண்டுபிடிக்கும்வரை காத்திருந்து திட்டு வாங்க எனக்கு டைம் இல்லை. பை...” என்று கூறி அவனுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து விட்டுப் போனை வைத்தான்.

“வச்சுட்டான். இருக்குடா, உனக்கு!” என்றபடி போனை வைத்தவள், கவியைப் பார்த்தாள்.

அவளோ, சற்று முன் கவலையாக இருந்த கவியா இவள் என்னும்படி, “என்னடி, ரொமான்ஸ்லாம் முடிந்ததா?” என்றவளை முறைத்தவள்,

“இப்போ நாங்க பேசுனது ரொமான்சா உனக்கு?” என்ற கீர்த்தியிடம்,

“சும்மா நிறுத்துடி. நான் யாரையும் லவ் பண்ண மாட்டேன். எங்க அப்பா, அம்மா சொல்ற பையனைத்தான் மேரேஜ் பண்ணுவேன்னு சொல்றதெல்லாம் சும்மா!” என்றவளை உண்மையாகவே முறைத்தாள் கீர்த்தி.

“நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் அதுதான் உண்மை...” என்றாள் கீர்த்தி.

“அதையேதான் நானும் சொல்கிறேன், கீர்த்தி! உன் அப்பா, அம்மா உனக்குப் பார்த்து வைத்திருக்கிற பையன்தானே விநோத்... பிறகு ஏன், நல்லாத்தான் மனசைத் திறந்து ரெண்டு பேரும் பேசுவது... பெருசா டயலாக் மட்டும் பேசுவது! என்னமோ நீ விநோத்தை லவ் பண்ணாதது மாதிரி. உன் மனதில் விநோத் இருப்பதினால்தான் வேற ஒருத்தரையும் பார்க்கத் தோணவில்லை...” என்று கூறி விட்டு, சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, மெதுவாகக் கீர்த்தியின் காதில், “இல்லன்னா... பாலா மாதிரி ஒரு பையனை எல்லாம் கண்டுக்காம இருப்பியா!” என்றவளிடம் முறைத்தவள்,

“நான் விநோத் கூட நினைவு தெரிந்த நாள் முதல் இப்படித்தான் பேசுவேன். அவனும் அப்படித்தான். எங்க ரெண்டு பேருக்கும் மேரேஜ் ஆகிறவரைக்கும் அவன் என் மாமா பையன், ஃபிரெண்ட். அவ்ளோதான். எங்க அப்பா நாளைக்கே இன்னொருத்தனைச் சொல்லி, இவன்தான் மாப்பிள்ளை என்று சொன்னால்... அப்போ என்ன பண்ணுவது? ஸோ இப்போதைக்கு இந்த இடம் காலி!” என்று இதயத்தைத் தொட்டுக் காட்டியவள், வெகு விரைவில் பாலாவின் பெயரைத் தன் பெற்றோரிடம் கூறப் போகிறோம் என்று அப்போது அறியவில்லை.

கீர்த்தி கூறியவற்றினைக் கேட்ட கவி, "இப்படி ஒரு அப்பா, அம்மா பைத்தியத்தை நான் எங்கேயும் பார்க்க முடியாதுப்பா. சரி, கீர்த்தி! தாலி கட்டின பின்னாடி, உன் அப்பா அவன் வேண்டாம் என்று சொன்னால் உங்க அப்பா பின்னாலேயே போயிடுவியாடி. பாவம் கீர்த்தி, ஆண்பாவம் பொல்லாதது!" என்று கூறியவளை அடிக்க எழுந்தாள் கீர்த்தி.

கீர்த்தி அவளைத் துரத்த எழுந்ததைப் பார்த்த கவி, அவளிடம் மாட்டாமல் இருக்க வேகமாக ஓடினாள்.

"ஏய், நில்லுடி!" என்று கீர்த்தியும் வேகமாக அவளைத் துரத்த ஆரம்பித்தாள்.

அவளுக்குப் பிடி கொடுக்காமல் ஓடினாள் கவி. சற்றும் எதிர்பாராமல் திருப்பத்தில் பாலா அவளுக்கு எதிராக வந்து கொண்டிருந்தான்.

'அய்யோ, மோதப் போகிறோமே...' என்றபடி கண்களை மூடியவளைச் சட்டென்று கீர்த்தி இழுத்துப் பிடித்துப் பாலாவுடன் மோதாமல் நிறுத்தினாள்.

அப்போதுதான் கவிக்கு நிம்மதியானது.

2

"ஸாரி சார்!" என்றவளிடம்,

"ஓ.கே. பரவாயில்லை. கவனம்!" என்றவன், கீர்த்தியை ஒரு வினாடி பார்த்து விட்டு, வேறு எதுவும் பேசாமல் தன் வழியில் தொடர்ந்தான் பாலா.

அவன் போனபோது அவனது விழிகள் தன்னைப் பார்த்ததோ என்று நினைக்கும் பொழுதே, கவி, கீர்த்தியின் காதில், "இன்று யார் முகத்தில் விழித்தேனோ... பாலா என்கிட்ட பேசிட்டாரே!" என்று முகம் மலரக் கிசுகிசுத்தாள்.

"ஆமா. உனக்கு இன்று நல்ல நேரம். எனக்குக் காலையில் இருந்தே சொதப்புது. இப்ப வேற மாட்டி விட்டேன்..." என்று அலுத்தாள்.

காலையில் நடந்த விஷயம் எதுவும் தெரியாமல் கவி முழிக்க... கீர்த்தி லிஃப்ட்டில் நடந்தவற்றைக் கூறினாள்.

"ஓ... அப்படியா விஷயம்!" என்றவள், திடீரென முகத்தைக் கோபமாக வைத்துக் கொண்டு, "எனக்கு நல்ல நேரம் பாதிதான் வொர்க் அவுட் ஆனது. மீதியை நீ வந்து கெடுத்து விட்டாய்!" என்று முறைத்தாள்.

"நான் என்ன கவி பண்ணினேன்?" என்றாள் அப்பாவியாய்.

"என்ன பண்ணலேன்னு கேளு. நீ மட்டும் பிடிக்காமல் இருந்திருந்தால்..." என்றவளின் வாயினைப் பொத்தி, அவள் விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்தாள் கீர்த்தி.

"அப்படி இப்படினு ஆகி ஏதாவது ரொமான்ஸ் ஆகியிருக்கும்... இதானே சொல்ல வந்த. இதெல்லாம் நாங்க வாலி படத்திலேயே பார்த்துட்டோம்..." என்ற கீர்த்தியிடம் அசடு வழிய நின்றாள் கவி.

தொடர்ந்து, "கவி! ஒண்ணு கேட்டுக்க. எங்க அப்பா அடிக்கடி சொல்வாரு. நமக்கு என்ன நடக்கணும்னு விதி இருக்கோ, அது மட்டும்தான் நடக்கும். அதனால இன்று பாலா சார் உன்கிட்ட பேச வேண்டுமென்ற விதிதான் எழுதியிருக்கு. அது நடந்திருக்கு..." என்றாள் கீர்த்தி - பெரிய பேச்சாளர் போல.

"அப்புறம் என்ன மேடம்?" என்று நக்கலாகக் கேட்ட கவியிடம்,

"அப்புறம்..." என்று யோசித்த பாவனையுடன் நடித்தவள், "இன்னொன்று கூட எங்கப்பா அடிக்கடி சொல்வார்..." என்று ஆரம்பித்தவளிடம்,

"அய்யோ தாயே, ஆள விடு. ஆரம்பித்து விட்டாயா உங்க அப்பா புராணத்தை! கடவுளே! இந்த அப்பா பைத்தியத்திடமிருந்து என்னைக் காப்பாற்று!" என்றவளிடம்,

"அடிப் பாவி. யாரோ ஒரு பாலா புராணத்தினை என் காதில் ரத்தம் வழியற அளவுக்குப் பேசுவ. என் அப்பாவைப் பற்றிப் பேசினால் கேட்க மாட்டாயா?" என்று அதட்டினாள்.

"என்னது? யாரோவா! அவர் உனக்குச் சம்பளம் கொடுக்கிற முதலாளி!" என்று திருத்தியவளிடம்,

"இருக்கட்டும். யாரோதானே நமக்கு!" என்று அவளைக் கேலி செய்தபடி ஓடியவளைத் துரத்தும் முறை இப்போது கவியினது ஆயிற்று.

மூன்று மணி அளவில் எந்த வேலையும் இல்லாமல் போரடித்தது போல் இருந்தது கீர்த்திக்கு. நிமிர்ந்து கவியினைப் பார்த்தவளுக்கு மனது வலித்தது. அலுவலகத்தில் அவள் மட்டும்தான் கீர்த்திக்கு மிகவும் நெருங்கியவள். பார்த்த சில நாட்களிலேயே நெருக்கமானவள். இன்னும் சில நாட்களில் பிரிந்து போகப் போகிறாள். நினைக்கும் போதே என்னவோ போல் இருந்தது.

அவளைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும்போதே தொலைபேசி ஒலித்தது.

"சொல்லுங்க சார்!" என்றவள், "இதோ வருகிறேன்," என்றபடி அவளது டீம் லீடர் கேசவன் அறைக்குச் சென்றாள்.

அனுமதி கேட்டு உள்ளே சென்றவளை அமரச் சொல்லிய கேசவன் சற்றுச் செருமியபடி, "பழைய ப்ராஜெக்ட்ல இருந்து ரிலீவ் ஆகிட்டீங்கதானே கீர்த்தி! இப்போ எந்த ஒர்க்லேயும் அசைன் ஆகவில்லைதானே?" என்று கேட்டார்.

"இல்ல சார்!" என்றவளிடம்,

"ஓ.கே. உங்களை எம்.டி. வரச் சொல்லியிருக்கார். இப்ப போய் மீட் பண்ணுங்க..." என்று கூறியபோது, இதயம் படபடத்தது.

வேறு எந்த நாளாயிருந்தாலும் இப்படி ஆகியிருக்காது. இன்று இரண்டு முறை மாட்டியிருக்கிறாள். அதனால் அவள் கொஞ்சம் படபடப்பானதில் ஆச்சரியம் இல்லைதான்.

இருந்தாலும் டென்சனை மறைத்தபடி, யோசனை பாவத்தோடு, "எதற்காக சார்?" என்று கேட்டவளிடம்,

"தெரியவில்லை. இப்போதான் கால் பண்ணினார். உங்க டீம்தானே கீர்த்தனா என்று விசாரித்தார். அவங்களை 3.30க்கு என்னை வந்து பார்க்கச் சொல்லுங்க... என்று கூறினார்," என்றார் சிரித்தபடி.

அவரது சிரிப்பைப் பார்த்த கீர்த்திக்கு ஆத்திரமாக வந்தது. எதற்காக என்று கேட்டால் தெரியவில்லை என்கிறார்.

இப்போ சிரிப்பு முக்கியம் என்று நினைத்தபடி வெளியே வந்தாள்.

படபடத்த இதயத்திடம், 'கீர்த்தி, அப்படி என்ன தப்பு பண்ணிட்ட. ஒரு நாள் லேட்டா வந்து விட்டாய். அவ்ளோதான். இதற்காக இப்படி டென்ஷன் ஆகலாமா? சமாளி கீர்த்தி!' - என அவளுக்குள்ளாகவே பேசியவள், "மே ஐ கம் இன்!" என்றபடி, பாலாவின் அறையினுள் நுழைந்தாள்.

"கம் இன்!" என்ற கம்பீரக் குரலில் சற்று முன் அவள் தேற்றி வைத்திருந்த தைரியம் எல்லாம் எங்கு போனதோ தெரியவில்லை. அவளையும் அறியாமல், படபடவென்று ஆரம்பித்தாள். "குட் ஈவினிங் சார்! வரச் சொன்னீர் களாமே...." என்றபடி தொடர்ந்தாள்.

அவளது வார்த்தைகளில் இருந்த அவசரத்தையும், படபடப்பையும் உணர்ந்தவன், அவளைப் பார்த்துப் புருவத்தினை உயர்த்தினான்.

இப்போது அவனது முகத்தைப் பார்த்தவள்... இன்னும் வேகமாகப் பேச ஆரம்பித்தாள்.

"சார், இன்னைக்கு நான் லேட்டாக வந்தது தப்புதான். ஆனால், நான் டெய்லி லேட்டா வருவது இல்லை. இன்று ஒரு ஆக்சிடெண்ட். ஒரு பைக்..." என்று ஆரம்பித்தவள், 'கீர்த்தி, கூல் கூல். இதெல்லாம் இப்போ சொல்லணுமா... உளறாதே!' என்ற மனச்சாட்சியின் குரலில், தான் கூற வந்தவற்றை யெல்லாம் நிறுத்தி விட்டு, தன் பேச்சுக்கு...

இல்லையில்லை, தன் உளறலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில்,

"இனிமேல் இந்தத் தவறு நடக்காதவாறு பார்த்துக் கொள்கிறேன், சார்!" என்று முடித்த பொழுதுதான்... அவன் என்ன ஏது என்று கூறாமலேயே தான் உளறியது புரிந்தது. இருந்தாலும் அவன் கேட்ட பிறகு இதைத்தான் சொல்லப் போகிறோம் என்று தனக்குள்ளாக ஆற்றிக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

பாலாவோ எந்த ஒரு பாவத்தினையும் முகத்தில் காட்டாமல், சைகையினால் முன்னால் இருந்த இருக்கையைக் காட்டி அமரச் சொன்னான்.

"ஓ சாரி சார்!" என்று கூறிவிட்டு, அவனைப் பார்த்தபடியே அமர்ந்தாள்.

"கீர்த்தனா ராகவன். அம் ஐ கரெக்ட்!" என்றவனிடம்,

"ம்..." என்று தலையசைத்தாள்.

"நீங்க ஏதாவது என்னிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தால் நான் கூப்பிடுவதற்கு முன்னதாகவே வந்து சொல்லியிருக்க வேண்டும். ஆனால், நான் உங்களை அழைத்திருக்கிறேன். ஸோ..." என்றவன் சற்று நிறுத்தினான்.

அவள் இவ்வளவு நேரம் கூறியதெல்லாம் அவனுக்குத் தேவையில்லாத விஷயம் என்பதாகக் கூறுகிறான் என்பதை உணர்ந்த கீர்த்தி, 'பெரிய இவன்... இந்த லட்சணத்தில் நான் நினைப்பதை எல்லாம் இவன் கேட்கத் தயாராக இருப்பதைப் போலப் பேச்சு வேறு!' என்று மனதிற்குள்ளாகக் குமுறிய வண்ணம் இருந்தாள்.

உண்மையில் அவள் மீதுதான் அவளுக்குக் கோபம். இந்த மாதிரி அசடு மாதிரி அவள் நடப்பது மிகவும் அரிது. அதனால் வந்த கோபம் பாலாவின் மேல் மாறியது. அதையும் அவள் வெளிப்படுத்த முடியாத நிலைமை வேறு. அனைத்தையும் அடக்கிக் கொண்டு, "சொல்லுங்க சார்!" என்றாள்.

அவன் அவளை அவமானப்படுத்தி விட்டதாக மனதில் நினைத்திருந்ததால் அவள் குரல் சற்று இறங்கியிருந்தது.

"ம்... குட்!" என்றவன் தொடர்ந்தான். "நம்ம கம்பெனிக்குப் புதிதாய் ப்ராஜெக்ட் வந்திருக்கிறது. ஸோ அதுக்காகப் புது மெம்பர்ஸ் எடுத்திருக்கிறோம். தெரியுமா உங்களுக்கு?" என்றவனிடம்,

"தெரியும் சார்!" என்றவள், தன்னை அழைத்ததற்கான காரணம் வேறு என்பது தெரிந்த போது நார்மலாக மாறி யிருந்தாள்.

"அந்த ப்ராஜெக்ட்டுக்கு நீங்கதான் டீம் லீடர்!" என்று எந்த ஒரு பில்டப்பும் இல்லாமல் சட்டென்று கூறியவனை ஆச்சரியமாகப் பார்த்த கீர்த்தி, அவனிடம் பேச வாயெடுத்தவளைப் பேச விடாமேலேயே தொடர்ந்தான் பாலா.

"நீங்க ஜாயின் பண்ணி எய்ட் மன்த்ஸ்தான் ஆகிறது. அதற்குள்ளாகவா... இதுதானே நீங்க கேட்க வந்தது...?" என்றவனிடம், ஒப்புதலாகத் தலையினை அசைத்தாள்.

அவளின் தலையசைவினைப் பார்த்துச் சிரித்து விட்டு, "உங்க திறமை மேல எங்களுக்கு நம்பிக்கை இருக்கு. உங்க டீம் லீடர் கொடுத்த ரிப்போர்ட் படிதான் இந்தப் போஸ்ட்டுக்கு ப்ரொமோஷன் பண்றேன். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவீங்கன்னு நினைக்கிறேன்," என்று முடித்தான்.

அவன் முடித்த வுடனே, "ஸ்யூர் சார்!" என்றவள், "சார், எனக்கு இன்னொரு சந்தேகம் சார்!" என்றவளைப் பார்த்த பாலா, "சொல்லுங்க!" என்றான்.

"இப்போ எடுத்த மெம்பர்ஸ் எல்லாருமே எக்ஸ் பீரியன்ஸ்ட் பெர்சன்ஸ்னு கேள்விப்பட்டேன். அப்போ நான் எப்படி சார்...?" என்று இழுத்தவளிடம்,

"ம். தெரியும். அவங்களுக்கு நம்ம கம்பெனி புதுசு. ஸோ நம்ம ஆர்கிடெக்சர் பழகுகிற வரைக்கும்தான். அதற்காகத்தான் இந்த ப்ராஜெக்ட்ல போடுகிறேன். அதன்

பிறகு அவர்களுக்குத் தனியா டீம் ஃபார்ம் பண்ணிடுவேன். ஸோ, அது ஒண்ணும் பிரச்சனை இல்லை..." என்றபடி, அவளது ப்ரமோஷன் ஆர்டரை அவளிடம் நீட்டினான் பாலா.

அதை அவளிடம் கொடுத்தவாறே, "இந்த ஒர்க் லாஸ்ட் வீக்கே அசைன் பண்ணி உங்களுக்கு ஆர்டர் கொடுத்திருக்கலாம். பட் நான்தான் இன்னைக்கு இதை உங்களுக்குத் தர வேண்டுமென்று தள்ளி வைத்தேன்..." என்றவனிடம்,

"தேங்க் யூ சார்!" என்றபடி, 'இன்று என்ன ஸ்பெஷல்?' என்று மனதிற்குள் நினைத்தபடி வாங்கக் கை நீட்டினாள் கீர்த்தி.

"ஒரு வாரத்திற்கு முன்னமே நீங்க வாங்க வேண்டியது லேட் ஆகி விட்டது. சாரி கீர்த்தனா!" என்று கொடுத்தவன், "இந்த வருடம் உங்களோட பிறந்த நாளுக்கு குளோபல் நெட்டின் கிஃப்ட்!" என்று புன்னகைத்தான்.

சட்டென்று நிமிர்ந்தவளுக்கு, இன்றைய ஸ்பெஷலின் அர்த்தம் விளங்கியது. "எப்படி சார்?" என்று ஆச்சரியமாக வினவியவளிடம்,

"உங்க பயோடேட்டா பார்த்தேன். அப்போதுதான் முடிவு செய்தேன். இன்னும் ஒரு வாரம்தானே. அப்பவே கொடுக்கலாம் என்று. இல்லேன்னா இந்நேரம் ப்ராஜெக்ட் ஒர்க் ஸ்டார்ட் பண்ணியிருப்போம்..." என்று சிரித்தான்.

இப்படியெல்லாம் பாலா யோசிப்பானா என்று நினைத்துக் கொண்டே, அவனிடம் விடை பெற்றுக் கொண்டு, வெளியே வந்தாள் கீர்த்தி.

இதற்கு மேலும் அவன் யோசிப்பான். அதைச் செயல்படுத்தப் போகிறான் என்று தெரிய வரும்போது அவள் அதிர்ச்சி அடையப் போகும் நாள் வெகு விரைவில் வரப் போகிறது என்பது தெரியாமல் மகிழ்ச்சியில் துள்ளியது - சந்தோஷங்களை மட்டுமே அனுபவித்த கீர்த்தியின் இதயம்.

3

கீர்த்தி தி.நகரின் பனகல் பார்க்கில் நுழைந்து தனது பர்சேசிங் முடித்து வெளியே வரும் பொழுது மணி 7.30 ஆகியிருந்தது. தான் வாங்கியிருந்த கவர்களைச் சரி பார்த்தபடியே ஸ்கூட்டியில் வைத்து விட்டு ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்தாள். தனது வீட்டை நோக்கிப் பயணித்தபடியே, இதழில் சிறு நகையுடன் அன்றைய தினம் நடந்தவற்றை மனதில் ரீவைண்ட் செய்து பார்த்தாள்.

உண்மையிலேயே கவி சொல்வது மாதிரி பாலா நல்ல கேரக்டர்தான். நாமதான் கொஞ்சம் தப்பா நினைச்சுட்டு இருக்கோம். ம்ம்... பரவாயில்லை. கவி கூட மனுஷங்களைச் சரியாக அனுமானிக்கிறாள். நாம்தான் மக்கா இருக்கோம் இந்த விஷயத்தில்.

'சரி, விடு கீர்த்தி! கவி கிட்ட கத்துக்கோ. பெரிய கம்ப சூத்திரமா இது?' என்று நினைத்த போதுதான், கவி வெகு விரைவில் பிரியப் போகிறாள் என்பது நினைவுக்கு வந்தது. அதன் பிறகு மனதிற்குள்ளாகவே ஆறுதல் படுத்தியபடி வீட்டை அடைந்தவள், அழைப்பு மணியை அடித்து விட்டு நகம் கடித்தபடி நின்று கொண்டிருந்தாள். சற்றுத் தாமதமாகத் திறந்த மைதிலியை முறைத்தாள்.

"என்ன மைதிலி, ஒரு கதவைத் திறக்க இவ்ளோ நேரமா?" என்று முறைத்தவளிடம், மைதிலியும் முறைத்தபடி உள்ளே செல்ல முயன்றாள்.

"ஹலோ, இங்க ஒருத்தி கேட்டுட்டு இருக்காளே, அவளுக்குப் பதில் சொல்லணும்னு தோணாம அப்படி என்ன அவசரம்?" என்று மைதிலியைப் பார்த்து அதிகாரத் தோரணையில் மிரட்டியவள், சட்டென்று தனது முக பாவனையினை மாற்றி,

"என்ன... பூஜை வேளையில் கரடி மாதிரி வந்துட்டேனா! இல்லையே... கொஞ்சம் லேட்டாகத்தானே வந்தேன்..." என்றவள், அவளாகவே ஞாபகம் வந்தவளாய்,

"ஓ... அம்மா, நாளைக்கு உங்களோட திருமண நாளை முன்னிட்டு அப்பாவும் நீங்களும் மலரும் நினைவுகளுக்குக் கொஞ்சம் ஆழமாகப் போயிட்டீங்களோ!" என்று கண்ணடித்தாள்.

"உங்க அப்பா மாடியில இருக்கார். நீ ரொம்ப கற்பனை பண்ணிக்காதே!" என்றவள், மகளின் அசடு வழிந்த முகத்தைப் பார்க்க நிமிர்ந்தாள்.

கீர்த்தி அவ்வளவு சீக்கிரம் அசருபவளா!

"சரி, விடுங்க. அப்போ நீங்க மட்டும் மலரும் நினைவுகளில் மூழ்கி விட்டீர்களா... எனது அருமை மிஸஸ் ராகவ் அவர்களே?" என்று மைதிலியை விடாமல் கேலி செய்தாள் அவளது மகள்.

"உன்னிடம் பேசி ஜெயிக்க முடியுமா! முதலில் உள்ளே வா. வந்தது லேட். இந்தப் பேச்சுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை..." என்றபடி மைதிலி சமையலறைக்குள் நுழைந்தாள்.

சமையலறையில் பாத்திரங்களை அடுக்கிக் கொண்டிருந்த மைதிலியைப் பூனை போல் மெதுவாக வந்து, அவளின் பின்னே சென்று ஒற்றைக் கையினால் மெதுவாகக் கண்களை மூடினாள் கீர்த்தி.

கீர்த்தி கண்களை மூடியதால் சற்றுத் தடுமாறிய மைதிலி,

"என்னடா கீர்த்தி, ஒரே சந்தோஷமாக இருக்க..." என்று கைகளை விலக்கி விட்டுத் திரும்பியவள், "என்னடா அம்மு?" என்று கொஞ்சினாள் தன் மகளை.

"டொட்டடாங்!" என்றபடி தனது மற்றொரு கையில் இருந்த கவரை அவள் முகத்தின் முன்னால் ஆட்டினாள்.

"ஏய், என்ன கீர்த்தி இது?" என்று கவரை வாங்கக் கை உயர்த்தியவளிடம், சட்டெனக் கவரினைத் தன் பக்கம் இழுத்தாள் கீர்த்தி.

"நோ... நோ. இதை நான் முதலில் அப்பாகிட்டதான் காட்டுவேன்!" என்றதும்,

"அப்போ எதுக்கு என்கிட்ட முதலில் சொன்ன நீ! உங்க அப்பாகிட்ட சொல்லிட்டு சொல்லியிருக்க வேண்டியதுதானே! ஒழுங்காக் கொடுத்துடு..." என்று கவரினை வாங்க முயன்றாள் மைதிலி.

அவளிடமிருந்து கவர் கையில் மாட்டாமல் லாவகமாகத் தப்பித்த கீர்த்தி வெளியே ஹாலினுள் ஓடினாள். அவளைத் துரத்தியபடி வெளியே வந்தாள் மைதிலி.

அதே நேரத்தில் கதவு திறந்திருந்ததனால் வீட்டின் உள்ளே நுழைந்து கதவினைத் தாழ் போட்டுத் திரும்பியவர், தன் மகள் மற்றும் மனைவியின் விளையாட்டினைப் பார்த்து விட்டு,

"என்ன நடக்குது இங்க?" என்றவரிடம்,

"அப்பா, இதைப் பிடிங்க!" என்றபடி கவரினைக் கொடுத்தாள் கீர்த்தி.

அவளைத் துரத்தியபடி வந்த மைதிலி கீர்த்தியின் திடீர் நிறுத்தத்தினை எதிர்பாராமல் சற்றுத் தடுமாறி விழப் போனவளைச் சட்டென்று தாங்கிப் பிடித்தார் ராகவ்.

அவளைப் பிடித்தபடி, "என்ன பிரச்சனை இப்போ உங்க ரெண்டு பேருக்கும்!" என்று விசாரித்தவர், மைதிலியிடம் திரும்பி, "மைதி, ஏன் என் பொண்ணைத் துரத்துகிறாய்?" என்று அதட்டினார்.

"ஆஹா! அப்பா! உங்க கிட்டதான் யாரையாவது திட்ட ஐடியா வாங்கணும். இன்னும் மைதி செல்லம் அப்படின்னு கூப்பிட்டு அதட்டுங்க. என்னமா நடிக்கிறீங்க. நீங்க அம்மாவை அதட்டுற மாதிரி நடித்ததெல்லாம் போதும். முதலில் இந்தக் கவரினைப் பாருங்கள்," என்றாள்.

இப்பொழுது ஓரளவு அங்கிருந்த சூழ்நிலை புரிந்த ராகவ், நிலைமையைச் சமாளிக்க...

"கீர்த்திடா... ஒரு கையில உங்க அம்மாவைப் பிடித்துக் கொண்டிருக்கேன். இப்படியே எப்படிப் படிக்க முடியும்? என்ன செய்யலாம்?" என்று யோசித்தவர்,

"மைதி, நீ படி!" என்று கவரினைத் தன் மனைவியிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார்.

"நான் ஒண்ணும் படிக்கவில்லைப்பா. உங்க பொண்ணு உங்க கிட்டதான் முதலில் காண்பிக்க ஆசைப்பட்டாள். அதனால் நீங்களே படிங்க!" என்று சலித்தாள் மைதிலி.

அவளின் கோபத்தினைப் பார்த்த கீர்த்தி, "மேடம், ரொம்பத்தான் பிகு பண்ணாதீங்க. அவ்விடம் சேர்ந்தால் இவ்விடம்தான் சேரும் என்று எங்களுக்கும் தெரியும். ஒழுங்கா எங்க அப்பா சொன்னபடி படிங்க!" என்றபடி தந்தையைப் பார்த்தாள்.

அவளது கூற்றைக் கேட்டபடி, "ஆமாம் மைதி, என் பொண்ணு சொல்லிட்டானா வேறு பேச்சே கிடையாது. வம்பு பண்ணாம ஒழுங்காப் படி. என்னடா கீர்த்தி?" என்றவரைச் செல்லமாக முறைத்தபடி அவரது தோள்களிலேயே சாய்ந்தாள்.

அவள் கொடுத்த லெட்டரில் பார்வையினை ஓட விட்டனர் இருவரும்.

தன் மகள் ப்ரமோஷனில் மகிழ்ந்த இருவரும் சேர்ந்து தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். பின், "என்னடா, நீ சொல்லவே இல்லை. சர்ப்ரைசா சொல்ல வேண்டுமென்று நினைத்தாயா?" என்று ராகவ் கேட்ட பொழுது,

"இல்லப்பா. எனக்கே இன்னைக்குத்தான் தெரியும்..." என்றவள், சற்றுப் பெருமையாக, "எனக்கு எங்க கம்பெனி, எங்க எம்.டி.யே கொடுத்தார், தெரியுமா?" என்றாள் தன் டிரஸ்ஸின் காலரைத் தூக்கி விட்டபடி.

அவளது மலர்ந்த முகத்தினைப் பார்த்த ராகவ் சிரித்தபடி, "கீர்த்திடா! உன்னோட எம்.டி. பெரிய பிசினஸ் மேன் போல. உனக்குக் கொடுக்க வேண்டிய கிஃப்ட்டைக் கூட அவரோட தொழில் தொடர்பாகவே தந்திருக்கார். ம்ம்ம்... ரொம்ப சீக்கிரம் பெரிய லெவலில் வந்துடுவாரு..." என்று நக்கலடித்தார்.

அவருடன் சேர்ந்து மைதிலியும், "இல்லைங்க. பிறந்த நாளுக்கு வேறு எதுவும் ஆபீஸ் சார்பா வாங்கிக் கொடுக்க முடியாமல் நம்ம பொண்ணோட திறமைக்குக் கிடைத்த ப்ரமோஷனையே கொடுக்கிற அளவுக்குக் கஞ்சனா அந்த எம்.டி.?" என்று அவளும் தன் பங்குக்கு வாரினாள்.

அவர்கள் இருவரும் விளையாட்டாகப் பேசுகிறார்கள் என்று தெரிந்த போதும், சற்றுச் சூடாகவே, "தெரிந்த மாதிரி ரெண்டு பேரும் பேசாதீங்க. அவர் ஒண்ணும் பிசினஸ் மைன்டோட இருக்கிற ஆள் கிடையாது. உண்மையிலேயே என்னாலதான் ஒரு ப்ராஜெக்ட் தாமதமா தொடங்கப் போறாங்க. தெரியுமா? நீங்க சொல்கிற மாதிரி இருந்தால் என்னோட பிறந்த நாள் வரைக்கும் காத்திருந்திருக்க மாட்டார்..." என்று படபடவென்று பொரிந்தவளிடம்,

"அய்யோ தாயே, உன் எம்.டி. பற்றித் தெரியாமல் பேசிட்டோம். அவர் நல்லவர். வல்லவர். அப்புறம் தமிழில் என்னென்ன உயர்வான வார்த்தைகள் இருக்கோ... அதெல்லாம் போட்டுக்கோ. போதுமா? இப்போ ஆளை விடும்மா. பாவம் நாங்க!" என்றபடி கைகளை உயர்த்திச் சரணடைந்தார்.

அவரது செய்கைகளைப் பார்த்தவள், வாயினுள்ளே சிரித்தவள், சற்று மிரட்டும் தொனியுடன்,

"அது... அந்தப் பயம் இருக்கட்டும்..." என்றபடி, "சரி சரி. அதெல்லாம் விடுங்க. இப்போ, எங்க சார் எனக்குக் கொடுத்த கிஃப்ட்டை நான் உங்க திருமண நாளுக்கு என்னோட கிஃப்ட்டா தருகிறேன்," என்றவளிடம், ராகவ்,

"பரவாயில்லை கீர்த்தி! உங்க எம்.டி.க்குத் தப்பாம இருக்க!" என்றார் புன்னகையுடன்.

"அப்பா!" என்று சிணுங்கியவளிடம், மைதிலி,

"பின்ன என்ன... இந்த வருசம் பொண்ணு வேலைக்குப் போயிருக்கா. பெருசா கிடைக்கும்னு எதிர் பார்த்தா இப்படி ஏமாத்திட்டியே கீர்த்தி! என்னங்க... நம்ம பொண்ணு கவுத்துட்டாளே! என்ன பண்ணலாம், சொல் லுங்க!" என்றவள்,

"அம்மா... நீங்களுமா?" என்றவள், சட்டென்று, "அப்பா, வினோத் கால் பண்ணினானா? எனக்கு மதியமே கால் பண்ணிட்டான் தெரியுமா! உங்களுக்குப் பண்ண வில்லையா அவன்?" என்று கேட்டாள்.

"அப்படியா! எங்களுக்குப் பண்ணவில்லையே அந்தப் படவா!" என்றனர் அப்பாவியாய் ஒரே குரலில்.

"ஓ! பண்ணலயா... ஏன்?" - மனதிற்குள்ளேயே யோசித்தபடி, தனது அறை வாயிலினை அடைந்தவள்,

'அவன் அத்தை, மாமான்னா உயிரை விடுவானே... பின்ன எப்படி?' என்று யோசித்தவள், சட்டென்று நின்று, தலையில் கை வைத்தபடி திரும்பி,

"என்னைப் பார்த்தா உங்க ரெண்டு பேருக்கும் பாவமா தெரியவில்லையா! ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்துட்டு இப்படி எப்போ பார்த்தாலும் என்னைப் படுத்தறீங்க... என்னால முடியலை!" என்றாள்.

"என்னடா... நாங்க என்ன பண்ணினோம்?"

"சரி... சரி. நிறுத்துங்க. விநோத் பேசினானா இல்லையா?" என்றவள், உதட்டைக் கடித்து விட்டு, "எப்போ பண்ணான் என்று தெரிஞ்சுக்கலாமா?" என்று கேட்டாள்.

"காலையிலடா!" என்றவர், "அதுக்கப்புறம்தான் உனக்குக் கால் பண்ணினான்..." என்றார். "ஓ.கே. சாப்பிடலாம்,

வாடா!" என்றபடி, "மைதி, பசிக்குது. சாப்பிடலாமா?" என்று அழைத்தார்.

அதன் பிறகு அவர்கள் சாப்பிட்டு முடித்து... விடாமல் சற்று நேரம் அரட்டை அடித்தவளுக்குத் தூக்கம் வருவது போல் இருந்தது. "குட் நைட் பா... குட் நைட் மா..." என்றபடி தனது அறையினுள் வந்து கட்டிலில் விழுந்தவளை நித்திராதேவி ஆசையுடன் ஆட்கொண்டாள்.

மைலாப்பூரின் மத்தியில் கலகலப்பின் மறு அம்சமாய் இருந்த கீர்த்தியின் இல்லம் மெதுமெதுவாய் இருளைத் தழுவிக் கொண்டிருந்த அதே வேளையில்,

பெசன்ட் நகரில் கடற்கரை தெரிய... கடற்காற்று தழுவிய வண்ணம் இருந்த அந்த நவீன பங்களாவில் நிசப்தம் முழு உருவமாய்க் குடியிருந்தது. தனது அறையில் லேப்டாப்பில் மூழ்கியிருந்தான். க்ளையன்ட் மெயில்களை செக் பண்ணிக் கொண்டிருந்தவன், "பாலா!" என்ற தன் தாயின் அழைப்பில்...

"என்னங்கம்மா?" என்றபடி, அறையின் வெளியே வந்தவன், கீழே சாப்பிடத் தயாராய் இருப்பதைக் கண்டு, "இதோ வருகிறேன்ம்மா... ஒரு நிமிடம்!" என்றபடி அறை யினுள் சென்று லேப்டாப்பை ஷட் செய்து விட்டுக் கீழே இறங்கி வந்தான்.

பாலா - கதையின் நாயகன். கீர்த்தியின் எம்.டி. என்பது தெரிந்த விஷயம். தெரியாதவற்றையும் இனிப் பார்ப்போம்.

பணக்காரத் தாய் தந்தைக்குப் பிறந்த ஒரே செல்வ மகன். இயல்பிலேயே அவனுக்கு அனைத்தும் பாசம், குணம், பணம், கம்பீரம், அழகு, திறமை என எல்லாமே ஒரு படி மேலேயே இருந்தன. இருபத்து ஏழு வயதிலேயே தனக்கும் கீழ் நூற்றுக்கு மேற்பட்டோரை நிர்வகித்துக் கொண்டிருக் கிறான். கவியின் மூலம் அவன் ஓர் ஆணழகன் என்பது தெரிந்ததே!

பாலாவின் பல குணங்கள் பாசிட்டிவாக இருந்தாலும், அவை எல்லாவற்றிற்கும் மேலே அவனது கோபமும், பிடிவாதமும் அவனுக்குப் பெரிய மைனசாய் இருந்தன. தனக்கு ஒரு காரியம் ஆக வேண்டுமென்றால் எதற்காகவும் விட்டுக் கொடுக்காமல் அதை நிறைவேற்றியே தீருவேன் என்று அதில் வென்றும் காட்டும் பிடிவாதம். இந்தக் குணம் அவனுக்கு அவனது தொழிலில் மிகப் பெரும் வெற்றி யடையும்படியாகக் கூட இருந்தது.

ஆனால், அவனது வாழ்வில்? பார்க்கலாம். அவனது பிடிவாதம் அவனது வாழ்க்கையிலும் வெற்றி அடையத் துணை நிற்குமா என்று. கோபம், அவனாகக் கட்டுப் படுத்தினால் தவிர அதை யாராலும் கட்டிற்குள் கொண்டு வர முடியாது. இந்த இரண்டு குணத்தினையும் எப்படியாவது மாற்ற அவன் தாய் அருந்ததி எவ்வளவோ முயன்றும் இன்றுவரை மாற்ற முடியவில்லை.

அவனது கோபம், பிடிவாதம் எல்லாம் ஒரு பெண்ணிடம்தான் தோற்றுப் போக வேண்டும் என்று இருக்கும்போது, பாவம்... அவன் தாய் என்ன செய்ய முடியும்? அதற்காக விதியும் தனது விளையாட்டை அவனது வாழ்வில் தொடங்கியிருந்தது.

டைனிங் டேபிளில் பேருக்குச் சாப்பாட்டைக் கொறித்துக் கொண்டிருந்தவன், நினைத்துப் பார்க்கையில் தான் மேற்கொண்ட அனைத்து விஷயங்களிலுமே தனக்கு வெற்றிதான் கிடைத்திருக்கிறது. ஆனால், ஏன் என்று யோசிக்கும்போதே, அருந்ததி - பாலாவின் தாய்,

"பாலா, கோபத்தை எப்பவும் சாப்பாடு மேல காண்பிக்காதே. ஒழுங்காய்ச் சாப்பிடு!" என்று கண்டிப்பான அதட்டலில் கலைந்தவன், ஓரக் கண்ணால் தந்தையைப் பார்த்தான்.

பின் நிமிர்ந்து, "அம்மா, அப்பா, என்கூடப் பேசாமல் இருப்பதை நினைத்தால் ரொம்பக் கஷ்டமாய்

இருக்கிறதும்மா. அப்பாவைப் பேசச் சொல்லுங்க. அதை விட்டுட்டுக் கோபம் அது இதுன்னு வெறுப்பேத்தாதீங்க. நான் என்னம்மா தப்பு பண்ணினேன்? ஏற்கெனவே நான் நொந்து போய் இருக்கிறேன். இந்த நிலைமையில் அப்பா வேற என்னைக் கஷ்டப்படுத்தறாங்கம்மா!" என்று வருத்தமான தொனியில் வலியுடன் சாப்பாட்டைக் கைகளினால் அளைந்த படி தாயிடம் முறையிட்டான் பாலா.

இதைக் கேட்டவுடன், தன் குரலைச் செருமியபடி, ஜெகநாதன், "அருந்ததி, அவன் நல்லதை மட்டும் யோசிக்கிற நாம அவனுக்குக் கஷ்டம் கொடுக்கிறோமா?" என்று நக்கலையும், வேதனையையும் பிரதிபலித்த குரலில் பேசியபடி பாலாவை நோக்கினார்.

"அப்பா, எனக்கு நீங்க நல்லது பண்றேன்னு என்னைக் கஷ்டப்படுத்தாதீங்கனுதான் சொல்கிறேன். எனக்கு இப்போ மேரேஜ் வேண்டாமென்றால் விடுங்களேன்..." என்றான் இறுக்கமாக.

ஏதோ பேச ஆரம்பித்த ஜெகநாதனை...

"சரி சரி. விடுங்க. சாப்பிடற நேரத்தில் ஏதாவது பேசி அவன் எழுந்திடப் போகிறான். சாப்பிட்ட பிறகு என்ன வேணாலும் பேசுங்க!" என்றபடி அருந்ததி அவர்களின் அப்போதைய வார்த்தைப் போராட்டத்தினை நிறுத்தி வைத்தாள்.

அதன் பிறகு சாப்பிட்டு முடித்தவன் எதுவும் பேசாமல் மாடிப் படிகளில் ஏறத் தொடங்கினான்.

"பாலா, உன்னோட பேச வேண்டும்!" என்றார் ஜெகநாதன்.

திரும்பியவன், "என்னோட திருமணத்தைத் தவிர என்ன வேண்டுமென்றாலும் பேசலாம் அப்பா!" என்றான் நிதானமாக.

"நான் உன்னைப் பெத்தவன்டா. எனக்குப் பேச உரிமை இல்லையாடா! எப்படிடா இப்படி மாறினாய்? நான்

சொல்வதைக் காது குடுத்துக் கேளுடா. நான் காதலுக்கு எதிரி கிடையாது. அருந்ததியும் நானுமே விரும்பித்தான் திருமணம் செய்தவர்கள். இப்போகூட நான் உனக்கு மதுவைத் திருமணம் செய்து வைக்க மாட்டேன்னு சொல்லவில்லை. இந்த நிமிடம் மதுவைக் கூட்டிட்டு வந்தாலும் எனக்குச் சந்தோஷம்தான். ஆனால்..." என்று இழுத்தவர்,

"இந்த நான்கு வருடங்களாக அவளைக் கண்டுபிடிக்க முடிந்ததா, சொல்லு. இல்ல, எத்தனையோ இருக்க... மதுவைப் போய் விரும்பியிருப்பாயா?" என்று தன் மகனின் இன்றைய நிலையினைக் காணச் சகிக்காத தந்தையாய் ஆற்றாமையுடன் பேசினார்.

அவரது எந்த வார்த்தையிலும் கவனமில்லாத பாலா, கடைசி வாக்கியம் அவனது காதில் விழ, "இதுதான்... நீங்க சொல்கிற இந்தக் காரணம்தாம்பா புரியவில்லை எனக்கு. நான் யாரோனு நினைத்த மது என்னோட மாமா பொண்ணு என்றால் எங்க ரெண்டு பேருக்கும் பிரிக்க முடியாத ஏதோ பந்தம் இருக்கு என்றுதானே அர்த்தம். இல்லை என்றால் நம்ம குடும்பத்தோட தொடர்பே இல்லாத மாமா வீட்டிலிருந்து அவங்க பொண்ணு மதுவையே விரும்புவேனா! ஏம்ப்பா புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்க!" என்று தன் காதலின் விதியை நிரூபிக்க ஆரம்பித்தவனை,

"நிறுத்து பாலா!" என்று குரலினை உயர்த்திய தன் தந்தையினால் பேச்சைத் தொடராமல் அவரை நோக்கினான் பாலா.

"ஒரு வாரம் டைம் தருகிறேன் உனக்கு. ஏனென்றால் என் ஃபிரெண்ட் வாசுவின் மகள் சௌந்தர்யாவினை உனக்குப் பேசி முடிக்கப் போகிறேன்," என்று நிறுத்தியவர், "உனக்கு ஒரு வாரம் எதற்கு என்று யோசிக்கிறாயா?" என்றவர்,

"அது உன்னைப் புது வாழ்வுக்காகத் தயார்ப் படுத்திக் கொள்ள..." என்றார்.

அவரது அழுத்தமான பேச்சில் படிகளில் இருந்து இறங்கியவன்,

"இந்த ஜென்மத்தில் மது தவிர வேறு எந்தப் பொண்ணுக்கும் என் மனதிலும் சரி, வாழ்க்கையிலும் சரி... இடம் கிடையாது!" என்று உறுதியான குரலில் கூறியவன், "தென்..." என்றபடி,

"வாசு அங்கிள் கிட்ட உங்க ஃபிரெண்ட்ஷிப்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது உங்க பொறுப்பு. நான் சொன்னது புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்," என்றவன், தனது தாயை நோக்கி, "அம்மா, நீங்களாவது என்னைப் புரிந்து கொள்ளுங்கள். நான் மதுவைக் கண்டிப்பாகக் கண்டுபிடிப்பேன். அவ ஏதோ ஒரு பிரச்சனையில் மாட்டியிருக்கிறாள். இல்லை என்றால் என்கிட்ட எப்பவோ வந்து சேர்ந்திருப்பாள். ப்ளீஸ்மா. புரிஞ்சுக்கோங்க!" என்றான் தளர்வான குரலில்.

மகனின் வார்த்தைகளில் இருந்த தடுமாற்றத்தினை உணர்ந்த அருந்ததி, கவலையுற்ற போதும், அவனது வார்த்தைகளையே கேள்வியாக்கிக் கேட்டாள்.

"சரிப்பா! நான் புரிந்து கொள்கிறேன். இதற்குப் பதில் சொல்லு. மது ஏதோ பிரச்சனையில் இருக்கிறாள்..." என்று கூறியபோதே, அவளையும் மீறி வார்த்தைகள் தடுமாறின. ஆயிரம்தான் இருந்தாலும் அவளது அண்ணன் மகளாயிற்றே!

அவளது உட்பொருளை உணர்ந்த பாலா, கலங்கிய கண்களோடு, "இந்த நான்கு வருடம் வாழ்ந்த வாழ்க்கையை வாழ்நாள் முழுவதும் தொடர என்னால் முடியும்!" என்றவன், அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்காதவனாய் வேகமாகப் படிகளில் ஏறத் தொடங்கியிருந்தான்.

அவனையே பார்த்த அவனது பெற்றோரின் விழிகளில் அவனது எதிர்காலம் குறித்த பயம் மட்டுமே மிஞ்சியிருந்தது.

படுக்கையில் விழுந்த பாலாவோ மதுவின் நினைவ களில் போராடிக் கொண்டிருந்தான்.

"ஐ அம் மது... மதுபாலா!" என்று அவள் அறிமுகமாகிய காட்சி தோன்றி மறைந்தது. அவளது நினைவுகளின் தாக்கம் தாளாமல் புரண்டவன், "மது, எங்கடி இருக்க?" என்று அவனுள்ளாகக் கூறியபடி புரண்டவனிடம் ஏனோ அவனருகில் வராமல் நித்திராதேவி கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தாள்.

மணி 12.00 எனக் காட்டியது.

"கீர்த்திம்மா..." என்ற மைதிலியின் மென்மையான குரலில் திறந்தவளின் விழிகள், ராகவ், மைதிலியின் மேல் புன்னகையுடன் நின்றன. ராகவ் அவளது உச்சியில் முத்தமிட்டு அவரது பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். பதிலுக்கு அவருக்கு முத்தமிட்டுத் தனது நன்றியைத் தெரிவித்தாள் கீர்த்தி.

பின் தன் தாயின் புறம் திரும்பினாள். அவளோ ஏதும் சொல்லாமல் தன் மகளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முன் இரு கைகளையும் ஆட்டியவள்,

"என்ன மேடம்... இன்னும் தூக்கம் போகவில்லையா என்ன?" என்றபடி மைதிலியின் மூக்கைத் திருகினாள். அவளது அசைப்பில் ஒன்றுமில்லை என்றபடி தலையினை மட்டும் அசைத்தாள்.

ஹாலில் செய்திருந்த அலங்காரத்தினைப் பார்த்தவள், பிரமித்து, "என்னப்பா... இந்த வருடம் ஸ்பெஷல்?" என்றபடி கேக் வெட்டி மூன்று பேருக்குள்ளாகக் கலாட்டா செய்து ஒருவாறாக எல்லாம் முடிந்தபோது மணி ஒன்று ஆகி யிருந்தது.

மைதிலியின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்த கீர்த்தி, "அப்பா, உங்களுக்கு இது 25ஆவது வருடம். எனக்கு 22 முடியுது. 3 வருஷம் இடிக்குதே!" என்று வழக்கம் போல் தன் குறும்பைத் தொடங்கிய கீர்த்தியின் கன்னங்களை மெல்லத் திருகினாள் மைதிலி.

"ஆ!" என்று பொய்யாக அலறியவள், "அப்பா... அம்மா என்னை இன்னைக்குக் கூட இம்சைப் படுத்தறாங்க. என்னைக் காப்பாத்துங்க!" என்றபோது, அவளது கன்னங்களில் கூடான கண்ணீர்த் துளி விழுந்தது. சட்டெனப் பதறி எழுந்தவள்,

"அம்மா... என்னங்கம்மா?" என்றபடி தாயின் முகத்தை நோக்கினாள்.

"ஏய் மைதி, இப்போ எதுக்கு அழுகிறாய்? கீர்த்தி என்னமோ ஏதோன்னு நினைத்துப் பயப்படப் போகிறாள்!" என்றவுடன்...

தன் கண்களைத் துடைத்தவள், "ஒண்ணும் இல்லடா. இத்தனை வருடமும் எங்க திருமண நாளையும், உன் பிறந்த நாளையும் ஒண்ணாக் கொண்டாடிட்டு இருந்தோம். அடுத்த வருடம் பற்றி யோசித்தேன்..." என்றபோது, அவள் குரல் உடைந்திருந்தது.

மைதிலியின் கைகளில் தன் கையினை வைத்து மெதுவாக அழுத்தி, ராகவனைப் பார்த்தாள் கீர்த்தி.

அவரோ தன் சோகத்தினை இழுத்து வைத்துக் கொண்டிருப்பது காண முடியாமல்... தன் தாயின் மடியில் முகம் புதைத்து விசும்பத் தொடங்கினாள்.

சூழ்நிலையினை உணர்ந்து சட்டென்று முதலில் தன்னைச் சுதாரித்த மைதிலி,

"டேய் கீர்த்திமா, நான்தான் லூசு மாதிரிப் பேசுகிறேன் என்றால் அறிவுஜீவிகள் உங்க ரெண்டு பேருக்கும் எங்க போனது புத்தி! என்னமோ யு.எஸ்.ல இருந்து இங்க வரவே முடியாதா என்ன? இதுக்குப் போய் நீங்க இடி விழுந்த மாதிரி இருக்கீங்க. இவ என்னடான்னா... என் சேலையை நனைச்சுட்டு இருக்கா. சரி... சரி. கீர்த்தி, எழுந்திரு.

"என் பொண்ணு எவ்ளோ சமத்து தெரியுமா! அடுத்த வருசம் மாப்பிள்ளையவே இங்க இழுத்துட்டு வந்துட

மாட்டாளா... என்ன கீர்த்தி! இதுக்குப் போய் ரெண்டு பேரும் இப்படி ஃபீல் பண்றீங்க..." என்றவளைச் செல்லமாகத் தலையில் தட்டிய ராகவ்,

"கீர்த்திடா, எல்லாத்தையும் ஆரம்பித்து வைத்து விட்டு முடிவுரையைப் பார்த்தாயா! அப்பா இன்னைக்கு ஒரு நாள் உன் கட்சிடா. விடாதேடா, அவளை..." எனும்போதே அவளது செல்போன் சிணுங்கியது.

சிரித்துக் கொண்டே கண்களில் வழிந்திருந்த நீரைத் துடைத்தபடி, "ஸாரி டாட்! உங்க வொய்ஃப் அவங்க. அதனால நீங்க என்ன வேண்டுமானாலும் பண்ணுங்க. ஆனால், தண்டனை சிவியராக இருக்கணும். நான் என்னோட தண்டனையைக் கொடுத்துட்டுப் போகிறேன்..." என்றபடி மைதிலியின் கன்னங்களில் தன் இதழ்களைப் பதித்து விட்டு, தனது அறையை நோக்கிச் சென்றவள், திரும்பி, "அப்பா, பனிஷ்மெண்ட் மறந்துடாதீங்க..." என்று அறையினுள் நுழைந்தாள்.

செல்போனில் எண்ணைப் பார்த்தவள்... புருவம் சுருக்கி யோசித்துக் கொண்டிருக்கும்போதே மீண்டும் செல் அழைக்க ஆன் செய்தவள்,

"சொல்லுங்க சார்! மீட்டிங் இல்லையா உங்களுக்கு இப்போ?" என்றாள் கோபத்துடன்.

"ஸாரிடா கீர்த்தி!" என்றவன், தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து விட்டுத் தன் தாய் தந்தையிடம் கொடுத்தான்.

"தேங்க்ஸ் மாமா, தேங்க்ஸ் அத்தை!" என்றவள், "சரி சரி... உங்களுக்கு உங்க உடன் பிறவாத் தங்கை மைதிலி தானே முக்கியம். கன்டினியூ பண்ணுங்க அங்கேயே..." என்று சற்றுச் செல்லமாக அலுக்க... போன் விநோத்தின் கைகளில் மாறியிருந்தது.

"விநோத், என் பிறந்த நாளுக்கு என்னடா கிஃப்ட்? ஒண்ணும் காணோம். வாயிலயே பாயசம். அப்படித்தானே?" என்றவளிடம்,

"இந்த வருசம் மிஸ் ஆகிவிட்டது. அடுத்த வருடம் வட்டியும் முதலுமாய்த் தந்துடறேன். போதுமா?" என்றவனின் குரலில் இருந்தது என்ன என்று யோசிக்கும்போதே அழைப்பு கட்டாகியிருந்தது.

அவன் அழைப்பான் என்று காத்திருந்தபோது, கவியின் கால் வந்ததால் அதை அட்டென்ட் செய்து சிறிது நேரம் அவளுடன் அரட்டை அடித்து விட்டுப் படுக்கையில் சாய்ந்தவள், அடுத்த நாள் அவளது டீம் மெம்பர்ஸ் எப்படி இருப்பாங்க? என்னவெல்லாம் பேசலாம்... என்று யோசித்தபடி கண்களை மூடினாள்.

4

அன்று காலை எழுந்தது முதல் கீர்த்திக்கு உற்சாகம் அளவுக்கு மீறி இருந்தது.

ராகவுக்கும் மைதிலிக்கும் தான் வாங்கி வந்த ஆடைகளைக் கொடுத்து அணியச் செய்தவள், வழக்கம் போல் அவர்கள் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினாள்.

அதேபோல் மைதிலி அவளுக்குத் தாங்கள் வாங்கி வந்த சேலையினைக் கொடுத்து அணிந்து வருமாறு கூறினாள். அவர்கள் கொடுத்த பார்சலுடன் உள்ளே போனவள், வெளியே வரும்போது அரை மணி நேரம் முடிந்து விட்டிருந்தது.

வெளியே வந்த தங்கள் மகளைப் பார்த்தவர்கள், அப்படியே சிறிது நேரம் தங்கள் ஆசை மகளின் அழகில் மயங்கி நின்றனர். ராகவின் மனதினிலோ அவளது தோற்றம் குமரியாகக் காட்டினாலும், முகத்தில் இருந்த குறும்புத்தனம் அவளைக் குழந்தையாகவே நினைக்கத் தோன்றியது.

மைதிலியின் தாய் மனமோ வெகு விரைவில் தன் மகளுக்குத் திருமணம் செய்து கண் குளிரப் பார்க்க வேண்டும். தன் உடன்பிறவா அண்ணனிடம் விரைவில் பேச வேண்டும் என்று நினைத்தது.

"ஹலோ ஹீரோ, ஹீரோயின் எந்த உலகத்தில் இருக்கீங்க?" என்று கீர்த்தி கேட்ட பொழுதுதான் நனவுலகத்திற்கு வந்தனர்.

"எனக்குச் சேலை நல்லாயிருக்காப்பா? உங்க மைதி அளவுக்கு இல்லன்னா கூட ஏதோ பரவாயில்லைதானேப்பா!" என்று குழந்தை மாதிரி கேட்டவளிடம்,

மைதிலி, "கீர்த்தி, இப்பதான் அப்பா உனக்கு 22 முடிந்து 23 வயதாகியிருக்கிறது என்பதை நம்பியிருப்பார். இல்லைன்னா நீ அவருக்கு ஆறு வயதுக் குழந்தைதான். அப்பப்ப அவருக்கு ஞாபகப்படுத்தத்தான் உனக்குச் சேலை எடுத்துக் கொடுக்கச் சொல்வது..." என்று அவர்களது மகள் இன்னும் குழந்தை இல்லை... திருமணத்துக்குத் தயாராகி நிற்கும் குமரி என்பதனைக் கணவனுக்கு ஞாபகமூட்டினாள்.

"அச்சச்சோ... நீங்க வேறம்மா! நான் ஆறு வயதாக இருந்தால்தான் அப்பாவுக்கு ஒரு பதினைந்து வயது குறையும். நல்ல நாள் அதுவுமா அப்பாவுக்கு என்னால வயது ஏறிவிட்டதே..." என்று போலி வருத்தத்துடன், "என்ன ஹீரோ சார், அப்படித்தானே?" என்று ராகவை வம்பிற்கு இழுத்தாள்.

"உன்னோட சரிக்குச் சரி பேச இப்போ நேரமில்லை. எனக்கு ஆபீஸ் போகணும்..." என்றபடி, இருவரையும் கோவிலுக்குக் கிளப்பினார். அவர்கள் மூவரும் கீழிறங்கி வந்தபோது அவர்களது அபார்ட்மெண்ட் வாசிகள் பலரது வாழ்த்துக்களையும் புன்னகையுடன் கடந்து வந்தனர்.

காரில் பின்னால் ஏறப் போன மைதிலியை, "அம்மா, முன்னால ஏறிக்கோங்க. உங்க திருமண நாள் அதுவுமா, ஹீரோ, ஹீரோயினைப் பிரிச்ச பாவம் எனக்கு வேணாப்பா..." என்று பின் சீட்டிற்குச் சென்றாள்.

"உனக்கு இந்த வாய் எப்போதான் குறையப் போகுதோ, தெரியவில்லை! அளவுக்கு மீறிப் பேசுகிறாய்..." என்று கண்டித்தவளிடம்,

"அப்படி என்ன இப்போ அளவுக்கு மீறிப் பேசிவிட்டேன். அப்பா பக்கத்தில் போய் உட்காருங்கன்னா போகணும். புரிஞ்சுதா! இங்க எல்லாரும் நான் சொல்வதைத்தான் கேட்க வேண்டும். என்னங்கப்பா!" என்று அதிகாரத் தோரணை யுடன் கூறிய கீர்த்தியைப் பார்த்துச் சிரித்தவர்,

"பின்ன கீர்த்தி வார்த்தைக்கு இங்க நோ அப்பீல்!" என்று சரண்டரானவர், "அப்புறம் கீர்த்தி, நாங்க ஹீரோ, ஹீரோயின். அப்போ நீ யாரும்மா?" என்று அவளிடமே திருப்பிக் கேட்டார்.

இப்பொழுது மைதிலி முந்திக் கொண்டு, "கீர்த்திம்மா... நீ செகண்ட் ஹீரோயின்தானே..." என்றபோது, கீர்த்தியின் முகம் சிவந்தது.

தாயினைப் பார்த்து முறைத்தபடி, "இது உங்க ஃபிலிம். அதனால அப்படிச் சொன்னேன். நான் இதுல சைலட் ஆர்டிஸ்ட். போதுமா?" என்று கோபத்துடன் முறைத்தவள், "என்னைப் பார்த்தால் செகண்ட் ஹீரோயின் மாதிரி தெரியுதா! பாருங்க... என் ஹீரோ வரட்டும். அதன் பிறகு நீங்க இரண்டு பேரும் கேரக்டர் ஆர்டிஸ்ட் ஆகப் போறீங்க..." என்று கோபம் சற்றும் குறையாமல் கூறினாள்.

அதைப் பார்த்தவள், "சாரி... சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். நீ இதெல்லாம் சீரியஸாக எடுத்துக்கலாமா?" என்று மைதிலி, தனது வார்த்தைக்கு மன்னிப்பு வேண்டியவள், தன் மகளின் முகம் மலர்ந்து பார்த்த பிறகுதான் ஆறுதல் அடைந்தாள்.

குளோபல் நெட் - அலுவலகம் வழக்கமான சுறுசுறுப்பில் இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால், அதன் எம்.டி. பாலாவோ மனதில் அமைதியின்றித் தந்தையின் வார்த்தைகளுடன் போராடிக் கொண்டிருந்தான். பலவாறாகச் சிந்தித்தவன், நேரடியாகச் சௌந்தர்யாவுடன் பேச முடிவு செய்தான்.

கண்டிப்பாக, அவன் தனது மனதினை அவளிடம் சொல்லிவிட்டால் அவளும் இந்தத் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிக்க மாட்டாள் என்று முடிவு செய்தபோது, அவனது மனம் ஓரளவு நிம்மதி அடைந்திருந்தது.

ஒருவாறாகத் தன்னைச் சமாதானப்படுத்தியவன் அன்றைய தின வேலைகளை ஆரம்பித்தான்.

கீர்த்தி அன்று வழக்கத்திற்கு முன்னதாகவே வந்து சேர்ந்திருந்தாள்.

அவளைக் கண்ட கவி புருவத்தினை உயர்த்தியவள், "என்ன கீர்த்தி, இவ்ளோ சீக்கிரம் வந்து விட்டாய்?" என்று கேள்வி கேட்டவளிடம், புன்னகையினை மட்டும் பதிலாகத் தந்தாள். "இந்தச் சிரிப்பு ஒண்ணு போதும்டி, உனக்கு. எல்லாரும் கவுந்துடுவாங்க..." என்றபடியே, "ஏய், எங்கே உன் பிறந்த நாள் டிரஸ் - சாரீன்னு சொன்ன. சல்வாரில் வந்திக்கிறாய்!" என்று வினவினாள்.

"இல்ல கவி, இன்னைக்குப் புது டீம் மெம்பர்ஸை சார் இன்ட்ரடியூஸ் பண்றேனு சொன்னார். அதனாலதான் வழக்கம் போல வந்துட்டேன்..." என்று பதில் கூறினாள்.

"ஓ!" என்றபடி, "பை த வே... பாலாவை மீட் பண்ற டைமில்... இந்தக் கவி மேடத்தைப் பற்றிச் சொல்லி வை. பின்னால் உனக்கு யூஸ்ஃபுல்லா இருக்கும்," என்று மிரட்டும் தொனியில் கூறிய கவியிடம், "உங்கள் உத்தரவு மேடம்!" என்று பவ்யமாகக் கூறியவளைப் பார்த்தபடியே கவி கடந்து சென்றாள்.

கவி கடந்து செல்வதற்கும், அவளது டேபிளில் தொலைபேசி அழைக்கவும் சரியாக இருந்தது. அட்டெண்ட் பண்ணியவள், "ஓ.கே. சார்! ஐ வில் கம்..." என்றபடி போனை வைத்தவளுக்கு ஏதோ ஒன்று உறுத்தியது.

பாலா குரல் மாதிரி எங்கேயோ கேட்டிருக்கிறோமே என்று மூளையினைக் கசக்கியவளுக்குப் பாலாவின் குரலில்

ஏதோ சோகம் இருந்த மாதிரி தெரிந்தது. இதே போல் குரலில் வலியுடன் ஏற்கெனவே கேட்டது போல் இருந்த கீர்த்திக்கு, எங்கே என்று நினைவுகளின் தேக்கத்தில் தேடத் துவங்கிய கீர்த்தியினைக் கவியின் குரல் மீட்டு வந்தது. இல்லை, கவியின் உருவில் அவளது நினைவுகளை விதி தடுத்தது எனலாம்.

"என்ன கவி, திரும்ப வந்து நிற்கிறாய்? என்ன விஷயம்?" என்றாள் கீர்த்தி.

"வினோத்தா போனில்?" என்று நிறுத்தி விட்டு, "வினோத்னா சும்மா உன்னைக் கிண்டல் பண்ணலாம்ல. எனக்கு வேற போரடிக்குது..." என்றவளை நக்கலாகப் பார்த்தவள்,

"வினோத் இல்லை. வேற யார்னு கண்டுபிடி," என்றவளிடம்,

"போனை வைத்து விட்டுக் கனவு கண்டு கொண்டிருப்பதைப் பார்த்தால் வினோத்னுதான் தோணுது. வேற யாராய் இருக்கும்?" என்றபடி உதட்டைப் பிதுக்கினாள் கவி.

"சொல்லட்டுமா?" என்றபடி பாலாவின் பெயரைக் கூறினாள்.

"பாலாவா?" என்று முகத்தினைச் சுருக்கினாள்.

"கவி, என்ன கோபம் வருதா?" என்று சீண்டியவள்,

"இந்தக் கோபத்தையெல்லாம் மூட்டை கட்டி வச்சுட்டு இருக்கிற ஒரு மாசத்துல பாலாவைக் கரெக்ட் பண்ற வழியைப் பாரு. இப்போ என் வழியை விடு!" என்று அவளது மூக்கினைத் திருகியபடி பாலாவின் அறையை நோக்கி விரைந்தாள்.

அனுமதி கேட்டபடி பாலாவின் அறையினுள் நுழைந்த கீர்த்தி, புதியதாக நின்றிருந்த ஜவரின் மேல் பார்வையினை

ஓட விட்டாள். நான்காவதாக நின்றவனின் மேல் பார்வை சற்று ஆச்சரியத்துடன் நின்றது. "கீர்த்தனா!" என்ற பாலாவின் குரலில், வேகமாகப் பாலாவின் புறம் திரும்பினாள்.

"இவங்கதான் புது மெம்பர்ஸ்!" என்றபடி அவர்களிடம் திரும்பியவன், "இவங்க கீர்த்தனா. இந்த ப்ராஜெக்டோட டீம் லீடர்!" என்றபடி, அவளைப் பற்றி, அவளது திறமைகளைப் பற்றிப் பேசிக் கீர்த்தனாவை அறிமுகப்படுத்தினான்.

அதன் பிறகு கீர்த்தனாவிடம் அவர்களை அறிமுகப் படுத்த ஆரம்பித்தான். "நடேசன், குமார், மிருதுளா, கார்த்திக்..." எனும்போதே, கீர்த்தியும், "கார்த்திக்!" என்றாள்.

பாலா ஆச்சரியமாக, "ஏற்கெனவே கார்த்திக்கைத் தெரியுமா?" என்றபோது,

கார்த்திக் தொடங்கினான். "கீர்த்தியை எனக்குத் தெரியும் சார்..." என்று கார்த்திக் கூறியபோது, கீர்த்தி என்ற வார்த்தையில் அவனையும் அறியாமல் சற்று மனம் பின்னோக்கிச் சென்றபோதும், உடனடியாகச் சுதாரித்தவன், கார்த்திக்கைக் கவனிக்க ஆரம்பித்தான்.

"நாங்க ஒரே காலேஜ். நான் கீர்த்திக்கு 2 வருடம் சீனியர்!" என்றபடி, "கீர்த்தியை இங்க எதிர்பார்க்கவில்லை..." எனும்போதே கார்த்திக்கின் முகம் வெளிறியிருந்தது.

ஒருவாறாக அறிமுகப் படலம் முடிந்து மற்றவர்கள் வெளியேறி இருந்தனர். அதன் பிறகு பாலா அவளிடம் இந்த வேலைக்குத் தேவையான குறிப்புகள் மற்றும் விளக்கத்தினை அளித்தான்.

அவற்றையெல்லாம் கவனமாகக் கேட்டபடி கீர்த்தி விடைபெற்றுத் திரும்பியபோது, "கீர்த்தனா, ஒரு நிமிடம். இங்க உங்களைக் கீர்த்தினுதான் சொல்வாங்களா?" என்று கேட்டான்.

"எல்லாரும் இல்ல சார்! எனக்கு நெருக்கமானவங்க மட்டும் சார்!" என்று புன்னகைத்தாள்.

"ஓ!" என்றபடி சற்றுத் தயங்கி, "நீங்க தப்பா எடுக்க வில்லை என்றால் நானும் கீர்த்தி என்று கூப்பிடலாமா?" என்றவனைப் புரியாமல் பார்த்தவள் சற்று விழித்தாள்.

அவளது கண்களின் மூலம் அவளைப் படித்தவன், "இல்ல... என் பெஸ்ட் ஃப்ரெண்டோட மனைவி. எனக்கும் அவ ஃப்ரெண்ட். கீர்த்தின்னு பேர். அவ ஞாபகம் வந்துடுச்சு..." என்று மதுவின் உயிர்த் தோழி கீர்த்திகாவை நினைத்தபடி பேசினான்.

இப்பொழுது கீர்த்தியும் சுதாரித்தவளாய், "ஓ! தாராளமாய். இதில் என்ன சார் இருக்கு?" என்றபடி வெளியேறினாள்.

வெளியே வந்தவள்... கவியைத் தேடிச் சென்றாள்.

தன்னைப் பாலா, கீர்த்தி என்று அழைக்கலாமா என்று கேட்டதைக் கூறி, அவள் கோபத்தில் முகம் சிவப்பதைக் காணலாம் என்று நினைத்துப் போனவளுக்கு எதிர்மாறாய்ப் பதில் வந்தது.

கீர்த்தி கூறியதைக் கேட்ட கவி, கண்கள் விரிய... "அப்படியா கீர்த்தி! உன்னைக் கீர்த்தின்னு கூப்பிடலாமான்னா கேட்டார்..." என்றவள்,

"பரவாயில்லை கீர்த்தி! நம்ம ஆள் கொஞ்சம் ரஃப் அண்ட் டஃப் மாதிரியான ஆள் மாதிரித் தெரியுதே. எப்படி வழிக்குக் கொண்டு வரலாம்னு நினைத்தேன். இப்பக் கொஞ்சம் நம்பிக்கை வந்துடுச்சு. தேத்திடலாம்!" என்றபடி, கீர்த்தியிடம் அபிப்பிராயம் கேட்கும் பாவனையில்,

"என்ன கீர்த்தி, தேத்திடலாம்ல?" என்றாள்.

அவள் பதிலில் அதிர்ந்த கீர்த்தி, சிரித்தபடியே திரும்பியவள், "எப்படி கவி... எவ்ளோ அடிச்சாலும் தாங்குற... ம்... தேத்திடலாம். ஆனால் நம்ம ஆளை இல்லை... உன் ஆளை!" என்று அவளின் வார்த்தைகளைத் திருத்தியபடியே தனது இருக்கைக்குச் சென்றாள்.

அதன் பிறகு புது வேலைக்குத் தேவையானவற்றைப் பார்க்க ஆரம்பித்தவள்... அப்படியே அதில் ஆழ்ந்தும் விட்டாள்.

கிட்டத்தட்ட தனக்குத் தேவையான தகவல்களைத் திரட்டிய திருப்தியில், சற்று ஓய்வாக இருக்க... கண்களை மூடியவளுக்கு அப்போதுதான் கார்த்தியின் ஞாபகம் வர,

'கீர்த்தி, உன்னெல்லாம் என்ன பண்றது? உன்னோட சீனியர் இங்கே ஜாயின் பண்ணியிருக்கான். அவனிடம் போய் ஒரு வார்த்தை கூடப் பேசப் போகாமல் மறந்து விட்டாயே!' என்று மனதிற்குள் கடிந்தபடி கார்த்திக்கைத் தேடிச் சென்றாள் கீர்த்தி.

தன்னைத் தேடிக் கீர்த்தி வருவதைக் கண்ட கார்த்திக், கொஞ்சம் முகம் வெளுத்தவனாய் அவளை எதிர் கொண்டவன்... "ஹாய் கீர்த்தி!" என்றபடி வரவேற்றான்.

"ஹாய் கார்த்திக்! சாரி. கொஞ்சம் வொர்க் இருந்தது. அதனால் வர முடியவில்லை. நீங்க இங்க எப்படி என்ற கேள்வியைக் கேட்கக் கூடாது. ஆனால், உலகம் உருண்டைதான் என்பதை நம்பித்தான் ஆக வேண்டும். உங்களைப் பார்த்தவுடன் எனக்கு நம்ம காலேஜ் ஞாபகம் வந்து விட்டது..." என்று அவனிடம் எந்தப் பதிலையும் எதிர்பார்க்காமல் துள்ளலாகப் பேச ஆரம்பித்தாள் கீர்த்தி.

அவனோ கீர்த்தியை வைத்த கண் வாங்காமல் அவள் பேசுவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஏனென்றால் அவன் அவளுடன் படித்த பொழுது, தான் சீனியர் என்ற கெத்துடன், ஹீரோ போல் அவளை வம்பிழுக்கப் போய் அவள் பிரின்ஸிபாலிடம் ரிப்போர்ட் பண்ணியதால் பெரிய பிரச்சனை ஆகி, இருவருக்குமே அங்கு ஒருவருக்கொருவர் பேசியதுமில்லை.

கார்த்திக்கிற்கோ அவள் திமிர் பிடித்தவள் என்ற நினைப்பு.

அவளுக்கோ அவனைக் கண்டாலே ஆகாது. பெரும்பாலும் அவன் திசைக்கே வர மாட்டாள். ஆனாலும் இவன் தேடிப் போய் வம்பிழுப்பான். அதன் பிறகு அவன் அடுத்த வருடமே, தனது கடைசி வருடப் படிப்பை அவனது அப்பா இறந்த காரணத்தினால் வேறு கல்லூரிக்கு மாற்றிச் சென்று விட்டிருந்தான். அதனால்தான் இன்று கீர்த்தியைப் பார்த்தவுடன் சற்று வெளிறியதும். ஆனால், அவளோ தன்னுடன் படித்த நண்பனை மீண்டும் பார்ப்பது போல் அவனுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

அவன் ஒன்றுமே பேசாமல் இருப்பதைப் பார்த்த கீர்த்தி, "கார்த்தி, என்ன மெய்மறந்து பார்த்துட்டு இருக்கீங்க. சீனியர் சார்க்கு வந்த வுடனே மரியாதை செய்யவில்லை என்றா?" - என

அவள் சற்றுச் சத்தமாக, அழுத்தமாகக் கூறிய போதுதான்,

"இ... இல்லை கீர்த்தி! உன்னைப் பார்த்துத்தான் ஆச்சரியமாய் இருக்கிறது. ஏன்னா நான் அவ்வளவு டார்ச்சர் பண்ணியிருக்கேன் உன்கிட்ட. ஆனால், அதெல்லாம் நடக்காதது மாதிரி நீயே வந்து ஒரு பழைய நண்பனைப் பார்ப்மது போல் பேசிக் கொண்டிருக்கிறாய். உன்னைப் பார்த்த வுடனே எனக்கு நான் உன்கிட்ட பண்ணுன சில்லறைத் தனமான செயல்கள் ஞாபகம் வந்து விட்டன. சாரி ஃபார் எவ்ரிதிங். நீ என்கிட்ட பழசெல்லாம் ஞாபகம் வைத்துப் பேசாமல் இருந்து விடுவாயோ என்று நினைத்தேன். அதுதான்..." என்று இழுத்தான்.

"கார்த்தி, அதெல்லாம் அப்போ. இன்னைக்கு உங்களைப் பார்த்த பொழுது நான் எவ்வளவு சந்தோஷப் பட்டேன், தெரியுமா! அதே மாதிரி நீங்களும் என்னை விரோதி மாதிரி பார்க்கவில்லை. அதெல்லாம் நாம் மறந்து விடுவோம். இனிமேல் நாம் ஒரே இடத்தில் இருக்கப் போகிறோம். ஸோ, இப்போதிலிருந்து நாம் நண்பர்கள்..."

என்றபடி, "தென், இன்னைக்கு என்னோட பிறந்த நாள். நாம் எல்லோரும் லஞ்ச் சாப்பிட வெளியே போகலாமா? வருவீங்கதானே?" என்றபடி கார்த்தியை அழைத்தாள்.

"அப்படியா கீர்த்தி!" என்றவன், தனது வாழ்த்துக் களைத் தெரிவித்தான்.

அதன் பிறகு கீர்த்தி, கவி, கார்த்திக் மூவரும் அருகில் இருந்த ஹோட்டலுக்குக் கிளம்பினர்.

அங்கு கார்த்திக்கைக் கவிக்கு அறிமுகப்படுத்தினாள். அதன் பிறகு கல்லூரியில் தங்களுக்கிடையே இருந்த நட்பின் அழகினையும் கூறினாள்.

கவி அங்கும் தன் குறும்பை ஆரம்பித்தாள்.

கார்த்திக் கை கழுவச் சென்ற வேளையில், "கீர்த்தி, பையன் ஸ்மார்ட்டாத்தான் இருக்கான். பேசாமல் விநோத்திற்கு பை சொல்லி விட்டுக் கார்த்திக்கை கவர் பண்ணலாம்..." என்றவளை உண்மையாகவே முறைத்தவள்,

"ஒழுங்காச் சாப்பிடற வேலையை மட்டும் பாரு. இந்த ஜோடி சேர்க்கிற வேலையெல்லாம் உன்னோடயே நிறுத்திக்க!" என்றாள் கடுமையாகவே.

அவளது கோபத்தினைப் பார்த்துச் சற்று மிரண்ட கவி, "தப்பா எடுத்துக்காதே கீர்த்தி! சும்மா சொன்னேன். ஏதோ சொல்வாங்க... மோதலில் ஆரம்பிப்பது காதலில் முடியும்னு. இப்போ பாரு, கார்த்திக் எதுக்கு நீ இருக்கிற இடத்துக்கே..." என்று ஆரம்பித்தவள்,

கீர்த்தியின் அக்னிப் பார்வையில் சொல்ல வந்ததை அப்படியே முழுங்கி விட்டு, அதன் பிறகு ஒன்றும் பேசாமல் சாப்பிடும் வேலையை மட்டும் பார்க்கத் தொடங்கினாள்.

அதே நேரத்தில் பாலா தனக்காக அப்பா பார்த்து வைத்திருப்பதாகச் சொன்ன சௌந்தர்யாவினைப் பார்க்க முற்பட்டான்.

5

ஹோட்டல் ஆதித்யாவில் சௌந்தர்யா விற்காகப் பாலா காத்துக் கொண்டிருந்தான். கிட்டத்தட்ட அரை மணி நேரமாகியும் அவள் வராததால், கொஞ்சம் கடுப்பானவன் மீண்டும் அவளுக்குக் கால் செய்தான்.

அடுத்த முனையில், "இதோ வந்துட்டேன், பாலா. சிக்னலில் நிற்கிறேன். எனக்காக என்னென்னவோ செய்யப் போகிறீர்கள். ஒரு அரை மணி நேரம் காத்திருக்க மாட்டீர்களா?" என்று கொஞ்சலாகக் கூறியவளின் வார்த்தைகளில் எரிச்சல் அடைந்தவன்... அதற்கு மேல் அவளிடம் பேசப் பிடிக்காமல் அழைப்பை கட் செய்தான்.

சுற்றியிருந்தவர்களின் மேல் பார்வையினைச் சுழல விட்டான். வந்தவர்களில் முக்கால்வாசிப் பேர் காதலர்கள். அவர்களைப் பார்த்தவன், மதுவின் நினைவுகளுக்குத் தாவினான். இன்று காத்திருப்பது போல் ஒரு நாள் கூட அவன் அவளுக்காகக் காத்திருந்தது கிடையாது.

எப்படியாவது அவள்தான் முன்னால் வந்து காத்திருப்பாள். இன்று யாரோ ஒருத்திக்காகக் காத்திருக்கிற தனது விதியினை நொந்தபடி அமர்ந்திருந்த பாலா, தூரத்தில் சௌந்தர்யா வருவதைப் பார்த்தான். யாரையும் உறுத்தாத ஒரு அலங்காரத்தில் ஜீன்ஸ், மற்றும் டாப்ஸ் அணிந்திருந்தாள். கையில் கார் சாவியினைச் சுழற்றியபடி வந்த சௌந்தர்யாவின் கண்களில் பாலா தென்பட்டதும், அவள் கண்கள் சந்தோஷத்தினில் சற்றுச் சுருங்கி, விரிந்தன. அங்கிருந்தபடியே அவனைப் பார்த்துக் கையசைத்தவள், பாலாவினை வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி அவனை நோக்கி வந்தாள்.

பாலா - இன்னும் சில நாட்களில் அவளுடையவன் ஆகப் போகிறவன். அவள் அவனிடம் பேசி இருக்கிறாள். அவனும் அவளிடம் சாதாரணமாகத்தான் பேசுவான். இந்த

நான்கு வருடங்களாகத்தான் அவன் பெரும்பாலும் எந்த ஒரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதில்லை. முதலில் அவன் இருக்கும் இடத்தில் கலகலப்புக்குப் பஞ்சமே இருக்காது.

சௌந்தர்யா அப்போது கல்லூரி முதல் ஆண்டு சேர்ந்த சமயம். அந்தச் சமயத்தில் அவர்கள் இருவருக்கும் பொதுவான குடும்ப நண்பர் ஒருவரின் மகள் திருமணம். அதுதான் அவள் அவனைக் கலகலப்பாகப் பார்த்த கடைசி நிகழ்ச்சி. அதன் பிறகு அவனைப் பார்ப்பதே அரிது. அப்படியே வந்தாலும் அமைதியாக இருந்து விட்டுப் போய் விடுவதே அவனது வழக்கமாக இருந்தது.

அப்போது, அவள், தொழில் தொடங்கிய காரணமாக, அதில் மும்முரமாய் இருக்கிறான் என்று நினைத்திருந்தாள். ஆனால், ஒரு மாதத்திற்கு முன்புதான் அவனது காதல் விஷயம் அவளுக்குத் தெரிய வந்தது. அவள் தந்தை அவனைத் திருமணம் செய்து கொள்ள அவள் சம்மதம் கேட்டபோது, அவள் உடனே ஒத்துக் கொண்டாள். பாலா மாதிரி ஒருவன் கிடைக்க அவள் கொடுத்தல்லவா வைத்திருக்க வேண்டும்.

ஆனால், மறுநாளே பாலாவின் தந்தை மதுவைப் பற்றிச் சொன்னபோதும் கூடக் கொஞ்சமும் தயங்காமல், அவனைத் திருமணம் செய்வதால் கிடைக்கும் லாபங்களை மட்டும் கணக்கில் கொண்டு அவனைத் திருமணம் செய்யத் தலையசைத்தும் விட்டாள். இனி, அவன் மனதில் இருந்து மதுவை நீக்கி அவனின் மனதில் தன் நினைவுகளைப் பதிக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தவளுக்கு அவன் அவளைப் பார்க்க வேண்டும்... பேச வேண்டும் என்று கூறியபோது துள்ளிக் குதிக்காத குறைதான்.

அவளது தந்தை நாதனிடம், சந்தோஷமாக விஷயத்தினைக் கூறியவள், தன் தந்தையின் முகம் சுருங்கி விட்டதைக் கவனித்தாள்.

"என்ன?" என்று விசாரித்தபோது, "அநேகமாக அவளை மணக்கச் சம்மதமில்லை என்று சொல்லத்தான் இருக்கும்..." என்று சந்தேகப்பட்டவரை...

"விடுங்கப்பா. எனக்கு இதெல்லாம் பெரிய விஷயமே இல்லை..." என்றபடி இங்கு கிளம்பியும் வந்து விட்டாள். அவளுக்கு அவள் அழகு மேல் அத்தனை நம்பிக்கை.

இதோ பாலாவின் அருகில் வந்து விட்டாள் சௌந்தர்யா. அவனது எதிரில் வந்து அமர்ந்தவள், வழக்கமான விசாரிப்புகளுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தாள்.

அவனோ அவளது கேள்விகளுக்கு, அதிகபட்சமாக ஒரு வார்த்தையில் பதில் அளித்துக் கொண்டிருந்தான். ஒரு கட்டத்தில் அவளும் அலுத்துப் போய்க் காபியில் மட்டும் கவனம் செலுத்த ஆரம்பித்தாள்.

காபிக் கோப்பையினை மெதுவாக மேசையின் மேல் வைத்து விட்டு, சற்று செருமியபடி, "சௌந்தர்யா, உன்னை எதற்காகக் கூப்பிட்டேன் என்று தெரியுமா?" என்றபடி, அவளைக் கூர்ந்து நோக்கினான்.

அவளோ, "தான் திருமணம் செய்து கொள்ளப் போகிற பெண்ணை எதற்காக ஒருவன் அழைப்பான்? இதென்ன பாலா கேள்வி?" என்று கூலாகக் கேட்டாள்.

அவளைப் பரிதாபமாகப் பார்த்தபடி, "சௌந்தர்யா, என்னைப் பற்றி உனக்கு ஏதும் தெரியாது. உன்னை உங்க வீட்டில் ஏமாற்றப் பார்க்கிறார்கள். உனக்கு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும். நான் உனக்குச் சரியானவன் கிடையாது..." என்று இறுக்கமான குரலில் கூறிக் கொண்டிருந்தவனை,

"ஏன்?" என்ற ஒற்றை வார்த்தையில் நிறுத்தினாள்.

"நான் ஏற்கெனவே வேறொரு பெண்ணை விரும்புகிறேன். இதை உனக்கு மறைத்து எனக்குத்

திருமணம் செய்து வைக்கப் பார்க்கிறார்கள்..." என்றான் நிதானமாக, ஒரு குழந்தைக்குச் சொல்வதைப் போல.

இதெல்லாம் எதிர்பார்த்து வந்தவள்தானே, அவள். சற்றும் குரல் பிசிறில்லாமல், "எனக்குத் தெரியாது என்று நினைத்தது உங்கள் தவறு..." என்றபடி, அவனைப் பார்த்துச் சிரித்தவள், "என் அப்பா அம்மா என்னை ஏமாற்றப் பார்க்கிறார்களா... நல்ல வேடிக்கை பாலா!" என்றபடி, கொஞ்சம் சத்தமாகச் சிரித்தவளைக் குழப்பமாகப் பார்த்தான் பாலா.

"உனக்குத் தெரியுமா? தெரிந்தும்... ஏன் உனக்குத் தலையெழுத்தா? மதுவைத் தவிர என் வாழ்க்கையில் வேறு யாரும் கிடையாது. இதை உனக்குச் சொல்லி, எப்படிப் புரிய வைப்பது என்று நினைத்திருந்தேன். உனக்கே எல்லா விஷயங்களும் தெரிந்திருக்கும்போது, நான் வந்த வேலை சுலபமாகி விட்டது..." என்று கூறிவிட்டுக் கொஞ்சம் அமைதியானவனுக்கு அப்போதுதான் தோன்றியது. "என்னைப் பற்றித் தெரிந்தும் இவள் ஏன் சம்மதித்தாள்?" - மனதில் தோன்றிய சந்தேகத்தினை அவளிடம் கேட்டும் விட்டான்.

அவளோ அவளது இதழின் ஓரத்தில் தேக்கிய புன்னகையுடன், "என்னைப் பாருங்கள் பாலா. என்னுடைய அழகு ஒன்று போதும். உங்க மனதிலிருந்து அந்த மதுவினைத் தூக்க. ஆனால் நான் இதையெல்லாம் விட என் அன்பைக் காட்டி, என் பக்கம் இழுத்து விடுவேன்..." என்றபடி, அவனது கைகளைப் பற்றியவள், "பாலா, பாஸ்ட் இஸ் பாஸ்ட். கொஞ்சம் சுற்றிப் பாருங்கள். இங்க இருக்கிறவர்களில் நாம்தான் பொருத்தமா இருக்கிற ஜோடி. நீங்க என்னைத் திருமணம் செய்த பிறகு பாருங்க... என்னோட அன்பு மழையில் மது என்ன... அந்த இந்திரலோக ரதி வந்தால் கூடத் திரும்பிப் பார்க்க மாட்டீர்கள். பாலா, ப்ளீஸ். இல்லாத ஒருத்திக்காக உங்க வாழ்க்கையைப் பாழாக்காதீர்கள். பாவம்

மாமா! மிகவும் வருத்தப்படுகிறார்கள்..." என்றபடி பிடியினைக் கொஞ்சம் இறுக்கமாகப் பற்றினாள் சௌந்தர்யா.

கிட்டத்தட்ட ஏற்கெனவே கோபத்தின் எல்லைக்கு அருகில் இருந்தான் பாலா. அவளது பேச்சு மற்றும் செய்கை அவனுக்கு இன்னும் கோபத்தைக் கிளப்பி விட, அவனது கோபத்தைப் பற்றி அவனுக்கே தெரியும். கோபம் வந்தால் அது ஆணோ, பெண்ணோ அவனால் கட்டுப்படுத்த முடியாது. அதனால் வேறு எதுவும் பேசாமல் கிளம்பி விடுவது நல்லது என்று யோசித்தவனுக்கு...

எல்லாம் தெரிந்தும் இவள் இவ்வளவு பேசுகிறாள் என்றால் தன் தந்தையின் பங்கு எந்த அளவுக்கு இருக்கிறது என்று நினைக்கும்போதே அவனது கோபம் மேலும் மேலும் கூடிக் கொண்டிருந்தது. அவர் அந்த அளவுக்குப் பேசியிருந்தால்தான்... இந்தப் பெண் இவ்வளவு தூரம் பேசுகிறாள் என்றபோது சௌந்தர்யாவைக் காட்டிலும் அவனுக்கு அவனது அப்பாவின் மேல்தான் கோபம் வந்தது.

இனிமேலும் இங்கு இருப்பதும், இந்தப் பெண்ணிற்குப் புரிய வைப்பதும் ஒன்றுக்கும் உதவாத காரியம் என்று முடிவு செய்தவன்... அவளது கைகளை விலக்க முயன்றான். ஆனால், அவளோ இன்னும் இறுக்கமாகப் பற்றி அவன் கைகளினை அவளது பிடியிலிருந்து எடுக்க முயற்சிப்பதைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தாள். இப்போது அவளைப் பார்த்து ஒரு முறை முறைத்தபடி, வேகமாகக் கைகளினைப் பறித்தவன், பணத்தினைப் பர்சிலிருந்து வேகமாக எடுத்து வைத்து விட்டு, கார் பார்க்கிங்கை நோக்கி நடந்தான்.

தன் தந்தையை நினைத்தபடி ஆத்திரத்துடன் கார் பார்க்கிங்கை அடைந்தவன்... கார் கீயைத் தேடிய பொழுது காணவில்லை. சற்று யோசித்தவனுக்கு அவன் அமர்ந்திருந்த இடத்தில்தான் விழுந்திருக்கும் என்று மீண்டும் அவன் அமர்ந்திருந்த இடத்தினை நோக்கி வந்தான்.

நல்ல வேளையாக கார் சாவி அங்கேயேதான் இருந்தது. எடுத்தவன் அப்போதுதான் எங்கே சௌந்தர்யா என்றபடி கண்களைச் சுழல விட்டவன், அவள் எங்கே போனால் நமக்கென்ன என்று தனக்குள்ளே முணு முணுத்தபடி முன்னே சென்றவனுக்கு, அருகில் இருந்த செடியின் அருகினில் சௌந்தர்யாவின் குரல் கேட்டது.

"அப்பா, அந்தப் பாலா ஏதோ நல்லா இருக்கான், பணம் இருக்குனு பார்த்தால் என்னவோ ரொம்பத்தான் உருகுகிறான். எனக்கென்னவோ ஒண்ணும் பிடிக்கலை. நீங்க வேற ஏதோ அவனை மேரேஜ் பண்ணிக் கொண்டால் அவங்க அப்பாவோட ஷேர் கிடைக்கும். கம்பெனியை நாம் வளைச்சுடலாம்னு சொன்னீங்க. அவன் அப்பாவும் நீங்க சொன்னதுக்கெல்லாம் தலை ஆட்டுறாருன்னு சொன்னீங்க. இவன் ஒரு கல்லுளி மங்கனா இருக்கான்ப்பா. என் வாழ்க்கை என்னாகும்?" என்றபடி அவளது தந்தையிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

அவளுக்கோ அவன் அவளை அலட்சியம் செய்து விட்ட கோபத்தில் சுற்று முற்றும் பாராமல் அவன் போய் விட்டதாக நினைத்துச் சத்தமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

உண்மையாகச் சொல்லப் போனால் பாலாவுக்கு அவள் மேல் அவ்வளவு கோபம் இல்லைதான். ஏதோ சின்னப் பெண் உளறுகிறாள் என்றளவே எண்ணி யிருந்தான்.

மறுமுனையில் அவள் தந்தை என்ன பேசினாரோ அவனுக்குத் தெரியவில்லை.

"இல்லப்பா! நானும் எப்படியோ பாலாவை கன்வின்ஸ் பண்ணலாம்னு பார்த்தால் அவன் எனக்கே அட்வைஸ் பண்ணறான். எனக்கு நல்ல வாழ்க்கை கிடைக்க வேண்டுமாம். அவன் அந்த வாழ்க்கையைத் தர முடியாது என்று என்னை மாற்ற ட்ரை பண்றான்..." என்றவள். "என்னால் முடிந்தவரை அவன் மனதில் என் மேல் அதிகமாய்

கோபம் வராமல் பார்த்துக் கொண்டேன். நான் சின்னப் பெண்ணாம். ஏதோ தெரியாமல் பேசிக் கொண்டிருக் கிறேனாம். கடுப்பா வருதுப்பா... என்ன பண்ணலாம்... நமக்கு இவன் சரிப்பட மாட்டான்னு தோணுதுப்பா!" என்றவளை, அவளது தந்தையின் குரல் தடுத்து நிறுத்தியது.

"சௌந்தர்யா, கொஞ்சம் கஷ்டம்தான்மா. ஆனால், அவன் ஒரு பொன் முட்டையிடுற வாத்துமா. அவனை இப்போ விட்டால் பிடிக்க முடியாது. தானா நம்ம வலையில் மாட்டியிருக்கு. அதனால் நீ ஒண்ணும் கவலைப்படாதே. பாலா அப்பா நம்ம கையில் இருக்கும் வரையில் நமக்கு ஒண்ணும் கவலை இல்லை..." என்று அவளைத் தன் வழிக்கு மீண்டும் கொண்டு வந்தார்.

"சரிப்பா... இப்போ நான் என்ன பண்ண வேண்டுமென்று எனக்கே தெரியவில்லை. நான் வீட்டுக்கு வருகிறேன்..." என்றபடி போனை வைத்தவளின் முன், நெற்றிக் கண் இருந்தால் அவளை எரித்தே விட்டிருப்பான்.

அவனது கண்களில் கோபமும், கொலை வெறியும் கலந்திருந்தது. முகம் கோபத்தில் இறுகி இருந்தது. புருவங்கள் நெரித்தபடி, "ச்சே... நீல்லாம் ஒரு பொண்ணு. அவங்க ஒரு பெரிய மனுசங்க. வெட்கமாயில்ல உங்களுக்கு. ஒருத்தனோட வீழ்ச்சியில் லாபம் பார்க்கிற கூட்டங்கள். உன்னையும் எங்க அப்பா நம்பினார் பாரு. அதற்கு அவருக்கு நல்ல பாடம். என்னைக் கடவுள் கை விட்டு விட்டார்னுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போதான் தெரியுது. என்னை முழுதாய்க் கைவிடவில்லை என்று. இல்லைன்னா... உன்னை மாதிரிக் குள்ளநரிக் கூட்டத்தை யெல்லாம் தெரிஞ்சிருக்க முடியுமா?" என்று பற்களைக் கடித்தபடி கோபத்துடன் பார்த்தான்.

அவனது கோபத்தைப் பார்த்தவளுக்கு உள்ளே நடுக்கமே வந்து விட்டது.

"அது பாலா..." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவளை,

"நிறுத்து. உன் கதையை இங்கு யாரும் கேட்க வரவில்லை. ஒழுங்கா போய் விடு. இல்லை, நான் இருக்கிற ஆத்திரத்தில் கொலை செய்யக்கூடத் தயங்க மாட்டேன். ஜாக்கிரதை! ஏன்டி நீயெல்லாம் பணக்காரிதானே. பிறகு ஏன் இந்தப் பணத்தின் மேல இவ்வளவு ஆசை?" என்றவன், அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்காமல், அவளைப் பார்க்கப் பிடிக்காமல் விறுவிறுவென்று அவளைக் கடந்து சென்று விட்டான்.

ஒரு நிமிடம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள், போனை எடுத்துத் தன் தந்தைக்குக் கால் செய்து, அவர்களின் கனவுக் கோட்டை தூள் தூளாய்ப் போனதைக் கூறினாள்.

ஆனால், அவள் தந்தையோ, "அப்படியா சொன்னான், அந்தப் பாலா? பரவாயில்லை. விடு. நம்மைத் தவிர அவனுக்கும் வேற வழியே கிடையாது. எப்படியும் நம்மைத் தேடித்தான் வருவான். விட்டுப் பிடிப்போம். பாலா அப்பாதான் பாலாவோட கடிவாளம். அது நம்ம கையில இருக்கு. நீ ஏன்மா கவலைப்படுகிறாய்? எல்லாவற்றிற்கும் சம்மதம் என்றுதானே சொல்லி இருக்கிறான். என்ன... உன்னை நல்ல பெண் என்று பாலா நினைத்துக் கொண்டி ருந்தான். பார்க்கலாம்..." என்று மகளைத் தேற்றினார்.

தனது நிலையினை எண்ணி நோவதா, இல்லை... தனக்காக எதிரில் இருப்பது பள்ளம் என்று தெரிந்தும் மகனுக்கு நல்ல வழி கிடைக்கும் என்றால் விழவும் தயாராய் இருக்கும் தன் தந்தையினை எண்ணி நோவதா என்று நினைத்தவன் இப்போதைக்கு அவளைப் பார்த்ததை, தன் தந்தையிடம் சொல்ல வேண்டாம் என்று எண்ணியவன், அவளிடம் ஹோட்டல் என்று பார்க்காமல் கோபத்தைக் காட்டியது தவறோ என்று சற்று வருத்தப்பட்டவன், அவளை

அறையாமல் விட்டு வந்தோமே... அந்த வகையில் தப்பித்தாள் என்று தனக்குள்ளாகவே தேற்றியவனுக்கு, கடந்த நான்கு வருடத்தில் காணாமல் போன அந்த நாள் திரும்பவும் வந்தது போல் அவனுக்கே தோன்றியவுடன், சற்றுப் பெருமூச்சு விட்டபடி அலுவலகத்தை நோக்கி விரைந்தான்.

"என்னங்க... போன் அடிக்குது. எங்க இருக்கீங்க?" என்று கிச்சனில் இருந்து ராகவை அழைத்தபோதே, ராகவன் ரிசீவரை எடுத்திருந்தார்.

"சொல்லுடா. என்னடா, இந்த டைம்ல பண்ணியிருக்கிறாய்? மோகனா எங்கே? வினோத் வீட்லதான் இருக்கானா...?" என்றபோதே மைதிலி கைகளில் போன் மாறி இருந்தது.

"மைதிலி!" என்றபோது, வழக்கமான அவரது குரலில் இருக்கும் உற்சாகம் அவரிடம் இல்லை.

போனை ஸ்பீக்கரில் வைத்தவள் அமைதியாக, "என்னண்ணா... ஏதாவது பிரச்சனையா?" என்றபடி "அண்ணி எங்கே?" கேட்டாள்.

"மைதிலி, நானும் அவரும் உங்க ரெண்டு பேரிடமும் பேச வேண்டும். கீர்த்தி இல்லைதானே! இங்க வினோத்தும் இல்லை..." என்ற மோகனாவின் குரலில் ஏதோ பிசிறு தட்டியது.

ராகவன் இப்போது சீரியசாக, "என்னடா... என்ன விசயம்? சொன்னால்தானே தெரியும்..." என்றபோது, குரலைச் செருமியபடி,

"ராகவ், என்ன சொல்வது என்றே தெரியவில்லை. உன்னிடம் இத்தனை நாள் சொல்லாமல் இருந்ததற்கு சாரிடா..." என்றபடி, "இங்க நிலைமை ஒண்ணும் சரியில்லை. வினோத் கம்பெனி பங்குச் சந்தை வீழ்ச்சியில் ரொம்ப அடி வாங்கியிருச்சு. எல்லா மூலதனத்தையும் அதிலதான்

போட்டிருந்தோம். கிட்டத்தட்ட மூழ்கப் போன ஆபீஸை அங்க இங்க கடன் வாங்கிக் காப்பாற்றி வைத்திருக்கிறோம். இதை உங்க கிட்ட யாரிடமும் சொல்லக் கூடாதுன்னு வினோத் சொல்லியிருக்கான்.

"இது கடந்த மூன்று மாதமாக நடந்து கொண்டிருக்கிற விசயம். இப்போ பரவாயில்லை. அது கூட இன்னும் ஆறு மாதங்களில் சரி ஆகிவிடும். அதன் பிறகு அங்கு செட்டில் பண்ணிவிட்டு இங்கே வந்து விடுவோம். ஆனால், இதெல்லாம் ஒரு பிரச்சனை இல்லை!" என்றவர், நிறுத்தினார்.

அவர் நிறுத்திய சில வினாடிகளில் ராகவ்வின் இதயம் நினைத்தது, எவ்வளவு கேசுவலா சொல்கிறான். கடன், மூழ்கப் போனது என்று. ஒரு வார்த்தை தன்னிடம் சொல்லவில்லை என்று கோபம்தான் வந்தது.

"ஏன்டா இதை என்கிட்ட சொல்லவில்லை? இவனிடம் சொன்னால் என்ன செய்யப் போகிறான் என்று நினைத்து விட்டாயோ?" என்று கோபத்துடன் கேட்ட ராகவனிடம்,

வறட்சியாகச் சிரித்தபடி, "நீ செய்ய முடியாது என்பதற்காக இல்லை. அங்கிருந்து நீங்க மூணு பேரும் மனசு கஷ்டப்படக் கூடாது. அதற்காகத்தான்!" என்றவர், தொடர்ந்து, "இப்போ கூட உனக்கு இதைச் சொல்ல வரவில்லை..." என்றவரிடம்,

"வேற என்ன விஷயம்?" என்றவரின் குரல் சற்றுத் தளர்ந்திருந்தது.

தன் நண்பன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்று நினைக்கும்போதே மனது வலித்தது. ஆனாலும் இப்போது நிலைமை மோசமில்லை எனும்போது கொஞ்சம் நிம்மதி ஆகியிருந்தது.

"ராகவ், வினோத் தொழிலில் ஏற்பட்ட தொய்வு காரணமாக... அவனது ஜாதகத்தை எடுத்துக் கொண்டு இங்கே ஒரு ஜோதிடரிடம் போயிருந்தோம். இப்போது தொழிலில் இறக்கம் இருந்தாலும், இன்னும் சில நாட்களில்

சரியாகிவிடும் என்றபோது, நாங்களும் சந்தோஷப்பட்டோம். அதன் பிறகு அவன் திருமண வாழ்க்கையையும் பார்க்கலாம் என்று பார்த்த பொழுது எங்கள் தலையில் ஒரு பெரிய இடியை இறக்கி விட்டார் அந்த ஜோதிடர்..." என்றவர், அதற்கு மேல் பேச முடியாமல் நிறுத்தினார்.

அவரது மௌனத்தினைப் பொறுக்க முடியாமல், "என்னண்ணா சொன்னார்?" என்று அவசரப்படுத்தினாள் மைதிலி.

"எனக்கு எப்படிச் சொல்வது என்றே தெரியவில்லை மைதிலி! வினோத்திற்கு வரப் போகும் பெண்..." என்றபோதே, அவருக்குக் குரல் தளுதளுத்தது. பேச முடியவில்லை.

"அண்ணா..." என்றாள் மைதிலி, குரலில் மீண்டும் தன்னைக் கட்டுப்படுத்தியபடி. "கணவனை இழந்த விதவை என்பது மாதிரிச் சொன்னார்கள் மைதிலி. அதைக் கேட்ட பிறகு எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

"ஏதேதோ சொன்னார் ராகவ். எனக்கும் ஒன்றும் புரியவில்லை. கடைசியா இது ஒண்ணுதான் புரிந்தது. எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. அதனால்தான் உனக்கு உடனடியா கால் பண்ணினேன்..." என்றவரிடம்,

ராகவ் மெதுவாக, "விஸ்வா, விநோத்துக்கு இந்த விசயம் தெரியுமா?" என்று கேட்டார்.

"இல்லை. தெரியாது. ஏன் கேட்கிறாய்?" - விஸ்வம்.

"சரி. விடு. அவன்கிட்ட இப்போ எதுவும் சொல்லாதே. நீயும் மனதைப் போட்டுக் குழப்பாதே!" என்ற ராகவ்,

"இந்த ஜாதகம் மண்ணாங்கட்டியெல்லாம் நம்பாதே. கீர்த்திதான் விநோத்திற்கு. இது முடிவான விசயம். அதனால் வேற எதையும் நினைக்காமல் ஒழுங்கா கூடிய சீக்கிரம் இந்தியா வர வேண்டிய வழியைப் பாருங்கள்..." என்றார்.

ராகவுக்கு ஏனோ விநோத்தின் ஜாதகம் பற்றிச் சொன்னது அவ்வளவு பெரிதாகத் தெரியவில்லை. அவர்கள்

தற்போது இருக்கும் பணக் கஷ்டமே பெரியதாகத் தெரிந்தது. அவன் அங்கு என்ன கஷ்டப்படுகிறானோ எனும்போதே ராகவனின் மனது நிலைகொள்ளாமல் தவித்தது.

"ராகவ், நான் சொல்கிற விஷயத்தைத் தப்பாக எடுத்துக்காதே. நம்ம குழந்தைங்க லைஃப் இது. அதனால் நீயும் அங்கு யாராவது நல்ல ஜோதிடரிடம் போய் வினோத், கீர்த்தி ஜாதகத்தினைக் காட்டிக் கொஞ்சம் விசாரித்துப் பார்!" என்று மெதுவாகக் கேட்டார் விஸ்வம்.

அதைக் கேட்ட ராகவ், கொஞ்சம் கடுப்பாகவே, "ஏன்டா, அறிவே இல்லையா உனக்கு...? ஜாதகம் பார்க்க வேண்டாமென்றால் விடேன்..." என்றபடி,

இப்போது குரலை நக்கலாக மாற்றியபடி, "ஒருவேளை இங்க ரெண்டு பேருக்கும் பொருத்தம் சரியில்லை யென்றால்... என்ன பண்ண முடியும்? சொல்லு. அதைக் கேட்டு நாங்களும் கீர்த்திக்கு வேறு இடத்தில் பண்ணி வைக்கவா?" என்று கேட்டபோது,

"டேய், என்னடா உளறுகிறாய்? நான் ஏதோ மனது நிம்மதியில்லாம இருப்பதினால் நீ ஏதாவது அங்கு பார்த்து நல்ல விஷயமா சொல்வாய் என்று சொன்னால் இப்படிப் பேசுகிறாய்!" என்றபடி, "இங்க விநோத்திற்குப் பதில் சொல்ல என்னால் முடியாதுடா..." என்றபடி கொஞ்சம் இயல்பு நிலைமைக்கு வந்தார்.

அப்போது மைதிலி, "அப்பா! இப்பவாவது கொஞ்சம் தெளிவா ஆனீங்களே..." என்றபடி, "சீக்கிரம், இந்தியா வாங்க. இங்க கீர்த்தி வாய் வர வர ஜாஸ்தி ஆகிட்டே இருக்கு. தாங்க முடியவில்லை..." என்று தன் மகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள்.

இப்போது மோகனா, "என்ன மைதிலி! மெதுவா எங்க மருமகளைப் பற்றி எங்களிடமே போட்டுக் கொடுக்கிறாயா! இரு இரு. நான் அங்க வந்ததும் ஒண்ணை வச்சுக்கறேன்!" என்று மைதிலியை வம்புக்கு இழுத்தாள்.

மைதிலியோ, "அண்ணா, பாருங்கண்ணா அண்ணியை!" என்று உடன்பிறவா அண்ணனிடம் சரண்டர் ஆனாள்.

"மைதிலி, ஆயிரம் மோகனா இல்ல... கீர்த்தி வந்தாலும் நீதான் எனக்கு முக்கியம். என்ன இருந்தாலும் நீ இந்த வீட்டுப் பொண்ணு இல்லையா!" என்றார்.

அவர்களின் உரையாடலைச் சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருந்த ராகவ், "அடப் பாவி! நான்லாம் உன் லிஸ்ட்லயே இல்லயா! இருந்தாலும் உன் தங்கச்சிக்கு இவ்ளோ இடம் கொடுக்கக் கூடாது. நீ இருக்கேன்ற தைரியத்தில் என்னையும் மதிக்கிறது இல்ல. என் பொண்ணையும் மதிக்கிறது இல்ல. இதுல நீ மட்டும் இங்க வந்துட்ட. அவ்ளோதான். இவளைக் கையில் பிடிக்க முடியாது!" என்று மைதிலியைக் கிண்டல் செய்து கொண் டிருந்தார்.

ஆனால், மைதிலிக்கோ விஸ்வம் இங்கேயே திரும்பவும் செட்டில் ஆகப் போகிறான் என்ற சந்தோஷமான செய்தியில் ஜாதக மேட்டர்... இல்லை ராகவின் கிண்டல் எதுவும் அவளைப் பாதிக்கவில்லை. அதன் பிறகு வழக்கமான கிண்டல், விசாரிப்புகளுடன் போனை வைத்தனர் ராகவனும், மைதிலியும்.

மைதிலியோ மிகுந்த சந்தோஷத்தில் இருந்ததால் பால் பாயசம் செய்யப் போவதாகக் கூறிச் சமையலறையில் நுழைந்தாள். அவளின் உற்சாகத்தை ஆச்சரியமாக நோக்கியபடி அவரும் சமையலறைக்குச் சென்றார்.

"என்ன மைதிலி, ஒரே சந்தோஷமாய் இருக்கிறாய்! அப்படி என்ன விஸ்வம் சொன்னான்? சொன்னதெல்லாம் வருத்தமான விசயங்கள். நீ என்னடாவென்றால் ஒரே சந்தோஷமாக இருக்கிறாயே. என்ன விசயம்? எனக்குப் புரியவில்லை..." என்றவரை, ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு,

"எங்க அண்ணா இங்க வரப் போறாங்களே... அதை விட எனக்கு வேற என்ன வேண்டும்? அவங்க இங்க வந்து விட்டால் கீர்த்தியும் இங்கதானே இருப்பாள். இப்போதான் எனக்கு நிம்மதி. என் பொண்ணை விட்டுட்டு எப்படி இருப்பேனோ என்று இவ்ளோ நாள் உங்க கிட்ட கூடச் சொல்லாமல் மனசோட வைத்துப் புழுங்கிக் கொண்டி ருந்தேன். இன்னைக்குத்தான் கொஞ்சம் நிம்மதியா யிருக்குங்க. அதுதான் இந்தச் சந்தோஷத்திற்குக் காரணம். போதுமா...?" என்று நெகிழ்ச்சி பாதி, மகிழ்ச்சி பாதியாகச் சொன்னவளை,

"அடிப் பாவி! என் நண்பன் அங்க கஷ்டப்படுறேன்னு சொன்னானே... அது உன் காதுலயே ஏறலையா...? விநோத் ஜாதகம் பற்றிச் சொன்னானே... அது கூட உன்னைப் பாதிக்கவில்லையா? உனக்கு உன் பொண்ணைப் பற்றி மட்டும்தான் கவலையா?" என்று கேட்டவரை முறைத்தவள்,

"அண்ணா சொன்ன இரண்டு விசயங்களும் பற்றி எனக்கும் கவலைதான். ஆனால், யோசித்துப் பாருங்க. இப்போ முதலில் இருந்த அளவுக்குக் கஷ்டம் இல்லை என்று விஸ்வம் அண்ணன் சொல்லிட்டார். அது மட்டுமில்லாமல் எங்க அண்ணன் உங்களை மாதிரி இல்ல... எந்தப் பிரச்சனையையும் தூசு மாதிரி ஊதிடுவார்..." என்று சந்தடி சாக்கில் கணவனைச் சீண்டியவள், ராகவனின் முறைப்பில், "சரி சரி... முறைக்காதீங்க!" என்றபடி தொடர்ந்தாள்.

"இரண்டாவதா அந்த ஜாதக மேட்டர். இதில் கவலைப்படுறதுக்கு ஒண்ணுமே இல்ல. விநோத் யாரை மேரேஜ் பண்ணப் போறான்... நம்ம கீர்த்தியை! ஸோ, அந்த மேட்டரோட அடிப்படையே தப்பு. இதற்கு நான் வேற சோக கீதம் பாடணுமா? அவரைச் சொல்லி விட்டு நீங்களே வருத்தப்பட்டால் எப்படி? கீர்த்திக்கு இது எதுவும் தெரிய வேண்டாம். நீங்களும் இயல்பா இருங்க..." என்றபடி, கீர்த்தியின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தனர்.

கிட்டத்தட்ட 6.30 மணியளவில் வீடு வந்து சேர்ந்தவள், தாயின் முகத்தில் ஏதோ தோன்ற ஒன்றும் கேட்காமல் உடை மாற்றி ஹாலுக்கு வந்தாள். அவள் வந்தவுடன் ராகவன், "என்னம்மா... டீம் லீடர், எப்படிப் போனது இன்று?" - என அவளின் புதுப் பொறுப்பைக் கிண்டல் பண்ணியவாறு அவளின் அன்றைய அனுபவத்தை விசாரித்தார்.

"ம்ம்ம்... ஓ.கே.பா!" என்று உற்சாகமாகப் பேசியவளின் கைகளில் பால் பாயசக் கப்பைத் திணித்தபடி,

"அப்புறம்... உன் ஆபீஸ் புராணத்தை ஒப்பிக்கலாம். இதைக் குடி முதலில்..." என்றபடி போன தாயினை வித்தியாசமாகப் பார்த்தவள், தன் தந்தையிடம் மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

"அப்பா, இன்னைக்கு ஒரு சர்ப்ரைஸ் பா எனக்கு... என்னோட சீனியர் கார்த்திக்னு பேர். புதுசா வந்திருக்கிற டீமில் அவனும் ஒருத்தன்..." எனும்போதே, "ஓ! நீ காலேஜ் படிக்கும்போது உங்க ப்ரின்ஸிபாலிடம் மாட்டி விட்டாயே, அவனாம்மா?" என்று, தன் மகள் அவரிடம் ஏற்கெனவே சொல்லியிருந்தபடியால் அவரும் நினைவுக்குக் கொண்டு வந்தார்.

"ஆமாம்பா... அவனேதான். என்னைப் பார்த்தவுடனே அவனுக்கு முகமே சரியில்லை!" என்று கீர்த்தி கூறியவுடன்,

"ஏன்டா?" என்று யோசனையோடு விசாரித்தார்.

"கார்த்திக் சீனியராய் இருந்தப்ப என்னை எவ்வளவு டார்ச்சர் பண்ணிருப்பான். இங்க என்னை அவனுக்கும் மேல ஒரு போஸ்ட்ல எதிர்பார்க்கலை போல..." என்று பால் பாயசத்தை ரசித்துச் சாப்பிட்டவள்,

அவளின் மௌனத்தைக் கலைத்து, "அப்புறம் என்னாச்சு? நீ என்ன பண்ண? பழி வாங்க நீ பதிலுக்கு ராகிங் பண்ணுனியா?" என்று ஆர்வமாக விசாரித்தார்.

"சேச்சே... அப்படியெல்லாம் பண்ணுவாளா உங்க பொண்ணு! 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்.' அது மாதிரி நானே போய் கார்த்திக்கிடம் பேசிச் சமரசம் பண்ணிட்டேன்..." என்றவள், "எப்படிப்பா இந்தக் கீர்த்தி?" என்று காலரைத் தூக்கி விட்டவள், மைதிலி வருவதைப் பார்த்து மெதுவாகத் தன் தந்தையிடம்,

"என்ன... உங்க மைதி ஒரே சந்தோஷமா இருக்காங்க போல! மாமா கால் பண்ணினாங்களா...? அன்னைக்குத் தானே இவ்வளவு சந்தோஷமா இருப்பாங்க. உங்களுக்கு ஒண்ணு தெரியுமா! நாம ஆபீஸ் போனபிறகு மாமா கால் பண்ணித் தனியா வேற விசாரிப்பு. இதுவே எனக்கு விநோத் சொல்லித்தான் தெரியும். ம்ம்ம்... பிறந்தால் மைதிலி மாதிரிப் பிறக்க வேண்டும். ஒரு சைடு தங்கச்சி தங்கச்சின்னு தாங்க அங்கே ஒரு அண்ணன். இங்க மைதி மைதின்னு தாங்க ஒரு ராகவன். கொடுத்து வச்சவங்கம்மா!" என்றவளைப் பார்த்து, மைதிலி,

"ஆமாமா... எனக்குக் கூடத்தான் உன்னைப் பார்த்தால் தோணும். கீர்த்திக்குக் கிடைத்த மாதிரி எனக்கு அப்பா கிடைக்கவில்லையே என்று... எல்லோரும் என்னைத் தூக்கி எறிந்து விட்டார்களே!" என்றவளை,

"சரி சரி... விடுங்க. எல்லோருக்கும் எதுனாலும் ஒண்ணுதான் கிடைக்கும். எல்லாமே வேண்டுமென்றால் அது பேராசை!" என்று தாயின் பேச்சிற்கு முற்றுப் புள்ளி வைத்தவள்,

"பால் பாயசம் நல்லா இருந்ததும்மா!" என்றபடி, தனது அறைக்குச் சென்று கம்ப்யூட்டரின் முன்னால் அமர்ந்தாள்.

அப்போதுதான் அவளுக்கு ஒன்று உறுத்தியது. இந்த வாழ்க்கையே எனக்குச் சந்தோஷமான வாழ்க்கை. இப்படி ஒரு அம்மா அப்பா கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமென்றால் வரப் போகும் கணவனும், திருமண

வாழ்க்கையும் எப்படி இருக்கும் என்று யோசித்தவளுக்கு... தன் தாயிடம் சொன்னது ஞாபகம் வந்தது.

எல்லாம் கிடைக்க வேண்டுமென்று நினைத்தால் பேராசை என்றால், அப்படியென்றால் எனக்குத் திருமண வாழ்க்கை நன்றாக இருக்காதா என்று நினைக்கும்போதே,

'கீர்த்தி, விநோத்தைத் தானே நீ மேரேஜ் பண்ணிக்கப் போகிறாய். விநோத், மாமா, அத்தை இவங்களைச் சந்தேகப்படலாமா?' என்றபடி, தனது தலையினைக் குலுக்கியவள், அவளுக்கு எதிரே இருந்த மானிட்டரில் பார்வையினை ஓட்ட ஆரம்பித்தாள்.

6

வழக்கம் போல் அன்றைய வேலைகளின் ரிப்போர்ட்களைப் பார்த்துக் கொண்டிருந்த பாலா, இன்னும் கீர்த்தியிடம் இருந்து அன்றையப் பணியின் ரிப்போர்ட் வராததைக் கவனித்தான்.

"கீர்த்தி ஏன் இன்னும் அனுப்பவில்லை? அனுப்பா மலேயே அவள் அலுவலகத்தினை விட்டுக் கிளம்பிச் சென்றிருக்க மாட்டாள். அப்படியென்றால் அவள் இன்னும் அலுவலகத்தில்தான் இருக்க வேண்டும்!" என்று தனக் குள்ளாக யோசித்தபடி வெளியே வந்தான் பாலா.

அவன் எண்ணியபடியே அவள் மானிட்டரின் மேல் பார்வையினைத் தீவிரமாக ஓட விட்டுக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்தபடியே மணியைப் பார்த்தான். மணி எட்டு அடிக்க இன்னும் ஐந்து நிமிடங்களே இருந்தன.

ஆனால், கீர்த்தியோ, நேரம் போய்க் கொண்டிருப்பதும் தெரியாமல், அவள் முன்னே பாலா நின்று கொண்டிருப்பதையும் அறியாதவளாய்க் கணினியோடு ஐக்கியம் ஆகியிருந்தாள்.

மாலை ஐந்து மணியிலிருந்து போராடிக் கொண்டிருக் கிறாள். இன்னும் அவளது ப்ராஜெக்ட்டுக்குத் தேவையான

ஒரு முக்கியமான ப்ரொக்ராம் வொர்க் ஆகவில்லை. அது மட்டும் ஓ.கே. ஆகிவிட்டால் அடுத்த கட்டத்துக்குச் செல்லலாம். கீர்த்தியும் முயன்று கிட்டத்தட்ட முடித்திருந்தாள்.

ஆனால், ஒரு சின்ன ப்ராப்ளம். அதை மட்டும் சரிப்படுத்தி விட்டு வீட்டுக்குக் கிளம்பலாம் என்றபடி, அதைச் சரி செய்ய ஆரம்பித்தவளுக்கு... நேரம் போனதே தெரியவில்லை.

அவளைப் பொறுத்தவரை அன்றைய வேலையில் இதை முடித்து விட்டுச் சென்றோம் என்றிருக்க வேண்டும். எதையாவது வரவில்லை என்று நிலுவையில் வைத்து விட்டுப் போனால் அவள் நிம்மதியாகவே தூங்க முடியாது. அதுவும் இது சின்னப் பிரச்சனைதான். ஆனாலும் அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை. சற்று எரிச்சலுடன் புருவத்தைச் சுருக்கியவள்,

"என்ன கீர்த்தி, நீங்க இன்னும் கிளம்பவில்லையா? மணி எட்டாகப் போகுது. ரிப்போர்ட் அனுப்பிட்டுக் கிளம்புங்க. நாளைக்குக் காலையில் வந்து பார்த்துக் கொள்ளலாம்!" என்ற பாலாவின் குரலில் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

பின் சுதாரித்தவளாய்... "ஒரு சின்ன வொர்க்தான் சார். அதை முடித்து விட்டால் போயிடுவேன்..." என்றாள் கீர்த்தி.

"அப்படியா!" என்றபடி யோசித்தவன்... "ஏற்கெனவே லேட் ஆகிவிட்டது..." என்று நெற்றியைச் சுருக்கியவன்...

"சரி. எவ்வளவு நேரமாகும்? ஒரு 15 மினிட்ஸ்ல முடிச்சுடலாமா?" என்று கேட்டவனிடம்,

"சின்ன ப்ராப்ளம்தான் சார்! ஆனா நானும் ஈவினிங்ல இருந்து ட்ரை பண்றேன். ஃபிக்ஸ் ஆக மாட்டேன்கிறது..." என்று அவளால் முடியாத ஆதங்கத்தில் அவனை நோக்கினாள்.

பாலாவும் அந்த ப்ராஜெக்ட்டில் இன்வால்வ் ஆகி இருப்பதால், "சரி. நான் பார்க்கிறேன்..." என்றபடி அவளை

நகரச் சொன்னவன்... அவள் போட்டிருந்த கோடின் மேல் பார்வையினை ஓட்டினான்.

இதை இனிமேல் பார்த்து அதில் உள்ள தவறைக் கண்டுபிடிக்கக் குறைந்தது இரண்டு மணி நேரமாகும். அதற்கு அவளே கொஞ்சம் முயன்றால் சரி செய்து விடலாம் என்று எண்ணியவன், கீர்த்தியிடம்,

"கொஞ்சம் லேட் ஆகும் போலத் தெரியுது கீர்த்தி. நாளைக்குக் காலையில் வந்து பாருங்க. நிதானமா பண்ணினால் ஃபைவ் மினிட்ஸ்தான் ஆகும். அப்படியும் முடியவில்லை என்றால் நான் பார்க்கிறேன். இப்போ கிளம்புங்க!" என்றவனிடம்,

"இல்லை சார். நான் இப்பவே பார்த்து விட்டு கம்ப்ளீட் பண்ணிட்டுப் போய் விடுகிறேன். எனக்கு ஒண்ணும் பிரச்சனை இல்லை," என்றாள்.

"கீர்த்தி, லேட் ஆகுது. நீங்க பையனா இருந்தா கூட நான் கம்பெல் பண்ண மாட்டேன்..." என்றவனை இடையிலேயே தடுத்து நிறுத்தி,

"பரவாயில்லை சார்! என்னோட மனத்திருப்திக்காகத் தான் இருக்கிறேன். இல்லையென்றால் இந்தச் சின்ன எர்ரரைக் கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று ஒரு மாதிரி இருக்கும். அது மட்டும் இல்லாமல் இந்த டாஸ்க் கம்ப்ளீட் பண்ணலைன்னு எனக்குத் தூக்கமே வராது. சார் ப்ளீஸ்!" என்று உறுதியான குரலில் கெஞ்சியவளைக் கூர்ந்து நோக்கியவனுக்கு...

அவளை நினைக்கும்போது பெருமையாக இருந்தது. அந்தக் கம்பெனி முதலாளி அவன். அவனே போகச் சொல்கிறான். ஆனால், அவளோ மறுக்கிறாள். பணத்துக்காக மட்டும் வேலை செய்பவள் என்றால் இந்நேரம் வீட்டில் இருந்திருப்பாள். ஆனால், இந்தத் தொழிலின் மேல் உள்ள பிடித்தமே இந்த அளவு தீவிரம் காட்டுகிறாள். இப்படிப்பட்ட எம்ப்ளாயி அவனது கம்பெனிக்குக் கிடைத்திருப்பது

அதிர்ஷ்டமே... என்று எண்ணியவன், ஆனாலும் அவளை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். ஏனென்றால் இன்று அவள் எவ்வளவு முயன்றாலும், கொஞ்சம் டென்ஷனாக இருப்பதால் அவள் சரி பண்ண முடியாது. நாளை வந்து பார்த்தால் சில நிமிடங்களில் சரிப்படுத்தி விடுவாள் என்று அவளது திறமையின் மேல் இருந்த நம்பிக்கை சொல்லியது.

"கீர்த்தி, என்னவாயிருந்தாலும் நாளை பார்த்துக் கொள்ளலாம். கிளம்புங்க!" என்று கொஞ்சம் கண்டிப்பான குரலில் கூறியவனைக் கொஞ்சம் அச்சமாகப் பார்த்தபடி, தாழ்ந்த குரலில் அதே சமயம் பிடிவாதமான குரலில்,

"சார், ப்ராஜெக்ட் டெலிவரி டைமில் எல்லாம் பத்து மணி வரைக்கும் இருக்கிறது. இல்லையா சார்! அது மாதிரி நினைத்துக் கொள்கிறேன்."

இதற்கு மேல் இவளிடம் பேசிப் பிரயோஜனமில்லை. இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாளே, என்ன பண்ணலாம் என்று யோசித்த பாலா,

"சரி, கீர்த்தி! இப்போ என்ன, இந்த டாஸ்க் முடிக்க வேண்டும். அவ்வளவுதானே! நான் பார்த்து எத்தனை மணி நேரமானாலும் முடித்து விட்டுப் போகிறேன். போதுமா? இப்போ கிளம்புங்க..." என்றவனிடம்,

"இல்லை சார். அது வந்து..." என்று இழுத்தவளை, அழுத்தமான பார்வையுடன் நோக்கியவன்,

"என்ன... நீங்க கம்ப்ளீட் பண்ணாத்தான் தூக்கம் வருமா?" என்று வார்த்தைகளில் மட்டும் கிண்டல் தொனிக்க... முகமோ அதே அழுத்தத்தில் இருந்தது.

அவனின் குரல் மாறுதலை உணர்ந்தவள்... அதற்கு மேல் இருப்பது சரியில்லை என்று நினைத்து...

"அப்படி யெல்லாம் இல்லை சார். நான் கிளம்புகிறேன்..." என்றவாறு, ரெஸ்ட் ரூமுக்குச் செல்ல ஆயத்தமானாள்.

அவளது இருக்கை ஓய்வு அறையின் அருகிலேயே அமைந்திருந்தது. சில நிமிடங்களில் அறையிலிருந்து வெளியே வந்தவள்... தனது இருக்கையில் அமர்ந்திருந்த பாலாவிடம், "சார், நான் கிளம்புகிறேன்..." என்று போக மனமில்லாமல் கிளம்பினாள்.

சிறிது தூரம் சென்றவள் அவனைத் திரும்பிப் பார்த்துத் தயங்கியபடி, "சார்! நாளைக்குப் புது டாஸ்க். இப்போ பண்ணினது முடிந்தால்தான் ஆரம்பிக்க முடியும்..." என்று தயங்கியவாறு சொன்னவளிடம்,

"தெரியும். நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றபடி, அதற்கு மேல் அவளிடம் பேச ஒன்றுமில்லை என்பது போல் கணினி திரையின் மேல் பார்வையினை ஓட்ட ஆரம்பித்தான் பாலா.

கீர்த்தி கிளம்பிச் சென்ற ஐந்து நிமிடத்தில் அவளது சிஸ்டத்தை ஷட் டவுன் செய்து தனது அறையினுள் நுழைந்தவன், அடுத்த அரை மணி நேரத்தில் அவனது அலுவலகத்திற்கு வெளியே இருந்தான்.

"கீர்த்திம்மா! சாப்பிட வா. வந்தது லேட். இன்னும் ரூம்ல என்ன பண்ற...?" என்ற மைதிலியின் குரலில்,

"இதோ வந்துட்டேம்மா. கவியோட பேசிட்டு இருக்கேன்..." என்று பதில் கூறியவள்,

"சரி கவி! அம்மா கூப்பிடறாங்க. நீ எனக்காக வெயிட் பண்ணாததுக்கு இவ்ளோ சாரியா கேட்பாய். நெக்ஸ்ட் வீக் ஊருக்குப் போக உனக்கு இருக்கிற வேலை எனக்குத் தெரியாதா கவி! சொல்லப் போனால் நான்தான் உன்னிடம் சாரி கேட்க வேண்டும். இந்தச் சூழ்நிலையில் உனக்கு உதவியாக உன்னோடு வர முடியவில்லை..." என்று கவியிடம் குழைந்தபடியே வெளியே வந்தவள், அவளுக்காக வெளியே சாப்பிடக் காத்திருந்த தனது பெற்றோரைப் பார்த்தவள், கவியிடம், "சரி, கவி. நான் வைக்கிறேன். நாளை பார்க்கலாம்!" என்றபடி அழைப்பைத் துண்டித்தாள்.

"என்னம்மா... இன்னைக்கு வெறும் பொங்கல்தானா?" என்றபடி அலுத்தவளை, முறைத்தபடி,

"ஏன், உங்க ஆபீஸ்லயே டின்னரையும் முடித்து விட்டு வர வேண்டியதுதானே?" என்று அவள் லேட்டாக வந்ததைக் குத்திக் காட்டினாள்.

"ஏன்டா இவ்ளோ லேட்! ஏதும் முக்கியமான வொர்க்கா? கவி கூட சீக்கிரமா கிளம்பிட்டா போல. நீ போன் பண்ணிட்ட. இருந்தாலும் இந்த உலகம் மோசமான உலகம். அதை நம்ப முடியாதுடா. இனிமேல் ஏழு மணிக்குள்ள கிளம்புகிற மாதிரி பார்த்துக்கோடா. தனியா வண்டியில வேற வருகிறாய். அதுதான் எனக்கும் உங்க அம்மாவுக்கும் பயம். உன்னோட ஆபீஸில் உன்னோட பொறுப்புக் கூடுதலாகி யிருக்கிறது என்று தெரிகிறதுடா. ஆனால் உன் உடம்பை வருத்திப் பண்ணுகிற வேலை உனக்கு அவசியமில்லை. புரிஞ்சுக்கோடா!" என்ற ராகவனிடம்,

"இல்லப்பா! எங்க எம்.டி. கூட..." என்று ஆரம்பித்தவளை,

"சரி... சரி. சாப்பிடு. நீ பசி தாங்க மாட்டாய். சாப்பிட்டு விட்டு உங்க எம்.டி கதையைப் பேசலாம்," என்றவாறு அவளது பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தாள் மைதிலி.

கிட்டத்தட்ட சாப்பிட்டு முடிக்கும் தருவாயில், அவளது அலைபேசி சிணுங்கியது. திரையில் நம்பரைப் பார்த்தவள் சிந்தனையுடன், "ஹலோ!" என்றாள்.

"கீர்த்தி, நான் பாலா பேசுகிறேன்..." என்ற குரலில் சற்று அதிர்ச்சியில் நின்று –

"சார்... நீங்களா! என்ன சார்... என்ன விசயம்?" என்றவளிடம்,

"இல்ல கீர்த்தி! அந்த ப்ரோகிராம் ரன் ஆகிவிட்டது. நீங்கதானே சொன்னீங்க. அதைக் கம்ப்ளீட் பண்ணாத் தான் தூக்கம் வரும் என்று. இப்போதான் ஞாபகம் வந்தது. நான்தானே உங்களை வீட்டுக்குப் போகச் சொல்லி

வற்புறுத்தினேன். உங்க தூக்கத்தைக் கெடுத்த பாவம் எனக்கு வேண்டாம், கீர்த்தி! அதுதான் இப்போ போன் பண்ணினேன். நிம்மதியா இப்போ தூங்குவீங்களா?" என்று சிரித்த அவன் குரலில்,

வேறு எதுவும் தோன்றாமல் நன்றி கூறிவிட்டு போனை வைத்தவளுக்கு, அவனது குரலில் இருந்த மலர்ச்சி அவனது முகத்தில் இருக்குமா என்று தோன்றியது. அப்படி இருந்தால் எப்படி இருப்பான் என்று யோசிக்கும் போதே, ராகவன் அவளிடம், "யாரும்மா போனில்? நன்றியெல்லாம் பலமாய் இருக்கிறது!" என்று கேட்டவுடன், அவளுக்கும் பாலாவுக்குமான அன்றைய தின நிகழ்ச்சிகளை விளக்கினாள்.

அதைக் கேட்ட மைதிலி, "அடிப் பாவி. ஒரு கம்பெனி எம்.டி.யே உன்னை வீட்டுக்குப் போன்னு துரத்துகிற அளவுக்கு இம்சை பண்ணிக் கொண்டிருக்கிறாயா! இத்தனை நாள் நாங்க ரெண்டு பேர்தான் பாவம் என்று நினைத்தோம். இப்போ எங்க பாவத்தை ஷேர் பண்ணிக்கக் கூட ஆள் இருக்கு போல!" என்றவளிடம்,

"இம்சை பண்றேனா... நானா... அம்மா!" என்று இழுத்தவள், "நான் இம்சை பண்றவளாயிருந்தால் அவர் எதுக்குக் கால் பண்ணி ப்ரோகிராம் ரன் ஆகுதுன்னு சொல்லணும்," என்று சிணுங்கியவளிடம்,

"பாருங்கங்க... பாலா அந்தக் கம்பெனியோட எம்.டி. அவரே நான் வொர்க் முடித்து விட்டேன் என்று கால் பண்ணுகிற அளவுக்கு இவ மிரட்டி வைத்திருக்கிறாள்..." என்று விடாமல் கிண்டல் பண்ணியவளிடம், வாயடிக்க ஏனோ வார்த்தைகள் வராமல்,

"நான் போறேன்ப்பா! இன்னைக்கு அம்மா ஃபுல் ஸ்விங்ல இருக்காங்க. அவங்களுக்கு கவுண்ட்டர் கொடுக்க என்னால் முடியாது. கீர்த்தி எஸ்கேப்!" என்றபடி, தனது அறையினுள் அடைக்கலம் ஆனாள் கீர்த்தி.

கீர்த்தியிடம் பேசி விட்டுப் போனை வைத்தவன் மனது ஏனோ லேசாக இருந்தது.

'கீர்த்தியுடன் இருந்தால்... அவளுடன் பேசிக் கொண்டிருந்தால் போதும். என் மனம் எவ்வளவு பாரமாயிருந்தாலும் லேசாகிவிடும் என்று மது அடிக்கடி சொல்வாள். கீர்த்தி என்ற பெயருக்கே உள்ள மகிமை போல...' என்றவாறு நினைத்தவன்,

நாளை... அவள் விட்டபடியே அந்த ப்ரோகிராம் இருப்பதைப் பார்த்து விட்டு அவள் முகம் போகும் போக்கைப் பார்க்க வேண்டும். ஏனென்றால் அவளால் அவனைக் கேள்வியும் கேட்க முடியாது. திட்டவும் முடியாது. அவளைக் கட்டுப்படுத்திக் கொண்டு உட்கார்ந்திருப்பாள்.

"என்ன ஒரு பிடிவாதம்... எனக்கேவா?" என்றபடி கண்களை மூடியவனிடம்,

'இனி உன்னிடம் எனக்கென்ன பிடிவாதம்!' என்றபடி வெகு நாட்களுக்குப் பிறகு தூக்கம் வந்து அவனோடு உறவாடியது.

7

மறுநாள் காலையில் எழுந்து குளித்து முடித்து அலுவலகம் செல்லத் தயாராகித் தனது உடைகளைச் சரி செய்தபடி கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தவனுக்கு, இது அவனது முகமா என்று யோசித்தவன்... பின் வழக்கமான தனது இறுக்கமான முக பாவனையினை மாற்றி முகத்தில் புன்னகையினை மலர விட்டான்.

வழக்கத்திற்கு மாறான உற்சாகத்துடன் துள்ளலாக முன்நெற்றியில் தலைக் கேசம் ஆட, இறங்கிய மகனை ஆச்சரியத்துடன் பார்த்தபடி சாப்பாட்டு மேசையின் மேல் பதார்த்தங்களை அடுக்கியபடி இருந்த அருந்ததியின் முகத்திலும் புன்னகை தவழ்ந்தது.

"வாப்பா பாலா! நீ இந்த மாதிரி இருப்பது மனதுக்கு நிறைவா இருக்கிறது. நீ இருண்ட முகத்துடன் இருப்பதைப் பார்க்கச் சகிக்கவில்லை. முன்ன மாதிரி இல்ல என்றாலும் ஓரளவுக்கு நீ முகம் மலர்ந்து இருப்பதைப் பார்க்கும்போது பெத்த மனதுக்கும் ஒரு ஆறுதலா இருக்கிறது..." என்றபடி அவனது தட்டில் பூரியினை வைத்தாள்.

"ஏம்மா, அப்போ இவ்வளவு நாளும் கர்ணகொடூரமாக இருந்ததா என் முகம்? சொல்லவே இல்லயே நீங்கள்!" என்று அப்பாவி போல் அலுத்தவனைத் தலையில் செல்லமாகத் தட்டியவள்,

"அப்படி இல்லை பாலா! நாம எவ்வளவுதான் அழகாயிருந்தாலும் முகத்துக்குன்னு ஒரு அருள் இருக்க வேண்டும். அது இல்லை யென்றால் அழகாயிருந்தும் பிரயோஜனமில்லை. களையிழந்து இருக்கும் முகம். அதைச் சொன்னேன். அப்பா! உன்னிடம் ஒரு விசயத்தினை விளக்குவதற்குள்..." என்று இழுத்தவளிடம்,

"ம்ம்... என்னை மர மண்டைன்னு சொல்றீங்க. இன்னும் என்னென்ன என்னைப் பத்தி நினைத்து வைத்திருக்கிறீர்களோ... அத்தனையும் சொல்லிடுங்க. உங்க திருவாய் மலர்ந்தருளி..." என்றவனிடம்,

"உன்னைப் பற்றிச் சொல்ல இந்த டைம் பத்தாது. லேட் ஆகிறது. ஆபீஸுக்குக் கிளம்ப வேண்டும். உனக்கு ஃப்ரீ டைம் கிடைக்கும் போது உன்னைப் பற்றி நல்ல விசயங்களையெல்லாம் சொல்கிறேன். இப்போ சீக்கிரம் கிளம்புகிற வழியினைப் பார்..." என்று அந்த நல்ல என்ற வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்தாள்.

அருந்ததியின் வார்த்தைகளில் இருந்த ஆபீஸ் என்ற வார்த்தையில் கீர்த்தியின் முகமும், அவளை ஏமாற்றி வந்ததும் நினைவில் வர, அவனையும் அறியாமல் இதழின் ஓரத்தில் புன்னகை தவழ்ந்தது. அதைக் கண்ட அருந்ததி,

"என்னடா... ஆபீஸ் என்றதுமே பிரகாசமாகுது. ஏதும் புது ப்ராஜெக்ட் அசைன் ஆகியிருக்கிறதா?" என்று மடக்கியவளை,

"இல்லையில்லை..." என்று வாய்க்குள்ளாக முனகியபடி, சட்டென்று முகத்தை மாற்றிச் சாப்பிட ஆரம்பித்தான்.

அதைப் பார்த்த அருந்ததிக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. பேசாமல் இருந்திருக்கலாம். மறுபடியும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டானே என்று நினைக்கும் போதே, ஜெகநாதன் முகத்தில் கோபம் தாண்டவம் ஆட, "பாலா!" என்று அழைத்தபடி வந்தார்.

அவருக்கு இருந்த கோபத்தில் மகன் சாப்பிடுவதைக் கூட அவர் கவனிக்கவில்லை.

அவரது அழைப்பில் கோபம் கனன்றதை உணர்ந்தவன், மெதுவாக நிமிர்ந்து புருவத்தில் முடிச்சிட, "என்னப்பா... என்ன விசயம்? இவ்ளோ கோபமா இருக்கீங்க, என் மேல!" என்று வினவியனிடம்,

"ஆமா, நீ செய்த காரியத்திற்கு உன்னை உச்சி முகர்ந்து கொஞ்சச் சொல்கிறாயா?" என்றவாறு நிறுத்தினார்.

"அப்படி என்ன நான் பண்ணிவிட்டேன்? நீங்க என் மேல் ஏற்கெனவே என் திருமண விசயத்தில் கோபமா யிருக்கிறீர்கள் என்று தெரியும். ஆனால், இன்னைக்குக் கோபத்திற்கு அது காரணம் இல்லையென்று தெரியும். என்னவென்று சொன்னால்தானே தெரியும்..." என்று முடிந்தவரை அமைதியாகவே பதில் கூறியபடி தந்தையைப் பார்த்தான் பாலா.

அப்போதுதான் அவனுக்கும் சௌந்தர்யா ஞாபகம் வந்தது. ஆனாலும் அன்று நடந்ததில் அவனது தவறு என்று ஒன்றும் இல்லை. பின் வேறு என்னவாக இருக்கும் என்றும் புலப்படவில்லை.

"என்ன காரணம் என்று வேறு சொல்ல வேண்டுமா, உனக்கு! போன வாரம் சௌந்தர்யாவினைப் பார்த்தாயா? அதை ஏன் என்னிடம் சொல்லவில்லை? அது மட்டுமில்லாமல் அவளை மிரட்ட வேறு செய்திருக்கிறாய். உன்னை இந்த வேலை யெல்லாம் யார் செய்யச் சொன்னார்கள்? நாதன் கால் செய்து மிகவும் வருத்தப்பட்டார்.

"சௌந்தர்யா யாரிடமும் பேச மாட்டேங்கிறாளாம். சரியாகச் சாப்பிட மாட்டேன் என்கிறாளாம். உனக்கு இஷ்டம் இல்லையென்றால் என்னிடம் சொல்ல வேண்டும். அதை விட்டு விட்டு, பாவம்... அந்தச் சின்னப் பொண்ணை மிரட்டியிருக்கிறாய். அவள் பயந்து போய் விட்டிருக்கிறாள். உனக்கு என்ன பெரிய இவன்னு நினைப்பா! இல்லை, அவங்களுக்கு உன்னை விட்டா வேறு யாரும் கிடையாதுன்னு நினைப்பா...

"ஒரு விஷயம் மட்டும் தெரிஞ்சுக்கோ. இந்தத் திருமணத்திற்கு அவர் சம்மதித்ததற்கு முக்கிய காரணம் எங்கள் நட்புதான்..." என்று பாலாவின் தந்தை உறுமியபோது, அவனுக்குச் சிரிப்பே வந்து விட்டது. சிரித்ததில் புரை அவன் தலைக்கேறி விட்டது.

தலையில் அடித்துக் கொண்டே அன்று சௌந்தர்யாவுடனான சந்திப்பை நினைத்தவனுக்குத் தன் தந்தை பேசிய நட்புக் காரணம் மேலும் சிரிப்பை வரவழைத்தது. மெதுவாகச் சிரிப்பை அடக்கியபடியே, "நான்தான் பார்த்தேனே... உங்க நட்பின் பெருமையை!" என்று எள்ளி நகைத்தவன்,

சிரிப்பை அடக்கிவிட்டு, அவனும் தீவிரமாகப் பேசினான்.

"அப்பா, உங்க நட்பின் பெருமையினை, இல்லை... உங்க நட்பின் வலிமையினை என் திருமண விசயத்தில் காட்ட வேண்டாம் என்று நான் கேட்டுக் கொண்டதாய் உங்கள் ஆருயிர் நண்பரிடம் சொல்லி விடுங்கள்," என்று

மேற்கொண்டு எதுவும் பேச்சை வளர்க்காமல் சாப்பிட ஆரம்பித்தான்.

ஆனாலும் அவன் தந்தை விடுவதாக இல்லை.

"சௌந்தர்யாதான் என் மருமகள். உன்னைப் பற்றித் தெரிந்தும் உன்னைத் திருமணம் பண்ணிக் கொள்ள வந்தாளே... அது போதும் எனக்கு. உன்னோட சம்மதம் எனக்குத் தேவையில்லை..." என்றவர், கோபத்தில் என்ன பேசுகிறோம் என்று அறியாமல், "உண்மையிலேயே எனக்குப் பிறந்தவன் என்றால் என் பேச்சைக் கேட்பாய். அதற்கு மேல் உன் இஷ்டம்!" என்று தான் என்ன சொல்லியிருக்கிறோம் என்று கூட அறியாமல், அதற்கு மேல் அங்கே நிற்கவும் பிடிக்காமல், அவரது அறையினை நோக்கிச் சென்றார்.

அவரைப் பொறுத்தவரை தன் மகனின் வாழ்க்கையினைத் திசை மாற்றியாக வேண்டும். உயிரோடு இருக்கிறாளா... இல்லையா என்றே தெரியாத ஒரு பெண்ணுக்காகத் தன் வாழ்க்கையினையும் வீணாக்கிக் கொண்டிருக்கும் அவனது முட்டாள்தனத்தினை நிறுத்த வேண்டும். அவனுக்கு எப்படியாவது திருமணம் செய்து விட்டால் போதும். அதன் பிறகு கட்டாயம் அவன் மாறித்தான் ஆக வேண்டும்.

முதலில் கடினமாகத்தான் இருக்கும். அதன் பிறகு நாளடைவில் சரியாகிவிடும். நோய் தீர வேண்டுமென்றால் கசப்பு என்றாலும் மருந்து சாப்பிட்டுத்தானே ஆக வேண்டும். இப்படித்தான் அவர் யோசித்துத் தன் மகனிடம் கடினமாக நடந்தது. அதனால்தானோ என்னவோ அவர் பேச்சு எல்லை மீறியதைக் கூட அவர் உணர முடியவில்லை.

"அப்பா!" என்ற மகனின் வேகமான குரலில் திரும்பிப் பார்த்தவர், அப்போதுதான் அருந்ததியின் முகத்தில் கண் கலங்கியிருப்பதையும் உணர்ந்தார். காரணத்தை யோசித்த போது அவருக்கும் விளங்கியது. பாலாவுக்கோ தன் தாயின் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

"எனக்கு நல்ல பெயர் உன் அப்பாவிடமிருந்தே வாங்கிக் கொடுத்து விட்டாய்!" என்று சொல்லாமல் சொன்னது அவளது முகம்.

காலையில் அவன் இறங்கி வந்தபோது இருந்த மலர்ச்சி, உற்சாகம் எல்லாம் அவன் முகம் துடைத்து எடுத்து விட்டுக் கல்லாய் இறுகி இருந்தது.

இதற்கு மேல் மௌனம் சாதிப்பது நல்லதல்ல. ஏனென்றால் சௌந்தர்யாவினைச் சந்தித்ததைச் சொல்லி அவர்களது உண்மையான முகத்தினை அப்பாவிற்குச் சொல்ல வேண்டும் என்றுதான் அவனும் முதலில் நினைத்தான்.

ஆனால், அதன் பிறகு யோசித்தவன்... அதனால் தன் தந்தையின் மனம்... இப்படி ஏமாற்றி விட்டார்களே என்று நோகும். ஏற்கெனவே இவனால் நிம்மதி இழந்து தவிக்கும் அவருக்கு, இதையும் சொன்னால் அவ்வளவுதான். சுருண்டு விடுவார். ஒரு தடவை இதய அடைப்பு வேறு வந்த... அவரிடம் இதைச் சொல்லாமல் இருப்பதே சரி... என்ற முடிவுக்கு வந்திருந்தான்.

மேலும் சௌந்தர்யாவின் மேல் தவறு இருப்பதாலும், இவன் முன் அவள் வேசம் கலைந்த காரணத்தினாலும் இனி ஒரு பிரச்சனையும் அவள் பண்ண மாட்டாள் என்றே அவனுக்குத் தோன்றியது. ஆனால், இப்போது அவள் நீலிக் கண்ணீர் வடித்துத் தன் தந்தையிடம் முறையிட்டிருப்பதை அறிந்தவுடன் அவனுக்கும் வேறு எதுவும் தோன்றவில்லை. இப்போது சொல்வதே சரி என்றே அவனுக்குத் தோன்றியது.

"அப்பா, அந்த சௌந்தர்யாவும் அவள் அப்பாவும் நீங்க நினைப்பது போல் இல்லை. நம் பணத்துக்காகத்தான் அவ என்னைத் திருமணம் செய்யச் சம்மதிப்பதே..." என்று ஆரம்பித்தவனைக் கொஞ்சம் கூட லட்சியம் செய்யாமல் இடையிலேயே நிறுத்தி,

"சௌந்தர்யா சொன்னாள். அப்போ நம்பவில்லை, ஆனால் இப்போ தெரிகிறது!" என்றவரைப் புரியாமல் பார்த்தான் பாலா.

அவனைப் பார்த்தபடி, "இவ்வளவு சொல்லியும் அவள் உன் பேச்சை மறுத்ததால் உன் பணத்துக்காகத்தான் சம்மதித்தாக என்னிடம் நீ சொல்லிவிடுவேன் என்று அவளை மிரட்டியது உண்மைதானென்று இப்போது புரிகிறது," என்று நிறுத்தினார்.

இப்போது பாலாவுக்கு எளிதில் எல்லாம் புரிந்தது. அவன் நினைத்தது போல அந்த சௌந்தர்யா சாதாரணமானவள் அல்ல. என்னவாய்த் திருப்பி விட்டு விட்டாள். இனித் தன் தந்தையிடமும் பேசிப் பயனில்லை என்பதை உணர்ந்தவன், "உங்க மகன் நான் சொல்வதை நம்ப மாட்டீர்கள். ஆனால் யாரோ ஒரு ஏமாற்றுக்காரி அவள் சொல்வதை நம்புவீர்கள். அப்படித்தானே?" என்றான் ஒரு மாதிரியான குரலில்.

"முதலில் நான் சொல்வதைக் கேள். திருமணத்தைப் பற்றி உன் முடிவு என்ன? அதைச் சொல். அதன் பிறகு உன்னை நம்புவதைப் பற்றி முடிவு செய்யலாம்!" என்றார் அவரும் எரிச்சலான குரலில்.

"இந்த விஷயத்தில் உங்கள் பேச்சைக் கேட்கா விட்டால்..." என்பதோடு மகன் நிறுத்தினான்.

அவர்களின் பேச்சின் தீவிரத்தை உணர்ந்த அருந்ததி யாருக்குச் சமாதானம் செய்வது என்று தெரியாமல், "நீ சாப்பிட்டு முதலில் ஆபீஸ் கிளம்பு. உங்களுக்கு எப்போ என்ன சொல்வது என்றே தெரியாது. அவன் சாப்பிடும்போதே..." என்றவளை ஜெகநாதன் முறைத்த பார்வையில் அடங்கினாள்.

"என்னடா... நீ கேட்காமல் போயிடுவியா, நான் சொல்வதை!" என்றபடி, "கேட்காவிட்டால்னு அதுக்குப் பதில்

வேறு கேட்கிறாயா?" - அதிகாரத் தோரணையில் அவர் குரல் அந்த அறை முழுவதும் மோதித் திரும்பி வந்தது.

அவரது எந்தக் குரலுக்கும் சிறிதும் அஞ்சாமல் பிசிறில்லாமலும், அலட்டல் இல்லாமலும் பாலாவின் பேச்சு இருந்தது.

"சாப்பிடுபவனை இடையில் நிறுத்தி என்ன பேசுகிறோம் என்று தெரியாத அளவிற்குப் பேசியாகி விட்டது. இதற்கு மேல் என்ன... நானும் தெளிவாகவே சொல்கிறேன். நான் நீங்க நினைப்பது போல் வாழ வேண்டுமென்றால் எனக்கு என் மது வேண்டும். இல்லையென்றால் இப்படித்தான் இருப்பேன். என்னை மாற்ற முயற்சித்தால் அது உங்களுக்குத் தோல்விதான். அதனால்..." என்று பாலா முற்றுப்புள்ளி கூட வைக்கவில்லை.

அதற்கு முன்னதாகவே, "என் பேச்சினைக் கேட்காதவர்கள் என் வீட்டிலும் இருக்கத் தேவையில்லை. இங்க யாரும் யாரையும் பணத் தேவைக்குச் சார்ந்திருக்கவில்லை. பாசத்தில் சார்ந்திருந்தோம். அதுவே இல்லை எனும்போது அவரவர் வழியினைப் பார்த்துக் கொள்ளலாம். அங்கே யாரும் கேள்வி கேட்க வரப் போவதில்லை..." எனும்போதே தந்தையின் சுடுசொற்களைத் தாங்காதவன், அப்படியே தட்டில் கைகளைக் கழுவி விட்டு, வேக வேகமாக மாடி ஏறி ஏதோ பேருக்குத் துணிகளை எடுத்துக் கொண்டு தாயின் குரலையும் பொருட்படுத்தாமல் காரினுள் ஏறிச் சீற்றத்துடன் காரினைக் கிளப்பினான் பாலா.

பாலா கோபத்துடன் வீட்டை விட்டுக் கிளம்பியதைப் பார்த்த அருந்ததிக்கும் இப்போது கோபம் வந்தது.

"உங்களுக்கு என்ன ஆச்சு இன்னைக்கு? அவன் சாப்பிட்டுக் கூட முடிக்கவில்லை. அதற்குள் அப்படி என்ன அவசரம்? நம்ம பையனை விட அந்தப் பொண்ணு வார்த்தை முக்கியமாப் போச்சா உங்களுக்கு? அவ வருவதற்கு

முன்னாலே இப்படியென்றால்... நினைக்கும் போதே பயங்கரமாயிருக்கிறது. எனக்கு என் பையன்தான் முக்கியம். அவன் வீட்டுக்கு மட்டும் வராமல் இருக்கட்டும். அதன் பிறகு இருக்கு, உங்களுக்கு!" என்று பாலாவைத் தடுக்க முடியாத ஆற்றாமையில் கொட்டித் தீர்த்தாள் அருந்ததி.

இதுவரை கோபத்தில் சிவந்திருந்த ஜெகநாதனின் கண்களில் மெல்ல நீர் துளிர்த்தது.

"இல்லம்மா. நான் அவனை நம்பாமல் இல்லை. எனக்கு நம்ம பையனை விட வேறு யாரும் முக்கியமில்லை. நான் இந்தப் பொண்ணுதான் மருமகள் என்று சொன்னால், சௌந்தர்யாவினைப் பிடிக்காமல் அவனாகவே வேறு ஏதாவது நல்ல முடிவு எடுப்பான். அதனால்தான் அந்தப் பொண்ணை நம்புவது போல் பேசினேன். கண்டிப்பாகப் பாரு. நம்ம குடும்பத்துக்கு நல்ல வழியைக் காண்பிப்பான் அந்த இறைவன்..." என்றவரைப் பொய்யாக முறைத்துப் பார்த்த அருந்ததி,

"உங்க நடிப்பெல்லாம் இருக்கட்டும். இன்னைக்கு என் பையன் மட்டும் வராமல் இருக்கட்டும்..." என்று மிரட்டியபடி உள்ளே போனவளிடம்,

"வருவான் வருவான். நீயும் அவனுக்குப் பொண்ணு தேடுகிற வழியினைப் பார். என்கிட்ட மோதி உன்கிட்டதான் வந்து நிப்பான். அண்ணன் பொண்ணை நினைத்து நீயும் கண்ணைக் கசக்கிட்டு எனக்கு மதுதான் மருமகளாக வேண்டும் என்று நிற்காதே. அடிக்க அடிக்க அம்மியும் நகரும். பாலாவும் மெல்ல மெல்ல நம்ம வழிக்கு வந்துருவான். அப்படி அவன் வரும்போது பொண்ணைத் தேடிட்டு இருக்கக் கூடாதுல்ல. அதனால்தான் சொன்னேன்..." என்று கேலி செய்தவரைப் பார்த்து ஒப்புக்காகச் சிரித்து வைத்தாள் அருந்ததி.

சொந்த அண்ணன் மகளை எடுக்க முடியாத விதியின் விளையாட்டு, மகனுடைய எதிர்கால வாழ்க்கைக்கான

கேள்விக் குறி, கணவனின் உடல் நிலை என்று அவளைச் சுற்றிலும் கவலைகள் சூறாவளியாய்ச் சுற்றிய போதும், அந்த சௌந்தர்யா இந்த வீட்டுக்கு வரப் போவதில்லை என்றவரையில் எங்கோ மனதின் மூலையில் ஒரு நிம்மதி.

ஏனோ அவளை அவளுக்குப் பிடிக்கவில்லை. அந்த வகையில் ஒரு திருப்தி. மனதில் பல விதமான எண்ணப் போராட்டங்களுடன் சமையலறையினை நோக்கி நடந்தவள் இன்றே அவளது வருங்கால மருமகளைச் சந்திக்கும் சந்தர்ப்பம் நிகழப் போவதை அறிவாளோ?

8

"அம்மா!" என்ற கீர்த்தியின் கத்தலில் சமையலறையில் இருந்து வெளியே வந்த மைதிலி அலுவலகத்திற்குக் கிளம்பி நின்ற மகளைப் பார்த்து ஆச்சரியத்தில் வாய் பிளந்து நின்றாள்.

"கீர்த்திம்மா! நீயா இது! இவ்ளோ சீக்கிரம் ஆபீஸுக்கு..." என்றவளிடம்,

"சீக்கிரம். எனக்கு டிபன் எடுத்து வையுங்கம்மா. எனக்கு ஆபீஸ் போகணும்..." என்று பரபரத்தபடி,

மைதிலி அசையாமல் அவளையே பார்த்தபடி நிற்க...

"தள்ளிக்கங்க. நானே லஞ்சுக்கு எடுத்து வைத்துக் கொள்கிறேன். நீங்க கனவு கண்டு கொண்டே எனக்கு அட்லீஸ்ட் டிபன் மட்டுமாவது எடுத்து வையுங்கள்..." என்றபடி கிச்சனுக்குள் நுழைந்தாள்.

"என்னங்க... இவளுக்கு ப்ரமோசன் போட்டாலும் போட்டாங்க. அநியாயத்துக்கு நம்மை ஆட்டிப் படைக்கிறா. என்னமோ அந்த ஆபீஸே இவளாலதான் நடக்கிற மாதிரி..." என்று ராகவிடம் சத்தமாகவே அலுத்தாள் மைதிலி.

"மைதிலி, அங்க என்ன புலம்பல்! கொஞ்சம் உள்ள வாங்க மேடம். நான் போன பிறகு உங்க ஆத்துக்காரரிடம்

எவ்வளவு நேரம் உட்கார்ந்தும் பேசுங்க... இப்போ எனக்கு டிபனை வையுங்க. மத்ததை அப்புறம் கவனிங்க..." என்று விளம்பர மாடல் போல் ஏற்ற இறக்கமாகப் பேசிய கீர்த்தியிடம்,

"அம்மா, தாயே! நீ முதலில் கிளம்புகிற வழியைப் பார். ஒண்ணும் கேட்காதீங்க அவளை. அவ பேசுறதையெல்லாம் பார்த்து ரசிச்சுப் பார்த்துச் சிரிக்க மட்டும்தான் தெரியும் உங்களுக்கு..." என்றபடி அவளும் கிச்சனுக்குள் நுழைந்தாள்.

மைதிலி வார்த்துக் கொடுத்த தோசையினை வாயில் பிய்த்துப் போட்டபடி, ராகவனின் அருகில் அமர்ந்த கீர்த்தி, "என்னப்பா, உங்க மனைவிக்கு வர வர என்னைப் பற்றி கம்ப்ளெயின்ட் பண்றதே வழக்கமா போய் விட்டது. நீங்க ஒரு வார்த்தை கேக்கறீங்களா... அவங்க பேசுறதையெல்லாம் வாயை மூடிட்டு கேட்க மட்டும்தான் தெரியும் உங்களுக்கு..." என்று கீர்த்தியும் தன் பங்குக்கு ராகவனைக் குற்றம் சாட்ட,

"உங்க ரெண்டு பேருக்கும் இடையில் என்னை ஏன் இழுக்கறீங்க? அம்மா - பொண்ணு முட்டி மோதுங்க. என்னமோ பண்ணுங்க. அதை விட்டுட்டு என்கிட்ட வந்து நிற்காதீங்க!" என்றார் ராகவன்.

"அப்படி இல்லப்பா! நீங்க எந்த சைடுன்னு செக் பண்ணிக்கிறோம். நீங்க யார் சைடுல இருக்கீங்களோ, அந்தப் பக்கம் கொஞ்சம் ஸ்ட்ராங்கா இருக்கும்ல. அதான். என்னம்மா, அப்படித்தானே?" என்று தன் அம்மாவையும் துணைக்கு இழுத்தாள்.

"ஆமாடா! நானே இங்க தனியாளா ரெண்டு பொண்ணுங்க கிட்ட இருந்து மாட்டித் தவிக்கிறேன். நீ மெஜாரிட்டி வேறயா பார்க்கிறாய்!" என்று மகள் மற்றும் மனைவியிடம் மாட்டித் தவிப்பதைக் கூறினார் ராகவன்.

அவர் தன்னையும் தன் அம்மாவையும் பேசுகிறார் என்று தெரிந்த போதும், கண்களை அகலமாக விரித்தவள்... "அப்பா, என்கிட்ட சொல்லவே இல்லயே... யாருப்பா அது இன்னொரு பொண்ணு!" என்றவளை,

"மைதி, முதலில் இவளைக் கிளம்பச் சொல்லு. ராட்சசி! என்னை உன்கிட்ட மாட்டி விடறதிலேயே குறியா இருக்கா. கீர்த்திடா, கிளம்புடா. என்னை மாட்டி விடறதில் உனக்கு என்ன சந்தோஷமோ... ஏதோ முக்கியமான வொர்க்னு சொன்னியே!" என்றதும்,

கீர்த்திக்கு அவள் அலுவலகம் ஞாபகம் வந்தது. "அய்யோ... மறந்தே போயிட்டேன்!" என்றபடி வேக வேகமாகச் சாப்பிட்டவள்... சில நிமிடங்களில் வீட்டை விட்டு வெளி யேறினாள்.

அவளது வேகத்தைப் பார்த்த மைதி,

"அப்படி என்னதான் ஆபீஸ்ல இருக்கோ... இப்பொழுதெல்லாம் சீக்கிரமாகவே கிளம்புகிறாள். லேட்டா வருகிறாள். இப்படி ஒரு வேலை நம்ம கீர்த்தி பார்க்க வேண்டுமா? திருமணம் பண்ணலாமென்றால் அண்ணன் வேறு ஒரு வருடம் ஆகட்டும் என்று சொல்கிறார். அதுக்குள்ள என் பொண்ணு இந்த வேலை வேலை... என்றே ஓய்ந்து விடுவாள் போல..." என்று மகளைப் பற்றிய கவலையில் பேச,

"அவ என்றாவது இந்த வேலையில் கஷ்டம் என்று கூறியிருக்கிறாளா... அவளே பிடித்துப் போய்த்தானே இவ்வளவு அக்கறையாக உழைக்கிறாள். பிடிக்கவில்லை என்றால் நம்மிடம் சொல்லப் போகிறாள். அவள் இதுவரை எதையும் நம்மிடம் மறைத்ததில்லை. துக்கமோ, சந்தோஷமோ, சின்னதோ பெரியதோ நம்மிடம் சொல்லவில்லை என்றால் அவளுக்குத் தலை வெடித்து விடும். அப்படி அவள் இருக்கும்போது உனக்கு என்ன கவலை? கீர்த்தி இன்னும் சின்னப் பொண்ணு இல்லை. அவளைப் பார்த்துக் கொள்ள அவளுக்குத் தெரியும்!" என்றபடி வீணாகக் கவலைப்பட்ட தன் மனைவியைத் தேற்றினார் ராகவன்.

ஆனால், அவர் மகள் மிகப் பெரிய விசயத்தை மறைக்கப் போவதையும், அதை அவர் கடைசிவரை

அறியவே முடியாத நிலைமையும் அவருக்கு உணர்த்த இந்த ஜென்மத்தில் யாருமில்லை.

கீர்த்தி அலுவலகத்தை அடைந்தபோது அவளது தளத்தில் யாருமே வந்திருக்கவில்லை. தன் இருக்கையில் அமர்ந்தவள், சிஸ்டத்தை ஆன் பண்ணிவிட்டுக் கண்களை மூடிச் சிறிது நேரம் அமர்ந்திருந்தவள்... நேற்றுப் பாலா கம்ப்ளீட் செய்த ப்ரோகிராமை ஓப்பன் செய்து ரன் பண்ணியவள், அதே நேரத்தில் தனக்கு வந்திருந்த மெயில்களையும் செக் பண்ண ஆரம்பித்தாள்.

ஒரு மெயில் விநோத்திடமிருந்து வந்திருந்தது. வழக்கம் போல் அவனால் கூப்பிடப்படும் செல்லப் பெயரால் ஆரம்பித்து அவளை வம்புக்கு அழைப்பது போன்று ஆரம்பித்து எழுதியிருந்தான். அதில் இருக்கும் குறத்தி என்ற வார்த்தையிலே அவளுக்குக் கோபம்தான் வரும். இருந்தாலும் ஒரு நாள் அவன் குட் மார்னிங்... என்று மெயில் அனுப்பாவிட்டால் அன்று முழுவதும் என்னவோ போல் இருக்கும். சிரித்தபடியே வழக்கம் போல் அவனைத் திட்டி அனுப்பியபடி அவனுக்குப் பதில் அனுப்பியவள், அவள் ரன் செய்த ப்ரோகிராம் எந்த ஒரு ரிசல்ட்டையும் காண்பிக்காமல் இருந்ததைப் பார்த்தவள் யோசித்தபடியே அப்ளிகேஷனைப் பார்த்தபோது நேற்று விட்ட அதே எர்ரரைக் காட்டியது.

கொஞ்சம் குழப்பமானவள்... நேற்று கரெக்ட் பண்ணி விட்டேன் என்று பாலா சொன்னாரே என்றபடி, மண்டையைக் கசக்கியவளுக்குப் பாலாவைச் சற்றும் சந்தேகப்படத் தோன்றவில்லை. ஒருவேளை சேவ் பண்ண மறந்து விட்டாரோ என்று யோசித்தவளுக்கு, சாஃப்ட்வேர் ஃபீல்டில் இருந்து கொண்டு ஒரு ரெஸ்பான்சிபிலிட்டி பெர்சன் ஸேவ் செய்ய மறப்பாரா என்றபடி, அப்புறம் ஏன் முடித்து விட்டேன் என்று கால் பண்ணினார் என்று குழம்பியபடி, மீண்டும் ஒருமுறை

செக் பண்ணியவளுக்கு இப்போது தான் செய்திருந்த தவறு தெரிந்திருந்தது. அதைச் சரி செய்து ரன் பண்ணியவளை அவளது கம்ப்யூட்டர் ஏமாற்றவில்லை.

வழக்கம் போல் அன்றையப் பணிகளை ஆரம்பித்தாள். கவி அன்று லீவ் என்பதால், அரட்டைகளைத் தள்ளிவிட்டு வேலையில் கவனத்தைப் பதித்தவள்... பாலா அலுவலகத்தினுள் நுழைந்த போதுதான் சற்றுக் கவனத்தைத் திசை மாற்றினாள். நேற்றுச் சரி செய்த முறையினை அவன் சொல்வான் என்று எதிர்பார்த்தவளுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. அவளது பக்கம் கூடத் திரும்பவில்லை அவன்.

உதடுகளைப் பிதுக்கியபடி சற்று யோசித்தவள், சரி செய்திருந்தால்தானே விளக்கம் எதிர்பார்க்க முடியும் என்று தன்னைத் தானே தேற்றியவளுக்கு அவன் மேல் கோபம்தான் மிஞ்சியது. பிறகு ஏன் நைட் அவ்வாறு கால் செய்தான். இவனிடம் கேட்டோமா... இல்லை, இவனிடம் முடித்துத் தரச் சொல்லிக் கேட்டோமா... இல்லை, முடித்தவுடன் கால் பண்ணு என்று சொன்னோமா... என்று மனதிற்குள் புலம்பியவாறே மீண்டும் தன் வேலையில் தொடர்ந்தாள்.

தன் அறைக்குள் நுழைந்த பாலா தொப்பென்று தனது சீட்டில் அமர்ந்தான். அவன் எண்ணமெல்லாம் காலையில் நடந்த தன் தந்தையின் வாக்குவாதத்திலும்... மதுவின் நினைவிலும் சுற்றியது. தலையினைக் கைகளால் பிடித்தபடி சிறிது நேரம் அமர்ந்திருந்தவன்... தன் நண்பன் ரகுராமிற்குக் கால் செய்தான்.

ரகுராம் பாலாவின் பள்ளித் தோழன். தனியாக பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்சி வைத்திருந்தான். அவனிடம் தான் பாலா ரகசியமாக மதுவைத் தேடும் பொறுப்பினையும் கொடுத்திருந்தான்.

"ஹலோ ரகு, நான் பாலா பேசுகிறேன்டா."

"டேய் பாலா! என்னடா இப்போதான் கால் பண்ற. என்னடா, ரொம்ப பிசியா?" என்று நார்மலாக ஆரம்பித்த வனிடம், சுள்ளென்று விழுந்தான் பாலா.

"நீ பேசாம உன் டிடெக்டிவ் ஏஜென்சியை மூடிட்டு வேற ஏதாவது தெரிந்த வேலை இருக்கானு பார்த்து அதை ஆரம்பி. உன்னை நம்பி உன்கிட்ட வருகின்ற கிளைன்ட்லாம் பாவம்..." என்றவாறு ஆரம்பித்தவனை,

"பாலா, கூல் கூல். உன் கவலை எனக்குப் புரிகிறது. மதுவைக் கண்டுபிடிக்க நானும் ட்ரை பண்ணிட்டுத்தான் இருக்கேன். நீ சொன்ன விவரங்கள்படி எனக்கு முதலில் மது அப்பா மேலதான் சந்தேகமே. ஆனால் அவர் உன்னிடமே மதுவைப் பற்றி விசாரித்து, அதன் பிறகு போலீசில் கம்ப்ளெயின்ட் செய்த போது அவர் மேல் இருந்த சந்தேகம் சற்று விலகியது. அதுமட்டுமில்லாமல் அவரையும் அவரது குடும்பத்தினரையும் ரகசியமாய் வேவு பார்த்ததில் மது வேறு யாரிடமோ மாட்டியிருக்கிறாள். பணத்துக்காக என்றால் கண்டிப்பாகத் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். ஸோ, அந்த வகையிலும் இல்லை. எந்த மோட்டிவேசனில் அவள் கடத்தப்பட்டிருக்கிறாள் என்றே புரியவில்லை. அதுதான் இப்போதைய குழப்பம்..." என்றவாறு நிறுத்தியவனிடம்,

"ரகு, மதுவோட உ... உயிருக்கு ஒன்றும்..." என்று முடிக்காமல் திணறியவனிடம்,

"இல்ல பாலா! மது உயிரோடதான் இருக்கா. ஏனென்றால் கொலை செய்யப்பட்டிருந்தால் அவளது உடல் எப்படியாவது காவல் துறைக்குக் கிடைத்திருக்கும். என்னுடைய அனுபவத்தில் சொல்கிறேன். குற்றவாளி ஏதாவது ஒரு அடையாளத்தினை விட்டுச் சென்றிருப்பான்..." என்றவனிடம் பாலா,

"இல்லடா. நீ சொல்வது கொலை செய்யப்பட்டவர்களின் உடம்பு கிடைத்தால்.. உடம்பே கிடைக்காதபடி செய்திருந்தால்...

அப்போ எப்படிச் சொல்வாய்?" என்று கேட்கப் பிடிக்கா விட்டாலும் எதிர்க்கேள்வி கேட்டான்.

"இருக்கலாம் பாலா. ஆனால் அப்படி நடந்தி ருந்தால்கூட ஏதாவது ஒரு விசயத்தில் மாட்டி விடுவான். இதற்கு எடுத்துக்காட்டாய் எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அதனால்தான் சொல்கிறேன். மதுவின் உயிரைப் பற்றிக் கவலைப்படாதே. நன்றாய் யோசித்துச் சொல்லு. மதுவுக்கும் உனக்கும் விரோதி என்று யாரும் இருந்தார்களா...? இல்லை, அவளை யாராவது விரும்பித் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார்களா? அந்த மாதிரி..." என்று நிறுத்தியவன், "கொஞ்சம் யோசித்துப் பார் பாலா," என்றான்.

"இல்லடா. எனக்குத் தெரிந்து அவளுக்கு விரோதி யாரும் இல்லை. அதே போல் நானும் மதுவும் ஒருவருக்கொருவர் விரும்புகிறோம் என்பதால் வேற மாதிரியான தொந்தரவுகளும் இல்லை..." என்று பாலா கூறியதும்,

சிரித்த ரகு, "அப்படியா பாலா! உன் நண்பன் ஆதியும் அந்தப் பொண்ணு கீர்த்தியும் தான் ஒருத்தரை ஒருத்தர் விரும்பினார்கள் என்று எல்லோருக்கும் தெரியும். கீர்த்தியைப் பிரதாப் டார்ச்சர் பண்ணலயா? அதனால்தானே ஆதியவே அவன் கொலை பண்ணிட்டு ஜெயிலுக்குப் போனான். அப்புறம் எப்படிச் சொல்கிறாய், வேற மாதிரியான தொந்தரவுகள் இல்லை யென்று?" என்று ரகு கேட்டுக் கொண்டிருக்கும் போதே, பாலாவுக்கு ஒரு மின்னல் அடித்தது.

"ரகு, மது எனக்கு ஒரு பெண்ணிடம் இருந்து மொபைல் வாங்கிப் பேசினாள் அல்லவா! அந்தப் பெண்ணைக் கண்டுபிடித்தால் நமக்கு ஏதாவது ஒரு க்ளூ கிடைக்கும் அல்லவா! ஆனால் நாம் அந்த நம்பரை வைத்துத் தேடிய பொழுது ஒழுங்கான தகவல் கிடைக்கவில்லை.

அதோடு விட்டுவிட்டோம். மறுபடியும் ட்ரை பண்ணலாமா? ஏதாவது விசயம் கிடைக்கும் அல்லவா?"

"ம்... ஓ.கே. பார்க்கலாம். சரி, இன்னைக்கு ஏன் சார் இவ்ளோ ஹாட்! வீட்டில் கல்யாணப் பேச்சைத் திரும்ப ஆரம்பித்து விட்டார்களா?" என்றவனுக்கு எதிர் முனையில் இருந்த மவுனமே விசயத்தை விளக்கியது.

"சாரிடா. நானும் எப்படி எப்படியோ ட்ரை பண்ணிட்டுத்தான் இருக்கேன்..." என்றவன், "பிரதாப் இங்கதான் இருக்கான் போல். நீ போலீஸில் பிடித்துக் கொடுத்தும் என்ன பிரயோஜனம்? சட்டத்தோட ஓட்டை வழியா வெளியே வந்துட்டான். இப்போ சென்னையிலயே நடமாடுகிறான். கீர்த்தியிடம் சொல்லி வை!" என்றபடி போனை வைக்கப் போனவனிடம்,

"சரி, நான் கீர்த்தியிடம் சொல்கிறேன்," என்றபடி, "நீயும் மதுவைக் கண்டுபிடிக்கப் பாரு. முடிந்தால் அந்தப் பொண்ணையும் தேடிக் கண்டுபிடிக்க முயற்சி செய். எனக்காகக் கொஞ்சம் சீக்கிரம் ட்ரை பண்ணுடா!" என்று போனை வைத்தான்.

அவனிடம் பேசி அடுத்த சில நிமிடங்கள் யோசித்தவன், கீர்த்திகாவிற்குக் கால் செய்வோமா என்று கால் செய்யப் போனான். அவளுடன் பேசி ஒரு வருடத்திற்கும் மேல் ஆகிவிட்டது.

விதி ஆதி - கீர்த்திகா, பாலா - மது ஜோடியுடன் விளையாடி விட்டது. கீர்த்திகா ஆதியும் சேர்ந்து வாழ முடியாமல் போய் விட்டது. பாலாவும் மதுவும் சேர முடியாமல் விதி விளையாடுகிறது என்று பெருமூச்சு விட்டவனின் சிந்தையில் கீர்த்திகாவின் விதவைக் கோலம், கண் முன் வந்து நின்றது.

மதுவும் பாலாவும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் இந்தக் கோலத்தில்தான் இருப்பேன் என்று பிடிவாதமாய் இருக்கிறாள்.

விதியின் கொடூரத்தினை நினைத்தபடி கீர்த்திகாவிற்குக் கால் செய்தான். அவளது அழைப்புக் கிடைக்கவில்லை. அதன் பிறகு அவளது வீட்டிற்குக் கால் செய்து பிரதாப்பைப் பற்றி விபரத்தினைச் சொல்லி அவளிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்லச் சொன்னவன்... அவள் வீட்டில் இல்லை என்பதால் வந்தவுடன் தனக்குக் கால் செய்யும்படி கூறிவிட்டுத் தன் அலுவலகப் பணியினைத் தொடர்ந்தான் - அந்த அலுவலகத்தின் எம்.டி.யாக.

கிட்டத்தட்ட 5 மணியளவில் கீர்த்திக்கு அவளது பழைய ப்ராஜெக்ட் லீடர் கால் செய்து அவரது மனைவிக்கு டெலிவரி என்பதால் தான் கிளம்ப வேண்டும். அந்த ப்ராஜெக்ட்டில் மாடிஃபிகேசன் வந்திருப்பதால் இன்று ஒரு நாள் மட்டும் இருந்து முடித்துக் கொடுக்கும்படி கேட்டதால், கார்த்தியிடம் தன் வேலையினை மாற்றிக் கொடுத்துவிட்டு, கேசவன் சொன்ன வேலையினை ஆரம்பித்திருந்தாள்.

கேசவன் கிளம்பும்போது பாலா சாரிடம் சொல்லி விட்டேன். இருந்தாலும் அவளையும் ஒரு முறை சொல்லச் சொன்னதால் பாலாவின் அறைக்குச் சென்றாள் கீர்த்தி.

கேசவன் சொன்னதைச் சொன்னவள், அதன் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாய்க் கூறினாள்.

"நன்றி கீர்த்தி! அவருடைய் நிலைமையினைப் புரிந்து உதவி செய்ததற்கு. கொஞ்சம் முக்கியம். இன்னைக்கே பண்ண வேண்டும்..." என்றபடி, "முடிச்சடுவீங்கதானே... இல்லை, நானே பார்த்துக் கொள்ளவா?" என்றபோதுதான் நேற்று ஞாபகம் வந்தது.

"ஓ சாரி கீர்த்தி!" என்றவனிடம்,

அவன் சாரி எதற்குக் கேட்கிறான் என்று தெரிந்த போதும், "எதற்கு சார்?" என்று யோசித்தபடி பாவனை செய்தவள்,

"ஓ! சாரி சார். நான்தான் உங்களுக்குத் தாங்க்ஸ் சொல்ல மறந்துட்டேன். நீங்க நேற்று கரெக்ட் செய்து கொடுத்ததற்கு..." என்று கரெக்ட் என்ற வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்தவள்,

மீண்டம் ஒரு தாங்க்ஸ் கூறி அவனைப் பார்த்தாள்.

அவளது குத்தலை இதழில் ஒரு புன்னகையுடன் ரசித்தவன்... "சாரி, கீர்த்தி! இன்னைக்கு நீங்களே கம்ப்ளீட் பண்ணீட்டிங்கதானே... எனக்குத் தெரியும். அதனால்தான் நேற்று உங்களைக் கிளப்ப அப்படிச் சொன்னேன்..." என்றவனைப் பார்த்து,

"இன்று கூட லேட் ஆகும் போல சார். இன்னைக்கு என்ன செய்யப் போகிறீர்கள் சார்?" என்ற வார்த்தைகள் அவளையும் அறியாமல் வெளியே வந்து விட்டன.

சட்டென்று அவன் தனது எம்.டி. என்று யோசித்தவள், உடனே, "சாரி சார். ஏதோ அவசரத்தில் தெரியாமல்..." என்று இழுத்தவளிடம்,

அளவாய்ப் புன்னகைத்தவன், "நேற்று ஏதோ உங்க நல்லதுக்குச் சொன்னேன். அது எனக்கே திரும்பி வருதா! இல்ல, கீர்த்தி... நேற்று ஒன்றும் அவசரமில்லை. ஆனால், இன்றோ முடித்தாக வேண்டும். ஆனால், அதற்காக நீங்கதான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. உங்களால் முடிந்தவரை பாருங்கள். உங்க பழைய டீமில் வேறு ஒருவரை வைத்து முடித்துக் கொள்கிறேன்," என்றான் பாலா.

"நானே முடித்து விடுவேன் சார். ஏதாவது ஹெல்ப் வேணும் என்றாலும் கால் பண்ணச் சொன்னார் சார்! ஸோ ஒரு ப்ராப்ளமும் இல்லை..." என்று சிரித்தபடி விடை பெற்றவள்,

தனது சீட்டில் அமர்ந்தவுடன்... நேற்றுப் போடவில்லை என்றால், எனக்கு எதற்குக் கால் பண்ண வேண்டும்? பெரிய

ஸ்மார்ட்டா காட்டவா! இன்னைக்கும் நேற்றுப் போல் சொல்லட்டும். அதற்குப் பிறகு இருக்கு... என்று தனக்குள்ளாகவே திட்டியவள், தன் தலையில் தட்டியபடி,

"ஏன் கீர்த்தி நீ இப்படிப் புலம்புகிறாய்? உனக்கு என்ன தலையெழுத்தா? அவனுக்கே அவன் கம்பெனி மேல அக்கறை இல்ல போல..." என்று உதட்டைச் சுழித்தவள், இது கேசவன் சாருக்காக என்று சமாதானம் செய்தபடி வேலையைத் தொடர்ந்தாள்.

கீர்த்தி பேசி விட்டுப் போன பிறகு காலையில் இருந்த கடினத் தன்மை மறைய... வேலையில் தன் கவனத்தைப் பதித்தான்.

கொஞ்சம் வேலைப் பளு அதிகம் இருந்தபடியால் செல்போனை சைலன்ட் மோடில் வைத்திருந்தான் பாலா. அன்று காலையில் தான் வீட்டில் கோபித்துக் கொண்டு வந்திருந்ததைச் சுத்தமாக மறந்து போனபடி அலுவலக வேலையில் மூழ்கியிருந்தான் பாலா.

அருந்ததியும், ஜெகநாதனும் எத்தனை முறை கால் பண்ணியும் அட்டெண்ட் பண்ணாததால்... அப்செட் ஆகியிருந்தனர். போன வேகம் கொஞ்சம் பயமாய் இருந்தாலும் அவன் வீட்டிற்கு வராமல் இருக்க மாட்டான் என்ற நம்பிக்கை இருவருக்கும். இதய நோயாளியான ஜெகநாதனுக்கு உண்மையிலேயே தன்னால்தான் வரவில்லையோ... என்ற குற்ற உணர்வு அவரையும் அறியாமல் மெல்ல மெல்ல அவரை அழுத்தியது. அதை மனைவியிடம் வெளிக் காட்டிக் கொள்ளாமல் தொடர்ந்து செல்போனில் அழைத்துக் கொண்டே இருந்தார்.

கிட்டத்தட்ட 25 அழைப்புகளுக்குப் பின்தான் பாலாவைத் தொடர்பு கொள்ள முடிந்தது.

"பாலா, எங்கே இருக்க? உடனே வீட்டிற்கு வா. என்ன இருந்தாலும் இங்க பேசிக்கலாம். வெளியே போய்த் தங்குகிற

வேலையெல்லாம் வைத்துக் கொள்ளாதே. நான் காலையில் பேசின விதம் சரியில்லைதான். அதற்காக என்னை மன்னித்துக் கொள். இப்போ கிளம்பி வாடா!" என்று படபடப்பாய்ப் பேசினபோது அவரது குரல் தளர்ந்திருந்தது.

அவரிடம் இருந்து போனை வாங்கிய அருந்ததி, "அப்பா சொன்னதை எல்லாம் மறந்து விடு பாலா. நான் அம்மா சொல்கிறேன் இல்ல! உனக்குப் பிடிக்காதது ஏதும் செய்ய விட மாட்டேன்பா. நீ எங்கே இருக்க இப்போ?" என்றவளிடம்,

கீர்த்தியின் அருகில் இருந்த காரணத்தினால், "அம்மா, நான் இப்போ நம்ம ஆபீஸில்தான் இருக்கிறேன். அப்புறம் பேசுகிறேன். முக்கியமான வொர்க் முடிக்க வேண்டும்..." என்றபடி, கீர்த்தியின் முன் தன் நிலை தெரியக்கூடாது என்ற வேகத்தில் அருந்ததியின் பதிலை எதிர்பாராமல் போனைக் கட் செய்தான்.

ஸ்பீக்கரில் இருந்ததால் அவன் கூறியதை எல்லாம் கேட்ட ஜெகநாதன், "அவன் இன்னமும் என் மேல கோபமாயிருக்கான். அதான் உன்கிட்ட கூட ஒழுங்கா பேசவில்லை. நான் இவ்ளோ சொல்லியும் வருகிறேன் என்று சொன்னானா! அப்புறம் பேசுகிறானாம். அவன் சரிப்பட மாட்டான். வா, நாம அவனைப் போய்க் கூட்டிட்டு வரலாம்!" என்றபடி கிளம்பியவரைத் தடுத்த அருந்ததி,

"அதெல்லாம் வேண்டாம். இப்பொழுதுதான் மாத்திரை போட்டிருக்கிறீர்கள்..." என்றவளை மறுத்து வலுக்கட்டாய மாகக் கூட்டிச் சென்றார் ஜெகநாதன்.

9

"ஓ.கே. கீர்த்தி! நீங்க கிளம்புங்க. நான் அந்த ஃபைலை மட்டும் அனுப்பி விட்டுக் கிளம்பி விடுவேன். ஒரு டென் மினிட்ஸ் வெயிட் பண்ணினால் நானே உங்களை ட்ராப் செய்து விடுகிறேன். 11 ஆகி விட்டது. அதனால்தான்..." என்றவனிடம்,

"இல்ல சார்! நான் பார்த்துக் கொள்கிறேன்..." என்றபடி அவனது பதிலையும் எதிர்பார்க்காமல் தனது லஞ்ச் பாக்ஸை எடுக்க அலுவலகத்தின் ஓய்வு அறைக்கு உள்ளே நுழைவதற்கும் பாலாவின் தந்தை அந்த அறைக்குள் வருவதற்கும் சரியாக இருந்தது.

கீர்த்தி ஓய்வு அறைக்குச் சென்றதும், அன்று முடிந்திருந்த மாடிஃபிகேஷனைச் சரி பார்த்தபடி, முடிந்தவுடன் நேரே வீட்டிற்குப் போக வேண்டும். அம்மாவும், அப்பாவும் அவன் வேற எங்கேயோ போய்த் தங்கப் போகிறான் என்று நினைத்துத்தான் பயந்து போய் கால் பண்ணியிருக்கிறார்கள் என்று நினைத்தபோது அவனுக்குச் சிரிப்புதான் வந்தது.

காலையில் வீம்பாகப் பேசி விட்டு வீட்டிற்குப் போகலாமா என்று கூடத் தோன்றியது. இன்று ஒரு நாள் மட்டும் எங்கயாவது தங்கிவிட்டு நாளை போகலாமா... ஒரு பயமாவது அவர்களுக்குக் காட்ட வேண்டும் என்று கூட நினைத்தான். ஆனால், நேரம் செல்லச் செல்ல... அது தவறு என்று தோன்றியதாலும், காலையில் இருந்த கோபம் இப்போது இல்லை என்பதாலும், மேலும் தன் பெற்றோர் மேல் இருந்த அளவுக்கு மீறிய அன்பினாலும் அவனது முடிவை எப்பவோ மாற்றி இருந்தான்.

கொஞ்சம் யோசித்தால் அவன் மேல் அதீதப் பிரியத்தினால்தான் இந்த வருத்தம் என்பதே உண்மை. இவ்வாறெல்லாம் யோசித்திருந்தவனுக்குத் தாய் தந்தை போன் செய்த பிறகு அங்கு இருக்கவே முடியவில்லை. வீட்டிற்குப் போனதும் காலையில் பேசியதற்கு மன்னிப்புக் கேட்டு விட்டு, தன் நிலைமையினைத் தந்தையிடம் மெதுவாக அவருக்குப் புரியும்படி சொல்ல வேண்டும் என்று நினைத்தபடி வேலையில் ஈடுபட்டிருந்தான்.

பாலா கீர்த்தியின் சீட்டில் அமர்ந்திருந்தபடியால், ஜெகநாதன் உள்ளே நுழைவதை உணர முடியாது. பாலாவின் அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த

ஜெகநாதன் ஒரு வளைவில் திரும்பும்போதுதான் தன் மகன் அங்கே இருந்த ஒரு கேபினில் அமர்ந்திருப்பது தெரிந்தது.

அருந்ததியை கார் பார்க்கினிலே நிற்கச் சொல்லி விட்டுத், தான் மட்டுமே மேலே வந்திருந்தார். அவரே அவரது மகனைக் கூப்பிட்டு வர வேண்டுமாம். இதற்கு ஒன்றும் குறைச்சல் இல்லை அப்பாவுக்கும் பிள்ளைக்கும்... என்றபடி அருந்ததியும் கீழேயே நின்று கொண்டிருந்தாள்.

தன் முன்னால் அசைவினை உணர்ந்த பாலா, கீர்த்திதானோ என்றபடி, "சரி கீர்..." என்று நிமிர்ந்தவன், தன் தந்தையினைப் பார்த்தவன் அதிர்ச்சியானான்.

விதி அவர் வந்திருந்த விதத்தினை நேர் மாறாகச் சிந்திக்க விடாமல்... தான் அவ்வளவு தூரம் வருவதாகச் சொல்லியும், தனது தந்தை வந்திருக்கிறார் என்றால் என்ன அர்த்தம்... என்று யோசித்தவன், கீர்த்தியும் இங்குதான் இருக்கிறாள் என்பதால் மெதுவான குரலில், "இப்போ எதற்கு இங்கு வந்தீர்கள்?" என்றவனிடம்,

அவன் இன்னும் கோபத்தில் இருக்கிறான் என்பது தெரிந்ததால்... தணிந்த குரலில் அதே நேரத்தில் அழுத்தமாக, "வா. வீட்டுக்குப் போகலாம்!" என்றார்.

"ஏன், குற்றமுள்ள மனசு குத்துகிறதா அப்பா! காலையில் என் வீடு... வெளியே போடா என்றீர்கள். இப்போது வா... என்கிறீர்கள். நீங்க கூப்பிட்டால் நான் வர வேண்டும். போ என்றால் போக வேண்டும் என்றால்... அப்போ எனக்கு என்னதான் உரிமை அந்த வீட்டில்...?" என்றவன், அமைதியாய் அவரை வெறித்துப் பார்த்தான்.

பிறகு மீண்டும், "இன்று வருவது சந்தேகம்தான். எனக்கு வேலை இருக்கிறது. அதனால்..." என்று இழுத்து, தன் சுய கவுரவத்தைக் காட்டிய பாலாவுக்கு அப்போது நாக்கில் சனிதான் இருந்திருக்க வேண்டும்.

"ஸோ, உனக்கு என் மேல் இன்னும் கோபம் அப்படித்தானே!" - என்றவருக்கு, மகனின் மவுனம், அது

உண்மை என்றே தோன்றியதால், சற்று முன் இருந்த மனநிலை மாறிக் கோபத்தில் கண்கள் சிவந்தன. வீட்டில் அவனை அவமானப்படுத்தியதாக நினைத்துக் கொண்டு, அவனது அலுவலகத்தில் அவரைப் பழி வாங்குகிறானோ என்று நினைத்தவரின் குரல் இப்போது அவரையும் அறியாமல் உயர்ந்தது.

அதே நேரத்தில் கீர்த்தியும் ஓய்வு அறையின் வாசலைத் தொட்டிருந்தாள். பாலா யாருடனோ பேசிக் கொண்டிருந்த குரல் கேட்டபடியால் யாராய் இருக்கும் என்றபடி அவள் வந்தபோது ஒரு நடுத்தர வயதுடையவரின் பக்கவாட்டு உருவம் தெரிந்தது. அவள் பாலாவிடம் சொல்லிவிட்டுக் கிளம்பலாம் என்று அடியெடுத்து வைத்தவள், அந்தப் பெரியவரின் குரலில் அப்படியே நின்றாள்.

"என்னடா... பேச்செல்லாம் ஒரு மாதிரியாய் இருக்கிறது. எனக்கு மனசு குறுகுறுக்கிறதா! நீ மத்தப் பசங்க மாதிரி குடும்பம், குழந்தை என்று இருக்க வேண்டும் என்று நான் நாயாய் அலைகிறேன் பார். எனக்கு வேண்டும். அப்பா எதற்காகக் காலையில் அப்படிச் சொன்னேன் என்று யோசிக்கத் தெரியாத உன்னைத் தேடி... சாப்பிடக் கூட முடியாமல், என் உடல் நிலைமையினைக் கூடப் பொருட்படுத்தாமல் வந்தேன் பார். என்னைச் சொல்ல வேண்டும். அப்படி என்னடா சொன்னேன்... திருமணம் செய் என்றுதானே! அப்படிச் சொன்னதற்காக என் மனது குறுகுறுக்கிறது என்றால் இருந்து விட்டுப் போகட்டும்..." என்று சற்று நிறுத்தினார்.

"ச்சே... அவசரப்பட்டுப் பேசிவிட்டோமே... பேசாமல் வீட்டிற்கே போய் இருந்திருக்கலாம்..." என்று நொந்தவன், ஜெகநாதனைப் பேசாமல் எவ்வளவோ தடுத்து நிறுத்திப் பார்த்தாலும் முடியவில்லை. அவர் சற்று நிறுத்தியதும், "அப்பா, இது ஆபீஸ். ப்ளீஸ் கன்ட்ரோல் யுவர்செல்ஃப்!" என்று கூறியதுதான் தாமதம்... ஜெகநாதன் இன்னும் கிளம்பி விட்டார்.

கீர்த்திக்கு வந்திருப்பவர் பாலாவின் தந்தை என்பது புரிந்தது. அவனது திருமண விசயத்தில் பிரச்சனை என்பதும், அதனால் இன்று ஏதோ பெரிய வாக்குவாதம் என்பதும் புரிந்தது. இப்போது அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. சொல்லி விட்டுப் போகலாம் என்றால் அவர்கள் இடையில் போய் நிற்க வேண்டும். சொல்லாமல் போய் விடலாம் என்றால் அதுவும் நன்றல்ல. என்ன செய்வது என்று யோசித்தவளை, அவளுக்குச் சம்பந்தமில்லாத விசயம் ஒன்று மண்டைக்குள் குடையத் தொடங்கியது.

அது வேறொன்றுமில்லை... பாலா ஏன் திருமணம் செய்ய மறுக்கிறான்? என்ன காரணம்? - என்று யோசிக்கும் போதே...

"மது!" என்ற ஜெகநாதனின் வார்த்தையில் மீண்டும் அவர்களை நோக்கினாள் கீர்த்தி.

"ஓ! இது சாரோட ஆபீஸோ! அதை மறந்து விட்டேன் நான். உங்களுக்கெல்லாம் வளருகிறவரைக்கும்தான் அப்பா அம்மாவெல்லாம். அதன் பிறகு நாங்கள் எல்லாம் கருவேப்பிலை மாதிரி. இப்போ என்னடா... மதுவைத் தவிர வேற யாரையும் மணக்க மாட்டாய். அவ்வளவுதானே. இனி உன் விஷயத்தில் ஒருபோதும் நான் தலையிட மாட்டேன். உன்னிடம் கெஞ்சிக் கெஞ்சி வெறுத்துப் போய் விட்டேன். என்னுடைய உண்மையான பாசத்தையே சந்தேகப்பட்டு, ஏதோ குற்றம் செய்தவன், குறுகுறுத்து வந்திருக்கிறாய் என்றெல்லாம் பேசுவதை என்னால் தாங்க முடியவில்லை பாலா! இனி நீயாய் என்று வந்து திருமணம் என்ற பேச்சை எடுக்கிறாயோ... அதுவரை நான் உன்னைத் தொந்தரவு செய்ய மாட்டேன்..." என்றவர், அதற்கு மேல் நில்லாமல் சிறிது தூரம் சென்றவர்,

"ஐ அம் ரியல்லி வெரி வெரி சாரி!" என்றவரைப் பார்த்து, என்ன செய்வது என்றறியாமல், அப்படியே சிலையாய் நின்றிருந்தான் பாலா.

"எதற்கு இந்த மன்னிப்பு என்று யோசிக்கிறாயா? நீ தொந்தரவு என்று நான் செய்ததை எல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறாயே... அந்தச் செயல்களுக்கெல்லாம்..." என்றவர், அதன் பிறகு ஒரு நிமிடம் கூட நிற்காமல் விருட்டென்று வெளியேறிச் சென்று விட்டார்.

இப்போது கீர்த்திக்கோ தர்மசங்கடமான நிலைமை.

அவனைப் பற்றிய உண்மை தனக்குத் தெரிந்ததைப் பற்றி நினைக்கும்போது அவன் மனம் என்ன பாடுபடும்... தான் முதலிலேயே கிளம்பியிருக்க வேண்டும், என்று நினைத்தபடி மெதுவாய்ப் பாலாவின் முன் நின்றாள்.

"சார், நான் கிளம்புகிறேன்!" என்றவளிடம் நிமிர்ந்து கூடப் பார்க்காமல்,

"சரி, கீர்த்தி!" என்றவுடன், அவளும் வேறு எதுவும் பேசாமல் ஒரு பத்தடி தூரம் சென்றிருப்பாள்.

அப்போது பாலா ஏதோ யோசித்தவனாய், "கீர்த்தி, ஒரு நிமிடம் இங்க வாங்க!" என்று அழைத்தான்.

ஒன்றும் புரியாமல் கீர்த்தியும் அவனை நோக்கி வந்தாள்.

"கீர்த்தி, இப்போ வந்தது எங்க அப்பா..." என்றவன், மேலும் ஏதோ சொல்ல வந்தவன் நின்றிருந்தபடியால்... அருந்ததியின் வருகையினைப் பார்க்க முடிந்தது.

அப்போதுதான் அவனது அம்மாவும் அங்கு வந்திருப்பது தெரிந்தது.

"அம்மா, நீங்க எப்போ வந்தீங்க? அப்பா சொல்லவே இல்லை!" என்றவனை அனல் பார்வை பார்த்தவள்,

"அதையெல்லாம் சொல்கிற நிலைமையில்தான் உன் அப்பா இருக்கிறார்..." என்றபடி அருகில் இருந்த கீர்த்தியின் மேல் பார்வையை ஓட்டினாள் அருந்ததி.

யாரோ ஒரு மூன்றாம் பெண்ணின் முன்னால், அதுவும் தன் மகனிடம் வேலை பார்க்கும் பெண் முன்னால் எதுவும் பேசக் கூடாது என்று முடிவு செய்தவள், "வா, பாலா. அப்பா மட்டும் தனியாய்க் கிளம்பிப் போகிறார்," என்று ஒற்றை வரியில் நிறுத்தினாள்.

தனது தாய் கீர்த்தி முன்னிலையில் அடக்கி வாசிக்கிறாள் என்று புரிந்த பாலா, இதற்கு மேலும் பிடிவாதம் கூடாது என்பதால், "ஃபைவ் மினிட்ஸ் மா..." என்று சிஸ்டமை ஆஃப் செய்யத் தொடங்கினான்.

கீர்த்தியும் சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

அவள் சென்றதும் அருந்ததி, "பாலா! 11 மணி ஆகிவிட்டது. அந்தப் பொண்ணு இப்போது கிளம்புகிறாள். லேட் நைட்டில் எப்படிப் போவாள் அவள்? என்ன வேலை என்றாலும் லேடி ஸ்டாஃப்ஸை எல்லாம் இரவு 7 மணிக்குள் அனுப்பி வைத்து விடு. ஏற்கெனவே என்ன பாவம் பண்ணினமோ... நாம இப்படி அமைதி இழந்து நிற்கிறோம். இதில் இந்தப் பாவம் வேறயா?" என்றவரிடம்,

"வாங்க, போகலாம்..." என்றபடி, செக்யூரிட்டியிடம் சொல்லி விட்டு, வெளியேறினான் பாலா.

"இல்லம்மா... இன்னைக்கு மட்டும் இப்படி ஆகிவிட்டது. அந்தப் பொண்ணு பேரு கீர்த்தனா. ரொம்ப நல்ல பெண். ரொம்ப ஸ்மார்ட். அவ டீம் லீடரோட மனைவிக்கு டெலிவரி டைம் என்பதால் அவருக்குப் பதிலாய் இருந்து, முடித்துக் கொடுத்துவிட்டுப் போகிறாள்..." என்று அருந்ததியிடம் சொல்லியபடி இருவருமாய்க் கீழே இறங்கி வந்தனர்.

அங்கே கீர்த்தியின் பைக் அவளிடம் மக்கர் பண்ணிக் கொண்டிருந்தது. "ச்சே..." என்றபடி பைக்கை உதைத்தவள், மீண்டும் தன் கால்களையே பிடித்தபடி முகத்தைச் சுழித்தவளைப் பார்த்த தாய், மகன் இருவருக்குமே சிரிப்பு வந்து விட்டது.

கொஞ்சம் வேகமாய் முன்னே சென்ற பாலா, கீர்த்தியின் பைக்கை ஸ்டார்ட் செய்து பார்த்தான். அவளது பைக் மெக்கானிக்கைப் பார்க்காமல் வர மாட்டேன் என்பது போல் அடம் செய்தது. அவன் அவளது ஸ்கூட்டியை ஆராய்ந்து கொண்டிருந்தபோதே அருந்ததி கீர்த்தியின் அருகில் வந்தாள்.

"நீ எந்த ஏரியாம்மா?" என்று விசாரித்தாள்.

"மைலாப்பூர் மேடம்!" என்றபோது, அவளையும் அறியாமல் கவலைக் கோடுகள் அவளது முகத்தில் தெரிந்தன.

"பாலா... இந்தப் பொண்ணை..." என்றவள், கீர்த்தியிடம் திரும்பி, "பேர் என்னம்மா?" என்று கீர்த்தியைப் பார்த்தாள்.

கீர்த்தி வாய் திறக்குமுன் பாலாவே தனது தாய்க்கு மீண்டும் நினைவுறுத்த...

"கீர்த்திம்மா..." என்றவன், அருந்ததி கூற வந்ததை என்ன என்று கேட்டான்.

"நாம் போற வழியில் கீர்த்தியை அவளது வீட்டில் இறக்கி விட்டுச் செல்வோம். மைலாப்பூர்தானே..." என்றபோதே,

"இல்லை. பரவாயில்லை மேடம். நா... நான் ஆட்டோ பிடித்துப் போய்க் கொள்கிறேன்," என்று மறுத்தாள் கீர்த்தி.

"இல்லம்மா... இப்பவே லேட் ஆகிவிட்டது. இனிமேல் தனியா ஆட்டோல்லாம் பிடித்தால் கஷ்டம். இவனைச் சொல்ல வேண்டும்..." என்றபடி பாலாவை முறைத்தவள், "ஏன் கீர்த்தி! உங்க சார் கூப்பிட்டால்தான் வருவாயா?" என்றவுடன்,

"அப்படியெல்லாம் இல்லை மேடம். எங்க வீடு மைலாப்பூரில் கொஞ்சம் உள்ளே இருக்கிறது..." என்றவுடன்,

பாலா, "பரவாயில்லை. வாங்க..." என்றபடி காரினை எடுக்கச் சென்றான்.

அந்தச் சூழ்நிலையில் மறுப்புச் சொல்வது அநாகரிகமாய்ப் பட, கீர்த்தியும் சம்மதமாய்த் தலையாட்டினாள்.

அதைப் பார்த்த அருந்ததி, "நான் சொல்லும்போது மறுத்தாய். பாலா சொன்னவுடனே தலையாட்டி விட்டாய் கீர்த்தி! நான் சொன்னது போல் அவன் சொன்னால்தான் கேட்பாயா?" என்று கிண்டல் செய்தவுடன், அவளையும் அறியாமல் அவளின் குறும்புத்தனம்,

"பின்ன இல்லையா மேடம்... முதலாளி சொல்வதைத்தானே கேட்க முடியும். இல்லையென்றால் நாளைக்குச் சீட்டைக் கிழித்து வெளியே போ என்று சொன்னால் யார் வந்து என்ன சொல்ல முடியும்? அதனால்தான்..." என்றபடி சிரித்தாள்.

அவள் பேசிச் சிரித்த அழகைப் பார்த்த அருந்ததிக்கு என்னவோ, இதே போல் தனக்கும் ஒரு மகள் இல்லையே என்று தோன்றியது. அருந்ததிக்கு மகள் இல்லையே என்ற கவலை எப்போதும் இருக்கும். எந்தப் பெண் குழந்தையைப் பார்த்தாலும் அவள் ஆசை ஆசையாய்க் கொஞ்சுவாள்.

ஏனோ குமரிப் பருவத்தில் இருந்த கீர்த்தியைப் பார்த்த அருந்ததிக்கு அவளின் அடி மனதின் ஆசை அப்படி நினைக்கச் செய்து விட்டது.

மூவரும் காரில் ஏறி அமர்ந்து சற்றுத் தூரம்வரை நிசப்தமாகவே வந்தனர். அந்த அமைதியை முதலில் கலைத்தது பாலாதான்.

"அம்மா... அப்பா என் மேல ரொம்பக் கோபத்தில் போயிருக்கிறார். என்ன சொல்லி அவரைச் சமாதானப் படுத்துவது என்றே தெரியவில்லை!" என்றவன், தாய் முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லாமல் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தவன், "அம்மா..." என்று அழுத்தினான்.

"நீ சொல்வது கேட்கிறது. வீட்டில் போய்ப் பேசிக் கொள்ளலாம்!" என்று கீர்த்தி இருந்த படியால் நாசூக்காய்ப் பேச்சினை மாற்றினாள் அருந்ததி.

"ஓ! கீர்த்திக்காக என்று யோசிக்கிறீர்களா! அதெல்லாம் ஒரு அரை மணி நேரத்திற்கு முன்னால் நம்ம குடும்பம் கவலைப்பட்டிருக்க வேண்டிய விசயம். நானும் அப்பாவும் பண்ணின வேலையில் அனேகமாய்க் கீர்த்தி ஓரளவுக்கு விசயத்தை ஊகித்திருக்க வேண்டும். அது மட்டுமில்லாமல் பயங்கர ஷார்ப் வேற கீர்த்தி! இப்போ கீர்த்திகிட்ட கேளுங்க. நம்ம குடும்பத்தில் என்ன நிலைமை என்று கரெக்டா சொல் வாங்க..." என்றபடி, "அப்படித்தானே கீர்த்தி?" என்றவனை,

இவன் கேலியாகப் பேசுகிறானா... இல்லை, சீரியஸாகப் பேசுகிறானா என்று தெரியாமல் முழித்தாள் கீர்த்தி.

அவள் முழிப்பதைப் பார்த்த அருந்ததி, "அப்படியா! சொல்லு பார்க்கலாம். அவன் இருக்கிறான் என்றெல்லாம் கவலைப்படாதே!" என்றதும்,

அவள் சிந்தைக்கு எட்டியிருந்த விசயங்களின்படி அவள் சற்றுத் திணறியபடி பேச ஆரம்பித்தாள்.

"உங்களையும் சாரையும் பார்த்தால் காதலை எதிர்ப்பவர்கள் மாதிரித் தெரியவில்லை. பாலா சார் ஆசைப்பட்ட பொண்ணையே அவருக்குத் திருமணம் செய்து கொடுக்கலாம். பாலா சாரும் தப்பான சாய்ஸைத் தேர்ந்தெடுக்க மாட்டார் என்பதும் தெரியும். ஸோ நான் பாலா சார் பக்கம்!" என்றவளிடம் திரும்பி,

"தேங்க்ஸ் கீர்த்தி! எனக்கு சப்போர்ட் பண்ணி ஒரு ஜீவன் பேசுதே. அந்த வகையில் எனக்கு சந்தோஷம்..." என்றபோதே,

கீர்த்தி, "சார் சார்... இந்த ஸ்டாப்தான். நான் இங்கேயே இறங்கிக் கொள்கிறேன், சார்!" என்றவளிடம் அருந்ததி,

"ஏன் கீர்த்தி, எங்களை வீட்டிற்கெல்லாம் கூப்பிட மாட்டாயா?" என்றவுடன்,

விழிகள் நிறைந்த சந்தோஷத்துடன், "சார், நேரா போய் செகண்ட் லெஃப்ட் போனால் வருகிற ஃபர்ஸ்ட் அபார்ட்மெண்ட் சார்!" என்று வழி சொன்னாள்.

அவள் சொன்னபடி ஓட்டியவன்... அவர்களது அபார்ட்மென்ட்டின் முன்னால் நிறுத்தினான்.

ஏற்கெனவே தன் வீட்டிற்குக் கால் செய்து கதவைத் திறந்திருக்கும்படி சொல்லி இருந்ததால்... மைதிலியும் ராகவனும் அவளை எதிர்பார்த்தபடி வாசலின் அருகிலேயே நின்றிருந்தார்கள்.

ஏற்கெனவே மைதிலிக்குக் கீர்த்தி தனியாக எப்படி வருவாளோ என்று ராகவைப் போய்க் கூட்டி வரச் சொல்லியிருந்தாள். ஆனால் அவள் கிளம்பி விட்டேன் என்று சொன்னதால், வேறு வழியின்றி பால்கனியில் இருந்து அபார்ட்மெண்ட் கேட்டையே பார்த்தவளுக்கு மகள் காரில் ஒரு பெண்மணியுடன் வந்து இறங்கியதைப் பார்த்தவள்... யாராய் இருக்கும் என்று, கணவனிடம் சொல்லியபடி கதவைத் திறந்து வைத்து மகளை எதிர்நோக்கியபடி நின்றிருந்தாள் மைதிலி.

"வாங்க மேடம்... வாங்க சார்!" என்றபடி மகள் கூட்டி வந்தவர்களைத் தெரியாவிட்டாலும் முகத்தில் புன்முறுவலுடன் வரவேற்ற மைதிலியும் ராகவும் ஹாலினுள் அமரச் செய்தனர்.

அதன் பிறகு அவர்களை அறிமுகம் செய்தாள் கீர்த்தி.

ராகவ் அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கும்போதே, அவர்களுக்குக் காபி தயார் செய்ய எழுந்து போனாள் மைதிலி. அவள் பின்னாலே கீர்த்தியும் உள்ளே செல்ல...

தாங்கள் கிளம்பப் போவதாகவும், எதுவும் செய்ய வேண்டாம் என்றும் மைதிலியிடம் கூற அருந்ததியும் உள்ளே சென்றாள்.

அங்கு மைதிலியின் பின்னால் கழுத்தைக் கட்டிக் கொண்டு தாயிடம் கிண்டல் செய்து கொண்டிருந்த கீர்த்தியைப் பார்த்தவள், சிரித்தபடி,

"என்ன கீர்த்தி... அம்மா செல்லமோ?" என்றவளைப் பார்த்து,

உதட்டைச் சுழித்தவள், "நீங்க வேற மேடம்! அந்தக் கொடுமையை ஏன் கேட்கிறீர்கள்! நான் யார் செல்லமும் கிடையாது. இந்த வீட்டில் தனி ஆள் நான். இப்பக்கூடப் பாருங்க. உங்க பையனைக் காணோம் என்று நீங்களும் சாரும் வந்தீர்கள். நான் ஒரு பொண்ணு. என்னைத் தேடி யாராவது வந்தார்களா...?" என்று அப்பாவியாய்ச் சொன்னவளைப் பார்த்த மைதிலி,

"அடிப் பாவி. வரவா... வரவா... என்று அவர் போனில் கேட்டபோது பெரிய பாரதியார் கண்ட புதுமைப் பெண் மாதிரிப் பேசி விட்டு இப்படிப் பேசுறியே... உன்னை..." என்று கன்னத்தில் திருகிய மைதிலியிடம்,

"வரவா... வரவா... என்று கேட்டால் அப்படித்தான் சொல்ல முடியும். வேற என்ன சொல்வாங்க?" என்றவளை முறைத்தபடி,

"உனக்கு அப்புறம் இருக்கு கச்சேரி. நீங்க வாங்க. இவ ஒரு அறுந்த வாலு. இதையெல்லாம் சமாளிக்கவே முடியாது. ஆனால் என்ன... வெளியே சமத்துன்னு பேர் வாங்கிடுவா!" என்றாள்.

"சரி சரி... என்னைப் பற்றிப் பாராட்டு மழையெல்லாம் போதும் அம்மா. மேடமும் நல்ல ஜோவியல் டைப் மா. நான் கூட முதலில் பயந்தேன். பாலா சார் மாதிரியேதான் அவங்க அம்மாவும் இருப்பார்கள் என்று... ஆனால் ஆப்போசிட்டா இருக்காங்க..." என்று அருந்ததியைப் பற்றி மைதிலியிடம் சொன்னாள்.

தன் மகள் அவ்வளவு சுலபமாய் யாரிடமும் கலகலக்க மாட்டாள். அவளே இப்படி என்கிறபோது அருந்ததியிடம் சற்றுச் சுலபமாக மைதிலியாலும் பேச முடிந்தது.

'காபி வேண்டாம்...' என்று சொல்லப் போன தாய் அங்கேயே செட்டில் ஆனதில் சற்று டென்ஷன் ஆன பாலா, அடிக்கடி கிச்சனைப் பார்த்தபடி ராகவுடன் பேசிக் கொண்டிருந்தான்.

பாலாவின் தேடலை உணர்ந்த ராகவ், "மைதி, சீக்கிரம் வா. அவங்க இனிமேல் பெசன்ட் நகருக்குப் போக வேண்டும். என்ன பண்ற உள்ளே?" என்று மைதிலியை அழைத்தார்.

அதன் பிறகு அவர்கள் சற்று நேரத்தில் விடைபெற்றபடி கீழே சென்றபோது, பாலா, கீர்த்தியைத் தனியே அழைத்து, "கிளம்புகிறேன் கீர்த்தி! தென்... தேங்க்ஸ். நீங்கள் கொடுத்த காபிக்கும் மற்றும்..." என்று நிறுத்தியவன், அவளைக் கூர்மையாகப் பார்த்தபடி, "நாளைக்கு அநேகமாக என்னைப் பற்றின ஹிஸ்டரிலாம் அலுவலகத்தில் பரப்பப் போவதற்கும்... நன்றி!" என்று வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதைப் போலச் சிரித்தபடி சொல்லி விட்டுக் கீழே இறங்கினான்.

காரில் ஏறியதும் அருந்ததியின் மேல் பாய்ந்தான்.

"இந்நேரம் வீட்டுக்குப் போய் இருக்கலாம். உங்களால் இப்போ பாருங்க, மணி என்னவென்று?" என்றவனிடம்,

"என்னவோ தெரியவில்லை பாலா! எனக்குக் கீர்த்தி மேல ஒரு பிரியம் வந்துடுச்சு. ஒரு மணி நேரம் கூட ஆகவில்லை. இப்படி ஒரு மகள் எனக்குக் கிடைக்க வில்லையே என்று எனக்கு ஏக்கமாய் இருக்கிறது. அவங்க ரெண்டு பேரும் எப்படிப் பேசிக் கொள்கிறார்கள் தெரியுமா! உனக் கெல்லாம் அது புரியுமா?" என்றவளிடம், முறைப்பை வீசியவன்... பின் சாலையினைப் பார்த்துத் தனது வீட்டை நோக்கி விரைந்தான்.

பாலா சொல்லி விட்டுச் சென்ற சில கணம் சிலையாய் நின்றவள், தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு கட்டிலில் விழுந்தபடி,

'என்னை... என்ன என்று நினைத்துக் கொண் டிருக்கிறான். இவர் ஹிஸ்டரி பெரிய சலீம், அனார்கலி ஹிஸ்டரி. இதை வேறு நான் பரப்பப் போகிறேனா? அதிகமாய்ப் போனால்... கவியிடம் சொல்லியிருப்பேன். இனி அவளிடமும் கூற மாட்டேன். இவனைப் பற்றி யாரிடமும் வாயினைத் திறக்கக் கூடாது. அதன் பிறகாவது இந்தக் கீர்த்தியைப் பற்றிப் புரிந்து கொள்ளட்டும்...' என்று தனக்குத் தானே தீர்மானித்தவள் கண்களை மூடினாள்.

10

கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆகியிருந்தது. கீர்த்தியின் வீட்டில் வழக்கம் போல் கலகலப்பும், பாலாவின் வீட்டில் அமைதியும் நிலவியதே தவிர, வேறு எந்த ஒரு மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

பாலாவிடம் அன்றைய சம்பவத்திற்குப் பிறகு அவனிடம் ஒரு வார்த்தை கூட ஜெகநாதன் பேசவில்லை. பாலாவும் அருந்ததியும் எவ்வளவோ முயன்றும் அவர் தன் பிடிவாதத்தை விடவில்லை. பாலாவும் அவராகப் பேசும்வரை விட்டுப் பிடிப்போம் என்று விட்டு விட்டான்.

கீர்த்தி வீட்டிலோ கீர்த்தியிடம் விநோத்தைப் பற்றியோ, அவனது ஜாதகம் பற்றியோ, அங்கு தற்போது உள்ள நிலைமையோ தெரிவிக்கப்படவில்லை.

அன்று வழக்கம் போல் தனது கம்பெனிக்குக் கிளம்பிக் கொண்டிருந்த ஜெகநாதனுக்கு ஏனோ அவரது உடல் நிலை நார்மலாய் இல்லாதது போல் இருந்தது. இருப்பினும் எப்போதும் எடுத்துக் கொள்ளும் மாத்திரை களைப் போட்டபடி, அருந்ததியிடம் எதுவும் கூறாமல்

அலுவலகத்திற்குக் கிளம்பினார். ஆனால், அருந்ததியோ அவரது முக வாட்டத்தைப் படித்தவளாய்,

"என்னங்க, முகமெல்லாம் வேர்த்திருக்கு. என்ன பண்ணுது?" என்று கேட்டவளிடம்,

"இங்க எல்லாத்தையும் எல்லாரிடமும் சொல்ல வேண்டும் என்ற அவசியம் கிடையாது. அவரவர் இஷ்டத்திற்கு வாழுகிற வீட்டில் யாருக்கு என்ன பண்ணினால் என்ன?" என்றபடி, பாதிச் சாப்பாட்டில் எழுந்தவர்... அருந்ததி பதறியபடி தடுத்தபோது, அவளைப் பார்த்து முறைத்து விட்டு, அருகில் அமர்ந்திருந்த மகனை அர்த்தப் பார்வை பார்த்து விட்டு எழுந்தார்.

அவரின் பின்னாலே சென்ற தன் அம்மாவைப் பார்த்த பாலா ஒன்றும் பேசாமல் வாசலுக்கு வந்தவன் குமாரை அழைத்தான். அவன்தான் ஜெகநாதனுக்கு நிழல் போல... அவருக்கு முதல் தடவை ஹார்ட் அட்டாக் ஏற்பட்டதே, அதன் பிறகு வீட்டில் இல்லாமல் வெளியே செல்லும்போது தனியே செல்லாமல் இருக்க... கார் ஓட்டும் பணியோடு அவருடன் எந்நேரமும் இருக்கும் பணியும் குமாருக்கு. அவனது மனைவியும் இங்கு அருந்ததிக்குத் துணையாக இருந்தாள். அவர்களது தோட்டத்து வீட்டிலேயே அவர்களும் தங்கி யிருந்தபடியால் எந்தப் பிரச்சனையுமில்லை.

குமாரின் மகள் சிந்து அவள் பாட்டி வீட்டில் இருந்து படிக்கிறாள். அவளையும் இங்கு கூட்டி வந்து இங்குள்ள பள்ளியில் படிக்கப் பாலாவிடம் சொல்லி வைத்திருக்கிறான். பத்தாம் வகுப்பினை இங்கு தொடரும்படி பாலாவும் இங்கு ஒரு நல்ல பள்ளியில் சொல்லி வைத்திருக்கிறான்.

இந்த விடுமுறையிலிருந்து தாய் தந்தையுடன் தான் தங்கப் போகும் அந்த நாளை வெகு ஆவலுடன் எதிர்பார்த்தாள் சிந்து. ஆனால், அங்கு தனக்கு ஒரு அன்பான, அழகான சகோதரி கிடைக்கப் போவதையும், அவளது மிகப் பெரிய இழப்பிற்கெல்லாம் ஒரு ஆறுதலாயும்,

கேள்விக் குறியாகிப் போன அவளது வாழ்வில் பிடித்தமாகவும் சிந்து அமையப் போவதை அந்தச் சின்ன உள்ளமும் உணர்ந்திருக்காது. அவளுக்குக் கிடைக்கப் போகின்ற அந்த அன்பான, அழகான சகோதரியின் உள்ளமும் உணர்ந் திருக்காது.

குமாரை அழைத்த பாலா, அப்பாவைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு, "அவர் சற்றுச் சரியில்லாதது போல் தோன்றுகிறது. நான் டாக்டர் முரளியிடம் சொல்லியிருக்கிறேன். ஈவினிங் செக்கப் பண்ண வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். சீக்கிரம் அழைத்து வந்து விடுங்கள். நான் சொன்னதாகச் சொல்லாதீர்கள். அம்மா சொன்னதாகச் சொல்லுங்கள்..." என்று அழுத்திச் சொல்லி விட்டு அலுவலகத்திற்குப் புறப்பட்டான்.

கவி இன்னும் ஒரு வாரத்தில் ஊருக்குச் செல்ல இருப்பதால் அதற்கான ஃபார்மலான விசயங்களை முடிக்க, கடந்த ஒரு வாரமாக அழைத்ததால்... கீர்த்தியுடன் எங்கும் தனியே செல்ல முடியவில்லை. கீர்த்தியுடன் அலுவலகத்திலும் பேச நேரம் கிடைக்கவில்லை. அப்படியே நேரம் இருந்தாலும் அந்தக் கார்த்தியும் உடன் இருப்பதால் சற்று எரிச்சல் அடைந்தவள்... இன்று கீர்த்தியுடன் தனியே மதிய உணவுக்குச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்திருந்தாள்.

அதே போல் கீர்த்திக்கும் சொல்லியும் வைத்தாள். கீர்த்தியும் கவியும் சொல்லியபடி வெளியே கிளம்பப் போகும் வேளையில் நந்தி போல் கார்த்தியும் அங்கு வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்தவுடன் முகம் சுருக்கிய கவி, கீர்த்தியிடம், "கீர்த்தி, சீக்கிரம். லேட்டாகி விட்டது!" என்றவளைப் பார்த்துச் சிரித்த கார்த்தி,

"கவி, எங்களுக்கெல்லாம் ட்ரீட் கிடையாதா? உங்க ஃப்ரெண்ட்டுக்கு மட்டும்தானா?" என்றவனிடம்,

"இங்க ட்ரீட்னு யாரும் டமாரம் அடித்தோமா கார்த்தி! மதிய லஞ்சுக்கு வெளியே போகிறோம். அவ்வளவுதான்!"

என்று சட்டென்று சொல்லியவள், "வா, கீர்த்தி... போகலாம்..." என்று கீர்த்தியின் கையைப் பிடித்து இழுத்தாள்.

"கார்த்தி! நீங்களும் வாங்களேன்..." என்று கீர்த்தி கேட்டவுடன், கார்த்தியும் உடனே தலையாட்டி விட்டான்.

அவ்வளவுதான். கவிக்குக் கீர்த்தி மேல் வந்த கோபத்திற்கு அளவே இல்லை. என்ன செய்வது என்று தெரியாமல் உம்மென்று முகத்தை வைத்தபடி அவர்களுடன் வெளியேறினாள்.

அலுவலகத்திலிருந்து வந்ததிலிருந்து மனநிம்மதியே இல்லை பாலாவிற்கு. காலையில் பார்த்த தந்தையின் முகமே நெருடலாய் இருந்தது. அதோடு தனக்கு வந்த மெயில்களைப் பார்வையிட்டவன், கீர்த்தி பொறுப்பேற்றிற்கும் ப்ராஜெக்ட்டிற்கு சிஸ்டம் ரிகொயர்மென்ட்ஸ் சேகரிக்க யு.எஸ். அனுப்ப வேண்டும். யாரை அவர்களது டீமிலிருந்து அனுப்பலாம் என்று யோசித்தபடி அமர்ந்திருந்தவனுக்குக் கார்த்தியின் நினைவு வந்தது.

கார்த்திக்கைப் பற்றிக் கீர்த்தியிடம் விசாரிக்க வேண்டும் என்று நினைத்தவனுக்கு... தன் தந்தையின் களைத்துப் போன முகம் மீண்டும் ஞாபகம் வந்து... அவரைப் பற்றி விசாரிக்க குமாரிடம் கால் பண்ணலாம் என்று மொபைலை எடுக்கப் போனவன்... அதற்கு முன்னதாகவே அது அழைக்க... யாரென்று பார்த்த போது குமார் அழைப்பு அது. படபடத்த நெஞ்சத்தை இழுத்துப் பிடித்தபடி அட்டென்ட் செய்தவன், எதுவும் இருக்காது... இருக்கக் கூடாது என்று நினைத்தபடி,

சாதாரணக் குரலில், "சொல்லுங்க குமார்!" என்றான்.

அவன் முடிக்கும் முன்னரே குமார், "பாலா தம்பி... சாருக்குத் திடீர்னு முடியலை. நெஞ்சு வலிக்குதுன்னு சாஞ்சுட்டார். உடனே நீங்க சொல்லியிருந்த மாத்திரையைக் கொடுத்துட்டு முரளி டாக்டர் கிட்ட கூட்டிக் கொண்டு போய்க்

கொண்டிருக்கிறேன். நான் அருந்ததி அம்மாகிட்ட இன்னும் சொல்லவில்லை. நீங்க உடனே வாங்க சார்!" என்று கவலையோடு சொன்னவனிடம்,

"அம்மாகிட்ட நான் பேசிக் கொள்கிறேன் குமார்! பார்த்து பத்திரமாகக் கூட்டிட்டுப் போங்க..." என்றபடி, வேக வேகமாக அறையினை விட்டு வெளியேறினான் பாலா.

லிஃப்ட்டிற்காகக் காத்துக் கொண்டிருந்தனர் கீர்த்தி, கவி மற்றும் கார்த்திக்.

கவியின் முகத்திலோ எள்ளைப் போட்டால் வெடித்து விடும். அந்தளவுக்கு நின்றிருந்தாள். கீர்த்திக்கோ அவள் ஏன் திடீரென்று உம்மென்று இருக்கிறாள் என்று புரியவில்லை. கார்த்தியிடம் ஏதோ பேசியபடி நின்றவளைக் கவி கூப்பிட்டுப் பாலாவைக் காட்டினாள்.

வேகவேகமாக வந்தவன், "எப்போ வரும்?" என்று கேட்டதும், கவி வேகமாக, "தெரியவில்லை சார்! கொஞ்சம் லேட் ஆகும் போல் தெரிகிறது," என்று கூறியதுதான் தாமதம்... கவியிடம், "ஓ.கே. தேங்க்ஸ்!" என்றபடி சற்றும் நிற்காமல் படிக்கட்டில் இறங்க ஆரம்பித்தான்.

ஏன் இவ்வளவு அவசரம் என்று மூவரும் யோசித்த போதும், ஒன்றும் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்து முழித்ததுதான் மிச்சம்.

ஏன் இவ்வளவு அவசரமாகப் போகிறார் என்று யோசித்த கீர்த்திக்கு மட்டும் ஒருவேளை மதுவின் பிரச்சனையோ... என்னவாக இருக்கும் என்று யோசித்தபடி கவியைப் பார்த்தவள்... அவளும் யோசித்தபடி நின்று கொண்டிருந்தாள்.

இதற்கிடையே கார்த்தியும் சேர்ந்து வந்த காரணத்தால் கவி என்ன நினைத்தாளோ தெரியவில்லை.

"கீர்த்தி, நான் வரவில்லை. நீயும் கார்த்திக்கும் போய் வாருங்கள்..." என்றவளைக் கீர்த்தி முறைத்த முறைப்பில் தானாக லிஃப்டினுள் நுழைந்தாள்.

கார்த்திக் முன்னே செல்ல, கீர்த்தியும் கவியும் பின்னே வந்தனர்.

கீர்த்தி, கவியிடம், "என்ன கவி, ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்? என்ன ஆச்சு உனக்கு?" என்றவளிடம்,

"கார்த்தி வந்ததுதான் பிரச்சனை. போதுமா? எப்போ பாரு, உன் கூடவே இருக்கார். நான் தனியா உன்னோடு பேசலாமென்று வரும்போதெல்லாம் நந்தி மாதிரி... எரிச்சலாய் வருகிறது!" என்று சிடுசிடுத்தவளிடம்,

"ஏய் கவி... இது என்ன புது ப்ராப்ளம்! நீயும் இப்போ பெர்சனலா பிஸி. நானும் புது ப்ராஜெக்ட்டில் கொஞ்சம் பிஸி. பாவம், இதில் கார்த்தியை ஏன் இழுக்கிறாய்?" என்று கார்த்திக்குப் பரிந்து பேசினாள் கீர்த்தி.

இதற்கு மேல் இவளிடம் பேசிப் பிரயோஜனமில்லை என்றபடி கவி பேச்சை மாற்றினாள்.

"கீர்த்தி, பாலா சார் ஏன் இவ்ளோ பதட்டத்துடன் கீழே இறங்கினார்? அவரோட முகமெல்லாம் கூட வெளிறி யிருந்தது... பார்த்தாயா? ஏதாவது அவருக்கு ப்ராப்ளமோ? அதை நினைத்துக் கூட எனக்குக் கவலையாக இருக்கிறதுப்பா!" என்றபடி, கீர்த்தி கண்டிப்பாக இப்படிச் சொன்னதற்கு ஏதாவது ஓட்டுவாள் என்று எதிர்பார்த்தபடி அவளைப் பார்த்தாள்.

ஆனால், கீர்த்தியோ அன்று பாலா அவளைத் தன் விசயத்தை எல்லோரிடமும் சொல்லி விடுவாள் என்று நினைத்து அவன் சொன்னதை நினைத்தவள் சட்டென அவனைப் பற்றிய பேச்சினைத் தவிர்க்க நினைத்தாள். அது மட்டுமில்லாமல், யாரோ ஒரு பெண்ணை மனதார நேசிப்பவனைக் கவியுடன் சேர்த்து வைத்துப் பேசக் கூட வாய் வரவில்லை. முன்னே அவனைப் பற்றித் தெரிந்திராததால் பேசிக் கொண்டிருந்தாள்.

"கவி, யார் எப்படிப் போனால் நமக்கு என்ன? இதே கார்த்திக் என்றால் நாமும் பதறிப் போய் என்ன ஏது என்று

கேட்க முடியும்! பாலா சார் கிட்ட போய் என்ன என்று கேட்க முடியுமா? தேவை இல்லாததுக்கெல்லாம் கவலைப்பட்டு நேரத்தையும், மனதையும் வீணாக்காதே!" என்றவளைப் புரியாமல் பார்த்தவள்,

"உனக்கு என்ன ஆச்சு? என்னென்னமோ பேசுகிறாய். நீ இப்போவெல்லாம் சரியில்லை. எல்லாம் கூட இருக்கும் சகவாசம்!" என்று கார்த்திக்கை நினைத்துக் கொண்டு பேசினாள்.

"சரி... சரி. அதெல்லாம் விடு. ஆமா, அங்க போய்த் தான் தம்பிக்கு ஸ்கூல் பார்க்க வேண்டுமா, இல்லை... அப்பா ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறாரா?" என்ற கவியின் குடும்பத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தபடி ஹோட்டலை நோக்கிச் சென்றனர்.

சூர்யா ஹாஸ்பிட்டலின் அவசர சிகிச்சைப் பிரிவில் பாலாவும் அருந்ததியும் பதட்டத்தின் உச்சத்தில் இருந்தனர். இது அவருக்கு இரண்டாவது முறை. என்ன செய்வது என்று தெரியாமல், தன் தாய்க்கு ஆறுதல் கூறவும் முடியாமல், இயலாமையின் பிடியில் இருந்தான் பாலா. கிட்டத்தட்ட அவர்களது பொறுமையைச் சோதித்த பின் ஒரு மணி நேரம் கழித்து மருத்துவர் வந்தார்.

வழக்கம் போல் நோயாளியைத் தொந்தரவு செய்யாமல் பார்த்து விட்டு வாருங்கள் என்ற பல்லவியைத் தொடர்ந்து, பாலாவையும் அருந்ததியையும் தனது அறைக்கு வரச் சொல்லி விட்டு அகன்றார்.

தாயும் மகனுமாய் உள்ளே நுழைந்தவர்கள் அங்கு நாராய்க் கிடந்த ஜெகநாதனைப் பார்த்தவுடன் அவர்களிருவர் மனமும் உடைந்தே விட்டது. அவரது அருகில் அமர்ந்த அருந்ததிக்குக் கண்ணீர் பெருக... தனது கணவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். மெதுவாய்க் கண்களைத் திறந்த ஜெகநாதன் அருந்ததியைப் பார்த்து லேசாகப் புன்னகை மட்டும் புரிந்தார். பிறகு திக்கித் திணறிப் பேச ஆரம்பித்தார்.

"என்ன, அருந்ததி! நான் பிழைத்து விட்டேன் என்று சந்தோஷப்படுகிறாயா...? மிகவும் ஆனந்தப்படாதே. அந்த எமன் எனதருகில் என்றோ வந்து விட்டான். நானும் கவலைப்படவில்லை. இங்கு தினம் தினம் சிலரைப் பார்த்துப் பார்த்து வேதனைப்பட்டுச் செத்துப் பிழைப்பதை விடப் போவதே மேல். இப்போது கூட நான் புண்ணியம் என்று ஒன்று செய்திருந்தால் போயிருந்திருப்பேன். அதுதான் இல்லை என்று ஆகிவிட்டதே!" என்றவரின் வாயினைக் கைகளால் பொத்தியவள் கண்களில் கண்ணீர் மல்க,

"என்னங்க... நீங்க. நான் எந்த ஜென்மத்தில் செய்த புண்ணியமோ மீண்டும் உங்களைப் பார்த்திருக்கிறேன் என்று இருக்கிறேன். நீங்கள் ஏன் இப்படி...?" என்றவளுக்குப் பேச முடியாமல் அடைத்தது.

அவர் சொன்ன வார்த்தையில், பாலா, அதிர்ச்சியிலும் கவலையிலும் விக்கித்து நின்றபடி, மெதுவாய், "அப்பா!" என்றான்.

ஆனால், அவன் குரல் கேட்டும் அவனைச் சிறிதும் லட்சியம் செய்யாமல்... "அருந்ததி, எனக்குக் களைப்பாக இருக்கிறது. நான் சிறிது நேரம் ஓய்வு எடுக்கிறேன்," என்றபடி கண்களை மெல்ல மூடினார்.

அவர் பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லைதான். ஆனால், பார்க்கக்கூட அவர் விரும்பவில்லை என்று நினைத்தபோது, கண்களின் ஓரத்தில் நீர் கசிந்தது.

அதன் பிறகு டாக்டர் வரச் சொன்னதால் அவரது அறைக்குச் சென்றனர்.

"அங்கிள், அப்பாவுக்கு இப்போ ஒன்றும் பிரச்சனை இல்லையே?" என்று ஆரம்பித்தான் பாலா.

"அப்படிச் சொல்ல எனக்கும் ஆசைதான் பாலா. ஆனால், ஜெகனின் உடல்நிலை அப்படிச் சொல்ல வில்லையே! உடனடியாக அவருக்கு சர்ஜரி பண்ண

வேண்டும். கொஞ்சம் காலம் தாழ்த்தினாலும் சர்ஜரி செய்தும் பிரயோஜனமில்லை. ஒரு மாதத்திற்குள் அவரது உடல் நிலையினைத் தேற்றியாக வேண்டும்..." என்றவர் தொடர்ந்து, "பாலா, அவனுக்குக் கவலை என்றால் உன்னைப் பற்றியதுதான். உன் பிடிவாதத்தினைக் கொஞ்சம் விட்டால் தான் என்ன பாலா! நீ மட்டும் திருமணம் செய்து கொள்கிறேன் என்று அவனிடம் சொல்லிப் பார். இப்போதே எழுந்து ஆடத் தொடங்கி விடுவான்.

"என்ன பாலா... ஒண்ணும் பதிலைக் காணவில்லை..." என்றவரைப் பார்த்துச் சங்கடமாய்ப் புன்னகைத்தவன்,

"சர்ஜரி எப்போ பண்ணலாம்?" என்று கேட்டான்.

"உடனே பண்ண முடியாது. ஒரு 15 நாட்களுக்குள் அவரது உடல் நிலையினை பைபாஸ் சர்ஜரியைத் தாங்கக்கூடிய அளவுக்குத் தேற்ற வேண்டும். அதற்கு மருந்து மாத்திரைகள் மட்டுமல்ல... உடன் இருப்பவர்களின் உதவியும் தேவை. என்ன பாலா, புரிகிறது அல்லவா?" என்றபடி அருந்ததியிடம் சற்று நேரம் ஆறுதலாகப் பேசிக் கொண்டிருந்தார் டாக்டர் முரளி.

பாலாவோ, தனது அப்பாவின் கவலைக்குக் காரணமான தனது திருமணம் பற்றி என்ன முடிவு செய்வது என்று தெரியாமல், ஆனால், முடிவெடுக்க வேண்டிய நிர்பந்தத்தில் மாட்டிக் கொண்ட நிலைமையினை நினைத்தவனுக்கு மதுவைத் தவிர வேறு ஒரு பெண்ணை நினைக்கும் போதே தலை சுற்றியது.

இரண்டு நாட்களாய்ப் பாலா அலுவலகத்திற்கு வரவில்லை. கவி வழக்கம் போல் பாலா புராணம் பாட... கீர்த்தியோ வழக்கம் போல் அவளைக் கிண்டல் செய்யாமல் அவளை வேறு பேச்சிற்கு மாற்றுவதை வழக்கமாக்கிக் கொண்டாள். பாலாவின் தந்தைக்கு உடல்நிலை சரியில்லை. அதனால்தான் வரவில்லை என்று அலுவலகத்திலும் தெரியப் படுத்தப்பட்டிருந்தது.

ஜெகநாதன் ஐ.சி.யூ.விலிருந்து மாற்றப்பட்டிருந்தார். இப்போது நார்மலாகவும் ஆகியிருந்தார். ஆனால் இதுவரை பாலாவிடம் பேசவில்லை. ஏன்... அவன் பக்கம் திரும்பக் கூட இல்லை. ஜெகநாதன் அவனைத் திட்டியபோது கூட அவன் இவ்வளவு வலியினை உணர்ந்ததில்லை. ஹாஸ்பிட்டலில் ஏதோ நடமாடிக் கொண்டிருந்தான் பாலா.

அருந்ததிக்கோ அதை விடக் கொடுமையான நிலைமை. கணவனோ உடலால் தள்ர்ந்திருக்க... மகனோ என்ன முடிவெடுக்கலாம் என்று யோசித்து யோசித்து மனதளவில் தளர்ந்திருந்தான்.

அன்றுதான் ஜெகநாதனிடம் அவருக்கு சர்ஜரி செய்வதைப் பற்றிச் சொல்லத் தீர்மானித்திருந்தனர். முரளியும் வந்து சேர்ந்திருந்தார். சாதாரணமாய்ப் பேசியபடி சில நிமிடங்களைக் கழித்தவர், மெதுவாய் சர்ஜரி பற்றியும், அதற்குக் கடைப்பிடிக்க வேண்டியவற்றையும் சொல்லி விட்டுத் தன் நண்பனின் முகத்தைப் பார்த்தார்.

ஆனால், அவரோ எந்தச் சலனமும் இல்லாமல், "முரளி! எனக்கு எந்த ஒரு ஆபரேசனும் வேண்டாம். அதெல்லாம் உயிர் வாழ வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு... எனக்கு அப்படி ஒரு ஆசை துளியும் இல்லை. தானாக மரணம் வரும்போது வரவேற்க வேண்டும். இனி வாழ்ந்து எதைப் பார்க்கப் போகிறேன்...?" என்றபடி முகத்தினைத் திருப்பிக் கொண்டார்.

"டேய், பைத்தியம் மாதிரிப் பேசாதே. இப்போ உனக்கு என்ன ப்ராப்ளம்? உனக்காக ஒருத்தி இருக்காளே... அருந்ததி பற்றி யோசிக்க மாட்டாயா?" என்று கேட்கும்போதே அருந்ததி அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் வெளியேறி விட்டாள்.

"உன் பையன் பிடிவாதம் பிடிக்கிறான் என்று சொல்கிறாயே... நீ மட்டும் என்னவாம்? சொல்லப் போனால் உன் பிடிவாதம்தான் அவனுக்கும் வந்திருக்கிறது போல...

அவன் உன் விருப்பப்படி நடப்பான். நீ ஆபரேஷனுக்கு ஒத்துக் கொள்!" என்றவரிடம்,

"இல்லை முரளி, நான் யாரையும் கம்பல் பண்ணவோ, இல்ல ப்ளாக்மெயில் பண்ணவோ விரும்பவில்லை. அவரவர் விருப்பம். அதற்கும் என் சர்ஜரிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. எனக்குப் பிடிக்கவில்லை. இதற்கு மேல் கேட்டு என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்!" என்று தீர்மானமாய்க் கூறிவிட்டார்.

"அப்பா!" என்று அழைத்தவனைப் பார்க்கப் பிடிக்காமல்,

"முரளி, எனக்குப் பேச முடியவில்லை. பிடிக்கவும் இல்லை. எனக்கு ஏதாவது தூக்கத்திற்கு இன்ஜெக்ஷன் போட்டு விட முடியுமா?" என்றதும், தானாகவே வெளியேறி வந்தவன் தாயின் அருகில் அமர்ந்தான்.

தாயின் சிவந்திருந்த கண்களைப் பார்த்தவன்... "அம்மா, அப்பாவுக்கு ஆபரேசன் பண்ணினால் ஒண்ணும் ஆகாதும்மா. நீங்க கவலைப்படாதீர்கள்!" என்றவனைக் கூர்ந்து நோக்கியவள்,

"பண்ணினால்தானே பாலா!" என்றபடி, வேறு புறம் திரும்பினாள்.

"அம்மா, நீங்க சொன்னால் அப்பா கேட்பார்கள். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. தயவு செய்து அம்மா..." என்று கெஞ்சியவனிடம்,

"அதெல்லாம் ஏதோ பயத்தினாலோ... இல்ல, பணத்தினாலோ பிடிவாதம் பிடிப்பவர்களை மாற்றலாம். உங்க அப்பா பண்ணக் கூடாது என்று முடிவெடுத்து விட்டார். நான் சொல்லி இனிக் கேட்கப் போவதில்லை," என்றாள்.

"என்னம்மா... நீங்களே இப்படிப் பேசினால் எப்படி? நாம் சொல்வதில்தான் இருக்கிறது..." என்றவனிடம்,

"உன்னிடம் கூடத்தான் நாங்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். கேட்டாயா! உனக்கு ஒன்று, அவருக்கு

ஒன்றா...? ஆளாளுக்கு என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். நீ எங்கோ இருக்கும் மதுவுக்காக எங்களைக் கஷ்டத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறாய். அவரோ மகனுக்காகக் கட்டிய மனைவியைக் கூட நினைக்காமல், உன்னுடைய எதிர்காலத்தினைப் பற்றிய நிராசையில் பிடிவாதம் பிடிக்கிறார். ஆக மொத்தத்தில், என்னைப் பற்றி ஒருவரும் இங்கு நினைக்கவில்லை. அவரவருக்கு அவரவர் நினைத்தது நடக்க வேண்டும். அவ்வளவுதான். அவராவது உன் நலத்துக்காக வருத்திக் கொள்கிறார். ஆனால், நீ... சரி, இனி என்ன சொல்லி என்ன ஆகப் போகிறது? அவரவர் விதிப்படிதான் நடக்கும்..." என்று சொல்லியபடி மகனைப் பார்த்தாள்.

அவனுக்கும் கண்கள் சிவந்திருந்தன. அவளால்தான் என்ன சொல்ல முடியும்? மகன் கொஞ்சம் பிடிவாதத்தினை விட்டு வந்தால் எல்லோருக்கும் நல்லதுதான். ஆனால் இவர்களுக்காகத் திருமணம் செய்து விட்டுப் பின் அவன் துன்பப்படுவதைப் பார்த்தாலும் துக்கம்தான். கணவனோ அதற்கும் மேல்... அந்தக் கடவுளின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு நடப்பதை எல்லாம் பார்க்க வேண்டியதுதான் என்றிருக்கிறாள்.

அவள் பேசி விட்டுப் போன பிறகு பாலா சற்று நேரம் சிந்தித்தான். இனியும் என்னாக வேண்டும்? அவன் வாழ்க்கை பாழானது பாழானதுதான். மீதி இருக்கும் காலத்திற்கு அவன் பெற்றோருக்காக வாழ வேண்டியதுதான். ஆனால் மது நாளை வந்து, 'ஏன் செய்தாய்?' என்று கேட்டால், ஐயோ... என்று தலையில் கை வைத்து விட்டான். கிட்டத்தட்ட அவனுக்குப் பைத்தியமே பிடித்து விடும் போல் இருந்தது.

அப்பா ஆபரேஷனுக்கு ஒத்துக் கொள்ள வேண்டுமென்றால் அவன் திருமணம் செய்ய வேண்டும். அவனுக்குத் திருமணம் என்று ஒன்று என்றால் அது மதுவுடன்தான். மதுவும் இல்லை இப்போது. என்ன செய்யலாம் என்று

யோசித்தவனுக்கு, இந்தச் சினிமாக்களில் வருவது போல் பொய்யாகத் திருமணம் செய்து கொள்வோமா! ஆனால், யார் ஒத்துக் கொள்வார்கள் என்று யோசிக்கும் போதே பணத்தை வீசி எறிந்தால் எத்தனையோ பேர் வருவார்கள் என்று உள் மனசு எடுத்துக் காட்டியது. ஆனாலும் பணத்தை மட்டும் குறியாய் நினைப்பவர்கள் நாளை நிரந்தரமாய் அவனது செல்வத்தை நாட நினைப்பார்கள் என்றெல்லாம் யோசித்தவனுக்கு மனதில் திடீரென ஓர் எண்ணம் உதயமாகியது.

ஏன் சௌந்தர்யாவினையே திருமணம் செய்யக் கூடாது? அவளையே திருமணம் செய்து விட்டுப் பின் ஒரு வருடத்தில் அவளுடன் மனம் ஒத்துப் போக முடியவில்லை என்று விவாகரத்து பண்ணி விட்டால் என்ன...?

இப்போதை பிரச்சனை அப்பா அவரது ஆபரேஷனுக்குச் சம்மதிக்க வேண்டும். அவ்வளவுதான். சௌந்தர்யாவும் பெரிய உத்தமி ஒன்றும் இல்லை. அவளை மாதிரி ஒரு நச்சுப் பாம்புக்கெல்லாம் இதுவே அதிகம்.

மேலும் ஒரு நல்ல பெண்ணின் வாழ்க்கையினை வீணாக்கி விட்டோமே என்ற உறுத்தலும் இருக்காது. மதுவிடம் நடந்ததைச் சொன்னால் கண்டிப்பாகப் புரிந்து கொள்வாள்... என்றெல்லாம் ஒருவாறாய் யோசித்தவன் ஒரு பெருமூச்சினை இழுத்தபடி, தன் திட்டத்தைச் செயலாற்றத் தொடங்கினான். ஆனால், விதி சௌந்தர்யாவின் இடத்தில் கீர்த்தியை இழுத்து வந்து விழ வைத்தது.

தேவதை போன்ற மது இருக்க வேண்டிய இடத்தில் சௌந்தர்யா போன்ற பெண்ணா என்று பாலா நொந்த வேளையில்... இன்னொரு தேவதை மனம் நொந்து பாலாவின் மனைவியாக ஆகப் போவதினைப் பாலாவும் எதிர்பார்க்கவில்லைதான். கீர்த்தி என்னும் அழகான பூவைத் தனது சுயநலத்துக்காக வாட வைக்கப் போகிறோம் என்பதை அப்போது நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

நேராகத் தந்தையின் அறைக்குப் போனவன் தனது முடிவினைச் சொன்னான். முதலில் நம்பாமல் மறுத்தவர், தனக்காக யாரும் மனது மாற வேண்டாம் என்று பிடிவாதம் பிடித்தவர், ஒரு கட்டத்தில் பாலாவை நம்பினார். அதன் பிறகு பாலா தானே சௌந்தர்யாவிடம் இன்னும் ஒரு வாரத்தில் பேசிக் கூட்டி வருவதாக வாக்களித்தான்.

அருந்ததிக்கு மட்டும் எங்கோ உறுத்த... அவனிடம் தனியாக விசாரித்தாள். ஆனால், நடிப்பது என்று உறுதியாகி விட்டது. இனி யாரும் கண்டுபிடிக்கக் கூடாது என்று உணர்ந்தவன், அருந்ததியிடமும் தான் மதுவை மறக்க முயற்சி செய்கிறேன், இனி யாரும் இது பற்றிப் பேச வேண்டாம் என்று அவளின் குறுக்கு விசாரணைக்கும் முற்றுப் புள்ளி வைத்தான்.

11

பாலா அன்று சற்று உற்சாகமாகக் காணப்பட்டான். அவனது அப்பாவிற்கும் அவனுக்குமான பிரச்சனைகள் சரியானதாலா அல்லது தற்காலிகமாக ஒரு முடிவு எடுத்ததாலா தெரியவில்லை. மேலும் பணியினைக் காரணம் காட்டி, சௌந்தர்யாவினுடன் பத்து நாட்களுக்குள் பேசுவதாகத் தந்தையிடம் கூறியவன், அதற்கடுத்த சில நாட்களிலேயே சிம்பிளாகக் கோவிலில் திருமணம் வைத்துக் கொள்ளலாம் என்றும், தான் சௌந்தர்யாவிடம் பேசும்வரை அவர்கள் வீட்டில் பேச வேண்டாம் என்றும், தந்தையிடம் சொல்லி வைத்திருந்தான்.

எப்படியோ அவன் திருமணம் முடிந்தால் போதும்... அதன் பிறகு ஆபரேஷனில் உயிர் போனால் கூட நிம்மதி யாகப் போகலாம் என்றவாறு ஜெகநாதன் நினைத்தார்.

அன்றைய வேலைகள் என்ன என்று சில நிமிடங்கள் ஆராய்ந்தவன் கீர்த்தியை அழைத்தான். சில நிமிடங்களில் கீர்த்தியும் வந்தாள். அவளிடம் கார்த்திக்கைப் பற்றி

விசாரித்தவன், அவனை யு.எஸ். அனுப்ப நினைப்பதையும் கூறியவன், கார்த்திக் முன்னே இருந்த அலுவலகத்தில் அவனுக்கு அந்த அனுபவம் இருந்ததால், அதில் கார்த்திக்குக்குப் பிரச்சனை இருக்காது என்பதைக் கூறியவன், கீர்த்தி மிகவும் அபீசியலாகப் பேசியது போல், பார்த்தது போல் இருந்தது. கடைசியாக வெளியேறும்போது தனக்கிருந்த சந்தேகத்தைக் கேட்டவனுக்கு ஏன் கேட்டோம் என்று ஆகிவிட்டது.

கீர்த்தி அவனிடம் விடை பெறும்போது, "கீர்த்தி, ஏதோ ஒரு வித்தியாசம் உங்களிடம் தோன்றுகிறது. பழகிய சில நாட்களிலேயே முதலில் நீங்கள் என்னிடம் பேசியதற்கும், இந்த ஒரு வாரமாகப் பேசியதற்கும் ஒரு மாறுதல் இருக்கிறது. என்ன விசயம்?" என்று உண்மையிலேயே தெரியாமல்தான் கேட்டான்.

"அப்படியா சார்!" என்று அர்த்தப் புன்னகையினை விரித்தவள், "ஒருவேளை முதலில் எல்லாம் யாரைப் பற்றியாவது ஹிஸ்டரி சொல்லிட்டு இருந்திருப்பேன். ஒருவர் என்னிடம் சொன்னதிலிருந்து அதை விட்டு விட்டேன். அதனாலும் இருக்கலாம்," என்றாள், பொய்யான வருத்தத்துடன். ஆனால், குரலில் கடுப்படித்தது.

அதைக் கேட்ட பாலா சட்டென்று சிரித்து விட்டான். இதுவரை அவனிடத்தில் புன்னகையினை மட்டும் கண்ட கீர்த்திக்கு, இப்படி அவன் வாய் விட்டுச் சிரித்து அவள் பார்த்ததே இல்லை. முதலில் அவன் சிரிப்பைப் பற்றின ஆராய்ச்சியில் மனம் போனாலும், உடனே, 'இப்பொழுது நாம் என்ன சொல்லி விட்டோம். இவன் சிரிக்கும் அளவிற்கு...' என்று முழித்தபடி நின்றாள்.

"கீர்த்தி, நான் அன்று சொன்ன காரணத்தினால்தான் இவ்வளவு கோபமா? தப்பான அர்த்தத்திலோ... இல்லை, என்னைப் பற்றி எல்லோருக்கும் தெரிந்து விடுமோ என்ற பயத்திலோ சொல்லவில்லை. பெண்களுக்கு ஒரு விசயம்

தெரிந்தால் யாரிடமாவது சொல்லா விட்டால் தலையே வெடித்து விடும் போல் இருக்குமாம்... என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால்தான் அப்படிச் சொன்னேன்!" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே,

"அப்படி ஒரு தவறான அபிப்ராயம் பெண்கள் மீது இருந்தாலும் அதற்கு நான்தான் கிடைத்தேனா! அப்படிப்பட்ட பெண்கள் இருந்தாலும் நான் அப்படிப்பட்டவள் இல்லை. நான் உங்கள் விசயத்தை எல்லோரிடமும் சொல்லி விடுவேன் என்று எப்படி எதிர்பார்த்தீர்கள்? நான் எந்த வகையிலாவது யாரைப் பற்றியாவது சொல்லிப் பார்த்திருக்கிறீர்களா, இல்லை உங்களிடம்தான் சொல்லி இருப்பேனா! குறைந்தபட்சம் என்னிடம் எனக்கு உங்களைப் பற்றித் தெரிந்ததினை ரகசியமாக வைத்திருக்கும்படி சொல்லியிருந்தாலாவது நாகரிகமாகவாவது ஆகியிருக்கும். ஆனால், நீங்கள் அன்று என்னிடம் கூறியது எப்படி இருந்தது என்றால்... நான் ஒரு டமாரம் என்பதை உறுதி செய்து, அதற்கேற்றாற்போல் பேசினீர்கள்..."

அவள் படபடவென்று பேசிக் கொண்டிருக்கும்போதே,

"அய்யோ கீர்த்தி! நான் அன்று பேசியது ஏதோ விளையாட்டாகத்தான். உண்மையிலேயே நான் உங்களிடம் இதை யாரிடமும் கூற வேண்டாம் என்று சொல்லத்தான் அன்று அலுவலகத்தில் இருந்து கிளம்பும்பொழுது சொல்ல நினைத்தேன். ஆனால், அம்மா வந்தவுடன் மறந்து விட்டேன். அதன் பிறகு உங்கள் வீட்டில் உங்க குடும்பத்தைப் பார்த்த பிறகு நானும் ஏதோ விளையாட்டாய்ப் பேசி விட்டேன். அது உங்க மனதைப் புண்படுத்தி இருந்தால், ஐ அம் ஸோ சாரி கீர்த்தி! அந்த மாதிரித் தவறு இனி நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன்," என்று கொஞ்சம் நெகிழ்வாய்ப் பேசினான்.

அதைப் பார்த்த கீர்த்திக்கு, ஒரு மாதிரி ஆகிவிட்டது. "சார்..." என்று இழுத்தவள், "எனக்கும் உங்கள் மேல்

வருத்தம் எல்லாம் இல்லை. என்னைப் பற்றித் தவறாக எண்ணி விட்டீர்களோ என்றுதான் கோபம். மற்றப்படி ஒன்றுமில்லை..." என்றவுடன்,

"அப்பா... கீர்த்தி நார்மலாப் பேச ஆரம்பிச்சிட்டாங்க..." என்றவன், "அப்புறம் கீர்த்தி, நீங்க என் அம்மாவுக்கு என்ன மந்திரம் போட்டீங்க? அன்னைக்கு முழுவதும் கீர்த்தி புராணம்தான் போங்க. எனக்கும் வேற திட்டு உங்களால். பிள்ளை என்றால் அப்படி இருக்க வேண்டும்..." என்று பாவம் போல் கூறியபோது, அவளையும் அறியாமல் கன்னங்கள் சிவந்ததைக் கட்டுப்படுத்தியபடி,

"சார் இப்போ நல்லா இருக்காங்களா, சார்?" என்றவுடன்,

"இவ்ளோ நேரம் மேடத்திற்குக் கேட்கத் தோணவில்லை. நான் மன்னிப்புக் கேட்டவுடன் கேட்கத் தோணுகிறதோ...?"

இப்போது, கீர்த்தி குற்ற உணர்வில் தடுமாறியபடி, "அப்...அப்படியெல்லாம் இல்லை சார்!" என்றாள்.

அவளது தடுமாறலை உணர்ந்தவன், "ஓ.கே. ஓ.கே. நான் ஒண்ணும் சொல்லவில்லை. நல்லா இருக்கார். ஒரு மாதத்திற்குப் பிறகு சர்ஜரி. அது நல்ல விதமாக முடிந்து விட்டால் ஒரு பிரச்சனையும் இல்லை..." எனும்போதே, அவனுக்கு இன்டர்காமில் அழைப்பு வந்தது.

"அனுப்புங்கள்!" என்றபடி கீர்த்தியிடம் நிமிர்ந்து விரக்தியான புன்னகையினைத் தவழ விட்டவன், "எல்லாம் என்னால்தான். என் மேல் அவருக்கு இருக்கும் பாசமே அவருக்கு இருக்கும் ஒரே பிரச்சனை," என்றான்.

அவனுக்கு என்ன கூறுவது என்று தெரியாமல், அவனிடம், "சரி சார்! நீங்கள் கூறிய விசயத்தை நான் கார்த்திக்கிடம் ஆலோசித்து விட்டுப் பிறகு வந்து பார்க்கிறேன்," என்றவளிடம்,

சற்று முன் அவன் பேசிய விதத்தினை யோசித்து விட்டுத் தலை முடியைக் கோதியபடி இயல்புக்கு மாறியவன்,

"ஓகே... கீர்த்தி. உங்க ஃப்ரெண்ட்தானே கவிதா, அவங்க இந்த வீக்கோட ரிலீவ் ஆகிறார்கள் போலிருக்கு..." என்றபோதே, கவி அந்த அறை வாசலில் நுழைந்தாள்.

அனுமதி பெற்று உள்ளே வந்தவள், கீர்த்தியை ஒரு நொடி நோக்கியவள்... பிறகு பாலாவிடம், தான் இந்த வாரம் ரிலீவ் ஆகப் போகிற விசயத்தைக் கூறியவள், இதுதான் பாலாவிடம் பேசப் போகின்ற கடைசித் தருணமாகக் கூட இருக்கலாம் என்றபடியாலும், மேலும் கீர்த்தியும் உடன் இருந்ததாலும் கொஞ்சம் துடுக்காகப் பேச ஆரம்பித்தாள்.

தன்னுடைய ரிலீவிற்கான காரணத்தைக் கூறியபடி,

"சார், எனக்கும் இந்த ரிலீவ் பிடிக்கவில்லைதான். எனது குடும்பத்தினால்தான் போக நேர்கிறது. மற்றப்படி இங்கு கிடைத்த அனுபவத்திற்கும், எனது அறிவின் முன்னேற்றத்திற்கும் உங்களுக்கு நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். இதை எனது எதிர்காலத்திற்கும் பெரிய அடிப்படையாக நினைக்கிறேன் சார்!" என்று ஃபார்மலாகப் பேசியவள், முடித்துவிட்டு, என்ன நினைத்தாளோ தெரியவில்லை.

சட்டென்று, "சார், என் ஃப்ரெண்ட் கீர்த்தி நான் போன பிறகு தனியாளாய்த் தவிப்பாள். கொஞ்சம் அவளைப் பார்த்துக் கொள்ளுங்கள்..." என்று அப்பாவியாய்க் கூறியபடி வழக்கமான துடுக்குத் தனத்தினை வெளிப்படுத்தினாள்.

அவள் கூறியதுதான் தாமதம்... சட்டென்று திரும்பி அவளைப் பார்த்து முறைத்தவள், "ஓ.கே. சார். நான் கிளம்புகிறேன்," என்றபடி கிளம்பியவளுக்குப் புன்சிரிப்புடன் தலையாட்டி விட்டுக் கவியை நோக்கினான் பாலா.

பாலா கீர்த்தியைப் பார்த்துத் தலையசைக்கும் வேளையில் இதுதான் சமயம் என்று அவனைச் சற்று நேரம்

பார்த்துக் கொண்டிருந்தவள், அவன் சட்டென்று திரும்பியவுடன் சற்றுச் சுதாரித்தாள்தான். ஆனாலும் பேச வார்த்தை ஏதும் வரவில்லை.

"தென்... சார்!" என்றபடி அவனது பதிலை எதிர் பார்த்துக் காத்திருந்தாள்.

"கவிதா, உங்களை மாதிரி ஒரு நல்ல, திறமையான எம்ப்ளாயி ரிலீவ் ஆவது க்ளோபல் நெட்டுக்கு நிச்சயமாய் இழப்புதான். இருந்தாலும் உங்கள் சூழ்நிலையினையும் நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனி வே ஆல் த பெஸ்ட் ஃபார் யுவர் ஃப்யூச்சர்..." என்று பேசியவன், முடிக்கும்போது, "தென், உங்க ஃப்ரெண்ட் கீர்த்தியையும் நான் பார்த்துக் கொள்கிறேன். மேலும் இன்னும் வேறு யாராவது நீங்கள் போகிறீர்கள் என்று தவிப்பவர்கள் இருக்கிறார்களா... சொல்லுங்கள். அவர்களையும் சேர்த்துப் பார்த்துக் கொள்கிறேன். எங்களுக்காக இத்தனை நாள் உழைத்திருக்கிறீர்கள். இது கூடச் செய்யாவிட்டால் எப்படி கவிதா?" என்றவுடன்,

அவனைச் சற்று ஆழமாகப் பார்த்தவள், அவனது முகத்தில் கேலியாகப் பேசியதற்கான அறிகுறிகள் எதுவுமே இல்லை. அவனிடம் கொஞ்சம் அதிகமாகப் பேசி விட்டேனோ என்று யோசித்த கவி இப்போது தன் வால்தனத்தை யெல்லாம் மூட்டை கட்டிவிட்டு,

"சாரி சார். நான் தப்பாக எதுவும் பேசியிருந்தால், மன்னித்து விடுங்கள். கீர்த்தி இருந்ததினால் அப்படிப் பேசிவிட்டேன்," என்றாள்.

"ஹேய் கவிதா, நானும் கேலியாகத்தான் சொன்னேன். இதைப் போய் இவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொண்டீர்கள். கீர்த்திக்கு ஏற்ற ஃப்ரெண்ட்தான் போல... ரெண்டு பேரும் தொட்டாச்சிணுங்கிகள்..." என்றபடி சிரித்த வுடன்,

கவிக்கு இப்போதுதான் நிம்மதியாகி விட்டிருந்தது.

பிறகு சிறிது நேரம் கவியிடம் டெல்லியில் அவள் வேலை தொடர்வதைப் பற்றி விசாரித்தவன், தனக்குத் தெரிந்த சில முகவரிகளை அவளுக்கு வழங்கினான்.

எல்லாவற்றையும் விசாரித்த பின் எழுந்த கவி, "சார், நான் அந்த லிஸ்டை எப்போ கொண்டு வர வேண்டும்?" என்று இதழில் கேலியுடன் கேட்டாள்.

அவள் என்ன கூறுகிறாள் என்று தெரியாமல் முழித்தவன், புருவங்களைச் சுருக்கியபடி, "எந்த லிஸ்ட்?" என்று கேட்டவனிடம்,

கவி சிரித்துக்கொண்டே, "என் பிரிவால் தவிப்பவர்கள் லிஸ்ட்!" என்றவுடன், சட்டென்று வாய் விட்டுச் சிரித்தே விட்டான்.

"நீங்க கேட்டு நான் செய்யாமல் போனால் எப்படி சார்?" என்றாள் கவியும் விடாமல்.

"கவிதா, ரிலீவ் ஆகப் போகிறோம் என்றவுடன் இப்படியா!"

கவியும் இப்போது கூடுதல் தைரியம் வந்தவளாய், "அப்படியெல்லாம் இல்லை சார். எனக்கு இன்றுதான் உங்களிடம் பேச வாய்ப்பே கிடைத்திருக்கிறது. இது மட்டும் எனக்கு முன்பே கிடைத்திருந்தால்..." என்றபடி நிறுத்தினாள்.

இப்போது பாலா...

"கிடைத்திருந்தால்...???" என்றவன், கேள்வியோடு அவளை நோக்கினான்.

"கிடைத்திருந்தால்... சீக்கிரமாகவே நீங்களே என்னை இந்த ஆபீஸை விட்டு வெளியேற்றியிருப்பீர்கள். என்ன, நான் ரிலீவிங் லெட்டர் கொடுக்க வாய்ப்பிருந்திருக்காது. அவ்வளவுதான்!" என்று முடித்துவிட்டுச் சிரித்தபோது, அவளது சிரிப்பில் பாலாவும் சேர்ந்து கொண்டான்.

அவள் சென்ற பிறகு புன்முறுவலோடு அவளைப் பற்றி யோசித்தவன், 'தைரியமான பெண். துடுக்குத் தனம், நகைச்சுவையான பேச்சு...' என்று நினைத்தவன், வேலையில் கவனத்தைப் பதித்தான்.

கவி எப்போது வெளியே வருவாள் என்று முகம் முழுக்கக் கோபத்தோடு காத்திருந்தவளுக்கு, வாயெல்லாம் பல்லாக, முகமெல்லாம் சிரிப்பாக மெதுவாய் விசிலடித்தபடி வந்த கவியைப் பார்த்தவுடன் கோபம் கூடியது.

வந்தவள், "கீர்த்தி, என்ன முகமெல்லாம் செந்தாமரை பூக்கிறதே! என்ன விசயம்? உள்ளே நான் பேசிய காரணமோ?" என்று கேட்டாள்.

வந்த ஆத்திரத்தை அடக்கியபடி, "உனக்கு அறிவே இல்லையா கவி! யார்கிட்ட என்ன பேசுவது என்றே தெரியவில்லை உனக்கு..." என்றபடி கீர்த்தி பேச ஆரம்பிக்க,

ஆனால் கொஞ்சம் கூடத் தான் பேசியது தவறு இல்லை என்பதாலோ அல்லது பாலாவுடன் பேசியதாலோ கீர்த்தி திட்டியதெல்லாம் அவள் தலையில் ஏறவில்லை. அவள் கோபத்தைக் கணக்கில் ஏற்றாமல்... ஏன் அந்த விசயத்தையே விட்டவள், "கீர்த்தி, சத்தியமா இது நம்ம பாலா சாரா... என்று நம்பவே முடியவில்லை. எனக்கு ஒரு சந்தேகம் கீர்த்தி. உன்கிட்ட பாலா சார் எப்படிப் பேசுவார்?" என்றவுடன்,

ஏற்கெனவே கோபத்தின் எல்லையில் இருந்தவள், அதை மறைத்தபடி, "ஏன் உனக்கு இப்படி ஒரு சந்தேகம்? நல்லாத்தான் பேசுவார். உன்னிடம் என்ன சொன்னார்?" என்றவுடன்,

நடந்ததைச் சொன்னவள்... "பேசாமல் இங்கேயே இருந்து விடலாம் என்று தோன்றுகிறது. உனக்குக் கிடைத்த ப்ரமோசன் எனக்குக் கிடைக்கவில்லையே என்று தோன்றுகிறது. இந்நேரம் நான் பாலாவை கரெக்ட் பண்ணியிருப்பேன்..." என்று சலித்தவளைப் பார்த்துத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போலிருந்தது கீர்த்திக்கு.

"உன்னையெல்லாம் திருத்த முடியாதுடி. ஆண்டவனா பார்த்து உன்னை டெல்லிக்கு மாற்றி விட்டார். இல்லையென்றால் அவ்வளவுதான்... போய் டெல்லியில் ஒழுங்கா வேலையில் சேருகிற வழியைப் பார்."

ஆனால் கீர்த்தி கூறியதெல்லாம் அவளது கவனத்தில் விழவே இல்லை. ஏதோ யோசித்தவளாய், "கீர்த்தி, நான் போய் பாலாகிட்ட நான் அவரை விரும்புகிறேன் என்று சொல்லி விட்டு வரட்டுமா? முடிவைக் கூட உன்னிடம் சொன்னால் போதும். இல்லையென்றால் எனக்காக நீ பேசிச் சம்மதம் வாங்கித் தருகிறாயா? எனக்காக இது கூடச் செய்ய மாட்டாயா என்ன?" என்ற கவியிடம்,

கொஞ்சம் முற்றித்தான் போய்விட்டது என்று மனதிற்குள் நினைத்தபடி இப்போது கீர்த்தியும் விளையாட ஆரம்பித்தாள்.

"கவி, எதற்கு வேண்டும் என்றாலும் இன்டர்மீடியேட் இருக்கலாம். ஆனால், காதலுக்கு மட்டும் கூடாது. பிறகு என்னைச் சொல்லிக் குற்றமில்லை. என்ன... தூது போகட்டுமா?" என்று கண் சிமிட்டினாள்.

"துரோகி! நீ ஒன்றும் பண்ண வேண்டாம். உன் வேலையைப் பார். ஆனால் பார்... நான் போவதற்குள் என்ன செய்கிறேன் என்று!" என்று முறைத்தபடி தனது இருக்கைக்குச் சென்றாள் கவி.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த கீர்த்திக்குக் கவி உண்மையிலேயே அவனை விரும்புகிறாளோ என்ற சந்தேகம் முதன் முதலில் தோன்றியது. இதற்கு ஒரு வழி பண்ண வேண்டும் என்று யோசித்தவள்... மதுவைப் பற்றிச் சொல்ல வேண்டும் அவளுக்கு என்றபோதே, ஒரு வேளை கவி உண்மையாகவே விரும்பியிருந்தால், வேறொரு பெண் அவனது வாழ்வில் இருக்கிறாள் என்பது அவளுக்கு வேதனையான விசயம்தானே. கவிக்கு மட்டும் அல்ல... எந்த

ஒரு பெண்ணுக்கும் தன் மனம் விரும்பியவன் வேறொரு பெண்ணை விரும்புகிறான் என்றால் அது மிகப் பெரிய வேதனைதான்! என்ன செய்யலாம்... என்று யோசித்தவள், இப்போதைக்கு ஒன்றும் பெரிதாக ஆகவில்லை. தேவைப்பட்டால் பார்க்கலாம் என்றபடி வேலையினைத் தொடர்ந்தாள்.

அன்று கவி டெல்லி புறப்படும் தினம். அலுவலகத்திற்கு விடுமுறை எடுத்திருந்தாள் கீர்த்தி.

சென்ட்ரல் இரயில் நிலையத்தில் தோழிகள் இருவரும் அங்கிருந்த பெஞ்சில் தனியே அமர்ந்தனர். கீர்த்திக்குப் பேசுவதற்கு ஏதும் வார்த்தைகள் வரவில்லை. நின்று கொண்டிருந்த இரயில்களை வெறித்துக் கொண்டிருந்தாள். கவியும் சற்று நேரம் பேசாமல் இருந்தவள், "கீர்த்தி!" என்று அழைத்தாள்.

"ம்..." என்ற ஒற்றை வார்த்தையுடன் அவளது முகத்தினை நோக்கியவள், தொடர்ந்தாள்.

"கவி, ரொம்ப கஷ்டமாயிருக்குப்பா. உனக்குப் புது இடம். என்னை ஞாபகப்படுத்தற மாதிரியான வாய்ப்புகள் குறைவு. ஆனால், எனக்கு அப்படியில்லை. நம்ம ஆபீஸில் ஒவ்வொரு விசயமும் உன்னை நினைத்துக் கஷ்டப்பட வைக்கும். என்ன பண்ணுவது? பிரிவைப் பழகிக்கத்தான் வேண்டும்..." என்றபோது, அவள் குரல் தழுதழுத்தது.

என்ன சொல்வது என்று புரியாத கவியும், கீர்த்தி முன்னர் கூறியவற்றினை நினைத்தபடி, "கீர்த்தி! நீயெல்லாம் ஒரு சாஃப்ட்வேர் இஞ்சினியர்..." என்று ஆரம்பித்தவளின் வாயினைக் கைகளினால் மூடியபடி, "அம்மா தாயே, ஆள விடு. நான் சொன்னதையே எனக்கே ரிபீட்டா? தாங்காது கவி!" என்றபடி சிரிக்க ஆரம்பித்தாள்.

அதன் பிறகு சகஜ நிலைமைக்குத் திரும்பிச் சாதாரணமாகப் பேச ஆரம்பித்தனர்.

"கீர்த்தி, உனக்கு எப்போ மேரேஜ்? இந்த வருடம் தானே?" என்றவளைப் பார்த்து,

"தெரியல கவி... இந்த வருடம் இருக்கலாம்னு நினைக்கிறேன். உனக்குத் தெரியாமலா? ஆனா, நீதான் கீர்த்தினு ஒருத்தி சென்னையில் இருந்தாளேன்னு மறக்காம என்னைக் கூப்பிடணும்..." என்று வழக்கம் போலக் கவியிடம் தன் சீண்டலை ஆரம்பித்தாள்.

வழக்கம் போல் கவியும் அசருவாளா?

"கீர்த்தி, உன் கம்பெனியோட எம்.டி.யோட திருமணம் உனக்குத் தெரியாமல் நடக்க முடியுமா?" என்று கொக்கி போட்டவளைப் புரியாமல் பார்த்தாள் கீர்த்தி.

கவி அன்று சொன்னதில் இருந்து குழம்பியவள், அதன் பிறகு அவள் பாலாவைப் பற்றி எதுவும் பேசாததால், 'கவியைப் பற்றித் தவறுதலாகப் புரிந்து விட்டாயே!' என்று தனக்குள்ளாகவே தன்னை நிந்தித்தவள், கவியும் விளையாட்டாகத்தான் பேசியிருக்கிறாள் என்று முடிவு செய்திருந்தாள்.

இப்போது கவி இப்படிக் கேட்டதும், ஒரு நிமிடம் அப்படியே அவளைப் பார்த்து விழித்தாள்.

அதன் பிறகு, "கவி, நீ என்ன சொல்கிறாய்? எனக்குப் புரியவில்லை. பாலா சாரையா சொல்கிறாய்?" என்று நம்ப முடியாதவளாய் விழி விரியப் பார்த்தாள்.

அவளைக் கொஞ்சம் கூட லட்சியம் செய்யாதவளாய், "ஆமா, இதில் என்ன ஆச்சரியம் இருக்கு. நீ ஏன் இப்படி முழிக்கிறாய்?" என்று சிரித்தபடி தோழியை நோக்கினாள்.

அவளைப் பார்த்தபடியே இருந்த கீர்த்தி இவளிடம் பாலா மதுவை விரும்புகிறான் என்று சொல்லி விடலாமா. இல்லை யென்றால் ஏதாவது ஆசையினை வளர்த்துக் கொள்ளப் போகிறாள். இதை இப்போதே கிள்ளி எறிந்து விட வேண்டும். கவியும் இனி அலுவலகத்திற்கு வரப்

போவதில்லை என்று யோசித்தவளாய், கவியின் சத்தமான அழைப்பில் மீண்டவள்... "கவி, நான் ஒன்று கேட்கலாமா?" என்று மெதுவாய்க் கேட்டாள்.

"என்ன?" கவி யோசனையுடன் கேட்டாள்.

"நீ... நீ..." என்று தடுமாறியவள், பிறகு தன்னைத் தானே சமாளித்தவளாய், "கவி, நீ பாலாவை உண்மை யிலேயே விரும்புகிறாயா? எனக்குத் தெரிய வேண்டும். ஏனென்றால் நான் ஏதோ விளையாட்டாய்க் கிண்டல் பண்ணிட்டு இருந்தேன்..." என்று மென்று முழுங்கினாள் கீர்த்தி.

அவளது தடுமாற்றத்தினைப் புரிந்த கவிக்கு, அவள் பாலாவினைப் பற்றி ஏதோ சொல்லப் போகிறாள் என்பது புரிந்தது. இல்லையென்றால் ஏதோ அறிவுரை கூறப் போகிறாள் என்பது புரிந்தது. எனவே கவி அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று பார்ப்போம் என்றபடி, "என்ன கீர்த்தி! இப்படிச் சொல்லி விட்டாய். பாலாவை நான் விரும்புகிறேன் என்பது உனக்கு விளையாட்டா?" என்று முகத்தையும் குரலையும் சீரியஸாக மாற்றினாள்.

அவளது முக பாவனையினைப் பார்த்த கீர்த்தி, இனிமேல் இவளிடம் சொல்லாவிட்டால் இத்தனை நாள் பழகியதற்கு அர்த்தமில்லை என்று நினைத்தவள், "கவி, உன்கிட்ட நம்ம சார் பற்றி ஒன்று சொல்ல வேண்டும். இது கூட நீ அவரை விரும்புகிறேன் என்று உ.... உளறுவதால் மட்டுமே சொல்கிறேன்," என்று உண்மையிலே சீரியசான கீர்த்தியைப் பார்த்த கவி, தன் சிரிப்பினைத் தனக்குள்ளாகவே அடக்கியபடி,

"பாலாவைப் பற்றி அப்படி என்ன?" என்றபடி, கேள்வியோடு நோக்கினாள்.

அவளைப் பார்த்த கீர்த்தி, பாலா வேறொரு பெண்ணை விரும்புகிறார் என்று சொன்னால் கவி வருத்தப் படுவாளோ என்று யோசித்தவள், உடனடியாகத் தனது

முடிவில் இருந்து மாறினாள். பரவாயில்லை. இப்பவே சொன்னால்தான் மறப்பது சுலபம் என்று நினைத்தவள், மெதுவாகப் பாலாவின் காதலினைக் கூறினாள்.

அவள் எப்போது சொல்லி முடிப்பாள் என்று காத்திருந்த கவி அவள் நிறுத்திய போது அடக்க மாட்டாமல் சிரித்துக் கொண்டிருந்தாள்.

கடுப்பான கீர்த்தி, "என்ன கவி, நான் என்ன காமெடியா சொன்னேன். எதுக்கு இப்போ சிரிக்கிறாய்?" என்று சிடுசிடுத்தாள்.

"ஓ... ஓ.கே. சாரி!" என்று கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கியவள், "அதனால் நான் பாலாவை மறக்க வேண்டும். இதுதானே உன்னோட அடுத்த வார்த்தை!" என்றவளைப் புரியாமல் பார்த்து விட்டு, ஆமாம் என்பது போல் தலை ஆட்டினாள்.

"கீர்த்தி... கீர்த்தி..." என்று அவளைப் பார்த்துச் சிரித்தவள், "நான் ஏதோ ஆள் பார்க்க சூப்பரா இருக்கார்னு சும்மா சைட் அடிச்சேன். நீ கிண்டல் பண்ணும் போது பதிலுக்குப் பாலாவைப் பற்றிப் பேசுவேன். ஆனால் அவரைப் பார்த்து ஜொள்ளு விட்டது உண்மை. ஆனால் விரும்ப வில்லை. சில விசயங்கள் நடக்காது என்று தெரிந்தும் அதைச் செய்ய நான் என்ன முட்டாளா! இல்லை... அவரை விரும்பினேன் என்றால் இந்நேரம் நான் இப்படிக் கிளம்புவேனா?

"இந்தப் பாலா இல்லன்னா என்ன... டெல்லியில பார்ப்பதற்கு ஆளா இல்ல! எனக்குனு இவன்தான் அப்படினு எனக்கே தோணும். அதுவரை நான் சுதந்திரப் பறவை. இது தெரியாமல் நீ வேற பெரிய விளக்கம் கொடுக்க வந்து விட்டாய். உன்னை யெல்லாம் நினைத்தால்... இல்லை இல்லை... நீயெல்லாம் பாவம் இல்லை. உன்னை மாதிரி ஆளிடம் மாட்டப் போறாரே வினோத், அவர்தான் பாவம்..." என்று கூலாகக் கூறியவள், கீர்த்தியின் முறைப்பில்,

"ஐயோ கீர்த்தி! என்னை முறைக்காதே. உண்மையிலேயே நான் சொல்வதை நம்பு..." என்றவள், "பாலாவெல்லாம் பெரிய இடம். நான் எல்லாம் இந்த மட்டில் தான் பேச முடியும். நீ எனக்காக, நான் கஷ்டப்படக்கூடாது என்று பார்க்கிறாயே... உன்னை மாதிரித் தோழி கிடைக்க நான் மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். உன்னை மாதிரி எனக்கு ஒரு நல்ல ஃப்ரெண்ட் கிடைக்குமா கீர்த்தி?" என்றவளிடம் குரல் மெல்ல மெல்லப் பிசிறு தட்ட ஆரம்பித்தது. "ஐ மிஸ் யூ கீர்த்தி!" என்று தழுதழுத்தாள் கவி.

"நானும் உன்னை மிஸ் பண்றேன் கவி... மறந்திடாதே என்னை!" என்றவளின் கண்களும் கலங்கின.

"கீர்த்தி, கண்டிப்பா நாம திரும்பவும் மீட் பண்ணுவோம்..." எனும்போதே அவள் செல்லும் இரயில் கிளம்புவதற்கான அறிவிப்பு காதினுள் விழுந்தது.

"சரி, பை கீர்த்தி!" என்று கவி அவளிடமிருந்து விடை பெற்றாள்.

அவளுக்குக் கையசைத்தபடி நின்றவளை - கவி அவளது அருகில் அழைத்தவளை நோக்கி ஓடினாள் கீர்த்தி.

"என்ன கவி, எதுவும் வேண்டுமா?" என்றவளினைக் குறும்புடன் நோக்கிய கவி, அவளது காதருகில் குனிந்து, "அந்த மது இல்லையென்றால் இந்தக் கவி இருக்கிறாள். பாலாகிட்ட சொல்லி வை. என்ன புரிஞ்சுதா?" என்றவளைப் பார்த்துப் பொய்க் கோபத்துடன் முறைத்து விட்டு,

"உன்னையெல்லாம் திருத்தவே முடியாதுடி!" என்று சிரித்தாள்.

"ஜென்மத்துல வந்ததைச் செருப்பால அடித்தாலும் போகாதுன்னு சொல்வாங்க கீர்த்தி!" என்று அவளும் சிரித்தாள்.

ட்ரெயின் மெதுவாகக் கிளம்ப ஆரம்பித்தது.

கீர்த்தியினை இனி எப்போது மீண்டும் பார்ப்போமோ என்றிருந்தது கவிக்கு.

கீர்த்தியினை அவள் மீண்டும் பார்க்கையில் கீர்த்தி இன்று அவளிடம் கேட்ட, 'பாலாவை நீ விரும்புகிறாயா?' என்ற அதே கேள்வியினைத் தான் கேட்கப் போகிறோம் என்று நினைத்திருக்கவும் வாய்ப்புமில்லை. கேள்வி ஒன்றா யிருந்தாலும் கீர்த்தி கேட்டபோது, கவியின் பதில் சிரிப்பாய் இருந்தது. ஆனால், கவி கேட்கும்போது கீர்த்தியின் பதில் கண்ணீராய் இருக்கப் போவதையும் அறியப் போவது மில்லை.

கவி கீர்த்தியின் கண் பார்வையிலிருந்து முற்றிலுமாய் மறைந்திருந்தாள். இனித் தான் கவியினைச் சந்திக்கும் தருணம் அநேகமாய்த் தன் திருமணத்தின் போதுதான் இருக்கும் என்று நினைத்தாள்.

அவள் வாழ்வினையே தலைகீழாக மாற்றப் போகும் தருணங்கள் அவளை நோக்கி வந்து கொண்டிருப்பதினை அறியாமல், தன் வீட்டை நோக்கி விரைந்தாள் கீர்த்தி.

12

சென்னையின் மையப் பகுதியில் அமைந்திருந்த சூர்யா மருத்துவமனை அதன் வழக்கமான அமைதியிலும், பணியிலும் தன்னை நிரப்பிக் கொண்டிருந்தது. அதன் ஒரு அறையில் ஜெகநாதன் கண்களை மூடிப் படுத்திருந்தார். அவரது அருகில் அருந்ததியும், ஜெகநாதனின் நண்பனும், அந்த மருத்துவ மனையின் தலைமை மருத்துவருமான முரளியும் நின்று கொண்டிருந்தனர்.

அருந்ததியின் மனம் உலகில் உள்ள அனைத்துத் தெய்வங்களின் காலடியிலும் விழுந்து, தன் கணவனுக்கு நல்ல விதமாக அறுவைச் சிகிச்சை நடைபெற வேண்டும் என்று நொடி பிசகாமல் பிரார்த்தித்துக் கொண்டிருந்தது.

சிறிது நேரம் ஓய்வாகக் கண்களை மூடிப் படுத்திருந்தவர் தன் மனைவியின் அருகாமையினால் ஏற்பட்ட அதிர் வலையில் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தார்.

ஜெகநாதன் கண் விழித்து மெதுவாக அருந்ததியை நோக்கினார். அவர் கண்களை அருந்ததியின் கண்கள் சந்தித்த வினாடியில் அவளது கண்கள் அனிச்சையாகவே கண்ணீரை நிரப்பின. ஆயினும் தன் கணவனுக்கு இப்போதைய தேவை தனது ஆறுதல் வார்த்தைகளும் நம்பிக்கையூட்டும் வார்த்தைகளும்தான் என்பதை உணர்ந்த அருந்ததி கண்களின் நீரை மறைத்துத் தன் கணவனை நோக்கிக் குனிந்தாள்.

அதே நேரத்தில் தன் மனைவியின் நிலைமையினை உணர்ந்த ஜெகநாதன், அவள் தன்னைத் தனக்குள்ளாகவே தேற்றுவது அவருக்குப் புரியாமல் இல்லை. எனவே ஜெகநாதன் தன் மனைவிக்கு ஆறுதலாகப் புன்னகை யினைத் தன் முகத்தில் மலர விட்டார். ஆயினும் அந்த முயற்சியில் அவருக்குப் பாதி வெற்றிதான் கிடைத்தது. இப்போதைய அவரது வலிகளின் காரணமாக...

இப்போதைய அவரது வலிகளுக்குக் காரணம் அந்த மருத்துவமனையின் உபகரணங்களும், மருந்துகளும்தான். அவரது மனத்தைப் பொறுத்தவரையில் தன் மகனின் திருமணத்தினைக் கண்ட வினாடியில் இருந்து மகிழ்ச்சியில் திளைத்திருந்தது. இப்போது தன் உயிர் பிரிந்தால் கூட அவருக்குக் கவலை இல்லைதான். அவருக்கு இப்போதிருக்கும் சிறிய கவலை என்னவென்றால் இன்றைய அறுவைச் சிகிச்சைதான். அதுவும் தன் உயிரினைப் பற்றிய கவலை கூடக் கிடையாது.

மூன்று நாட்களுக்கு முன்னதாகத்தான் தன் மகனின் திருமணம் நடந்து முடிந்திருந்தது. அந்த மகிழ்ச்சியை முழுமையாக அனுபவிப்பதற்கு முன்னரே இந்த மருத்துவ

மனை வாசம் கொஞ்சம் கவலை அளித்தது. இப்போதைய தனது குடும்ப மகிழ்ச்சிக்கு இந்த அறுவைச் சிகிச்சை ஒரு முட்டுக் கட்டை போல் தோன்றியது. இருந்தாலும் தன் மகனின் மன மாற்றத்திற்கு அடிப்படை ஆதாரமே இந்த அறுவைச் சிகிச்சைதான் என்ற வரையில் அவருக்குத் திருப்திதான்.

ஜெகனாதன் கஷ்டப்பட்டுப் புன்னகை பூப்பதைப் பார்த்த அருந்ததிக்கு அவரது வேதனையினைப் பார்த்தவுடன் இப்போது அவளது கண்களில் கட்டுப்படுத்த முடியாமல் நீர் வழிந்தது.

ஜெகனாதன் மெதுவாக அருந்ததியிடம், "நீ ஏம்மா அழுகிறாய்? எல்லாக் கஷ்டமும் பறந்து போய் விட்டது. இந்த ஒன்றையும் கடந்து விட்டால் இத்தனை நாள் நாம் மனதால் பட்ட துன்பம் எல்லாம் முடிந்துவிடும். தைரியமாக இரு அருந்ததி. எனக்கு ஆபரேசன் நல்லபடியாக முடிந்து குணமடைவேன். நான் நம்ம பேரப் பிள்ளைகளைக் கொஞ்ச வேண்டாமா? இன்னும் எத்தனையோ இருக்கு. அதை எல்லாம் அனுபவிக்காமல் போய் விடுவேனா?" எனும் போதே அருந்ததிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

"எங்கே பாலாவும், கீர்த்தியும்... அழைத்து வா!" என்றவுடன் வெளியே வந்தாள் அருந்ததி.

கணவன் வேதனைகளை இறக்கி வைத்துவிட்டார். ஆனால், அருந்ததியின் மனதில் சுமையாய் மாறிய வேதனைகளை யாரிடம் இறக்கி வைப்பாள்? தன் மகன் பாலா செய்து வைத்திருக்கிற காரியத்திற்கு இந்த ஜென்மத்தில்... இல்லை, ஏழேழு ஜென்மத்திற்கும் விடிவு காலம் இல்லை.

நேற்றுப் பாலாவும் கீர்த்தியிடம் பேசியதிலிருந்து கிட்டத்தட்ட தன் மகன் இப்படி யெல்லாம் யோசிப்பானா? அப்பாவிப் பெண்ணின் குடும்பச் சூழ்நிலையினைத்

தனக்காக மாற்றி அவளைக் கிட்டத்தட்ட வியாபார நோக்கில் திருமணம் செய்தது மட்டுமில்லாமல், அவனது திட்டம் யாருக்கும் தெரிந்து விடாமல் இருக்க என்னென்ன செய்திருக்கிறான்!

தன் தந்தையினைப் பற்றி யோசித்தவன்... அந்தப் பெண்ணின் வாழ்க்கையினைப் பற்றி யோசிக்கவே இல்லையே என்று பாலாவைப் பற்றி நினைக்கும்போதே அவனைப் பெற்ற வயிறு எரிந்தது.

கீர்த்தி... அவளைப் போய் என்ன சொல்வது? அவளும் பணத்திற்காகத் தன் வாழ்க்கையினைப் பணயம் வைத்து விட்டாள். தனக்கு மட்டும் இவர்களது திட்டம் முன்னமே தெரிந்திருந்தால் கட்டாயம் இந்தத் திருமணத் திற்குச் சம்மதமே சொல்லி இருக்க மாட்டாள். என்ன செய்வது? எல்லாம் முடிந்து விட்டது. இனி யாரைச் சொல்லியும், என்ன புலம்பியும் ஒரு பயனுமில்லை.

தன் கணவன் ஏதோ மகன் வாழ்வு நேராகி விட்டது என்ற பூரிப்பில் இருக்கிறார். கீர்த்தியின் பெற்றோர் ராகவ் - மைதிலியை நினைக்கும்போது இன்னும் அதிகமாய் மனம் வலித்தது. தன் ஒரே மகள் அதுவும் செல்ல மகள் வாழ்வு பாலைவனமாய் மாறிவிட்டதை அறியாமல், அவள் நினைத்த வாழ்க்கையினை அளித்த திருப்தி அவர்களுக்கு. ஆக மொத்தம் இருவரும் சேர்ந்து அனைவரையும் ஏமாற்றி விட்டனர். இவளுக்கு மட்டும் உண்மை தெரிந்து விட்டதில் மொத்தமாய் நொந்து போய் விட்டாள். இனி மகன் மருமகளோடு தானும் நடிக்க வேண்டிய கட்டாயம்.

அவளைப் பொறுத்தவரை அவன் இனி மகனுமில்லை, கீர்த்தி மேல் அவள் வைத்திருந்த பாசமெல்லாம் போய் அந்தப் பெண் என்ற அளவில் நின்று விட்டது. காலம்தான் விடை சொல்ல வேண்டும். முதலிலாவது ஏதோ மகன் வாழ்க்கை என்ற பயம் மட்டும்... இனி ஒன்றுமே புரியவில்லை. கடவுள்தான் விடை சொல்ல வேண்டும்

என்றெல்லாம் மனதில் நினைத்தபடி வெளியே வந்தாள் அருந்ததி.

அங்கு வாயிலின் இரு மருங்கிலும் நின்றிருந்த பாலா, கீர்த்தியைப் பார்த்தாள். திருமணம் மூன்று நாட்களுக்கு முன்னர்தான் முடிந்த ஒரு புது மணமகனின் தோற்றமே இல்லை பாலாவிற்கு. எதையோ பறி கொடுத்தபடி இருந்த அவனது முகத்தில் உணர்ச்சிகள் துடைக்கப் பட்டிருந்தன. அவனுக்கு எதிராக நின்று கொண்டிருந்த கீர்த்தியிடமோ பார்த்த மாத்திரத்திலேயே புது மஞ்சள் மணம் மாறாத மணமகளின் களை குடிகொண்டிருந்தது. ஆனால், அவளது கண்களில் முற்றிலும் வெறுமையே குடி கொண்டிருந்தது. அதற்குக் காரணம் தன் மகன் எனும்போது இன்னும் நம்ப முடியவில்லை.

அவர்களின் அருகில் வந்தவள் தன் கணவனின் வார்த்தைக்கு மதிப்பளித்து, பாலா மற்றும் கீர்த்தியை வேண்டா வெறுப்பாக அழைத்தவள், ஜெகநாதனிடம் கூட்டிச் சென்றாள்.

பாலாவையும் கீர்த்தியையும் பார்த்தவுடனே ஜெகநாதனின் முகத்தில் பிரகாசம் கூடியது. அவர்களை அருகில் வரும்படி அழைத்தவர், கீர்த்தியைப் பார்த்த பார்வையில் அன்பும், பெருமையும் வழிந்தது. மேலும் அவரைப் பொறுத்தவரை தன் மனதில் கீர்த்தியை இருண்டு போகவிருந்த தனது குடும்பத்தினை மீட்ட தேவதையாக அவர் வரித்திருந்தார்.

கீர்த்தியைத் தனது அருகே அழைத்தவர், "அம்மா கீர்த்தி! உன் அத்தைக்கு நீதான் ஆறுதலாய் இருக்க வேண்டும். எனக்கு இனி ஒரு கவலையு மில்லை. என் பையனுக்கும் என் மனைவிக்கும் ஒரு நல்ல மனைவி, நல்ல மருமகள் கிடைத்த சந்தோசத்தில் எனக்கு எது நடந்தாலும் கவலை இல்லை. என்னம்மா... என் பையன் பாலாவைப் பார்த்துக் கொள்வேன்... அவன் மனதினை மாற்றி அவனது

வாழ்க்கையில் மலர்ச்சியை ஏற்படுத்துவேன்... என்று மாமாவிடம் சொன்னது போல் நடந்து கொள்வாய்தானே?" என்றவரிடம் கீர்த்தி,

"கண்டிப்பாக மாமா. நான் உங்க மருமகள் ஆயிற்றே! நான் நிறைவேற்றாமல் போனால் என்ன ஆவது? நீங்க பார்க்கத்தானே போகிறீர்கள்!" என்றபடி, தன் மாமாவிடம் பேசியபடி பாலாவைப் பார்த்தாள்.

அவனும் அவளுடன் சேர்ந்து, "அப்பா... மருமகளும் மாமனாரும் ஒண்ணா சேர்ந்தாலே என் தலைதான் உருளும் போல இருக்கு..." என்றபடி, தன் தந்தையின் அருகில் அமர்ந்தான்.

அவர்கள் இருவரும் நடத்தும் நாடகத்தைப் பார்த்த அருந்ததிக்கு அங்கு நிற்கவும் முடியவில்லை. அந்த இடத்தை விட்டு விலகவும் முடியவில்லை. இவர்களுக்கு இடையில் ஒன்றும் செய்ய இயலாமல் தன் கணவனை நினைத்து மனதிற்குள் வேதனையோடு சிரிக்கத்தான் முடிந்தது.

அதன் பிறகு அவர்களோடு சிறிது நேரம் நின்றவள், மெதுவாக வெளியேறினாள். அருந்ததி போவதைப் பாலாவும் கீர்த்தியும் உணர்ந்த போதிலும், ஒன்றும் சொல்லாமல் ஜெகநாதனோடு பேசியதைத் தொடர்ந்தார்கள். ஏதோ அவர்கள் இருவரும் மனமொத்த தம்பதி போல் பாலா பேசியதற்கெல்லாம் கீர்த்தி ஒத்து ஊதினாள். கீர்த்தி பேசியதற்கெல்லாம் பாலா தலையாட்டிக் கொண்டிருந்தான்.

அடுத்த நான்கு மணி நேரத்தில் அவருக்கு அறுவைச் சிகிச்சை என்பதால், இன்னும் ஓய்வு தேவை என்பதை டாக்டர் சொன்னவுடன் அவரை உறங்கச் சொல்லி விட்டு வெளியே வந்தனர் பாலாவும் கீர்த்தியும்.

கிட்டத்தட்ட இந்த 35 நாட்களில் இந்த நாடகத்திற் கெல்லாம் இருவரும் நன்றாகத் தேறி விட்டிருந்தனர். முதலில் இருவரும் தடுமாறினாலும், போகப் போக இருவரும்

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து அவரவர் பெற்றோருக்குப் பயந்து மற்றவர் பெற்றோரிடம் நல்ல பெயரை எடுத்து விட்டனர். ஆனால், பாவம்! அருந்ததிக்கு உண்மை தெரிந்ததுதான் அதில் வேதனை.

அருந்ததி இவர்கள் வெளியே வந்தவுடன் வேறு புறமாகத் திரும்பியபடி, விட்ட இடத்திலிருந்து தன் பிரார்த்தனையினைத் தொடங்கினாள். பாலா தன் தாயின் அருகில் சென்றான். கீர்த்திக்கோ அவள் அருகில் செல்லத் தயக்கமாய் இருந்ததால் சற்றுத் தள்ளியே நின்று கொண்டாள்.

அருகில் சென்றவனை முறைத்த அருந்ததி, அவனுடன் பேசாமல் இருந்தாலே இப்போதைய நிலைமைக்கு நன்மை என்பதால்... அவனை லட்சியம் செய்யாமல் கண்களை மூடினாள்.

"அம்மா..." என்று அழைத்த பாலாவுக்கு அவளிடமிருந்து எந்த ஒரு பதிலும் வராததால், சில நிமிடங்கள் அமைதி காத்தவன்... மீண்டும் அழைத்தபோது அவனது குரல் உடைந்திருந்தது. இப்போது மெதுவாய்த் தலையை உயர்த்தி அவனை நோக்கினாள் அருந்ததி.

"ஏன் பாலா இன்னும் ஏதாவது சொல்வதற்கு மீதி இருக்கிறதா? ஏற்கெனவே உன் பங்குக்கு நீயும், உன் மனைவி என்றவள்... இல்லையில்லை... அப்படிச் சொன்னால் அது நான் என்னைத் தெரிந்தே ஏமாற்றுவதற்குச் சமம்... அந்தப் பெண் அவள் பங்குக்குப் பேசி விட்டீர்கள். இன்னும் என்னப்பா?" என்றபடி இப்போது கீர்த்தியைப் பார்த்தாள்.

அவர்கள் பேசுவது அவள் காதில் விழுந்தபடியால் அருந்ததியின் பார்வையினைச் சந்திக்க முடியாமல் தரையினை நோக்கினாள். கண்டிப்பாக இப்படி ஒரு மாமியார் கிடைக்கக் கொடுத்துத்தான் வைத்திருக்க வேண்டும். ஆனால், அப்படிப்பட்டவரையே அவள் பேச்சினை மதிக்காமல் பேசியது நினைவுக்கு வர, உண்மையிலயே இதெல்லாம் தன்

வாழ்வில்தான் நடக்கிறதா என்று தெரியவில்லை... ஏன் என்றும் புரியவில்லை.

ஒரே மாதத்தில் ஒரே மாயமாக நடந்து விட்டது. ஆனால், அவளைப் பொறுத்தவரை எல்லாமே அவளை விட்டுப் போய் விட்டாற் போல் ஒரு உணர்வு. இதோ நேற்றிலிருந்து அருந்ததி அவளிடம் பாராமுகம் காட்டிவிட்டாள்.

விநோத் வீட்டிலோ இவளிடம் திருமணத்தன்று பேசியது. அதுவும் தாங்கள் வளர்த்த பெண் நன்றாக வாழ வேண்டும் என்று அவர்களின் ஆசிர்வாதம் கூறியதோடு இருந்து விட்டனர். ஆனால், விநோத் மட்டும் தனக்குள்ள வேதனைகளை மறைத்தபடி பேசிக் கொண்டிருந்தான்... எப்படிப்பட்ட குடும்பம்! எல்லாம் கைநழுவிப் போய்விட்டதை யாரிடம்தான் புலம்ப முடியும்?

ராகவ், மைதிலியோ ஏதோ பெண் ஆசைப்பட்டாள் என்பதோடு, பழைய மாதிரி அவளிடம் கலகலப்பினைக் காட்டுவதில்லை. முதலில் இருந்த நிலைமைக்கு இப்போது பரவாயில்லை என்ற மட்டில் சந்தோசம். எதிர்காலத்தில் அவர்கள் இன்னொரு இடியை வேறு தாங்க வேண்டும். ஜெகநாதன் மட்டுமே அவளுடன் பூரண மன நிம்மதியுடன் பேசிக்கொண்டிருக்கிறார். அவருக்கு உண்மை நிலை தெரிய வரும்போது அருந்ததியைக் காட்டிலும் மிகுதியான கோபத்திற்கு ஆளாக நேரிடும்.

இதற்கெல்லாம் காரணம் தன் விதி மட்டுமல்ல... அவள் முன்னால் நின்று கொண்டிருக்கும் இந்த பாலாவும் தான் ... எனும் போது நெஞ்சம் துடித்தது. கண்களில் அவளையுமறியாமல் கண்ணீர் கசிந்தது.

அவளைப் பொறுத்தவரை அவள் தாயும் தந்தையும்தான் கடைசிவரை அவளின் பற்றுதல். அவர்களுக்காகத் தன் வாழ்க்கையினைப் பணயம் வைத்தாகி விட்டது. அது அவர்களுக்குத் தெரியாமல் இருக்கப் போதில்லை. கொஞ்ச நாள் கண்ணீர் வடிப்பார்கள்.

அவர்களால்தான் தங்கள் மகளின் வாழ்வு வீணாகிவிட்டது என்று குமுறுவார்கள். நாளாக நாளாகச் சரி ஆகிவிடும். ஏன், தனக்கே சரியாகவில்லையா!

கிட்டத்தட்ட அவளின் வாழ்க்கையில நடந்த பிரச்சனையில் தன் வாழ்க்கைக்கு ஆதாயம் தேடிக் கொண்ட சுயநலவாதியுடன் வாழவில்லையா எனும்போதே இதில் அவளது சுயநலமும் பாதி இருக்கிறது என்பதை மறுக்க முடியவில்லை... அவள் எண்ண ஓட்டங்கள் தாறுமாறாக ஓடியதை நிறுத்தியபடி பேசிக் கொண்டிருந்த தாயிடமும் மகனிடமும் கவனத்தைத் திருப்பினாள்.

"அம்மா, நான் ஏன் பண்ணினேன் என்று நினைத்துப் பாருங்கள். எனக்கு வேறு வழி இல்லையே... நான் என்ன பண்ணுவது? எனக்கு அப்பாவைக் காப்பாற்ற வழி தெரியவில்லைம்மா..." என்றவனைத் தீர்க்கமாகப் பார்த்தவள்,

"உனக்கு மட்டும்தான் அம்மா, அப்பா இருக்கி றார்களா? நீயாவது ஆண்பிள்ளை. உனக்கே... என்ன வழி செய்வது... எப்படி உன் வாழ்வை நேராக்குவது... என்று தெரியாமல் நாங்கள் எப்படியெல்லாம் துடித்தோம் தெரியுமா! எங்களுக்கே இந்த நிலைமை என்றால் அவர்களின் நிலைமை என்ன சொல்வது? சத்தியமாய்ச் சொல்கிறேன்.... பாலா. அவர்கள் வயிறு எரிந்து சாபம் விட்டால் இந்த ஜென்மம் மட்டுமில்லை, இனி வரும் ஏழேழு ஜென்மத்திற்கும் நமக்கு நல்ல வழி கிடையாது. என் மனச்சாட்சியே என்னைத் தினம் கொல்கிறது... நீ செய்து வைத்திருக்கிற காரியத்திற்கு நான் எத்தனை கடவுளை வேண்டினாலும் அதற்கெல்லாம் பலன் கிடைக்குமா என்று தெரியவில்லை... நீ செய்த பாவம் உன் அப்பாவைப் பாதித்தால்.... அய்யோ! நினைக்கும் போதே எனக்குத் தலையே வெடித்து விடும் போல இருக்கிறது," என்றபடி புலம்பியவளைத் தேற்றத் திராணி யில்லாமல் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ராகவனும் மைதிலியும் அவர்களை நோக்கி வந்து கொண்டிப்பதைப் பார்த்தவன், உடனே அருந்ததியிடம்,

"அம்மா, கீர்த்தியின் அம்மா அப்பா வருகிறார்கள், தயவு செய்து அவர்களிடம் எதையும் காட்டிக் கொள்ள வேண்டாம்!" என்றபடி எச்சரித்தவன், கீர்த்தியிடமும் சைகை செய்தான்.

ராகவும், மைதிலியும் அருகில் வரும்போதே தன் வாக்குவாதத்தினை நிறுத்தியவள், தன் முகத்தில் இருந்த எல்லாக் கவலைகளையும் மீறிப் புன்னகை செய்தாள் அருந்ததி.

இந்த ஒரு மாதத்தில் அருந்ததியும் மைதிலியும் ஒருவரையொருவர் பெயர் சொல்லிக் கூப்பிடும் அளவிற்கு நெருங்கி யிருந்தனர். அவளருகே வந்த மைதிலி அருந்ததியின் கைகளினை ஆறுதலாகப் பற்றியபடி,

"அண்ணனுக்கு எப்பொழுது ஆபரேசன் ஆரம்பிப்பார்கள்? நாங்கள் போய்ப் பார்த்து விட்டு வரட்டுமா? கோவிலில் காலையில் அர்ச்சனை செய்து எடுத்து வந்திருக்கிறேன். அந்தப் பிரசாதத்தை எல்லாம் கொடுக்க முடியாது. இந்த விபூதியையும், குங்குமத்தையும் மட்டும் வைத்து விட்டு வந்து விடுகிறேன், அருந்ததி. அண்ணனைப் பார்க்கப் போக அனுமதிப்பார்களா?" என்றவள், ராகவனை அருந்ததிக்கு ஆறுதலாய் ஏதாவது சொல்லுமாறு அழைத்தாள்.

ராகவனும், "இந்த ஆபரேசனெல்லாம் இப்போது மருத்துவ உலகில் சாதாரணம். அதிலும் டாக்டர் முரளி இதில் தேர்ந்தவர். அதுமட்டுமில்லாமல்... ஜெகநாதனின் உடல்நிலை அவருக்கு ஆரம்ப நிலையிலிருந்து தெரியும். அதனால் கண்டிப்பாக நமக்கு நல்லபடியாகத்தான் நடக்கும். அழுதழுது உடம்பை நோகடித்துக் கொள்ளாதே. நீ தைரியமாய் இருந்தால்தானே அவருக்கும் ஒரு அமைதியாய் இருக்கும். உன்னைப் பார்த்து, பார்... பாலாவும் கஷ்டப்படுகிறார்..." என்று ஆறுதலாய்ப் பேசியவர்,

"சரி. வாம்மா! ஜெகனைப் போய்ப் பார்த்து விட்டு வருவோம்!" என்றபடி அருந்ததியையும் மைதிலியையும் அழைத்தபடி ஜெகனைப் பார்க்கச் சென்றார்.

அதன் பிறகு கிட்டத்தட்ட அரை மணி நேரத்தில் ஜெகநாதன் ஆபரேசன் தியேட்டருக்கு மாற்றப்பட்டு ஆபரேசனும் வெற்றிகரமாக முடிந்து விட்டிருந்தது.

மயக்க நிலையில் இருந்த ஜெகநாதனைப் பார்த்த அருந்ததி, பார்த்து இதுவரை ஊமையாய் மனதினுள் அழுதவள் தன் நிலை மறந்து கதறத் தொடங்கினாள். இதைச் சற்றும் எதிர்பார்க்காத மற்றவர்கள் அவளுக்கு எந்த ஆறுதலும் சொல்ல முடியாமல் திகைத்தனர். முதலில் பாலாதான் நிலைமையினைச் சமாளித்தவன், தன் தோள்களில் தன் தாயினைத் தாங்கியபடி, "அம்மா! அப்பாவுக்கு இனி ஒன்றுமே இல்லை. எதற்கம்மா அழுகிறீர்கள்? அப்பா அபாயகரமான கட்டத்தையெல்லாம் தாண்டி விட்டார். இனி நாம்தான் அவரது உடல் நிலையினைத் தேற்ற வேண்டும்..." என்றவன், அதற்கு மேல் வார்த்தை வராமல் தாயின் கண்ணீர், கண்ணாடி வழியே பார்த்த போது தந்தை கட்டிலில் கிடந்த நிலை... இவை எல்லாம் அவனையும் அலைக்கழிக்க, இப்போது அவன் கண்களிலும் கண்ணீர் கரை புரண்டது.

இதற்கு மேல் இனி அவர்களைப் பார்த்துக் கொண்டே இருப்பது நல்லதல்ல என்று நினைத்த ராகவ் கீர்த்தியை அழைத்து, "பாலாவை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் செல். எப்படியும் ஜெகன் கண் முழிக்க நான்கு மணி நேரத்திற்கு மேல் ஆகும். அருந்ததியை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். இருவரும் இருந்தால் ஒருவரை ஒருவர் பார்த்து அழுது கொண்டே இருப்பார்கள்..." என்று கூறிவிட்டு அருந்ததியின் அருகில் நின்று கொண்டிருந்த பாலாவிடம் சென்று அவனை வற்புறுத்தி வீட்டிற்குக் கீர்த்தியுடன் அனுப்பி வைத்தார்.

கீர்த்தியும் பாலாவும் மருத்துவ மனையிலிருந்து வெளியேறி பெசன்ட் நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அருந்ததியின் பாராமுகம் அவர்கள் இருவருக்குமே பெரும் வருத்தமாக இருந்தது.

அருந்ததிக்கே இப்படி என்றால் தன் பெற்றோரை நினைத்த கீர்த்திக்கு நினைக்கும்போதே உடல் சிலிர்த்தது. பாலாவுக்கோ இத்தனை நாள் தந்தையிடம் நடத்திய போராட்டத்திற்குத் தற்காலிகமாய் உருவாக்கப்பட்ட விசயமே இப்போது தாயை அவனுக்கு எதிராகத் திசை திருப்பி விட்டு விட்டது. இப்படியாக இருவரும் அவரவர் போக்கில் அவரவர் மனம் தத்தளிக்க, கடந்த காலத்தை நோக்கி இருவர் மனமும் பயணித்தது.

13

அன்று வழக்கம்போல்தான் காலையில் எழுந்தாள் கீர்த்தி. ஆனால், எழும்போதே ஏதோ ஒரு உள்ளுணர்வு அவளை எச்சரிக்கை செய்ததோடு, என்னவென்று தெரியாத ஏதோ ஒன்று அவளது மனதைப் பிசைந்தது. அப்படியும் இப்படியுமாக அலை பாய்ந்த மனதைச் சமாதானப் படுத்தியவள் சோர்வாகத் தன் தாயிடம் வந்தாள்.

கிச்சனில் மும்முரமாக வேலை பார்த்துக் கொண்டிருந்த தாயிடம் ஏனோ தன் இயல்பான குறும்பைக் காட்ட நாட்டமின்றி மீண்டும் ஹாலுக்கே வந்து பேப்பரில் ஆழ்ந்தவள், சற்று நேரத்தில் இன்னும் கண்ணில் படாத தனது தந்தையைத் தேடி, சிந்தித்தபடி இந்நேரம் வாக்கிங் முடிந்து வந்திருக்க வேண்டுமே என்று மைதிலியிடம் வினவினாள்.

"அம்மா... அப்பா எங்கே வழக்கம் போல வாக்கிங்னு டேரா போட்டுட்டாரா?" என்று ஆரம்பித்தவள் காபி எடுத்து வந்த தன் தாயின் முறைப்பில் சட்டென்று அடக்கி வாசித்தாள்.

"இல்ல... என்ன ராகவ் நடமாட்டத்தையே காணோமே... என்று கேட்டேன். என் பட்டு அம்மாவிற்கு ஆத்துக்காரர் பெயரைச் சொன்னவுடன் கோபம் மூக்கில் வருதா?" என்றபடி தாய் கொடுத்த காபியைப் பருகினாள்.

மேற்கொண்டு அவளிடம் பதில் ஏதும் வராமல் போக, "அம்மா... அப்பா எங்கேனு கேட்கிறேன்ல! அதற்குப் பதில் காணவே இல்லை. நீங்கபாட்டுக்குப் போனால் எப்படி?" என,

"இப்போ என்ன மாதம்... அதனால அவருக்குப் பேங்க்கில் கணக்கு வழக்குகள் எல்லாம் முடித்து அடுத்த வருடத்திற்கான கணக்கீடுகளை ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் உனக்கு இதைத் தனியாகச் சொல்ல வேண்டும்..." என்றபடி உள்ளே போனாள் மைதிலி.

அவள் போன பிறகு தனக்குத் தானே தலையில் தட்டியவள், 'இது மார்ச் மாதம் அல்லவோ! இன்னும் பத்து நாட்களுக்கு அப்பாவிடம் கலாட்டாவெல்லாம் பண்ண முடியாது. அவர் அலுவலக டென்சனில் இருப்பார்...' என்றபடி தன் தந்தையின் தொழிலை நொந்தபடி அலுவலகம் செல்லத் தயாரானாள் கீர்த்தி.

பாலா மெதுவாக விசிலடித்தபடி டைனிங் டேபிளை நெருங்கினான். அவனது உற்சாகம் ஜெகநாதனையும் தொற்றிக் கொள்ள...

"வாப்பா!" என்றபடி, அருந்ததியிடம், "பாலா வந்து விட்டான். அவனுக்கும் சாப்பாடு எடுத்து வை!" என்றபடி சத்தமாக அழைத்தவரை,

"நான் போட்டுக் கொள்கிறேன்பா!" என்றபடி தானே எடுத்து வைத்துக் கொண்டவன்... தந்தையினை ஓரக் கண்ணால் பார்த்தபடி,

"அப்பா! உங்க வருங்கால மருமகள் எங்கேயோ வெளிநாடு ட்ரிப் போய் இருக்காளாமே! வர இன்னும் ஒரு வாரம் ஆகும் போல்... நேற்று அவர்கள் வீட்டில் சென்று

சௌந்தர்யாவைப் பார்க்கப் போயிருந்தேன். அவள் இல்லை என்றதால், எதுவும் பேசாமல் வந்து விட்டேன். ஏனெனில் அவளிடம்தான் முதலில் பேச நினைத்திருந்தேன். அவள் வந்த பிறகு அவளிடம் சம்மதம் கேட்ட பின்னரே உங்க நண்பர்கிட்டே நீங்க பேச வேண்டும்..." என்று உள்ளுர இருந்த எரிச்சலை மறைத்தபடி உதட்டில் புன்னகையினைத் தடவினான்.

அவர்களைப் பற்றி அறிந்தவன் அவன்தானே! அவன் அப்பாவுக்கு என்ன தெரியும்? கண்டிப்பாகச் சௌந்தர்யா மறுப்புச் சொல்ல மாட்டாள்தான். ஒருவேளை சொல்லி விட்டால் வேறொரு பெண்ணிற்கு எங்கு போவது? அவள் அப்படி எதுவும் சொல்லிவிட்டால் ஏதாவது ஒரு அப்பாவிப் பெண்ணின் வாழ்க்கை தன்னால் பாழாகின்ற அளவிற்குப் போய் விடுமோ என்று சிந்தித்தவன் கொஞ்சம் குழம்பித்தான் போனான்.

அப்படி ஏதும் ஆகிவிடக் கூடாது கடவுளே என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவன்... அன்று சௌந்தர்யாவிடம் பேசும்போது அன்றே தோன்றி யிருக்கலாம். இப்படி ஒரு திட்டத்தோடு பேசி இருந்தால் அவள் ஒத்துக் கொண்டிருப்பாள் என்பதில் கூட ஆச்சரியம் இல்லைதான்... என்றெல்லாம் சிந்தித்தபடி தன் தந்தையின் மலர்ச்சியான முகத்திற்கு... இப்போதைக்குத் தன் வாழ்க்கை தான் விலையென்றால் வேறென்ன செய்ய முடியும் என்ற வாறு சிந்தனையிலேயே சாப்பிட்டு முடித்து விட்டு இருவரி டமும் விடைபெற்றுச் சென்றான் பாலா.

அவன் சென்ற பிறகு தன் மகனைப் பற்றி ஓரளவு சந்தேகமா யிருந்தார் ஜெகநாதன். இப்போது அது முற்றிலுமாய்ப் போய் விட்டது. சௌந்தர்யாவினைப் பார்க்கச் சென்றிருக்கிறான் என்றால் அவளைத் திருமணம் செய்யத் தயாராகி விட்டான் என்றுதானே அர்த்தம். அவன் அவளிடம் பேசும் வரையில் இந்த விவகாரத்தைப் பற்றி

சௌந்தர்யாவின் தந்தையிடம் திருமண விசயம் பற்றி வாய் திறக்கக் கூடாது என்று அவரும் முடிவு செய்து விட்டார். மகிழ்ச்சியில் பறப்பது போல் இருந்தது ஜெகநாதனுக்கு.

ஆனால், அருந்ததிக்கோ தன் மகன் ஏதோ ஒரு திட்டத்தோடுதான் செய்து கொண்டிருக்கிறான் என்பது புரியாமல் இல்லை. அவன் அவ்வளவு சீக்கிரத்தில் மதுவை மறப்பானா? விசாரித்துக் கூடப் பார்த்து விட்டாள். அவன் வாயிலிருந்து எதையும் வரவழைக்க முடியவில்லை.

கேட்டால், "என்ன செய்வது... விதிப்படிதான் நடக்கும் என்றபோது, நான் என்ன பண்ண முடியும்? இதற்கு மேல் என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். அப்பா ஆசைப்பட்டபடி திருமணம் செய்து கொள்கிறேன். யாராவது ஒருவர் விட்டுக் கொடுத்தால்தானே ஏதாவது நடக்கும் என்று நீங்கள்தானே சொன்னீர்கள். இப்போது மட்டும் என்னைப் பற்றி என்ன கவலை! என் தலைவிதி அவ்வளவுதான் என்று நினைத்தபடி என் காலத்தினை ஓட்டிக் கொள்கிறேன்..." என்று விட்டேற்றியாகப் பேசுபவனிடம் என்ன சொல்வது... என்ன கேட்பது...?

கண்டிப்பாய் ஏதோ ஒரு மிகப் பெரிய தவறு நடக்கப் போகிறது என்று உள்மனம் எச்சரித்தது. ஆனாலும் என்ன செய்வது? தன் மகன் என்று தன் முடிவைச் சொன்னானோ அப்போதிலிருந்தே வேண்டிக் கொண்டிருந்தாள். அந்தச் சௌந்தர்யாவினால் தன் மகனுக்கு ஏதும் பிரச்சனைகள் வராமலிருக்க வேண்டும் என்று மனம் மறுகிக் கொண்டிருந்தாள் அருந்ததி.

வழக்கத்திற்கும் மாறாக மிகச் சீக்கிரமாகவே அலுவலகத்தை விட்டுக் கிளம்பிய கீர்த்திக்கு ஏனோ வீட்டிற்குப் போகவும் பிடிக்கவில்லை. அவளது தெருவில் அமைந்திருந்த ஒரு நூலகத்திற்குச் சென்று அமர்ந்து படிக்க ஆரம்பித்தவளுக்கு மனம் ஏனோ அதில் ஒன்றாதது போல் இருந்தது. எரிச்சலுடன் நூலகத்தை விட்டு வெளியே வந்தவள்

வீட்டிற்குச் சென்றாலும் அம்மாவுடன் பேசிக் கொண்டிருக்கலாம். மனதின் வெறுமையாவது குறையும். அப்பா வரவும் தாமதமாகும்... தனியே இருப்பார்கள் என்று நினைத்தபடி வீட்டை அடைந்தாள் கீர்த்தி.

வழக்கமாய் வீட்டிற்கு வரும் நேரத்தை விடச் சீக்கிரமாக வீட்டிற்கு வந்த மகளைப் பார்த்த மைதிலி, ஆச்சரியப் பார்வையுடன் புருவத்தை உயர்த்த, அவளின் புருவச் சுழிப்பிற்குத் தன் உதட்டுச் சுழிப்பால் பதில் சொன்னபடி உள்ளே நுழைந்தாள்.

"என்னடா! கொஞ்சம் சீக்கிரமாகவே வீட்டிற்கு வந்து விட்டாய் போல். ட்ராஃபிக் இல்லையா?"

"இல்லம்மா! நான் சீக்கிரமாகவே கிளம்பி வந்து விட்டேன். வர வர வேலை இல்லை என்றால் ஆபீஸில் இருக்கவே பிடிக்கவில்லை. கவி இல்லாதது என்னவோ மாதிரி இருக்கு. கவியை ரொம்ப மிஸ் பண்ணுகிறேன் மா. கார்த்தியும் இல்லை. ஏதோ மற்றவர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன், அவ்வளவுதான்!" என்றவளிடம்,

"ஏன்... உங்க பாலா சார் இல்லையா? போரடித்தால் அவரிடம் பேசிக் கொண்டிருக்க வேண்டியதுதானே!" என்று விளையாட்டாகச் சொன்னவளிடம்,

கீர்த்தியும் விளையாட்டாகவே, "அம்மா! நான் இப்போது சொன்னதெல்லாம் அவரிடம் பேசிய நேரம் போக மீதி நேரத்தைத்தான். இன்று அவரும் ஏதோ மீட்டிங் என்று கிளம்பி விட்டார். இல்லையென்றால் நானும் சீக்கிரமாகவே வந்திருக்க மாட்டேன்," என்றவள், தாயின் தெளிவில்லாத முகத்தினைப் பார்த்தவுடன் இன்னும் சீண்டிப் பார்க்க வேண்டும் போல் தோன்றியது.

"ஆக்சுவலா மைதிலி, நானும் பாலாவும் இன்னைக்கு நைட் டின்னர்க்கு வெளியே போகலாம் என்றுதான் ப்ளான் பண்ணியிருந்தோம். திடீரென்று இந்த மீட்டிங் சொதப்பி

விட்டது..." என்று அலுத்தபடி அறைக்குள் வந்து... அம்மா இந்நேரம் என்னவெல்லாம் கற்பனை பண்ணியிருப்பாள் என்று நினைத்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

அவளே கவி இல்லையென்று அலுவலகத்தில் இருக்க முடியாமல், மனம் நொந்து வீட்டிற்கு வந்தால் பாலாவுடன் பேசிக் கொண்டிருக்க வேண்டியதுதானே என்று கிண்டல் வேறு! வெளியே போனதும் அம்மாவிடம் விளையாடியதைச் சொல்லி விடலாம்... என்றபடி யோசித்தவளுக்குக் காலையில் இருந்த இறுக்கம் தாயுடன் பேசியதில் குறைந்தது போல் இருந்தது. உடை மாற்றி வெளியே வந்தவள் மைதிலி கொடுத்த சூடான காபியினைச் சுவைத்தபடி,

எதிரில் டி.வி.யில் கவனத்தினைப் பதித்திருந்த மைதிலியிடம், "என்ன மைதிலி! பேச்சையே காணோம்..." என்றதும், அவளை முறைத்து விட்டு மீண்டும் டிவியில் கவனம் செலுத்தினாள் மைதிலி.

"ஆகா, அம்மா மலை ஏறி விட்டார்கள் போல!" என்றபடி டிவியினை அணைத்தவள் அதன் முன்னே நின்றபடி, "இங்கு வீற்றிருக்கும் ராகவனின் திருமதி மைதிலி அவர்களுக்கும், அவர்கள் அமர்ந்ததால் சொர்க்க வாசல் கிடைத்த மகிழ்ச்சியில் இருக்கும் அவர்கள் சோபாவிற்கும், நான் அமர்வதையே சொர்க்கமாக நினைக்கும் எனதருமை சோபாவிற்கும், அதன் முன் வீற்றிருக்கும் டீபாய்..." என்று பேச்சாளர் போல் கையினை வாய் முன்னால் வைத்துப் பேசிக் கொண்டிருந்தவளை, இதற்கு மேல் விட்டால் இந்த வீட்டிலிருக்கும் எல்லாப் பொருள்களையும் லிஸ்ட் போட்டு விடுவாள் என்று நினைத்தபடி,

கையெடுத்துக் கும்பிட்ட மைதிலி, "அம்மா தாயே! ஆளை விடுமா. உனக்கு என்ன வேண்டும் இப்போ? நீ என்ன கேட்டாலும் தருகிறேன். தயவு செய்து உங்க அப்பா இல்லாத சமயத்தில் என்னை இப்படியெல்லாம் போட்டுக்

கொல்லாதே. உங்க அப்பாவுக்கு என்னை விட்டால் வேறு ஆளும் கிடையாது. அவர் முகத்துக்காகவாவது என்னை விட்டு விடுடா!" என்றவளைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்த கீர்த்தி,

"வழிக்கு வந்து விட்டீர்களா! இந்தக் கீர்த்தியா கொக்கா?" என்று சொல்லி விட்டு, "சரி சரி. பிழைத்துப் போங்கள். இதுவும் என்னோட அப்பாவுக்காகத்தான்..." என்று அவள் தோள் மேல் சாய்ந்தவள், "நான் அப்போ சொன்னதெல்லாம் சும்மா... அம்மா! உங்களைச் சீண்டிப் பார்க்கத்தான். வேற ஒன்றுமில்லை," என்றாள்.

"எனக்கும் தெரியும் கீர்த்தி! எங்களுக்கு மருமகன் என்றால் அது விநோத்தான். அந்த இடத்தில் வேறு யாருக்கும் இடமில்லை."

"அப்படியா! வேறு ஒருவர் வந்தால்..." என்று கொக்கி போட்டவளிடம்,

"என் மகள் மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. அது போதும் எனக்கு..."

தன் தாய் தன் மீது வைத்திருக்கும் நம்பிக்கையில் கொஞ்சம் தன் மேல் அவளுக்கே பெருமையாய் வந்தது. மெதுவாய்த் தன் தாயிடம், "அப்படியா! அவ்வளவு நம்பிக்கையா உங்களுக்கு என் மேலே! அம்மா, உங்க நம்பிக்கையைக் காப்பாற்ற முடியாமல் போய் விட்டதே. இப்போ என்ன பண்ணுவது?" என்று கேலியாக வருத்தப் பட்டுப் பின் கண் சிமிட்டினாள்.

அவள் நடிப்பதை உணர்ந்த மைதிலி கையில் வைத்திருந்த ரிமோட்டால் அவள் முதுகில் செல்லமாகத் தட்டிவிட்டு, "அப்பாவுக்கு கால் பண்ணு. எப்போ வருவார் என்று கேள். அவர் வர லேட்டாகும் என்றால் நாம் சாப்பிட்டு விட்டுத் தூங்கச் செல்லலாம்..." என்றபோதே, கீர்த்தியும் கால் செய்ய ஆரம்பித்திருந்தாள்.

ஆனால், ராகவன் அதை எடுக்கவே இல்லை. முழுதாய் ரிங் போயும் அவர் எடுக்காததால் மைதிலியே, "வேண்டாம் கீர்த்தி! அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம். அவரே செய்வார். ஏற்கெனவே அவருக்கு அங்கு டென்சன் அதிகமாய் இருக்கும். நாம் வேறு..." என்று சொன்னவுடன், கணவனை எந்த அளவுக்குப் புரிந்து வைத்திருக்கிறாள் தன் தாய் என்று தன் அம்மாவினைப் பெருமையாக நினைத்தபடி அணைத்திருந்த டி.வியை ஆன் செய்யப் போனாள்.

அவள் எழும்போதே காலிங்பெல் அடிக்க, கதவைத் திறந்தாள் கீர்த்தி.

"அப்பா! இப்போதான் உங்களுக்கு கால் பண்ணி வைத்தோம். உங்களுக்கு ஆயுசு நூறு போங்க..." என்று தொடர்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தவளிடம் சின்னதாகப் புன்னகையினைச் சிந்தியபடி உள்ளே நுழைந்த கணவனைப் பார்த்த மனைவிக்கு அவரது முகத்தில் இருந்தே... ஏதோ ஒன்று சரியாக இல்லை, மகள் முன் மறைக்க முயல்கிறார் என்பதனைப் பார்த்த மாத்திரத்திலே புரிந்து கொண்டாள். மனதிலும் வயிற்றிலும் ஏதோ பிசைந்தது.

சாப்பிட்டு விட்டு வந்து விட்டதாகக் கூறிவிட்டு வேறு எதுவும் பேசாமல் தனது அறைக்குள் நுழைந்து விட்டார்.

இப்போது கீர்த்தி, தன் தந்தை அலுவலகத்தில் வேலை பார்த்த களைப்பில் போகிறார். நாம் வேறு கேட்டு அவரைத் தொல்லைப் படுத்தக் கூடாது... என்று நினைத்தவளுக்குத் தன் தாய் மாதிரியே அப்பாவின் மனதினைப் பற்றி யோசிக்கிறோம். அம்மாவுக்கு மட்டும்தான் அப்பா பற்றி சரியாகத் தீர்மானிக்க முடியுமா, தன்னாலும் முடியும் என்றபடி ராகவை அதன் பிறகு தொந்தரவு செய்யவில்லை.

என்ன இருந்தாலும் 25 வருடத் தாம்பத்ய வாழ்க்கையினைக் கீர்த்தியின் தந்தைப் பாசம் போட்டி போட முடியுமா! தோற்றுத்தான் போனாள். ஆனால், மைதிலி கீர்த்தி அறைக்குள் நுழையும்வரை தனக்குள்ளாகவே கணவனின்

வாட்டத்திற்கு என்ன காரணம் என்று தெரியாமல் மன்றாடிக் கொண்டிருந்தாள்.

எப்போது கீர்த்தி அறைக்குள் நுழைவாள் என்று தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு காத்திருந்தவள்... கீர்த்தி அறைக்குள் நுழைந்ததும்... வேக வேகமாய் அறைக்குள் நுழைந்தாள்.

14

ராகவன் சோர்வாய்க் கட்டிலில் படுத்திருப்பதைக் கண்டு, தான் நினைத்தது போல்தான் ஏதோ நிகழ்ந்திருக்கிறது என்பதை உறுதி செய்த மைதிலி, கணவனின் அருகே ஓசைப் படாமல் அமர்ந்தாள்.

ஆனால், நேரிடையாகக் கேட்காமல், "என்னங்க! தலை வலிக்கிறதா? இல்லை, அலுவலகத்தில் மிகவும் வேலையா? காபி போட்டு எடுத்து வரட்டுமா?" என்று மட்டும் கேட்டாள்.

அவள் கேட்டவுடன் ஒரு பெரிய மூச்சை இழுத்து விட்டவர், சட்டென்று மைதிலியின் மடியில் படுத்து அழத் தொடங்கினார்.

இத்தனை வருட வாழ்க்கையில் ராகவ் ஒரு நாளும் தன்னை மீறி இப்படி அழுததில்லை...

திடுக்கிட்ட மைதிலி, "என்னங்க! என்ன ஆச்சுங்க? சொல்லுங்க. ஒண்ணுமே சொல்லாமல் இப்படிச் சின்னப் பிள்ளை மாதிரி அழுதால் எப்படி?" என்றாள்.

மெதுவாய்த் தன் துக்கத்தையெல்லாம் மைதிலியிடம் இறக்கி வைக்க ஆரம்பித்தார் ராகவ்.

இவரது ஒப்புதலின் பேரில் ஒரு பெரும் புள்ளிக்குக் கிட்டத்தட்ட ஒரு கோடி அளவில் கடன் கொடுத்திருந்ததையும் இன்று அவரது கணக்கில் உள்ள கடன் தொகை நிலுவையில் இருப்பதையும் சொன்னவர், இது அனைத்து வங்கியிலும்

சாதாரண விசயம்தான். ஆனால், எங்கோ இவருக்குத் தெரியாமல் அந்தத் தொகை தவணை வாரியாகக் தொடர்ந்து கட்டிக் கொண்டிருப்பது போல பொய்க் கணக்கு இருப்பதுதான் இப்போதைய பெரிய இக்கட்டு. இது எப்படி நடந்தது என்று தெரியவில்லை. இப்போதுதான் கண்டுபிடித்திருக்கின்றனர். கடன் கட்டிய வாடிக்கையாளரைக் காட்டிலும் இத்தனை நாள் வங்கியில் பொய்யாகப் பணம் இருப்பதாக மோசடி செய்ததாக ராகவ்தான் உயர் அதிகாரி என்ற முறையில் பாதிக்கப்படப் போவது.

"இது எனக்கும் என் கீழே இருக்கும் மதனுக்கும் மட்டும்தான் தெரியும் மைதிலி. உடனே அந்தப் பெரும் புள்ளியை விசாரித்ததில் நடந்ததை ஒப்புக் கொண்டார். ஆனால், அவர் இப்போது கட்ட முடியாது என்றும் நஷ்டக் கணக்கைக் காண்பித்து விட்டார். வங்கி விதிகளின்படி அவரை அதற்கு மேல் மிரட்ட முடியாது. போலீஸுக்குப் போனாலும் அவருடன் சேர்ந்து நானும்தான் மாட்ட வேண்டும். எப்படிக் கணக்கில் அக்கவுண்டில் கோட்டை விட்டேன் என்றே தெரியவில்லை. நான் மட்டும் ஒழுங்காய் இருந்திருந்தால் இன்று இந்த நிலைமைக்கு ஆளாகியிருக்க மாட்டேன். இதில் ஒரு நல்ல நேரம் என்ன என்றால் அவர் கண்டிப்பாகக் கடனைத் திருப்பித் தருவதாகச் சொல்லி இருக்கிறார்.

"அவரும் வேண்டும் என்று ஏமாற்றவில்லையாம். அதைக் கட்டாதது கூட இப்போது பிரச்சனை இல்லை. அதைக் கணக்கில் கொண்டு வராததுதான் இப்போதைய பிரச்சனை!" என்று முடித்தவர் மனைவியைப் பார்த்தார்.

மைதிலியோ பேச மறந்தவளாய்ச் சில கணங்கள் அவரையே பார்த்தவள், "இப்போ என்ன பண்றதுங்க?" என்று கேள்வியுடன் கணவனை ஏறிட்டாள்.

"என்ன செய்வது மைதிலி? ஒன்று, அவர் வாங்கிய பணத்தைச் செலுத்த வேண்டும். இல்லை, இருவரும் கூட்டுச் சதி செய்ததாகக் கைது செய்யப் படுவோம்."

இப்போது மைதிலிக்கு உலகமே சுழல்வது போல் இருந்தது. இருந்தாலும் தலைக்கு மேல் வெள்ளம் வந்தாகி விட்டது. இனிக் கவலைப்பட்டு, வேதனைப்படுவது பயனில்லாத வேலை என்று புரிந்தது.

"அந்தப் பணத்தைக் கட்டிவிட்டால் இப்போதைக்குப் பிரச்சனை இல்லையே?"

"ம்ம்ம்... ஆனால், அதிலும் சிக்கல் உள்ளது மைதிலி! நாம் பணத்தைக் கட்டினால் அது நமக்குத் திரும்பக் கிடைக்கும் என்பது நிச்சயமில்லை. மேலும் நம்பிக்கை, நாணயம் போகாமல் கட்டிக் காத்தாலும், நாம் பொருளாதார ரீதியில் மிகவும் துன்பப்பட நேரிடும். இவ்வளவு பெரிய தொகை நம்மை மாதிரிக் குடும்பங்களுக்கு மிக அதிகம் இல்லையா! ஆக மொத்தம் நிம்மதி என்பது இனி எப்போதும் இல்லை நமக்கு..." என்று தளர்ந்தார் ராகவ்.

"பணம் என்ன பெரிய பணம்! இன்று பணத்தை இழந்தால் நாளை கூட மீட்டுக் கொள்ளலாம். ஆனால், நம் பேரில் இருக்கும் நம்பிக்கை ஒரு முறை போனால் மீண்டும் பெற முடியுமா?" என்ற மைதிலியின் வார்த்தையினை ஆமோதித்தவர்...

"தேங்க்ஸ் மைதிலி! நான் என்ன நினைக்கிறேனோ அதையே நீயும் சொன்னது எனக்கு ஒரு ஆறுதலாக இருக்கிறது..." என்று மனைவியின் சொல்லில் ஆறுதல் கண்டவர், அதற்கு மேல் இருவருமாகச் சேர்ந்து என்னவெல்லாம் செய்து பணத்தைத் திரட்டலாம் என்று பேச ஆரம்பித்தனர்.

சென்னையின் புறநகர்ப் பகுதியில் இருக்கும் லேண்ட், இப்போது அவர்கள் இருக்கும் ஃப்ளாட் இதை விற்றாலே 40 லட்சம் வரும். அதன் பிறகு கீர்த்தியின் திருமணத்திற்குச் சேர்த்து வைத்திருக்கும் பணம் மற்றும் மைதிலி, கீர்த்தியின் நகைகள் ஒரு 10 லட்சத்திற்குத் தாண்டும். மேற்கொண்டு

வரும் பாதித் தொகையினை வெளியில்தான் வாங்க வேண்டும். ஆனால், இதெல்லாம் இன்னும் 10 நாட்களுக்குள் முடித்தாக வேண்டும். இல்லையெனில் இவ்வளவு செய்தும் பிரயோசனமில்லை. கணக்கு முடிவு நாளைக்குள் இதெல்லாம் முடியுமா என்பதே பிரமிப்பாக இருந்தது.

"அமெரிக்காவில் இருக்கும் விஸ்வம் அண்ணனிடம் சொல்லி ஏதாவது பணம் புரட்டலாம் என்றால், அங்கேயும் அவர்கள் நிலை சரி இல்லை. ஏன், அவர்களிடம் இந்த நிலையினைக் கூட, ஃப்ளாட் விற்கப் போகிறோம் என்று கூடச் சொல்ல முடியாது. ஜாதகத்தில் இங்கு இருப்பது நல்லதல்ல என்று கூறியதால் வேறொரு வீட்டுக்குக் குடியேறி விட்டோம் என்றுதான் சொல்லிச் சமாளிக்க வேண்டும். அது கூடத் தற்காலிகமாகத்தான். இப்போது கீர்த்தியிடமும் சொல்லாமல் தவிர்க்கலாம்..." என்றெல்லாம் நினைத்துப் படுத்தவர்களுக்கு தூங்கா இரவாகத்தான் இருந்தது அந்த இரவு.

அதற்கு அடுத்த நாளும் வெகு சீக்கிரமாகவே அலுவலகம் சென்றுவிட்டார் ராகவ். முந்தைய தினத்தைப் போல் தந்தையைத் தேடாமல் அவர் கிளம்பிச் சென்றிருப்பதை உறுதி செய்தவள், மைதிலியையும் தொந்தரவு செய்யவில்லை. அலுவலகம் கிளம்பும் வரையில் மைதிலியின் வெறுமை படர்ந்த வார்த்தைகளையோ கவலை தோய்ந்த முகத்தையோ கீர்த்தியால் கணிக்க முடியவில்லை.

மைதிலியிடம் சொல்லிவிட்டு அலுவலகத்திற்குப் புறப்பட்டுச் சென்றாள் கீர்த்தி. கீழே வந்து வழக்கமாய்த் தன் தாய்க்குக் கையசைப்பதற்காக நிமிர்ந்தவள், வெற்றிடத்தை மட்டும் பார்க்க... என்னை மறந்து மைதிலிக்கு அப்படி என்ன வேலை என்றபடி ஸ்கூட்டியை ஆஃப் செய்துவிட்டு வேகமாய்ப் படிகளில் தாவினாள் கீர்த்தி.

கீர்த்தி சென்று விட்டதும், அவள் எப்போது கிளம்புவாள் என்று பார்த்தபடியே இருந்தவள்... அவள் சென்றதுதான்

தாமதம், தான் வழக்கமாய்க் கொடுக்கும் பால்கனி கையசைப்பைக் கூட மறந்தவளாய் அவசர அவசரமாகத் தன் தோழி அபிக்குக் கால் செய்ய ஆரம்பித்தாள்.

அவளிடம் தன் நகைகளை விற்றுக் கொடுக்கவும், மேலும் வட்டிக்குக் கடன் தரும் இடங்களைப் பற்றியும் விசாரித்துக் கொண்டிருந்தாள் மைதிலி.

கதவைக் கூடத் தாழிடாமல், தான் வந்தது கூடத் தெரியாமல் மைதிலி பேசிக் கொண்டிருந்ததையும், அவள் பேசிய விதத்தையும், விசயங்களையும் கேட்டவள்... தன் அம்மாவிற்கு இப்போது எதற்கு இத்தனை பெரிய தொகை, அது மட்டுமில்லாமல் இன்னும் கடன் வேறு என்று தனக்குள்ளாகக் கேட்டபடி மீண்டும் தன் தாயின் தொலைபேசி உரையாடலைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

கீர்த்தி கேட்டுக் கொண்டு இருப்பது கூடத் தெரியாமல் மைதிலியும் பேசிக் கொண்டு இருந்தாள்.

"இல்லை அபி! எனக்கு ஒன்றும் இல்லை. கீர்த்திக்கும் திருமண வயது வந்து விட்டதல்லவா! காலா காலத்தில் திருமணம் செய்து வைத்தால் நாமும் நிம்மதியாய் இருக்கலாம் அல்லவா? நகைகள் எல்லாம் கொஞ்சம் பழைய மாடலாக இருக்கின்றன. அதையெல்லாம் இன்றைய மாடலுக்கு மாற்றிப் புதியதாய்ச் செய்யலாம் என்று ஒரு எண்ணம். அதனால்தான்..." என்று தோழியிடம் சமாளித்தவள், மேலும், "கீர்த்திக்கு இன்னும் செய்ய வேண்டும் என்று ஒரு ஆசை எங்களுக்கு. அவரிடமும் சம்மதம் வாங்கி விட்டேன்..." எனும்போதே, கீர்த்தி மைதிலியின் முன் நின்றாள்.

அவளை அங்கு எதிர்பாராத மைதிலி திணறியபடி, "சரி அபி! நான் மதியம் பேசுகிறேன். நீ இதைப் பற்றி விசாரிக்க மறந்து விடாதே!" என்றபடி போனை வைத்தவள்... 'கீர்த்தி எப்படி... ஏன் வீட்டிற்கு வந்தாள்?' என்று தனக்குள்ளாகவே கேட்டவளுக்கு... தான் அவசரத்தில் செய்த தவறு புரிந்தது.

'அய்யோ! அவசரப்பட்டு விட்டோமே! கொஞ்சம் நிதானித்து அவளை வழக்கம் போல் வழி அனுப்பி இருந்தால் இப்படி மாட்டியிருக்கத் தேவை இல்லையே... கேட்டிருப்பாளோ...' என்று அவள் முகத்தை ஆராய்ந்தவளுக்குச் சந்தேகத்திற்கு இடமே இல்லாதது போல் கீர்த்தியின் முகத்தில் கேள்விக் கணைகளும், கோபமும்... எதற்காகத் தன் அம்மாவிற்கு இவ்வளவு பெரிய தொகை என்ற ஆராய்ச்சியும் அப்பட்டமாகத் தெரிந்தது.

இனிச் சமாளிக்கத்தான் வேண்டும் என்று கீர்த்தியைப் பார்த்துப் புன்னகையை வரவழைத்தவளாய், "சாரிடாமா! அம்மா ஏதோ ஒரு அவசரத்தில்..." என்று சமாதானம் பேசிய மைதிலியை இடையிலேயே கை மறித்தாள் கீர்த்தி.

"இப்போ உங்களுக்கு எதுக்குப் பணம்... அதுவும் நகைகளை வேறு விற்று!" என்று கோபத்தில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினாள் கீர்த்தி.

"உன்னோட திருமணத்திற்குத்தான்டா! நீதான் அபி ஆன்ட்டியிடம் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டாயே! அதன் பிறகு உனக்கு ஏன் இந்தக் கேள்வி?" என்று மைதிலியும் கொஞ்சம் கீர்த்திக்கு ஈடு கொடுத்துத்தான் பேசினாள்.

கீர்த்திக்கு மைதிலி பேசப் பேச... இன்னும் கோபம் அதிகரித்தது என்றே சொல்லலாம்.

"யாருக்கு? எனக்காமா? எனக்கென்ன இன்னும் ஒரு வாரத்தில் திருமணமா? இல்லை, இவ்ளோ பெரிய தொகை வரதட்சிணை கேட்குமளவுக்கு மாப்பிள்ளையை எனக்குத் தெரியாமல் தேடி விட்டீர்களா?" என்று தாயின் சொல்லை வைத்தே எள்ளி நகை ஆடியவள், அழுத்தமாய்ப் பேச ஆரம்பித்தாள்.

"அபி ஆன்ட்டியிடம் வேண்டுமென்றால் என் திருமணம் என்று சாக்குச் சொல்லி இருக்கலாம். எனக்கு எதற்கு என்ற உண்மைக் காரணம் மட்டும் சொல்லுங்கள், போதும். என்னை ஏமாற்றப் பார்க்காதீர்கள்!"

மைதிலி எரிச்சலின் உச்சத்திற்குப் போய் விட்டாள். 'வேண்டாம் என்றால் விடவேண்டியதுதானே! நாங்கள் இருவர் நிம்மதி இழந்து தவிப்பது போதாதா... இவளும் வேறு அனுபவிக்க வேண்டுமா!' என்று யோசித்தவளாய்,

"உனக்காகத்தான்... உன் திருமணத்திற்காகத்தான். வேறொன்றுமில்லை! நீ இதில் தலையிடவும் தேவை இல்லை. எங்களுக்குத் தெரியும்... எது நல்லது கெட்டது என்று. நீ உன் வேலையை மட்டும் பார். இப்போது ஆபீஸிற்குக் கிளம்புகிற வழியைப் பார். தேவை இல்லாத விசயத்தில் எல்லாம் தலையிட முயலாதே!" என்று கடுமையாகவே கீர்த்தியைப் பேசினாள்.

தன் தாயிடமிருந்து இவ்வளவு கடுமையான வார்த்தையை எதிர்பார்க்காதவள் சற்று நிலை தடுமாறினாள் தான். இருந்தாலும், 'தான் அப்படி என்ன கேட்டு விட்டோம்... ஏன் இவ்வளவு அதிகமாய்க் கடுமையைக் காட்டுகிறார்கள்...' என்றபடி மைதிலியை முறைத்தபடி, அப்பாவின் சம்மதத்தோடுதான் என்று சொன்னார்களே... என்றபடி ராகவுக்குப் போன் செய்தாள்.

"அப்பா! சாரிப்பா... வேலை நேரத்தில் தொந்தரவு செய்ததற்கு..." என்று ஆரம்பித்து, மைதிலி சொன்னதைப் பற்றி விசாரித்தாள். மைதிலியோ அவளைத் தடுக்கக் கூடத் திராணியில்லாமல், தன் மகளை வெறித்தபடி பார்த்த பார்வையில் இருப்பதைக் கூட அலட்சியம் செய்தபடி தந்தையிடம் பேசிக் கொண்டிருந்தாள் கீர்த்தி.

அவள் சொன்னதை எல்லாம் கேட்ட ராகவிற்கு மைதிலி, கீர்த்தியிடம் மாட்டிக் கொண்டாள் என்பது புரிந்தது. அவளும் ஏதோ சொல்லிச் சமாளித்திருக்கிறாள் என்பதை உணராமல் இல்லை. ஆனால், இப்போதைக்கு அவளிடம் எதுவும் சொல்ல முடியாதல்லவா! அதனால் மனைவி சொன்ன பதிலை மாற்ற விரும்பாமல்,

"ஆமாடா! நான்தான் கேட்கச் சொன்னேன். நான் சொல்லித்தான் மைதிலி பேசினாள். இதைப் பற்றி இரவு பேசிக் கொள்ளலாம். நீ ஏன் இவ்வளவு தீவிரமாக இருக்கிறாய்? ஆபீஸிற்குச் செல்லாமல் உனக்கு ஏன் இந்த வேண்டாத வேலை எல்லாம்? ரிலாக்ஸ் பண்ணி விட்டுக் கிளம்பு. மைதிலியைப் போட்டுத் தொந்தரவு செய்யாதே!" என்றபடி போனை வைத்தார்.

அவள் மீண்டும் ஏதோ பேச ஆரம்பித்தவள்... அவள் பதிலைக் கூடக் கேட்காமல் போனை வைத்ததில் உதடுகள் துடித்தன. கண்களில் கண்ணீர் முத்துக்கள் இப்போதே எனும்படி உதிரக் காத்திருந்தன.

கீர்த்திக்கு ஒன்று மட்டும் நன்றாகத் தெரிந்தது. இருவரும் சேர்ந்து மறைக்கிறார்கள். இப்போதைக்கு என்ன என்று கேட்டால்... ஒன்றும் வராது. கேட்கிற முறைப்படி கேட்டால் இவர்கள் எல்லாம் சொல்வார்கள் என்று தாயை முறைத்தபடி, கண்ணீரைத் துடைத்து விட்டு விருட்டென்று மைதிலியிடம் சொல்லக் கூடத் தோன்றாமல் வீட்டை விட்டு வெளியேறினாள்.

அலுவலகத்திலும் இதே நினைவு அவளை அலைக்கழித்தது. வேலை எதிலும் கவனம் பதியவில்லை. பாலா வேறு இந்த வாரத்தின் இறுதியில் தருமாறு ஒரு டாஸ்க் அவளுக்கு அசைன் செய்திருந்தான். எதிலும் கவனம் பதிக்க முடியாமல் ஏன் இவர்களுக்கு இவ்வளவு பணம் தேவை என்று தலையைப் பிய்த்துக் கொண்டு பதிலைத் தேடினாலும் கிடைக்கவில்லை.

அன்று இரவு வேண்டுமென்றே கீர்த்தி மிகவும் தாமதமாகக் கிளம்பினாள். வீட்டிலும் சொல்லவில்லை. ராகவ், மைதிலி இவர்களிடமிருந்து வந்த போன் கால்களையும் அட்டென்ட் செய்யாமல், தன் கோபத்தைக் காண்பிக்க வேண்டுமென்றே கட் செய்து கொண்டே இருந்தாள்.

கீர்த்தியின் பிடிவாதத்தை நன்கு புரிந்தவர்கள் ராகவும் மைதிலியும்... அவ்வளவு எளிதாகப் பிடிவாதம் பிடிக்க மாட்டாள். ஆனால், பிடித்து விட்டால் அதை மாற்றுவது அவ்வளவு எளிதல்ல என்பது நன்றாகவே தெரியும் அவர்களுக்கு. என்றாவது ஒரு நாள் அவளுக்குத் தெரியாமலா போகப் போகிறது என்று தங்களுக்குள்ளாகவே பேசிக் கொண்டவர்கள்... அதனால் அவள் வந்ததும் அவளிடம் சொல்லி விடலாம் என்றபடி அவளின் வருகைக் காகக் காத்திருந்தனர்.

வெகு நேரம் கழித்து வீட்டிற்கு வந்தவள் ஹாலில் அமர்ந்திருந்த இருவரிடமும் முறைப்பை மட்டும் செலுத்தி விட்டுத் தன் அறைக்குள் போய்க் கதவை டமாரென்று அடைத்துத் தாழிட்டுக் கொண்டாள். அவள் செய்கைகளை எல்லாம் பார்த்த மைதிலி,

"பார்த்தீங்களா அவளை... என்ன ஒரு திமிர்! இத்தனை தடவை போன் பண்ணி இருக்கிறோமே... ஒரு காலாவது அட்டெண்ட் செய்தாளா? இப்போ ரூமிற்குள் போய் என்ன வேகமாய்க் கதவை அடைக்கிறாள்..." என்று மகளைப் பார்த்துப் புலம்பினாள்.

ஆனால், ராகவோ, தன் மகளின் பிடிவாதத்தை ரசித்தபடி, தற்போதைய தனது கவலைகளை எல்லாம் மறந்தபடி, "இப்போ என் பொண்ணை எதுக்குத் திட்டுகிறாய்? காலையில் அவள் கேட்டபோது ஒழுங்காக நடந்ததைச் சொல்லியிருக்க வேண்டும். அதை விட்டு விட்டுக் கல்யாணம், நகை எடுக்க என்றெல்லாம் பூச் சுத்தினால் யாருக்குத்தான் கோபம் வராது! அதோட நானும் உனக்குச் சால்ரா போட்டேன். பிறகு என்ன செய்வாள்? என் பொண்ணு சும்மால்லாம் பிடிவாதம் பிடிக்க மாடடாள். சும்மா அவளைத் திட்டாதே!" என்றபடி மகளுக்கு மறுபடியும் போனில் கால் பண்ண ஆரம்பித்தார்.

"இப்போ நாம என்ன பண்ணி விட்டோம் என்று இப்படிப் பண்ணுகிறாள். அவளைக் கஷ்டப்படுத்தக் கூடாது என்று நினைத்தால் இவ்வளவு அடம். இந்த நேரத்தில் இவள் வேறு... விடுங்க. கோபம் தீர்ந்தால் தானே வெளியே வருவாள்."

மைதிலிக்குக் கீர்த்தியின் பிடிவாதம் ஏனோ இன்று எரிச்சலாக வந்தது. ஏனென்று புரியாமல் இல்லை அவளுக்கு. அவள் கவலை அவளுக்கு.

மைதிலி பேசிக் கொண்டிருக்கும்போதே, கதவு திறக்கும் சத்தம் கேட்டது. ஆனால், கீர்த்தி வெளியே வரவில்லை.

முதலில் ராகவ்தான் உள்ளே சென்றார். அங்கு கம்ப்யூட்டர் முன் அமர்ந்திருந்தாள் கீர்த்தி. முகம் கோபத்தில் சிவந்திருந்தது. கண்கள் கலங்கியிருந்தன. ராகவைத் திரும்பிப் பார்த்து விட்டு உம்மென்று மீண்டும் கம்ப்யூட்டரில் பார்வையினைத் திருப்பினாள்.

அவளின் அருகே மற்றொரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தார்.

இத்தனை நேரத்தில் மைதிலி உள்ளே வரவில்லை. எல்லாம் அவளது அவசரத்தினால்தான் நேர்ந்தது. ஆனால், எதற்காக அவள் மறைக்கிறாள் என்பதைத் தன் மகள் புரிந்து கொள்ளாமல் இந்த அடம் பிடிப்பது சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. இன்னும் ராகவ் மீது கோபம் வந்தது. இப்படிச் செல்லம் கொடுத்து வளர்த்ததால்தானே அவள் கஷ்டப்படுவாளோ என்று மனம் துடிக்கிறது.

ஆனால், கீர்த்தியின் மனமோ வேறு விதமாய்ச் சிந்தித்தது. ஏன் தன் பெற்றோர் தன்னிடம் மறைக்கப் பார்க்கிறார்கள்? நல்லதோ, கெட்டதோ என்னிடம் சொன்னால் என்ன... கண்டிப்பாய்க் கெட்டதாகத்தான் இருக்க வேண்டும். அவர்கள் இருவரும் துக்கப்பட... தான் மட்டும் எப்படிச் சந்தோஷமாய் இருக்க முடியும்? சந்தோஷம், துக்கம் என்று

எது வந்தாலும் இருவரும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வர். ஆனால், இவளிடம் சந்தோஷத்தை மட்டும்தான் சொல்ல வேண்டுமா! நான் இன்னும் சிறு குழந்தையா என்று மனதிற்குள் பொருமிக் கொண்டிருந்தாள்.

"கீர்த்திம்மா! சாரிடா. அப்பா மேல எவ்வளவு கோபம் இருந்தாலும் பேசாமல் மட்டும் இருக்காதடா! நானும் அம்மாவும் எது பண்ணினாலும் உன் நல்லதுக்குத்தானே செய்வோம். உனக்குத் துன்பம் வேண்டாம் என்று நினைத்து நாங்கள் செய்யப் போய் அதுவே உனக்கு எங்கள் மேல் கோபம், வருத்தத்தை உருவாக்கி விட்டது..." என்று அவர் பேசிக் கொண்டிருக்கும்போதே,

"அதுதான் ஏன் என்று கேட்கிறேன், அப்பா! ஏன் என்னிடம் மறைக்கிறீர்கள்? ஏன் என்னைப் பிரித்துப் பார்க்கிறீர்கள்? சந்தோஷமான விசயத்தை மட்டும் என்னிடம் சொல்ல வேண்டுமென்றால், நான் சந்தோஷமாகவே இருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்த்தால், நான் மட்டும் என்ன வானத்தில் இருந்து குதித்து வந்தேனா... நானும் மனிதப் பிறவிதானேப்பா! வாழ்க்கை என்றால் எது வந்தாலும் சமாளிக்க வேண்டும் என்று எனக்குச் சொல்லி விட்டு, என்னிடம் சொல்லக் கூட முடியாதபடி, அப்படி என்னதான் நடந்தது...? எனக்கு முன்னால் ஏன் நீங்க இரண்டு பேரும் நாடகம் ஆடுகிறீர்கள்? உங்க ரெண்டு பேருக்கும் நடிக்கக்கூடத் தெரியாதுப்பா! பாருங்க, ஒரு நாள் கூட முடியவில்லை. என்னவென்று சொல்லுங்கள் அப்பா. எனக்கும் கோபம் இல்லை. உங்கள் இருவரிடமிருந்து ஏன் என்னைப் பிரிக்கப் பார்க்கிறீர்கள் என்றுதான்..." என்றபோதே அவளது குரல் அடைத்தது.

இருந்தாலும் சரிப்படுத்தியபடி மீண்டும் தொடர்ந்தாள்.

"என்னப்பா... என்ன நடந்தது? இப்போதாவது சொல்லுங்களேன். எனக்குத் தலை வெடிக்கிறது. நானும்

சேர்ந்து எப்படிச் சமாளிக்கலாம் என்று யோசிக்கிறேன்..." எனும்போதே.

அவளது குரலில் தன்னம்பிக்கையும், தைரியமும், கூடவே எது வந்தாலும் எதிர் நோக்கும் பக்குவமும் இருந்ததினை அவளாலும் உணர முடிந்தது. ராகவனாலும் தான்!

அவளின் தொடர்ச்சியான பேச்சினாலும், அதிலிருந்த நியாயமான உணர்வின் தாக்கத்தினாலும் அவரினுள்ளும் போராட்டம் நடந்தது. அவள் கேட்பதில் என்ன தவறு? அவளை இன்னும் சின்னக் குழந்தையாக நினைத்ததுதான் தவறு. ஏன் நான் நினைக்கவில்லை? என் மகள்... என் கவலை என்ன என்று கேட்குமளவிற்கு வளர்ந்து விட்டாள். ஆனால், நான் இன்னும் அவளின் குழந்தைப் பருவத்தில் இருக்கும் மன நிலையிலேயே இருக்கிறேனோ... சொல்லப் போனால் நான்தான் பக்குவம் அடையவில்லை போல... என்றவாறு மகளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"இப்படியே பார்த்துக் கொண்டிருப்பது எல்லாம் வேலைக்கு ஆகாது. ஒழுங்கா என்னன்னு சொல்லுங்க," என்று சற்று நேரத்திற்கெல்லாம் பழைய கீர்த்தியாக மாறியிருந்தாள். கோபமெல்லாம் முகத்தில் வடிந்திருந்தது.

"ஒண்ணுமில்லடா!" என்று ராகவ் ஆரம்பித்தவுடன்,

மீண்டும் தந்தையை முறைத்தவள், "என்ன ஒன்றுமில்லை. ஒழுங்கா நடந்ததை நடந்தது மாதிரிச் சொல்லுங்க. என் மனசு கஷ்டப்படக் கூடாது என்று ஏதும் சென்சார் பண்ணிடாதீங்க... புரிந்ததா?" என்று கண்டிப்பு மாறாமல் அதிகாரமாய்க் கூறினாள் கீர்த்தி.

இத்தனை நிமிடங்களில் மைதிலி, தனது அறைக்குள் வரவில்லை என்பதை உணர்ந்த கீர்த்தி சற்று வெளியே எட்டிப் பார்ப்பது போல் பார்த்து விட்டுத் தந்தையிடம் மீண்டும் திரும்பினாள்.

அதன் பிறகு ராகவ் முன்தினம் நடந்தது முதல் சற்று முன்வரை உள்ள நிலைமையினை அவளுக்குப் புரியும்படி விளக்கினார்.

அவர் சொன்னதை எல்லாம் கவனமாகக் கேட்டவளுக்கு இதயம் குலுங்கத்தான் செய்தது. ஏன் தன்னிடம் மறைத்தார்கள் என்பது புரிந்தது. இனி, தன் தந்தை என்ன செய்யப் போகிறார் என்பது குறித்து ஒன்றும் புலப்படவில்லை. அவளுக்குப் பேச்சே வரவில்லை.

"அப்பா... என்... என்ன பண்ணப் போறீங்க? நாம் இவ்வளவு பணத்திற்கு எங்கு போவது...? நம்மிடம் இருக்கும் அனைத்தையும் விற்றால் கூட முடியாதே! ஏன்ப்பா யாரோ தவறு செய்ய நாம் போய்க் கஷ்டப்பட வேண்டும்?" என்று புலம்பியதைத் தவிர அவளால் வேறொன்றும் சொல்ல முடியவில்லை.

பின் மைதிலியிடம் சென்று அமர்ந்தாள் கீர்த்தி.

"அம்மா, என்னை மன்னித்து விடுங்கள். நான் ஏதோ தெரியாமல் கொஞ்சம் பிடிவாதமாய் நடந்து கொண்டேன். நான் சின்னப் பொண்ணுதானே! என்னை மன்னிக்க மாட்டீங்களா?" என்று தாயிடம் கெஞ்சலும், கொஞ்சலுமாய்ப் பேச...

ராகவனோ, "என்ன நடக்கிறது இங்கே... கீர்த்திம்மா! என்கிட்ட நான் இன்னும் சின்னப் பொண்ணு இல்லேன்னு பேசினாய். ஆனால், மைதிலிகிட்ட அப்படியே மாத்திட்ட. ஆளையே கவுத்திடுவடா!" என்று புன்னகை புரிந்தார்.

ஆனால், மைதிலி வழக்கம் போல் கிண்டலை ரசிக்காமல், கீர்த்தியிடம், "கீர்த்திடா... இனிமேல் காரணம் தெரியாமல் இப்படி யெல்லாம் பிடிவாதம் பிடிக்காதே. அடுத்தவரின் சூழ்நிலையையும் புரிந்து நடந்து கொள்ளப் பழகிக் கொள். இன்று உன் பிடிவாதத்தால் ஜெயித்து விட்டதாய் நினைத்து இதே வழி முறையினை மீண்டும்

முயற்சிக்காதே. இதை என்னுடைய அறிவுரையாக எடுத்துக் கொள்," என்றாள்.

மைதிலியின் முகத்தில் இருந்த தீவிரம் அவளுக்குச் சற்றுக் கலக்கமூட்டினாலும், "சரிம்மா... இப்போ எனக்குப் பசிக்கிறது. வாங்க, போகலாம்!" என்று நிலைமையினைச் சற்று மீட்டாள்.

கீர்த்தி பெற்றோர் முன் ஓரளவு பேசிச் சிரித்தாலும் உள்ளே என்ன பண்ணப் போகிறார் தன் தந்தை... இன்னும் பத்து நாட்களுக்குள் ஏதாவது வழி பிறக்குமா என்று சிந்தித்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அவள் மட்டுமில்லை. மற்ற இருவரின் நிலைமையும் அதுதான் என்பது கீர்த்திக்குத் தெரியாமல் இல்லை.

"அப்பா, மாமாவிற்குக் கால் பண்ணினால் என்ன... அவர் ஏதாவது செய்ய மாட்டாரா? அவரோட தங்கை மைதிலி கஷ்டப்படுகிறாள் என்றால் செய்ய மாட்டாரா... என்ன?" - கிண்டல் பாதி, கவலை பாதி கலந்து கேட்க,

ராகவும் மைதிலியும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர்.

"கீர்த்திடா சாரி!" என்று இருவரும் ஒரே நேரத்தில் சொல்ல...

இப்போது கீர்த்தி புரியாமல் விழித்தாள்.

"மாமாகிட்ட பணம் கேட்கச் சொன்னால்... ஏன் சாரி என்கிறார்கள்! ஒருவேளை அவரிடம் கேட்டு இல்லையென்று சொல்லி விட்டாரா?" என்று யோசித்தவள்...

"இப்போ எதுக்கு சாரி கேட்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

இப்போது அவளிடம் மறைத்த விநோத் மேட்டர் முதல் அனைத்தும் சொல்வது மைதிலியின் முறை ஆனது.

கேட்டு முடித்தவள்... "இன்னும் என்னென்ன மறைத்திருக்கிறீர்கள்? ஏதாவது இருந்தால் சொல்லி

விடுங்கள்..." முகத்தில் கொஞ்சம் கோபம் இருக்கத்தான் செய்தது கீர்த்திக்கு.

"இனிமேல் உன்னிடம் எதையும் மறைக்கவில்லை. போதுமா... சாப்பிடு!" என்று மைதிலி சொல்ல... அதற்கு மேல் வேறொன்றும் பேசவில்லை. பேசவும் முடியவில்லை.

மாமா வீட்டிலும் கேட்க முடியாது. அப்பா என்ன செய்வார்... என்ன செய்வார் என்ற கேள்வியே மீண்டும் மீண்டும் அவளைப் பந்தாடியது.

அதிகாலைவரை அவளால் தூங்க முடியாமல் புரண்டு கொண்டிருந்தாள். அதன்பின் எப்போது தூங்கினாள் என்று அவளுக்கே தெரியவில்லை.

15

அடுத்து வந்த இரண்டு நாட்களில் ராகவ் பம்பரமாய்ச் சுழன்றதில் வீடு, லேண்ட் ஆகியவை விற்க ஏற்பாடு செய்து விட்டார். ஆனால், அவர் எதிர்பார்த்த தொகைக்கு முடியவில்லை. அதற்கும் மேல் நண்பர் ஒருவரின் மூலம் கடனுக்குக் கேட்டு வைத்தார். அதுதான் பெரிய தொகை. இதைத் தவிர, அவர்கள் சேமிப்பு, நகை எல்லாம் சேர்த்து ஓரளவு நம்பிக்கையாக இருந்தனர். அன்றைய தினம் வெள்ளி என்பதால் நாளை மறுநாள் போய்ப் பார்க்கலாம் என்று முடிவு செய்திருந்தார் ராகவ்.

கடந்த சில நாட்களாகவே பாலா கீர்த்தியைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறான். முதலில் கவி போனதால்தானோ என்று பெரிதாக நினைக்கவில்லை. மெல்லச் சரி ஆகிவிடும் என்றுதான் நினைத்திருந்தான். ஆனால், இப்போதெல்லாம் அவள் உம்மென்று இருப்பது போல் தோன்றியது. இவனே சில சமயம் வேறு ஏதாவது பேசினால் கூட நழுவுவது போல் தெரிந்தது. அவள் முகத்தில் எப்போதும் ஒரு புன்னகை இருக்கும். சில சமயம் இவனுக்கே

பொறாமையாய் இருக்கும். எப்போதும் இவள் எப்படி இப்படியிருக்கிறாள் என்று.

அன்று அவள் வீட்டிற்குப் போய் வந்த பின்னர் அதற்கு விடை தெரியாமல் இல்லை. இப்படி ஒரு குடும்பத்தில் இருப்பவளுக்கு மகிழ்ச்சிக்குக் குறைவேது? ஏன், அவனுக்கு மட்டும் என்ன... அவனுக்கும் பாசமான பெற்றோர்தான். அவனது நிம்மதியின்மைக்குக் காரணம் எல்லாம் இந்தக் காதல் என்ற ஒன்று வந்ததால்தான். இல்லாவிட்டால் என்றவன் தன்னைப் பற்றிய நினைவுகளை ஒதுக்கி விட்டு மீண்டும் கீர்த்தியிடமே வந்தான். அவன் கொடுத்த வேலையினை இன்னும் அவள் முடிக்கவில்லை. அவள் அறிவிற்கு அந்த டாஸ்க் பெரிய விசயமில்லை. பின் ஏன் இப்படி என்று நினைத்தவன் அவளையே அழைத்துக் காரணம் கேட்கலாம் என்று அவளை அவனது அறைக்கு அழைத்தான்.

அறைக்குள் நுழைந்தவளைப் பார்த்தவனுக்கு, அவள் முகத்தில் இருந்த கவலைக் கோடுகள் அப்பட்டமாய்த் தெரிந்தன. இருந்தாலும் உடனே அவளிடம் அதைப் பற்றி ஒன்றும் கேட்காமல், அலுவலக வேலையினைப் பற்றி விசாரித்தவன், இன்று மாலைக்குள் அதைத் தனக்கு முடித்துத் தர வேண்டும் என்றவுடன், அவனைப் பார்த்து விழித்தாள்.

"என்ன கீர்த்தி?"

"சார்! இன்னைக்குள் முடிக்க முடியாது. இன்று உடனே முடிக்க வேண்டுமா?" என்று குற்ற உணர்வில் தடுமாறினாள் கீர்த்தி.

அவளின் பதிலில் முகத்தைச் சுருக்கியவன், "நான் உங்களுக்குக் கொடுக்கும்போது நேற்று முடித்துத் தர வேண்டுமென்று சொல்லி இருந்தேன். நீங்கள் என்ன வென்றால் இன்றுகூட முடியாது என்கிறீர்கள்..." என்று முடித்த

போது கம்பெனியின் எம்.டி. என்ற முறையில் அவனது குரலில் கொஞ்சம் அனல் அடிக்கத்தான் செய்தது.

பாலாவின் முகச் சுழிப்பில் சிறிது அதிர்ந்தவள், "சார், இந்த ஒரு தடவை மட்டும் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் திங்கட் கிழமைக்குள் முடித்து விடுகிறேன்..." என்று கீர்த்தி மென்று முழுங்கிச் சொன்னதுதான் தாமதம்.

"என்ன மேடம் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இன்று முடிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டி ருக்கிறேன். நீங்கள் உங்கள் வசதிக்குப் பேசினால் எப்படி? இங்கு நான் முதலாளியா, இல்லை... நீங்களா? எனக்கு இன்று கூட அதிகம்தான். உங்களிடம் கொடுத்தால் முடித்துக் கொடுப்பீர்கள் என்று நினைத்தால் நீங்களும் இப்படிச் செய்கிறீர்கள். எனக்குத் தெரியாது... இன்று மாலைக்குள் எனக்கு முடித்தாக வேண்டும், கீர்த்தி! இப்போ நீங்கள் போகலாம்..." என்று வார்த்தைகளில் அனல் கக்கினான்.

அதற்கு மேல் அங்கு நின்றால் அழுது விடுவோமோ என்றுகூடக் கீர்த்திக்குத் தோன்றியது. அவளது தவறுதான். குடும்பப் பிரச்சனையில் அவள் கொஞ்சம் கவனம் பிசகிவிட்டாள் எனும் உண்மை உறைக்கத்தான் செய்தது. ஏற்கெனவே அவள் இருந்த மனநிலையில் பாலாவின் வார்த்தைகள் வேறு அவளைத் தாக்க... கண்கள் கசிந்து விட்டன.

இனி நிற்கக் கூடாது என்று அவசர அவசரமாய், "சரி சார்!" என்ற வார்த்தைகள் கூட வெளியே வராது தொண்டைக்குள் அடைத்தன. எப்படியோ நிமிராமல் பேசி விட்டு, அவள் வெளியே வந்தாலும் கண்ணீர் துளிர்த்த அவள் கண்கள் பாலாவின் கவனத்தில் இருந்து தப்பவில்லை.

அவளை அனுப்பி விட்டுச் சிறிது நேரம் அமர்ந்திருந்தவன், அவள் அப்படிப் போனது உறுத்த மீண்டும் அழைத்தான்.

உள்ளே வந்தவளை... நன்றாக உற்றுப் பார்த்தான். தனது அறையினை விட்டுப் போனதிலிருந்து அழுதிருக்கிறாள். இவன் அழைத்தவுடன் முகம் கழுவி வந்திருக்கிறாள் என்பது அவளைப் பார்த்தவுடனே விளங்கியது.

"சொல்லுங்க சார்!" எனும்போதே அவள் குரல் கமறியது.

"உட்காருங்க கீர்த்தி, முதலில்.

"நீங்கள் திங்கட்கிழமை முடித்துக் கொடுத்தால் போதும். நான் பேசி விட்டேன். இப்போதாவது நார்மல் ஆவீர்களா?" என்று சினேகமாய்ப் புன்னகைத்தான்.

"தேங்க் யூ சார்!" என்றபடி கிளம்ப எத்தனித்தவளை... "இருங்க... இருங்க கீர்த்தி! நான் உங்களிடம் பேச வேண்டும்..." என்று பாலா சொன்னவுடன் குழப்பமாய்ப் பார்த்தாள்.

"நான் கேட்பது தவறா... சரியா என்று தெரியவில்லை. தவறாய் இருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களைப் பற்றியும், உங்கள் திறமையைப் பற்றியும் எனக்குத் தெரியும். ஒரு பணியை உங்களிடம் கொடுத்தால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னமே தருவதுதான் உங்கள் வழக்கம்.

"ஆனால் இப்போது கொடுத்திருந்ததோ உங்கள் அறிவுக்குச் சாதாரணம். வழக்கமாகச் செய்யும் டேட்டா பேஸ் வொர்க்தான். ஆனால், அதை முடிக்க முடியவில்லை எனும்போது கம்பெனியின் எம்.டி. என்ற முறையில் எனக்கு வருத்தம்தான். ஆனால், அதையும் தாண்டி யோசித்துப் பார்க்கும்போது ஏன் முடியவில்லை என்று நினைத்தபோது உங்களால் ஒரு மனதாக இருக்க முடியாமல் ஏதோ ஒன்று அலைக்கழிக்கிறது என்பதுதான் எனக்குத் தோன்றியது.

"அப்படி இருந்தால் ஒரு வாரம் லீவ் எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் பிரச்சனை சால்வ் ஆன பிறகு, மீண்டும் வேலையில் சேருங்கள். ஏனென்றால் ஒரு

திறமையான எம்ப்ளாயி சில காரணங்களுக்காகப் பின்னடைவதை நான் விரும்பவில்லை. இல்லை... அலுவலகம் வேறு, சொந்தப் பிரச்சனைகள் வேறு என்று உங்களால் இருக்க முடியுமென்றால் எனக்கு ஒன்றும் இல்லை. ஏன், என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். என்னுடைய பிரச்சனை என்னவென்று ஓரளவு தெரியும். இருந்தும் நான் இந்தக் கம்பெனியை நிர்வகிக்கிறேன் அல்லவா! ஸோ, நீங்கள் ஒரு நல்ல முடிவுக்கு வருவீர்கள் என்று நினைக்கிறேன். மேலும்..." என்று இழுத்தவன்,

"நீங்க தவறாக எடுத்துக் கொள்ளவில்லை என்றால் என்னால் ஏதாவது உதவி வேண்டும் என்றால் கூடச் செய்யத் தயாராக இருக்கிறேன். அதாவது பண விசயமாக இருந்தால் கூட. இந்தக் கம்பெனி எம்ப்ளாயி என்ற முறையில் மட்டுமில்லாமல், ஏனோ தெரியவில்லை, உங்களை இப்படிப் பார்க்க வருத்தமாய் இருக்கிறது. அதனால்தான் கீர்த்தி, தயங்காமல் சொல்லுங்கள்!" என்றான் பாலா.

முதலில் இவனிடம் சொல்லி என்ன ஆகப் போகிறது? 'அப்படியா!' என்றுதான் சொல்லுவான். அதிகமாய்ப் போனால் உதவி செய்கிறேன் என்று சொல்லி விட்டதால், சிறிது பணமும் தரலாம். அதற்கு மேல் என்ன செய்ய முடியும்? பின் எதற்குச் சொல்ல வேண்டும்... வேண்டாம் என்றுதான் நினைத்தாள். ஆனாலும் விதி வலியது இல்லையா! அதை அவளே வேறு மாதிரியும் யோசிக்க வைத்தது.

பாலாவிடம் சொன்னால் அவருக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி வேறு யாரிடமாவது பணம் கடனாகக் கேட்கச் சொல்லலாமே என்று குறுக்காகவும் சிந்தித்தது. அதுவே வென்றது. அவள் சொல்லாமல் போயிருந்தால்கூடப் பாலா அவளது வாழ்க்கையில் நுழைந் திருக்க மாட்டானோ... என்னவோ... யாருக்குத் தெரியும்.

கடந்த சில நாட்களாய்த் தான் ஏன் இப்படி ஆகக் காரணம் என்று அன்றிலிருந்து இன்றுவரை நடந்த விசயங்களை ஒன்று கூட விடாமல் சொல்லி முடித்தாள் கீர்த்தி.

இவன் யார், இவனிடம் ஏன் சொல்லுகிறோம் என்றெல்லாம் அவள் நினைக்கக் கூட இல்லை. அந்த எண்ணம் மருந்துக்குக்கூட வரவில்லை. நீண்ட நாட்களாய்ப் பழகியிருந்தவன் போல் தன் நிலைமையினை விளக்கி, அதற்குத் தீர்வும் அவனிடமே கேட்டாள். அவளுக்கு யாரிடமாவது சொன்னால் பாரம் குறையும் போல் இருந்ததால்... பாலா கேட்டவுடன் தன் மனதில் இருந்ததை எல்லாம் கொட்டி விட்டாள்.

அவள் சொல்வதை எல்லாம் நிதானமாய்க் கேட்டவன், "கீர்த்தி, உன் அப்பா சொல்வதெல்லாம் சரிதான்..." என்று ஒருமைக்குத் தாவியிருந்ததை அவனும் உணர முடியவில்லை. அவளும் உணரக் கூடிய நிலைமையில் இல்லை. "ஆனால், அதோடு பிரச்சனை முடியப் போகிறதா... கடன் என்று ஒன்று உங்கள் குடும்பத்தை நெரிக்கும்தானே?" என்று அவன் கேட்டவுடன்,

"இல்லை சார்! அது இப்போது பிரச்சனை இல்லை. என் அப்பாவின் பேர் கெட்டுப் போய் விடக் கூடாது. அதுதான் முக்கியம். கண்டிப்பாக என் அப்பாவின் பணம் கிடைக்கும். அவரது நாணயத்திற்குப் பங்கம் வரக் கூடாது. அவ்வளவு தான்!" என்றாள் அவசர அவசரமாய்.

இவர்கள் வாங்கப் போகும் இவ்வளவு பெரிய தொகை கொடுப்பவன், அதுவும் உடனே என்றால் அவன் கண்டிப்பாகக் கொஞ்சம் கறார், பலம் உள்ளவனாகத்தான் இருக்க வேண்டும். அடிப்படை எதுவும் இல்லாமல் எதுவும் கொடுக்க மாட்டான். வீட்டைக் கூட விற்கப் போகிறார்கள் என்றால் எந்த அடிப்படையில் கடன் தருவான் என்று குழம்பினான்.

இருந்தாலும் அவளிடம் ஏதும் சொல்லாமல், தானே வாங்கிக் கொடுக்கலாம் என்று உடனே முடிவு செய்தான்.

"கீர்த்தி, நான் எனக்குத் தெரிந்தவர்கள் மூலம் நானே வாங்கித் தருகிறேன். உன் அப்பாவிடம் சொல்லி அவரிடம் எவ்வளவு பணம் கடனாக வாங்கப் போகிறாரோ... அதை மட்டும் சொல். நான் வாங்கித் தருகிறேன். நான் இதை வெறும் வார்த்தையாக மட்டும் சொல்லவில்லை!" என்று நிறுத்தினான்.

கீர்த்திக்குப் பாலா பேசுவதை நம்பவே முடியவில்லை. "சார்! உண்மையாகவே சொல்கிறீர்களா?" என்றபோது, அவளையும் அறியாமல் குரல் சற்று உயர்ந்தது.

"ஆமாம் கீர்த்தி, நம்புங்கள். திடீரெனத் தெரியாத வர்களிடம் கடன் பெறுவதெல்லாம் பாதுகாப்பான ஒன்றல்ல. அதனால்தான் நான் விசாரித்து விட்டு இன்று மாலைக்குள் சொல்கிறேன். சரியா?"

"சார்! என்னால் நம்பவே முடியவில்லை..." என்று மீண்டும் அதே வார்த்தையினை உதிர்த்தாள்.

"ஹலோ, வேண்டுமென்றால் என்னைக் கிள்ளிப் பார்த்துக் கொள்ளுங்கள். அதன் பிறகாவது நம்புவீர்களா? மேலும் என்னவோ நான் என்னிடமிருக்கும் தொகையினைத் தருவது போல் ஆச்சரியப்படுகிறீர்கள்..." என்றவுடன்,

அதிகமாய் உணர்ச்சி வசப்படுகிறோமோ என்று தன்னைத் தானே சமாளித்தவள், "சார், இன்றே அந்த டாஸ்க் முடித்து விடுவேன் சார்! எனக்கு இப்போதைக்கு இந்த மட்டில் நிம்மதி கிடைத்தது பெரிய ஆறுதல் சார்!" என்றபோது, பாலாவிற்கே கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது.

'இப்படிச் சுருண்டு விட்டாளே... அவள் அதிகமாய்க் கஷ்டங்களை அனுபவித்தவள் இல்லை. அது மட்டும் இல்லாமல் பெற்றோர் மீது அளவு கடந்த பாசம் வைத்திருக்கிறாள். அதனால்தான் தாங்க முடியவில்லை...' என்பதும் அவனுக்கு அப்பட்டமாகத் தெரிந்தது.

"ம்ம்ம்... இனிமேல் எனக்கு வேலை ஆக வேண்டுமென்றால் இப்படி எல்லோரிடமும் கதை கேட்டு சால்வ் பண்ணினால்தான் போல..." என்றான் பாலா, சீண்டலாய்.

அவன் சொன்னவுடன் கீர்த்தியின் முகம் மீண்டும் சுருங்க...

"அய்யோ கீர்த்தி! நான் சும்மா சொன்னேன். இப்போதான் சரிப்படுத்தினேன். அதை நானே கெடுத்துக் கொண்டேன் போல்..." என்று வருத்தப்படுபவன் போல் கூறி, கீர்த்தியைப் பார்க்க... அவள் இன்னும் அதே முகத்தோடே, "வருகிறேன் சார்!" என்றதும், பாலாவிற்கு என்னவோ போல் ஆகிவிட்டது.

இருந்தாலும் விடாமல், "அப்போ மண்டேதான் வொர்க் கம்ப்ளீட் ஆகுமா?" என்றவுடன், அவனைப் புரியாமல் பார்த்தாள் கீர்த்தி.

"இல்லை. மறுபடியும் ஏதோ எதிலோ ஏறிவிட்டது போல் தெரிகிறது. அப்போ டாஸ்க் முடியாதுதானே! அதுதான் கேட்டேன்..." என்றான் அப்பாவியாய்.

கீர்த்தி இப்போது அவனைப் பார்த்து முறைத்தபடி, "வேதாளம் என்று நேராகவே சொல்லலாம் சார்! ஆனால், நான் வேலையினை முடித்த பிறகு... நான் கீர்த்தனவா இல்லை வேதாளமா என்று நீங்களே சொல்லுங்கள்..." என்று அமர்த்தலாகச் சொன்னவளிடம்,

'டன்...' என்று சிரித்தபடி கட்டை விரலை மட்டும் உயர்த்திக் காட்டினான் பாலா.

அவள் போன பிறகு இந்த மாதிரிக் கொடுக்கல் வாங்கலில் தொடர்புடைய அவன் நண்பன் ஒருவனுக்குக் கால் செய்தான் பாலா.

கீர்த்தி சொல்வதைப் பார்த்தால், ஒரு ஐம்பது லட்சத்திற்கு மேல் ஆகலாம் என்பதால், கிட்டத்தட்ட அந்த அளவில் வைத்துக் கேட்டான்.

உடனடியாக என்றவுடன், யோசித்த பாலாவின் நண்பன், "உனக்கு இது தேவை இல்லை என்பது புரிகிறது, பாலா. ஆனால், நீ வாங்கிக் கொடுப்பவர்கள் இந்த அரட்டல் மிரட்டலுக்கெல்லாம் ஓரளவு பதில் சொல்லத் தெரிந்தவர்களாய் இருக்க வேண்டும். அதற்காகத்தான் யோசிக்கிறேன். நாளைக்கு ஏதாவது பிரச்சனை என்றால் நாம் காரணமாய் ஆகி விடக் கூடாது என்று யோசிக்கிறேன்..." என்று மென்று முழுங்கினான்.

"என்னடா ஆனந்த், சொல்கிறாய்? பணம் வாங்குகிறோம். சொன்ன தவணைக்குள் கட்டப் போகிறோம். இதில் என்ன நடக்கும் என்று சொல்லுகிறாய்?"

"இல்ல பாலா! உனக்கு அதெல்லாம் தெரியாது. கொடுத்து விட்டு என்ன வேண்டும் என்றாலும் செய்வார்கள். நம்மை மாதிரிப் பணக்கார வர்க்கத்தினரையே விரல் விட்டு ஆட்டும் ஆட்கள் அவர்கள் என்றால், நடுத்தர வர்க்கம் என்றால் கேட்கவே வேண்டாம். அவ்வளவுதான். அதுதான் யோசிக்கிறேன். உனக்கென்றால் பரவாயில்லை. உடனே வாங்கித் தந்து விடுவேன். அதனால் நீ யோசித்து இன்று மாலைக்குள் சொல்..." என்றபடி வைத்தான்.

அவன் நண்பன் சொல்லிய பிறகு பாலாவுக்குக் கொஞ்சம் தயக்கமாய் இருந்தது. அதன் பிறகு மேலும் சில இடங்களில் விசாரித்தான் பாலா. சொன்னவர்கள் அனைவரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகத்தான் சொன்னார்கள்.

சொல்லியாகி விட்டது. என்ன பண்ணலாம் என்று யோசித்தவன்... ஏன் தானே அந்தத் தொகையினைக் கொடுக்கக் கூடாது... ஆனால், இவ்வளவு பெரிய தொகையினைக் கொடுக்கப் போய் என்னுடன் கீர்த்தனாவைச் சம்பந்தப்படுத்திப் பேசி விட்டால், அவனால் இன்னும் பிரச்சனை பெரிதாகி விட்டால் என்ன செய்வது என்றெல்லாம் யோசித்தவன், கடைசியில் ஒரு முடிவுக்கு

வந்தான். இவனே கொடுத்து விட்டு வேறு யாரிடமாவது வாங்கிக் கொடுத்ததாகச் சொல்லி விடலாம் என்று அதற்கு ஒரு தீர்வும் கண்டு பிடித்து விட்டுத் தன் வேலையில் மூழ்கினான்.

இதெல்லாம் அவன் வீட்டிலிருந்து போன் வரும் வரைதான். அதுவரை அவன் மனதில் சுயநலமாய் எதுவும் தோன்றவில்லை. அருந்ததியிடமிருந்து வந்த காலை அட்டெண்ட் செய்து பேசியவன்,

"என்னம்மா? சொல்லுங்க!" என்றான்.

"பாலா, அம்மா பேசறேன்ப்பா..."

"சொல்லுங்கம்மா!" என்றான் சற்று எரிச்சலாய்.... என்று இவன் சௌந்தர்யாவினைத் திருமணம் செய்து கொள்வதாய்ச் சொன்னானோ... அதிலிருந்தே அருந்ததி அவனிடம் வேறொரு நல்ல பெண்ணாய்த் தான் பார்ப்பதாகவும், அவள் வேண்டாம் என்று ஜெகநாதனுக்குத் தெரியாமல் இவனிடம் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதால் வந்த எரிச்சல் அது.

"பாலா, நான் பேசுவது எரிச்சலாகத்தான் இருக்கும் உனக்கு. ஆனால் நான் ஒன்று மட்டும் சொல்கிறேன். நீ உன் அப்பாவின் நலன் கருதிச் செய்கிறாய் என்பதெல்லாம் எனக்குத் தெரியாமல் இல்லை. நீ எடுத்திருக்கும் முடிவால் இன்று வேண்டுமென்றால் எல்லாம் சரியானதாக ஆகிவிட்ட மாதிரி இருக்கலாம். ஆனால், இதுவே நம் குடும்பத்தின் நிரந்தர அழிவிற்குக் கூடக் காரணமாய் இருக்கலாம். நீ என்று... அந்தப் பெண்ணும், அவள் அப்பாவும் பேசியதைச் சொன்னாயோ, அன்றே நாம் தப்பித்தோம் என்றுதான் நினைத்தேன். ஆனால், இப்போது நீயே அதற்குக் காரணமாவாய் போல் இருக்கிறது. உன் அப்பாவிடமும் இப்போது இருக்கும் சூழ்நிலையில் சொல்ல முடியாது. நான் உன்னைத் திருமணம் செய்து கொள் என்றுதான்

சொன்னேன்... சௌந்தர்யா என்று சொல்லவில்லையே, பாலா!"

அவனுக்கு வந்த கோபத்தில் என்ன பேசுவோம் என்று கூடத் தெரியவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு அருந்ததி பேசுவதை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தான்.

"சரி. இப்போ... என்ன பண்ணச் சொல்றீங்க? அவளும் வேண்டாம் என்றால் வேறென்ன செய்வது? என்னைப் பற்றித் தெரிந்து என்னைத் திருமணம் செய்ய யார் வருவார்கள்? நீங்களே சொல்லுங்க..."

அவன் எப்போது இப்படிக் கேட்பான் என்று காத்திருந்தாற் போல் அருந்ததி, "உனக்குப் பெண் கிடைக்காதா பாலா... நானே தேடி ஒரு நல்ல பெண்ணாய் உன் மனதினைப் புரிந்து நடப்பவளாயும், உன்னையும் மாற்றுபவளாயும் பார்த்துக் கொண்டு வந்து நிறுத்தினால் சரிதானே. அந்த வேலையினை என்னிடம் விடு!" என்ற -

தன் அம்மாவினை நினைத்து அழுவதா... இல்லை, சிரிப்பதா என்று தெரியவில்லை. வெட்டி விட வசதியாய் இவன் பார்த்தால் தன் தாய் ஒட்டிக் கொள்ள வசதியாய் ஆள் தேடுகிறாள். என்ன சொல்லி விளக்குவது... சௌந்தர்யாதான் என் திட்டத்திற்குச் சரியான ஆள் என்றா சொல்வது... என்று தனக்குள் நொந்தவன்,

"அம்மா, என்னை ஆளாளுக்குக் குழப்பாதீர்கள். போதும், நீங்க ரெண்டு பேரும் என்னைப் பற்றிக் கவலைப்பட்டதெல்லாம். என் முடிவு இதுதான். ஆளாளுக்கு உங்கள் இஷ்டத்திற்கு என்னை ஆட்டி வைக்க முயலாதீர்கள். அதுவே நிம்மதி எனக்கு..." எனும்போதே எதிர்முனை வைக்கப்பட்டிருந்தது.

'ச்சே... திருமணம் செய்கிறேன் என்றாலும் புலம்புகிறார்கள். வேண்டாம் என்றாலும் விட மாட்டேன் என்கிறார்கள். நல்ல பெண் வேற வேண்டுமாம் இவர்களுக்கு.' காத்திருக்கப் பொறுமை இல்லாதவர்களுக்கு

அது ஒன்றுதான் குறைச்சல்! நல்ல பெண் என்றால் வலை போட்டுத்தான் தேட வேண்டும்...' என்று மனதிற்குள் பொருமியவனின் மனதில் நல்ல பெண் என்ற போது மின்னல் போல் கீர்த்தியின் நினைவு வந்து போனதை அவனால் தவிர்க்க இயலவில்லை.

தன்னைத் தானே குட்டிக் கொண்ட அவன் நெஞ்சம் சிறிது நேரத்தில் பல்டி அடித்தது. ஏன் கீர்த்திக்கு இருக்கும் பிரச்சனைக்குக் கூட இது நல்ல தீர்வுதானே! நானும் அவள் மேல் ஆசைப்படவில்லையே! அவளுக்கும் பணத் தேவை தானே! கூட்டிக் கழித்துப் பார்த்தால் எல்லாம் சரிதான்.

கீர்த்தியின் தேவை பணம். இவனின் தேவை... இல்லை இல்லை... இவன் குடும்பத்திற்குத் தேவை ஒரு பெண்... என்று மனம் தாறுமாறாய் யோசிக்கும்போதே கதவு தட்டப்படும் யோசனையில் தொலைந்தவன்... கீர்த்தியைப் பார்த்தவுடன் கொஞ்சம் பயபப்பாகத்தான் உணர்ந்தான்.

வந்தவள், "சார், இப்போ சொல்லுங்க. நான் கீர்த்தனாவா... இல்ல, வேறு எதுவுமா?" என்றபடி சிரித்தாள்.

அவளையே பார்த்துக் கொண்டு இருந்தவன், அவள் "சார்!" என்று கேட்டவுடன் திணறியபடி,

"ஏன்? என்ன சொல்ற... சொல்றீங்க?" என்று திணறியவனை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"ஏன் இந்தத் தடுமாற்றம்?" என்று யோசித்தவள், அவன் முகத்தில் அறையின் ஏசியினைத் தாண்டி வியர்வை முத்துக்கள் பூத்திருந்ததைப் பார்த்தவள்,

"என்ன சார்! என்னை வேதாளம்... என்றே கன்ஃபார்ம் பண்ணி விட்டீர்கள் போல..." என்றவுடன், தன்னைத் தானே முயற்சி செய்து தன் நிலைக்கு வந்தவன்,

"அதெல்லாம் இல்லை. நான் வேறொரு ஞாபகத்தில் இருந்தேன் கீர்த்தி! என்ன, சொல்லுங்க?" என்று மென்று முழுங்கினான் பாலா. அவனால் கீர்த்தியை நேராய்ப் பார்த்துப் பேச முடியவில்லை.

"இன்று காலையில் தேவையில்லாமல் டென்ஷன் ஆக்கியதற்கு என்னை மன்னித்து விடுங்கள். நன்றாய்ப் பார்த்த போதுதான் இதற்கு இத்தனை நாள் இழுத்தேனா என்று எனக்கே ஒரு மாதிரி ஆகிவிட்டது. நீங்கள் இன்னும் கோபப்பட்டிருந்தால் கூட அதில் தவறே இல்லை சார்! நான் அதை முடித்து விட்டேன். அதைச் சொல்வதற்குத்தான் வந்தேன்..." என்றவள், அவன் ஒன்றும் பேசாமல் இருக்கச் சற்றுத் தயங்கிப் பின் மெதுவாக,

"சுயநலமாய் இருக்கிறேன் என்று நினைக்காதீர்கள். என் சூழ்நிலை அப்படி. நான் காலையில் கேட்டதைப் பற்றி..." என்று நிறுத்தினாள்.

"ம்ம்ம்... சொல்கிறேன். ஆனால், இப்போது இல்லை. ஆபீஸ் டைம் முடிந்து ஈவினிங் பேசலாமே!" என்று முற்றுப் புள்ளி வைத்தான்.

மற்ற நேரங்களில் எப்படியோ கீர்த்திக்கு... இப்போது அவன் பொறுமையினைச் சோதிப்பது போல் தோன்றியது மட்டுமல்லாமல், தனக்கு வேலை ஆக வேண்டும் என்று காலையில் பேசியிருப்பானோ என்றெல்லாம் நொடிப் பொழுதில் தோன்றியது. இருந்தாலும் பொறுமையினை விடாமல், "சார், எனக்குச் சாதகமா... இல்லையா என்று மட்டும் சொல்லுங்கள்..." என்று கெஞ்சாத குறையாய்க் கேட்டவளிடம்,

"அது உன் பதிலில்தான் இருக்கிறது. மற்றதை மாலை பேசலாம்..." என்று முடித்தபோது, அவன் அழுத்திய உன் என்ற வார்த்தையில் முகம் சுருக்கியவள்... காலையிலிருந்து அவன் அவ்வப்போது மாறி மாறி ஒருமை பன்மையில் பேசியபோது உணராதது இப்போது இடித்தது.

கீர்த்தியும் தைரியமாய், "சார், எதுவாய் இருந்தாலும் இப்போதே இங்கேயே சொல்லுங்கள்!" என்று விடாமல் பேசினாள்.

தன் இருக்கையை விட்டு எழுந்தவன், "சொல்கிறேன் கீர்த்தி! இன்று மாலை ஐந்து மணிக்கு நாம் இருவரும் பீச்சில் சென்று பேசுவோம். முடிவெடுப்போம். இங்கு வேண்டாமே..." என்று தன் முதல் தூண்டிலை அழகாய் வீசத் தொடங்கினான்.

தனியே என்றதும் சற்று மிரண்டாள்தான் கீர்த்தி. ஆனாலும் பீச் என்பதால் ஒன்றும் பயமில்லைதான் என்று யோசித்தவளின் மனம் எப்படிப் பாலாவிற்குத் தெரிந்ததோ, இல்லையோ... "கீர்த்தி, உன்னை எதுவும் பண்ண மாட்டேன். அரை மணி நேரம்தான். என்னை நம்பி வரலாம் என்று நினைக்கிறேன். என்ன வரலாம்தானே?"

இவனிடம் சொல்லாமல் இருந்திருக்கலாமோ என்று எண்ணம் தோன்றி உதறல் எடுத்ததை அவளால் தவிர்க்க முடியவில்லை. இருந்தாலும் மனதில் இருந்த கலக்கத்தைக் காட்டாமல்,

"சரி சார்!" என்று மட்டும் சொல்லி விட்டுத் தன் இருக்கைக்கு வந்தவள்... ஏன் இப்படிப் பேசுகிறார்? என்னாயிற்று பாலாவுக்கு... என்று ஐந்து மணி ஆகும்வரை அவஸ்தையாய்க் கடந்தாள் கீர்த்தி.

பாலாவோ தன் திட்டத்திற்கெல்லாம் கீர்த்தியின் ரியாக்ஷன் என்னவாய் இருக்குமோ என்று, அவன் தன் அறைக்குள் குட்டி போட்ட பூனையாய் அலைந்து கொண்டி ருந்தான்.

16

கடற்கரை மணலில் கைகளால் அளைந்தபடி கீர்த்தி... பாலாவுக்காகக் காத்துக் கொண்டு இருந்தாள். பாலாவுடன் வரவில்லை. அவன் அழைத்தபோதும் மறுத்து விட்டுத் தன் ஸ்கூட்டியிலேயே வந்திருந்தாள்.

கடலை வெறித்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தபோது ஜோசியம் பார்க்கும் பாட்டி அவள் அருகில் வந்தாள். "என்னம்மா... தனியா உட்கார்ந்திருக்க! உன்னைப் பார்க்கும் போதே உனக்கு மாலை நோக்கம் முகத்தில் தெரியுது தாயி! உன்னைத் தேடி ராஜகுமாரன் வந்துட்டு இருக்கான். என்னன்னு பார்க்கலாம். கையை நீட்டும்மா!" என்று டார்ச்சர் கொடுக்க,

"ஆளை விடம்மா. இது ஒன்றுதான் இங்கு குறைச்சல் எனக்கு இப்போ..." என்று முணுமுணுத்தவளை, "என்னம்மா... நீ இப்படிச் சொல்கிறாய். நான் சொல்லவில்லை. சக்தி சொல்கிறாள்..." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே பாலாவும் வந்து சேர்ந்தான்.

"சாரி கீர்த்தி! நீ இங்க இருக்கிறாயா? காரை பார்க் பண்ணி விட்டு வர நேரம் ஆகிவிட்டது..." என்றபடி, அவள் அருகில் கொஞ்சம் தள்ளி அமர்ந்தான்.

"என்னம்மா... நான் சொன்னபோது சலித்தாய். ராஜகுமாரன் வந்து விட்டார், பார்த்தாயா!" என்றபோது, ஒன்றும் புரியாமல் பாலா விழிக்க... உண்மையிலேயே கீர்த்திக்கு இப்போது கோபம் தலைக்கேறியது.

"என்னம்மா உன்கிட்ட... சொன்னாப் புரியாதா? விருப்பமில்லையென்றால் போக வேண்டியதுதானே!" என்று முகத்தைக் காட்ட...

நிலைமையினைச் சரியாக்க, பாலா, "அவங்களுக்குத்தான் பார்ப்பீங்களா... எனக்குப் பாருங்க!" என்றபடி தன் கையை நீட்டினான்.

'என்னாகி விட்டது இவனுக்கு இன்று! தனக்குச் சமமாய்ப் பேசுகிறான். வா, போ... என்று அழைக்கிறான். எதுவும் புரியவில்லை. இப்போது தன் அருகே அமர்ந்து இப்படிக் கையை நீட்டிக் கொண்டிருக்கிறான்...' என்று நினைத்தவளாய், அந்த மூதாட்டி அவனுக்கு என்ன சொல்ல

வருகிறாள் என்று பார்ப்போம் என்று ஆர்வத்துடன் பார்க்கலானாள்.

அவனது கையினை உற்று நோக்கியவள், "நான் சொல்லவில்லை தம்பி, ரேகை சொல்லுது. உனக்கு நேரம் ஒன்றும் சரியாக இல்லை. பெற்ற தாய், தந்தையர் மனம் வருந்த வைப்பாய்..." என்றபோதே பாலா கையை நீட்டாமல் இருந்திருக்கலாமோ, நீட்டியவுடனே புட்டுப் புட்டு வைக்கிறாள் என்று தயங்க,

ஜோசியக்காரப் பாட்டி சொன்னதில் இருந்த உண்மையில், கீர்த்தி தன் நிலையை மறந்து... உற்சாகமாய், "அப்புறம்..." என்றபடி, அவளை நோக்க, "சாருக்கு எப்போ கல்யாணம்? அதைப் பற்றிச் சொல்லுங்க!" என்று சிறு குழந்தை போல் ஆவலுடன் அவளை நோக்க...

பாலாவோ, "கீர்த்தி! என்ன... என்னை வைத்து செக் பண்ணுகிறாயா? அடுத்து நீ நீட்டலாமா இல்லையா என்று..." என்று சிரிக்க, அசடு வழிந்தாள் கீர்த்தி.

"மனதில் ஒரு பொண்ணு இருக்கா. ஆனால் தடைகள் பல. இப்போ உன் சஞ்சலமும் அதுதான்..." என்று அவனைப் பார்க்க...

"ம்கூம். இது சரிப்படாது..." என்று நினைத்தவன்,

"நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம். நான் கேட்பதற்குச் சொல்லுங்கள்!" என்று, "எனக்கு எத்தனை கல்யாணம் என்று பார்க்க முடியுமா?" என்று கீர்த்தியை ஓரக் கண்ணால் பார்க்க...

இவனுக்கு ஏதோ ஆகிவிட்டது என்பது நிச்சயம்தான்... என்றபடி அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

"ஓ... சொல்ல முடியுமே தம்பி! உனக்கு..." என்று இழுத்தபடி, அப்படி இப்படி என்று கைகளைப் புரட்டியவள், "அடித்துச் சொல்கிறேன் தம்பி... உனக்கு ஒன்றுதான்..." என்றவளிடம்,

"எனக்கு இரண்டு முறை திருமணமாகி விட்டது. நீங்கள் பொய்யாகச் சொல்கிறீர்கள்..." என்று பாலா மறுக்க,

"நான் சொல்லவில்லை. ரேகை சொல்கிறது. என் நாவில் இருக்கும் சக்தி சொல்கிறாள்... அதற்கு மேல் உன் இஷ்டம்!" என்று கோபம் காட்டினாள், அந்த மூதாட்டி.

"சரி சரி... நான் சும்மாதான் சொன்னேன். எனக்குப் பார்த்தது போதும்..." என்றபடி, அவளுக்குப் பணத்தை நீட்டினான்.

"தாயி! உனக்கு..." என்றவளிடம்,

"அதுதான் ஒரு ஆளுக்குப் பார்த்து விட்டாயே... அப்புறம் என்ன?" என்று அவள் பணத்தை நினைத்துச் சொல்ல,

அந்த மூதாட்டியும், "ஆமா தாயி! யாருக்குப் பார்த்தால் என்ன... இருந்தாலும் நீயும் நீட்டினால் சொல்லுவேன்..." என்று கீர்த்தி அருகில் அமரப் போக,

பாலா, "வேண்டாம், வேண்டாம். கிளம்புங்கள்!" என்று அவளை அப்புறப்படுத்தினான்.

அவள் சென்ற பிறகு, பாலாவிடம், "ஏன் சார்... இப்படியெல்லாமா செக் செய்வார்கள்? இந்தக் கேள்விக்குப் பெரும்பாலும் ஒன்று என்ற பதில்தான் வரும். யாராவது அதற்கு மேல் சொல்வார்களா?" என்றவளிடம்,

"இல்லையே... நான் கேட்டதற்குத் தப்பாகக் கூறினார்கள். அதுதான் அதற்கு மேல் பார்க்கவில்லை!" என்றான், கடலை வெறித்தபடி.

இவனிடம் இதற்கு மேல் பேசிப் பிரயோஜனமில்லை. இவன் உளறுவதற்கெல்லாம் அர்த்தம் கேட்க நேரமும் இல்லை. அது தனக்குத் தேவையும் இல்லை என்றபடி, தன் விஷயத்திற்கு வந்தாள்.

"இப்போதாவது சொல்லுங்கள் சார்! என்ன... பணம் கிடைக்குமா, இல்லையா? எதுவாக இருந்தாலும் பரவாயில்லை!" என்று முகத்தில் வெற்றுப் புன்னகையினைத் தவழ விட்டாள்.

"சொல்கிறேன் கீர்த்தி! இங்கு கொஞ்சம் ஆள் நடமாட்டம் அதிகமாய் இருக்கிறது. அதோ அங்கே போய் விளக்கமாய்ச் சொல்கிறேன்," என்றபடி, அவள் சம்மதம் ஏதும் கேட்காமல் இடம் பெயர்ந்தான் பாலா.

இவன் கூப்பிட்ட வுடனே வர வேண்டும்... இங்கே வேண்டாம், அங்கே என்றதும் பின்னாலே போக வேண்டும்... என்று நினைத்தவள், பதில் ஒன்றும் சொல்லாமல் அவன் நின்ற இடத்தில் போய்த் தானும் நின்றாள்.

"உட்கார் கீர்த்தி!" என்றபடி, தானும் அமர்ந்தான்.

"கீர்த்தி, நான் சொல்வதை எல்லாம் பொறுமையாகக் கேட்பாய் என்ற நம்பிக்கையில்..." என்று ஆரம்பித்தவனிடம் பொறுமை எல்லாம் இழந்து போய் விட்டது.

"தயவு செய்து சார்... சொல்லி விடுங்கள். ஏற்கெனவே நான் அதைத் தாண்டித்தான் நிற்கிறேன். வீட்டில் வேறு தேடுவார்கள்..." என்று மணியைப் பார்த்தாள்.

ஓ.கே. என்றபடி மனதிற்குள் மீண்டும் ஒரு முறை ஒத்திகை பார்த்தவன்... பேச ஆரம்பித்தான்.

"உனக்கு ஒருவர் கடன் கொடுக்க ரெடி. இன்னும் சொல்லப் போனால் உன் தந்தைக்குத் தேவையான அத்தனை தொகையினையும் முழுவதுமாகக் கொடுக்கவும் சம்மதம். மேலும் கடனாகக் கூட இல்லை. நீ செய்யப் போகும் உதவிக்குக் கைம்மாறு என்று கூட வைத்துக் கொள்ளலாம். ஆனால், கொடுப்பவரின் ஒரு கோரிக்கையினை மட்டும் நிறைவேற்ற வேண்டும்..." என்று மொட்டையாய்ப் பேசிக் கீர்த்தியைப் பார்த்தான்.

ஒரு கோரிக்கையை நிறைவேற்றினால் மொத்தப் பணமும்... அதுவும் கடனாகக் கூட இல்லையா...

மனதில் அபாயச் சங்கு பெரும் சத்தத்துடன் ஒலிக்க ஆரம்பிக்க...

கீர்த்தி அவன் முழுவதும் பேசி முடிக்கட்டும் என்று கட்டுக்கடங்காமல் வந்த கோபத்தைத் தன் கைவிரல்களில் அடக்கியபடி, அவனைப் பார்த்தபடி இருந்தாள். கண்களில் மட்டும் அனல் தெறித்தது அவளுக்கு.

"என்ன கோரிக்கை?" என்றாள், அவனையே பார்த்தபடி.

அவளது கண்களில் கலக்கம் போய் ஒரு தீவிரம் வந்திருந்தது. ஏதோ ஒரு பூகம்பம் வரப் போகிறது என்று உள் மனம் அவளை எச்சரித்துக் கொண்டிருந்தது.

பாலா அவளது கண்களைப் பார்க்காமல், கடலை வெறித்தபடி தொடர்ந்தான். அவள் கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லாமல்... "என்னோட ஃப்ரெண்ட்தான். அவன் நீ கேட்கும் தொகையினைக் கொடுக்க ரெடி!" என்றவனை இடையில் நிறுத்தி,

"அவனது நிபந்தனை என்ன? அதை மட்டும் சொல்லுங்கள்," என்றாள்.

அவளது மரியாதையற்ற பேச்சே அவளது மன நிலையினை அவனுக்கு விளக்கியது.

ஆனாலும் பாலா தொடர்ந்தான். தைரியமாக என்று கூடச் சொல்லலாம். "அவனுக்கு மனைவியாய்த் தற்காலிகமாக நடிக்க வேண்டும்..." என்ற போதே,

கீர்த்தியின் கோபம் அவள் கட்டுப்பாடுகளை எல்லாம் கடந்து கொண்டிருந்தது. 'என்ன மனிதன் இவன்...! அவன் கேட்டால்... இவர் வந்து என்னிடம் கேட்பாரா?' என்று பாலாவின் மேலும் கோபம் எகிறியது.

என்றாலும் அதைக் காட்டாமல் கீர்த்தி அவனை முறைத்தபடி, "உங்களிடமிருந்து இதை எதிர்பார்க்கவில்லை. கோரிக்கை வைத்த அவனை விடுங்கள். நான் இதற்கு ஓ.கே. சொல்வேன் என்று நீங்கள் எப்படி நினைத்தீர்கள்? அது மட்டுமில்லாமல் என்னைப் பற்றி இன்னொருவரிடம் என் அனுமதி இல்லாமல் பேசி இருக்கீங்க நீங்க..." என்றவள், "அந்த அயோக்கியனுக்கும் உங்களுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை..." என்றாள்.

அவன்தான் அந்த அயோக்கியன் என்பதை உணராமல். அதற்கு மேல் அவனைப் பேச விடாமலே... "யார் சார் அவன்? நான் பார்க்கணும்..." என்றவளிடம்,

அவள் கோபத்தையும் மறுப்பையும் புரிந்தவன்... சற்று எரிச்சலுடன், "அதுதான் உனக்குப் பிடிக்கவில்லையே... பிறகு எதற்கு அவன்? அது மட்டும் இல்லாமல் நான் சொல்லாமல் விட்டு, பிறகு வந்து இது மாதிரி ஒரு வாய்ப்பு இருந்தது என்றிருந்தால்... என் அப்பாவுக்காக ஒத்துக் கொண்டிருப்பேன் என்று நீ கூறிவிட்டால்... அதற்காகத்தான் கேட்டேன். சரி. விடு... உனக்குப் பிடிக்கலை. விட்டு விடுவோம்!" என்றான், அவளின் கோபத்தை உணர்ந்தபடி.

அவன் சொன்னதில் ஓரளவு நியாயம் இருந்ததால்.. சற்றுத் தணிந்தவள்... "அப்பாவுக்காக நான் எதையும் செய்வேன் என்பது உண்மைதான். ஆனால், நான் செய்யும் காரியம் என் அப்பாவின் தன்மானத்தைக் காப்பாற்றி... எனது குடும்ப மானத்தைக் குலைத்தால்... அதன் பிறகு என் அப்பா, அம்மா முன்னிலையில் நிற்க முடியுமா? சொல்லுங்கள்!" என்றவள், சற்று யோசித்தவள்... அவன் யார் என்று தெரிய வேண்டும்... அவனிடம் நாலு வார்த்தை நறுக்கென்று கேட்க வேண்டும் போல் இருந்தது.

பாலாவிடம், "நான் அவரைப் பார்க்கலாமா?" என்று கேட்டாள்.

"இல்லை கீர்த்தி... உனக்குச் சம்மதம் இல்லை என்ற பிறகு அது எதற்கு... கிளம்பலாம்!" என்றவனிடம்,

"நான் இன்னும் என் பதிலைச் சொல்லவில்லையே பாலா!" என்றவளை... ஒரு மாதிரியாய்ப் பார்த்தான். இத்தனை நேரமாய்ச் சம்மதமில்லை என்ற நோக்கில்தானே பேசினாள்.

நாம்தான் அவள் பேசியதை ஒழுங்காகக் கேட்க வில்லையோ என்று நினைத்தபடி, "இவ்வளவு நேரம் அப்படித்தானே பேசிக் கொண்டிருந்தாய். சரி. விடு. இப்போ சொல்லு. உனக்கு இதில் சம்மதமா?" என்று அவளின் மனநிலை உணராமல் தனக்குச் சாதகமான பதில் கிடைக்குமோ என்ற எதிர்பார்ப்புடன் கேட்க,

கீர்த்தியோ, 'அடப்பாவி! நான் இன்னும் சம்மதம் சொல்வேன் என்று நினைப்பா உனக்கு...?' என்று மனதில் அவனைக் கடிந்தவள், அவனையே பார்த்தபடி,

"எனக்கு அவரைப் பார்க்க வேண்டும். அவரைப் பற்றித் தெரிய வேண்டும். அதன் பிறகு அவரிடம் என் முடிவைச் சொல்கிறேன்..." என்று பாலாவைப் பார்த்தாள்.

"அவனைப் பற்றித் தெரிய வேண்டுமா? அவனிடம்தான் முடிவைச் சொல்வாயா? ஏன் என்னிடம் சொன்னால் என்ன?" என்று தடுமாறியவனிடம்,

"ஆமாம். எனக்குத் தெரிய வேண்டும். அதன் பிறகுதான் ஆமா இல்லை என்ற முடிவைச் சொல்ல முடியும். நானும் பார்க்க வேண்டாமா... வெறும் பணம் மட்டும் என்றால் உங்களை வைத்தே சொல்லி விடலாம். இது வாழ்க்கைப் பிரச்சனையும் ஆயிற்றே. எப்படிப் பார்க்காமல் சொல்வது?" என்றாள், உள்ளே இருந்த வன்மத்தை எல்லாம் மறைத்தபடி.

அவளது பதிலில் சற்று யோசித்தவன், "ஓ.கே. ஒத்துக் கொள்கிறேன். நீயும் பார்த்தால்தான் முடிவு செய்வது சரியாக

இருக்கும்..." என்றவன், சிறிது நேரம் ஒன்றுமே பேசாமல் இருந்தவன்... எழுந்து நின்றான்.

அவன் எழுந்தவுடன், பாலா அந்தக் கடன் கொடுப்பதாய்ச் சொன்ன அயோக்கியனைத்தான் கூட்டி வரப் போகிறான் என்று கீர்த்தியும் எழுந்தாள்.

ஆனால், அவன் எங்கும் நகராமல், கீர்த்தியை நோக்கியவன், "சரி, இப்போது சொல். உனக்குச் சம்மதமா, இல்லையா?" என்றான், இறுகிய முகத்துடன் அவளைப் பார்த்து.

கீர்த்திக்கு ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை. இவன் என்ன பைத்தியமா! இத்தனை தடவை அடித்துச் சொல்லி - யார் கேட்டானோ அவனிடம்தான் சொல்வேன்... என்றால் மீண்டும் என்னிடம் சொல் என்றால் என்ன அர்த்தம் என்று புரியாமல் முறைத்தாள்.

"நான் என்ன சொன்னேன் என்று புரியவில்லையா பாலா உங்களுக்கு? இல்லை... தெரியாதது போல் நடிக்கிறீர்களா?" எனும்போது சார் என்பதெல்லாம் எங்கோ பறந்து போயிருந்தது.

"எல்லாம் புரிகிறது. அதனால்தான் என்னிடம் சொல்லு என்கிறேன். அது உனக்குப் புரியவில்லையா?" என்றபோது,

'என்னிடம்' என்பதை அழுத்திய அவன் குரலில்... அவளுக்கு அவன்தான் அந்த அயோக்கியன் என்பது விளங்க,

எந்த நிமிடத்தில் அவன் வார்த்தையில் இருந்த அர்த்தமும் விளங்கியதோ... அதே நிமிடத்தில் அவளின் கை அவனது கன்னத்தில் பதிந்தது.

கீர்த்தி அந்த நிமிடமே அப்படியே பூமி பிளந்து உள்ளே போய் விட மாட்டோமா... இல்லை, அவனைத்தான் உள்ளே இழுக்காதோ என்ற நிலையில் இறுகி நின்றாள்.

17

கீர்த்தியிடம் இருந்து சத்தியமாய்ப் பாலா இதை எதிர்பார்க்கவே இல்லை. கண்டிப்பாக அவள் கோபமாய்ப் பேசுவாள் என்றவரைதான் நினைத்திருந்தான். ஆனால், அவள் அறைவாள் என்று நினைக்கக் கூட இல்லை. தன் மேல் தவறு இருக்கிறது என்ற ஒரே காரணத்தினால் மட்டுமே.. தன் கோபத்தினை அடக்கியபடி கீர்த்தியை முறைத்தான்.

ஏற்கெனவே கண்களில் அனல் பறக்க நின்றவளைப் பார்த்துப் பேச வாயெடுத்தவனை... அவள் வார்த்தைகள் நிறுத்தின.

"உங்களை எல்லாம் எங்கேயோ வைத்திருந்தேன். ஆனால், இவ்வளவு சீக்கிரம் இறங்கி விடுவீர்கள் என்று நினைக்கவே இல்லை... அது எப்படி பாலா, அடுத்தவர் வாழ்க்கையினை, அவ்வளவு அழகாகக் கணக்குப் போட்டு அதில் லாபம் பார்க்க நினைக்கிறீர்கள். இதுதான் உங்கள் முதலாளி வர்க்கத்தின் வெற்றிக்குக் காரணமா? இதையெல்லாம் உங்க தொழிலில் காட்டுங்க. மனிதர்களிடம் காட்டாதீங்க..." என்று படபடத்தவள் சிறிது நிறுத்தி, பின் நிதானமாக,

"இதற்கு மேல் பேசி, உங்க மரியாதையைக் கெடுக்க நான் விரும்பவில்லை. எனது நேரத்தையும் வீணடிக்க விரும்பவில்லை. நான் வருகிறேன். குட் பை!" என்றவள், "இது எல்லாவற்றிற்கும்..." என்றபடி கிளம்பினாள்.

ஆனாலும் அவன் அவளை விடவில்லை. "கீர்த்தி, ஒரு நிமிடம். இது தவறுதான். கொஞ்சம் யோசித்துப் பார். இதன் மூலம் நம் இருவருக்கும் உள்ள எத்தனையோ பிரச்சனைகள் தீருமென்றால் அது எப்படி தவறாகும்?" என்று அவன் பேசிக் கொண்டிருக்கும் போதே அவள் அவன் யாரிடமோ பேசிக் கொண்டிருக்கிறான் என்று நினைக்கும் அளவிற்கு அவள்பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தாள்.

"கீர்த்தி, நில்!" என்று கத்தியவனை லட்சியம் செய்யாமல் போனவளை வேறு வழியின்றிக் கைகளைப் பற்றி இழுத்தான் பாலா.

"நான் பேசுவதைக் கேட்டு விட்டு, அதன் பிறகு நீ என்ன வேண்டுமென்றாலும் தீர்மானம் செய்து கொள். மேலும் நீ விரும்பவில்லை என்றாலும் நீ கேட்டு விட்டுத்தான் செல்ல வேண்டும்."

"இல்லாவிட்டால்..." என்று வெட்டும் பார்வையை வீசியவள், அவனிடமிருந்து தன் கையினை விடுவிக்க முயன்றாள் கீர்த்தி.

அவளது பார்வையினால் சற்றும் பாதிக்கப்படாதவன் போல் பேச ஆரம்பித்தான். இப்போது பாலாவிற்கும் முதலில் இருந்த தயக்கம் எல்லாம் சிறிதும் இல்லை. ஆரம்பித்தாகி விட்டது. இனி அரைகுறையாக விட்டால் அது நன்றாக இருக்காது என்பதால் தன் திட்டத்தை விளக்க ஆரம்பித்தான். இப்பொழுதும் பற்றியிருந்த கையை அவன் விடவில்லை. கீர்த்தியோ அவனிடமிருந்து கையை மீட்க அவஸ்தையாகவும், ஆத்திரமாகவும் முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

கடைசியில் முடியாதவள், "கையை விடுங்க பாலா!" என்று அழுத்தமாகக் கூற,

"சரி. விடுகிறேன். ஆனால், நான் சொல்வதை முழுமையாகக் கேட்டு விட்டுப் போ. அதன் பிறகு உன் முடிவை எப்படி வேண்டுமென்றாலும் எடுத்துக் கொள்ளலாம். தயவு செய்து..." என்று இறங்கிப் பேசினாலும், அதிலிருந்த பிடிவாதம் கீர்த்தியை இம்சித்தது.

"என்ன மனிதன் இவன்...! தான் சொல்வதைக் கேட்டாக வேண்டுமென்ற இறுமாப்பு... இதற்கு நான் பலிகடா. கடவுளே! நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்!" என்றபடி, கைகளை வெடுக்கென்று பறிக்க... அவன் ஏற்கெனவே பிடியினைத் தளர்த்தியிருந்ததால், அவளின் முயற்சி வீணாகியிருந்தது.

அவள் கேட்க தன்னைத் தானே முயற்சி செய்ததை உணர்ந்தவன், தன் நிலைமையினை விளக்க ஆரம்பித்தான். ஆனால், கீர்த்தியோ பேருக்கு அங்கே நின்று கொண்டிருந்தாள். அவளுக்கோ அந்த இடத்தை விட்டு எப்போது போவோம் என்றிருந்தது.

"கீர்த்தி, சத்தியமாக உன்னோட வாழ்க்கையை வீணடிக்க நான் நினைக்கவில்லை. எனக்கும் இக்கட்டான நிலைமை. உனக்கு எப்படி உன் அப்பாவின் கவலையோ, அதேபோல் எனக்கு என் அப்பாவின் உயிர் பற்றிய கவலை. உன் அப்பாவிற்காவது பணம்தான். அது எப்படி வேண்டுமென்றாலும் கிடைத்து விடும். நான் இல்லையென்றாலும் கூட உனக்குக் கிடைத்து விடும். ஆனால், எனக்கு என் அப்பாவின் உயிரைக் காப்பாற்ற இதைத் தவிர வேறு வழியில்லை. வேறு பெண்ணே இல்லையா என்று கூட நீ நினைப்பாய்! நான் கூட வேறு மாதிரிதான் முதலில் யோசித்தேன். ஆனால், தற்காலிகமாக, அவசரத்தில் நான் எடுத்தது... அதைப் பற்றி இப்போது பேச விரும்பவில்லை.

"மதுவைத் தவிர வேறு ஒருத்திக்கு என் வாழ்க்கையில் இடம் கொடுக்க என்னாலும் முடியவில்லை. ஆனால், இன்று அவள் எங்கே இருக்கிறாள் என்றே தெரியவில்லை. கடந்த மூன்று வருடங்களாக அவள் இருக்கும் இடம் தெரியவில்லை. மற்றவர்களைப் பொறுத்தவரை அவள் உயிரோடு இருக்கிறாளா என்பதே சந்தேகம். ஆனால், என் உள்ளுணர்வுக்கு மட்டும் அவள் நிச்சயமாய் உயிரோடு எங்கோ இருக்கிறாள் என்று தோன்றுகிறது. இவ்வளவு நாள் அவளுக்காக என் உயிர் போகும்வரை காத்திருக்க முடிவெடுத்திருந்த எனக்கு இப்படி ஒரு நிர்பந்தம். என் முன்னால் நிற்கும் உனக்கும் என்னால் வேதனை. சத்தியமாய், கீர்த்தி! இப்படி ஒரு வார்த்தையினை உன்னிடம் கேட்கும் முன் நான் என் மனச்சாட்சியைக் கொன்று

விட்டுத்தான் உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். நம் இருவரின் குடும்பத்திற்காக நம் வாழ்க்கையினை நாம் விட்டுக் கொடுத்தால் என்ன... யோசித்துப் பார்.”

எங்கே இடையில் மூச்சு விட்டாலும் அவள் போய் விடுவாளோ என்ற அவசரத்தில், அவன் பேசிக் கொண்டிருக்கும் போதே இடையே கை மறித்தவள்...

“சாரி சார்! உங்க கதையைக் கேட்குமளவிற்கு எனக்குப் பொறுமையும் இல்லை. அது எனக்குத் தேவையுமில்லை. என்னை மன்னித்து விடுங்க. ஏதோ ஒரு உந்துதலில் என் பொறுமையை மீறி நான் அறைந்து விட்டேன். அதற்காக வருத்தப்படுகிறேன். உங்கள் காதலில் உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் மது நிச்சயம் உங்களுக்குக் கிடைப்பாள். அதற்காக என்னைப் போன்று இன்னொரு பெண்ணின் வாழ்க்கையினை வீணாக்கி, உங்கள் வாழ்க்கையினையும் வீணாக்கி விடாதீர்கள். நான் வருகிறேன்,” என்று மிகவும் பொறுமையாகப் பேசியவள், தொடர்ந்து,

“நீங்க இந்த முடிவு எடுப்பதற்கு நானும் ஒரு காரணம் தான். தேவையில்லாமல் என் குடும்பத்தைப் பற்றி அலுவலகம் வரை கொண்டு வந்ததால்தானே... இப்படி நீங்கள் யோசிக்கும்படி ஆகிவிட்டது. எது எப்படியோ இந்த முட்டாள்தனமான முடிவுக்கு நான் தயாராக இல்லை. நீங்களும் இதைப் பற்றி யோசித்துப் பாருங்கள். அது மட்டும் இல்லாமல் இனி நான் உங்களின் கீழ் வேலை பார்க்க முடியாது. திங்கட்கிழமை நான் என் ராஜினாமா கடிதத்தை அனுப்புகிறேன். நான் வருகிறேன்...” என்று அதற்கு மேல் அங்கே நில்லாமல், அவன் பதிலையும் எதிர்பார்க்காமல் வேகமாய் நடந்தாள்.

அவள் போவதை உணர்ந்த பாலாவுக்கு அவளை நிற்கச் சொல்ல முடியவில்லை. ஆனால், சில விநாடிகளில்

சுதாரித்தவன் வேகமாய் அவள் பின்னே சென்று அவளின் அருகே நின்று, “என்ன கீர்த்தி, இது பைத்தியக்காரத்தனமாய்ப் படவில்லையா? உனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லி விட்டாய். இனி நான் ஒருபோதும் உன்னைக் கட்டாயப்படுத்த மாட்டேன். உன் மனதைக் காயப்படுத்தி இருந்தால் நான் இப்போதே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு இந்த விஷயம் முடிந்து விட்டது என்று நினைத்துக் கொள். அதற்காக வேலையினை ராஜினாமா செய்கிறேன் என்றால் என்ன அர்த்தம், கீர்த்தி?” என்றான்.

“சாரி சார். என்னால் இனி உங்களின் கீழ் வேலை பார்க்க முடியாது. உங்களைப் பார்க்கும் போதெல்லாம் நீங்க என்னிடம் கேட்ட வார்த்தைகள்தான் நினைவில் எழும். என்னாலும் ஒரு பிடிப்புடன் உங்களின் கீழ் வேலை பார்க்க முடியாது. என்னைக் கட்டாயப் படுத்தாதீர்கள்...” என்று சொல்வதற்கும் அவள் ஸ்கூட்டியை நிறுத்தி வைத்த இடத்திற்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

அதற்கு மேல் பாலாவும் அவளிடம் ஏதும் பேசவில்லை.

அவள் சென்ற பிறகு வெகு நேரம் கடல் அலையினை வெறித்தபடி அமர்ந்திருந்தவன்... தன்னையே நினைத்து வெறுத்தபடி நினைவுகளின் தாக்கத்தில் வெந்து கொண்டிருந்தான். இனி கீர்த்தி வரப் போவதில்லை. அவனது அவசரத்தனமான பேச்சினால் கீர்த்தியின் வெறுப்புக்கு ஆளாகி விட்டான். அது மட்டும் இல்லாமல் ஒரு நல்ல எம்ப்ளாயியை வேறு இழந்து விட்டான். ஏன் அவனுக்கு மட்டும் எல்லாம் எதிர்மாறாக நடக்கிறது? அவன் வாழ்க்கையில் நிம்மதி என்று ஒன்று என்றாவது வருமா என்று ஏக்கப் பெருமூச்சை விட்டவன்... மணியைப் பார்த்த போது மணி பத்து ஆகியிருந்தது. கிட்டத்தட்ட நான்கு மணி நேரமாய் ஒரே இடத்தில் இருக்கிறோமா என்று திடுக்கிட்டவன் உடனே அங்கிருந்து கிளம்பினான்.

கீர்த்திக்குப் புரண்டு புரண்டு படுத்தாலும் தூக்கம் வரவில்லை. என்ன தைரியம் இருந்தால் அவன் இப்படிக் கேட்டிருப்பான்? அவனிடம் பேசிவிட்டு அவள் எப்படி வீட்டுக்கு வந்தாள் என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம். ஏன் திடீரென்று இப்படி அவள் எதிர்பாராததெல்லாம் நடக்கின்றது? இருக்கின்ற வேதனை போதாதென்று இவன் வேறு தன் பங்குக்கு...

அம்மா, அப்பாவிடம் மட்டும் பாலா கேட்டதை மட்டும் சொல்லியிருந்தால் ஏற்கெனவே அவர்களுக்கு இருக்கின்ற பிரச்சனையில் அவ்வளவுதான்... தங்களால்தான் பாலா அப்படிக் கேட்கும் நிலை உருவானது... என்று மாய்ந்து போவார்கள் என்று கீர்த்தி தன் பெற்றோரிடம் சொல்லியிருக்கவில்லை. ஆனால், திங்கட்கிழமை ஆபீஸ் செல்லவில்லை என்றால் கண்டிப்பாகச் சொல்லி ஆக வேண்டுமே! எப்படியும் நாளை அப்பாவின் பணப் பிரச்சனை தீர்ந்தபின் தன் பிரச்சனையினை மெதுவாய்ச் சொல்லலாம் என்று முடிவு செய்திருந்தாள் கீர்த்தி.

ஏனோ தனிமை அவளுக்கு விஸ்வரூபம் எடுத்து ஏதேதோ நினைவுகளைத் தோற்றுவிக்க, அதோடு மட்டும் இல்லாமல் தலைவலியும் நேரம் ஆக ஆகக் கூடிக் கொண்டிருந்தது. சரி, இனிமேல் இங்கிருக்க வேண்டாம் என்று ராகவ், மைதிலி அறைக்குப் போனாள் கீர்த்தி.

அவள் அறையினுள் தட்டிய போது ராகவ் உறங்கிக் கொண்டிருக்க... மைதிலிதான் கதவைத் திறந்தாள்.

"என்னடா கீர்த்தி, தூக்கம் வரவில்லையா?" என்று கேட்கும்போதே பேச்சுச் சத்தம் கேட்டு ராகவும் விழித்து விட்டார்.

"இல்லம்மா... தலை வலிக்கிறது. அங்கே எனக்குத் தூக்கமும் வரவில்லை. நான் இன்னைக்கு உங்க கூடப் படுக்கவா?" என்றபடி, முடிந்தவரை சகஜமாகவே பேசினாள்.

"என்னடா நீ... வா. வந்து படுத்துக்க!" என்றபடி, தலைவலி மருந்தை எடுத்து மகளுக்குத் தேய்க்க ஆரம்பித்தாள்.

கீர்த்தி மைதிலியின் மடியில் தலை வைத்துப் படுத்தாள்.

இதற்கிடையில் ராகவனும் எழுந்து விட்டார். மகளின் முகத்தை உற்றுப் பார்த்தவருக்கு அவள் முகம் வாடியிருந்தது நன்றாகவே தெரிந்தது.

"கீர்த்திமா, நீ என்னோட பிரச்சனையை நினைத்து உடம்பை வருத்திக் கொள்கிறாய் என்று நினைக்கிறேன். இதனால்தான் நாங்க உன்னிடம் சொல்லாமல் இருந்தோம். அப்பாவுக்கு ஒன்றுமில்லைடா... நாளையோடு எல்லாம் சால்வ்ட். இதை நினைத்து நீ மனதையும் உடம்பையும் அலட்டிக் கொள்ளாதே!" எனும்போதே,

கீர்த்திக்குக் கண்களில் நீர் கரை புரண்டது.

'அப்பா, நீங்க நினைப்பது மாதிரி இந்த வேதனை உங்களால் அல்ல. என்னைப் பார்த்து ஒருவன் கேவலமாகப் பணம் வேண்டுமா... சில நாள் எனக்கு மனைவியாக நடி என்று கேட்டதால் வந்தது. இதை மட்டும் நான் உங்களிடம் சொன்னால் உங்களால் தாங்க முடியுமா?' என்று மனதிற்குள்ளாகவே மறுகியவளுக்கு இன்னும் பாரம் கூட, விம்ம ஆரம்பித்தாள்.

அவளின் கண்ணீர்த் துளி ஈரம் மைதிலியைத் திடுக்கிடச் செய்ய... அவளது விம்மல் ராகவைத் தூக்கி வாரிப் போட்டது.

இருவரும் மகளை நிமிர்த்தி, "என்னடா, என்னாச்சு? ஏன் இப்போ அழுகிறாய்? என்ன நடந்தது என்று சொல்லு..." என்று கேட்க, சட்டென்று நிலைமை புரிந்து சமாளித்தவளாய்,

"ஒன்றுமில்லை அப்பா. என்னமோ தெரியவில்லை. எப்போ இந்த மைதிலி மடியில் படுத்தாலும் கண்ணில் இருந்து அருவியாய்க் கொட்டுகிறது. நான் அப்பா மடியிலே

படுத்துக் கொள்கிறேன்..." என்றபடி கஷ்டப்பட்டு வரவழைத்த கேலிக் குரலில் பேசியபடி ராகவின் மடியில் படுக்க.. பெற்றோருக்கு மகள் பேச்சை மாற்றியது விளங்காமல் இல்லை. இப்போது ராகவின் கண்களில் கண்ணீர் துளிர்க்க... மைதிலிக்கோ கணவனையும் மகளையும் பார்த்துத் துக்கம் தொண்டையை அடைத்தது. அங்கு நிலவிய சூழ்நிலையில் யாரும் ஒருவரை ஒருவர் தேற்ற நினைக்கவும் இல்லை. தேற்றுவதை விரும்பவும் இல்லை.

18

அன்று சனிக் கிழமை. ராகவ் காலையிலேயே கிளம்பிப் போய் இருந்தார். அவர் எப்போது வருவார் என்று மகளும் தாயும் ராகவின் வருகையினை எதிர்நோக்கி இருந்தனர். இப்போதைக்கு அவர்கள் குடும்பத்திற்குப் பெரிய ஆறுதல் - கிடைக்கப் போகும் பணம்தான். இருக்கும் இடம் - வாங்கிப் போட்டிருந்த நிலம் எல்லாம் விற்க ஏற்பாடாகி விட்டது. மேலும் மைதிலியின் யோசனைப்படி யாரிடம் வீட்டை விற்கப் போகிறார்களோ அவர்களிடமே தாங்கள் இருக்கும் வீட்டை வாடகைக்குக் கேட்டிருந்தனர். மற்றவர்களின் கேள்விக் கணைகளில் இருந்து தப்பிக்கலாம் என்பதே அதற்குக் காரணம்... அதற்குச் சம்மதித்து வாங்குபவர்களும் சரி சொன்னதால் கொஞ்சம் விலை குறைவாய் என்றாலும் முடித்து விட்டிருந்தனர். இதற்குரிய இறுதி ஏற்பாடெல்லாம் அடுத்த வாரத்திற்குள் முடிந்து விடும்.

ஆக, இப்போது ராகவ் வாங்கி வரும் தொகை மட்டும்தான் பாக்கி. அதனால் அவர்கள் விழி வைத்துக் காத்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அதிலும் கீர்த்திக்கு, அன்று பாலாவிடம் பெற்ற அனுபவத்திலிருந்து, திங்கட் கிழமை பாலாவிடம் ராஜினாமா கடிதத்தைக் கொடுத்து விட்டு, மொத்தமாய் அவனுக்கு ஒரு குட் பை சொல்லி விட்டு வர வேண்டும் என்று நினைத்தபோது, அன்று அவன்

கேட்டது நினைவில் வர... உடல் அவளையும் அறியாமல் சிலிர்த்தது. அவள் பேரிலும் தவறு உள்ளது. இவள் உணர்ச்சி வசப்பட்டு வாய் விட்டதால்தானே அவன் அப்படிக் கேட்டான் என்பதை அவள் உணராமல் இல்லை.

கிட்டத்தட்ட 7 மணி அளவில் ராகவ் வந்தார். வரும்போதே அவரது முகம் வெளிறி இருந்தது. போன இடத்தில் ஏதும் சுமுகமாய் நடக்கவில்லை என்பது அவரைப் பார்த்தவுடனே தெரிந்தது. மைதிலிக்கும், கீர்த்திக்கும் மனதில் சுருக்கென்று வலி தோன்றி முகத்தில் நிலைத்தது.

வந்தவர் தண்ணீரைக் குடித்து விட்டு ஒன்றும் பேசாமல் சோபாவில் கண் மூடி அமர்ந்து விட்டார்.

மைதிலி கேட்கலாமா, வேண்டாமா என்ற தயக்கத்தோடு கணவனைத் தட்டி எழுப்பினாள்.

"என்னங்க... என்ன ஆச்சு? எதுவா இருந்தாலும் மனதோடு வைத்துக் கொள்ளாமல் கொட்டி விடுங்க. சொல்லுங்க!" என்று பரிதவிப்போடு கேட்க,

மனைவியின் இளகிய குரலில் கண் விழித்தவர், மைதிலியிடம் ஒன்றும் கூறாமல் கீர்த்தியை அழைத்தார்.

ராகவ் கண்களை விழித்துக் கீர்த்தியை அழைத்தார்.

"கீர்த்திமா, போன இடத்தில் பெரிய குண்டைத் தூக்கிப் போட்டுட்டாங்கம்மா! ஷ்யூரிட்டி இல்லாமல் பணம் தர மாட்டாங்களாம். இந்த வீட்டை வைத்துத்தான் தருவதாகச் சொன்னார்களாம். இதை விற்று விட்டால் எதை அடிப்படையாக வைத்துத் தருவது என்று கையை விரித்து விட்டார்கள். என்னால் முடியாதுடா... இனிமேல் அவ்வளவு தான். செய்த தவறை ஒத்துக் கொண்டு சரணடைவதுதான் இனி எனக்கு இருக்கும் ஒரே வழி!" என்றவர், "மேலும் எனக்கு ஏதாவது ஆகி விட்டால்..." என்றவுடன், கீர்த்தி பதறியபடி,

"அப்பா, ஏம்ப்பா இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்?" என்று கலங்கிய மகளிடம்,

"இல்லடா. நான் என் உயிரைப் பற்றிச் சொல்லவில்லை. ஒருவேளை என்னைக் கைது செய்தால்... ஒருவேளை என்ன... கட்டாயம் என்னைக் கைது செய்வார்கள். அப்படி ஆகும்போது உன் அம்மாவுக்கு நீதான் தைரியம் சொல்ல வேண்டும். எனக்கு நம்பிக்கை இருக்கிறதடா! நீ தைரியமாகச் சமாளிப்பாய்..." எனும்போதே, மைதிலி அந்த இடத்தில் இல்லை.

"அம்மா, எங்கே போகிறீர்கள்?" என்று தாயைக் கேட்ட கீர்த்திக்கு, மைதிலியிடம் இருந்து பதில் வரவில்லை. அறைக்குள் சென்று ஒன்றுமே சொல்லாமல் அமர்ந்தவள்தான்... கீர்த்தி மற்றும் ராகவன் எவ்வளவு பேசியும் மௌனத்தின் பிடியில் எங்கோ வெறித்தபடி இருந்தாள்.

அவளுக்கு ஆறுதல் கூற என்ன சொல்ல முடியும் இருவராலும்?

ராகவன் சிறிது நேரம் கழித்து வெளியே ஹாலில் சென்று அமர்ந்தார். கீர்த்திக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை.

ஆனால், ராகவன் சொன்ன, 'எனக்கு நம்பிக்கை இருக்கிறதடா. நீ தைரியமாகச் சமாளிப்பாய்!' என்ற வார்த்தைகள் அவள் காதில் எதிரொலித்துக் கொண்டே இருந்தன.

இனி என்ன செய்ய... என்ன வழி... இந்தச் சூழ்நிலையினை அவள் நினைத்தால் மாற்றலாம். ஆனால், அவளிடம் இருக்கும் ஒரே தீர்வு இப்போது பாலா மட்டும் தான். வேறு வழியே இல்லை. தன் பெற்றோர்க்காகத் தன் வாழ்க்கையைப் பணயம் வைக்கத்தான் வேண்டும். இத்தனை வருடம் என்னை எந்தக் குறையும் இல்லாமல்

காத்து வளர்த்தவர்களுக்குத் தன் மூலம் தீர்வு இருக்கிறது என்றபோது, அதை விட வேண்டுமா? என் வாழ்க்கை வீணாகிப் போகும் என்று என் தந்தை சிறைக்குப் போவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? இல்லை, என் அம்மா அனுபவிக்கும் வேதனையைத்தான் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? இனிமேலும் காத்துக் கொண்டிருக்க முடியாது... என்று தீர்மானித்தவள்... மனதைக் கடினமாக்கிக் கொண்டு பாலாவிடம் பேசத் தயாரானாள்.

தன் அறையினுள் போய் செல்லைக் கையில் எடுத்தவள்... மானசீகமாய்த் தன் பெற்றோரிடமும் மன்னிப்பு வேண்டியபடி, இனி எது வந்தாலும் தான் சமாளிக்க வேண்டும் என்று நெஞ்சில் ஒரு திடத்துடன் பாலாவின் நம்பரை அழுத்தினாள்.

மறுமுனையில் ரிங் போகும் சத்தத்தை விட அவளின் படபடத்த நெஞ்சத்தின் சத்தம் மிகுதியாய் இருந்தது. முழுவதும் ரிங் போயும் பாலா எடுக்காததால் வைத்தவளுக்கு இப்போது ஒரு எண்ணம் தோன்றியது. அவன் பணம் தருவதாய்ச் சொன்னால் ஏன் அதைக் கடனாகக் கேட்கக் கூடாது? ஒருவேளை நாம் சம்மதிக்கவில்லை என்பதால் கடனாகத் தருவானா என்று சின்னதாய் ஒரு நப்பாசை அவளுக்குத் தோன்றியது. இப்படி யோசனையில் காண்டாக்ட் லிஸ்ட்டை அழுத்தியபடி இருந்தவள், எதார்த்தமாக வந்த விநோத்தின் எண்ணைப் பார்த்தவளுக்குச் சட்டென்று தூக்கி வாரிப் போட்டது.

இத்தனை களேபரத்தில் அவளுக்கு ஏன் விநோத்தின் ஞாபகம் வரவில்லை? விநோத் மேல் எனக்கு ஈர்ப்பு இல்லையா? பாலா கேட்ட போது கூட அவன் ஞாபகம் வரவில்லையே... அவன் மேல் எனக்கு ஒன்றும் இல்லை. அதுதான் உண்மை. அவனுக்கு? தெரியவில்லை.

அவளுக்கு... ஆனால், தன்னைப் போல் அவனுக்கும் ஒன்றும் தோன்றி இருக்கக் கூடாது. இல்லையென்றால்

விநோத்துக்கு என்ன பதில் சொல்வது? அத்தை, மாமா முகத்தில் அவள் மட்டுமல்ல, ராகவும் மைதிலியும் கூட விழிக்க முடியுமா? இத்தனை நாள் இருவர் குடும்பத்திற்கும் இடையில் ஓடிய உறவு மற்றும் நட்பு... இவளால் முறிந்து விடுமோ? இதைச் சத்தியமாய் ராகவ், மைதிலியால் தாங்கிக் கொள்ள முடியுமா? பேசாமல் விநோத்திடமே கேட்டு விடலாமா?

அவன் ஏதாவது கண்டிப்பாகச் செய்வான். இல்லையில்லை. வேண்டாம். என் விதியோடு அவனையும் கஷ்டப்படுத்தக் கூடாது. ஒன்று கிடைக்க வேண்டுமென்றால் இன்னொன்றை இழந்துதான் ஆக வேண்டும். அவள் வாழ்வில் மகிழ்ச்சி என்ற ஒன்று இனி ஒருபோதும் இல்லை. அவள் சந்தோஷமாய் இருக்க வேண்டுமென்று இருந்திருந்தால் ஏன் இப்படியெல்லாம் நடக்க வேண்டும்? கண் முன்னே அவளின் வாழ்க்கை சின்னா பின்னமாகிக் கொண்டிருக்கிறது. இவள்தான் தங்கள் வீட்டின் மருமகள் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களின் நம்பிக்கையில் மண் அள்ளிப் போடப் போகிறாள். ஏன் தன் மகளின் மேல் முழு நம்பிக்கை வைத்து வாக்குக் கொடுத்திருந்த ராகவ், மைதிலிக்கும் கூட இது பேரிடிதான்.

எப்படி இதை எல்லாம் சமாளிக்கப் போகிறாள்? முகத்தை அழுந்தத் துடைத்தவள், இனிமேல் நினைத்து ஒன்றும் ஆகப் போவதில்லை. இவள் எடுத்திருக்கும் முடிவால் எல்லோருக்கும் கொஞ்சம் வலிதான். நாளாக... நாளாகச் சரியாகி விடும்.

இப்படி யெல்லாம் அவள் மனம் ஒரு நிலையில் இல்லாமல் கண்டபடி அலைந்து அவள் நிம்மதியைச் சீர் குலைத்துக் கொண்டிருந்தது. ஒருவாறாக மனதினை நிலைப்படுத்திப் பாலாவின் எண்ணை மீண்டும் அழுத்த நினைக்கையிலேயே பாலாவே அவளுக்குக் கால் செய்தான்.

"என்ன கீர்த்தி... கால் பண்ணியிருந்தாய்! நான் கீழே சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அதனால்தான் எடுக்க

வில்லை. என்ன விசயம்?" என்று ஒன்றுமே நடக்காதவன் போல் கேட்டான்.

ஆனால், நேற்று அப்படி வீராப்பாகப் பேசி விட்டுப் போனவள்... இன்று இவள் பேசினால் அவன் என்ன நினைப்பான்... என்று சற்றுத் தயக்கத்தோடுதான் கீர்த்தியும் ஆரம்பித்தாள்.

தன் வீட்டில் நடந்ததைச் சொன்னவள்... குரலினைத் தாழ்த்தி, தான் மனதில் நினைத்தபடி முதலில் கடனாகக் கேட்டுப் பார்ப்போம். ஒருவேளை பாலா கொடுக்க நினைத்தாலும் நினைப்பான் என்று நினைத்து, "சார், எனக்கு நீங்கள் கட... கடனாகத் தர முடியுமா? எனக்கு வேறு வழியில்லை. அதனால்தான்!" என்று அமைதி காத்தாள்.

பாலாவின் முன் அவள் எண்ணமெல்லாம் நடக்க வில்லை.

பாலாவிற்கோ மனது கொஞ்சம் குதூகலித்தது. இவ்வளவு தூரம் இறங்கி வந்தவள், கண்டிப்பாக முடிவெடுத்திருப்பாள். நாம் இறங்கக் கூடாது. இதுதான் நல்ல சமயம்... நாமே கெடுத்துக் கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கை செய்தபடி, கடினமான குரலில்,

"கீர்த்தி, நான் என் முடிவை எப்பவோ சொல்லி விட்டேன். அதற்கு ஓ.கே. என்றால் சரி. மற்றப்படி நானும் உன்னைக் கட்டாயப்படுத்தவில்லை. அதே நேரத்தில் எனது அலுவலக வேலைக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. நீ எப்போதும் போல் வேலைக்கும் வரலாம். கடன் கொடுப்பவன் கூட அடிப்படையாக ஏதாவது கேட்கும் போது நான் நிபந்தனை விதிப்பது தவறாகத் தோன்றவில்லை எனக்கு. நன்றாக யோசி. உனக்கு நேரம் கூட இல்லை. உன் அப்பாவைக் காப்பாற்றுவதா இல்லையா என்பது உன் கையில் இருக்கிறது. ஆண்டவனாய்க் கொடுத்த வாய்ப்பை இழந்து விடாதே!" என்று அவன் மனச்சாட்சியை முற்றிலு

மாய்த் தூக்கித் தூர எறிந்து விட்டுக் கல்நெஞ்சக்காரனாய் வாழ்க்கை வியாபாரம் பேசினான்.

மறுமுனையில் கீர்த்தி மனம் ஊமையாய் அழுதது. எப்படிப் பேசுகிறான்... அடுத்தவர் மனம் என்ன பாடுபடும் என்பதை அவன் சிறிதுகூட நினைக்கவில்லை. யாரோ ஒருத்தியை மனதில் வைத்துக் கொண்டு இவள் கழுத்தில் தாலி கட்ட எப்படிப் பேரம் பேசிக் கொண்டிருக்கிறான்... இவனோடு என் வாழ்க்கையை இணைப்பதா என்று நினைத்தவள், அவனும் இவளை விரும்பி ஒன்றும் கேட்கவில்லையே? அவன் எப்படிச் சுயநலமாய்ப் பேசுகிறானோ தானும் அவ்வழியிலேயே இறங்கி விடலாம் என்று முடிவு செய்தவள், ஒரு உறுதியோடு பேச ஆரம்பித்தாள்.

"ஓ.கே. பாலா! நான் உங்களைத் திருமணம் செய்து கொள்கிறேன். நீங்கள் சொன்ன நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு... ஆனால், நீங்கள் சொன்ன தற்காலிகம் என்பது எதுவரை? அதாவது உங்கள் காதலி மது வரும்வரையா? இல்லை, என் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் வரையா? எனக்குப் புரியவில்லை!" என்று தன் சந்தேகத்தைக் கேட்டவள், தற்காலிகம் என்பதை அழுத்தத் தவறவில்லை.

கீர்த்தி ஒத்துக் கொண்டு விட்டாளா என்பதையே பாலாவால் நம்ப முடியவில்லை. அவனது இயல்பான நல்ல மனம் எங்கோ அவனைக் குத்தியது. இருந்தாலும் அதையெல்லாம் லட்சியம் செய்யாமல், "கீர்த்தி, நாளை நாம் சந்திக்கும்போது இதைப் பற்றி விளக்கமாகப் பேசலாம்..." என்று அவன் பேசும்போதே,

"இல்லை சார். உங்களுக்குக் காலம் இருக்கலாம். ஆனால், என் அப்பாவின் நிலைமை கழுத்தில் கத்தி இருக்கும் நிலைமை. நாம் இன்றிலிருந்தே நடத்தப் போகும் நாடகத்தை ஆரம்பிக்கலாம். அதற்கு முன் என் தரப்பு முடிவைச் சொல்லி விடுகிறேன். நீங்க எனக்குக் கொடுக்கும்

தொகை என்னைப் பொறுத்தவரை கடன்தான். என் வாழ்நாள் முடியும் முன் நான் கண்டிப்பாக அடைத்து விடுவேன். அதே நேரத்தில் என் அப்பா அம்மாவிற்கு நாம் இப்படி ஒரு நாடகம் போடுவதாய்த் தெரியக் கூடாது. உங்க மூலம் பணம் கிடைப்பது எதார்த்தமாய் இருக்க வேண்டும். எங்க அப்பா, அம்மா மட்டும் கண்டுபிடித்தால் மொத்தமாய் வீணாகி விடும். அதன் பிறகு என்னால் இன்னும் அவரது நிலைமை மோசமாகி விடக் கூடாது.

"எனக்கு இப்போது உள்ள நிலைமையில் என்னால் ஒன்றும் யோசிக்கக் கூட முடியாது. என்னைப் பொறுத்தவரை எனது அம்மா அப்பா பாதிக்கக் கூடாது. நீங்க என்ன சொன்னாலும் நான் கேட்கிறேன். அவ்வளவுதான்!" என்று விடாமல் இயந்திரத்தனமாய்ப் பேசியவள்... தானா இப்படிப் பேசுகிறோம் என்று கூட மலைத்தாள்.

அவள் சொல்வதை எல்லாம் நிதானமாய்க் கேட்டவன், "சரி கீர்த்தி! உன் அப்பா, அம்மாவிற்குக் கண்டிப்பாய் என் மூலம் தெரியாது. ஆனால், நீ நடப்பது என்று ஒன்றும் இருக்கிறது. உனக்கு எப்படி உன் அப்பா அம்மாவோ அதே போல்தான் எனக்கும். என் பெற்றோர்க்கும் இந்த விஷயம் தெரியக் கூடாது. நீயும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். தென்... நாம் இருவரின் தேவைகளும் நிறைவேறினாலும் நிறைவேறாவிட்டாலும் நம் மண வாழ்க்கையின் காலம் ஒரு வருடம். ஏனெனில் அப்போதுதான் நாம் சட்டபூர்வமாகப் பிரிய ஏதுவாக இருக்கும். நான் சொல்வது புரிகிறது அல்லவா?

"நம் மனம் ஒத்துப் போகவில்லையென்று ஏதாவது ஒரு காரணம் சொல்லிப் பிரியும் போது நாம் போட்ட நாடகம் யாருக்கும் தெரியப் போவதில்லை. அப்போது அந்தப் பிரிவு ஒருவருக்கும் வித்தியாசமாகத் தெரியாது..." என்று அவன் பேசும்போதே, கீர்த்தி குறுக்கிட்டாள்.

"சாரி சார்! இந்த ஒரு வருட வாழ்க்கையெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. சுயநலமாய்ப் பேசுகிறேன் என்று நினைக்காதீர்கள். எல்லாம் உங்களிடம் இருந்துதான் கற்றுக் கொண்டது..." என்று அதிரடியாய்க் கூறிப் பாலாவைத் திகைக்க வைத்தவள்.

"மது கிடைத்த பிறகோ, இல்லை... அதிர்ஷ்ட வசமாக என் பணப் பிரச்சனை தீர்ந்தாலோ அவரவர் விருப்பப்படி செல்வதுதான் என் விருப்பம். இது யாராவது ஒருவருக்குப் பாதகமாய் இருக்கலாம் என்று எனக்குத் தெரியும். ஒருவேளை மது விரைவில் கிடைத்து விட்டால் நான் கண்டிப்பாக விலகி விடுவேன். என் அப்பா, அம்மாவைச் சமாளிப்பது என் பொறுப்பு. நான் சொல்லும் விரைவில் என்பது திருமணம் முடிந்த அடுத்த நிமிடம் கூட இருக்கலாம். அதேபோல்தான் உங்களுக்கும்... என்னைத் தடுக்கக் கூடாது நீங்களும்.

"அது மட்டும் இல்லாமல் இந்த முடிவு உங்களுக்குத்தான் சாதகமானது கூட. ஏனென்றால் இவ்வளவு பெரிய தொகை கண்டிப்பாக எனக்குக் கிடைக்கப் போவதில்லை என்று எனக்குத் தெரியும். ஆனால், மது எப்போதும் வரலாம் அல்லவா! தயவு செய்து எனக்காக இந்த ஒரு முடிவுக்கு மட்டும் ஒத்துக் கொள்ளுங்கள்!" என்று அவன் பதிலை எதிர் நோக்கினாள்.

அவனிடம் நேரில் பேசினால் கூட இத்தனை தைரியமாகப் பேசி இருப்பாளா என்று தெரியாது.

அவள் பேசியதைத் தன் மனதில் போட்டு ஆராய்ந்தவன்... அவள் சொல்வது சரியாய்ப் பட,

"ஹ்ம்ம்ம்... நீ சொல்வது கூடச் சரிதான். எனது முடிவுக்குச் சரி சொன்னதிற்கு மிகவும் நன்றி கீர்த்தி. நான் உனக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இது நீ எனக்குச் செய்யும் மிகப் பெரிய உதவி கீர்த்தி! மேலும் நீ எனக்கு எந்தப்

பணமும் தர வேண்டாம் கீர்த்தி! அது எனக்கு ஒரு பொருட்டே அல்ல."

"உங்களுக்கு வேண்டுமென்றால் அது பொருட்டல்ல. ஆனால், அது எனக்கு எவ்வளவு முக்கியம் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் நான் இந்த நிலைமையில் நிற்கிறேன்..." என்று சொல்லும் போதே, அவளுக்கு அழுகை வரும் போல் தோன்ற, அதை அடக்கியபடி... "அதே நேரத்தில் நானும் சரி. என் குடும்பமும் சரி. யாருக்கும் கடன்பட்டவர்களாய் இருக்க எனக்கு விருப்பமில்லை..." என்று தன் தன்மானத்தை விடாமல் பேசியவளை நினைத்துப் பாலா புருவத்தை உயர்த்தாமல் இல்லை.

"நான் இவ்வளவு சொல்லியும் நீ இப்படிச் சொல்கிறாய் என்றால் அது உன் இஷ்டம். நாளைக் காலையில் இருந்து நான் பார்த்துக் கொள்கிறேன். நீ கவலைப் படாதே! இன்னொரு விஷயம். இந்த சார்... மோரெல்லாம் இப்போதிருந்தே விட்டு விடு. என்ன ஓ.கே.வா?" என்று கலகலப்பாகப் பாலா சொல்ல...

"சரி, வைக்கிறேன் பாலா!" என்று அவள் சொன்ன அடுத்த நொடியே... போனை வைத்தான் பாலா.

சற்றுத் திகைத்தவன் அவன் மேல் எவ்வளவு கோபமாக இருக்கிறாள் என்று புரியாமல் இல்லை. வேறு வழியில்லாமல்தான் இவனிடம் ஒத்துக் கொண்டிருக்கிறாள். என்ன ஒரு திடமாகப் பேசுகிறாள்! எனக்குப் பணம் வேண்டும்... உனக்கு என் உதவி வேண்டும். அவ்வளவு தான். அதுவும் கடனாக. அவள் பேசியதில் தெரிந்தது தன்மானமா அல்லது ஈகோவா என்பது புரியவில்லை. எப்படியோ இப்படி ஒரு பெண்ணைத்தான் அவன் தேடிக் கொண்டிருந்தான். பின்னால் பிரச்சனை இல்லாமல் இருக்க வேண்டுமென்றால் இப்படி ஒரு தன்மானமுள்ள பெண்தான் சரியாக இருக்கும் என்றெல்லாம் யோசித்தபடி... இரு

வீட்டினரையும் எப்படிச் சமாளிப்பது என்று வெகு நேரமாய்ப் பலவாறாய்ச் சிந்தித்து, அதற்கு மூளையைக் கசக்கிக் கண்டுபிடித்தவன் தூங்கும் போது மணி நான்கு ஆகி யிருந்தது.

19

தீங்கள் கிழமை காலை பாலா ராகவனின் அலுவலகத்தில் இருந்தான். ராகவனும் பாலாவை ஏற்கெனவே பார்த்திருந்ததால் அவனை அடையாளம் காண்பதில் சிரமம் இல்லை. ஆனால், இவன் எதற்கு இங்கு வந்திருக்கிறான் என்று யோசித்தபடி இருந்தார்.

அவரது சிந்தனையைக் கலைத்தபடி பாலா பேச ஆரம்பித்தான்.

"அங்கிள், உங்களிடம் நான் தனியாகச் சில விஷயங்கள் பேச வேண்டும். நீங்க ஃப்ரீயாக இருந்தால் இப்போதே பேசலாம். விஷயம் அந்த அளவு பெரிது. எனக்கு இன்றே பேசித் தீர்வு காண வேண்டும்..." என்று அவருக்கு என்ன ஏது என்பதைத் தெரிவிக்காமல் அதிரடியாக ஆரம்பித்தான்.

ஏற்கெனவே பல குழப்பத்தில் இருந்த ராகவன்... பாலாவின் பேச்சில்... அவருக்குப் பல வேலைகள் இருந்த போதும்... இதை வேறு ஒத்தி வைத்து அதை நினைத்துக் குழம்ப மனம் இல்லை. அனைத்தையும் தள்ளி வைத்து விட்டு அவனிடம் பேசத் தயாரானார்.

அவனுக்கு நம்மிடம் பேச என்ன இருக்கிறது என்ற யோசனையே அவரிடம் இருந்தது. கீர்த்தனா பற்றியெல்லாம் நினைக்கவே இல்லை. லோன் டீடெயில்ஸ் ஏதும் கேட்க வந்திருப்பானா என்ற அளவிலேயே இருந்தது. அதுவும் அவன் அவரது வங்கிக்கு வந்திருப்பதால்... அது மட்டும் இல்லாமல் கீர்த்தனாவை அவனோடு சம்பந்தப்படுத்தி

யோசிக்கும் அளவிற்கெல்லாம் தோணவில்லை. ஏனென்றால் அவர் மகள் எதையும் அவரிடம் மறைக்க மாட்டாள். அது மட்டுமில்லாமல் தற்போதைய குடும்பச் சூழ்நிலையினைச் சொல்லியிருப்பாளோ என்றும் கூடத் தோணவில்லை.

அதற்கும் காரணம் இருந்தது. மூன்றாம் மனிதர்களிடம் தன் கவலையெல்லாம் புலம்பும்படி அவள் மெச்சூரிட்டி இல்லாதவள் இல்லை. ஆனால், விதி ஏனோ அவளிடம் பாலாவே அவள் பிரச்சனையைக் கேட்டு வாங்கும்படி வைத்ததை அவர் உணர முடியுமோ! இந்தக் காரணங்களினால் அவர் மனம் கீர்த்தனாவை அந்த இடத்தில் சம்பந்தப்படுத்தி யோசிக்கவில்லை. ஒருவேளை தான் ஒரு பெண்ணிற்குத் தந்தை என்ற நினைவை விட, தற்போதைய தன் அலுவலகப் பிரச்சனைகள் அவரது நினைவுகளில் ஆதிக்கம் செலுத்தி இருந்ததால் அவருக்குத் தோணவில்லையோ என்னவோ... கீர்த்தியை அந்த இடத்தில் நினைக்கவில்லை.

ஆனால், அதை யெல்லாம் தவிடு பொடியாக்கும் வகையில் இருந்த பாலாவின் பேச்சில் அதிர்ந்தார்.

பாலா கீர்த்தியிடம் பேசி ஓரளவு அவளைப் பற்றிய விபரங்களைச் சேகரித்திருந்தான். அதில் விநோத்தின் விபரங்களும் இருந்தன. அவன் தன் தந்தையின் நண்பரின் மகன் என்றும், இரு பெற்றோருக்கும் இவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்கும் எண்ணம் இருந்ததையும் சொல்லி இருந்தாள். அவளுக்கு எந்த எண்ணமும் இல்லை என்பதையும் சொல்லி இருந்தாள்.

பாலாவிற்குக் கொஞ்சம் பயம், சந்தேகம் கூட இருந்தது. எங்கே அவள் அவனை விரும்பியிருப்பாளோ என்று... ஆனால், அவன் அதைப் பற்றி அப்போதைக்கு விட்டு விட்டான். கீர்த்தி தன் நிலைமையினைத் தெளிவாகக் கூறி விட்டாள். தன் தந்தையின் நிலைமையைச் சரி செய்ய வேண்டும். அது மட்டும் முக்கியம் என்று. அதேபோல்

அவனைப் பற்றிய விவரங்கள் அவர்களுக்கு எந்த அளவில் தெரியும் என்பதினையும் கேட்டுக் கொண்டான். முக்கியமாகத் தன் காதல் அவர்களுக்குத் தெரியுமா என்பதினையும் கேட்டுக் கொண்டான். கீர்த்தி கவியைத் தவிர வேறு யாரிடமும் சொல்லவில்லை என்பதால்... அவர்களுக்குத் தான் சொல்ல வில்லை என்பதையும் சொல்லி இருந்தாள்.

எல்லாவற்றையும் மனதில் வாங்கி அனைவரையும் தன் வழிக்குக் கொண்டு வர ஓரளவிற்குத் தயார் செய்திருந்தான். அதன்படி, "அங்கிள், ஏன் என்னைப் பிடிக்கவில்லை? எங்கள் காதல் பிடிக்கவில்லை... என்று கீர்த்தியிடம் சொன்னீர்கள்?" என்று கொஞ்சம் கூட மனச்சாட்சியே இல்லாமல் நிதானமாகக் கேட்டான்.

அவன் பதறாமல் கேட்டாலும் மொத்தமாய் ஆடிப் போனவர் ராகவன்தான். அவருக்குப் பல அதிர்ச்சிகள். என்ன, கீர்த்தி காதலிக்கிறாளா! அதுகூட அவரைப் பாதிக்கவில்லை. தன்னிடம் சொல்லவில்லை... என்பதுதான் மொத்தமாய் ஆட வைத்தது. சொல்லாமலேயே தனக்கு அவனைப் பிடிக்கவில்லை என்றும் கூறியிருக்கிறாள். என்ன நடக்கிறது தன் வீட்டில்... மைதிலியின் கண்களுக்குத் தப்பாமல் போகாதே... என்று குழம்பினார். இல்லை இல்லை... அதிர்ந்தார்.

ஆனால், அவர் அதிர்ந்ததை உணர்ந்தான்தான் பாலா... அவர் மேலே யோசிக்கும் முன் அவன் பேசத் தொடங்கினான். தான் முடிக்கும்வரை அவரைப் பேச விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தவன்,

"நான்தான் அவளிடம் என் விருப்பத்தைக் கூறினேன். முதலில் தயங்கினாள். அதன் பிறகு விநோத் பற்றிக் கூறினாள். ஆனால், அவளுக்கு எந்த எண்ணமும் இல்லை அவன் மேல் என்றும் கூறினாள். நான் அவள் உணர வேண்டும் என்று அதன் பிறகு அவளைத் தொந்தரவு

செய்யவில்லை. அதன் பிறகு அவளாகவே வந்து உங்கள் இருவரிடமும் கேட்க வேண்டும் என்று சொன்னாள். அவள் அவ்வாறு சொன்னபோதே அவள் மனம் விளங்கி விட்டது.

"ஒருவேளை ஒத்துக் கொள்ளாவிட்டால் என்ன செய்வாய் என்று அவளை வேண்டுமென்றே குழப்பினேன். அதன் பிறகு அவள் யோசித்திருப்பாள் போல. என்னிடம் சம்மதம் சொன்னாள். பின் உங்கள் இருவரிடமும் தகுந்த நேரத்தில் சொன்னால் கண்டிப்பாக ஏற்றுக் கொள்வீர்கள் என்று சொல்லியிருந்தாள். ஆனால், அவள் சொல்வதற்கு முன் எனக்கு என் தந்தையின் உடல் நிலை காரணமாக உடனே திருமணம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறேன். கடந்த வாரம் அதைப் பற்றி அவளிடம் சொல்லி இருந்தேன். என் பெற்றோரை என்று உங்கள் வீட்டுக்கு வரச் சொல்லலாம் என்று கீர்த்தியின் பதிலை நான் எதிர்பார்த்துக் காத்திருக்க... அவளோ உங்களுக்கு இஷ்டமில்லை என்றும், அதனால் இப்போதைக்குத் திருமணம் செய்ய முடியாது என்றும்... காத்திருக்க முடியும் என்றால் எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. ஆனால், உடனே என்றால் தன்னால் முடியாது என்றும்... தன்னை வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கூறி விட்டாள். இப்போது சொல் லுங்கள் அங்கிள், எதனால் என்னைப் பிடிக்கவில்லை...?" என்று முற்றிலும் பொய்யாய் முடித்தான்.

இப்போது பாலா பதட்டமாய் இருந்தான். பின்னே ஒரு கட்டுக் கதை சொல்லியவனை அவன் மனச்சாட்சி நார் நாராய்க் கிழித்துக் கொண்டிருந்தது.

ஆனால், ராகவனின் தந்தையுணர்வு முற்றிலும் விழித்து மேலோங்கியிருந்தது. அவன் சொன்ன எதையுமே அவரால் நம்ப முடியவில்லை. ஏனென்றால் கீர்த்தியை முற்றிலுமாக அறிந்தவர் அவர். அவளின் ஒவ்வொரு அசைவும் அவருக்கு அத்துப்படி. தன் மகள் இந்த

அளவெல்லாம் குழம்புபவள் இல்லை. அப்படியே அவள் குழப்பமான மன நிலையில் இருந்தாலும் அவர் கண்களுக்குத் தப்பி இருக்காது. இந்த ஒரு வாரத்தில் வேண்டுமென்றால் அவளை அவர் கவனிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால், அப்போதும் மைதிலியிடம் அவள் தப்ப முடியாது. என்னவோ நடந்திருக்கிறது.

அதே நேரத்தில் பாலா சொல்வதையும் அவரால் விட முடியவில்லை. ஒரு பொறுப்பானவன்... ஒரு கம்பெனியை ஏற்று நடத்துகிறவன். ஏனோதானோவென்று முடிவுகளை எடுக்க மாட்டான். எடுத்தோம் கவிழ்த்தோம் என்றும் பேச மாட்டான். அதனால் அவன் சொல்வதையும் அலட்சியப்படுத்த முடியவில்லை. அவனது தீவிரமான முக பாவம் முடிவு வேண்டும் என்பது போல் இருந்தது.

கொஞ்சம் சகஜ நிலைக்குத் திரும்பியவர்... "நான் உங்களுக்குப் பதில் சொல்கிறேன். ஆனால், கீர்த்தியும் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். என் குடும்ப விஷயம் என்பதால் வீட்டில் பேசலாம்..." என்றபடி அவனைப் பார்த்தார்.

அவரின் பார்வையிலேயே அவர் அவனை நம்பவில்லை என்பதை உணர்ந்தான். இதற்கு மேல் எப்படிச் சொல்வது?

'டேய் பாலா... கீர்த்தி அங்க சொதப்பினால் எல்லாம் கோவிந்தா... கடவுளே! நீதான் காப்பாற்ற வேண்டும்...' என்று மனதில் பேசிக் கொண்டிருந்தான்.

அவனின் தவிப்பு அவனது முகத்தில் தெரிந்தது. ராகவன் அதைக் கவனிக்காமல் இல்லை.

மைதிலிக்குப் போன் செய்து, தான் வீட்டிற்கு வந்து கொண்டிருப்பதாகக் கூறினார். மைதிலி பதறிப் போய், "என்ன ஆபீஸில் ஏதாவது..." என்று இழுக்க,

"அதெல்லாம் ஒன்றுமில்லை... இது வேற விசயம்..." என்றபடி, பாலாவைப் பார்த்தார்.

அவனது காரில்தான் இருவரும் வந்தனர். அவர் வந்ததால் அவன் கீர்த்தியிடமும் பேச முடியவில்லை. ஒருவிதத் தவிப்புடன் வந்தான்.

மைதிலி மறுபடியும் அவரிடம் என்ன என்று கேட்க... சற்றுக் கோபத்துடன், "வந்துட்டு இருக்கேன்னு சொல்றேன். அதுவரைக்கும் பொறுமை இல்லையா?" என்று கேட்டவுடன்,

"இங்க ஒருத்தி ஆபீஸ் போகலையா என்று கேட்டால் பதில் சொல்ல மாட்டேங்கிறாள். அவங்க எம்.டி. காலையில் இருந்து கால் பண்ணினால் எடுக்காமல் உட்கார்ந்து இருந்துவிட்டு... நான் பேசச் சொன்னவுடன் அவரிடமே எரிந்து விழுகிறாள். கேட்டால்... அவள் லீவ் போட்டால் கூட வேலை என்று தொல்லை கொடுக்கிறார்கள்... என்று எரிச்சல் வேறு..." என்று மகளைப் பற்றிச் சரியான நேரத்தில் ராகவனிடம் போட்டுக் கொடுத்தாள்.

மைதிலி தொடர்ந்தாள். "நம்ம பிரச்சனையில் ஏன் அவரிடம் எரிச்சலாகப் பேசுகிறாய் என்றால் அதற்கும் பதில் சொல்லாமல் போய் அவள் ரூமில் இருக்கிறாள். நீங்க என்னவென்றால் இப்படி..." என்று தன் குமுறலைச் சொல்லி விட்டுப் போனை வைத்தாள்.

கீர்த்தியைப் பற்றி அவன் சொன்னது உண்மையோ எனும்படி மைதிலியின் புலம்பல் இருந்தது.

வீட்டில் நுழைந்தபோது, ஹாலில் மைதிலி மட்டுமே இருந்தாள். ராகவனை எதிர்பார்த்தபடி இருந்தவளுக்கு... பாலாவை அவருடன் பார்த்தவள், ஒன்றும் புரியாமல் ராகவனைப் பார்த்தாள்.

மைதிலியின் பார்வையை உணர்ந்தபடி, கீர்த்தியை அழைத்தார். இந்த நேரத்தில் அப்பாவா என்றபடி அறைக்

கதவைத் திறந்தவள், பாலாவும் அங்கு இருந்ததைப் பார்த்து, அவனைப் பார்த்து அதிர்ந்தாள்.

அவள் கண்களில் அதிர்வு, கோபம், கலக்கம் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக வந்ததை ராகவன் உணர்ந்த போது, கீர்த்தியை அவரால் அனுமானிக்க முடிந்தது. பாலாவிற்கும் அவளுக்கும் மத்தியில் ஏதோ ஒன்று இருக்கிறது. மகள் மறைத்து விட்டாள்... என்பதை நினைக்கும் போதே மனதின் ஓரம் வலித்தது.

அந்த ஏதோ ஒன்று பாலா சொன்ன விஷயமாக இருந்தால்... அவளின் மூலமாகத் தெரிய வேண்டும். உண்மை இருக்கும் பட்சத்தில் அவருக்கும் பெரிய எதிர்ப்பெல்லாம் இல்லை. அவரும் காதல் திருமணம் செய்தவர்தான். அவள் இப்போது திருமணம் வேண்டாம் என்று சொன்னது கூடத் தங்கள் நிலைமையினை எண்ணித்தான் என்பது அவருக்கு விளங்கியது.

முதலில் பாலாவை அப்பாவுடன் பார்த்தவள் அதிர்ந்தாள். ஒன்றும் சொல்லாமல் வீட்டிற்கு வந்திருக்கிறான்... தன்னிடம் சொல்லாமல் ஏன் வந்தான் என்று கோபம் வந்தது. என்ன சொல்லி வைத்திருக்கிறானோ... அப்பா என்ன கேட்கப் போகிறாரோ என்ற போது கலக்கம் வந்து விட்டது.

அவளின் அனைத்து மனநிலையும் ராகவனும் உணர்ந்ததை அறியாமல்...

"அப்பா... பாலா... சா... பாலா எப்படி இங்கு?" என்று தடுமாறியவள், மேலே பேச முடியவில்லை.

மைதிலியும் அவளது தடுமாற்றமான பேச்சில்தான் கீர்த்தியைக் கவனிக்க ஆரம்பித்தாள். ராகவனை என்ன நடக்கிறது இங்கு என்பது போல் பார்க்க... அவர் மனைவியிடம்,

"நம்ம பொண்ணு வளர்ந்துட்டானு... உங்களுக்குச் சொல்லிட்டே இருக்கணும்னு அடிக்கடி சொல்வியே மைதிலி... இன்னைக்குப் பாலா கூட அதைச் சொல்லாமல் சொல்லிட்டாரு..." என்று கீர்த்தியைப் பார்த்தார்.

அவளோ... அவர் பார்வையைச் சந்திக்க முடியாமல் குனிந்தாள். இதுநாள்வரை கீர்த்தி தன்னிடம் தலை குனிந்து பார்த்ததில்லை. முதல் முறை... இதுதான் முதல் முறை.

மைதிலிக்கோ அவர் என்ன சொல்கிறார் என்றே புரியவில்லை. பாலாவைப் பார்த்தால் அவன் கீர்த்தியைப் பார்த்துக் கொண்டிருந்தான். கீர்த்திக்கோ அவன் என்ன சொன்னான்... இப்போ அப்பா என்ன கேட்கப் போகிறாரோ என்றிருந்தது.

"கீர்த்தி, எனக்குப் பாலாவைப் பிடித்திருக்கிறது..." என்றார் மொட்டையாக.

மைதிலிக்குச் சத்தியமாய் ஒன்றும் புரியவில்லை. கீர்த்திக்கும்தான். புரியாமல் விழித்தவள்... பாலாவைப் பார்த்து முறைத்தாள்.

பாலா... ராகவன் சொன்னவுடன் கீர்த்தியைப் பார்த்தான். அவன் சொன்னதற்கு மாற்றாக ஏதும் சொல்லி விடுவாளோ என்று... கீர்த்தியிடம் அவன் சொன்னதைப் பற்றி விசாரிப்பார் என்று பார்த்தால் இப்படிப் பேசுகிறாரே என்று இருந்தது.

பாலாவைக் கோபமாய்ப் பார்த்தவளைப் பார்த்த ராகவன்... கிட்டத்தட்ட பாலா சொன்னதெல்லாம் உண்மை என்ற முடிவுக்கு வந்து மைதிலியிடம் பாலா கூறியவை எல்லாம் கூறினார்.

இப்போது மைதிலிதான் மலை ஏறி இருந்தாள்.

"என்னடி நடக்குது... அவர் சொல்வதெல்லாம் உண்மையா?"

மைதிலியின் குரலின் கடுமையை மட்டுமே கீர்த்தி கேட்டாள். குனிந்த தலை நிமிரவில்லை. அவள் பதில் சொல்லாமல் இருப்பதைப் பார்த்து மைதிலிக்கு இன்னும் கோபம் அதிகமாகியது. அவளது கோபத்தை உணர்ந்த பாலா...

"கீர்த்தி, பதில் சொல்லு..." என்று அவள் பெற்றோர் முன்னே அவளிடம் உரிமையுடன் பேச ஆரம்பிக்க... கீர்த்தி சட்டென நிமிர்ந்து அவனை முறைக்க... இவ இப்படி மொறைச்சுப் பார்த்தே காரியத்தைக் கெடுத்து விடுவாள் போல... என்று பாலாவுக்குத் தோன்றினாலும்... அவளிடம் சொல்லியிருந்தால், நம்மைப் போலவே அவளும் நடிக்க ஆரம்பித்திருப்பாள். ஓவர் டோஸ் ஆகியிருக்கும் போல் தோன்றியது.

ராகவன் அவனது பேச்சினை நம்பவில்லை. ஆனால், கீர்த்தியின் பார்வை மாற்றங்கள்தான்... அவரைப் பாலாவின் கூற்றை நம்ப வைத்திருக்கிறது என்பது அவரையே பார்த்திருந்ததினால் உணர முடிந்தது அவனுக்கு.

"அவரை எதுக்குடி பார்க்கிற? என்னைப் பாரு. எப்ப இருந்து இதெல்லாம் நடக்குது? அவர் சொல்றதெல்லாம் உண்மையா?" என்று கேட்க... வெள்ளி அன்று அவள் அழுதது வேறு மைதிலிக்கு ஞாபகம் வந்தது. இவனிடம் மறந்து விடு என்று சொல்லி விட்டுத்தான் தன் மடியில் விழுந்து அழுதாளா என்று நினைக்கையில் இன்னும் கோபம்தான் வந்தது.

ராகவன், "சொல்லுமா. இப்பக் கூட நீ சொல்லும்வரை நான் நம்ப மாட்டேன்..." என்று மகளைப் பார்க்க,

மைதிலியோ, "இன்னும் என்ன... அவ இருக்கிற தோரணையே சொல்லுதே!" என்றாள், கோபம் கலந்த கேலியாக.

அவளின் கேலிப் பேச்சில் நிமிர்ந்தவள்... கண்களில் நீருடன், "ஏம்மா... எனக்கு ஒருத்தரைப் பிடிக்கக் கூடாதா? இல்ல... லவ் வரக் கூடாதா?" என்றாள். இப்போதும் அவள் நேரடியாய்ச் சொல்லவில்லை.

அவளின் கண்ணீரைப் பார்த்த ராகவனுக்கு, அதற்கு மேல் தாங்கவில்லை.

"அப்போ ஏன்மா அவரை வேறு பெண்ணைத் திருமணம் செய்யச் சொன்னாய்?" என்று கேட்க,

"நான் ஏன் சொன்னேன் என்று உங்களுக்குத் தெரியாதாப்பா?"

மைதிலி, "என்னங்க... நீங்களும் அவளோடு பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அவளைக் கண்டிப்பதை விட்டு..." என்று கூற,

இப்போது பாலா அவர்கள் பேச்சில் இடையிட்டான்.

"என்ன பிரச்சனை அங்கிள்?" என்று எதுவும் தெரியாதது போல் வினவ...

"எனக்கு யாரையும் பிடிக்கக் கூடாதுன்னு கேட்கத் தெரியுதுல்ல. எங்களைப் பார்த்து என்ன பிரச்சனை என்று... அந்தப் பிடித்தவரிடம் ஏன் சொல்லவில்லை?" என்று மறுபடியும் மைதிலி கீர்த்தியிடமே வந்தாள்.

அவளுக்கு வினோத் இனி மருமகன் இல்லை என்ற வருத்தம்தான் இப்போது. ஏனோ ராகவனைப் போல் பாலாவை ஏற்றுக் கொள்வதற்கு மனம் இல்லை.

"மைதிலி!" என்று அவளை அடக்கிய ராகவன், கொஞ்சம் கூடத் தயங்காமல் பாலாவிடம் தன் நிலைமையினை விளக்கினார். பாலாவும் என்னவோ அப்போதுதான் கேட்பவன் போல் கேட்டான்.

அவன் நினைத்த மாதிரியே ஒவ்வொன்றும் நடந்து கொண்டிருப்பதில் அவனுக்குச் சந்தோஷமே.

ராகவன் முடிக்கும்வரை அமைதியாக இருந்தவன்... கீர்த்தியைப் பார்த்து முறைத்தான்.

மைதிலிக்கோ இவங்க ரெண்டு பேருக்கும் முறைப்பதைத் தவிர வேறு ஏதும் தெரியாதா! இதுக்குப் பேர் காதலாம்... என்றெல்லாம் நினைத்தபடி, இருந்தாலும் தங்கள் பெண்ணை அவர்களுக்கு முன் அவன் முறைத்தது அவளுக்குப் பிடிக்கவில்லை.

கீர்த்தியைக் கூர்மையான கண்களால் நோக்கியவன், "இதை ஏன் என்கிட்ட சொல்லலை?" என்று அதட்டினான்.

'இத்தனை வருடம் வளர்த்த எங்களிடமே உன்னைப் பத்திச் சொல்லலை. இப்போ பழகின உன்னிடம் சொல்லவில்லை... என்று உனக்குக் கோபம் வேறா?' என்று மனதிற்குள் புழுங்கினாள் மைதிலி.

ராகவனுக்கும் அதே விசயம்தான் தோன்றியது.

தன் பெற்றோரின் முன்னிலையில் அவன் அவளை அதட்டியது... சுர்ரென்று தலைக்கு ஏறியது.

"ஏன்... சொல்லியிருந்தால் என்ன பண்ணியிருப்பீர்கள்? சொல்லுங்க!" என்று கூடாகக் கேட்டாள்.

"நான் ஏன் உனக்குச் சொல்லணும். என்ன பண்றேன்னு பாரு..." என்றபடி போனில் யாருக்கோ தொடர்பு கொண்டான். மறுமுனையில் தொடர்பு கிடைத்ததும், அதை ஸ்பீக்கரில் வேறு போட்டான். கீர்த்திக்கோ அன்று அவள் கேட்டபோதும் இப்படித்தான் செய்தான் என்பதால் பெரிதாய் ஆர்வம் காட்டவில்லை.

எதிர்முனை பேச ஆரம்பிக்கும் முன்னரே, பாலா பேச ஆரம்பித்தான்.

"ஹேய் சந்தோஷ்! நீ ரொம்ப நாளாய்க் கேட்டுக் கொண்டிருந்தாயே... அந்த ப்ராபர்டியை நான் சேல் பண்ண டிசைட் பண்ணிட்டேன்... என்ன பண்ணுவியோ தெரியாது. எனக்கு மிக விரைவில் பணம் வேண்டும்..." என்றபடி பேச,

சந்தோஷ் என்பவனோ, "டேய் என்னடா! இங்கோ பெரிய சர்ப்ரைஸ் தந்துட்ட... என்னடா ஏதும் பணப் பிரச்சனையா...? கிட்டத்தட்ட இரண்டு வருசமாய்க் கேட்டுட்டு இருக்கேன். அப்போதெல்லாம் முடியாதுன்னு சொல்லிட்டு... ஏன்டா?" என்றவனிடம்,

"சொன்னதை மட்டும் செய். நான் அப்புறமாய்ப் பேசுகிறேன்..." என்றவன், அதைத் தொடர்ந்து, ஆடிட்டராய் இருக்கும் அவன் நண்பனிடம் பேசினான். பிறகு இன்னும் ஒருவரிடம் பேசினான். இப்போது எழுந்து வெளியே போனான்.

"நாளைக்கே வேணும் எனக்கு. பணம் கிடைத்த பின்னர் அனைத்து டாக்குமெண்ட்டையும் என்னிடம் ஒப்படைத்து விட வேண்டும். இப்போ வைக்கிறேன்..." என்றபடி, முன்னர் அமர்ந்த இடத்தில் வந்து அமர்ந்தான்.

கீர்த்தி, ராகவன் மற்றும் மைதிலிக்கு... இன்றுவரை அவர்களுக்குக் கிடைக்குமா? எப்படித் தயார் செய்வது... என்ற பணம் அரை மணி நேரத்தில் அவனுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று என்று யோசிக்கும்போதே பாலா, ராகவனிடம்...

"சாரி அங்கிள்! நானே நீங்க கேட்ட அடுத்த நிமிடமே உங்களுக்குத் தந்திருக்கலாம்..." என்று அரை மணி நேரம்கூட அவனுக்கு அதிகம்தான் என்று அவர்களை அதிர வைத்தான்.

"ஆனால், தேவையில்லாத டாக்ஸ் ப்ராப்ளம் வரும் என்றுதான் தரவில்லை. லேண்ட் கூட சந்தோஷ் பேர்லதான் இருக்கு. நாங்க இரண்டு பேரும் சேர்ந்துதான் வாங்கினோம். அதில் மால் கட்ட வேண்டும் என்று நினைத்தான். எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் எனக்குச் சேர்ந்த பகுதியைத் தராமல் இழுத்துக் கொண்டிருந்தேன். இப்போதான் அதற்கு நேரம் வந்தது போல்..." என்று கூடுதல் தகவலும் தந்தான்.

இப்போது கீர்த்தியைப் பார்த்தான்.

அவளிடம், "ஒன் வீக் டைம் உன்னால் வேஸ்ட்!" என்று கூறிப் பார்க்க...

ராகவனுக்கு நம்பவே முடியவில்லை. "பாலா..." என்றவரிடம்,

அவர் பணம் கிடைத்து விட்டதா என்று நம்ப முடியாமல்... தான் தப்பித்து விட்டோமா என்று உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இருக்க... அவருக்கு அதைத் தாண்டி வேறொன்றும் தோன்றவில்லை.

"என்ன மாமா, என்னை உங்க மருமகனா ஏத்துக்கறீங்களா...?" என்றபடி, "சாரி சாரி. நீங்கதான் ஏற்கெனவே என்னைப் பிடிச்சிருக்கு என்று சொல்லி விட்டீர்களே..." என்றபடி மைதிலியை நோக்கினான், அவளது சம்மதத்துக்காக.

அதைப் பார்த்த ராகவன், அவள் மட்டும் என்ன சொல்லப் போகிறாள் என்று நினைத்தார்.

ஆனால், மைதிலியோ, "தம்பி, இந்தப் பணம் தருவதற்கு என் பொண்ணு உங்களிடம் எதைப் பணயம் வைத்தாள்?" என்று கண்களில் கூர்மையுடன், கொஞ்சம் நடுக்கத்துடன் கேட்டாள்.

மைதிலியின் கேள்வியில் பாலாவே ஆடிப் போய் விட்டான். இருந்தாலும் இவ்வளவு புத்திசாலியாக இருக்கக் கூடாது என்று எண்ணம் தோன்றியது.

கீர்த்தி அப்படியே மலைத்து விட்டாள்.

ராகவனோ, ஏன் எனக்கு இந்த எண்ணம் தோன்றவே இல்லை... என்று மனம் குமைந்தார்.

இதெல்லாம் ஒரு நொடிதான்.

பாலாவிடமோ, "இப்படி ஒரு எண்ணம் வந்த பிறகு... நான் பணம் தருவதில் அர்த்தம் இல்லை. நான் பணம்

கொடுப்பதால் எனக்கும் கீர்த்திக்கும் உள்ள காதல் பணயப் பொருளாக மாறுவதில் எனக்கு விருப்பம் இல்லை. அதனால்..." என்று நிறுத்தினான்.

இப்போது கீர்த்திக்கு ஒரு பக்கம் அவனிடமிருந்து தப்பித்த நிம்மதியும், மறுபக்கம் ராகவன் கவலையும் மாறி மாறி வந்தது.

"உங்க பொண்ணை மட்டும் கல்யாணம் பண்ணிக் கொடுங்கள். அப்போ உங்களுக்குச் சந்தேகம் வராது, இல்லையா? எனக்கும் இப்போ பணம் தரும் மனநிலை இல்லை. இன்னைக்கு உங்களுக்கு வந்த சந்தேகம் யார் யாருக்கு வருமோ? என் காதலை அப்படி ஒரு இடத்தில் இருத்த மனம் இல்லை..." என்றவன்,

ராகவனிடம், "என்ன மாமா, என்னோட நிலைமையினைச் சொல்லி விட்டேன். அப்பா, அம்மாவை எப்போ வரச் சொல்ல...?" எனத் தன் பிடியில் நிற்க...

மைதிலி நிலைமைதான் இப்போது சொல்லும்படி இல்லை.

கீர்த்தி, பாலா பேசியதில்... அவன் சமாளித்த விதம் ஆச்சரியமாக இருந்தது. எப்படி இப்படிக் கொஞ்சம் கூட யோசிக்காமல் தன் வியூகத்தைக் கொண்டு செல்கிறான்! அவன் நினைத்தது மட்டுமே நடக்க வேண்டும் என்ற பிடிவாதம்... ஆச்சரியம்... இப்போது கோபமாக மாறியது.

'காதலாம் காதல்! அப்படியெல்லாம் இல்லை. நீ போடா வெளியே!' அவள் அம்மா, அப்பாவிடம், தான் அவர்களின் மகள்தான். அவர்களிடம் சொல்லாமல் தான் எதையும் மறைக்கவில்லை என்று கத்த வேண்டும் போல் இருந்தது.

ஆனால், முடியவில்லை.

ராகவனுக்கு அவனிடம் என்ன பதில் சொல்ல என்று தெரியவில்லை. மைதிலிக்கோ பாலா உண்மையிலேயே நேசம் வைத்திருக்கிறானோ என்று தோன்றியது.

இந்த நிலைமையினையும் பாலாவே சமாளித்தான்.

மைதிலியைப் பார்த்தான். "அத்தை, நான் உங்களை அப்படிக் கூப்பிடலாம்தானே?" என்றபடி, "பணம் ஒரு பிரச்சனை இல்லை உங்களைப் பொறுத்தவரை என்றாலும்... ஆனால், எனக்குக் கீர்த்தியை உடனே திருமணம் செய்ய வேண்டும். என் தந்தைக்காக... அவரது ஆபரேசன் நடக்கும் முன்னர் அவர் மகன் திருமணத்தைப் பார்க்க வேண்டும் என்கிறார். அதனால்தான் இந்த அவசரம்... வேறு எந்தக் காரணமும் இல்லை. ஆனால், கீர்த்தி உங்கள் பிரச்சனை தீராமல் என்னுடன் திருமண வாழ்வைத் தொடங்குவாளா? சொல்லுங்கள். அவள் மன நிம்மதியுடன் என்னுடன் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றால் தயவு செய்து என் உதவியை ஏற்றுக் கொள்ளுங்கள்..." என்று அவள் நம்பும்படி பேசி மைதிலியைப் பார்த்தான்.

இதற்கு மேலும் அவள் மறுத்தால்... அது அவள் குணத்திற்கு மாறானது. அவள் ராகவனைச் சம்மதம் சொல்லுங்கள் என்பது போல் தலையாட்ட... ராகவன் தன் சம்மதத்தைச் சொன்னார்.

கீர்த்தி... தன் வாழ்க்கை இவ்வளவுதான்... என்ற முடிவுக்கு வந்தாள்.

பிறகு கீர்த்தியைத் தனியாக அழைத்தான். பெற்றோரைப் பார்த்துத் தயங்கியவளை, பாலா, "இன்னும் என்ன கீர்த்தி..." என அவளைப் பார்த்தபடி, "கொஞ்சம் கார் பார்க்கிங் வரை கீர்த்தியைக் கூட்டிட்டுப் போகலாமா?" என்று அவள் பெற்றோரிடம் அனுமதி கேட்க,

மைதிலியோ, "அதுதான் வாழ்க்கை முழுக்க உங்களோடு வருவதற்கு அனுமதி கொடுத்தாயிற்றே..." என்றாள் - ஒரு மாதிரியான குரலில் பட்டென்று.

இது மைதிலியின் குணம் இல்லைதான். ஏனோ அவள் மனம் பாலாவை ஏற்கத் தயங்கியது. இல்லை...

அவள் உள்ளுணர்வு ஏதோ சரியில்லை என்று மட்டும் சொன்னது.

கீர்த்திக்கே அவள் தாயின் பேச்சில் ஒரு மாதிரி ஆகிவிட... பாலா என்ன நினைப்பானோ என்று பாலாவைச் சட்டென்று பார்த்தாள்.

அவன் முகத்தில் சிறு புன்னகை மட்டுமே இருந்தது.

அவன் இப்போது கூப்பிட்டது கூட அவர்களின் நாடகத்தின் ஒரு அங்கமே.

இவ்வளவு பேசியவன் கீர்த்தியிடம் ஒன்றும் பேசாமல் போகிறானே... என்று நினைத்து விட்டால்... அதிலும் மைதிலியிடம் மாட்டாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே தனியாக அழைத்தான்.

கீர்த்தி ஏதும் பேசவில்லை. அவனிடம் பேசத் தோன்றவில்லை.

விடை பெறும்போது, "கீர்த்தி, நீ ஸ்மார்ட்னு எனக்குத் தெரியும். ஆனால், அது எங்கிருந்து வந்திருக்கிறது என்பது இப்போதுதான் தெரிகிறது..." என்று மைதிலியை மனதில் வைத்துப் பேசினான். "உங்க அம்மால்லாம் பிசினஸ் பக்கம் வந்தால் என்னை மாதிரி ஆட்கள் எல்லாம் வீட்டில்தான் குப்பை கொட்ட வேண்டும்..." என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

'ஆமாம்... எங்க புத்திசாலித்தனத்தை நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும். அதைத்தான் பணத்தை வைத்து அடித்து விட்டாயே... இப்போது பாராட்டு வேறா!' என்று நினைத்தாள், மனதினுள் மட்டுமே.

ராகவன் - மைதிலிக்கு விநோத்தை எப்படி எதிர் கொள்வது என்று இருந்தது. கீர்த்திக்கு வாழ்க்கையில் இனி என்ன என்பது போல் இருந்தது. இப்போதைக்கும், இனிமேலும் தன் பெற்றோர் மற்றும் அவர்களின்

சந்தோஷமே தன் வாழ்க்கை. அவ்வளவுதான். அவளுக்கு விநோத்தைப் பற்றியெல்லாம் பெரிதாகக் கவலையில்லை.

பாலாவிற்கோ குற்ற உணர்ச்சிதான் மேலோங்கி யிருந்தது. அவன் அப்பா மட்டும் இந்த நிபந்தனை விதிக்காவிட்டால் என்றிருந்தது...

யாருக்கும் அங்கு முழுச் சந்தோஷம் இல்லை.

20

பாலா வீட்டில் தன் திருமணம் கீர்த்தி யுடன்... என்று அறிவித்தபோது சந்தோஷம்தான் இருவருக்கும். ஆனால், அருந்ததிக்குத்தான் நம்ப முடியவில்லை. ஏனென்றால் கீர்த்தி வீட்டைப் பார்த்ததால் வந்த சந்தேகம். தன் மகன் இன்னொரு பெண்ணை விரும்பியிருக்கிறான் என்று கீர்த்திக்குத் தெரியும். அது தெரிந்தும் கீர்த்தி சம்மதம் சொல்லி இருக்கிறாள்.

"எப்படி?" என்று அவனிடமே கேட்டாள்.

"ஏம்மா... என்னை டார்ச்சர் பண்றீங்க? லவ் பண்ணின பொண்ணுக்காகக் காத்திருந்தால் ஏன்டா காத்திருக்கிறாய் என்கிறீர்கள். கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்றால்... எப்படிடா உனக்கு ஓ.கே.னு சொன்னானு கேட்கிறீர்கள். என்ன... என்னைப் பார்த்தால் எப்படித் தெரியுது!" என்று மகன் கோபப்பட்ட போது, அவளால், அதற்கு மேல் அவனிடம் அழுத்திக் கேட்க முடியவில்லை.

சரி, கீர்த்தியிடமே கேட்டு விடுவோம்... என்று அவள் நினைத்தாள்.

இப்போதைக்கு அவன் திருமணம் நடக்க வேண்டும், அவ்வளவுதான். கீர்த்தி மேலும் அவள் குடும்பம் மேலும் நல்ல அபிப்ராயம் இருந்ததால் அவர்கள் மேல் சிறிதும் சந்தேகம் வரவில்லை. அது மட்டுமில்லாமல் மிரட்டிக் கீர்த்தியையோ, இல்லை அவளது குடும்பத்தையோ சம்மதம்

சொல்ல வைக்கும் அளவுக்குத் தன் மகன் தரம் குறைந்தவன் இல்லை. எப்படியோ கீர்த்தி மாதிரி ஒரு பெண்தான் அவள் நினைத்து வைத்திருந்தது...

அவள் சிந்தனையைத் தடை செய்தது, பாலாவின் பேச்சு.

"அம்மா, கீர்த்திக்கு மட்டும்தான் நான் மதுவை விரும்பியது தெரியும். அவங்க அப்பா அம்மாவுக்குத் தெரியாது. இப்போதைக்குத் தெரிய வேண்டாம். கீர்த்தி சொல்ல வேண்டாம் என்று சொல்லி விட்டாள்..." என்றவனை,

'இது என்ன கதை?" என்றபடி பார்த்தாள் அருந்ததி.

"ஆமாம்மா... இப்போ சொன்னால் அவர்கள் சம்மதம் சொல்லக் கொஞ்சம் யோசிப்பார்கள். இந்த நேரத்தில் வேண்டாம்... என்று சொன்னால்..." என்று இழுத்தவன், அவளது யோசனையில்,

"அப்பாவுக்கு உடனடியா ஆபரேசன் நடக்க வேண்டும். அதனாலதான்..." என்று எங்கு அடிக்க வேண்டுமோ அங்கு அடித்தான்.

"அது மட்டுமில்லாமல் திருமணம் முடிந்த பிறகு... தானே சொல்ல வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டால் சொல்லி விடுவதாகவும் சொல்லி இருக்கிறாள். சொல்லப் போனால் அவளுக்கு மதுவைப் பற்றி அவங்க வீட்டில் சொல்ல இஷ்டமில்லம்மா... 'எனக்குத் தெரிந்துதானே திருமணம் செய்கிறேன். எனக்குத் தெரியாவிட்டால்தானே பிரச்சனை' என்கிறாள்..." என்று அருந்ததியின் வார்த்தை களுக்குத் தற்காலிகமாக முற்றுப்புள்ளி வைத்தான்.

ஜெகநாதன் மகிழ்ச்சிக்கு அளவில்லை. தன் மகனைக் கல்யாணக் கோலத்தில் பார்க்காமல் தனக்கு ஆபரேசன் நடக்கக் கூடாது என்ற முடிவில் இருந்தவருக்குத் தன் மகனின் முடிவு அமைதி அளித்தது.

அவரின் நெருக்கடியால்தான் ஒரு பெண்ணின் வாழ்க்கை கேள்விக்குறியாகி உள்ளது என்பதை அவரால் உணர முடியவில்லை. ஆனால், அதை உணர்ந்திருந்த பாலாவின் மனம் அமைதியின்றித் தவித்தது.

இத்தனை நாள் இரவும் அவன் மனம் நிம்மதியின்றி மதுவின் நினைவோடு தவித்தது. இப்போதோ குற்ற உணர்ச்சியில் கீர்த்தியின் வேதனையான முகமும்... அவளின் இக்கட்டான சூழ்நிலையைப் பயன்படுத்திய தன் சுயநலமும்... அவனை அலைக்கழித்தது.

அவள் வாழ்க்கையினைத் தன்னோடான வாழ்வுக்குப் பிறகு எப்படிச் சீர்ப்படுத்துவது என்றெல்லாம் யோசிக்க ஆரம்பித்தான் பாலா. தீர்வுதான் கிடைக்கவில்லை.

கீர்த்தியின் மனமோ ஒரு மாதிரியான நிலையில் இருந்தது. அவளுக்கு எதைப் பற்றியும் சிந்திக்கக் கூட முடியவில்லை. சிந்திக்கப் பிடிக்கவும் இல்லை. அவளுக்குப் பாலாவின் மேல் பெரிய கோபம் எல்லாம் இல்லை. அவன் காதல் வாழத் தன் சூழ்நிலையினைப் பயன்படுத்திக் கொண்டான். என்ன... அதற்கு இவள் கொடுக்கும் விலைதான் அதிகம் என்று தோன்றியது. அவன் மட்டும் இந்த மாதிரி ஒரு இக்கட்டான நிலைமையில் இல்லாவிட்டால் கண்டிப்பாகத் தனக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் உதவியிருப்பான் என்று நிச்சயமாக நம்பினாள். அப்பா, அம்மாவுக்குத் தான் பண்ணிக் கொண்டிருக்கும் திருவிளையாடல் தெரிய வரும்போது... என்ற கவலைதான் அவளைத் தற்போது அரித்துக் கொண்டிருந்தது. எதுவாக இருந்தாலும் அதை எதிர்நோக்கப் பழகிக் கொள்ள வேண்டுமென்று... காலத்தின் கைகளில் தன் வாழ்க்கையின் முடிவை விட்டு விட்டாள்.

விநோத் வீட்டில் கீர்த்தியின் காதல் விஷயத்தைத் தெரிவித்தபோது... அவர்களாலும் ஒன்றும் சொல்ல

முடியவில்லை. அவர்கள் வளர்த்த பிள்ளை ஆயிற்றே! அவர்கள் மருமகளாக்கிப் பார்க்க ஆசைப்பட்டார்கள். இப்போது ராகவ் - மைதிலியோடு தாங்களும் சேர்ந்து இன்னொரு வீட்டிற்குத் தாரை வார்த்துக் கொடுக்க வேண்டும்... எங்கிருந்தாலும் கீர்த்தி சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற அளவில் அவர்கள் தங்களை ஆறுதல் படுத்திக் கொண்டனர்.

விநோத்தால் அவர்கள் அளவிற்கு உடனே சமாதான மாக முடியவில்லை. விசயம் எப்போது அவனுக்குத் தெரி விக்கப்பட்டதோ உடனே கீர்த்தியை அழைத்து விட்டான்.

அவனின் அழைப்பை எடுத்த கீர்த்திக்கு அவனிடம் பேசத் தயக்கம் இல்லை.

எப்போதும் போல், "சொல்லுடா விநோத்!" என்ற கீர்த்தியின் குரலில் அவனுக்குத்தான் என்ன பேசுவது என்ற தயக்கம் வந்து விட்டது.

அவளை அவனால் திட்டக்கூட முடியவில்லை. என்னிடம் இல்லாதது அவனிடம் என்ன இருக்கிறது என்ற அரதப் பழசான காதலில் ஏமாற்றப்பட்டவன் கேட்கும் வார்த்தையைக் கூட அவளிடம் அவன் கேட்க முடியவில்லை. காரணம், அவர்கள் இருவருக்கும் காதலைக் காட்டிலும்... அவள் மேல் இருந்த பாசம், அவர்கள் இடையே இருந்த உறவில் உரிமை இருக்கும் அளவிற்கு ஒரு சிறு நாகரிக இடைவெளி இருக்கும். அது கூட அவனே ஏற்படுத்திக் கொண்டதுதான். இல்லையென்றால் அண்ணன் - தங்கை போல்தான் அவர்கள் தெரிவார்கள். அந்த இடைவெளிதான் அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கலாம் என்ற முடிவை அவர்கள் பெற்றோருக்கு உருவாக்கித் தந்தது. அது அவர்களுக்கிடையேயான திருமணத்தில் பிணைக்கப் பட்டிருந்தால் அது பிரிக்க முடியாத கணவன் - மனைவி தாம்பத்ய பந்தமாயிருந்திருக்கும். ஆனால், அது விதியின் விளையாடலால் முடியாமல் போய்விட்டது.

மெலிதான குரலில், "என்னால நம்ப முடியவில்லை கீர்த்தி... நீ லவ் பண்ணுகிறாய் என்பதை..." என்றான்.

"ஏன் உன்னால நம்ப முடியவில்லை? நீ நம்பித்தான் ஆக வேண்டும். எனக்கே தெரியவில்லை. நீ என்னைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறாய் என்று தெரிந்துதான் பேசியிருக்கிறேன். ஆனால், திருமணம் முடியும்வரை உன் நினைவுகளை என் அந்தரங்க மனதில் வர விடாமல் கட்டி வைத்திருந்தேன். அங்கு வேறு நினைவுகளுக்கும் இடம் தராமல் வைத்திருந்தேன். ஆனால்..."

இந்த வார்த்தைகளைக் கீர்த்திக்குச் சொல்ல இஷ்டம் இல்லைதான்... வேறு வழியில்லையே!

"பாலாவின் காதல் என்னிடம் அனுமதி இல்லாமல்... என் வேலிகளைத் தாண்டி என் மனதில் அமர்ந்து விட்டது. சத்தியமாய் இதற்குப் பெயர்தான் காதலா என்று தெரிய வில்லை."

வினோத்திற்கு நன்றாகப் புரிந்தது.

'நீதான் வருங்காலக் கணவன் என்று சொல்லிய போதும் வராத காதல்... எனக்கு வேறொருவனிடத்தில் பழகிய சில நாட்களில் வந்து விட்டது என்று அவள் சொல்லிக் காட்டிய விதத்தில் புரியாமல் இருக்க... அவன் என்ன தத்தியா?'

அவனுக்குக் கோபம் வந்ததுதான். ஆனால் அவளிடம் காட்ட முடியவில்லை. ஏதோ தடுத்தது.

அதன் பின் பாலாவினைப் பற்றி விசாரித்தான். அவளும் அவன் நம்பும்படி எல்லாவற்றையும் சொன்னாள். தற்போது அவன் தந்தையின் உடல்நிலை காரணமாக நடக்கப் போகும் திருமண விபரம்வரை சொன்னாள்.

கீர்த்தியின் மேல் காதல் மட்டும் வைத்திருந்தால் விநோத்திற்கு என்ன பண்ணியிருந்திருப்பான் என்று தெரி யாது. கூடவே அவன் பாசமும் வைத்திருந்தான். அவள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று ஏங்கிய மனம்...

அதை வேறொருவன் கையில் எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிலைதான் பிடிக்கவில்லை. என்னவோ திடீரென்று கீர்த்திக்கு அண்ணனாகி விட்டது போல உணர்ந்தான். அவன் வேண்டும் என்றே ஏற்படுத்தி இருந்த நூலிழை இடைவெளியை அவன் மனம் மாங்கல்ய பந்தத்திற்குப் பதில் சகோதர பந்தத்தால் இணைத்துப் பார்க்கத் தொடங்கியது போல் இருந்தது. அதற்கு மேல் அவனும் என்னதான் செய்ய முடியும்? விதி நினைப் பதை அவன் மட்டும் தடுக்க முடியுமா என்ன? அதன் வழியில் செல்ல முடிவு செய்தான்.

அடுத்த இரு நாட்களில் பாலா, ராகவனின் பணப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தான். அதோடு தான் அவர் களுக்குப் பணம் கொடுத்த விசயம் தன் பெற்றோருக்குத் தெரிய வேண்டாம் என்றும் சொல்லி விட்டான்.

இப்போதும் மைதிலிதான் காரணம் கேட்டாள்.

அவளை அமைதியாகப் பார்த்த பாலா, "கீர்த்தியைப் பார்த்து என் பணத்துக்காகத்தான் என்னைக் கல்யாணம் பண்ணியிருக்கிறாள் என்று என் தாய், தந்தை உட்பட யாரும் கூடக் கேட்க நினைக்கக் கூடாது. நீங்க கூட நினைத்தீர்கள்... கீர்த்தி என்னைப் பணத்திற்காகத்தான் மணக்கிறாள் என்று. ஏன்...? எங்கள் திருமணத்திற்குச் சம்மதம் வாங்க வரும் போது இடையில் பணம் வந்ததால்தானே...! இதே போல் நான் பணம் கொடுத்த விசயம் என் வீட்டிலும் தவறாக நினைக்க வைத்தால்... கீர்த்தியின் மனம் தாங்காது. அவள் எங்கள் வீட்டில் மருமகளாகக் காலடி வைக்கும்போது மனதில் எந்த உறுத்தலும் இல்லாமல் வைக்க வேண்டும்..." என்ற போதே,

பாலாவை அவன் மனச்சாட்சி, 'டேய் பாலா, நாக்குல உனக்கு நரம்பே இல்லையா! அநியாயத்துக்கு இப்படிப் பொய் பேசுற...! இது நல்லதுக்கு இல்ல. அவ எந்த உறுத்தலும் இல்லாமல் காலடி எடுத்து வைக்க வேண்டுமா?' வழக்கம்

போல் தன்னைக் கொல்லும் மனச்சாட்சியைத் தனக்குள் ளாகப் புதைத்தவன்,

"சொல்லுங்க அத்தை! என் அப்பா அம்மாவுக்கு இப்போதும் தெரிய வேண்டுமா?" என்று கேட்க,

ராகவனோ, "என் பொண்ணு எதற்காகவும் தலை குனியக் கூடாது. அதற்கு நாங்களும் வழி வகுக்க மாட் டோம்..." என்று சொன்னவர், மனதிற்குள்ளாக...

'தன் மகள் இப்போது கூட மிகவும் சந்தோஷமாக இல்லை. விரும்பியவரையே கைப்பிடிக்கும் சந்தோஷ மனநிலையில் கூட இல்லை. எல்லாம் தன்னால்தான்... இது அவளுக்குத் தன்மானப் பிரச்சனை. தன் அப்பா தன் கணவனிடம் கடன்பட்டிருக்கிறார் என்பது அவள் மனதின் ஓரத்தில் முள்ளாகத்தான் குத்திக் கொண்டிருக்கும். எப்படி யாவது நான் அந்தப் பணத்தை மாப்பிள்ளையிடம் திருப்பிக் கொடுத்து அவளைச் சந்தோஷப்படுத்த வேண்டும்...' என்று தனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டார்.

முதன் முதலாக மைதிலிக்கும் பாலாவின் மேல் மருமகன் என்ற எண்ணம் வந்திருந்தது. அவன் பணம் கொடுத்து உதவி செய்த போதெல்லாம் சாயாத மனம்... மகளின் மனம், தன்மானம் பற்றி அவன் யோசித்த இடத்தில் சாய்ந்தது... அந்த நிமிடத்தில் அவனை மருமகனாக ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொண்டாள்.

இரண்டு நாட்களாக மைதிலி இதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தாள். புகுந்த வீட்டில் செய்ய வேண்டியதை எல்லாம் செய்து அனுப்பும் பெண்களுக்கே பிரச்சனைகள் வந்து கொண்டிருக்கும் காலத்தில்... தன் மகளின் நிலை வாழப் போகும் வீட்டில் எப்படி இருக்கும் என்று மனம் குமைந்து கொண்டிருந்தாள்.

பாலாவின் யோசனை அதற்கு வழிகாலாக அமைய... தன் மகள் வாழ்க்கை பற்றி இனி நாம் கவலைப்பட வேண்டாம் என்று தவறாக முடிவெடுத்தாள்.

அதன் பிறகு பாலா வீட்டிலிருந்து ஒரு நாள் அந்த வாரத்தில் கீர்த்தி வீட்டிற்கு வந்திருந்தனர். ஜெகநாதனுக்குக் கீர்த்தியை மிகவும் பிடித்திருந்தது. அவளின் குடும்பத்தையும் பார்த்தவுடன் பிடித்து விட்டது. அருந்ததி ஏற்கெனவே சொல்லி யிருந்தாள்தான். நேரில் பார்த்தவுடன் அவருக்கும் மிகவும் பிடித்து விட்டது.

எல்லாம் நல்லபடியாகத்தான் போய்க் கொண்டிருந்தது. நாள் குறிக்கும் இடத்தில்தான் பிரச்சனை வெடித்தது. அடுத்த முப்பது நாட்களில் எந்த ஒரு நாளும் நல்ல நாள் இல்லாமல் போக மைதிலி... அதற்கு அடுத்த மாதத்தில் வரும் முதல் முகூர்த்த நாளைக் காட்டி அருந்ததி, ஜெகநாதனிடம் கேட்க... அவரும் சரி என்று சொல்லி விட்டார். ஆனால், திருமணம் முடிந்த பிறகே தனக்கு ஆபரேசன் நடக்க வேண்டும் என்றும் குண்டைப் போட்டார்.

கீர்த்தி இது நாள்வரை எந்த முடிவிலும் தலையிட வில்லை. அவள் பாலா நடத்தும் நாடகத்தில் முடிந்தவரை அமைதியாகவே இருந்தாள். அலுவலகம், வீடு என்று போய் வந்தாலும் அவள் பாலாவின் வட்டத்திற்குள்ளாகவே இருந்த தால் பாலாவும் அவளை ஒன்றும் சொல்லவில்லை. ஏதாவது கூற வேண்டும் என்றால் கூட... அலுவலகத்திலேயே சொல்லி விடுவான்.

இப்போதும் அப்படித்தான். கீர்த்தியை அழைத்துப் பிரச்சனையைச் சொல்ல, அவளும் மைதிலியிடம் போய் ஜெகநாதனின் ஆபரேசனைப் பற்றி நினைவுறுத்தி, தங்கள் திருமணம் உடனடியாக நடக்க வேண்டும் என்றும் அழுத்திச் சொல்ல... மைதிலியோ பிடிவாதமாக மறுத்து விட்டாள். வேண்டும் என்றால் நிச்சயம் செய்து கொள்ளலாம். ஆனால், மகள் கழுத்தில் தாலி ஏறும் நேரம் நல்ல நேரமாக அமைய வேண்டும்... என்று தன் பிடிவாதத்திலேயே நின்றாள்.

கீர்த்திக்குத்தான் தாயின் பிடிவாதத்தில் கோபமும்... எரிச்சலும் வந்தது.

'நல்ல நாளில் தாலி ஏறினால் மட்டும் எனக்கு வாழ்க்கை சீராகிடுமா என்ன? இந்த அம்மா வேற... இந்தக் கல்யாணத்துக்கு நல்ல நாள் ஒண்ணுதான் குறை...' என்று மனதிற்குள் நினைத்தபடி ராகவனைப் பார்க்க... அவரும், "மைதி சொல்வதும் எனக்குச் சரிதான்... என்று படுகிறது" என்று ஜகா வாங்கினார்.

ஜெகநாதனோ... அதற்கு மேல், "நிச்சயதார்த்தம் எல்லாம் வேண்டாம். எனக்கு என் மகனின் மணக்கோலம் தான் பார்க்க வேண்டும்..." என்று தன் பிடிவாதத்தில் நிற்க,

கடைசியாக டாக்டர் முரளியிடம் போய் நின்றனர்.

அவரும் ஜெகநாதனின் உடல் நிலையைப் பரிசோதித்து விட்டு, "ஒரு மாதம் கழித்துத் தாராளமாகப் பண்ணலாம். ஆனால், அதற்கு மேல் தள்ளிப் போடக் கூடாது..." என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

அதன் பிறகு பாலா - கீர்த்தியின் திருமணம் மைதிலியின் விருப்பப்படி, அவள் சொன்ன தேதியிலேயே உறுதி செய்யப்பட்டது.

பாலாவின் நிலைமைதான் இப்போது இருதலைக் கொள்ளியாக மாறியது. என்னவென்றால்... இந்த முப்பது நாட்களில் ராகவனுக்குப் பணம் கிடைத்து விட்டால்? கீர்த்தி, தன் மேல் இருக்கும் கோபத்தில் அவள்பாட்டுக்குப் பணத்தைக் கொடுத்து விட்டு நீயாச்சு... உன் அப்பாவாச்சு.... என்று கழட்டி விட்டு விட்டால் என்று கலக்கமானான்.

இப்போதெல்லாம் மதுவைப் பற்றி நினைக்கும் நேரத்தினை விட, இவனுக்கும் கீர்த்திக்கும் நடக்க இருக்கும் திருமணத்தைப் பற்றி நினைத்தே தலை வெடித்தது. ஆக மொத்தம் அவனின் சொந்த வாழ்க்கை எப்போதும் பிரச்சனைதான். நல்லவேளை அவனின் தொழில் நன்றாகப் போய்க் கொண்டிருந்ததால் அது வேறு அவனுக்குப் பாரமாக வில்லை.

இதற்கு மேல் கீர்த்தியிடம் இதைப் பற்றித் தெளிவு படுத்திக் கொள்ளாவிட்டால் அது சரி வராது... என்று நினைத்தவன், அவள் என்ன சொன்னாலும் எப்படி அவளைத் தன் வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஓரளவிற்குத் தன்னைத் தயார் செய்தவன்... கீர்த்தியைத் தன் அறைக்கு அழைத்தான்.

அவனின் சந்தேகங்களைக் கூறி அவளின் பதிலைக் கேட்டான்.

கீர்த்தியோ அவன் நினைத்தபடி இல்லாமல்... "பணம் என்று உங்கள் கைக்கு வருகிறதோ அன்றே நான் போய் விடுவேன் என்று சொல்லி இருக்கிறேன்தான் பாலா... ஆனால், அது நீங்கள் தாலி கட்டிய பிறகுதான் என்று சொல்லியிருக்கிறேன்.

"நீங்கள் எனக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி என் அப்பாவின் பிரச்சனையைத் தீர்த்து விட்டீர்கள். என் வாக்குறுதிப்படி உங்கள் அப்பாவின் ஆபரேசனுக்கு என்னால் எந்த ஒரு பங்கமும் வராது. இடையில் எனக்குப் பணம் கிடைத்தால் கூட... இனிமேல் இதைப் பற்றி, என்னைப் பற்றி நினைத்துக் குழம்ப வேண்டாம். வழக்கம் போல் நீங்கள் உங்கள் மது கிடைக்க வேண்டும், உங்கள் அப்பா சரி ஆக வேண்டும் என்று உங்களைப் பற்றியே எண்ணுங்கள்..." என்று, என்னை, உங்கள் மது, உங்களில் எல்லாம் அழுத்தம் கொடுத்தபடி கூறி வெளியேறியவளை, ஆச்சரியமும் அதே நேரத்தில் மனதில் வலியுடனும் பார்த்தான்.

அவளுக்குப் பணம் கிடைத்து விட்டால் என்று யோசிக்கிறாயே பாலா! ஒருவேளை உன் மது கிடைத்து விட்டால் என்று அவன் யோசிக்க... அவள் கிடைத்து விட்டால்... தன்னால் மாட்டிக் கொண்டிருக்கும் கீர்த்தி என்ற சின்னப் பெண்ணின் வாழ்க்கை சீராகி விடும். கடவுளே, கீர்த்தியின் வாழ்க்கைக்காகவாவது... என்னால் பாழாகிக்

கொண்டிருக்கும் அவள் வாழ்வு சீராக வேண்டுமென்றால்... இந்த முப்பது நாட்களுக்குள் என் மது எனக்குத் திரும்பக் கிடைக்க வேண்டும்... என்று வேண்ட ஆரம்பித்தான்.

கடவுள் வழக்கம் போல் அவனது வேண்டுதலை நிராகரித்து விட்டார் என்றுதான் அவன் உணரவில்லை.

21

திருமண நாளும் வந்தது. கோவிலில் எந்த ஒரு ஆராவாரமுமின்றி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

விநோத் வீட்டில் இருந்து யாரும் வர முடியவில்லை. விரைவிலேயே அவர்கள் இந்தியா திரும்பி வர முடிவு செய்திருந்ததால்... அவர்கள் தற்போது வர முடியவில்லை.

கீர்த்தியின் கழுத்தில் மங்கல நாணைப் பூட்டும் நேரமும் வந்தது.

அந்த நிமிடத்திலும் பாலாவின் மனம் மதுவின் வரவை நப்பாசையுடன் எதிர்பார்த்து நோக்கியது. மனதில் பாரத்துடன் கீர்த்தியின் கழுத்தில் மாங்கல்யத்தை அணிவித்தான் பாலா... கீர்த்தியின் முகத்தைப் பார்க்காமலேயே... கடமைக்காக.

இது அவர்கள் இருவருக்கும் பொய்யானது என்றபோதும் அவனது கைகள் அவனையும் அறியாமல் நடுங்கின. கைகள் கட்டிய போது மனம் மதுவிடம் சிக்கித் தவித்தது. தனக்கும் மதுவுக்கும்... நடந்திருக்க வேண்டிய நிகழ்வு... யாரோ ஒரு பெண்ணுடன்... மனம் வலித்தது.

கீர்த்திக்கோ மாங்கல்யம் அவள் நெஞ்சத்தில் தவழ்ந்த நொடி... அந்த நொடியில் அவள் உடல் சிலிர்த்தது. அவளது கண்கள் கலங்கின. அவளையும் அறியாமல் பாலாவை நோக்கினாள். அவனோ முகத்தில் எந்தவொரு உணர்ச்சியு மின்றி மேடையை நோக்கியபடி அமர்ந்திருந்தான். அவன் உணர்வுகளை அவள் உணராமல் இல்லை.

அவனைப் பார்த்த நொடி, அவன் மதுவை நினைத்து வருந்துகிறான்... என்று புரிய, அவன் உணர்வுகளை அறிந்த நொடி ஏதோ ஒன்று மனதில் அழுந்தி வலியைத் தந்தது.

அந்த ஏதோ ஒன்று தாலிக் கொடி ஏற்படுத்திய பந்தத்தால் வந்த வலி என்பதையும் அவளால் உணர முடியவில்லை.

கீர்த்திக்கு அவன் தன் கணவன் என்ற நினைவு என்பது அவளையும் அறியாமல் அவள் மனதில் விதை யானதையும் அவள் அப்போது உணரவில்லை.

அவள் என்ன முற்றும் துறந்த முனிவரா என்ன? அவளும் சாதாரணப் பெண்தானே! அவளும் தன் திருமண வாழ்க்கையைக் கற்பனை செய்திருப்பாள்தானே... இப்படி யெல்லாம் தன் வாழ்வில் நடக்கும் என்றா எதிர் பார்த்தாள்? தன் பொய்யான திருமணம் நிதர்சனத்தை உணர்த்த... அவளுக்குக் கண்களின் அருவியைத் தடை செய்ய முடிய வில்லை.

பார்த்த அனைவருக்கும் வழக்கம் போல் மணப் பெண்ணின் அழுகை போல்தான் தோன்றியது.

கீர்த்தி - பாலா இருவரும் தாலியின் மகிமை புரிந்தும்... அதன் மகத்துவத்தைக் காப்பாற்ற முடியாமல் சூழ்நிலையினை நினைத்து வருந்த... அவர்களின் பெற்றோர் களோ, அவர்களின் பந்தம் வாழ்நாள் முழுவதும் தொடர உலகின் அனைத்துக் கடவுள்களையும் வேண்டியபடி அவர்களை ஆசிர்வதித்தனர்.

அன்று இரவு...

கீர்த்திக்குத்தான் படபடப்பாய் இருந்தது. என்னதான் ஒன்றும் நடக்காது என்று தெரிந்திருந்தாலும் ஒரு ஆணுடன் தனியாக ஒரே அறையில் என்பதும்.. அவளது திருமணம் உண்மையாக இருந்திருந்தால் என்ன நடக்கும் என்பதைத் தெரியாதவள் இல்லையே அவள்... அது உணர்த்திய நினைவு

களும் அவளுக்கு அவளின் படபடப்பிற்குக் காரணமாய் இருந்தது.

ஆனால், பாலா... மிகவும் தெளிவாக இருந்தான். அந்த அறையின் அலங்காரம் அவனை இம்சிக்கவில்லை. அதன் ரம்மியம் அவனை மயக்கவில்லை. தன் அறையில் தன்னுடன் தனித்து விடப்பட்ட கீர்த்தியின் அழகில் தன் வசம் இழக்கவும் இல்லை.

அவன் மனதில் வேறு எந்த நினைவுகளும் அவனை அணுகாமல் இருக்க... அவன் மதுவின் காதலை... அவள் நினைவை... அரணாக அமைத்திருந்ததால்... அவன் சாதாரணமாக இருந்தான்.

கீர்த்தி வழக்கம் போல் பார்த்துப் பேசியவனின் கண்களைப் பார்த்தாள். அந்த இரவின் தாக்கம் எதுவும் அவன் கண்களில் சிறிதும் இல்லை. அதில் தெரிந்தது கண்ணியம் மட்டுமே.

கீர்த்தியால்தான் என்ன நினைக்கிறோம் என்று உணர முடியவில்லை.

எந்த ஒரு பெண்ணும் படுக்கையறையில் கணவனிடத்தில் கண்ணியத்தை விரும்புவாளா என்ன? அதுவும் அவர்களின் முதல் இரவில்... கீர்த்தி தன்னையும் அறியாமல் மனதில் அடி வாங்கினாள்.

பாலா கட்டிலில் உறங்க... கீழே படுத்த கீர்த்தி, தன் நினைவுகளுடனும், உணர்வுகளுடனும் போராடத் தொடங்கினாள்.

அவள் மூளை அவளுக்கு, இது பொய்யான பந்தம். இது நிரந்தரமற்றது. அதற்கு உன்னைத் தயார்ப்படுத்திக் கொள் என்ற கடந்த ஒரு மாதமாக உருப் போட்டு அதைத் தன் மனதிற்கும் அனுப்பி, அதையும் பழக்கிக் கொண்டிருக்க... இத்தனை நாள் மூளை சொல்வதைத் தவறாமல் கேட்ட அவள் மனம் இன்று கேட்காமல் சண்டை பிடித்தது.

அவனுக்கு வேண்டும் என்றால் இது பொய்யான பந்தமாக இருக்கலாம்.

ஆனால், அவன்தான் என் கணவன். அவனைப் பொறுத்தவரை இது பொய்யானதாக இருக்கலாம். எனக்கு இதுதான்... இனிக் கடைசிவரை... என்று அவளையும் அறியாமல் அவள் கை மாங்கல்யத்தைப் பிடித்தது.

அதனால் அவள் மனம், இனி நீ சொல்வதைக் கேட்க மாட்டேன் என்று மூளையின் உத்தரவை நிராகரித்தது.

தன் நெஞ்சத்தின் மேல் பாலா கட்டிய தாலி உறவாட ஆரம்பித்த நொடி... அது கொடுத்த உரிமை... அது கொடுத்த உறவு... இவற்றின் தாக்கத்தில்... அவனை நினைப்பது தவறென்று புரிந்தும் பாலாவிற்கும் தனக்குமான உறவில் மூளை சொல்வதைக் கேட்காமல் மனம் சொல்வதைக் கேட்க ஆரம்பித்தாள் கீர்த்தி.

ஆனால், மனம் ஒரு குரங்கு என்பதை மறந்து விட்டாள். இத்தனை நாள்வரை அவளது மூளையின் அறிவுறுத்தலின்படி ஒருங்கே செயல்பட்ட மனம்... அடக்க ஆளில்லாமல் ஆர்ப்பரித்தது. அவளின் மனமே மூன்றாகப் பிரிந்து அவளைக் கொன்றது.

ஒரு மனம் அவள் காதலை உணர வைக்க... ஒரு மனம் அது தப்பென்று எதிர்வாதம் வைக்க... ஒரு மனம் அவனின் உரிமை அற்ற பார்வையில்... தன் காதலை அவன் என்றுமே உணரக் கூடாது என்று அவளிடம் போர்க்கொடி தூக்க... ஆர்ப்பரித்த மனத்திற்குப் பதிலடி கொடுக்க... அவற்றை அடக்க... இப்போது கீர்த்தி, தன் மூளையின் உதவியை நாட... அது அவள் மேல் இருந்த கோபத்தில் உதவ முன்வரவில்லை. மனதில் பேயாட்டம் ஆடிய எண்ணங்களை அடக்கத் தனக்குள்ளாகப் போராடினாள். போராட்டங்கள் அவளுக்குப் புதிது என்பதால்... கீர்த்தி தனக்குள்ளாகக் கருகிக் கொண்டிருந்தாள்.

எண்ணங்களின் இடைவிடாத போராட்டத்தினாலோ... இல்லை, புது இடமாக இருந்ததாலோ கீர்த்தியால் உறங்க முடியவில்லை. தலையில் கை வைத்துச் சற்று நேரம் அமர்ந்து விட்டாள். கீர்த்தியின் நிலை இப்படி இருக்க...

அவள் எண்ணத்தின் நாயகனுக்கும் உறக்கம் வரவில்லை. இன்னொரு பெண்ணுக்குத் தன் கையால் தாலி கட்டி விட்டோமே என்று... பொய்யாக என்றாலும் மதுவிற்கு மட்டுமே இந்த உரிமை கிடைத்திருக்க வேண்டும் என்று நிலை கொள்ளாமல் தவித்தது. அவன் கீர்த்தியின் எண்ணங்கள் பற்றி யெல்லாம் நினைக்கவில்லை. மதுவின் உரிமையை இன்னொரு பெண்ணிற்குக் கொடுத்து விட்டோமே... கொஞ்சம் யோசித்திருக்கலாமோ... என்றுதான் தோன்றியது.

தாலி கட்டும்வரை இந்த எண்ணமெல்லாம் வர வில்லை. ஆனால், கீர்த்தியின் கழுத்தில் தாலி கட்டியபின்... ஏனோ தப்பு செய்து விட்டோமோ என்றுதான் தோன்றியது. அவளுக்கு உதவி மட்டும் செய்திருக்கலாமோ என்று தோன்றியது. கதைகளிலும்... திரைப்படங்களிலும் இது சாதாரணமாகத் தோன்றினாலும்... நிஜ வாழ்வில் அவ்வளவு சாதாரணமாகத் தோன்றவில்லை. மனதில் பாரமாய் அழுத்தியது.

எத்தனை விரைவில் இந்த உறவிலிருந்து விடுபடுகிறோமோ அவ்வளவு நல்லது... என்ற தன் நினைவில் உழன்று கொண்டிருந்தான்.

கணவன் இந்த உறவிலிருந்து விடுபட நினைத்துக் கொண்டிருக்க...

மனைவி தன்னளவில் மட்டுமாவது இந்த உறவினை நிலைப்படுத்த வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்க...

காலமோ அவர்கள் இன்னும் பல அனுபவங்களை எதிர் நோக்க வேண்டும் என்று அவர்களுக்காகக் காத்திருக்க...

அந்த இரவோ எதற்கும் காத்திருக்காமல் விடியலைத் தேடிச் சென்றது.

அடுத்த நாள் மணமக்கள் இருவரும் கீர்த்தியின் வீட்டிற்கு மறுவீடு சென்றனர்.

ஜெகநாதனுக்கு அலைச்சல் வேண்டாம் என்பதால் மணமக்கள் மட்டுமே வந்திருந்தனர்.

நாளை மறுநாள் ஜெகநாதனின் அறுவைச் சிகிச்சை என்பதால் இன்று இரவு அவர்கள் மட்டும் கீர்த்தியின் வீட்டில் இருக்க முடிவு செய்யப்பட்டது.

காலை பத்து மணியளவில் பாலாவுடன் தன் பெற்றோர் வீட்டிற்கு வந்தாள்.

கீர்த்தியின் முகத்தைப் பார்த்தே, அவள் ஏதோ பெரும் குழப்பத்தில் இருக்கிறாள் என்பதையும்... நேற்று ஒன்றுமே நடக்கவில்லை என்பதையும் உணர்ந்தாள் மைதிலி.

பின்னதைப் பற்றி அவளுக்குக் கவலை இல்லை. தந்தையின் ஆபரேசனை வைத்துக் கொண்டு அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கியிருக்க மாட்டார்கள் என்றே தோன்றியது. ஒரு சம்பிரதாயத்துக்கு மட்டுமே நாள் குறித்திருந்தனர்.

ஆனால், அவள் முகம் குழப்பத்தின் உச்சகட்டத்தில் இருந்தது ஏன்?

மைதிலி அவளை ஒரு மாதமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

திருமணமாகும் எந்தப் பெண்ணுக்கும் உள்ள பூரிப்பு இல்லை. அதுவும் காதலித்தவனைத் திருமணம் செய்யப் போகும் பெண்...

மைதிலி மனதில் வைக்காமல் கீர்த்தியிடமே கேட்டும் விட்டாள்.

கீர்த்தி, தன் நிலைமையினை அம்மா உணர்ந்து விட்டார்களே என்று சுதாரித்தவள்... ஏதோ சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில்...

"இல்லம்மா. பாலா பணம் கொடுக்காமல், இந்தத் திருமணம் நடந்திருந்தால்... நல்லா இருந்திருக்கும். இப்போ அப்பா அவர்கிட்ட கடன்காரராத்தானே இருக்கார். பாலா என்னைத் திருமணம் செய்யப் போகிறவர்தான். இருந்தாலும் என் அப்பா யாரிடமும் தாழ்ந்து போகக் கூடாது. அது என் கணவனாய் இருந்தாலும்... அதுதான் மா!" என்று பாதி உண்மையும் பொய்மையும் கலந்து பேசியவளை,

"கீர்த்திடா... இந்த நிலைமை இப்போது வேண்டுமானால் இருக்கலாம். கண்டிப்பாக அப்பா பாலாவின் பணத்தைத் திருப்பிக் கொடுப்பார். அவரும் அதற்குரிய வேலையில்தான் இருக்கிறார். நீ கண்டதை நினைத்துக் குழம்பாதே. நீ மாப்பிள்ளையோடு கனவில் டூயட் பாடுவதை மட்டும் பாரு!" என்று கிண்டல் செய்ய... அவளது கிண்டலை மனதில் ஏற்றாமல்... அதற்காகச் சிவக்காமல்... தன் தாயிடம் சிணுங்காமல்... கண்களில் பளீர் பிரகாசத்துடன், "அம்மா... அப்பாவுக்குப் பணம் கிடைத்து விடுமா? எப்போ? எப்படி... பாலாவுக்குச் சீக்கிரம் கொடுத்துடலாமா?" என்று பண விஷயத்திலேயே இருக்க...

மகளின் முகத்தைப் பார்த்தவள்... தன் மகளின் உண்மையான சந்தோஷம் எதில் உள்ளது என்பதை அறிந்தவள்... பணத்தை எப்படியாவது திருப்பிக் கொடுத்துத் தன் மகளின் மனதில் இருக்கும் நெருஞ்சி முள்ளை எடுக்க வேண்டும். அப்போதுதான் தன் மகளின் திருமண வாழ்வு பூரணத்துவம் அடையும் என்று நினைத்தாள்.

அதனால் ராகவனிடமும் இதைச் சொல்லி வைத்திருந்தாள்.

தன் மகள் திருமண வாழ்வே அவள் பணம் திருப்பிக் கொடுக்கும் வரையில்தான் என்று அவள் மகள் செய்திருக்கும் காரியம் தெரிந்திருக்க வாய்ப்பில்லைதான்.

இன்றும் மகளிடம் அவளை உறுத்திக் கொண்டிருக்கும் நெருஞ்சி முள்ளை உணர்ந்தாள்தான். அதையும் மீறி ஏதோ அதிகமாகத் தெரிந்தது. அவளிடம் கேட்டு விட வேண்டும் என்று முடிவு செய்தவள்... வேலை இருந்தபடியால் அப்போது கேட்க முடியவில்லை. அதனால் மாலையில் கேட்கலாம் என்று முடிவு செய்தாள். சமையல் வேலையில் பிசியாக... கீர்த்தியிடம் கேட்கவே மறந்து விட்டாள். கேட்டிருந்தால்... கீர்த்தி இருந்த மனக் குழப்பத்தில் உளறியிருப்பாளோ என்னவோ?

மைதிலிக்கு உதவி செய்யக் கீர்த்தி சமையலறை செல்ல... மைதிலிக்கும் ராகவனுக்கும் ஆச்சரியம். பின்னே இத்தனை நாள் செய்யாத உதவியை அவள் செய்யச் சென்றால்... இதுதான் திருமணம் தரும் பொறுப்பா என்று தெரியவில்லை. ஆனால், அவர்கள் நினைத்தது போல் கீர்த்திக்கு ஒன்றும் பொறுப்பெல்லாம் இல்லை. அங்கே பாலாவுடன் தனியாக இருக்க வேண்டும் என்ற காரணத்தால் என்பதே... ஆனால், அவள் பாலாவுடனே இருந்திருக்கலாம்... என்று நினைக்க வைத்தார்கள் அவளது பெற்றோர்.

கீர்த்தி வந்தவுடன் ராகவன், "அதுதானே... என் பொண்ணுக்கு நான் கிச்சன் பக்கம் வந்தாலே மூக்கு வேர்த்திருமே..." என்று கிண்டல் செய்தபடி,

"மைதி செல்லம்... நான் மாப்பிள்ளைக்குக் கம்பெனி கொடுக்கிறேன்..." என்றவர், கீர்த்தியிடம் திரும்பி,

"கீர்த்திம்மா... உன்னை நம்பித்தான் என் மைதியைத் தனியா விட்டுட்டுப் போறேன். பார்த்துக்கோ!" என்று தன் மகள் நிலை புரியாமல் சொல்லி விட்டுத் தன் மனைவியைப் பார்த்துக் கண்ணடிக்க...

இது அவர்கள் வீட்டில் சாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சி தான்.

ராகவன், தன் ரொமான்சை மைதிலியிடம் காட்ட... கீர்த்தி அவர்களை ஓட்ட... மைதிலி இருவரையும் முறைக்க... இது மூவருக்கும் புதிதல்ல.

ஆனால், அவர்களின் அந்நியோன்யம்... கீர்த்தியின் மனது, தன் வாழ்வை ஒப்பிட்டுப் பார்த்து முதல் முறை வலியில் துடித்தது.

அந்த வலி அனாதைக் குழந்தை தாய் தந்தையுடன் செல்லும் குழந்தைகளைப் பார்த்து ஏங்கும் உணர்வு போல் இருந்தது. தன் தாயின் மேல் தன் தந்தை காட்டும் அன்பில் நெகிழ்பவள்... இன்று பொறாமையோ என்பது போல் தோன்றும் எண்ணங்களில் இருந்தாள். தன் தாயினை ஒரு நொடி பார்த்தவள்... அதில் முகமூடி போல் இருந்த கோபத்தைத் தாண்டி... தன் கணவனின் அன்பில் திளைத்தது இப்போது புரிந்தது.

எப்போதும் போல் மைதிலி கீர்த்தியின் கிண்டல் பேச்சில் முறைக்க ஆரம்பித்தவள்... அவள் பதில் ஏதும் கூறாமல் தன் கவனம் எல்லாம் காய் நறுக்குவதில்தான் என்பது போல் இருந்தவளைப் பார்த்தவுடன்...

ராகவனிடம், "உங்க பொண்ணு இன்னைக்குத்தான் ஏதோ உதவிக்குன்னு வந்திருக்கா. அதை ஏதும் கெடுத்துடா தீங்க... கொஞ்சம் போங்க..." என்று அதட்ட...

ராகவனோ காதல் பொங்க... "மைதி, நான் உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன். ஏதோ என் பொண்ணு இருக்கானு விட்டுட்டுப் போறேன்..." என்று தன் மகள் நிலை தெரியாமல் கொஞ்ச...

மைதிலியோ, "நீங்க உங்க பொண்ணை நம்பி விட்டுட்டுப் போறீங்களா! பார்க்கலாம்... எத்தனை தடவை

இந்தக் கிச்சனுக்குள்ள வர்றீங்கனு..." என்றபடி தன் வேலையைத் தொடர்ந்தாள்.

அவர்களின் உரையாடல்களைக் கேட்டபடியேதான் கீர்த்தி இருந்தாள். முந்திய நாள் இரவில் பேயாட்டம் ஆடிய எண்ணங்கள் மறுபடியும் தலை தூக்க...

சிறிது நேரத்தில் தலை வலிக்கிறது என்று தன் அறைக்குச் சென்று விட்டாள்.

அவளின் தலைவலி மற்ற மூவரையும் அவளைப் பற்றிச் சிந்திக்க வைத்தது.

மைதிலியும், ராகவனும் அவளின் துன்பத்திற்குக் காரணமான பணத்தை எப்படிக் கொடுப்பது என்று நினைத்தபடி இருக்க...

பாலாவோ தன்னுடன் நேற்றிரவு தனிமையில் இருந்தபோதும் தலையைப் பிடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான்தான். அப்போதும் ஒன்றும் கேட்கவில்லை. இன்றும் தலைவலி என்று போகிறாள். ஏதோ குழம்பியிருக்கிறாள். அந்தக் குழப்பத்திற்குத் தான் மட்டுமே காரணம் என்று நிச்சயமாய்த் தெரியும். அதை அவளிடம் பேசித் தெளிவு படுத்த வேண்டும் என்று முடிவு செய்தான். ஆனால், இங்கு வேண்டாம்... தனது வீட்டில் போய்க் கேட்கலாம்... என்று முடிவு செய்தான்.

மைதிலி பாலாவைக் கவனித்த கவனிப்பில் பாலாவே அசந்து போனான்.

பாலாவிற்கு... கீர்த்தி பெற்றோரைப் பார்த்தாலே... புழங்கும் விதத்திலேயே தெரிந்தது, அவர்களின் அந்நியோன்யம்.

இவர்களிடத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து ஓரளவு அதன்படி நடந்தான் பாலா.

அன்றைய இரவு கீர்த்திக்கு மற்றுமொரு சோதனையைத் தந்தது. பாலாவின் அறை விசாலமானது. ஆனால்,

கீர்த்தியின் அறை அவள் பயன்பாட்டிற்கு... அவள் தேவைக்கு ஏற்றாற்போல் அடக்கமாய் இருந்தது.

அந்த அறையில் கீர்த்தியின் பொருட்களே முக்கால் வாசி இடத்தை அடைத்திருந்தன. அவளது கணினி, மடிக் கணினி, பீரோ, டிரஸ்ஸிங் டேபிள்... என்று அறை முழுவதும் இருந்தன.

கட்டில் தம்பதியர் சகிதமாய்ப் படுக்க வசதியானதுதான். ஆனால், கீர்த்தி - பாலா விஷயத்தில் யாராவது ஒருவர்தான் படுக்க முடியும். அதனால் கட்டிலைப் பாலாவிற்கு ஒதுக்கி விட்டு... கீர்த்தி கட்டிலுக்கும் டிரஸ்ஸிங் டேபிளுக்கும் இடையில் இருந்த இடத்தில் படுக்கையை விரித்தாள்.

அவள் தயார் செய்யும் வரை காத்திருந்தவன், அவள் விரித்த பின்னர்... அதில் உறங்கப் போக...

கீர்த்தி அவனைத் தடுத்து, "நீங்க மேலே படுங்க..." என்றவாறே, அவள் கீழே படுக்கப் போனாள்.

"இல்ல... நீயே படு."

கீர்த்தி, "இல்ல பாலா... நீங்க கீழே வேண்டாம். எனக்கு ஒரு மாதிரி இருக்கும்..." என்றவளை,

"என்னோட ரூம்ல நீ கீழதானே படுக்கிறாய். இங்க நான் கீழே படுக்கிறேன்..." என்று எதிர்வாதம் செய்ய... அவளோ மேலே படுக்கச் சொல்லிப் பிடிவாதம் பிடிக்க... முடிவில், பாலா தயங்கியபடி,

"எனக்கு அடுத்தவங்க பெட்ல படுத்துப் பழக்கம் இலலை. நீயே படுத்துக்க. ப்ளீஸ்... புரிந்து கொள்."

அவளது கட்டிலில் படுக்க அவன் மறுத்த உண்மையான காரணத்தைச் சொன்ன பின்னர் கீர்த்தி ஒன்றும் சொல்லாமல் தானாகவே வழி விட்டாள்.

அவளது கோபத்தைக் காண்பிக்காமல் தனக்குள்ளே மறைத்தவள்... மனதினுள்ளே போராட ஆரம்பித்தாள்.

'பெரிய இவன்னு நினைப்பு... நான் படுத்த படுக்கையில் கூடப் படுக்க மாட்டானாம். இப்போ இவனை என்னை என்ன கொஞ்சவா சொன்னேன்... ரொம்ப சீன் போடுகிறான்...' என்று அவன் மேல் காதல் கொண்ட மனம் அவன் மேல் வைத்திருந்த மரியாதை எல்லாம் காற்றில் பறக்க வைத்தது.

அடுத்த நொடியே, 'அவன் உன்னைக் கொஞ்சினால் உனக்குச் சம்மதமா...? உனக்குத் தன்மானம் இல்லையா?' என்று ஒரு மனம் அவளைச் சாட,

அவளின் மற்றொரு மனமோ, 'கீர்த்தி, அவன் இன்னொருத்தியின் உடைமை. அவனே உன்னை நெருங்கினால் கூட உனக்கு அவனிடத்தில் ஒருபோதும் உரிமை இல்லை,' என்றது.

எண்ணங்களின் போராட்டத்தில் கீர்த்தி நிலைகுலைய... தலை தானாய் வலிக்க ஆரம்பித்தது.

இது என்ன காதல்... இவனை எப்படி என்னால் காதலிக்க முடியும்... கூடாது... அவன் இன்னொரு பெண்ணை மனதால் காதலிப்பவன். அவளுக்காக... அவள் காதலுக்காகத் தன் வாழ்வை அழித்தவன் எனும்போதே அவன் தன்னைக் கட்டாயப்படுத்தவில்லை என்பதும் புரிய... இவ்வாறு அவள் மனமே பிரிந்து அவளைப் பந்தாட... அவளின் காதல் மனத்தை... அவளின் திருமண உறவை ஏற்றுக் கொள்ளாத மனதின் அடியில் பதுங்கினாள்.

அவன் மனதில் மது அரணாய் இருக்க... இவள் மனதில் அவளின் உறவை வெறுக்கின்ற மனம் அவளை ஆட்சி செய்ய ஆரம்பித்தது.

"கீர்த்தி, ஒரு நிமிடம்!"

தன் வீட்டிற்கு வந்ததும் வராததுமாய்ப் பாலா, தனது அறையினுள் இருந்து வெளியேறப் பார்த்த கீர்த்தியை நிறுத்தினான்.

அவளை நிறுத்த அவசரம் காட்டியவன்... தன் அறைக் கதவை மூடுவதை மறந்தான். அது சற்றுத் திறந்து வைத்தாற் போல் இருந்தது.

'என்ன..?' என்பது போல் பார்த்த கீர்த்தியிடம்,

"உன்னால் என்னை நம்ப முடியவில்லையா? என்னுடன் ஒரே அறையில் இருப்பது உனக்குக் கஷ்டமாக இருக்கிறதா? இரண்டு நாளும் நீ சகஜமாக இல்லையே!" என்றவன்,

"நீ இந்த அவஸ்தையான வாழ்க்கையில் இருந்து விலகிப் போகும்போது கீர்த்தி ராகவனாகவே இருப்பாய். அது எந்தச் சூழ்நிலையிலும் மாறாது. என்னை நம்பு!" என்று ஏக வசனத்தில் கூறியவனைப் பார்த்துச் சத்தியமாகக் கீர்த்திக்கு இன்றும் அறையலாம் போலத்தான் இருந்தது.

இருந்தும்... தலையை மட்டும் ஆட்டியபடி வெளியேற... சற்றே ஒருக்களித்துச் சாத்தியிருந்த கதவைத் திறந்தவள்... ஒரு நிமிடம் அதிர்ச்சியில் நின்று... திரும்பிப் பாலாவைப் பார்த்தாள்.

அருந்ததி கிட்டத்தட்ட கோபத்தின் உச்சத்தில் இருந்தாள்.

பாலாவிடம் முரளி பேச வேண்டும் என்று நேற்றுச் சொல்லியிருந்தார். அவர் பேசியிருந்தால்... அது என்ன என்று கேட்க நினைத்து ஹாலில் காத்திருக்க... அவன் கீழிறங்காமல் இருக்க... தன் கணவன் உடல் நிலை என்னவோ ஏதோ உடனே தெரிய வேண்டும் போல் இருக்க... என்று பதற்றத்தில் மாடி ஏறி வந்தும் விட்டாள். பாதிப் படி ஏறிய பிறகுதான் அவர்கள் புது மணத் தம்பதியினர் என்பதே உறைக்க... மீண்டும் கீழே இறங்கத் தீர்மானிக்க... அவர்களது அறைக் கதவு திறந்து இருந்ததைப் பார்த்தவள்... சரி செல்வோம்... என்று முடிவு செய்தவள்... அதன் பிறகு அங்கு செல்ல... பாலா பேசியதை வார்த்தை பிசகாமல் கேட்க நேர்ந்தது.

உள்ளே வந்தவளைப் பார்த்த பாலா ஒரு கணம் அதிர்ந்தாலும்... மறுகணமே சுதாரித்தான்.

"என்னடா நடக்கிறது இங்க... ஒழுங்கா உண்மையைச் சொல்லு!" என்றவளிடம்,

அதற்கு மேல் மறைக்க ஏதும் இல்லாமல்... நடந்த உண்மைகளை உரைத்தவனைப் பார்வையால் சுட்டாள் அவள் தாய்.

தன் மகனா இப்படி என்று ஆயாசம்தான் வந்தது. அவனிடம் பேசப் பிடிக்காமல்... கீர்த்தியிடம், "உன்கிட்ட இருந்து இதை எதிர்பார்க்கவில்லை கீர்த்தி... நீ உங்க அப்பாவைக் காப்பாற்ற வேண்டும் என்று அவரைத் தீராத வேதனையில் தள்ளி விட்டாயே.... இவன் இப்படி உன்னை நிர்பந்தம் செய்கிறான் என்று என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே!" என்றவள், அவள் பாலாவை மட்டுமே குற்றம் செய்து பேச...

கீர்த்தி தலை குனிந்தபடியே, "பாலா நிர்பந்தம் செய்ய வில்லை. எனக்குப் பணம் தேவை. அதனால்தான்..." என்று தயங்கித் தயங்கிப் பேச...

அவளது பதிலில் உறைந்தாள்.

"ஓஹோ... அப்படியென்றால் பணத்திற்காக என்ன வேண்டுமென்றாலும் செய்வாயா? இன்று... இவன் திருமணம் செய்ய உன் கஷ்டத்தைப் பயன்படுத்தினான். நீயும் ஒத்துக் கொண்டாய். நாளை உன் அப்பாவிற்கு மறுபடியும் பணத் தேவை என்றால் வேறொருவன் கூப்பிட்டால் போய் விடுவாயா? உனக்குப் பணம் மட்டும்தான் பிரதானமா?" என்ற அவளின் குற்றச்சாட்டில் உடல் கூச... பதில் பேச முடியாமல் ஆடிப் போனாள். இன்னும் என்னென்ன கேட்கப் போகிறோமோ என்று இருந்தது. அவளையும் அறியாமல் கண்களில் கண்ணீர் கரை தாண்டியது.

அவளால் நிமிர்ந்து அருந்ததியைப் பார்க்கக் கூட முடியவில்லை. கூனிக் குறுகி நின்ற அவளால் பேசக் கூட முடியவில்லை.

"அம்மா...!" என்று பாலாதான் அலறினான்.

தன் தாய் கீர்த்தியை வாய்க்கு வந்தவாறு பேசுவதை அவனால் தாங்க முடியவில்லை.

அவனையும் அறியாமல்... அவளது வாயை அடைக்க...

"அம்மா, என் மனைவியைப் பற்றி யாரும் தவறாகப் பேசுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. அது நீங்களாக இருக்கும் பட்சத்திலும்..." என்றபோதே,

"வாயை மூடுடா. மனைவியாம் மனைவி... இப்படிப்பட்ட பெண் உனக்கு மனைவியாக இருக்க... சாரி சாரி... மனைவியாக நடிக்க வைக்க விருப்பம் இருக்கலாம். ஆனால், எனக்கு மருமகளாக நடிக்கக் கூடத் தகுதியில்லை!" என்று மகனின் மேல் உள்ள கோபத்தையும் கீர்த்தி மேல் காட்ட... கல்லாய்ச் சமைந்து நின்றாள் கீர்த்தனா.

"கீர்த்தி, அப்பா அம்மாவிற்கு இப்போதே போன் செய்கிறேன். உங்கள் அருமைப் பெண்ணும் என் மகனும் செய்த காரியத்தைப் பாருங்கள் என்று..."

இப்போது பாலா நிதானமாக, "தாராளமாக வரச் சொல்லுங்கள். கீர்த்திக்கும் இந்த வாழ்க்கையில் இருந்தும் விடுதலை கிடைக்கும். எனக்கும் நிம்மதி கிடைக்கும். கீர்த்தியும் இன்று இல்லை என்றாலும் என்றாவது ஒரு நாள் இதை ஃபேஸ் பண்ணத்தான் வேண்டும்..." என்று சொல்ல...

கீர்த்தி நிமிர்ந்து பாலாவைப் பார்த்தாள். 'நான் இவனை விட்டுப் போவதுதான் இவனுக்கு நிம்மதியா?' என்று மற்ற அனைத்தையும் விட்டு விட்டு... அவள் மனம் அவனது இந்த வார்த்தைகளில் சுற்றி வந்தது.

பாலாவின் நிதானமான வார்த்தைகளில் இன்னும் கொதிக்க ஆரம்பித்தாள் அருந்ததி.

"என்னடா... பண்ண வேண்டிய வேலை எல்லாமே பண்ணி முடித்து விட்டோம் என்ற நினைப்பா...?" என்ற வளிடம்...

"நான் எதற்காகக் கீர்த்தியைத் தாலி கட்டிக் கூட்டி வந்தேனோ... அவளை இக்கட்டான நிலையில் தள்ளி னேனோ... அது நடக்க வேண்டாம் என்று நீங்கள் பிடிவாதம் பிடித்தால் நான் என்ன செய்ய? நான் இந்தக் கீழ்த்தனமான காரியம் செய்யக் காரணம் உங்கள் கணவர்தான். அவரின் பிடிவாதம்தான் காரணம். அவரிடமும் போய்ச் சொல் லுங்கள். இதற்குப் பிறகு அவர் ஆபரேசனுக்கு ஒத்துக் கொள்வாரா?" என்று நிறுத்த...

அப்போதுதான் அருந்ததிக்கும் அவன் சொல்வதின் உண்மை புரிய... தன் மகனை அடிபட்ட புலி போல் பார்த்தாள்.

இதைச் சொன்னால் தன் கணவனின் நிலைமை... வெறித்தாள் பாலாவைப் பார்த்து.

அவன் வெற்றிப் புன்னகை செய்தான், அவளை நோக்கிக் கேலியாக...

அவர்களை எதுவும் செய்ய இயலாத தன் கையா லாகாத தனத்தினை வெறுத்தபடி அவர்கள் இருவரையும் விட்டு வெளியே வந்தாள்.

யோசிக்க யோசிக்க... மண்டைதான் காய்ந்தது அருந்ததிக்கு.

பாலாவோ கீர்த்தியிடம் தன் தாய்க்காக... மன்னிப்பை வேண்டிக் கொண்டிருந்தான்.

அவள் எதுவும் கூறாமல்... மனதில் வெறுமை சூழ அமர்ந்திருந்தாள்.

மெல்ல மெல்லக் கோபத்திலிருந்து சகஜ நிலைக்குத் திரும்பிய அருந்ததிக்கு... கீர்த்தியைத் தான் கோபமாகப் பேசியது நினைவில் வர, அது அவள் மனதில் வலியை ஏற்படுத்த, அவளைத் தேடிச் சென்றாள்.

கீர்த்தி அமர்ந்திருந்த கோலம் அருந்ததிக்கு மனதை மேலும் அறுக்க...

"கீர்த்தி!" என்ற அவளது குரலில் திரும்பினாள்.

"சாரி கீர்த்தி!" என்று சொல்ல... அந்த வார்த்தையில் பதறியவள்,

"ப்ச் அத்தை! பெரிய வார்த்தை யெல்லாம் சொல்லாதீங்க. உங்க இடத்தில் யாராய் இருந்தாலும் இதைத்தான் சொல்லியிருப்பார்கள்..." என்று அவள் தன் வலியெல்லாம் மறைத்துப் பேச...

"பாலாவுக்காகவும்தான்... அவனையும் மன்னித்து விடம்மா!" என்றபடி,

"பாலா சூழ்நிலைக் கைதியாகி... உன்னையும் சிக்கலில் மாட்டி விட்டு விட்டான். இங்கு நடப்பதெல்லாம் பாலா அப்பாவிற்கும், மைதிக்கும், ராகவ் அண்ணாவுக்கும் தெரிந்தால்... நினைக்கும் போதே பயமாய் உள்ளது கீர்த்தி...

"இப்போது கூட ஒன்றும் குடி முழுகிப் போய் விடவில்லை. பாலா எடுத்துச் சொன்னா கேட்பான். நீதான் அவனுக்குப் புரிய வைக்க வேண்டும். நானும் அதற்கு உதவி புரிகிறேன்..." என்று தன் மருமகளுக்கு ஆதரவாகப் பேச...

யாருக்கு ஆதரவாகப் பேசினாளோ... அவளோ,

"உங்கள் மகனோடு என்றும் என் வாழ்க்கை இணையாது. நான் நினைத்தால் கூட... வீணான எண்ணங்களை வளர்க்க வேண்டாம்..." என்று தீவிரமாகச் சொல்லியபடி இன்னும் அங்கே நின்றால் அழுது விடுவோம் என்று நினைத்தபடி வேகமாக அவ்விடத்தை விட்டு வெளியேறினாள் கீர்த்தி.

இருவரையும் நினைத்த அருந்ததிக்கு... கீர்த்தியின் பிடிவாதம் மீண்டும் கோபத்தை வரவழைத்தது.

இதைப் பற்றி இப்போது யோசிக்க முடியாமல்... நாளை நடைபெற இருக்கும் தனது கணவனின் அறுவைச் சிகிச்சைக்கான ஏற்பாட்டில் தனது மனதினை மாற்ற முயன்றாள். இருந்தாலும் மனம் பாலா - கீர்த்தியிடமே இருந்தது. அவர்கள் மேல் கோபம் குறையவில்லை.

பாலாவின் பிடிவாதம் தெரியும். இவளும் இப்படி இருக்கிறாளே... என்று இன்னும் அதிகமாகியது.

22

கடந்த நாட்களில் நடந்த நினைவுகளில் மூழ்கியிருந்த இருவரையும் பாலாவின் போன் கால் மீட்டது.

அது குமாரின் கால் என்பதால் அவசரமாக எடுத்துப் பேசினான் பாலா.

"என்ன குமார்... அப்பாவுக்கு ஒன்றுமில்லையே?" என்று படபடத்தவனின் முகத்தைப் பார்த்த கீர்த்திக்கும் தானாய்ப் பதட்டம் ஒட்டிக் கொண்டு விட்டது.

ஆனால்... எதிர் முனையில் என்ன கூறப்பட்டதோ தெரியவில்லை. பாலாவின் முகம் அமைதியாகியது.

"குமார், நானும் வீட்டுக்குத்தான் போயிட்டு இருக்கேன். நீங்க எப்போ வருவீங்க? நான் வந்த பிறகு நீங்க போங்க. நான் வந்த பிறகுதான் நீங்க போக வேண்டும்..." என்று அழுத்திக் கூறியபடி போனை வைத்து விட்டுக் கீர்த்தியிடம் திரும்பினான்.

"கீர்த்தி... குமார் தெரியும்ல உனக்கு... அவரோட பொண்ணு சிந்து... பாட்டி வீட்ல இருந்து படிக்கிறாள். ஒன்பதாம் வகுப்புப் படிக்கிறாள். அடுத்த வருடத்தில் இருந்து இங்குதான் படிக்கப் போகிறாள். இப்போ..." என்று நிறுத்தியவன்,

"சிந்து பெரிய பெண்ணாகி விட்டாளாம். அதுதான் குமார் கால் செய்தார். முழு ஆண்டுத் தேர்வு நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு தேர்வுகள் உள்ளனவாம். முடித்து விட்டு உடனே கூட்டி வந்து விடுவாராம். அப்பாவிற்குக் குமாரின் உதவி தற்போது பெரிதும் தேவை என்பதால்... இப்போது கூடப் போகத் தயங்கினார். ஆனாலும் சிந்துவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருக்கும் அல்லவா...? நான் கிளம்பச் சொல்லி விட்டேன்..." என்று சொன்னவன், சிந்துவைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.

"எங்க அம்மாவுக்குச் சிந்து என்றால் மிகவும் இஷ்டம்... விடுமுறையில் இங்குதான் இருப்பாள். சரியான அறுந்த வாலு. நீ உங்க அப்பா அம்மாகிட்ட எப்படி இருப்பாயோ... அதே மாதிரி எங்க வீட்டில் சிந்து அட்டகாசம் பண்ணுவாள்... எங்க வீட்டில் அவளுக்கு என்று ஒரு தனியிடம்..." என்று கீர்த்தியிடம் விவரித்தபடி... காரினைத் திருப்பினான்.

அடுத்த இருபது நிமிடங்களில் தி.நகரின் பிரபல ஜவுளிக் கடையில் இருவரும் இருந்தனர்.

கீர்த்தியிடம் திரும்பி, "சிந்துவுக்கு டிரஸ் எடுத்துக் கொடுக்க வேண்டும். ஒரு பட்டுப் புடவை, தென் சுடிதார்..." என்றவன், "செலக்ட் பண்ணு..." என்று அவளைப் போகச் சொன்னான்.

'செலக்ட் பண்ணு என்றால்... எந்த ரேஞ்சில் என்று சொல்ல வேண்டாமா...?' என்று யோசித்து அவனைப் பார்த்து வழக்கம் போல் அக்மார்க் முறைப்பை வழங்க...

பாலாவும் வழக்கம் போல் அதைச் சட்டை செய்யாமல்... அவள் முறைத்த முறைப்பை வைத்தே அவள் என்ன யோசிக்கிறாள்... என்பதை உணர்ந்தவன்,

"உனக்கு ஒரு தங்கை இருந்து நாம் கணவன் மனைவியா என்ன பண்ணியிருப்போமோ... அந்த

எண்ணத்தில் போய் எடு..." என்று பாலா சொன்னவுடன், கீர்த்தியின் கண்களில் ஒரு மின்னல்....

அதற்குக் காரணமான முகம் தெரியாத சிந்துவின் மேல் பாசம் வந்தது. பாலாவிற்கும் அவள் மேல் மிகவும் பாசம் என்பதினை உணர்ந்தவள்...

சிந்து... சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்று கேட்டிருக்கிறோம்... சீதையை மீட்கும் முயற்சியில் அணில் ராமனுக்கு உதவி செய்ததாம். அது போல் கீர்த்தி - பாலா வாழ்க்கையில் விளக்கேற்ற... திரியின் தூண்டுகோல் போல் அவள் அவர்கள் வாழ்வில் வந்தாள்.

ஒரு முறை... பாலாவை, அவன் கைப்பற்றி இழுத்துக் கீர்த்தியோடு சேர்த்து... அவனின் மனதில் கீர்த்தி வரத் தூண்டினாள். இன்னொரு முறை... கீர்த்தியின் அடிமனதில் வெகுநாளாய் உறுத்திய முள்ளை எடுக்கவும் காரணமாகவும் இருந்தாள்.

முதன் முதலில் கடைக்கு வருகிறோம். தனக்கென்று ஒன்றும் வாங்காமல்... வேறொரு பெண்ணிற்கு வாங்குகிறோம் என்ற பொறாமை உணர்வெல்லாம் இல்லாமல் அவளுக்குத் திருப்தி ஆகும்வரை சிந்துவுக்காகப் பார்த்துப் பார்த்து எடுத்தாள். அதன் பிறகு நகைக் கடையிலும் அதுவே நிகழ்ந்தது.

கீர்த்திக்கு அவன் வாய் மொழியாக வந்த கணவன் - மனைவி என்ற வார்த்தையிலேயே குளிர்ந்த மனம் மூலமே அவன் மேல் உள்ள காதலை உணர்ந்தாள். எப்படி வந்தது என்று அவளால் சொல்ல முடியவில்லை. ஆனால், நிலையில்லா உறவின் மேல் வந்து விட்டது.

பாலா மேல் ஏன் காதல் வந்தது... தன்னைக் காதலிக்காதவன்... மனைவி என்று நினைக்காதவன்... இன்னொரு பெண்ணை மனதில் சுமப்பவன்... இப்படிக் காதலின் அடிப்

படையே ஆட்டம் கொண்டிருக்க... வெறுத்து... தள்ளி வைக்க வேண்டிய ஒருவன் மேல் காதல் வருமா? வந்துவிட்டதே... என்று அவளின் மனம் அவளிடமே எள்ளி நகையாடியது. இதுதான் அவள் வாழ்க்கை... அவனோடு இருக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் தன் மனதில் சேமித்து வைக்க ஆரம்பித்தாள்... அவனுக்குத் தெரியாமலே!

வீடு திரும்பியவர்கள்... குமாரிடம் தாங்கள் வாங்கிய பொருள்களைக் கீர்த்தி மூலமாகவே கொடுக்கச் செய்தான்... கீர்த்தியின் மூலம் இதை அறிந்த மைதிலி - ராகவனுக்குத் தங்கள் மருமகன் மேல் மிகவும் பெருமையாக இருந்தது... மைதிலியின் மனம் மெல்ல மெல்லப் பாலாவை மருமகனாக முழுமையாக ஏற்றுக் கொள்ளத் தொடங்கியிருந்தது.

ஜெகநாதன் இன்னும் மருத்துவ மனையில்தான் இருந்தார். அருந்ததியும் அவருடனே இருந்தார்... வீட்டிற்கும் போகப் பிடிக்க வில்லை...

ஜெகநாதனும் அவளை வீட்டிற்குப் போகச் சொல்லி வற்புறுத்தவில்லை. மகன் - மருமகளின் தனிமையைக் கெடுக்க நினைக்க வில்லையோ என்னவோ?

இவ்வாறு மூன்று நாட்கள் போக... குமாரும் சிந்துவுடன் சென்னை திரும்பினார்.

குமாரின் வீட்டில் - அமைதியாகவே அமர்ந்திருந்த சிந்துவை மிகவும் பிடித்து விட்டது. ஒல்லியாய் அவளது அம்மாவின் தோற்றத்தில் இருந்தாள். புதிதாய் உணர்ந்த பருவ மாற்றத்தில் அமைதியாய் இருந்தாள். கீர்த்தியைப் பார்த்துப் புன்னகைத்தவள்... பாலாவைப் பார்த்து வெட்கத்துடன் தலை குனிந்தாள்.

அவள் அப்படிக் குனிந்தபோது, தான் பருவம் எய்திய போது விநோத்தைப் பார்த்துச் செய்தது போல் இருந்தது கீர்த்திக்கு. ஆனால், அதற்கு அடுத்த நொடியே, 'குறத்திக்கு வெட்கமெல்லாம் வருது!' என்று அவன் வாய் விட்டதும்...

அருகில் பாதுகாப்புக்கு என்று போடப்பட்டிருந்த இரும்புக் கம்பியால் அடி கொடுத்ததும் நினைவு வர, அன்றைய தாபகத்தில் முகம் மலர்ந்தாள்.

இவள் அராத்து, வாயாடி என்றெல்லாம் பாலா சொன்னாரே... இவ்வளவு அமைதியாக இருக்கிறாளே என்று நினைத்தபடி, சிந்துவின் அருகில் போய் அமர்ந்தாள்.

அவள் அமர்ந்ததும் சிந்து, "ஐயய்யோ! அக்கா! நீங்க என் பக்கத்தில் உட்காரக் கூடாது... தீட்டு ஒட்டிக்கிடுமாம்... உங்களுக்குத் தெரியாதா...?" என்று அலறியபடி தள்ளி அமர்ந்தாள்.

பாலா, கீர்த்தியிடம்... "கீர்த்தி, சிந்து பெரிய மனுசி யாயிட்டாள்ல... அதனால அவளுக்கு எல்லாம் தெரிஞ் சிருக்கு... உனக்குத்தான் ஒண்ணும் தெரியல..." என்றபடி, "என்ன பாப்பா, அப்படித்தானே!" என்று சொல்ல,

அவன் எப்போதும் சிந்துவை அப்படித்தான் கூப்பிடு வான். அவன் இப்போது அதுவும் கீர்த்தியின் முன் பாப்பா என்று கூப்பிட்டவுடன், சிந்து வேகமாகவும்... அதே நேரத்தில் சிணுங்கலாகவும்,

"அய்யோ பாலாண்ணா... என்னைப் பாப்பானு கூப்பிடாதீங்க ப்ளீஸ்!" என்று கூறியபடி, முதலில் இருந்த தயக்கமெல்லாம் போய் சகஜமானாள்.

"பாலாண்ணா! நான் உங்க கூடப் பேச மாட்டேன் போங்க..." என்று வேறு புறம் முகத்தைத் திருப்ப...

"ஏன் பாப்பா?" என்றவன்,

"என்னை மறந்துட்டீங்க... உங்க கல்யாணத்துக்கு ஏன் கூப்பிடவில்லை... எங்க அப்பா அம்மாவும் என்னைக் கூட்டி வரவில்லை... உங்களுக்கெல்லாம் வந்து கச்சேரி வைக்கலாம்னு பார்த்தால்... எல்லாரும் எஸ்கேப் ஆகிட் டீங்க..." என்றாள், தன் நிலையினை உணர்ந்து.

கீர்த்தி இப்போது உணர்ந்தாள்... அவள் வாயாடி தான்...

"இப்போ கூடக் கோபம்தான். ஆனா கீர்த்தி அக்கா வுக்காகப் பார்க்கிறேன்."

பாலாவோ, "அது என்ன அக்காவுக்காக... அவ மட்டும் என்ன ஸ்பெஷல்... நான் இல்லாம உங்க அக்கா மட்டும் வந்து விட்டாளா என்ன?" என்று விடாமல் வம்பிழுக்க,

"கல்யாணம் வேண்டாம்னு சொல்லிட்டு சுத்திட்டு திரிஞ்ச எங்க பாலா அண்ணாவையே கல்யாணத்திற்குச் சம்மதம் சொல்ல வச்சுட்டாங்கல்ல... அப்போ ஸ்பெஷல் இல்லையா?" என்று எதிர்க் கேள்வி கேட்டுத் தாக்க... அதிர்ந்தது கீர்த்திதான்.

'நான் எங்கே சம்மதம் சொல்ல வைத்தேன்... என்னை அல்லவா இவன் சம்மதம் சொல்ல வைத்தான்!' என்று மனதிற்குள் பொருமியபடி இருக்கும் போதே,

பாலாவும், "அந்த விசயத்தில் உங்க அக்கா ஸ்பெஷல் தான்!" என்று அவளை ஆமோதிக்க...

கீர்த்திக்கோ... 'இவன் வேறு எரியுற நெருப்பில் எண்ணெய் ஊற்றுகிறான்...' என்றிருந்தது.

அதன் பிறகு... பாலா கிளம்பி விட... கீர்த்தி மட்டும் அவளோடு பேசிக் கொண்டிருக்க... தன்னோடு பதிலுக்குப் பதில் வாயடித்த சிந்துவை அவளுக்குப் பிடித்துப் போனது.

ஜகனாதன் இன்னும் இரண்டு நாட்களில் வீடு திரும்பலாம் என்று மருத்துமனையில் சொல்லப்பட்டிருந்தது.

இதற்கிடையே, பாலா - கீர்த்தி உறவு முறையில் எந்த வெளிச் சலனமும் அண்டாமல் எப்போதும் போல் போய்க் கொண்டிருந்தது.

அவளுடன் தனி அறையில் இருக்கும்போது பாலா மிகவும் கவனமாக இருந்தான். அவள் தூங்கிய பின்னே

அறைக்குள் தூங்கச் சென்றான். காலையில் அவள் எழுந்திருக்கும் முன் எழுந்து அறையை விட்டு வெளியேறி விடுவான்... அப்படியே இருவரும் இருக்கும் சூழ்நிலையில் கூட மனதைச் சங்கடப் படுத்தும் சலனப் படுத்தும் விதமாக எதுவும் நடக்கவில்லை.

இல்லை... அது பாலாவின் எச்சரிக்கையான நடவடிக்கையால் நிகழவில்லையா என்பது தெரியவில்லை... உடை மாற்றும் விசயத்தில் இருந்து... உறக்கம்வரை கீர்த்தி யினைப் பாதிக்காதவாறு நடந்து கொண்டான்.

கீர்த்திக்கு மட்டும் அவன் மேல் காதல் என்று ஒன்று இல்லாவிட்டால்... இவனை மாதிரி நல்லவனே உலகத்தில் இல்லை... இவனை நம்பி இந்த உலகத்தின் மொத்த மங்கையர் கூட்டத்தைக் கூட விடலாம் என்று முதல் ஆளாய் உத்தரவாதம் தருவாள்... ஆனால், காதல் வந்து விட்டதே... அவனின் கண்ணியமான நடவடிக்கையில் கடுப்புதான் வந்தது.

பாலாவோ தன்னை நம்பி வந்த கீர்த்திக்கு... பிற்கால வாழ்க்கையில் தன்னோடான இந்த வாழ்வு எந்தப் பிரச்ச னையும் ஏற்படுத்தக் கூடாது.

அவனுக்கு ஒரு எண்ணம் இருந்தது. விநோத்தின் பழக்க வழக்கம் ஒரு மெச்சூர்டாய் இருந்ததால்... அவனிடம் தங்களைப் பற்றிச் சொன்னால் புரிந்து கொள்வான்... அப்படியே ஏற்கெனவே பேசி வைத்திருந்த திருமணத்தினைக் கூட இருவருக்கும் நடத்த வேண்டும் என்று...

எந்த ஒரு கணவனும் சிந்திக்காத எண்ணம்... இது மட்டும் கீர்த்தனாவிற்குத் தெரிந்திருக்க வேண்டும்... நல்ல வேளை. மனிதன் நினைப்பது எல்லாம் மற்றவருக்குத் தெரியாத காரணத்தால்... இந்த விசயத்தில் பாலா தப்பித்து விட்டான், கீர்த்தியிடமிருந்து...

கீர்த்தி, வெள்ளி இரவு தாய் வீட்டிற்குச் சென்று சனிக்கிழமை இருந்து விட்டு ஞாயிறு மாலை பாலா வந்து கூட்டிச் செல்லும் பழக்கத்தை ஆரம்பித்திருந்தாள்.

மைதிலிக்குச் சந்தேகம் வராதவாறு இருக்க, பாலாவின் ஞாயிற்றுக் கிழமை வருகை... மகளின் வருகையும் மருமகன் அதற்கு அனுமதி அளித்து... வந்து கூட்டிச் செல்வதும்... மகளின் திருமண வாழ்வில் பெருமிதம் கொண்டனர்.

கீர்த்தியும், சிந்துவும் நன்றாகப் பழகத் தொடங்கி இருந்தனர்...

கீர்த்தி, தன் வீட்டிற்கு ஒருமுறை சிந்துவைக் கூட்டிச் சென்றாள்... கீர்த்தி பெற்றோரிடம் பழகும் முறையினைப் பார்த்து... கீர்த்தியிடம் சிந்துவிற்கு நெருக்கம் அதிகரித்தது எனலாம்.

சிந்து ஊரில் ஆங்கில வழிக் கல்வியில்தான் படித்தாள். இங்கு இருக்கும் பள்ளிகள் போல் இல்லாமல் அங்கு பேர்தான் ஆங்கில வழி... அதற்காகக் கீர்த்தியிடம்தான் தனது ஆங்கிலப் புலமையினை மேம்படுத்தக் கற்றுக் கொண்டிருந்தாள்...

அன்றும் அப்படித்தான். கீர்த்தி அவளுக்குப் பாடம் எடுத்துக் கொண்டிருக்கும் போதே... சிந்து அவள் சொல்வதைக் கவனிக்காமல்,

"அக்கா! பாலா அண்ணாவிற்கு என்ன கிஃப்ட் கொடுக்கப் போறீங்க?" என்று வினவ,

"கிஃப்டா... பாலாவுக்கா... எதற்கு?" என்று தெரியாமல் விழிக்க...

சிந்துவோ... அதையெல்லாம் கவனிக்காமல்,

"சரி சரி. உங்க ஆத்துக்காரர் பிறந்த நாளிற்கு வாங்கி வச்சிருக்கிறதை எனக்குச் சொல்வீங்களா?" என்று பாடத்தில் மூழ்க...

இப்போது கீர்த்திக்குக் கவனம் சிதறியது.

பிறந்த நாள் இன்றா... இல்லை... நாளையா... இல்லை, இந்த வாரமா? சிந்துவிடம் கேட்க முடியாது... அப்புறம் அவள் கேள்விக் கணைகளில் இருந்து தப்பிக்க முடியாது... எனவே அவளிடம் கேட்கவில்லை.

அன்று இரவு பாலா அறையினுள் வரும்வரை விழித்திருந்தாள்.

அவள் உறங்கி இருப்பாள்... என்று நினைத்திருந்த பாலா அவள் உறங்காத போதே அவள் அவனிடம் பேசக் காத்திருக்கிறாள்... என்பதை உணர்ந்து, அவளிடம் என்ன விசயம் என்று விசாரித்தான்.

கீர்த்தி பாலாவைப் பார்த்தாள்...

அவன் முகம் துக்கம் நிரம்பி இருக்க...

கேட்கலாமா... இல்லை வேண்டாமா என்று யோசித்த வளுக்கு இந்தப் பிறந்த நாளை விட்டு விட்டால் இனிமேல் தனக்கு வாய்ப்பே கிடைக்காது என்ற எண்ணம் வலுப்பெற...

மாலையில் சிந்து கூறியதைச் சொன்னாள்...

அவனும் நாளைதான் தனக்குப் பிறந்த நாள் என்றும்... கடந்த நான்கு வருடங்களாக அதைக் கொண்டாடப் பிடிக்கவில்லை... என்றும் சொன்னவன், 'என் வாழ்வே அர்த்தம் இல்லாமல் போய்விட்டது. ஏன் பிறந்தோம் என்று ஆகிப் போன வாழ்க்கைக்குத் தயவு செய்து வாழ்த்துக்கள் சொல்லி விடாதே கீர்த்தி... அதுவும் என்னைப் பற்றித் தெரிந்த நீ வாழ்த்துச் சொன்னால் அது... என்னைக் கேலி பண்ணுவது போலிருக்கும்...' என்று அவளது வாழ்த்தை நாசூக்காய் மறுத்து விட்டுத் தளர்வாய் நடந்தபடி உறங்கச் சென்று விட்டான்.

கீர்த்திக்குப் பாலாவின் துக்கம் அடி வரை தாக்கியது...

தன் பிறந்த நாளைக் கொண்டாட... வாழ்த்தைக் கூட ஏற்க முடியாமல் துக்கத்தில் துவளும் கணவனை ஆறுதல் படுத்த முடியாமல்... அவனையே பார்த்தபடி நின்றாள். தன் ஒருதலைக் காதல்தான் நிறைவேறப் போவது இல்லை... தன் கணவனாவது சந்தோசமாய் இருக்க வேண்டும்... அவன் காதலாவது நிறைவேற வேண்டும்... அதற்கு அவன் மது கிடைக்க வேண்டும் என்று மனதாரக் கடவளிடம் வேண்டினாள்.

அதே நேரத்தில் தன் நிலைமை வேறு எந்தப் பெண் ணிற்கும் வரக் கூடாது என்றும் வேண்டியபடி உறங்கினாள்.

அவள் எழும் போதே... அவள் பெற்றோர் அவளுக்குக் கொடுத்திருந்த மிஸ்ட் காலினால்... கால் செய்ய,

ராகவன்தான் பேசினார்... "பாலாவைக் கூப்பிட்டு வந்திரும்மா. இன்னைக்கு அவரோட பிறந்த நாள் அல்லவா! அருந்ததி, ஜெகன் ஹாஸ்பிட்டலில் இருப்பதால்... மைதிலி தான் இங்கு பாலாவைக் கூப்பிட வேண்டும் என்று சொன் னாள்... எப்போ வர்றீங்க?" என்று கேட்க,

கீர்த்தியோ... இவங்களுக்கு எப்படித் தெரியும்... என்று யோசித்தாள். அவர்களின் ஜாதகம் பார்க்கும்போது மைதிலி குறித்து வைத்திருந்தாள்.

அது தெரியாமல் கீர்த்தி யோசித்தாள்.

'எப்படியோ தெரிந்து விட்டது.' அதை விட்டு விட்டாள். இவங்க ரெண்டு பேரும் பாலாக்கு விஷ் பண்ணுகிறேன் என்று அவரது துக்கத்தைக் கிளறி விடப் போகிறார்கள் என்று பதறியவள்... உடனே,

"அப்பா! அவரிடம் கேட்டு விட்டுச் சொல்கிறேன்..." என்று சொல்லும்போதே...

"கீர்த்திமா... உனக்குத்தான் முதலில் கால் செய்தோம். நீ தூங்கிக் கொண்டிருந்ததால் எடுக்கவில்லை... பாலாதான் உன் மொபைலில் இருந்து பேசினார்..." என்று கூற...

கீர்த்திக்கு, அப்பா பாலாவிடம் பேசினாரா... என்ன பேசினார். வீட்டுக்கு வேறு வரச் சொல்கிறார்...

அவளை மேலே யோசிக்க விடாமல் மைதிலி பேசி னாள். "கீர்த்தி, பாலாகிட்ட நீ ஒன்றும் கேட்க வேண்டாம்... நாங்களே பேசிட்டோம்... வருகிறேன் என்று சொல்லி விட்டார்... உன் தூதெல்லாம் எங்களுக்கும்... பாலாக்கும் தேவை இல்லை. நீ முதலில் எழுந்து இங்கு சீக்கிரம் வரும் வழியைப் பார்... அவரே எழுந்து விட்டார்... நீ இப்போதான் எழுந்திருக்கிறாய்... சீக்கிரம் கிளம்பு...!" என்று கண்டிப்பு பாதி... கொஞ்சல் பாதியாக முடித்தாள்.

மைதிலி பேசியதே அவள் உற்சாகத்தைக் காட்டியது... இந்த அம்மா வேற... என்று அலுத்தபடி எழுந்தவள்... குளிக்கச் சென்றாள்.

பின் பாலாவைப் பார்க்கச் சென்றாள். அவன் தன் பெற்றோருக்காகச் சொல்லியிருப்பான்... அவன் என்ன முடிவில் இருக்கிறான் என்று தெரியவில்லை அவளுக்கு...

பாலா கீழே ஹாலில் இருந்தான்.

கீர்த்தி அவனிடம்... "ஸாரி பாலா... அம்மாவும் அப்பாவும் உங்களைக் காலையிலயே ப்ரஷர் ஏற்றி விட்டு விட்டார்கள் போல..." என்று சுற்றம் மறந்து பேசியவளை... இழுத்துக் கொண்டு அவர்களது அறைக்குச் சென்றான்.

"இப்போ சொல்லு..."

கீர்த்தி சொல்லும் நிலையில் இப்போது இல்லை. அவனது இறுக்கமான கை பிடித்தலில் தன்னை மறந் திருந்தாள். அவன் கரம் பற்றியதிலே அவள் பேச்சை இழந் திருந்தாள்.

அவள் பதில் சொல்லாமல் அப்படியே நிற்பதைப் பார்த்தான். அவனுக்குத் தெரியவில்லை... தன் கைத் தீண்ட லில்தான் தன் மனைவி தன்னை மறந்து நிற்கிறாள் என்று.

"கீர்த்தி..." என்ற சத்தமான பாலாவின் அழைப்பில் தன்னிலை வந்தவள்... தன்னைச் சுதாரித்தவளாய்...

"அவங்களுக்கு எப்படித் தெரியும்னு தெரியல பாலா... ஆனால், நான் எதுவும் சொல்லவில்லை... உங்க நிலைமை அவங்களுக்குத் தெரியாமல்... ப்ச்ச்..." என்று பெற்றவர்களை நொந்தவளை...

"கீர்த்தி... எதுக்கு இப்படி ஃபீல் பண்ணுகிறாய்... உனக்கு மதுவைப் பற்றித் தெரியும்... அதனால் அப்படிச் சொன்னேன்... மாமா அத்தையிடம் அப்படிச் சொல்ல முடியாது அல்லவா! நாம இப்போ கிளம்பலாமா...? எனக்கு வேலை இருக்கிறது... இப்போதே கிளம்பினால்தான் சரியாக இருக்கும்..." என்றவனின் பதிலில் நிம்மதி அடைந்தாள்.

ஆனால், அங்கே தன்னைப் பெற்றவர்கள் என்ன கூத்துப் பண்ணி வைத்திருப்பார்களோ என்று எண்ணியவள்...

பாலாவிடம்... "பாலா... அங்கே உங்கள் பிறந்த நாள் என்பதால் கொண்டாட்டம் சமையல் என்று விசேஷமாய் ஏதாவது ப்ளான் செய்து வைத்திருப்பார்கள். அவர்கள் எது செய்தாலும் எனக்காகப் பொறுத்துக் கொள்ளுங்கள்... உங்களுக்குக் கோபம் வந்தால் கூட என்னிடம் காட்டுங்கள்... ப்ளீஸ்..." என்று கெஞ்ச,

"கீர்த்தி சொன்னால் நோ அப்பீல்!" என்று சிரித்தபடி அவளைக் கடந்து போனான்.

அவன் போய் விட்டான். அவன் சொன்ன வார்த்தைகளை அவன் சொன்னவாறு தனக்குள் சொல்லிப் பார்த்தவள்...

'அடேங்கப்பா... நான் சொல்வதை எல்லாம் நீ கேட்டு விட்டாலும்... இதில் நான் சொன்னால் நோ அப்பீல்-னு வேற வெட்டியா லூஸ் டாக்...' என்று மனதிற்குள் திட்டியபடி... சேலைதான் கட்ட வேண்டும் என்று சொன்ன மைதிலியையும் மனதிற்குள் அர்ச்சிக்கத் தவறவில்லை.

அவளுக்கும் புடவை கட்டப் பிடிக்கும்தான்... நேர்த்தியாகவும் கட்டுவாள்தான்... ஆனால் கட்டியபிறகு நடப்பது கூட அவளுக்குச் சிரமம்... சாதாரணமாய் இருக்க முடியாது... அதனாலேயே புடவை அணிவதைத் தவிர்ப்பாள்... கவனம் எல்லாம் அதிலேயேதான் இருக்கும்... அசௌகரியமாக இருப்பதாகவே படும் அவளுக்கு... அதுவும் பாலாவின் முன்... இயல்பாகவே அவளுக்கு நாணம் வந்தது. அவன் தன்னைப் பார்ப்பானா என்றிருந்தது.

ஆனால், பாலாவோ கிளம்பும் அவசரத்தில் இருந்தானே தவிர அவளது உடையில் எல்லாம் கவனம் பதிக்கவில்லை... அப்படியே பட்டாலும் அதை அவன் பார்த்து ரசிக்கப் போவதும் இல்லைதான்.

கீர்த்தனா அறையில் இருக்க... பாலா ஹாலில் அலுவலக ஃபைல்களைச் சரி பார்த்து எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். நேற்றுப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு ஃபைலை அறையிலேயே விட்டு விட்டான்... அதை எடுக்கத் தன் அறைக்குள் மாடியில் ஏறிய வேகத்திலேயே நுழைய... கீர்த்தியும் அப்போதுதான் வெளியேற அறைக் கதவை இழுக்க... பாலா அதே நேரத்தில் பலமுடன் கதவினைத் தள்ள... ஏற்கெனவே கீர்த்தி இழுத்தபடியால் பாலா கதவின் மேல் கை வைத்திருந்தாலே கதவு திறந்திருக்கும்.

ஆனால், எதிர்பாராமல் கீர்த்தியின் புறம் அதிகப்படியாகத் தள்ளப் பட... அதை எதிர்பார்க்காத பாலா தான் முதலில் தடுமாறினான்... தன்னை நிலைப்படுத்த ஒரு ஆதாரமாகக் கதவைப் பிடிக்க முயன்றவன்... அது கைக்கு எட்டாமல் கீர்த்தியின் மேல் மோதப் போக... இருந்தும் அவளின் மேல் மோதலைத் தவிர்க்க நினைக்க... கீர்த்தனாவோ கதவு வேகமாகத் தள்ளப்பட்டவுடன் பாலாவைப் பார்த்துப் பதட்டமாகச் சற்றுப் பின்னே நகர, வழக்கத்திற்கு மாறாக அணிந்திருந்த சேலையின் காரணமாக அவள் கால் சிக்க... கீழே

விழப் போனாள். அவள் மேல் மோதாமல் தவிர்க்க நினைத்தவன்... வேறு வழியின்றி அவள் கீழே விழாமல் இருக்க... தன் கைகளால் அவள் இடையைப் பற்றி அவளைத் தன் புறம் இழுத்தான்.

காலையிலேயே தன் கரம் பற்றும்போதே தன்னிலை மறந்த கீர்த்தியின் நிலைமைதான் இப்போது பரிதாபமாகியது.

அவளைத் தன் புறம் இழுத்தபோது பாலாவும் பேலன்ஸ் இல்லாமல்தான் இருந்தான். இப்போது இருவரும் கீழே விழும் நிலை ஆகும் போல இருக்க... பாலா தன்னை நிலைப்படுத்த கீர்த்தியின் இடையில் இருந்த தன் கரத்தை அழுத்தித் தன்னோடு கீர்த்தியைச் சேர்த்து அணைத்து, பின் இருவரும் ஒரு நிலைக்கு வந்த நொடியே கீர்த்தியிடமிருந்து தன்னைப் பிரித்தான்.

இதெல்லாம் ஒரு நிமிடத்துக்கும் குறைவாகவே நடை பெற்றது... பாலாவின் அணைப்பு அவனைப் பொறுத்த வரை... கீர்த்தி கீழே விழாமல் தடுக்க... அவ்வளவுதான். அதற்கு மேல் அவன் எதையும் உணரவில்லை... எதற்காக மேலே வந்தானோ அந்த ஃபைலை எடுத்துக் கொண்டு வெளியேறி விட்டான்.

அவனிடமிருந்து விலகிய அந்த நொடி அவளுக்குப் பல விசயங்களைச் சொல்லாமல் சொல்லியது... அவனிடம் விழுந்தது அவள் மனம் மட்டும் அல்ல... அவள் தேகமும் தான்... அவன் தொட்ட நொடியில்... அவனின் வாசனை தன்னுள் கலப்பதை உணர்ந்தாள்... தன் பெண்மையை உணர்ந்தாள்... அதைத் தெரிந்தபோதே அது தேடும் ஆண்மையையும் உணர்ந்தாள்... அதை... தன் பெண்மை தன்னை முதன் முதலாகத் தொட்ட கணவனிடம் மட்டும் அதை உணரத் தொடங்க... அவள் அவனிடமிருந்து பிரிக்கப் பட்டாள்... அவன் விட்ட நொடி அவளின் ஒவ்வொரு செல்லும்

அவனின் தொடுகைக்காக ஏங்கியது... கண்கள் கலங்கி விட்டன கீர்த்திக்கு. மனதில் சாட்டையால் அடி வாங்கியது போல் இருந்தது.

அவனின் முதல் தொடுகையிலே அவளுள் அவனை உணர வைத்தான் பாலா... ஆனால்... அவளது பெண்மை... அவளது இளமை... அதற்கும் மேல் அவளது அழகு... அவனைத் தடுமாற வைக்கவில்லை... அது புரிந்தபோது... தன் பெற்றோருக்குத் தெரியாமல் தான் செய்த தவறுக்கு ஆயுள் முழுவதும் தண்டனை அனுபவிக்கப் போவது தெரிந்தது. அந்த ஆயுள் தண்டனை பாலாவின் நினைவு களோடு போராடப் போகும் தனது மனமும்... உடலும்...

சிந்துவும் அவர்களுடன் கிளம்பினாள். மைதிலி அவளையும் அழைத்து வரச் சொல்லி இருந்தபடியால்... கீர்த்தி அவளையும் தன் வீட்டுக்குக் கிளம்பச் சொல்லி இருந்தாள். சிந்து அம்மா மஞ்சுதான் சற்றுத் தயங்கினாள்... புதிதாய்த் திருமணம் ஆனவர்கள்... அவர்கள் தனிமைக்கு இடையூறாக என்று.

ஆனால், கீர்த்தனாதான் பிடிவாதமாக அவளையும் கிளம்பச் சொன்னாள். அதன் பின் மஞ்சுவால் மறுக்க முடியாமல் சிந்துவையும் அவர்களுடன் அனுப்பினாள்.

முதல் முறையாக அப்போதுதான் சிந்து கீர்த்தியைப் புடவையில் பார்க்கிறாள். அவளைக் கட்டியவனுக்கு அதில் உற்சாகமோ... இல்லையோ, சிந்துவிற்கு வந்த உற்சாகத் தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அருகில் பாலாவும் இருந்தான்... கீர்த்தியோ சாவி கொடுத்த பொம்மை போல் இருந்தாள்... கணவனின் முதல் தீண்டலில்.

"ஹய்யோ அக்கா... சாரில சூப்பரா இருக்கீங்க... அழகா இருக்கீங்க!" என்றவள்... சட்டென்று பாலாவின் புறம் திரும்பி... "பாலாண்ணா! சாரி... உங்க வைஃப்தான்... பட்...

நான் ஒரே ஒரு கிஸ் பண்ணிக்கறேன்... பொறாமைப் படாதீங்க!" என்று கீர்த்தியின் கன்னத்தில் முத்தமிட்டவள்...

"ரெண்டு பேரும் ரொம்ப சூப்பரா... பொருத்தமா இருக்கீங்க... என் கண்ணே பட்டுடும் போல... அக்கா வீட்டுக்குப் போய்ட்டு வந்ததும்... அம்மாகிட்ட சொல்லி சுத்திப் போடச் சொல்லணும்..." என்றபடி காரில் ஏறி அமர்ந்தாள்.

கீர்த்தனாவிற்குத்தான் நேரம் சரி இல்லை போல... காலையில் கணவனின் கரம் பற்றல்... அதன் பின் அவனின் அணைப்பு... இப்போது சிந்துவின் வார்த்தைகள்... இப்படியெல்லாம் நினைத்தபடி... கணவன் முகம் பார்க்காமல் வெளியே பார்த்தபடி இருந்தாள் மனைவி.

அன்றைய கோட்டா முடியவில்லை போல அவளுக்கு.

பாலாவாவது வாயை வைத்துக் கொண்டு சும்மா இருந்திருக்கலாம்...

"பிறந்த நாள் எனக்கு... கிஃப்ட் உன் அக்காவிற்கா!" என்று வாய் விட...

சட்டென்று சொன்னாள் சிந்து... எதையும் யோசிக்காமல்... "வேண்டுமென்றால் அக்காகிட்ட நான் குடுத்த கிஃப்ட வாங்கிக்கோங்க... ஒரு தடவைதான் கிஃப்ட் கொடுக்க முடியும்..." என்றபடி வெளியே தெரிந்த கட்டடத்தின் உயரத்தை அளக்க ஆரம்பித்து விட்டாள்.

இப்போது பாலா அதிர்ந்து கப்சிப் ஆகி விட்டான்.

கேட்ட கீர்த்தி... கணவன் புறம் திரும்புவாளா என்ன?

'தேவையாடா உனக்கு... சின்னப் பெண்ணிடம்... சின்னப் புள்ளத்தனமா வாய் விட்டு...' என்று மனச்சாட்சி எள்ளியது. ஓரக் கண்ணால் கீர்த்தியைப் பார்த்தான்... அவளோ வெளியே பார்த்தபடி வர...

'ஹப்பா... இவளோட அக்மார்க் கோபப் பார்வையில் இருந்து தப்பித்தோம்...' என்று நிம்மதி ஆனான்.

கீர்த்தனாவின் வீட்டில்... கீர்த்தி நினைத்தது போல... பாலாவிற்குக் கேக் வெட்டி... தன் மருமகனின் பிறந்த நாளை அமர்க்களமாகக் கொண்டாடினர்... கோவிலுக்குச் சென்றனர் அனைவரும்...

பாலா மட்டும் அலுவலகம் கிளம்ப... சிந்துவும் கீர்த்தியும் அங்கேயே தங்கினர்.

வழக்கம்போல் கீர்த்தியின் குடும்பம்... கலகலப்பாகி விட... சிந்துவும் அதில் ஐக்கியமானாள்.

கீர்த்தியை விட இரண்டு மடங்காக இருந்தாள் சிந்து... கீர்த்தி பழையபடி இல்லை என்றாலும்... ஓரளவு நார்மலாக இருந்தாள். இவர்கள் மூவருடனும் இருந்ததால்... காலையில் இருந்த மனநிலை ஓரளவு மாறியிருந்தது. ஆனாலும் கணவனின் தீண்டல் மனதில் இருந்து அவளை அவ்வப் போது நனவுலகத்தில் இருந்து... வேறு உலகத்திற்குக் கொண்டு சென்றது...

ராகவன் சொல்லியே விட்டார்...

"என் பொண்ணு சைலண்ட்டா ஆகிட்டாளேனு பார்த்தால்... அவளுக்கு ஒரு சப்ஸ்டிடியூட் கொண்டு வந்த பின்னால்தானா அவ அமைதி ஆகிவிட்டாளா...! ஆனா சிந்து! குருவையே மிஞ்சிட்ட..." என ராகவன் சிரிக்க...

மைதிலி ராகவனைப் பார்த்து முறைக்க....

"ஹை! ஆன்ட்டியும் அக்கா பாலா அண்ணனைப் பார்த்து முறைக்கிறது போல் உங்களையும் முறைக்கிறார்கள்..." என

ராகவனோ... "அந்த முறைப்பு... உங்க அக்காகிட்ட இருந்து ஆன்ட்டிக்கு வரவில்லை... அவங்க அம்மாகிட்ட இருந்துதான் உங்க அக்காவிற்கு வந்திருக்கிறது... நான் ஒருத்தன்தான் பாவமென்று நினைத்திருந்தேன்... இப்போ என் மருமகனும் சேர்ந்துட்டாரா..." எனும் போதே தாய் -

மகள் இருவரின் முறைப்பில் தன் பேச்சிற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

கீர்த்திக்கோ தன் கோபம் பிறருக்குத் தெரியும் அளவிற்கா நடந்து கொண்டிருக்கிறோம். அதுவும் சிந்து போன்ற சின்னப் பெண் பார்த்துச் சொல்லுகின்ற அளவிற்கா... நல்ல வேளை. அம்மா இதற்கு ஒரு அட்வைஸ் கொடுக்க வில்லை... அந்த மட்டில் தப்பித்தோம்... என்று நினைத்தாள்.

மாலையில் பாலா வந்து இருவரையும் அழைத்துச் சென்றான்...

மூவரும் காரில் போகும் போது சிந்து சொன்னாள்...

"ராகவன் அங்கிள்... மைதிலி ஆன்ட்டியோட கம்பேர் பண்ணும் போது... உங்க ஜோடிப் பொருத்தம் சுமார்தான்... ஏதோ மிஸ் ஆகுது... அது என்ன கீர்த்திக்கா...?" என்று கேட்க...

மனப் பொருத்தம்தான்... என்று தனக்குத் தெரிந்த பதிலை அவளுக்குச் சொல்ல முடியுமா என்ன?

அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல்... உடனே கீர்த்தி மைதிலிக்குக் கால் செய்தாள்.

"அம்மா, உடனே நீங்களும் அப்பாவும் சுத்திப் போட்டுக்கோங்க... சிந்து உங்களைப் பார்த்துக் கண் வைத்து விட்டாள்!" என்ற கீர்த்தியைப் பார்த்துச் சிந்து முறைக்க...

அவளைப் பார்த்துக் கீர்த்தியும்... பாலாவும் சிரித்தனர்.

23

நாட்கள் கொஞ்சம் மெதுவாகத்தான் சென்றன. ஜெகநாதன் வீடு திரும்பியிருந்தார். கீர்த்தியும் அலுவலகம் செல்லத் தொடங்கி யிருந்தாள். அவர்களது அலுவலகத்தில் அவர்கள் திருமணம் பற்றி விதவிதமான பேச்சுகள் எழத் தான் செய்தன.

பாலா அவளைக் காதலித்ததால்தான் அவளுக்குக் குறைந்த நாட்களிலேயே ப்ரமோசன் கிடைத்தது... என்றெல்லாம் கூட... ஆனால் கீர்த்தி அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் வேலைக்குச் சென்றாள். இடையில் கார்த்தி கூட போன் செய்து வாழ்த்துக் கூறினான்.

கவிக்குக் கீர்த்தி சொல்லவில்லை... அவள் போன் செய்த போதும் எடுக்கவில்லை... மெயிலிலோ அவளுக்குப் பதில் அனுப்பவில்லை...

அன்று அலுவலகம் முடிந்து கீர்த்தி மட்டும் கிளம்பி யிருந்தாள். பெரும்பாலும் பாலாவுடன் காலையில் மட்டுமே அலுவலகம் செல்வாள் கீர்த்தி... மாலையில் பாலா வரத் தாமதமானால் அவள் மட்டும் கிளம்பி விடுவாள்... குமார் வந்து அழைத்துச் செல்வார்... அவளின் ஸ்கூட்டியில்தான் வர அவளுக்குப் பிரியம்... ஆனால் பாலா அனுமதிக்க வில்லை...

அன்று கீர்த்தியும், சிந்துவும் மொட்டை மாடியில் வழக்க மாகியிருந்த... அரட்டை + பாடம் எடுத்துக் கொண்டிருந்தனர்.

ஜெகநாதனைப் பார்க்கச் சௌந்தர்யாவும் அவரது அப்பாவும் வந்திருந்தனர். சௌந்தர்யா அருந்ததியிடம் கீர்த்தியைப் பற்றி விசாரித்து... அவளைப் பார்க்க ஆசைப் படுவதாகக் கூற... அருந்ததியோ ஏற்கெனவே இங்கே எல்லாம் நல்லா நடக்கிறது... இவ வேற பேசி என்ன பண்ணப் போறாளோ... இவளிடம் சொல்வோமா... வேண்டாமா... என்று யோசிக்க

ஜெகநாதனோ பெருமையாக... "என் மருமகளை நீ பார்க்கணுமா... மேல மாடியில இருப்பா. போய்ப் பாரும்மா... எங்க வீட்டு மகாலட்சுமி..." என்று பெருமை வேறு... சௌந்தர்யாவிற்கு எரிச்சல் வந்தாலும், அவரிடம் காண்பிக் காமல்... அது குறையாமல் கீர்த்தியைப் பார்க்கச் சென்றாள்.

கீர்த்தியிடம் சௌந்தர்யா பற்றி யெல்லாம் பாலா சொல்லி இருக்கவில்லை... சொல்லி வைத்திருக்கலாம்... சௌந்தர்யா... பாலா குடும்பத்திற்குத் தெரிந்தவர்கள் போல என்று கீர்த்தி அவளிடம் பேச ஆரம்பிக்க... சிந்துவும் உடன் இருந்தாள்.

"நீதான் பாலா மனைவியா?" என்று எகத்தாளமாகக் கேட்க... கீர்த்திக்கு அவள் ஏதோ பிரச்சனை பண்ண வந்திருக்கிறாள்... என்று கண்களைப் பார்த்துத் தெரிந்து கொண்டாள்.

உடனடியாகச் சிந்துவைக் கீழே போகுமாறு சொல்லி அனுப்பி விட்டாள். சௌந்தர்யாவைப் பார்த்த வுடனே சிந்துவுக்கும் புரிய... கீர்த்தியை விட்டுப் போக மனம் இல்லாமல் இருந்தும் சிந்து கீழே இறங்கினாள்.

இறங்கியவள் பாலாவிற்குப் போன் செய்து விட்டாள்.

"அண்ணா! அந்த அக்கா... கீர்த்தி அக்காகிட்ட சண்டை போடுகிற மாதிரிதான் பேசினார்கள். அதுதான் அக்கா கூட என்னைக் கீழே போகச் சொல்லி விட்டார்கள்... சீக்கிரமா வாங்க..." என்றபடி போனை வைத்தாள்.

பாலாவும்... தான் கிளம்பி விட்டதாகவும்... இன்னும் பத்து நிமிடத்தில் தான் அங்கே இருப்பதாகவும் கூறி வேக மாக வந்தான்.

அவன் எவ்வளவு வேகமாக வந்தபோதும் அவனால் விபரீதத்தைத் தடுக்க முடியவில்லை...

அவன் மாடிக்குச் சென்ற போது பார்த்து... கீர்த்தி சௌந்தர்யாவை அறைந்ததைத்தான்...

பாலாவே அதிர்ந்து விட்டான்... உடனடியாக அவர்கள் முன் நின்றான்.

கீர்த்தி கோபத்தின் உச்ச கட்டத்தில் இருந்தாள்.

சௌந்தர்யாவோ அதிர்ச்சியும் கோபமும் கலந்து நின்றாள்...

என்ன நடந்தது என்றால்...

சிந்து போன பிறகு...

சௌந்தர்யா தன்னைப் பற்றிச் சொல்லியவள்... தன்னிடம் பாலா பேசியதையும் சொன்னாள்... எல்லா வற்றையும் சொல்லாமல்... பாலா பேசியவற்றை மட்டும் சொன்னாள்...

அவளைப் பற்றிக் கீர்த்திக்குத் தெரியவில்லை என்ற போதே... பாலா – கீர்த்தியைப் பற்றி ஓரளவு அனுமானத்திற்கு வந்தாள்... ஏதோ சரி இல்லையென்று தீர்மானித்தவள்...

"பாலா... அங்கிளுக்காகத்தான் மேரேஜ் பண்ணி யிருக்கிறார் போல. மதுவை அவர் மறக்க மாட்டார்... எனக்கு நன்றாகத் தெரியும்... உன்னைப் பார்த்தாலும் மிடில் கிளாஸ் போலத்தான் தெரியுது... உங்க அப்பா அம்மாவிற்கு வேறு வழி இல்லாமல் உன்னைத் தள்ளி விட்டு விட்டனரா...? ஆனால், எனக்கு ஒரு சந்தேகம்... நான் பாலாவைத் திருமணம் செய்தால் நான் நன்றாக இருக்க மாட்டேனாம்... என் வாழ்க்கை கெட்டுவிடும் என்று பாலா என் மேல் அக்கறையாகச் சொன்னார்...

"ஆனால்... உன்னைத் திருமணம் செய்திருக்கிறார்... பாவம் நீ... என் மேல உள்ள அக்கறை கூட உன் மேல் இல்லை..." என்று போலியாகப் பாவம் பார்க்க...

அவள் கூறியதில் எல்லாவற்றையும் தவிர்த்த கீர்த்தி...

"ஜஸ்ட் ஷட் அப்! என் அப்பா அம்மாவைப் பற்றி யெல்லாம் நீ பேசாத... பேசிட்டேல்ல... கிளம்பு... நான் போறேன்..." என்று கீழே இறங்க எத்தனிக்க...

"ஓ... உங்க அப்பா... அம்மாவைப் பற்றிப் பேசினால் கோபம் வருகிறதா... ஆமா... இன்னொருத்தியை லவ் பண்ற,

அவளை மறக்காமல் திரிகிற ஒருத்தனுக்குப் பணத்தை மட்டுமே பார்த்துத் திருமணம் செய்து வைத்தால்... அவர்கள் எப்படிப்பட்ட கேவலமானவர்கள்... பணத்துக்காக உன்னை விற்கக் கூட..." என்று சொல்லி முடிக்கவில்லை...

சௌந்தர்யா கன்னத்தில் கீர்த்தி கை பதிந்தது.

"இங்க பாரு, இனி ஒரு வார்த்தை அவங்களப் பற்றி வந்தது..." என்று சுட்டு விரலால் எச்சரித்தாள்.

பத்ரகாளியாய் நின்றிருந்தாள்...

பாலாவுக்கே தயக்கம்... இப்போது போகலாமா... இல்லை வேண்டாமா என்று... தான் அன்று செய்யாமல் விட்டதைக் கீர்த்தி இன்று சௌந்தர்யாவிற்குச் செய்து விட்டாள் போல என்று நினைத்தான்...

அறை வாங்கியும் அடங்கவில்லை அவள்.

"என்ன சாதாரண மாதச் சம்பளம் வாங்கற வீட்டுல பிறந்து விட்டு... நீ என்னமோ இளவரசி மாதிரி இருந்துட்டு வந்த மாதிரி திமிரா? உனக்கே இத்தனை என்றால்... எனக்கு எவ்வளவு இருக்கும்... நான் யார் தெரியுமா?" என்று அவளும் எகிற,

கீர்த்தியோ அசராமல்... "நீ யாரா வேணும்னாலும் இரு... எங்க வீட்ல... எங்க அப்பா அம்மாவிற்கு நான் இளவரசிதான்..." என்று பெருமையாகச் சொல்லி அவளைப் பார்க்க...

அவளோ இன்னும் அலட்சியமாக... "நீ அவங்களுக்கு வேண்டுமென்றால் இளவரசியாக இருக்கலாம்... ஆனால் பாலாவிற்கு?" என்று எகத்தாளமாகக் கேட்க...

இதற்குப் பதில் சொல்ல முடியாமல் ஸ்தம்பித்து நின்றாள் கீர்த்தி... சௌந்தர்யா குறி பார்த்து அடித்தால். அவள் தவிப்பு தப்பாமல் அவள் கண்களில் பதிய... வெற்றிப் புன்னகை அவள் முகத்தில் பரவ நின்றாள்...

இதற்கு மேல் வேடிக்கை பார்ப்பது நல்லதல்ல என்று பாலா... அவர்களுக்கு இடையே நுழைந்தான்.

"சௌந்தர்யா... யார்கிட்ட என்ன பேசுகிறாய்... என் மனைவி உன்னிடம்.. எங்கள் உறவைப் பற்றிப் பேச என்ன தேவை இருக்கிறது... அது மட்டும் இல்லாமல்... நீ என் அப்பாவின் நண்பரின் மகள்... அவ்வளவுதான் நமக்குள்... நீ அப்பாவைத்தானே பார்க்க வந்தாய்... அவரைப் போய்ப் பார். வந்த வேலையை விட்டுவிட்டு..." என்று சலித்தவனிடம்,

"என்ன பாலா? அன்று காதல் கத்தரிக்காய் என்று ஏக வசனம் பேசினீர்கள்..." என்று அவளும் விடாமல் கேட்க...

"அதுதான் நீயே கத்தரிக்காய் என்று சொல்லி விட்டாய் இல்லையா... அதைப் பற்றி இனி என்ன பேச்சு... எங்களைப் பற்றி நீ மிகவும் கவலைப்பட வேண்டாம்..." என இப்போது கடுப்புடன் கூறிக் கொண்டிருக்கும் போதே...

"கத்தரிக்காய் முற்றினால் சந்தைக்குதானே வரும்... அப்போது இருக்கு உங்கள் இருவருக்கும்..." என விடாமல் வாயடிக்க...

"கண்டிப்பாக உன் சந்தைக்கு வராது... நீ கிளம்புமா... ஏனென்றால்... என்னால் என் பொறுமையை அதிக நேரம் கன்ட்ரோல் பண்ண முடியாது... பிறகு தம்பதி சகிதமாக ஆசிர்வாதம் வாங்கலாம்... என்று உனக்குத் தெரியும்... அறையும் வாங்கலாம் என்று புதிதாய் வேறு தெரிந்து கொள்வாய்..." என்று பாலா கூறியவன்...

அவள் கீழே இறங்கப் போகும் முன்... அவளைத் தடுத்து நிறுத்தியவன்,

"என்னோடு உன் வாழ்க்கை நன்றாக இருக்காது என்று சொன்னேன்தான்... முற்றிலும் உண்மையே... ஏனென்றால்... நான் குறையுள்ளவன்... மைனஸும் மைனஸும் ஒன்று சேர்ந்தால்... மைனஸ்தானே வரும்...

அதைத்தான் சொன்னேன் உன்னிடம்... ஆனால், கீர்த்தி நிறைகள் மட்டுமே பெற்றவள்... நான் அவளுடன் சேர்ந்தால் என் வாழ்வு நிறைமையும் முழுமையும் அடையும் என்று நினைத்ததால், என் வாழ்க்கை மேல் உள்ள அக்கறையில் கீர்த்தியின் காதலை யாசித்து... திருமணம் செய்திருக்கிறேன்... விளக்கம் போதுமா... எங்கள் திருமணத்திற்கு..." என்று கீர்த்தியை எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்காமல்... நிதானமுடனும் அழுத்தமுடனும் கூற...

கீர்த்தனாவோ, "எப்படி இவன் எல்லாருக்கும்... எந்த நேரத்திலும் பதிலடி கொடுக்கிறான்..." என்று யோசனையில் நின்றாள்.

சௌந்தர்யாவோ கூனிக் குறுகிப் போனாள். அதுவும் கீர்த்தி முன்னிலையில் தன்னைத் தாழ்த்திப் பேசிய பாலாவை முறைத்தபடி கீழே இறங்கினாள். அடுத்து அவள் நின்றது பாலாவின் அப்பா முன்னிலையில்...

அவர் மருமகளுக்கு சப்போர்ட் பண்ணுவாரா... இல்லை இவளுக்கா!

ஆக மொத்தம்... சௌந்தர்யாவிற்கு முக்கியத்துவம் இல்லை...

ஜெகநாதன் தன் நண்பனிடம்... "மணி, நாம இனிமேல் சேர்ந்து தொழில் செய்வது... நல்லா வராது போல் இருக்கே... நமக்குப் பின் நம்ம பிள்ளைகள் ஒத்து வருவார்கள் என்று தெரியவில்லை..." என்று எதார்த்தமாகச் சொல்ல,

ஆடிப் போய் விட்டார் மணி.

ஜெகனை வைத்தே அவர்கள் தொழிலின் முன்னேற்றம்... தனியாக ஒன்றும் முடியாது.

மகளை அடக்கி விட்டார்... அது மட்டும் இல்லாமல்... இனி பாலாவை நம்பி ஒன்றும் ஆகப் போவது இல்லை... அவளும் ஒன்றும் அவனைக் காதலிக்கவில்லை என்ப

தால்... அவள் வாழ்வை மட்டுமே பார்க்க வேண்டும்... வீணாகப் பாலா வாழ்வில் தலையிட்டால்... அவளுக்குத் தான் நஷ்டம் என்பதைப் புரிய வைத்தவர்... உடனே அவள் திருமணத்திலும் அவசரம் காட்டி மாப்பிள்ளை தேட ஆரம்பித்தார்... பெண்ணின் அப்பாவாக...

சௌந்தர்யாவிற்கு முதலில் கீர்த்தியிடம் அறை வாங்கிய கோபமிருந்தாலும்... இனி அங்கு மோதி என்ன ஆகப் போகிறது என்று பொருமியவள்... ஒன்றை மட்டும் உறுதி செய்தாள். அவர்கள் ஏதோ திட்டத்துடன் திருமணம் செய்திருக்கிறார்கள் என்று... 'நீ பாலாவிற்கு இளவரசியா?' என்று கேட்ட போது அவளின் கண்ணில் தோன்றிய வலியே அவளுக்குப் பரிபூரணத் திருப்தியாக இருந்தது. அதன் பிறகு இனி பாலா விசயத்தில் தலையிட வேண்டாம் என்று முடிவெடுத்தாள்...

"ச்சீ ச்சீ... இந்தப் பழம் புளிக்கும்!" என்ற நரியின் கதை உதாரணம் போல்...

கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆகி இருந்தது... சௌந்தர்யாவிடம் கீர்த்தி நடந்தது கொஞ்சம் அதிகம் என்றே தோன்றியது பாலாவிற்கு... இவள் அறைந்ததில் அவள் வேறு ஏதாவது பிரச்சனை பண்ணி இருந்தால்... எதைத் தான் அவன் சமாளிப்பது... அவனுக்கே கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் ஏதோ ஒரு வழியில் போய்க் கொண்டிருக்கிறான்... சௌந்தர்யா வேறு பிரச்சனை பண்ணினால் என்ன செய்வது என்று கவலை வந்து விட்டது... ஆனால், நல்ல வேளை. எதுவும் வரவில்லை... அத்துடன் விட்டு விட்டான் அவனும்.

ஆனால், வேறொரு பிரச்சனை வந்தது... கீர்த்திகாவின் ரூபத்தில்... என்னவென்றால்... பாலாவின் திருமணத்தைக் கேள்விப்பட்ட கீர்த்திகா... பாலாவைப் பார்க்க வருவதாகச் சொல்லி இருந்தாள்... பாலா தலையிலேயே கை வைத்து விட்டான்.

சௌந்தர்யா - கீர்த்தி பிரச்சனையில் சௌந்தர்யா பற்றி அவன் கவலைப்பட வேண்டியதில்லை... கீர்த்திக்கு சப்போர்ட் பண்ணி விட்டான். ஆனால் இரண்டு கீர்த்திக்கும் இடையில் பிரச்சனை வந்தால் அவன் யாருக்கு சப்போர்ட் பண்ண முடியும்...?

அன்று இரவே கீர்த்தியிடம் தயங்கியபடி விசயத்தைச் சொன்னான்.

"கீர்த்திகாவா!" என்று யோசித்தவள்...

"உங்க ஃப்ரெண்ட் மனைவி என்று சொன்னீர்களே..." என்று கேட்க, அவளது ஞாபகத் திறனை மெச்சினான் பாலா.

இப்போது பாலா...

"கீர்த்தி, அவள் என் ஃப்ரெண்டோட மனைவி மட்டும் இல்லை... மதுவின் தோழியும்... அதுவும் உயிருக்கு உயிரான தோழிகள்..." என்று நிறுத்தி அவளைப் பார்க்க...

"அதனால் என்ன பாலா...?"

"சௌந்தர்யா வந்த அன்று நேர்ந்த பிரச்சனை போல ஏதாவது ஆகிவிட்டால்..."

"அன்று அவள் என் அப்பா, அம்மாவைப் பற்றிப் பேசினாள். அடித்தேன்..." படபடத்தாள்.

"அவள் பேசியது தவறுதான். இருந்தாலும் நீ அடித்தது... கொஞ்சம் அதிகம்தான்..." என்று பாலா கூற...

ருத்ர தாண்டவம் ஆடாத குறைதான் கீர்த்தி...

"என் அப்பா அம்மாவைப் பற்றி யார் கூறினாலும் அவர்களுக்கு இந்த நிலைமைதான்... என்னைப் பற்றி என்ன கூறினாலும் பொறுத்துக் கொள்வேன். ஆனால்..." என்று ஆவேசமாக...

பாலாவே தினறிப் போனான்... அவள் பாசத்தில். இந்தப் பாசம்தான் தன்னிடம் அவளை இழுத்து வந்தது என்பதையும் உணராமல் இல்லை அவன்...

"கூல் கூல் கீர்த்தி..." எனச் சமாதானப்படுத்தியவன்...

நல்ல வேளை. தன் அம்மா... கீர்த்தியின் அப்பா அம்மாவைப் பற்றிப் பேசவில்லை என்று நினைக்க...

அவனின் எண்ண ஓட்டத்தைப் புரிந்தவள் போல்...

"அத்தை அந்த மாதிரி யெல்லாம் பேசுபவர்கள் இல்லை!" என்று அமைதியாக... அதே நேரத்தில் சிறிது வெட்கப்பட்டும் கூற...

தான் நினைத்தது இவளுக்கு எப்படித் தெரியும் என்று அசடு வழிந்தான் பாலா.

ஓரளவு நிலைமை சரி ஆக...

"கீர்த்தி!" எனக் கெஞ்சலுடன் கூப்பிட்டான் பாலா...

"கீர்த்திகா மது மேல உள்ள பாசத்தில் என்ன பேசினாலும் பொறுத்துக் கொள்... எனக்காக... உனக்குக் கோபம் வந்து அறையத் தோன்றினால்... கவுண்ட் பண்ணி வைத்து... இந்த ரூமில் எனக்குக் கொடுத்து விடு... அவளை ஒன்றும் சொல்லி விடாதே... ஏற்கெனவே பல இழப்புகளைச் சந்தித் திருப்பவள்..." என்று தயக்கம் ப்ளஸ் கெஞ்சலுடன் கூற...

அவளுக்குப் பாலாவைப் பார்த்துச் சிரிப்பே வந்து விட்டது.

"பாலா... உங்களைப் போய்... நான் அறையவா?" என்று விழி விரிக்க...

"ஏம்மா... நீ என்னை அறையவே இல்லையா...! பார்க்கத்தான் ஒல்லியாக இருக்கிறாய். ஆனால், நீ அடித்த அடி இருக்கிறதே..." என்றவன்... "எனக்கே இப்படி என்றால்... பாவம் சௌந்தர்யா... எப்படித்தான் தாங்கினாளோ?" என்று போலியாக வருத்தம் காட்ட...

கீர்த்தியும் போலியாக முறைத்து முடிவில் சிரிக்க... பாலாவும் அதில் கலந்து கொண்டான்.

அடையாறின் ஒரு ரெஸ்டாரண்ட் முன் பாலாவின் கார் நின்றது. அங்குதான் கீர்த்திகாவைப் பார்க்க வருவதாகச் சொல்லி இருந்தான் பாலா.

காரிலிருந்து இறங்கிய பாலா... கீர்த்தியிடம்... மறுபடியும் முந்தைய நாள் பேசியவற்றை ஞாபகமூட்டினான்.

"பாலா... கீர்த்திய நான் ஒண்ணும் சொல்ல மாட்டேன்... அவங்க என் அப்பா அம்மாவைப் பற்றிப் பேசினால் கூட... இது உங்களுக்காக மட்டும்..." என்றவளை ஆச்சரியமாகப் பார்த்தவன்...

"எனக்காகவா கீர்த்தி!" என்று மறுபடியும் கேட்டான், நம்பாமல்...

"இல்ல... இந்தச் சல்யூட் அடிக்கறான்ல... அவனுக்காக..." தன் இயல்பான குறும்புடன் சொல்ல,

"ஹேய்! நான் சீரியஸா பேசுறேன்... நீ என்ன காமெடி பண்றாயா... உண்மையாகவே எனக்காகவா...!" வியப்பில் பேச...

"ஆமாம்... ஆமாம்..." - என்றபடி, அவன் முன்னே நடந்தாள் கீர்த்தி.

அப்போதே பாலா நன்றாக யோசித்திருந்தால்... அவளின் மனம் புரிந்திருக்கும்... ஆனால், அதை உணர முடியாமல் போய் விட்டது.

தன் உயிராய் நேசிக்கும் தன் பெற்றோரைத் திட்டினால் அவனுக்காகப் பொறுத்துக் கொள்வேன் என்று கூறியதில் இருந்தே அவன் மேல் அவளுக்கு உள்ள காதலைப் புரிந்து இருக்கலாம்... அப்போது அவனுக்கு அதை உணர்த்த யாரும் இல்லை...

தூரத்தில் இருந்தே பாலா கீர்த்திகாவை அடையாளம் காட்டினான்... கீர்த்தனாவிற்கு வியப்பும்... துக்கமும் மாறி மாறி வந்தன...

வியப்பிற்குக் காரணம்... அவள் பெண்களே வியக்கும் அளவிற்குப் பேரழகியாய் இருந்தாள்... ஒரு சின்ன அலங்காரம் கூட இல்லாமல்...

துக்கத்திற்குக் காரணம்... அவள் நெற்றியில் பொட்டில்லாமல் இருந்ததுதான். வெறுமையாக இருந்தது அவள் தோற்றம்... அதிலும் அவள் அழகு மறையவில்லை...

நேற்று - பாலா ஆதி பற்றி சொன்னது ஞாபகம் வர...

"இப்படிப்பட்டவளை விட்டு... ஆதி இறந்து விட்டானே..." என்று யோசித்தபடியே அவளின் எதிரில் அமர்ந்தாள்.

கீர்த்திகா... பாலா மற்றும் கீர்த்தனாவிடம் மெல்லிய புன்னகையைப் படர விட்டவள்... அவர்களுக்குத் திருமண வாழ்த்துக்களைக் கூறித் திருமணப் பரிசும் கொடுத்தாள்...

அதன் பிறகு அவர்கள் மூவரும் சாதாரணமாகப் பேசினார்கள்... பாலா நினைத்தது போல் கீர்த்திகா மதுவுக்காகப் பரிந்து தவறாக எதுவும் பேசவில்லை...

கீர்த்தனாவும் அவளுடன் நன்றாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

விடை பெறும் சமயம்... கீர்த்திகா... கீர்த்தனாவிடம்,

"கீர்த்தனா... மது பற்றி உங்களுக்குத் தெரியும் என்று பாலா சொன்னார்... அதனால்தான் சொல்கிறேன்...

"என் மது ஒரு பொருளைத் தேர்ந்தெடுத்தாலே அது தரம் மிகுந்ததாக இருக்கும்... அப்படிப்பட்டவள்... பாலாவை வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுத்தாள் என்றால்... பாலாவின் மதிப்பைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்... அப்படிப்பட்டவர் உங்களுக்குக் கிடைத்திருக்கிறார்... நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி... நீங்கள் இருவரும் நன்றாக வாழ்ந்து காண்பிக்க வேண்டும்..." என்று மனமாரக் கூற...

கீர்த்தனா... தான் என்ன செய்கிறோம் என்று உணராமலே... தலையை மனப்பூர்வமாக ஆட்டினாள்.

கீர்த்திகா... பாலாவிடம்... திரும்பி... "பாலா, நீங்க மதுவைப் பற்றிக் கவலைப்படாமல்... கீர்த்தனாவுடன் நன்றாக வாழ வேண்டும்... மது கண்டிப்பாக உங்கள் முடிவை ஏற்றுக் கொள்வாள்... எனக்குத் தெரிந்த மது... என் விசயத்தில் தோழியாய்... தாயாக மட்டுமே முடிவெடுப்பாள்... ஆனால், உங்கள் விசயத்தில் காதலியின் நிலைமையில் என்ன செய்வாள்... என்று தெரியவில்லை. காலம்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும்... ஆனால், அவள் சராசரிப் பெண் இல்லை. எதையும் உடனுக்குடன் முடிவெடுப்பாள்... நமக்கெல்லாம் அறிவு ஒன்று சொல்லும்... மனம் ஒன்று சொல்லும்... ஆனால், அவளுக்கு இரண்டும் ஒன்றே சொல்லும்... அதனால்தான் எதற்கும் யோசிக்காமல் மிகச் சரியாக முடிவெடுப்பாள்... உங்கள் விசயத்திலும் அதுதான் நடக்கும். நம்பிக்கையுடன் இருங்கள்..." என்று முடித்தாள்.

பாலா வெற்றுப் புன்னகை புரிந்தபடி மதுவின் நினைவுகளில் ஆழ்ந்தான்.

கீர்த்தனா... மதுவைப் பற்றி இதுவரை கேள்விப் பட்டதில்லை... பாலாவின் காதலி... என்றளவே தெரியும்... கீர்த்திகாவின் பேச்சில் அவளைப் பற்றி இன்னும் பல தெரிய வேண்டும் போல் இருந்தது. யாரிடம் கேட்க முடியும்... என்று விட்டு விட்டாள்... பாலாவிடம் கேட்க சத்தியமாய் இஷ்டம் இல்லை அவளுக்கு...

காரில் போகும் போது அவளாகத்தான் ஆரம்பித்தாள்...

"பாலா, கீர்த்திகா ரொம்ப அழகு..." என்று.

"இவ்வளவு அழகாய் இருப்பார்கள் என்று நினைக்கவில்லை.... அதே போல் ஆதிக்கு என்னாயிற்று... எப்படி இறந்தார்...?" என்று வினவினாள்.

"ஹ்ம்ம்... கீர்த்தியோட அழகுதான். அதில் மயங்கித் தான் ஒரு வெறி பிடித்த நாய் ஆதியின் உயிரோடு விளையாடி விட்டான்..." என்றவன்...

"நீ இந்தக் கீர்த்திகாவைப் பார்த்தே அசந்து போய் விட்டாய் என்றால்... அப்போதைய கீர்த்திகாவைப் பார்த்திருக்க வேண்டும்," என்றவன்... கடந்த கால நினைவுகளில் மிதந்தான்... அது அவன் கண்களிலும் தெரிந்தது.

"உனக்குத் தெரியுமா கீர்த்தி... இவ்வளவு அழகான பெண் என் கல்லூரியில் இருக்கிறாள் என்று எனக்கு நீண்ட நாள் தெரியாது..." என,

கீர்த்தியோ மனதினுள், 'உனக்கு மதுவைத் தவிரத்தான் வேறு யாரும் கண்ணுக்கு தெரியாதே...' என்று கவுண்ட்டர் விட ஆரம்பித்தாள்.

"எனக்கும் கீர்த்திகாவுக்கும் ஒரு சின்னப் பிரச்சனை வந்தது... அதன் மூலம்தான் மதுவே எனக்கு அறிமுகம் ஆனாள்..." என்று சிலாகித்துச் சொன்னான்... அன்றைய நினைவுகளில்.

'என்னது... மது கீர்த்திகாவின் மூலம்தான் அறிமுகம் ஆனாளா? சாருக்கு அதுக்கப்புறம்தான் வேற யாரும் கண்ணுக்குத் தெரிய வில்லையா!' என்று நக்கலாக எண்ணியவள்... விட்டால் அவன் கடந்த காலக் கதையை அவன் வாயாலேயே கேட்க நேரிட்டு விடும் என்பதால்... கண் மூடினாள்... அப்போதாவது நிறுத்துவான் என்று...

ஏனோ அவளுக்கு மதுவைப் பற்றி அவன் மூலமாகக் கேட்கப் பிடிக்கவில்லை.

அவளின் முக மாறுதலை உணர்ந்தவன்... நனவுலகத்திற்கு வந்தவன்... அவள் இந்தப் பொய்யான பந்தத்தில் படும் கஷ்டங்களை எல்லாம் உணர்ந்து...

"கீர்த்தி, நான்... எனக்குத் தெரிந்தவரையில் யாரிடமும் மோசமாய் நடக்கவில்லை... உன் ஒருத்தியிடம்தான்... நான் தரம தாழ்ந்து நடந்து விட்டேன்!" என்று உண்மையாக வருத்தப்பட்டான்.

இதற்கும் கீர்த்தி மனதில் கவுண்ட்டர் விட்டாள்.

'நீ என்னைக்குடா என்னிடம் மோசமாக நடந்து கொண்டாய்... தரம் தாழ்ந்து வேறா... நல்ல காமெடி... நீதான் என்னிடம் கடமை... கண்ணியம்... கட்டுப்பாடு... என்று அதைச் சொன்ன அண்ணாவிற்குப் பிறகு விடாமல் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறாயே!' என்றுதான்...

ஆக மொத்தம்... பாலா பயந்தது போல் இல்லாமல் கீர்த்திகா Vs கீர்த்தி சந்திப்பு சண்டை சச்சரவு இன்றிச் சுமுகமாக முடிந்தது.

24

மைதிலி சமையலறையில் காலை உணவுக்காகத் தயார் செய்து கொண்டிருந்தாள். அன்று ஏனோ ராகவன் ஜாகிங் செல்லவில்லை. தாமதமாகவே எழுந்தார். எழுந்தவர், தன்னைப் பிரெஷ் செய்துவிட்டு மனைவியைத் தேடிச் சென்றார். மைதிலி தலைக்குக் குளித்திருந்த படியால், கூந்தலின் இறுதியில் சிறிதாக முடிச்சு மட்டும் போட்டிருந்தாள்.

உள்ளே போகாமல் வெளியே நின்று அவளை ரசித்துப் பார்த்தபடி நின்றிருந்தார் ராகவன். அவரின் பார்வைத் தீண்டலை மற்றும் ஆள் அரவத்தை உணர்ந்த மைதிலி, நிமிர்ந்து புன்னகைக்க, அது ராகவனுக்கு மேலும் உற்சாகத் தைக் கொடுக்க, மையலுடன் மனைவியின் அருகில் சென்றார்.

மைதிலி ஒரு எச்சரிக்கை உணர்வுடன், அவர் அருகில் வந்தவுடன் தள்ளி நின்று...

"என்னங்க இது... காலையிலேயே வம்பு பண்றீங்க?" என்றாள்.

அவரோ விலகிய அவளை அணைத்தபடி,

"என் பொண்டாட்டி... நான் வம்பு பண்ணாமல் யார் பண்றது... சொல்லு..." என்று கொஞ்சினார்.

"இன்னைக்கு என் மைதிலி ரொம்ப அழகா இருக்கா... அதுதான் என்ன காரணம் என்று ஆராய்ச்சி செய்கிறேன்."

மைதிலி, அவரிடமிருந்து முயன்று விலகி நின்று, தலையில் அடித்தபடி...

"பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணியாச்சு... பேரனோ பேத்தியோ கொஞ்சுகிற வயசு வந்தாகி விட்டது. இன்னும் என்ன ரொமான்ஸ்... கீர்த்தி வீட்டில் இருந்தவரை அடங்கி இருந்தீர்கள். அவளுக்குத் திருமணம் ஆனதும் மறுபடியும் ஆரம்பித்து விட்டீர்களா?" என்று செல்லச் சலிப்புச் சலித்தாள்.

"எனக்குப் பொண்ணு, பேரன், பேத்தி யாரு வந்தாலும், என் செல்ல மைதிலிக்குத்தான் முதலிடம். உன்னிடம் கொஞ்சியது போகத்தான் மற்றவர்களுக்கு..." என்று கணவன் ராகம் இழுக்க,

'இது சரி வராது போலிருக்கே!' என்று மைதிலிக்குத் தோன்றும்போதே, மைதிலிக்குப் போன் வந்தது. அவளைப் போனை எடுக்க விடாமல், தானே எடுத்தார். போனில் அவரது மகள்தான்.

அவரின் குரலைக் கேட்டதும்,

"குட் மார்னிங்பா... என்ன இன்னைக்கு ஜாகிங்குக்கு மட்டம் போட்டாச்சா...?" என ஆரம்பிக்க,

அவள் பேசும்போதே போனை ஸ்பீக்கர் மோடில் போட்டார்.

"இல்லடா... அப்பா ஜாகிங் போகலாம் என்றுதான் இருந்தேன். உங்க அம்மாதான் போக விடவில்லை..." இரட்டை அர்த்தத்தில் பேச,

மகளோ அதைப் புரிந்து கொள்ளாமல், மைதிலியிடம்...

"ஏம்மா அப்பாவைப் போக விடவில்லை?ஏன், ராகவன் டெய்லி ஜாகிங் போய் ஃபிட்டா இருக்கிறதால உங்களுக்கு என்ன பிரச்னை?" என்று வம்பிழுக்க,

கேட்டுக் கொண்டிருந்த ராகவன் சத்தமாகச் சிரித்து வைக்க... மைதிலி பல்லைக் கடிக்க...

கீர்த்தியோ ஒன்றும் புரியாமல், "ஏம்பா சிரிக்கிறீங்க?" என்றாள் அப்பாவியாய்.

இப்போது பாலாவும் அறைக்குள் வந்திருந்தான். அவன் வந்ததை அறியாமல் கூடப் பேசிக் கொண்டிருந்தாள் கீர்த்தி.

"இல்லடா... உங்க அம்மா போக விடலைன்னா... நீ சொன்ன மாதிரி இல்லை," என்று மைதிலியைக் கண்ணடித்தபடி உல்லாசமாகப் பேசினார் ராகவன்.

இப்போது கீர்த்திக்கும் புரிய...

"ராகவ்... ஜாகிங் போகாமல் காலையிலேயே மைதி கூட ரொமான்ஸா... நடத்துங்க நடத்துங்க... நான் அப்புறம் பேசுகிறேன்..." என்று திரும்பியவள், பாலாவைப் பார்த்துத் திகைத்து விழித்தாள்.

'இவன் எப்போது வந்தான்?' என்றபடி, அவனைப் பார்த்துஅசடு வழிந்தாள்.

பாலாவோ எதுவும் கேட்கவில்லை அவளிடம். அவனும், ராகவ், மைதிலி பழகும் விதம் பார்த்திருக்கிறான். அவர்களை நினைத்தபடி...

'நம்ம மாமனார் காதல் மன்னன்தான். அப்பா... என்ன காதல்... என்ன கொஞ்சல்... என்ன புரிதல்... மனைவியிடம்...' மனதில் வியந்தான். வெளியில் சொல்லவில்லை. சொன்னால் அவ்வளவுதான்... மகள் இங்கிருந்தே சுற்றிப் போடக் கிளம்பி விடுவாள் என்று அவனுக்குத் தெரியாதா?

சற்று நேரம் மைதிலியிடம் வம்பிழுத்து விட்டு, அலுவலகம் செல்லத் தயாரானார் ராகவன். அவர் கிளம்பிக் கொண்டிருக்கும்போதே...

மதனிடம் இருந்து போன் வந்தது. அவர் சொன்ன செய்தியில், ராகவன் கிட்டத்தட்ட மகிழ்ச்சியில் உறைந்தார்.

மதனிடம் மீண்டும் ஒரு முறை உறுதி செய்தவர், நேராகப் பூஜை அறைக்குச் சென்றார். சாஷ்டாங்கமாகக் கடவுளின் முன் விழுந்து நன்றி சொன்னவர், மைதிலியிடம் சென்றார்.

"மைதி... நமது பணம் நம் கைக்கே வரப் போகிறது. இப்போதுதான் மதன் போன் செய்தார். அவரிடம்தான், அந்தக் கடன் தொகை வரும்வரை ஃபாலோ பண்ணச் சொல்லி இருந்தேன். இன்றுதான் அந்த நபர் கால் செய்து, அதைக் கட்ட வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். நான் இப்போதே போய் அவர் கணக்குகளைப் பார்த்து முடித்து வைக்க வேண்டும். மேலும் மாப்பிள்ளையிடம் இன்றே அந்தத் தொகையை ஒப்படைக்க வேண்டும்," என்று சொன்ன கணவரை நம்ப முடியாமல் பார்த்தாள்.

இருவரும் சந்தோஷத்தில் திளைத்தனர். கீர்த்தியிடம் இப்போதே சொல்ல வேண்டுமென்று தவித்தனர். இந்த மூன்று மாத காலமாக அவர்கள் வாழ்வில் பிரச்சனையாக இருந்த பணம் கிடைத்து விட்டது என்பதை நம்பவே முடிய வில்லை. இருந்தாலும் உண்மையே அது. பணம் கிடைத்தது மட்டும் சந்தோஷம் என்றால், அதை இந்த நிமிடமே பாலா விடம் கொடுத்து, அதன் மூலம் தங்கள் வீட்டு இளவரசியின் திருமண வாழ்க்கையைப் பரிபூரணமாக்கத் துடித்தனர்.

உடனே இருவரும் கீர்த்திக்கு கால் பண்ண முடிவு செய்து, அவளை அழைக்கப் போக... மைதிலி ஏதோ நினைத்துச் சட்டென்று கட் செய்தவள், ராகவனிடம்...

"ஏங்க... நாம் கீர்த்தியிடம் போனில் சொல்ல வேண்டாம். அது மட்டும் இல்லாமல் முதலில் பாலாவிடம் நேரில் போய்ச் சொல்லி, அவரிடம் சொன்ன பிறகு கீர்த்தியிடம் சொல்வோம். நீங்க முதலில் அலுவலகம்

சென்று, அதற்கான வேலையை உடனே பாருங்கள். அதன் பிறகு நாம் பாலாவைப் பார்த்து விட்டு அவர்கள் வீட்டிற்குச் செல்வோம். இந்த விவரம் சம்பந்தி இருவருக்கும் தெரியாது அல்லவா! அதனால்தான் பாலாவை அலுவலகத்தில் பார்ப்போம் என்கிறேன்," என்றாள்.

மைதிலியின் வார்த்தைகளில் உடன்பட்டார் ராகவன். அதன் பிறகு கீர்த்திக்குக் கால் செய்து, அவளைப் பார்க்க இருவரும் வருவதாகச் சொல்லி, அவளை விடுமுறை எடுக்கும்படி சொன்னார்கள்.

கீர்த்தி விவரம் கேட்டபோது, "எங்க பொண்ணைப் பார்க்க வரக்கூடாதா...?" என்று அலம்பல் செய்து விட்டுப் போனை வைத்தனர். ராகவன் - மைதிலி கால்கள் தரையில் இல்லை. மகளின் வாழ்வில் முள்ளாய் இருந்த பிரச்சனை ஒன்று முடிவுக்கு வரப் போகிறது என்று...!

கிளம்பும்போது ராகவன், மைதிலியிடம், "எவ்ளோ பெரிய விஷயம் சொல்லி இருக்கிறேன்... எனக்கு ஏதும் கிடையாதா?" என்று ஏக்கமுடன் கேட்க,

"உங்களைத் திருத்தவே முடியாது. கிளம்புகிற வழியைப் பாருங்கள்," என்று முதுகைப் பிடித்துத் தள்ளாத குறையாகத் தள்ள,

"மைதி... நல்லா யோசித்துக் கொள். பிறகு, கணவன் கேட்டானே... கொடுக்காமல் போய் விட்டோமே என்று இன்று முழுவதும் ஃபீல் பண்ணப் போகிறாய்!" என்று கெத்தாகச் சொல்ல,

"அதெல்லாம் ஃபீல் பண்ண மாட்டோம்..." என்றபடி வாசலைக் காட்டினாள்.

இதன் பிறகு ராகவன் அந்த வீட்டிற்குள் உயிருடன் வரப் போவதில்லை என்று உணராமலே மனைவியிடம் இருந்து விடை பெற்றார்.

கீர்த்தி ராகவனுக்கு மீண்டும் கால் செய்தாள்.

"என்னப்பா... காலையில் இருந்தே ஒரே உற்சாகம். என்னைப் பார்க்க வருகிறேன் என்று சொல்லி விட்டு, இப்போ அலுவலகத்தில் இருக்கிறேன் என்கிறீர்கள்..." என விஷயத்தை அவரிடமிருந்து கறக்கப் பார்க்க...

"நான் இங்கிருந்து நேராக வந்து விடுவேன் கீர்த்தி... அம்மா வீட்டிலிருந்தபடி வருவாள்..." என்று முடித்தவர், "கீர்த்திடா... அப்பா வருகிறேன்... அப்பாவிற்கு என்ன ஸ்பெஷல்?" என்று கேட்க,

"நான் என்ன பண்ணப் போறேன்... மஞ்சு அக்காதான் பிரிப்பேர் பண்ணப் போறாங்க. நீங்க வேண்டும் என்றால் லிஸ்ட் கொடுங்கள்... நான் பண்ணச் சொல்கிறேன்," என்றவள்,

"என்ன விஷயம் என்று கேட்டால், சும்மா எதை எதையோ பேசிச் சமாளிக்கிறீர்கள்..." என்று சலித்தபடி, இனி அவரிடம் பேசும் வாய்ப்பு என்றுமே இருக்கப் போவதில்லை என்று தெரியாமல்... உணர முடியாமல்... போனை வைத்தாள்.

மைதிலி, அருந்ததியிடமும் வருவதாகச் சொல்லி இருந்ததால், அன்றைய மதிய விருந்து தடபுடலாக நடைபெற்றது. அதைக் கவனித்த கீர்த்தி, அருந்ததியிடம் தனிமையில்,

"தேங்க்ஸ் அத்தை... என் மேல் கோபம் இருந்தாலும், என் அப்பா, அம்மாவிடம் காட்டாமல் இருக்கிறீர்கள். இன்று அவர்கள் வருவதாய்ச் சொன்னதும், சந்தோஷமாக விருந்தெல்லாம் ஏற்பாடு செய்கிறீர்கள். இதற்கெல்லாம் கைம்மாறு நான் என்ன செய்யப் போகிறேனோ...?" என்று குரல் கம்மப் பேசினாள்.

"நீ என்ன செய்தால் நான் சந்தோஷப்படுவேன் என்று உனக்குத் தெரியாதா?" என்று அருந்ததி கொக்கி போட,

கீர்த்தியோ இவ்வளவு நேரம் இருந்த நெகிழ்வு போய் விரைப்பானாள்.

அவளின் மாறுதலை உணர்ந்த அருந்ததி, பெருமூச்சை இழுத்து விட்டவள், பிறகு...

"சரி, சரி கீர்த்தி... உடனே முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளாதே! நீ இந்த வீட்டு மருமகளாக இல்லாவிட்டாலும், அட்லீஸ்ட் எனக்கு மகள் இல்லையென்ற குறையையாவது தீர்த்து வை..." என்று கூற,

"ஐயோ, அத்தை... இப்போ சொன்னது முன்னதை விட ரொம்பக் கஷ்டம்..." என்று விழி விரித்துக் கூற,

"அதில் என்ன கஷ்டம் கீர்த்தி?"

"எங்க அப்பாவாவது பரவாயில்லை... ஆனா எங்க அம்மா ரொம்ப பொஸசிவ். அவங்க பொஸிசன யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டாங்க," என்று சிரித்தாள்.

அருந்ததியோ, "மைதிலி சொல்றாங்களோ இல்லையோ, நீ உன் அம்மாவைத் தவிர யாருக்கும் அந்த உரிமையைத் தர மாட்டாய். அப்படித்தானே!" என்றாள்.

அருந்ததி சொன்ன வார்த்தையின் உண்மையில்... கீர்த்தியோ இதற்கு என்ன பதில் சொல்வது என்று விழித்து, நாக்கைக் கடித்தாள்.

"உனக்கு உங்க அப்பாதான் மிகவும் பிடிக்கும் என்று நினைத்தேன்!" என்று கேட்க,

வெட்கப்பட்டுக் கொண்டே, "உண்மையிலேயே எனக்கு எங்க அம்மாதான் மிகவும் பிடிக்கும். எனக்குப் பிடித்த என் அம்மாவை அப்பாவிற்கு என்னை விடப் பிடிக்கும் என்பதால், அம்மாவை அவர் நேசிக்கும் விதத்திலும் அப்பா ஃபேவரைட் ஆகிவிட்டேன். அம்மா ரொம்ப அதிர்ஷ்டசாலி அத்தை. எங்க அப்பா எனக்காகக்கூட அம்மாவை விட்டுக் கொடுக்க மாட்டார்..."

- எனத் தாய் தந்தை பற்றிய பேச்சில் தன்னை மறந்து, அவள் பிரச்சனை எல்லாம் மறந்து, உற்சாகமாகப் பேச ஆரம்பித்தாள். அதன் பிறகு அவர்கள் திருமணம், விஸ்வம் குடும்பத்தின் நட்பு, வினோத் எனக் கீர்த்தி வாய் மூடாமல் பேசிக் கொண்டிருந்தாள்.

அருந்ததியோ, 'காதலில் உருகும் தாய் தந்தையருக்கு மகளாய்ப் பிறந்து, அவர்களின் வாழ்க்கை முறையில் பெருமை காணும் இவளுக்கு அந்த அதிர்ஷ்டம் இல்லையா? என்ன கொடுமை இது! நாளை இவள் தனிமையில் வாடுவதைப் பார்க்கப் போகும் அவர்களுக்கு எத்தனை பெரிய கொடுமை! அது இவளுக்குப் புரியவில்லையா?'

- என்றெல்லாம் யோசனை செய்தவள், அதைக் கேட்டும் விட்டாள்.

"தெரியும் அத்தை. ஆனால் விதி ஒன்று இருக்கிறதே! போதும் போதும் என்கிற அளவுக்கு நீங்கள் காதலித்து விட்டீர்கள். வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். அதனால் உங்கள் மகளுக்கு இது போன்ற வாழ்க்கை எதுவும் கிடையாது. கிடைக்காது என்று, கடவுள் நான் அவர்கள் வயிற்றில் உருவாகும்போதே எழுதி அனுப்பி விட்டார் போல..." என்றாள், பாலாவின் நினைவில் விரக்தி யாக... ஆனால், தெளிவாக.

அருந்ததிக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. யாரைக் குற்றம் சொல்லி என்ன பயன்? நடந்த எதையும் மாற்ற முடியாது. ஆனால், இவர்கள் இருவரும் மனம் மாறினால் இப்போது உள்ள நிலைமை தலை கீழாக மாறிவிடும். ஆனால் யாரால் இவர்கள் மனதை மாற்ற முடியும்? கீர்த்தி - பாலா இருவருக்குள்ளும் மனதில் மாற்றம் மட்டும் வந்தால் போதும். ஒரு நல்ல எதிர்காலம் இருவருக்கும்... இதை யெல்லாம் மனதினுள் மட்டுமே நினைக்க முடிந்தது. செயல்படுத்த என்ன செய்வது என்று புரியவில்லை.

ஆனால், எந்த விதி என்று கீர்த்தி சொன்னாளோ, அந்த விதி... அதற்கான வேலைகளில் இறங்கியது.

குளோபல் நெட் அலுவலகத்தில்...

பாலா தனது அலுவலகத்தில் ராகவன் - மைதிலியை எதிர் பார்க்கவில்லை. அவர்கள் இருவரும் வீட்டிற்கு வருவதாகச் சொன்னதால்தான் கீர்த்தியே இன்று அலுவலகம் வரவில்லை. 'பிறகு இங்கு ஏன் வந்திருக்கிறார்கள்? என்ன வாக இருக்கும்?' என்று சுழன்ற தன் மனதை அடக்கியபடி அவர்களை வரவேற்றான் பாலா.

ராகவன் அனைத்து விதமான ஃபார்மாலிட்டீஸை எல்லாம் முடித்தவுடன், நேராக மைதிலியைப் பாலா அலுவல கத்திற்கே வரச் சொல்ல, மைதிலி ஆட்டோவில் வந்து விட்டாள்.

ராகவனும் தனது காரில்தான் கிளம்பப் போனார். ஆனால், அது ஸ்டார்ட் ஆகாமல் பிரச்சனை பண்ண, அதனோடு போராடாமல் உடனே ஆட்டோ ஒன்றைப் பிடித்துக் கிளம்பி விட்டார்.

இருவரும் மகள் அலுவலகத்தினை வெளியில் நின்று பார்த்ததுதான். அவள் அந்த அலுவலகத்தின் முதலாளியான பாலாவை மணந்த பிறகு கூட அலுவலகம் வந்தது இல்லை. இப்போது கூடப் பாலாவிடம் தனியே பேச இதுதான் வசதி என்பதாலும்... அவன் பணம் கொடுத்த விவகாரம் அவனின் பெற்றோருக்குத் தெரியாது என்பதாலும் இங்கு வந்தனர்.

பாலாவின் பார்வையில் இருந்த குழப்பத்தினை இருவரும் உணர்ந்தனர்.

அவனை மேலும் குழப்பாமல்... தாங்கள் வந்த விசயத்தை இருவரும் விளக்க... அதிர்ந்தான் பாலா. எதற்காக அதிர்ந்தான் என்று புரியவில்லை. அவர்கள் நடத்திய நாடகம் இவ்வளவு சீக்கிரம் முடிவுக்கு வரும் என்று நினைக்கவில்லை போல.

"கீர்த்தியிடம் சொல்லி விட்டீர்களா, மாமா?"

மாமா என்று சொல்லவே தடுமாறினான், பாலா. முடியப் போகும் உறவல்லவா?

"இல்லை பாலா... உங்களிடம்தான் முதலில் சொல்ல வேண்டுமாம். உங்க மாமியாரின் உத்தரவு...." என்று புன்னகைக்க...

மைதிலியைப் பார்த்து அவஸ்தையாய்ப் புன்னகை செய்தவன்... இன்னும் சற்று நேரத்திற்குப் பிறகு... தான் இவர்களின் மனதிலிருந்து கீழே இறங்கப் போவது புரியாமல் இல்லை அவனுக்கு.

கண்டிப்பாகக் கீர்த்தியிடம் இவர்கள் சொல்லும்போது அவள் இந்த ஒப்பந்த வாழ்க்கையை... அதை மட்டும் அல்ல. இந்த அலுவலகத்தை விட்டே போய் விடுவாள். தன் முகத்தில் இனி விழிக்கக் கூட மாட்டாள் என்றே தோன்றியது.

இந்தப் பண விவகாரம் தன் மகளின் வாழ்க்கையைப் பணயமாக்கியுள்ளது என்று தெரிந்தால் இவர்கள் இருவரும் என்ன ஆவார்களோ என்று தோன்றியது. இன்று அவர்கள் முகத்தில் உள்ள சந்தோசம்... அவன் பணம் தரும்போதோ... இல்லை தனக்கும், கீர்த்திக்கும் திருமணம் நடந்தபோதோ இல்லை. அந்த அளவிற்கு அவர்கள் முகம் மகிழ்ச்சியில் திளைத்திருந்தது.

இதையெல்லாம் நினைத்தபடியே அவர்கள் கொண்டு வந்த டாக்குமெண்ட்ஸில் பார்வையை ஓட விட்டான். படித் தவன் அதிர்ந்தான்.

வந்த தொகை முழுவதும் அவன் பெயருக்கு மாற்றப் பட்டிருந்தது.

நிமிர்ந்தவன்... சற்றுக் கோபமாக, "என்ன மாமா இது? என் பெயரில் இருக்கிறது. தயவு செய்து இதை மாற்றிக் கீர்த்தி பெயரில் போடுங்கள். எனக்கு மிகவும் அவமானமாக

இருக்கிறது. நீங்கள் என்னை உங்கள் மாப்பிள்ளையாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெரிகிறது," என்றான்.

இதைச் சொல்லும் போது பாலாவின் மனச்சாட்சி அவனைக் கேள்வி கேட்டது.

'டேய் பாலா... உன்னை அவர்கள் மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டதால்தான் இவ்வாறு செய்கிறார்கள். நீதான் அவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறாய்.'

தன்னைச் சுட்ட மனச்சாட்சியைத் தள்ளியவன்...

"கீர்த்தி பெயரில் மாற்றி விடுங்கள். இல்லையென்றால் நான் இதை ஒருபோதும் வாங்க மாட்டேன்..." என்று கடினமான குரலில் கூற,

அவனின் குரலில் மாறுதலை உணர்ந்த இருவரும், அவனிடம், "இதையெல்லாம் விட தாங்கள் அருமை பெருமை மிக்க... தங்கள் மகள் கீர்த்தியையே அவனிடம் ஒப்படைத்திருக்க... அவளுக்கு முன் இந்தப் பணமெல்லாம் ஒரு தூசு. கீர்த்தி பெயரில் இருந்தால் என்ன? அவன் பெயரில் இருந்தால் என்ன?" என்று கேட்க...

இப்போது பாலாவும், "என் பெயரில் இருந்தால் என்ன... கீர்த்தி பெயரில் இருந்தால் என்ன.... அதனால் அவள் பெயரிலேயே இருக்கட்டும்..." என்று அவர்கள் சொன்ன வார்த்தையையும் பிடித்துக் கொண்டு, தன் பிடிவாதத்திலே நிற்க...

ராகவன் வேறு வழியின்றி... மதனிடம் போன் செய்து... பாலாவின் முடிவைச் சொல்லி... டாக்குமென்ட்ஸை யெல்லாம் கீர்த்தியின் பெயரில் மாற்றச் சொன்னார்.

அதன் பிறகு சிறிது நேரம் பேசிவிட்டு... அலுவலகத்தை விட்டு வெளியேறி வந்தனர்.

கொண்டு வந்த டாக்குமெண்ட்ஸ் இனித் தேவையில்லை என்பதால் பாலாவின் அறையிலேயே விட... அவன் அதைக் கிழித்தும் போட்டு விட்டான்.

பணத்தை மறுத்த பாலாவின் கோபத்தில் தன் மகளின் எதிர்காலம் அவர்கள் இருவருக்கும் ஒளிமயமாகவே தோன்றியது. பாலாவைப் பெருமையாக நினைத்தபடி... இப்படிப் பட்டவன் தன் மகளுக்குக் கணவனாகக் கிடைக்க அவள் போன ஜென்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்றெல்லாம்... சிலாகித்தபடி அங்கிருந்த ஆட்டோவில் ஏறினர்.

இருவரின் மனதிலும் ஒரு நிம்மதி. கடந்த மூன்று மாதக் காலமாகத் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட பிரச்சனை. அதன் பின் மகள் வாழ்க்கை பற்றிய பயம் எல்லாம் சுத்தமாக மாறி... இன்று ஒரு பரிபூரணத் திருப்தியை உணர்ந்தனர்.

கிழித்துப் போட்டிருந்த காகிதக் குப்பைகளையே வெறித்துப் பார்த்தபடி இருந்தான் பாலா.

அவன் என்ன உணர்கிறான் என்று அவனுக்கே தெரியவில்லை.

கீர்த்தியுடன்... தான் நடத்திய நாடகம் முடிவிற்கு வந்ததாலா... இல்லை, எல்லோருக்கும் அது தெரியப் போவது என்பதாலா... அவளைப் பெற்றவர்கள் இந்த ஏமாற்றத்தைத் தாங்குவார்களா... இல்லை, ஜெகநாதனின் கோபத்தை எப்படி ஏற்பதா... என்னவோ... அவன் மனதை அழுத்திக் கனமாக்கியது.

நினைவுகளின் தாக்கத்தில் அவன் போராட்டத்தைத் தாள முடியாமல் அலுவலகம் என்பதையும் மறந்து கண் மூடி இருக்கையில்... பின்னால் கை வைத்துச் சாய்ந்தான் பாலா.

எவ்வளவு நேரம் அப்படி அமர்ந்திருந்தானோ... தன் மொபைலின் அழைப்பு ஒலியில் அதை எடுத்துப் பார்த்தான் பாலா.

கீர்த்தியிடம் இருந்துதான்... பதட்டம் நிறைந்த மனதோடு எடுத்தான் பாலா.

அட்டெண்ட் செய்தவுடனே... "ஹலோ, மிஸ்டர் பாலா... நான் கீர்த்தி. இல்லை... இல்லை... கீர்த்தனா ராகவன் பேசுகிறேன். நான் ஏன் இப்படிப் பேசுகிறேன் என்று புரிந்திருக்கும். நாம் நடத்திய நாடகம் இவ்வளவு சீக்கிரம் முடிவுக்கு வரும் என்று நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. நமது ஒப்பந்தப்படி நான் உங்களிடம் கடனாகக் கட்டிய பணத்தைக் கொடுத்து விட்டேன். உங்கள் அப்பாவிற்கும் நல்லபடியாக அறுவைச் சிகிச்சை முடிந்து விட்டது. நாம் இனி அவரவர் பாதையில் போகும் நேரம் வந்துவிட்டது. நான் கிளம்புகிறேன். எனது ராஜினாமாவை நான் மெயிலில் அனுப்புகிறேன்.

"தென்... உங்கள் பெயரில் விரைவில் உங்கள் பணம் வர அப்பாவிடம் சொல்லி விட்டேன். நான் என் வாழ்க்கையில் பாலா என்ற ஒருவரைச் சந்தித்ததை இந்த நிமிடத்தில் இருந்து மறக்க முயற்சிக்கிறேன். உங்கள் மது விரைவில் உங்களுடன் சேர மனமார வேண்டிக் கொள்கிறேன். ஏனென்றால்... இன்னும் ஏதேனும் ஒரு அப்பாவிப் பெண் மாட்டிக் கொண்டால்... அதற்காகவாவது மதுவுடன் நீங்கள் சேர வேண்டும். குட் பை..." என்றபடி அவனின் பதிலை எதிர்பாராமல் போனை வைத்தாள்.

கீர்த்தியின் பேச்சில் தன்னை மறந்து நின்றான்.

அவனது மொபைல் அழைத்தது. ஆனால் அதை உணரும் நிலையில் இல்லை. மீண்டும் அடிக்க... அப்போதுதான் உணர்ந்தான். கீர்த்தி பேசுவதாகத்தான் மனக் குழப்பத்தில் உழன்றிருக்கிறோம் என்று... இத்தனை நேரம் கீர்த்தி பேசியது போல் பிரமையா... உண்மையாக நடந்தது போல் இருந்ததே... என்று நினைத்தவன்,

தன் பிரமையிலிருந்து வெளி வந்தான். வந்தவன்... நிதானத்திற்கு வந்து, போனில் யாரென்று பார்த்தான்.

அது மைதிலியின் எண்ணிலிருந்து வந்திருந்தது.

தற்போது கீர்த்தி பேசியதாகத் தான் நினைத்துக் கொண்டிருந்தது போல் இப்போது இதுவும் பிரமையோ என்று தோன்றியது பாலாவிற்கு. அந்த எண்ணம் உண்மையாக இருந்திருந்தால் அதாவது பிரமையாக இருந்திருந்தால் நன்றாகத்தான் இருந்திருக்கும். ஆனால் உண்மையிலேயே மைதிலிதான் அழைத்திருந்தாள்.

உடனே பாலா... தானே மைதிலிக்குக் கால் செய்தான்.

அது, மறுமுனை பிஸி என்று கூற... அவளின் எண்ணைத் தொடர்பு கொள்ளாமல் ராகவனுக்குத் தொடர்பு கொண்டான்.

ஆனால்... ராகவனின் மொபைலோ அணைத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் சொல்ல...

இப்போது மைதிலியிடமிருந்தே கால் வந்தது.

உடனே அட்டெண்ட் செய்தவன்... அத்தை என அழைக்கும் முன்னரே மைதிலியின் படபடப்பான குரல் அவனை அடைந்தது.

25

அருந்ததியின் மொபைல் அலறியது. கீர்த்திதான் ஹாலில் இருந்த மொபைலை எடுத்து வந்தாள்.

"அத்தை, பாலாதான்..." என்றபடி அவளிடம் கொடுத்து விட்டுத் தன் மொபைலை எடுத்துத் தன் பெற்றோருக்கு மாற்றி மாற்றி ஃபோன் செய்து கொண்டிருந்தாள். இருவரும் எடுக்கவில்லை. ஒன்று ஸ்விட்ச் ஆஃப் என்று வர... மற்றொன்று அட்டெண்ட் செய்ய ஆள் இல்லாமல் இருந்தது.

பாலாவிடம் பேசிக் கொண்டிருந்த அருந்ததியின் முகம் மாறியது. அதையும் கீர்த்தி கவனித்தாள்.

அவளின் அருகில் வந்த கீர்த்தி, "என்ன அத்தை?" என்று கேட்க.... வந்த கண்ணீரை... துக்கத்தை... கீர்த்திக்கு முன்னால் அடக்கியபடி,

"கீர்த்தி, நாம உடனே ஒரு இடத்திற்குக் கிளம்ப வேண்டும். நீ ட்ரஸ் மாத்தி வா!" என்று குரல் அடைக்கக் கூறினாள்.

"ஆனால் அத்தை... அப்பாவும் அம்மாவும் வருகிறேன் என்று சொல்லி இருக்கிறார்களே... அவர்கள் வந்து விட்டால் என்ன பண்ணுவது? எங்கு போகிறோம்...?" என்று கேள்விகளைத் தொடுக்க...

"அவங்களையும் பாலா அங்க வரச் சொல்லியிருப்பான் போல. அங்குதான் இருக்கிறார்கள். நீ சீக்கிரம் கிளம்பு..." என்று வாய்க்கு வந்ததை உளறினாள் அருந்ததி.

எங்கே என்று கேட்க வாய் திறந்த கீர்த்தி... அருந்ததி அங்கு இல்லாததால்... யோசனையுடன் மாடி ஏறினாள். இப்போதும் தன் பெற்றோருக்குப் போன் செய்து பார்த்தாள். எடுக்காததால்...

'பாலா பண்ணினால் எடுத்தவர்கள்... நான் பண்ணினால் மட்டும் ஏன் எடுக்கவில்லை? காலையில் அப்பா.... அம்மா திடீரென்று பார்க்க வருகிறேன் என்றார்கள். அதுவே எதற்கு என்று மண்டை காய்கிறது. இப்போது என்னவென்றால்... எங்கே என்று கூடச் சொல்லாமல் அவசரமாகக் கிளம்பச் சொல்கிறார்கள். என்ன ஒரே மர்மமாக இருக்கிறது. எனக்குத் தெரியாமல் ஏதாவது சர்ப்ரைஸ் கொடுக்கப் போகிறார்களா... இல்லை... மது பற்றி...' நினைக்கும்போதே பதறியது மனம். 'மது கிடைத்து விட்டாளோ... இருக்காதே அம்மா... அப்பாவை எதற்குப் பாலா கூப்பிட வேண்டும்... என்றெல்லாம் தனக்குள்ளாகக் குழம்பியள்...

அருந்ததியுடன் கிளம்பினாள்.

மைதிலியின் குரல் பாலாவையும் தொற்ற... மைதிலி பதட்டத்துடனும் தடுமாறியும் பேசினாள்.

தாங்கள் சென்ற ஆட்டோ பிரேக் இல்லாத காரணத்தால்... மற்றொரு காரின் மீது மோதி விபத்து நடந்ததைக் கூறியவள்... அவர்கள் இருக்கும் இடத்தையும் கூறி... கீர்த்தியின் தந்தை ராகவன் விபத்து நடந்த இடத்திலேயே இறந்து விட்டதாகக் கூறினாள். இதைச் சொல்லவே அவளால் முடியவில்லை.

பாலாவிற்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. நெஞ்சம் பதறியது. இருபது நிமிடம் முன் தன்னிடம் பேசியவர் இறந்து விட்டாரா...? தாங்க முடியவில்லை. அவனுக்கே இப்படி என்றால்... கீர்த்தி... மைதிலியின் நிலைமை... இப்போது அதைப் பற்றியெல்லாம் யோசிக்க நேரம் இல்லை என்பதால் அருந்ததிக்குப் போன் செய்து விபரத்தைச் சொல்லி விட்டு... அவசர அவசரமாக ஸ்பாட்டிற்கு விரைந்தான்.

அதற்குள் ஆம்புலன்ஸ் எல்லாம் வந்திருந்தது. மைதிலி அங்கு ஆர்ப்பாட்டம் பண்ணிக் கொண்டிருந்தாள். மைதிலியை மட்டும் அந்த ஆம்புலன்ஸில் ஏற்றப் பாடுபட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் ராகவனை விட்டு நகர மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தாள்.

பாலா மைதிலியின் அருகில் செல்ல... மைதிலியோ, "பாலா, என்னை அவரை எங்கு கூட்டிச் செல்கின்றனரோ அங்கேயே கூட்டிட்டுப் போகச் சொல்லுங்கள்..." என்று பாலா வந்ததை உணர்ந்து, பாலாவிடம் வாய் மட்டும் பேசியது. பார்வை எல்லாம் இறந்திருந்த கணவனின் மேல்தான் இருந்தது.

பாலாவால் எதுவும் பேச முடியவில்லை. அருகில் இருந்த போலீஸ்... அவனின் தோற்றத்தில், கொஞ்சம் பணிவுடன்... "சார், அவரை ஜி.ஹெச்சுக்குப் போக மார்ச்சுவரி

வேனில் ஏற்ற வேண்டும். இந்த அம்மாவிற்கும் ஆட்டோ டிரைவருக்கும் சிகிச்சை வேண்டும் என்பதால் ஆம்புலன்ஸில் ஏறச் சொன்னால் பிடிவாதம் செய்கிறார்கள். இருவரையும் ஒரே ஆம்புலன்சில் ஏற்ற முடியாது. சொன்னால் பிடிவாதம் பிடிக்கிறார்கள்..." என்றவன், "இப்படியே இருந்தால் இருவரையும் மார்ச்சுவரி வேனில்தான் ஏற்ற வேண்டும்..." எனறு வாய்க்குள்ளாக முனகினான்.

அவன் என்ன சொல்கிறான் என்று பாலாவிற்கும் புரிய... பாலா அவனிடம் எகிற ஆரம்பித்தான்.

"யோவ்... என்னய்யா... இஷ்டத்திற்குப் பேசுகிறாய். நீ போட்டிருக்கிற டிரெஸ்ஸுக்காகப் பார்க்கிறேன். இல்ல..." என்று சுட்டு விரலை நீட்டி மிரட்டியவன்... அவனிடம் வாக்குவாதம் செய்யும் நேரம் இது இல்லை என்பதால் அதை விட்டுவிட்டு... பிரபல தனியார் மருத்துவ மனைக்குக் கால் செய்து ஆம்புலன்ஸை வரச் செய்தான்.

அந்தப் போலீஸ்... இறந்த ராகவனை ஜி.ஹெச் சுக்குத்தான் கொண்டு செல்ல வேண்டும் என்று பாலா அழைத்திருந்த ஆம்புலன்ஸில் ஏற்ற மறுக்க....

அவரிடம், "அவர் உயிரோடு இருக்கிறாரா... இல்லையா... என்று அங்குள்ள மருத்துவர் சொல்லட்டும். அதன் பிறகு பார்க்கலாம்..." என்று முறைத்து விட்டு மைதிலியையும் ராகவனையும் ஏற்றினான்.

வண்டி மருத்துவ மனையை நோக்கிச் சென்றது. கீர்த்தியின் கால் மைதிலியின் மொபைலில் வந்து கொண்டே இருந்தது. மைதிலி அதைக் கையில் தான் வைத்திருந்தாள். ஆனால் எடுக்கவே இல்லை. பாலாவிடம் மட்டுமே பேசியிருந்தாள், விபரத்தைச் சொல்வதற்காக.

மைதிலிக்கு நன்றாக அடிபட்டிருந்தது. ஆனால் ராகவனுக்கோ... பெரிய அடியெல்லாம் இல்லை. விழுந்

ததில் பின்னந் தலை அடிபட... அப்போதே உயிர் பிரிந்து விட்டிருந்தது. மைதிலி தன்னைச் சுதாரித்து வருவதற்குள்... அவர் காத்திருக்காமல் போய் விட்டார். கணவன் தன்னை விட்டுப் போய் விட்டார் என்று உணர்ந்த மைதிலிக்கு அழுகை வரவில்லை. ஏன்? யார் செய்த குற்றம்? ஏன் அவர்கள் வந்த ஆட்டோ பிரேக் பிடிக்கவில்ல...? தாங்கள் செய்த தவறா? இல்லை, ஆட்டோ டிரைவர் செய்த தவறா? புரியவில்லை.

தன் கணவன் தன்னை விட்டு விட்டுச் சொல்லாமல் போய் விட்டான்... என்று மட்டும் புரிந்தது. கோபம்தான் வந்தது ராகவின் மேல். கீர்த்தியின் கால் வந்தபோது மைதிலிக்கு அழுகையே வந்தது. ஆனால், அவளிடம் பேசவில்லை. முடியவில்லை. பாலாவிற்கு மட்டுமே போன் செய்தாள். கீர்த்தி... கீர்த்தி... என்று மனம் அரற்றியது. அவளின் ஒவ்வொரு அழைப்பும் மைதிலியை நிலைகுலைய வைத்தது.

மகளை அழைத்து அவள் தந்தை அவர்களை ஏமாற்றி விட்டார் என்று சொல்லத் துடித்தாள் மைதிலி. தங்கள் செல்ல மகள்... இதை எப்படித் தாங்குவாள் என்றிருந்தது. அதனாலேயே அவள் கீர்த்தியிடம் பேசவில்லை.

மருத்துவமனையின் நுழைவாயிலில் நின்றது வண்டி. இதற்கு மேல் ராகவன் மைதிலியுடன் வர முடியாது என்னும் நிலையை உணர்ந்த பாலா... மைதிலியை அவள் நிலையைப் பார்க்க முடியாமல் திணறினான். துக்கம் தொண்டையை அடைத்தது. மைதிலி முதலில் வெளியேற்றப்பட... அடுத்து ராகவனை ஸ்ட்ரெக்சரில் தூக்கினார்கள். மைதிலியைப் பாலா தாங்கிப் பிடித்திருந்தான்.

ராகவனைக் கீழே இறக்கியவர்கள்... மார்ச்சுவரிக்குக் கொண்டு செல்ல ஆயத்தமாக.... இதுதான் இந்த நிமிடம் தான் தன் கணவனைக் கண்ணாரக் காணும் கடைசி நிமிடம் என்பதை மைதிலி உணர... அதுவரை இறுக்கமாகவே

அவரைப் பார்த்தபடி வந்தவள்... தாங்க முடியாமல் தன்னால் முடியாத நிலையிலும் அவர் மேல் விழுந்து கதறினாள்.

பாலா அவளைக் கட்டுப்படுத்தும் முயற்சி எல்லாம் தோல்வியில்தான் முடிந்தது. பாலாவிற்குப் பயம் வந்துவிட்டது. மைதிலியையாவது கீர்த்திக்குக் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து, அவளை வலுக்கட்டாயமாக ராகவனிடமிருந்து பிரித்து எடுத்தான்.

முதலில் அவரை விட்டு வரப் பிடிவாதம் பிடித்தவள்... என்ன நினைத்தாளோ... பிறகு கண்ணீரை நிறுத்தி நிதானமானாள். அதன் பிறகு கணவனை ஒரு முறை நன்றாகப் பார்த்தாள். பின் அவரின் அருகில் வந்தவள்... அவர் நெற்றியில் அழுத்தமாக முத்தம் வைத்தாள். அவர் காலையில் கேட்டது... கொடுத்து விட்டாள் மனைவி. உணரும் நிலையில் கணவன் இல்லை. அவர் முகம் இறந்தும் கூடப் புன்னகையைச் சிந்திக் கொண்டிருந்தது. அதில் ஒரு சாந்தம் இருந்தது.

ராகவன் மைதிலியின்... உயிரோடும் உடலோடும் கலந்திருந்தவர்... இன்று அவளை விட்டு உயிரின்றி... உடலாலும் பிரிந்தார்.

ராகவனும்... மைதிலியும் வேறு வேறு திசையில் பிரிந்தனர்.

கீர்த்தனாவிற்கு அருந்ததியின் பதட்டம் ஏன் என்று புரியவில்லை. அவள் அவ்வப்போது கீர்த்திக்குத் தெரியாமல் கண்ணீரைத் துடைப்பதும் தெரிந்தது. அவளுக்கு எதையோ தன்னிடமிருந்து மறைக்கிறார்கள் என்று தோன்ற... பயப் பந்து அவளை அறியாமல் வயிற்றில் சுருண்டது. அப்பா, அம்மாவிற்கு ஏதாவது ஆகியிருக்குமோ? அதை யோசித்தவள்... அருந்ததியிடம் ஏதும் கேட்காமல் மைதிலி செல்லிற்கு அழைத்தாள்.

'கடவுளே, அம்மா எடுக்க வேண்டும்...' என்று மனதிற்குள் ஆயிரம் முறை வேண்டியபடி காத்திருக்க... அது அவளை ஏமாற்றியது. உடனே ராகவன் அலுவலக எண்ணிற்கு அழைத்தாள். அவர்களோ அவர் அலுவலகத்தில் இருந்து கிளம்பி விட்டதாகக் கூற, அருந்ததியின் முகத்தைப் பார்த்தாள். தான் நினைத்ததைக் கேட்க நினைத்தாலும்... ஏதும் கேட்கவில்லை. அவளால் கேட்க முடியவில்லை. தான் நினைத்தது போல் எதுவும் இருக்காது. எதுவும் நடந்திருக்கக் கூடாது... என்று மனதினுள் ஜெபித்தபடியே வந்து கொண்டிருந்தாள். அவள் ஓரளவு அனுமானித்து விட்டாள் என்பதை உணர்ந்த அருந்ததியும் ஒன்றும் சொல்லவில்லை. சொல்லவும் முடியவில்லை.

மருத்துவமனையின் அருகில் வந்தவுடன் அருந்ததி கீர்த்தியை இறங்கச் சொல்ல... கீர்த்திக்குத் தான் உணர்ந்தது உண்மையோ என்று தோன்ற... காரை விட்டு இறங்க மறுத்தாள்.

"அம்மாவும் அப்பாவும் எங்கே? அவங்க எதுக்கு இங்க வந்தார்கள்? அவர்களை வரச் சொல்லுங்கள். நான் வருகிறேன்..." என்று சிறு குழந்தை போல் சொல்லி அவர்களைத் தேடினாள். அதற்கு மேல் அருந்ததியால் அழுகையை மறைக்க முடியவில்லை. அவள் அழ...

"நீங்க எதற்கு அழுகிறீர்கள்? எனக்குப் பயமாய் இருக்கிறது. எனக்கு அப்பாவைப் பார்க்க வேண்டும். அம்மாவைப் போன் எடுக்கச் சொல்லுங்கள்!" எனப் புலம்ப ஆரம்பித்த போதே, பாலா அங்கு வந்தான்.

பாலாவைப் பார்த்தவுடன், "பாலா... ஏன் அத்தை அழுகிறார்கள்? அழச் சொல்லாதீர்கள். எனக்குப் பயமாய் இருக்கிறது. அம்மாவும், அப்பாவும் இங்கேதான் இருக்கிறார்களா...? நான் அவர்களைப் பார்க்க வேண்டும்.

எனக்கு ஏதேதோ மனதில் தோன்றுகிறது..." எனக் காரில் இருந்தபடியே கூற...

காரின் உள்ளே சென்றான் பாலா.

"கீர்த்தி... இது என்ன பிடிவாதம்? நீ வந்தால்தான் உன் அம்மாவைக் காப்பாற்ற முடியும். உன்னைப் பார்க்காமல் அவர்கள்... ஆபரேசன் ரூமிற்குள் செல்ல மாட்டேன் என்கிறார்கள். நீ என்னவென்றால்... காரில் இருந்து இறங்கப் பிடிவாதம் செய்கிறாய். ஒரு சின்ன ஆக்சிடெண்ட் அதற்கு இந்த ஆர்ப்பாட்டமா?" என்றவனின் வார்த்தையில் முழுவதும் நம்பாமல்... தெளியாமல் அவனைப் பார்த்தாள்.

"நீ வந்தால்தான் உன்னுடன் பேசினால்தான் ஆபரேசன் செய்து கொள்வேன் என்று பிடிவாதமாக இருக்கிறார்கள். நீ தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் அவர்களுக்கு ஆபத்து..." என்றவன்... அவளைக் காரில் இருந்து வெளியே இழுத்து... மைதிலி இருந்த அறைக்கு அழைத்துச் சென்றான்.

அவனோடு போகும் போதே... "அம்மாவுக்கு என்னாச்சு பாலா? அப்பா வந்துட்டாரா? அப்பா அம்மாவைத் தனியாக அனுப்பியதால்தான் இப்படி ஆகிவிட்டது. சேர்ந்து வரத்தான் சொன்னேன்... அம்மாவுக்கு ஒண்ணும் ஆகாதுல்ல. எனக்குப் பயமாய் இருக்கு பாலா!" - அழுகை பாதியும்... வார்த்தை பாதியுமாய்ப் புலம்பியபடி வந்தாள்.

அவள் அறையில் நுழையும்போது மருத்துவர் குழு மைதிலியைச் சூழ்ந்திருந்தது. அதனால் வெளியே நின்றபடி மைதிலியைப் பார்த்தாள். அவளால் தாங்க முடியவில்லை. அருந்ததியின் மேல் சாய்ந்து அழ ஆரம்பித்தவள்...

"அய்யோ.... சின்ன ஆக்சிடெண்ட் என்று சொன்னீர்கள். பார்த்தால் அப்படித் தெரியவில்லையே! என் அப்பா கேட்டால் நான் என்ன சொல்வேன்...? என்னாலே தாங்க முடியவில்லையே! அப்பா எப்படித் தாங்குவார்? அவரால்

அவர் மைதிலியை இந்தக் கோலத்தில் பார்க்க முடியுமா?" என்று இறந்து போன தன் அப்பாவை நினைத்து வேறு கதற ஆரம்பித்தாள்.

பாலாவும், அருந்ததியும் அவளைத் தேற்ற வழியின்றித் திகைத்தனர்.

'இவளிடம் ராகவனைப் பற்றி இன்னும் சொல்லவில்லை. அதற்குள்ளாகவே இப்படிக் கதறுகிறாளே...' என்றிருந்தது. இருந்தாலும் மைதிலியைப் பார்த்து விட்டு வந்த பிறகுதான் ராகவனைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்தனர்.

மருத்துவர் குழு வெளியே வந்தது. அதில் தலைமை மருத்துவர், பாலாவிடம், "அவங்க உயிரோடு இருக்கவே ஆசைப்படவில்லை. அவங்களும் ஒத்துழைத்தால் மட்டுமே அவர்களைக் காப்பாற்ற முடியும். இல்லையெனில் கஷ்டம்தான்..." என்று கீர்த்தி முன்னாலே கூறினார்.

கீர்த்தி.... கண்களில் பரிதவிப்புடன் பாலாவைப் பார்த்தாள்.

பாலா, கீர்த்தியிடம், "கீர்த்தி, அவர் சொன்னதைக் கேட்டாய் அல்லவா? அழுவதை நிறுத்தி விட்டு... அத்தையிடம் இந்த ஆபரேசனுக்கு கோ-ஆபரேட் பண்ணச் சொல். நீ சொன்னால் மட்டும்தான் கேட்பார்கள்..." என்று அவளுக்கு நிதானமாக... அவள் மனதில் ஏறும்படி சொல்ல...

அவன் சொல்வதைக் கேட்டுத் தலையை மட்டும் ஆட்டினாள். கண்கள் ஒருவித அலைப்புறுதலிலே இருந்தன.

மைதிலியின் அருகில் கீர்த்தி நின்றிருந்தாள். கீர்த்திக்கு எதிரே... பாலா, அருந்ததி நின்றிருந்தனர்.

"அம்மா... அம்மா... ஏம்மா... என்னைப் பாருங்க..." என்ற கீர்த்தியின் விசும்பலில் மைதிலி கண்களில் வலியுடன் பார்த்தாள்.

"கீர்த்திம்மா..." என்று வலியினால், தெளிவில்லாத வார்த்தைகள்... மைதிலியிடமிருந்து வந்தன.

"என்னம்மா ஆயிற்று உங்களுக்கு? ஏன் இப்படி நமக்கு... நீங்கள் ஏன் பிடிவாதம் பிடிக்கிறீர்கள்? நீங்க இப்படி இருக்கிறதைப் பார்த்தா பயமா இருக்குமா! ஆபேரசன் பண்ணினால்தான் நல்லதும்மா. நான் சொல்றேன்ல... கேட்பீங்கல்ல..." என்று நடுங்கிய குரலில் அழுகையோடு கெஞ்சினாள்.

மைதிலி வெற்றுப் புன்னகை புரிந்தவள்... "நான் யாருக்காக வாழ வேண்டும் கீர்த்தி...? உங்க அப்பா நம்மை விட்டுப் போய் வெகுநேரம் ஆகிவிட்டது. அவரில்லாத வாழ்வு எனக்கு நரகம்தான். அவர் மட்டும் என்னை ஏன் ஏமாற்றித் தனியே சென்று விட்டார் கீர்த்தி...?" எனச் சொல்லிய மைதிலியின் கண்களின் ஓரம் கண்ணீர் வழிந்தது.

கீர்த்தி கல்லெனச் சமைந்தாள். அப்பா இறந்து விட்டாரா? என்னை விட்டுப் போய் விட்டாரா? அவளால் நம்ப முடியவில்லை. பாலாவை மட்டும் மீண்டும் ஒரு முறை பார்த்தாள்.

அவளின் பார்வையில் அவன் தலை குனிந்தான்.

அருந்ததி கீர்த்தியின் வேதனை முகம் காணச் சகியாமல், மைதிலியிடம்... "என்ன மைதிலி... கீர்த்தியின் முகத்தைப் பார். அவளுக்காகவாவது நீ வாழ வேண்டும். குழந்தை தவித்துப் போய் நிற்கிறாள். அவளுக்காகவாவது நீ பிழைத்து வர வேண்டும்..." என்று கூற,

கீர்த்தி ஒன்றும் சொல்லவில்லை. தாயையே பார்த்தபடி நின்றாள். இப்போது அவளுக்குக் கண்ணீர் வரவில்லை.

மனம் வெறுமையில் சூழ... அப்படியே நின்றாள்.

அவளுக்குத் தெரிந்து விட்டது. இனி, தன் அம்மா அதிக நேரம் உயிருடன் இருக்க மாட்டார்கள் என்று...

மகளின் இந்தக் கோலத்தைக் காணச் சகியாத மைதிலிக்கு... ஆசை ஆசையாய்ப் பாசத்தைக் கொட்டி வளர்த்த மகளை இப்படி நிராதரவாய் விட்டுப் போகிறோமே என்று மனம் கனத்தது.

ஆனாலும் தாங்கள் இப்படிச் சீக்கிரமே அவளை விட்டுப் போகப் போகிறோம் என்பதால்தான் இறைவன் பாலாவைக் காட்டியிருக்கிறார் என்று சமாதானமானவள்... கீர்த்தியை அருகில் அழைத்தாள். அவள் நின்ற இடத்திலேயே அசையாமல் நிற்க...

மைதிலி... வலிய வரவைத்த புன்னகையுடன்... "கீர்த்திடா... நீ அப்பா மேலயும் என் மேலயும் கோபமாய் இருக்கிறாய் என்று புரிகிறது. எங்க ரெண்டு பேரையும் மன்னித்துக் கொள். ஆனாலும் திருப்தியுடன்தான் போகிறோம்..." என்றபோதே அவளுக்கு மூச்சுத் திணறல் அதிகமாகியது.

அதற்கு மேல் அவள் பேச முடியவில்லை. இருந்தாலும்... திக்கித் திணறியபடி பேச ஆரம்பிக்க... தாய் படும் அவஸ்தைகளைக் காண முடியாமல்... விதிர் விதிர்த்து, கீர்த்தி அனிச்சையாகவே மைதிலி அருகில் சென்றாள்.

மைதிலி... பாலாவைப் பார்த்துத் திணறியபடி, "கீர்த்தியைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை பாலா... எங்களை விட நீங்க... எங்க கீர்த்தியை..."

இதைச் சொல்லும்போதே அவளது கண்களில் கண்ணீர் மல்கியது. மகளை விட்டுப் போகிறோமே என்றிருந்தது. பரிதவித்து நின்ற மகளை ஒருமுறை நன்றாகப் பார்த்தவளுக்கு... அவளைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது. ஆனாலும் மகள் மேலிருந்த பார்வையை வலுக் கட்டாயமாகப் பாலாவிடம் திருப்பி, "நன்றாக..." எனும்போதே அவள் உயிர் அவனைப் பார்த்த

படி பிரிந்தது. அது தன் துணையைத் தேடிச் சென்று விட்டது.

அருந்ததி தலையில் அடித்து அழ ஆரம்பிக்க... பாலா கீர்த்தியைப் பார்த்தான். அவள் மைதிலியைப் பார்த்தபடியே நின்றாள். சிறிது நேரம் பார்த்தான். அவள் அப்படியே நிற்க... அவளை உலுக்கினான். விழிகள் ஒரு நிலையிலேயே இருந்தன.

பாலா சட்டென்று கீர்த்தியைப் பிடித்து இழுத்து ராகவனைப் பார்க்கக் கூட்டிச் சென்றான். அவள் அவன் இழுத்த இழுப்பிற்கெல்லாம் வந்தாள். தன் உணர்வில் இல்லை.

ராகவனைப் பார்த்தும் அவள் அழவில்லை. இருவரையும் நினைத்துக் கோபம்தான் வந்தது. என்ன அவசரம் இவர்களுக்கு... தன்னை நினைத்துப் பார்க்காமல் போய் விட்டார்கள். இவர்களுக்காக என் வாழ்வையே தொலைத்து நிற்க, நான் இவர்களையே தஞ்சமென்று நினைத்திருக்க... என்னை விட்டுப் போய் விட்டனர். இதற்குத்தான்... என் வாழ்வில் இத்தனை போராட்டமா என்றபடியே நினைத்தவளுக்கு... உணர்வுகள் மரத்தன.

26

பாலா கீர்த்தியை அருந்ததியிடம் ஒப்படைத்து விட்டு... மேலே ஆகும் காரியங்களைப் பார்க்கச் சென்றான்.

எல்லாம் முடிந்து அவர்கள் கீர்த்தியின் வீடு வரும்போது மணி பத்து ஆகியிருந்தது. ஜெகநாதனுக்கு அவருக்குத் தாங்கக்கூடிய வகையில் புரிய வைத்தனர். குமாரும்... பாலாவும்... சிந்து பள்ளிக்குச் சென்று வீடு திரும்பும்போதுதான் அவளுக்குத் தெரிய வந்தது.

மூன்று குருவிகள் வாழ்ந்த கூடு கலைக்கப்பட்ட கோலத்தில் கீர்த்தியின் வீடு இருந்தது.

ஆம். சந்தோசத்தின் கூடாயிருந்த அந்தக் கூடு... கலைக்கப்பட்டிருந்தது. கடந்த மூன்று மாத காலமாகவே மகள் துக்கத்திலேயே உழன்றது, உழன்று கொண்டிருப்பது தெரியாமல்... அவள் நிம்மதியுடன் இருக்கிறாள். அவளுக்கு இருந்த ஒரு பிரச்சனையும் தங்களால் முடிவுக்கு வந்து விட்டது. இனி, சந்தோஷமாக இருப்பாள் என்ற எண்ணத்திலேயே அவள் பெற்றோர்... அவச் சாவாயிருந்தாலும்... நிம்மதியுடன் கண் மூடினர்.

ஒருவேளை... கீர்த்தியின் உண்மை நிலை தெரிந்திருந்தால்... மைதிலி போராடிக் கொண்டிருக்கும் உயிரைக் கணவனோடு தொலைக்காமல்... மகளுக்காக மீட்டு எடுத்திருப்பாளோ... தெரியவில்லை. பாலாவை முழுவதும் நம்பி விட்டதாலோ என்னவோ போய் விட்டாள் அவளும்.

அந்த வீட்டில்... அதன் உரிமையான எஜமானும்... எஜமானியும் கண்ணாடிப் பெட்டியில் இருக்க... அவர்களின் தேவதையோ இருந்தாள்... பேச்சின்றி! அவர்களின் மேல் நிலைத்த பார்வையில் மட்டுமாய்.

அவர்கள் மூன்று பேர் குரல்கள் மட்டுமே சங்கீத ஸ்வரங்களாய் ஒலித்த வீட்டில்.... அவர்களைத் தவிர வேறு யார் யார் குரல்களோ அபஸ்வரமாக ஒலித்தன.

துக்கத்திற்கு வந்தவர்கள்... கீர்த்தியைப் பரிதாபமாகப் பார்த்தனர்.

'எப்படி வளர்த்தனர் பெண்ணை... இப்படிப் பாதியிலேயே விட்டுப் போய் விட்டனரே...' என்று அங்கலாய்த்தனர்.

"நல்ல வேளை! மகளை ஒருவனிடம் ஒப்படைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். அந்த வகையில் புண்ணியம் செய்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் இந்தப் பெண் பாவம்..." என்றெல்லாம் பேசினார்கள்.

எல்லாம் கீர்த்தியின் காதில் விழத்தான் செய்தது.

ஆனால் பாலாவிற்குத்தான் நிற்க நேரம் இல்லை. அவன் மருத்துவ மனையில் இருந்து அருந்ததியிடம் கீர்த்தியை ஒப்படைத்ததுதான். அதன் பிறகு அவளிடம் நெருங்க முடியவில்லை. அதற்கு நேரமும் இல்லை.

பாலா... மருமகனாய்... எல்லாக் காரியமும் செய்தான் அவர்களுக்கு... குற்ற உணர்ச்சியுடன்தான்.

இரண்டு நாட்கள் ஆகியிருந்தன.

கீர்த்தி வெறித்த பார்வையுடன் தன் தாய், தந்தை இருவரும் சேர்ந்திருக்கும் புகைப்படத்தைப் பார்த்தபடியே இருந்தாள். சிந்துதான்... அவளின் அருகினிலே இருந்தாள். சிந்து என்ன சொன்னாலும் கேட்டு அதன்படி நடந்தாள். வேறு யாரின் குரலும் அவள் மனதில் எட்டவில்லை.

பாலாவின் நிலைமையோ அதை விட மோசம்... அவள் அருகில் செல்லவே அவனுக்குப் பயமாக இருந்தது. அவளின் கோபம் தெரிந்தவன் அவன். அவள் ஏற்கெனவே துக்கத்தில் இருக்கும்போது இவன் மேல் எப்படிப் பாய்வாள் என்றே தெரியவில்லை. இல்லை, என்ன உளறுவாள் என்றே அனு மானிக்க முடியவில்லை.

ராகவன் - மைதிலி தன்னைப் பார்க்க வந்தபோது என்ன நினைத்தோம்... இப்போது என்ன நடந்து கொண் டிருக்கிறது...

அது மட்டும் காரணம் இல்லை. அவளுக்கு இவன் போய் என்ன ஆறுதல் கூறுவான்...

'நான் உனக்காக இருக்கும்போது நீ ஏன் கவலைப் படுகிறாய்?' என்றா கூற முடியும்? இதை அவனால் சொல்ல முடியாது எனும்போது, அவளிடம் போய் வேறு என்ன சொல்ல முடியும்? இந்தக் காரணத்திற்காகவே அவன் அவள் அருகினில் போகவில்லை.

அருந்ததியின் முறைப்பில்... பேசச் சொல்லியும் கூட அவன் போகவில்லை. அவனுக்குக் கீர்த்தியிடம் பொய்யான வார்த்தைகள் பேச விருப்பம் இல்லை.

பிள்ளையார் பிடிக்கக் குரங்காகப் போன கதைதான் அவனின் நிலை. இனி என்ன செய்வது? கீர்த்தியின் வருங் காலத்தை நினைத்தாலே தலை சுற்றியது அவனுக்கு. ஆனாலும் அவள் வருங்காலத்தைத் தன்னோடு இணைக்கும் முடிவை மட்டும் அவனால் எடுக்க முடியவில்லை.

வினோத் வேறு வருவதாகச் சொல்ல.... பாலாவின் மனம் பலவற்றை நினைத்தது.

தாங்கள் பொய்யான திருமண விபரங்களை எல்லாம் வினோத்திடம் சொல்லி விட வேண்டும்... என்ன ஆனாலும்... என்ன நடந்தாலும்... யார் என்ன சொன்னாலும் இனியும் இந்தப் பொய்யான பந்தத்தைத் தொடர அவன் விரும்ப வில்லை. வினோத்திடம் கீர்த்தியைச் சேர்த்து விடுவோம். இதுதான் அப்போதைக்கு நல்ல முடிவாகத் தோன்றியது.

வினோத் கண்டிப்பாகக் கீர்த்தியை ஏற்றுக் கொள்வான் என்று முற்றிலுமாக எண்ணினான்.

இது ஏற்கெனவே அவன் நினைத்திருந்ததுதான். ஆனால், இப்போது அதைச் செயல்படுத்த நினைத்தான்.

அவன் மனம் கீர்த்தியை மனைவியாக நினைக்க வில்லை என்பதால்தான் அவன் இவ்வாறெல்லாம் சிந்தித் தான். அவனைப் பொறுத்தவரை... இது பொய்யான திருமணம். இந்த அளவில்தான் இருந்தது. அவள் தான் தாலி கட்டிய மனைவி என்ற நினைவு இருந்தால் அவளை இன்னொருத்தனிடம் ஒப்படைக்கும் கேவலமான முடிவை அவன் எடுத்திருப்பானா?

இப்படியே இரண்டு நாட்களும் போய் இருந்தன.

அடுத்த நாள் காலை... விஸ்வம், மோகனா, வினோத் மூவரும் கீர்த்தியின் வீட்டில் நுழைந்தனர். விஸ்வம், மோகனாவிற்குக் கீர்த்தியைப் பார்க்க முடியவில்லை. வாசலிலே அழத் தொடங்க... வினோத் தான் கீர்த்தியின் அருகில் அவர்களைக் கூட்டி வந்தான். அவர்கள் நுழைந்த வுடனே அனுமானித்தனர். அவர்கள்தான் கீர்த்தி சொல்லும் வினோத் குடும்பம் என்று.

மைதிலியிடம் பேசியதுதான் கீர்த்தி... வேறு யாரிடமும் பேசவில்லை.

ஆனால், வினோத், விஸ்வம் மற்றும் மோகனா வந்தவுடன் தன் பார்வையை விலக்கி மூவரையும் பார்த்து முறைத்தாள்.

"நான் சொன்னேன்ல... நீங்க யு.எஸ். போக வேண்டாம் என்று. கேட்டீர்களா! இப்போ பாருங்க. நான் அனாதையா நிற்கிறேன். நீங்க இங்க இருந்திருந்தால் எல்லாம் ஒழுங்காக இருந்திருக்கும். அப்போ கேட்காமல் போய் விட்டு இப்போ மட்டும் ஏன் வந்தீர்கள்? என்னைப் பார்க்கவா வந்தீர்கள்? நான் சொன்னதைக் கேட்காமல் அன்று நீங்கள் போனீர்கள். என் அப்பா என்னிடம் சொல் லாமலே போய் விட்டார். அம்மா என்னை விட்டுப் போவ தற்குக் கூட வருத்தப்படாமல் போய் விட்டார்கள். ஆக மொத்தம், எனக்காக யாரும் இல்லை. இப்போ மட்டும் ஏன் வந்தீர்கள்? இங்கு உங்கள் தங்கையும் இல்லை. உங்கள் நண்பரும் இல்லை..." என அவர்களைப் பார்த்து ஆவேச மாகக் கத்த ஆரம்பித்தாள்.

வினோத் அதிர்ந்து விட்டான்.

"கீர்த்திடா... என்னடா ஆச்சு உனக்கு... ஏன் இப்படி யெல்லாம் பேசுகிறாய்?" என்றவன்... பாலாவை அப்போது தான் பார்த்தான்.

திருமணப் போட்டோவில் பார்த்திருக்கிறான். அவ்வளவு தான்.

பாலாவின் அருகில் வந்து, "பாலா... எப்படி நடந்தது?" என்றெல்லாம் கேட்டபடி அவனின் அருகில் அமர்ந்தான், தலையில் கை வைத்தபடி.

கீர்த்தி இப்போது பேசிக் கொண்டே இருந்தாள்.

"நான் தப்புப் பண்ணி விட்டேன். நான் திருமணம் செய்திருக்கக் கூடாது. அதனால்தான்... என்னை விட்டு என் அம்மா... அப்பா போய் விட்டார்கள்!" - புலம்பியவள்... அழவில்லை. ஒரே வார்த்தையைப் புலம்பிக் கொண்டே இருந்தாள்.

மோகனாவிடம் அருந்ததி, 'கீர்த்தி அழவே இல்லை யென்றும்... அவர்களைப் பார்த்த பிறகுதான் பேசவே செய்கிறாள்...' என்றும் கூற, மூவரும் அதிர்ந்தனர்.

மோகனாவும், விஸ்வமும் எவ்வளவோ பேச, அவள் நிறுத்தவே இல்லை. சொன்னதையே சொல்லிக் கொண் டிருக்க...

வினோத் பாலாவை வந்ததில் இருந்தே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கீர்த்தியின் அருகில் செல்லவே இல்லை என்பதை உணர்ந்து...

'என்ன மனிதன் இவன்... கீர்த்தி இவ்வளவு துக்கத்தில் இருக்கிறாள். ஒரு காதல் கணவனாக நடந்து கொள் ளாமல்.... எனக்கென்ன என்று இருக்கிறான்...' என்று தோன்றியது.

வினோத் கீர்த்தியிடம் ஆறுதலாகப் பேசப் போக....

விரக்தியாய் அவனைப் பார்த்துச் சிரித்தாள். பின் எள்ளலாக, "ஏன்டா வினோத்... என்னிடம் இப்படிப் பேசு கிறாய்? என்னைப் பார்த்தாலே பரிதாபமாக இருக்கிறதா...?

நீ என்னிடம் இப்படிப் பேச மாட்டாயே?" என்று அவனிடம் எதிர்க் கேள்வி கேட்டவளைப் பார்த்து, வேதனை தாளாமல் அழ ஆரம்பித்தான் வினோத்.

அங்கிருந்த யாருக்கும் எதுவும் செய்யத் தோன்றாமல்... கீர்த்தியின் நிலைமையைப் பார்த்து உறைந்திருக்க...

சிந்து மட்டும்... நடந்ததை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தவள்... கீர்த்தியின் இந்த நிலை நெஞ்சை அறுத்தது.

என்ன நினைத்தாளோ, தெரியவில்லை. யாருமே எதிர்பார்க்காத வேளையில் பாலாவின் அருகில் சென்றாள்.

"அண்ணா, அக்கா அழவே மாட்டேங்கிறாங்க. இப்படியே விட்டால் டிப்ரஷன் ஆகி விடுவார்களாம். எனக்குப் பயமாய் இருக்கிறது. நீங்களும் இப்படியே உட்கார்ந்திருந்தால் என்ன அர்த்தம்... நீங்கதான் அவங்களுக்கு ஆறுதலாய் இருக்க வேண்டும். வாங்க..." என்று அவனை இழுத்தவள், கீர்த்தியின் அருகில் விட்டாள்.

இதற்கு மேல் அமைதியாக இருந்தால்... சரிப்படாது. கீர்த்தி என்ன சொன்னாலும்.. என்ன செய்தாலும்... என்று நினைத்த பாலா, கீர்த்தியின் முன் மண்டியிட்டு அமர்ந்து, "கீர்த்தி..." என்று மெதுவாய் அழைக்க...

கீர்த்தியின் கண்கள்... பாலாவின் கண்களோடு கலந்தன.

அவனின் பார்வையில் அவள் தன்னை மறந்தாள். அவனது பார்வை அவளை நெகிழச் செய்தது. அவனின் பார்வையில் இருந்தது, பரிதாபமா... ஆறுதலா... தெரியவில்லை. ஆனால், அவன் பார்வை மட்டுமே அவளுக்குப் போதுமானதாக இருந்தது. அந்தப் பார்வை அவளைக் கரைய வைத்தது.

ஏற்கெனவே தன்னை மறந்திருந்தாள் அவள். இப்போது... அவளின் அடி மனதில் இருந்த அவனின் உறவும்... அவன் மீதான உரிமையும் மட்டுமே அவளையும், அவள் மனதையும் ஆட்கொண்டது. அதன் விளைவு....

அவன் மட்டுமே தன் உறவென்ற நிலையில்... தன் கணவனென்ற உரிமையில்... அவனின் மடியில் தலை சாய்ந்தாள் கீர்த்தி. அவன் மடி சாய்ந்தவள்... சாய்ந்த நொடியில் வெடித்தாள். கதறினாள்.

பாலா சத்தியமாய் இதை எதிர்பார்க்கவில்லை. தன் ஒரு வார்த்தையில் இப்படிக் கரைந்து விடுவாள் என்று... கோபமாய் ஏதாவது பேசுவாள் என்றுதான் நினைத்திருந்தான். தன்னைத் திட்டியாவது துக்கத்தினைக் குறைப்பாள் என்று நினைக்க... கீர்த்தியோ அவன் மடியில் விழுந்து கதறிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் அவளை அழ விட்டவன்... மெதுவாக அவளைத் தூக்க... அவன் சட்டையைப் பிடித்தவள்... அவனை நேருக்கு நேராகப் பார்த்து...

"நான் ஏன்டா... உன் ஆபீசில் சேர்ந்தேன்... உன்னைப் பார்த்தேன். உன்னைத் திருமணம் செய்தேன். உன்னால்தான் என் அம்மா அப்பா போய் விட்டார்கள். உன்னாலதான்..." என்று அவனை உலுக்கினாள். கன்னங்களில் கண்ணீர் வழிய...

அனைவரும் அதிர்ந்து நோக்க... பாலா உட்பட.

அவள் எதையும் உணராமல்... இப்போது ஆவேசத்தை விட்டு விட்டு... அவனையும் விட்டாள்.

குரல் கம்மியது. வார்த்தைகள் குழறின. ஏதோ தப்பு செய்து விட்டதைப் போல்... அவனிடம் வார்த்தைகளை விட்டாள்.

"அவங்களை விட.... அவங்க பாசத்தை விட... உன் மேல எனக்கு ஏன் காதல் வந்தது...? அவர்களை விட நீ நனறாகப் பார்த்துக் கொள்வாய் என்று நம்பியதால்தான் என்னை விட்டுப் போய் விட்டார்கள். நீ ஏன்டா என் வாழ்வில் வந்தாய்?" என்று புலம்பியவள்...

மேலே பேச ஆரம்பிக்கும் முன், அருந்ததி அவளை அறைக்குள் அழைத்துச் செல்லும்படி பாலாவிடம் கூற....

'கீர்த்தி தன்னைக் காதலிக்கிறாளா...?' என்ற நினைவில் திகைப்பின் உச்சத்தில் இருந்தான் பாலா.

அதன் பிறகு... நல்ல வேளை. வெளியே எதுவும் கேட்காதவாறு அறைக்குள் வந்தான் பாலா. அதன் பின் கீர்த்தி புலம்பின புலம்பல்கள் எல்லாம் கடந்த மூன்று மாதமாய் அவள் மனதில் சுமந்த சுமைகளைத்தான். பாலாவின் மேல் உள்ள காதல் உட்பட. ஒரு கட்டத்தில் அழுதழுது... பேசிப் பேசி... மயங்கினாள் கீர்த்தி.

மயங்கிய அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் பாலா.

வெளியே வினோத் உட்பட மற்றவர்கள் அருந்ததி தவிர... பாலாவைப் பெருமையாக நினைத்தனர். கணவனிடம் மட்டுமே கீர்த்தி மனம் திறந்திருக்கிறாள். இப்படி ஒரு கணவன் இருக்கும்போத... அவன் மேல் உள்ள காதலே போதும். அவள் தன் தாய் தந்தையைச் சீக்கிரம் மறந்து விடுவாள் என...

அருந்ததிக்குத்தான் ஒன்றும் புரியவில்லை. இனி பாலா என்ன முடிவெடுக்கப் போகிறானோ என்று.

அறையில் இருந்து வெளியே வந்த பாலா... தன் அம்மாவிடம், "அம்மா, அவ அழுதழுது மயங்கிட்டா. போய்ப் பாருங்கள்..." என்றபடி வேகமாக வெளியேறியவன்... காரை எடுத்துக் கொண்டு கடற்கரைச் சாலையில் பயணித்தான்.

27

தன் காரை விட்டு இறங்கவில்லை பாலா. தன்னைப் பற்றி.. இனி, தன் வாழ்க்கையைப் பற்றி முக்கியமான முடிவெடுக்கும் நிலையில் இருந்தான். ஒரு புறம் கீர்த்தி... மறுபுறம் மது... மதுபாலா. அவளை நினைக்கும்போதே அவன் காதல் மனம் அவளை மறக்க முடியாமல்... அவளின் நினைவுகளை அவனுக்கு மேலும் மேலும் நினைவூட்டியது.

கீர்த்தியின் மனதில் தான் இருக்கிறோம் என்ற நினைவே அவனை நாராய்க் கிழித்தது. எப்படி... எந்த ஒரு நிமிடத்திலும் அவளிடம் நிதானம் இழந்து பழகவில்லை. கண்ணாடிப் பொருளைக் கையாள்வது போலத்தானே அவளுடன் தன் உறவைக் கையாண்டான். எங்கு தவறு நடந்தது... அவனால் தீர்மானிக்க முடியவில்லை. கீர்த்தியும் மிகவும் கவனமாகத்தான் நடந்திருக்கிறாள். அவளது காதல் அவனுக்குத் தெரியாமலே என்று நினைக்கும்போதே அவனது மனச்சாட்சி... 'உன் கண்ணில் படவில்லை என்று சொல்லாதே. நீ உணரவில்லை என்று சொல்...' என்றது.

அவள் தன்னைக் கணவனாய்த்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாள்... என்பது புரிந்தது. அதன் மரியாதையை அவள் இன்று அனைவரின் முன்னிலையில் தன் உணர்வை மறந்த நிலையில் நிரூபித்து விட்டாள். அவள் உணர்வுகளில் கலந்தவள் அவன் ஒருவன்தான் என்பதை... அதை நினைக்கும் போதே அதன் தகுதி தனக்கிருக்கிறதா என்று கூட நினைத்தான். அவள் கழுத்தில் தாலி கட்டும் போது கூட அவன் மதுவைத்தான் நினைத்துக் கொண்டிருந்தான்.

ஏன்... அவள் தன் மேல் விழுந்து கதறும்வரை அவள் தன் மனைவி... தான் அவள் கணவன் என்ற நினைவு இல்லை. ஆனால் அவளோ யாராலும் சமாதானப்படுத்த முடியாத இழப்பை என் ஒரு வார்த்தையில்... ஒரு பார்வையில் இறக்கி வைத்து விட்டாள் என்றால் எந்த அளவு தன்னை நேசிக்கிறாள் என்று புரிந்தது. தான் அவளின் கணவன்

என்று நினைக்கும் அவள்... வாழ்நாள் முழுவதும் தன் நினைவுகளுடன் மட்டும் வாழத் தயாராகி விட்டாள் என்றே அவனுக்குத் தோன்றியது. மெல்ல மெல்ல அவன் மனதில் கீர்த்தியின் நினைவுகளை அசை போட்டான்.

அவளின் நேர்முகத் தேர்வில்தான் அவளை முதன் முதலில் பார்த்தது... (அப்படித்தான் அவன் அப்போது நினைத்திருந்தான்.) கீர்த்தனா என்ற பெயரில் பெரிதாக அவன் பாதிக்கப்படவில்லை அப்போது. கீர்த்தி என்று கார்த்திக் அழைத்த போதுதான்... அவளது பெயரின் சுருக்கத்தில் கீர்த்திகாவை நினைவு கூர்ந்தான். அதற்கு முன் திறமையான பெண் என்ற அளவில்தான் தெரியும். அவளின் பதவி உயர்வுக்குப் பின் அவளிடம் நேரடியாகப் பழகச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் பிறகு அவள் பெற்றோரின் மேல் அவளுக்கு இருந்த பாசம் தெரிந்தது.

அவளுடன் திருமணமானபின் அவளின் பிடிவாதம்... தன்மானம்... கோபத்தினை உணர்ந்தான். சிந்துவுடன் அவள் பழகும் விதத்தில் அவளின் கனிவு கொண்ட மனத்தை உணர்ந்தான். இதில் எங்கேயும் அவளின் காதலை அவன் உணரவில்லை. அவள் உணரும்படி நடக்கவில்லை. இதோ இன்று அதையும் உணரச் செய்து விட்டாள் தன் மனைவி.

தன் மனைவி என்று அவன் மனம் எப்போது உணர ஆரம்பித்ததோ... அந்த நிமிடம்தான், இனித் தன் வாழ்க்கை கீர்த்தி... கீர்த்தியுடன் மட்டும்தான் என்பதைத் தீர்மானித்தான் பாலா.

இனி, தன் வாழ்க்கையில் மதுவிற்கு இடம் இல்லை என்பதனை உணர்ந்தான். யாருக்காகக் கீர்த்தியை நிர்பந்தித்தானோ... அவளின் நினைவுகளை அடி மனதில் புதைக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளானான் பாலா. பாலா உயிருடன் உள்ளவரை மதுவை... அவள் காதலை மறக்க முடியாது. அதை மறுக்கவும் முடியாது. முதல் காதல்...

அவ்வளவு சீக்கிரம் மறக்க முடியுமா என்ன... ஆனால் அந்த உண்மையான காதலினாலே கீர்த்தியின் காதல் அவனுக்குக் கிடைத்தது என்பதுதான் உண்மை. முடிவு செய்தான். தன் முதல் காதலினால் கிடைத்த தன் மனைவியின் காதலை வளர்க்க முடிவு செய்தான். இது அவன் இறுதிவரை வர... அவன் மனது வைத்தால் மட்டுமே முடியும். ஆக, தான் மதுவின் மேல் கொண்ட காதல்தான்... தானும் கீர்த்தியும் இனி வாழப் போகும் வாழ்க்கைக்கு அடிப்படை.

மது... அவள் காதல் எவ்வளவு உண்மையோ... அந்த அளவிற்குக் கீர்த்தி தன் வாழ்வில் வர மதுவும்... அவள் காதலும் காரணம் என்பது உண்மை.

தெளிவாகச் சிந்திக்க ஆரம்பித்தான் பாலா. எப்போதும் அவன் தெளிவான சிந்தனை கொண்டவன்தான். கீர்த்தி விசயத்தில் கூட எந்த ஒரு இடத்திலும் அவன் தடுமாற வில்லை. சரியாகத்தான் போய்க் கொண்டிருந்தான்.

இனி... நீண்ட பெருமூச்சை இழுத்தவன்... மதுவை மறக்க முயற்சிக்காமல்... கீர்த்தியை நினைக்க ஆரம்பித்தான். கீர்த்தியின் மேல் இருந்த தன் கண்ணோட்டத்தை மாற்ற முயற்சி செய்தான். தன் மனைவி என்ற அவளின் உறவை, அவளின் உரிமையை அவளிடத்தில் உணர ஆரம்பித் தவன்... தான் அவளின் கணவன் என்ற உரிமையை... தன் உறவை அவளிடத்தில் நிலை நாட்டவும் முடிவு செய்தான்.

பாலா... என்பவன் இனி கீர்த்தியின் கணவன். அதை மட்டும் மனதில் நிறுத்தினான். எது வந்தாலும்... மதுவே வந்தாலும்... அவன் கீர்த்திக்காக மட்டுமே. இதைக் கீர்த்தி ஏற்காவிட்டாலும்... அவள் வாழ்வு இனி பாலாவுடன்தான். அவனுக்குத் தெரியும், கீர்த்தி ஒன்றும் இவன் கூப்பிட்டவுடன் ஓடோடி வந்து வாழப் போவதில்லை. இன்று அவள் மனம் புரிந்த போதிலும்... அவள் தன் உணர்வுடன்... மனப்பூர்வ மாக அவளை ஏற்றுக் கொள்ளும்வரை போராடத்தான்

வேண்டும். அதில் கண்டிப்பாக வெற்றி அடைவேன்... என்று தனக்குள்ளாக உறுதி செய்து... அதன் முதல் படியாக... அவளுக்கும் தனக்கும் உள்ள முடிச்சான அவள் தந்தையின் கடன் தொகை திரும்பக் கிடைத்ததை மறைத்தான். அது அவளுக்குத் தெரியும்வரை தன்னை விட்டு எங்கும் போகாமல் இருக்க... அந்தப் பணம்தான் அவனுக்கு இருக்கும் ஒரே துருப்புச் சீட்டு.

பலவாறாக முடிவு செய்தவன்... கீர்த்தி வீட்டிற்குச் செல்லாமல் தன் வீட்டிற்கு வந்தான். தான் எடுத்த முடிவின் உறுதியை அறிய அவனுக்குத் தனிமை தேவைப்பட்டது.

கீர்த்தி எழுந்தபோது பாலாவைத் தவிர அனைவரும் இருந்தனர். அவள் கண்கள் பாலாவைத் தேடியதை அனைவரும் உணர்ந்தனர். அருந்ததிக்குத் தன் மகன் வேறு வேலையாகச் சென்றானே என்றிருந்தது. ஆனால், கட்டாயம்... கீர்த்தியின் அழுகையில் அவன் மனம் யோசிக்க ஆரம்பிக்கும் என நினைத்தாள்.

கீர்த்திக்குப் பாலாவிடம் என்ன பேசினோம்... புலம்பினோம் என்றெல்லாம் நினைவில் இல்லை. ஆனால் அவனின் மேல் விழுந்துதான் அழுதோம் என்றளவில்தான் ஞாபகம் இருந்தது. அவன் என்ன நினைத்திருப்பானோ என்று மருக ஆரம்பித்தாள்.

ஆனால், மறுநாள் பாலா வந்தபோது, அவளுடன் எப்போதும் போல் பேச... பழக... ஓரளவு தெளிந்தாள். அவன் தப்பாக நினைக்கவில்லை என்று தவறாக அனுமானித்தாள். பாலா தன் மனைவியை அவள் அறியாமல் கவனித்து... அவளின் மேல் தன் காதலை வளர்த்துக் கொண்டிருப்பதை... அவன் மனைவி உணரவில்லை.

வினோத்... அன்று கிளம்பும் நாள். மூன்று நாட்களே அவர்கள் இருக்கும்படி வந்தனர். அது மட்டுமில்லாமல்... இன்னும் மூன்று மாதங்களில் இங்கேயே செட்டில் ஆக

போவதால் அதற்கான வேலைகளை வேறு முடிக்க வேண்டும். அதனால் மூவரும் கிளம்ப வேண்டிய நிலை. மோகனா கூட அங்கு அவர்களுடன் போக வேண்டிய நிலை. வினோத் கீர்த்தியுடன் எப்போதும் பேசுவது போல் எல்லாம் பேச முடியவில்லை. இன்னும் கீர்த்தி தெளிவில்லாமல்தான் இருந்தாள். அதனால் அவளுக்கு அறிவுரைகள்... அதுவும் குறைவாகத்தான் கூறினான்.

இது மட்டும் பழைய கீர்த்தியாக இருந்தால்... அவளை வம்பிழுக்கவே அவனுக்கு நேரம் இருந்திருக்காது. மோகனாவும், விஸ்வமும்... ராகவன், மைதிலி நினைவிலிருந்து வெளி வராமல் போராடிக் கொண்டிருந்தனர். அருந்ததியிடம் கீர்த்தியைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறி விட்டுக் கிளம்பினர். மோகனா மட்டும் அருந்ததியிடம் ஒரு மாதம் முடியும்வரை வீட்டில் யாராவது இருந்து விளக் கேற்றும்படி கேட்டுக் கொண்டாள்.

வினோத், பாலாவிடம் கீர்த்தியைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்ல... பாலா சற்று எரிச்சலானதுதான் உண்மை.

'என் பொண்டாட்டியை நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா... பெரிதாய் சீன் போடுகிறான். அவள்தான் உன்னை விட நான்தான் முக்கியம் என்று சொல்லாமல் சொல்லி விட்டாளே....' என்று மனதினுள்ளே வினோத்தின் மேல் புகைந்தான். காதல் வந்தபோதே பொறாமையும் வந்து விட்டதோ என்று அவனுக்கே தோன்றியது.

வினோத் - கீர்த்தி சாதாரணமாகப் பேசிப் பார்க்க வில்லை பாலா. இதற்கே தன்னை விட அவள் மேல் உரிமை எடுத்துப் பேசுவது போல் தோன்றி வினோத்தின் மேல் எரிச்சல் பட்டான் பாலா.

சிந்து அவள் அம்மாவுடன் கீர்த்தியின் வீட்டிலேயே தங்கினாள். கீர்த்தியின் தனிமையைச் சிந்து மட்டுமே

போக்கினாள். அவளுக்குக் கீர்த்தி வீட்டிலிருந்து பள்ளி இருப்பது தொலைவுதான் என்றாலும், ஒரு மாதத்திற்கு மட்டும் என்பதால் பெரிதாய்த் தெரியவில்லை. பாலாவும் கீர்த்தியுடனே தங்கினான். எப்போதும் போலவே பழகி வந்தான்.

ராகவன் - மைதிலி இறந்து அன்றுடன் ஒரு மாதம் ஆகியிருந்தது.

அன்று அவர்களுக்கு ஐயர் வந்து பூசை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எல்லாம் முடித்து அனைவரும் பாலாவின் வீட்டிற்கு வந்தனர்.

ராகவன் - மைதிலி இருந்த மைலாப்பூர் வீட்டைக் காலை, மாலை சுத்தம் செய்ய ஒரு வேலையாளையும் நியமித்து விட்டுத்தான் கிளம்பினான். கீர்த்திக்குத்தான் மனதே வரவில்லை அங்கிருந்து வர... எப்படி இருந்த வீடு... இப்படி விளக்கேற்றக் கூட ஆளில்லாமல் போய் விட்டதே என்று உள்ளுக்குள் குமுறினாள்.

அவள் மனதில் அவர்களின் நினைவே ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. கீழே இறங்கி காரினுள் ஏறப் போனவள்... வழக்கம் போல அவர்கள் பால்கனியைப் பார்த்தாள். எப்போதும் அங்கு நிற்கும் மைதிலி இன்று இல்லை. அப்படியே நின்றாள். அவளையே அவளுக்குத் தெரியாமல் கவனித்துக் கொண்டிருந்த பாலாவிற்கு அவனது பார்வையிலிருந்து இது தப்பவில்லை.

"கீர்த்தி..." என்று அதட்டலாகக் கூப்பிட,

அவனின் அதட்டலில் வேகமாகக் காரினுள் அமர்ந்தாள் கீர்த்தி.

காரை ஓட்டிக் கொண்டே... கீர்த்தியையும் ஓரப் பார்வை பார்த்துக் கொண்டே வந்தான் பாலா.

அவன் வழக்கம் போல் கட்டிலில் உறங்க... கீர்த்தி கீழே படுக்கும் முறையும் தொடர்ந்தது. திங்கட்கிழமை முதல்

அலுவலகம் செல்ல முடிவெடுத்திருந்தாள் கீர்த்தி. அதை அருந்ததியிடமும் பாலாவிடமும் சொல்லி விட்டாள். அவளுக்கும் வீட்டிலிருந்தது போர் அடித்தது. அது மட்டுமில்லாமல்... தனியாக இருக்கும்போது தாய் - தந்தையை நினைத்துப் பைத்தியமே பிடித்து விடும் போல் இருந்தது. தன் கவனத்தை வேறு எதிலாவது புகுத்த வேண்டும் என்பதற்காகவே அலுவலகம் செல்ல முடிவு செய்தாள்.

சிந்துவும் மாலையில் மட்டுமே அவளுடன் இருக்க முடிந்தது. விஸ்வம் - மோகனா... அடிக்கடி கால் செய்தனர். வினோத் ஒரு நாளில் மூன்று முறை போன் செய்து விசாரித்துக் கொண்டிருந்தான். விஸ்வநாதன்... அருந்ததி... அவளைத் தன் மகள் போல் பார்க்க...

முதல் நாள் அலுவலகம் சென்று வந்தாள். அனைவரும் துக்கம் விசாரிப்பது என்ற முறையில் இன்னும் அவளைத் துக்கப்படுத்தவே செய்தனர். ஆனால், அது தவிர்க்க முடியாது என்பதால்... முடிந்த அளவு சமாளித்தவள்... மூன்று மணிக்கு மேல் பாலாவிடம் சொல்லி விட்டுக் கிளம்பப் போக... பாலாவே அவளை வீட்டில் கொண்டு வந்து விட்டான்.

அதற்கடுத்த நாள்... கீர்த்தனாவிற்கு இயல்பாகவே சென்றது. மாலையில் பாலா வந்து அழைக்கும் போதே கிளம்பினாள்.

காரில் ஏறிய கீர்த்தனாவை ஒரு முறை நன்றாகப் பார்த்த பாலா... அன்றே அவளிடம் தன் மனதைத் திறக்க முடிவு செய்தான்.

அந்த எண்ணத்தின் முடிவால்... கோவிலில் காரை நிறுத்தியிருந்தான். தன் மனதினைத் திறக்க... கோவிலைத் தவிர வேறு இடம் பொருத்தமாக இருக்காது என்பதே அவன் எண்ணமாக இருந்தது.

"கீர்த்தனா!"

'ஏன் வீட்டிற்குப் போகாமல் இங்கு நிறுத்தியிருக் கிறான்...' என்ற சிந்தனையுடன் இறங்கினாள் கீர்த்தி. ஆனால் ஒன்றும் கேட்காமல் அவன் பின்னே சென்றாள்.

அவளிடம் பேசியதற்கு முன் கடவுளை மனதார வேண்டினான் பாலா. எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டும். கீர்த்தனா தன் மனதைப் புரிந்து கொள்ள வேண்டும். மது நல்லபடியாகத் திரும்பக் கிடைக்க வேண்டும்... கீர்த்தனாவுடன் தனது வாழ்வைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் வேண்டியவன்..

பிராகாரத்தைச் சுற்றி விட்டுக் கீர்த்தியுடன் ஒரு ஓரமான இடத்தில் அமர்ந்தான்.

அவனின் எண்ண ஓட்டமெல்லாம் அறிய இயலாத வளாய்... ஏதோ பெயருக்குச் சாமியைக் கும்பிட்டவள்... அவனது அருகில் உட்கார்ந்தாள்.

பாலா கீர்த்தியைப் பார்த்தான். இந்த ஒரு மாத காலமாய்க் கீர்த்தி மீது அவன் கொண்ட காதலை.... இன்னும் அவள் பார்க்கக் கண்ணில் கொண்டு வரவில்லை. கவன மாக மறைக்கப் பழகியிருந்தான். இப்போதும் அப்படியே பார்த்தான். அவனது பார்வையில் கீர்த்தி... ஒரு மில்லி மீட்டர் புன்னகை மட்டும் புரிந்தாள்.

அவன் ஏதோ சொல்ல வருகிறான் என்பதும் புரிய....

"என்ன பாலா?" என்று கேட்டாள்.

"உன்னிடம் பேச வேண்டும்... அதற்குத்தான் இங்கு கூட்டி வந்தேன்..." எனத் தயங்க....

கீர்த்தியோ, "என்ன அறிவுரையா...! ஹையோ பாலா.... போதும் போதும் என்கிற அளவுக்குக் கேட்டாயிற்று. அத்தை... மாமா... வினோத்... விஸ்வம் மாமா... மோகனா அத்தை... அது மட்டுமில்லாமல்... இந்த வாலு சிந்து... அவ கூட எனக்குச் சொல்லிட்டா... நீங்க ஒருத்தர்தான் லிஸ்ட்ல

இல்லை. நீங்களும் இன்னைக்கா...!" என்று தன் பேச்சில் தான் ஓரளவு தேறி விட்டதை உணர்த்த...

பாலாவும் தெளிவானான்.

"ப்ச்ச்..." என்றவன்... "நான் சொல்லப் போவதை நான் முடிக்கும் வரையில் கேட்க வேண்டும். இடையில் பேசக் கூடாது. இந்த இடத்தை விட்டும் நகரக் கூடாது. இது என் மேல் சத்தியம்!" என்று பீடிகையுடன் பேச ஆரம்பித்தான்.

'என்ன... சார் ரொம்ப பீடிகை போடறார். சரி, பார்க்கலாம். என்னதான் சொல்ல வருகிறான்...' என்று நினைத்தவள்,

"என்ன பாலா... சத்தியம் என்று பெரிய வார்த்தை யெல்லாம் பேசுகிறீர்கள். நீங்க என் காதுல ரத்தம் வருகிற அளவிற்கு அட்வைஸ் பண்ணினால் கூட இந்த இடத்தை விட்டு நகரவோ... போகவோ மாட்டேன். போதுமா?" என்றபடி, அவன் சொல்வதைக் கேட்கத் தயாரானாள் கீர்த்தி.

ஆனால், பாலாவோ அதற்கெல்லாம் அசராமல் தன் கையை அவள் புறம் சத்தியத்திற்காக நீட்ட... முறைத்தாள் கீர்த்தி.

"ப்ளீஸ்... எனக்காக!" என்று பாலா கெஞ்ச....

நீட்டிய அவனது கையில் தனது கையை வைத்தாள் கீர்த்தி.

அவள் எடுப்பதற்கு முன் தன் இன்னொரு கையை அவளின் கரம் மேல் வைத்து அழுத்தமாகப் பற்ற... திகைத்து அவனைப் பார்த்தாள் கீர்த்தி.

அந்தப் பார்வையில்... சத்தியமாகக் கீர்த்தியால் ஒரு வினாடிக்கும் மேல் அவனைப் பார்க்க முடியவில்லை. சட்டென்று பார்வையைத் தாழ்த்தியவள்... தன் கரத்தை விடுவிக்கப் போராட... பாலாவும் அவளைப் பார்த்தபடியே விட்டான்.

'என்னாயிற்று இவனுக்கு... இது என்ன பார்வை? நம்மால் அவனைத் திருப்பிப் பார்க்கக் கூட முடியவில்லை. இப்படி எல்லாம் ஊடுருவும் பார்வை பார்க்க மாட்டானே... அவளால் நம்ப முடியவில்லை. நமக்குத்தான் தப்பாகத் தோன்றுகிறதோ...?' என்று நினைத்தவள்... சரி. இப்போது பார்ப்போம்... என்று மறுபடியும் அவனைப் பார்க்க முடிவு செய்தவள்... அவனின் எக்ஸ்-ரே பார்வையில்... சட்டென்று திரும்பி வேறு திசையில் பார்க்க ஆரம்பித்தாள்.

அவன் பார்வை... அவளுக்குள் மின்சாரம் பாய்ந்தது போல் இருக்க... உடலில் நடுக்கமே வந்து விட்டது.

"ம்க்கும்..." என்ற செருமலில்... அவனைப் பார்த்தவள்... பார்த்த நானோ-செகண்டில் தலை கவிழ்ந்தாள்.

'என்னையே பார்க்கவும் வேண்டும் என்றும் சத்தியம் கேட்டிருக்க வேண்டும்...' என்று மனதிற்குள் நினைத்தபடி, "கீர்த்தி...." என்றான், இதுவரை இல்லாத குரலில்.

அவனின் குரல் மாற்றமே அவளை என்னவோ செய்தது.

"கீர்த்தி... நான்..." என்று ஆரம்பித்தவன்... "நாம்..." என்று மாற்றியவன்.... ஒன்றும் சொல்ல இயலாமல் தடுமாற...

அவனின் தடுமாற்றத்தில் அவனை நிமிர்ந்து பார்த்தாள் கீர்த்தி.

அவளின் நேரான பார்வையில் பாலாவும் தெளிந்தான்.

"கீர்த்தி... நான் சொல்வது உனக்குப் பிடிக்காமல் கூட இருக்கலாம். ஆனால், சொல்லித்தான் ஆக வேண்டும். ஐ லவ் யூ..." என்றான் பட்டென்று.

கீர்த்தி அதிர்ந்து அவனைப் பார்த்து ஏதோ பேசப் போக...

"ஹேய்... ஏதும் பேசிடாதே. உன் புருசன் மேல சத்தியம் பண்ணியிருக்கிறாய். அவன் வைஃப் கீர்த்தனா கூட..." கீர்த்தனா என்ற இடத்தில் அழுத்தம் கொடுத்தவன், "நீண்ட நாள் வாழணும். பார்த்தும்மா. எல்லாம் உன் கையிலதான் இருக்கு..." என்று அவசரமாகப் பேச,

கீர்த்தி வாய்டைத்துப் போனாள்.

அதன் பிறகு அவன் தன் மனதைத் திறந்து பேசினான். அவளின் கண்ணீரில் தன் காதல் பிறந்ததை... எல்லாம் கூறி முடித்து விட்டு அவளைப் பார்த்தான். அவளும் அவன் பேசி முடிக்கும்வரை பேசவில்லை.

ஏதும் பேசாமல் எழுந்து காரை நோக்கிச் சென்றாள்.

காரில் ஏறி அமர்ந்தவள்... வெறித்த பார்வையில் ரோட்டைப் பார்த்தபடி வந்தாள்.

'என்னடா ரியாக்ஷனே காணவில்லையே.... சம்மதம் சொல்ல மாட்டாள் என்று தெரியும். கோபம்... எரிச்சல்... இல்லை. கூடாக ரெண்டு வார்த்தைகள்...' குழம்பி விட்டான் பாலா.

அவளின் மேல் தன் பார்வையை வைத்தபடி காரை ஓட்டினான் பாலா.

வீடும் வந்து விட... கீர்த்தனா வேகமாக இறங்கப் போனாள். ஆனால் கார் கதவை லாக் செய்து விட்டான் பாலா. அவள் கார் கதவைத் திறக்க முயற்சி செய்ததைப் பார்த்தவன்...

"கீர்த்தி, நான் பேசி முடிக்கும்வரைதான் பேசாமல் இருக்கச் சொன்னேன். உன் பாலாவுக்கு ஒன்றும் ஆகாது... தைரியமாக இனிப் பேசலாம்..." என,

கீர்த்தியின் ரத்த ஓட்டம் எகிற, முகத்திற்கு வந்தது. கோபத்தில் அவள் முகம் சிவக்க... அதனையும் ரசனையுடன் பார்த்தான் பாலா, எந்த வித ஒளிவு மறைவுமின்றி.

"நீ என்னிடம் பேசாதவரைக்கும் இந்தக் காரில்தான். எனக்கு ஒன்றுமில்லை... உன் முகத்தைப் பார்த்தே ஓட்டி விடுவேன். இல்லையென்றால்..." என்றவன், அவளை மேலிருந்து கீழ் வரை ரசனையுடன் பார்த்து வைக்க...

இப்போது கீர்த்தி... அவனது பார்வையில் அடி வயிற்றில் ஏதோ சுழற்ற... தன்னைக் கட்டுப்படுத்தியவள்...

"பாலா... என்னாச்சு உங்களுக்கு? என் அப்பா, அம்மா இறந்ததில்... உங்களுக்கு ஏதாவது ஆகி விட்டதா? காதல்... புருசன் என்றெல்லாம் உளறுகிறீர்கள்..." என்று பதட்டத்தை மறைத்துப் பேசினாள் கீர்த்தி.

பாலா கடுப்பாகி விட்டான். "என்னது. உளறுகிறேனா?"

"ஆமாம். பின் வேறு எப்படிச் சொல்வது?" என்று எதிர்க் கேள்வி கேட்டாள்.

"நீ என்னவென்றாலும் வைத்துக் கொள். பதில் மட்டும் சொல்..." எனப் பாலா தன் வழியிலேயே நிற்க...

"உளறலுக்கு எல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது."

"பிறகு வேறு எதற்குப் பதில் சொல்வாய்... சொல்!" - இப்போது அவன் பார்வை அவள் இதழில் நிலைக்க...

கீர்த்தனாவிற்கு அவனது பார்வை போன இடத்தைப் பார்த்து இதயம் வேக வேகமாக அடிக்கத் தொடங்கியது.

காரை விட்டு வெளியே போக வேண்டும் போல் இருந்தது. அவளின் அவஸ்தையை ரசித்தபடி, அவளின் அருகே நெருங்கினான் பாலா.

அவனின் இந்தச் செய்கையை எதிர்பார்க்காத கீர்த்தி, "பாலா.... என்ன இது? டோண்ட் பிஹேவ் லைக் தீஸ். தீஸ் இஸ் நாட் ஃபேர் ஃபார் யூ!" எனப் பின்னால் போக, கதவோடு ஒன்றினாள்.

"அப்படியா? சரி... வேற எப்படிமா பிஹேவ் பண்ண வேண்டும்? சொல்லித் தருகிறாயா?" என்று நக்கலாகச் சொன்னவனின் இதழ்கள் அவளின் இதழ் அருகே சென்றன.

கைகள் இரண்டும் பாலாவால் சிறை பிடிக்கப்பட... அவளால் நகரக் கூட முடியவில்லை.

"பாலா... ப்ளீஸ்..." என்றவள், அவனின் நெருக்கமான முகத்தினைப் பார்க்க முடியாமல்... நடக்கப் போவதைத் தடுக்க முடியாமல் கண்களை இறுக மூடிக் கொண்டாள். இதழ்களைக் கடித்து உள்ளே இழுத்து வாயை மூடினாள். நடக்கப் போவதை நினைத்து இதயம் துடிப்பதை நிறுத்தி... பின் வேகமாகத் துடிப்பது போல் தோன்றியது. வயிற்றில் பயப் பந்து சுழன்றது.

ஆனால், பாலாவோ அவளின் முகத்தை ஒரு வித தாபத்துடன் பார்க்க ஆரம்பித்தவன்... வேறு ஏதும் செய் யாமல்... அவளின் மாறுதல்களை உணர்ந்து அவளை ரசிக்க ஆரம்பித்தான். எத்தனை நிமிடம் இருந்தானோ... தெரியவில்லை.

அவனைத் தடுக்க முடியாமல் இறுகக் கண்களை மூடியவள்... சிறிது நேரமாக அவள் பயந்தது போல் ஒன்றும் நடக்காமல் இருக்க... கண்களைத் திறந்து பாலாவைப் பார்க்க... பாலாவும் அவள் பார்வையைச் சந்தித்துத் தன்னிலை மீண்டவன்...

இதழ்களைக் கடித்து வாய் மூடியிருந்தவளைப் பார்த்து... கை இரண்டும் இப்போதைக்கு எடுக்க முடியாது. "ஆனால் உன் உதடுகள் கடிபடுவதை என்னால் தாங்க முடியவில்லை. கேள்விப்பட்டிருப்பாய்தானே... முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும். வைரத்தை வைரத்தால் வெட்ட வேண்டும் என்று. அதே போல் உன் இதழை..." என்று

சொல்லி முடித்தானோ இல்லையோ, கடித்திருந்த, தனது இதழ்களை அவளாகவே பட்டென்று விடுவித்தாள்.

அதன் பின், வேறு ஒன்றும் செய்யாமல்... இப்போதைக்கு இது போதும் என்று நினைத்தவன் கதவைத் திறந்து விட்டான்.

வெளியேறிய அவளின் கரம் பிடித்து நிறுத்தியவன்...

அவளைத் தன் புறம் கீழாகத் திருப்பி இழுத்தவன்... அழுத்தமாக... நிதானமாக....

"மிஸஸ் கீர்த்தனா பாலா... நீ இந்தப் பாலாவை... ஒரு எம்.டி.யாகப் பார்த்திருப்பாய். நல்ல மகனாகப் பார்த்திருப்பாய். ஒரு பெண்ணின் காதலனாகப் பார்த்திருப்பாய். மருமகனாக... சக மனிதனாய்ப் பார்த்திருப்பாய்..."

அவள் அவனை உணர்ந்த நிலைகளை வரிசைப் படுத்திக் கூறிவிட்டு... பின்...

"ஆனால் நீ பார்க்காத... நீ மட்டுமே பார்க்கக் கூடிய... உனக்கு மட்டுமே சொந்தமான ஒரு முகத்தை இனி என்னிடம் பார்ப்பாய். அது உன் கணவன்... கீர்த்தனாவின் கணவன் பாலா என்ற முகம்..." என்றபடி அவளை விட்டான்.

கீர்த்தியோ... அவன் விட்டால் போதும் என்று அந்த இடத்தை விட்டு வேகமாகக் கடந்து வீட்டினுள் நுழைந்தாள், படபடத்த இதயத்துடன்...

28

ஹாலில் அருந்ததி இருந்ததை உணர்ந்தாலும்... நிற்கக் கூட முடியாமல் கீர்த்தனா மாடி ஏறினாள்.

'என்னாயிற்று இவளுக்கு?' என்று நினைக்கும்போதே கீர்த்தனா வந்ததிற்கு முற்றிலும் எதிராகப் பாலா உல்லாசத்துடனும் உற்சாகத்துடனும் வந்தான்.

இருவரின் நிலையும் அவள் கண்களுக்குத் தப்பவில்லை. ஏதோ நடந்திருக்கிறது என்று மட்டும் தீர்மானத்திற்கு வந்தாள் அருந்ததி.

கீர்த்தனாவிற்கு ஒன்றும் புரியவில்லை. பாலா நடந்து கொண்ட முறையில் எவ்வளவு படபடப்பை உணர்ந்தாளோ... அவ்வளவு கோபமும் கொண்டாள்.

"மனைவியாம்... கணவனாம். இவன் மட்டும் நினைத்தால் போதுமா? இவனுக்கு என்னைப் பார்த்துப் பரிதாபம் வந்தால்... அய்யோ பாவம்... பொண்ணு அநாதையா நிற்குதுன்னு பாவம் பார்க்க மட்டும் வேண்டியதுதானே..."

இதை நினைக்கும் போது அழுகை வேறு வந்து தொலைத்தது அவளுக்கு.

'அதை விட்டுட்டு எனக்கு வாழ்க்கை கொடுக்கிறாராம்துரை! அதிலும் அவரது அமரத்துவ காதலைக் கூடக் கை விட்டுவிட்டு...' என்றெல்லாம் யோசித்தவள்...

"மேல வரட்டும். என்னை என்னவென்று நினைத்தான் அவன். இவன் வா என்றால் வருவதற்கும்... போ என்றால் போவதற்கும் கேட்க ஆளில்லாதவளா...?"

ஆனால், அந்த நிலையில்தான் அவள் இருக்கிறாள் என்பதே உண்மை என்பது புரிய.... இப்படித் தன்னைத் தவிக்க விட்டு அவசர அவசரமாகப் போன பெற்றோரை நினைத்துத் தாங்க முடியாமல்... தன் மேலேயே கழிவிரக்கம் வர... கண்களில் கண்ணீர் அருவி போல் வழிந்தது.

பாலா ஒரு அரை மணி நேரம் கழித்துத்தான் மேலேயே வந்தான்.

வந்தவன்... கீர்த்தி சோபாவில்... கண்களில் கண்ணீர் வழிய உட்கார்ந்த நிலையிலேயே சாய்ந்திருந்தவளைப் பார்த்து... கொஞ்சம் அதிகப்படியாக நடந்து விட்டோமோ என்ற எண்ணம் தோன்றி... அவனைச் சஞ்சலத்திற்குத் தள்ள...

மெதுவாய் அவளிடம் வந்து... "கீர்த்தி..." என்று அழைக்க,

அவளோ... அவனை வெற்றுப் பார்வை பார்த்தாள். அதில் கோபமில்லை. கலக்கமில்லை... எல்லாம் பேசிவிட்டு... செய்து விட்டு... இப்போது என்ன என்றபடி பார்த்தாள்.

"கீழே வா... சாப்பிடப் போகலாம்..." என்று அழைக்க... அடக்கி வைத்திருந்த கோபம் கரை உடைத்து வார்த்தையாய் வெளிவர ஆரம்பித்தது.

"எனக்குச் சாப்பாடு வேண்டாம். இதற்குக் கூட... அதாவது சாப்பிடுவதற்குக் கூட நீங்க என்ன சொல்றீங்களோ... அதைத்தான் செய்ய வேண்டுமா?" என்றபடி, வேறு பக்கம் பார்க்க ஆரம்பித்தாள்.

ஒன்றும் சொல்லாமல் அவளைப் பார்த்தவன்... அருந்ததிக்குப் போன் செய்து, "அம்மா, நாங்க வெளியில் சாப்பிட்டு வந்து விட்டோம். சாப்பாடு வேண்டாம். நீங்க சாப்பிடுங்கள்..." என்று சொல்லி விட்டுப் போனை வைத்தான்.

"சாப்பாடு வேண்டாம்..." என்று சொல்லி, அவன் போனை வைத்தவுடன்...

"என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இப்போ எதற்குச் சாப்பாடு வேண்டாம் என்று சொன்னீர்கள்? எனக்குப் பசிக்கிறது. நான் கீழே போகிறேன்..." என்று அவன் சொல்லி விட்டான் என்பதற்காகவே பிடிவாதம் பிடித்துக் கிளம்ப எத்தனிக்க...

அவளின் சிறுபிள்ளைத்தனம் உணர்ந்தாலும்... பாலா இயல்பிலேயே பொறுமை என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாதவன்... ஏதோ இப்போதுதான் கொஞ்சம் அந்த வார்த்தையை எல்லாம் தன் வாழ்வில் கடைப்பிடிக்கிறான். ஆனால், அதற்குத் தன் மனைவியே வேட்டு வைத்து விடுவாள் போல் இருந்தது.

"கீர்த்தி! என்ன இது... இப்போதானே சாப்பாடு வேண்டாம் என்றாய். அதனால்தான் அம்மாவிடம் அப்படிச் சொன்னேன். இப்போ இப்படிப் பேசினால் என்ன அர்த்தம்? அம்மாவிற்கு எதுவும் தெரிய வேண்டாம். ஏற்கெனவே பாவம் அவர்கள்... நாம் செய்து வைத்திருக்கிற வேலையில் நொந்து போயிருப்பவர்கள்... என்பதால்..." என்று பல்லைக் கடித்து அதட்ட...

அதற்கெல்லாம் அசராமல், "ஓ, நான் மட்டும்தான் இப்போ ஒண்ணு... அப்போ ஒண்ணு என்று பேசக் கூடியவள். சார் எப்படி?" என்று கோபமும் நக்கலும் சரி விகிதத்தில் கலந்து அவனிடம் கேட்க...

"கீர்த்தி..." என்றபடி அவள் அருகில் அமர்ந்து, "இப்போ என்ன பிரச்சனை உனக்கு... சொல்லு. நான் என்ன பண்ணினால் என் மேல் உனக்குக் கோபம் போகும்? நான் அதைச் செய்கிறேன்..." என்று, அவளைச் சமாதானமாக்கும் முயற்சியில் கெஞ்சல் பாதி கொஞ்சல் பாதியாகக் கேட்டான் பாலா.

தீர்க்கமாக அவனைப் பார்த்து, அவனுக்கு அவனைப் புரிய வைக்கும் விதமாய்... "என் மேல பரிதாபப்பட வேண்டாம். ப்ளீஸ் பாலா... புரிஞ்சுக்கோங்க. காதலுக்கும் பரிதாபத்துக்கும் வித்தியாசம் தெரியாதா உனக்கு... நீங்க மதுவை..." எனும்போதே அவள் தடுமாறினாள்.

அதற்கு மேல் சொல்லப் பிடிக்காமல்... நிறுத்தினாள். ஏற்கெனவே அழுதபடி இருந்ததால்... இன்னும் அழுகை வர வார்த்தைகளும் குழறின.

அவளின் நிலைமையை உணர்ந்தவன்...

"எனக்கும்... காதலுக்கும் பரிதாபத்துக்கும் வித்தியாசம் தெரியும். ஒண்ணோட அம்மா, அப்பா இறந்ததால் மட்டும் நான் உன்னைக் காதலிக்கவில்லை..." என்று தான் சொல்ல

வந்ததைக் கிளிப் பிள்ளைக்குச் சொல்வதைப் போல் நிறுத்தி நிதானமாகச் சொல்ல ஆரம்பிக்க...

இடையிலேயே, "நீங்க என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்... பாலா! நான் சொல்வதை எல்லாம் கொஞ்சம் கூடப் புரிந்து கொள்ள மாட்டீர்களா?" என்று கொதிநிலைக்குப் போனாள் கீர்த்தி.

பாலா அவளுக்குப் பதிலாய்க் கோபத்தைக் காட்டாமல்... குளுமையைக் கையாள ஆரம்பித்தான்.

"ஹ்ம்ம்ம்... கொஞ்ச நாளா உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், இந்த நிமிடம்... இந்த நொடி... நீ மட்டும்தான். உன்னை மட்டும்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்று..." கூலாகக் கூறி, அவளைப் பார்த்துக் கண்ணடிக்க...

கீர்த்திக்குக் கோபம் எல்லை மீறியது.

"ஓஹோ. அப்படியா! இந்த நிமிஷம் நான்... போன மாசம் மது... அப்போ அடுத்த மாசம்?" எனக் கோபத்தில் அவனைக் குதற ஆரம்பித்தாள்.

அவளின் வார்த்தைப் பிரயோகத்தில் பாலா கொஞ்சம் அடிதான் வாங்கினான். ஆனால்... இதெல்லாம் அவன் அவளிடம் எதிர்நோக்கியே இருந்ததால்... தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"என் மனதில் மது இருந்தாள் என்பது உண்மை. மறுக்கவில்லை... ஆனால், ஒருவருக்குக் காதல் இரண்டாம் முறை வரக்கூடாதா! நான் மதுவை மறக்கவில்லை. அவள் நினைவை உன்னோடான என் காதலுக்கு அடித்தளமாக மாற்றி விட்டேன். மது என்ற ஒருத்தி என் வாழ்வில் இருந்ததால் மட்டுமே நீ என் வாழ்வினுள் வந்தாய் என்கிறபோது... அவளை எப்படி மறப்பேன்? ஆனால், இனி என் வாழ்வு இறுதிவரை உன்னோடு என்பதை நான் முடிவு செய்து விட்

டேன். இதற்கு மேலும் மது... அவள் காதல்... என்று உன்னையும் வருத்தி என்னையும் வருத்தாதே!" என்று சொல்ல,

"நீங்க ஒரு பெண்ணைக் காதலிப்பீர்கள். அவளுக்காக என்னை மாதிரி ஒரு சூழ்நிலைக் கைதியாய்த் தவித்த பொண்ணை... தாலி கட்டிக் கூட்டி வந்து... உங்க கைப்பாவையா வைத்திருப்பீர்கள். அதேபோல் அவளை மறந்து விட்டேன். உன்னோடுதான் வாழ்வேன் என்று சொன்னவுடன்... சொன்ன அடுத்த நிமிடம் நானும் உங்களோடு வந்து கொஞ்சிக் குலவிக் குடும்பம் நடத்த வேண்டுமா... என்ன ஒரு எதிர்பார்ப்பு உங்களுக்கு... ஏன் எனக்கென்று விருப்பு... வெறுப்பு என்று ஒன்று இருக்காதா?

"ஆண்களுக்குக் காதல் வந்துவிட்டால்... அவளுக்காக மலையையே புரட்டுவீர்கள். அவளுக்காக... அவள் காதலுக்காக என்று காதல் மன்னன் ஆகி விடுவீர்கள். இதே காதல் எனக்கு உங்கள் மேல் வந்திருந்தால்... நான் வந்து சொல்லியிருந்தால்... என்னை ஏற்றுக் கொண்டிருப்பீர்களா... நீங்கள் இன்று என்னிடம் நடந்தது போல் நான் என் காதலை... உரிமையை உங்களிடத்தில் காட்டியிருந்தால்... என்னைப் பற்றி உங்கள் எண்ணம் என்னவாக இருக்கும் பாலா? அந்தச் சௌந்தர்யாவை விட மோசமாகத்தானே நினைத்திருப்பீர்கள்..." என்று உணர்ச்சிகளின் மொத்தக் குவியலாய்ப் பேசியவளின் வார்த்தைகளில் இருந்த உண்மை பாலாவைச் சுடாமல் இல்லை.

"தெரியல கீர்த்தி... ஒருவேளை நீ சொல்லியிருந்தால்.... நான் மாறி இருந்திருக்கலாம். காலம் எல்லா வற்றிற்கும் பதில் சொல்லி இருக்கலாம்..." என்றவன் பரிதாபமாக,

கீர்த்திதான் அவன் காதலை உணர வைத்தாள். அதை உணர்ந்து சொல்லவில்லை. சொன்னதையும் உணரவில்லை. ஆனால், அவன் அவளிடம் அதை... அதுவும்

இந்தச் சூழ்நிலையில் சொல்ல விரும்பவில்லை. சொல்லவும் இல்லை. நீதான் என்னிடம் அழுதாய். உன் காதலைச் சொன்னாய். அதில்தான் நான் மாறினேன் என்றால்... அவள் இப்போது இருக்கும் மனநிலையில் இன்னும் உச்சாணிக் கொம்பில் போய் ஏறிக் கொள்வாள். அதன் பிறகு அதிலிருந்து அவளை இறக்க... நமது பாடுதான் திண்டாட்டமாகும் என்று நினைத்தவன்... அப்படியே அதை மறைத்தும் விட்டான்.

"காலம்... பதில் சொல்லுமா! பதில் தெரியவில்லை என்றால் காலத்தின் மீதும்... விதியின் மீதும் பழியைத் தூக்கிப் போட்டு விடுவீர்கள்... ப்ச்ச்..." என்று கோபத்திலிருந்த வார்த்தைகள்... எகத்தாளமாய் மாறியது அவளிடம்.

"கீர்த்தி... நாம தூங்கலாம். இனிமேல் பேசினால்... வார்த்தைகள் தடிக்கும்..." என அப்போதைய விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப் போக... அவளோ அதைக் கமாவாக ஆக்கித் தொடர்ந்தாள்.

"எனக்கு ஒரே ஒரு சந்தேகம் பாலா... நீங்க மதுவைக் காதலித்தீர்கள். அதற்காக என்னை மணந்தீர்கள். இன்று அவள் இருந்த இடத்தில் நான் என்கிறீர்கள். இதே போல் நானும் ஒருவனைக் காதலித்திருந்தேன் என்றால் என்ன செய்திருப்பீர்கள்...." என்று வினோத்தின் பெயரைக் குறிப்பிடாமல் சொல்ல...

பாலா... அதிர்ந்து நின்றான்.

"என் அப்பா அம்மாவிற்காக... எனது காதலை மறைத்து... உங்களோட நிர்பந்தத்திற்குச் சம்மதித்தேன் என்றால்... என்ன செய்திருப்பீர்கள்... சொல்லுங்கள். என்னை நான் விரும்பியவனுடன் சேர்த்து வைப்பீர்களா?" என்ற வார்த்தையில் அமிலம் தோய்த்தாள்.

"நீ யாரையும் விரும்பவில்லைதானே கீர்த்தி... வினோத்தோடு கூடப் பெரியவர்கள்தானே பேசியிருந்தார்கள்

என்றாய்..." என்றபோது அவன் வார்த்தைகள் அவனின் வழக்கமான கம்பீரம் இன்றி மெலிதாக வலியுடன் ஒலித்தன.

அதைக் கீர்த்தி உணராமல் இல்லை. இருந்தாலும் கூடத் தனது வீரியத்தை நிறுத்தாமல் பேசினாள்.

"ஏன்... பெரியவர்கள் பேசினால்... அவர்கள் பேசப் பேச எனக்கும் ஆசை இருந்திருக்காதா?" என அடிபட்ட சிங்கத்திடம் மல்லுக்கு நிற்கும் மானைப் போல் அலட்சியமாக நோக்க...

இப்போது பாலா என்னும் சிங்கம் சுதாரித்துக் கொண்டது.

அவள் தன்னைத்தான் விரும்புகிறாள்... தன்னைக் காயப்படுத்துவதற்காகவே இவள் இந்த மாதிரிப் பேசுகிறாள்... அதைப் புரிந்தவனுக்கு... விட்டால் இவள் என்னைக் குதறுவதாக நினைத்துக் கொண்டு வரம்பு மீறிப் போவாள் என்று தோன்றியது அவனுக்கு.

அவளின் அலட்சியமான பார்வையைப் பார்த்தபடி...

"நீ எவனை வேண்டுமென்றாலும் நினைத்திருந்திருக்கலாம். அதைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை எனக்கு... ஆனால், இப்போது நீ என் மனைவி. இனி நான் மட்டும்தான் உன் நினைவில் இருப்பேன். இருக்க வேண்டும்... காலம் முழுவதும் நீ விரும்பினாலும்... விரும்பாவிட்டாலும்..." என்று கர்ஜித்தவன்... அதற்கு மேல் ஒன்றும் பேசுவதற்கு இல்லை என்பது போல் திரும்பித் தனது கட்டிலை நோக்கிப் போக...

"நீங்க யாரோட மனசைத்தான் நினைத்துக் கவலைப் பட்டிருக்கிறீர்கள். அடுத்தவங்க மனதை மதித்து... அடுத்தவங்க மனதை என்ன... உங்க அப்பா - அம்மா மனதையே புரிந்து நடக்கவில்லை. நீங்க என் மனசைத்தான் பார்க்கப் போறீங்களா?" என்று இஷ்டத்திற்குப் பேச...

பாலா ருத்ரனாய் மாறினான். அது கூட மனதினுள் தான்.

"ஏய்..." - அவளைப் பார்த்து ஒற்றை விரலை உயர்த்தியவன்... அவளின் கண்களின் தவிப்பில், தனது கோபத்தினைக் கட்டுக்குள் நிமிடத்தில் கொண்டு வந்தான்.

"என்ன... நான் யாரோட மனசையும் புரிந்து நடக்காதவனா.... அப்படியே இருந்திருக்கலாம். என் அப்பா மனதிற்காகவும்... உடல் நலத்திற்காகவும் மனம் கஷ்டப்படாமல் இருந்திருக்கலாம். ஆபீஸ் எம்ப்ளாயி கிட்ட எல்லாம் ஏன் அவங்க கவலையா இருக்காங்கனு... அவங்க கவலையைப் பத்திக் கண்டுக்காம இருந்திருக்கலாம். அதைக் கேட்டபோது கூடச் சும்மா இருக்காமல், அதை வாங்கித் தருகிறேன் என்று சொல்லாமல் இருந்திருக்கலாம். என்னை நீ அறைந்தபோது கூட... நீ மனசு கஷ்டப்படுகிறாய் என்று நினைக்காமல் உன் மேல் கோபப்பட்டிருக்கலாம். ஆனா இதெல்லாம் செஞ்சுட்டேனே..." என்று நிறுத்தியவன்,

"ச்சேய்... என்னைப் போய்..." என்றவன், "அப்போ கூட உன்னை நான் கட்டாயப்படுத்த வில்லையே... நீயாகத் தானே மீண்டும் வந்தாய். நான் செய்த ஒரே தவறு என்ன வென்றால்... அது என்னால் பண்ண முடிந்த உதவியை... பணயமாக வைத்துச் செய்ததுதான். இப்போ சொல்கிறேன் கேட்டுக்கோ. இத்தனை நாள் மற்றவர்களுக்காகவே வாழ்ந்து விட்டேன். மற்றவர் மனம் கோணாமல் வாழ வேண்டும் என நினைத்திருந்தேன். இனி இந்தப் பாலா... அவனுக்காக மட்டும் வாழ்வான். அதில் யாருடைய கவலையும் பார்க்க மாட்டான். நான் உன்னோடு வாழ வேண்டும்... எனக்கு நீ வேண்டும்.. நாம் இருவரும் வாழப் போகும் வாழ்க்கைக்காக நான் எதையும் விட்டுக் கொடுக்க மாட்டேன். உன்னையும் எப்படி என் வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்று எனக்குத் தெரியும்..." என்றவன், அதற்கு மேல் பேச்சை வளர்க்காமல் போய்ப் படுத்தும் விட்டான்.

கீர்த்தி... சோபாவிலேயே படுத்து விட்டாள். பாலாவை நினைத்து.. அவன் செய்கைகளை நினைத்துச் சிறிது

நேரம் அழுதாள். ராகவன் - மைதிலியை நினைத்து அடுத்து அழுதாள். தன்னைப் பற்றி ஒன்றும் தெரியாமல் போய் விட்டார்களே... தாங்கியும்... ஏங்கியும்... சீராட்டியும்... பாராட்டியும் தன்னை வளர்த்து விட்டு இப்படி அம்போ வென்று விட்டுப் போய் விட்டார்கள். இப்படிச் சீக்கிரமாகப் போவதற்குத்தான்... தன் ஆயுள் முழுவதும் காட்ட வேண்டிய அன்பை... 23 வருடத்திற்குள் காட்டி விட்டுப் போய் விட்டனர் போல... என்றெல்லாம் பலவாறாகச் சிந்தனைகளின் தாக்கத்தில் உழன்றவள்... அப்படியே உறங்கிப் போனாள்.

பாலாவிற்கோ... அவள் அன்று அழுகையில் பேசியதிலிருந்து தன்னைத்தான் நேசிக்கிறாள் என்று புரிந்தும் அவள் வினோத்தைக் காதலித்திருப்பாளோ என்று சஞ்சலம் உண்டாக... தூக்கம் வரவில்லை. எதுவாயிருந்தாலும் அவள் மனதில் நான்தான் இப்போது இருக்கிறேன். அதை எப்படி வெளிக் கொணர்வது என்ற யோசனையிலே உறங்கியும் விட்டான்.

பாதி இரவில் பாலாவிற்கு விழிப்பு வர... கீர்த்தியைப் பார்த்தவன்... அவள் சோபாவிலேயே உறங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்து அவளைத் தூக்கிக் கட்டிலில் போடுவோமா என்று நினைத்தவன்... அவர்கள் இருவருக்கும் உள்ள சூழ்நிலையில் அது அதிகப்படியாய்த் தோன்ற... அதைக் கைவிட்டு விட்டு அவளின் படுக்கையை விரித்தவன்... அவளின் அருகில் வந்தான்.

தூக்கலாமா... வேண்டாமா... என்று ஒற்றையா... இரட்டையா போட்டவன்... அவளின் அசைவில்,

'அம்மணி ஏற்கெனவே மலை ஏறித்தான் இருக்காங்க... அதை இறக்கவே என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. அடங்குடா பாலா..." என்றவன், அவளைத் தொட்டு எழுப்பினான். தொட்ட வுடனே அடுத்த நொடி பதறி எழுந்தாள் கீர்த்தி.

'இதில் எல்லாம் உஷாரா இரு...' என்று நினைத்தவன், "அங்க போய்ப் படு..." என்று படுக்கையைக் காட்ட,

தனக்காக விரித்தானா... என்று நினைத்தவள்... நடந்ததெல்லாம் நினைவில் இருந்தாலும்... "தேங்க்ஸ் பாலா!" என்றபடி அவன் விரித்த படுக்கையில் படுக்க...

'இப்ப தேங்க்ஸ்... ரொம்ப முக்கியம். பொண்டாட்டிக்குக் கீழே படுக்கை விரிச்சு அவளை அதில் படுக்கச் சொன்ன ஒரே புருசன் நானாத்தான் இருப்பேன். அவளைத் தொட்டுத் தூக்கக் கூடத் தைரியம் இல்லை. நீ எல்லாம் வெளியில சொல்லிடாதடா... ஆண் குலத்துக்கே கேவலம்...' என்று தன்னைத் தானே திட்டியவன்... பின் அவனாகவே, 'தைரியம் எல்லாம் இருக்கு. அவ மனசு நோகக் கூடாது என்றுதான் பார்க்கிறேன்...' - தன் மனதிற்குள் தேற்றிக் கொண்டான்.

அடுத்த நாள் கீர்த்தி பாலா எழுவதற்கு முன் வேகமாக எழுந்து ரெடியானவள்... கீழே போய் விட்டாள்.

பாலா கொஞ்சம் லேட்டாகத்தான் எழுந்தான். அவன் கீழே வரும்போது... கீர்த்தியும் ஜெகநாதனும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். கீர்த்தியைப் பார்த்தபடியே வந்தவன்... போன் வர... காதில் வைத்தபடி கீர்த்தியின் அருகில் அமர்ந்து... அவளது தட்டில் உள்ள சப்பாத்தியை எடுத்துச் சாப்பிட்டபடி போனில் பேசிக் கொண்டிருந்தான். ஜெகநாதன் மனமோ மகனின் செய்கையில் குளிர்ந்தது. தன் மகனும்... திருமண உறவைப் புரிந்து கொண்டான். அதில் வாழவும் ஆரம்பித்து விட்டான் என்று சந்தோஷப்பட்டார்.

அவர் முன்னால் ஒன்றும் சொல்ல முடியாமல் கீர்த்தி தவிக்க... பாலா அவள் தவிப்பை... அவளை ரசித்தபடி தன் வேலையைத் தொடர்ந்தான்.

அவன் எப்போது அவள் தட்டில் கை வைத்தானோ, அப்போதே கீர்த்தி தட்டில் கை வைப்பதை நிறுத்தி விட்டாள்.

இது அனைத்தும் அருந்ததி கண்ணில் தப்பவில்லை. அவர்களைப் பற்றித் தெரிந்ததால்... அவர்கள் இருவரும் அழகாக மாட்டினார்கள் அவளிடம்.

மகனின் அருகே வந்தவள்... கீர்த்தியின் அவஸ்தையைக் காண முடியாமல், "பாலா, நேற்று இரவு சாப்பிடவில்லை என்றால்... அதற்காக இப்படியா! கீர்த்தியைச் சாப்பிட விடு..." என்றபடி, அவனுக்குத் தனியே தட்டு வைக்க... தாங்கள் இருவரும் நைட் சாப்பிடவில்லை என்ற அவன் குட்டு எப்படி உடைந்தது என்று அவன் அம்மாவிடம் அசடு வழிந்தான். கீர்த்தி சொல்லி விட்டாளோ என்று பார்க்க... அவளும் தன் அத்தையை அதிர்ச்சியோடுதான் பார்த்துக் கொண்டிருக்க... அவளும் சொல்லவில்லை என்பதை உணர்ந்தான்.

அருந்ததிக்குத் தன் மகனின் மனமாற்றம் நன்றாகப் புரிந்திருந்தது. அவன் சொல்லாத போதும்... அதேபோல் கீர்த்தியின் மனமும் அவள் பிடிவாதமும் இருந்தது. அவளும் அவர்களிடம் இதைப் பற்றிக் கேட்கவில்லை. ஆனால் அவர்கள் வாழ்க்கை சுமுகமாக... தன்னால் முடிந்தவற்றை அவர்களுக்குப் பண்ண வேண்டும் என்று நினைத்தாள்.

ஏற்கெனவே முடிவு பண்ணியிருந்த விசயம்தான். கீர்த்தி வீட்டில் வெள்ளிக்கிழமை மட்டுமே கீர்த்தியே அவள் அம்மா - அப்பாவிற்கு விளக்கேற்ற வேண்டும் என்று முடிவு செய்திருந்தாள். வெள்ளிக்கிழமை தோறும் மஞ்சு மற்றும் சிந்துவை அவளுடன் அனுப்ப வேண்டும் என்று நினைத் திருந்தாள். இப்போது அதில் சின்ன மாற்றம் செய்தாள்.

அதன்படி சாப்பிட்டுக் கொண்டிருந்த கீர்த்தியிடம், "கீர்த்தி, நாளைக்கு ஈவினிங் நீ மைலாப்பூர் போய்த் தங்கி இருந்து விட்டு வெள்ளிக்கிழமை ஒரு நாள் மட்டும் நீயே பூஜை அறையில் விளக்கேற்றி வைத்து விட்டு வர வேண்டும். அப்படியே ராகவன் அண்ணா.... மைதிக்கு உன் கையால்

பூப் போட்டு வா. வீடு ஆளே இல்லாமல் வெறிச்சோடி இருக்கக் கூடாது..." என்றவளின் வார்த்தைகளில், உளமார உருகி நெகிழ்ந்தாள் கீர்த்தி. இப்படிப்பட்ட மாமியார் கிடைக்க அவள் கொடுத்துத்தான் வைத்திருக்க வேண்டும்.

பாலாவோ... மனதிற்குள்ளாக... அப்போ நாமளும் அங்கே ஆஜராகி விட வேண்டும் என்று நினைத்தபடி சாப்பிட...

அருந்ததி பாலாவிடம், "பாலா, நீயும் கீர்த்தியோட போயிரு. சிந்துவுக்கு எக்ஸாம். அதனால் மஞ்சுவும் சிந்துவீ வர முடியாது..." என்று சொல்ல,

பாலா அப்போதிருந்தே தன் திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்பித்தான்.

அருந்ததி பின்னாலே வந்த பாலா, "அம்மா! சாரிம்மா.. தேங்க்ஸ்ம்மா!" என்றவனிடம்,

"நீ என் பிள்ளைதான் என்பது எனக்குத் தெரியும் பாலா.. அதனால்தான் நீ வழிமாறிப் போனாலும் தவறு புரிந்தால் திரும்பி விடுவாய் என்று நம்பினேன். அது நடந்து விட்டது. ஆனால், என்ன... அதற்கு நீ கொடுத்த விலைதான் அதிகம் பாலா..." என்று ராகவ் - மைதிலி இறப்பை உணர்த்த... வருத்தமுடன் தலை குனிந்தான் பாலா.

"கீர்த்தியை நீ எப்படி வைத்திருக்கிறாய் என்பதில்தான் அவர்களின் ஆத்மா நிம்மதி அடையும். அவர்கள் முன் நீங்க போட்ட வேசம் நிஜமாக வேண்டும். அது போதும் எனக்கு..." என்றவளிடம்,

மானசீகமாகச் சொன்னான் பாலா.

"இனி, கீர்த்தி என்னவள். என் உயிரும் உறவும் அவளே அம்மா!" என்றவனை உளமார ஆசிர்வதித்தாள் அவன் தாய்.

அன்று வியாழக்கிழமை. காலையில் இருந்தே ஒரு விதப் பதட்டமாகவே இருந்தாள் கீர்த்தி.

இங்கு ஒரே அறையில் தனியாகத்தான் இருக்கிறார்கள். ஆனாலும் அங்கு... கீர்த்தி வீட்டில் எனும்போது படபடப்பாகவே உணர்ந்தாள்.

அது அலுவலகம் வரையிலும் தொடர்ந்தது.

பாலாவும் அதைக் கவனிக்கத் தவறவில்லை.

இருவரும் ஒன்றாகக் கிளம்பிக் கீர்த்தி வீட்டிற்கு வந்தனர். இரவு சாப்பிட்டு முடித்தவுடன் கீர்த்தி சமையலறையில் புக... பாலா சிறிது நேரம் கம்ப்யூட்டரில் வேலை பார்த்தவன்... தூக்கம் வர, கீர்த்தியின் அறைக்குள் போய்ப் படுத்து விட்டான்.

கீர்த்தியோ... அவன் எப்போது என்ன பண்ணுவானோ என்ற பயத்திலேயே இருந்தாள். அவன் தூங்கப் போன பின்தான்... நிம்மதியானாள். ஆனாலும் ஏதோ ஒரு ஏமாற்றமும் தோன்ற, அதைப் பின்னுக்குத் தள்ளினாள்.

எல்லாம் முடித்து விட்டுத் தன் அறைக்குள் நுழைந்தவள்... கண்ட காட்சி அவளை நிலை தடுமாற வைத்தது. அவளது கட்டிலில் பாலா படுத்திருந்தான். அவன் கீழேதான் படுத்திருப்பான் என்று நினைத்தாள் கீர்த்தி.

எந்த இடம் அவன் சொந்தமில்லை... என்று சொன்னானோ... அதில், இது இந்த இடம் தன் உரிமை. இந்த இடத்தை அவளோடு பங்கு போடப் பிறந்தவன் அவனே என்பது போல் தலையணையைக் கட்டிக் கொண்டு படுத்திருந்தான்.

அவனின் அந்தச் செயல், நான் உன்னவன்... நீ என்னவள் என்ற உணர்வைச் சொல்லாமல் சொல்லியது. அது புரியாதவளா... கீர்த்தி! அவன் தூங்குவதையே சில நிமிடங்கள் பார்த்து நின்றவள்... பிறகு ஹாலுக்கு வந்து...

அப்படியே அமர்ந்திருந்தாள், சில மணி நேரம். எதிரே உள்ள புகைப்படத்தில் ஜோடியாக அவளைப் பார்த்துச் சிரித்தபடி இருந்த அவளின் பெற்றோரை... பார்க்கப் பார்க்க... அங்கிருந்த ஒவ்வொரு பொருளும் அவர்கள் இருவரின் நினைவுகளை... அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை ஞாபகப் படுத்த... துக்கம் தாளாமல் துவண்டாள், அவர்களின் செல்ல மகள்.

ஒரு கட்டத்தில் கண்ணீரைத் துடைத்தவள்... அங்கிருந்து எழுந்து டி.வியின் மேல் இருந்த அவர்கள் மூவரும் சேர்ந்திருந்த போட்டோவையும்... அறையினுள் இருந்த மைதிலியின் சேலையையும் எடுத்து வந்து... போட்டோவைத் தன் மார்போடு அணைத்தவள்... தன் தாய் சேலையில் தன் தலையை வைத்துப் படுத்தாள். அது மைதிலி மடியில் தலை வைத்துப் படுப்பது போல் இருக்க... நெஞ்சோடு அணைத்திருந்த புகைப்படம் அவர்கள் மூவரும் மட்டும் வாழ்ந்த நினைவை வழங்க... அவர்கள் இருவரும் அவளுடன் இருப்பது போல உணர்வு தோன்றக் கண் உறங்கினாள்.

இதெல்லாம் அறியாமல் நல்ல உறக்கத்தில் இருந்தான் பாலா. அதிகாலை எழுந்தவன்... கீர்த்தியை அறையினுள் பார்த்தான். அருகில் படுத்திருக்க மாட்டாள்தான். கீழே கூடப் படுக்கப் பிடிக்கவில்லையா அவளுக்கு... நான் என்ன செய்தேன் அவளை... என்று நினைத்தான்.

இந்த அறையில் இல்லாமல் எங்கே படுத்தாள் என்று கடுப்பானவன்... ஹாலிற்கு வந்தவன் தன் மனைவி படுத்திருந்த கோலத்தில்... அவனது மனம் அவளின்பால் கசிந்து உருக... அவனது கடுமையெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போனது. அவளை எந்த விதத் தொந்தரவும் செய்யாமல்... கிச்சனுக்குள் நுழைந்தவன்... தானே காபியைக் கலந்தான். காபியை எடுத்துக் கொண்டு அவளின் எதிரில் அமர்ந்து, அந்த அழகான காலை வேளையில்...

தன்னவளின் முகத்தை... படுத்திருந்த விதத்தைத் தன் கண்களால் பருகியபடி.... காபியை அருந்தினான்.

அவளைத் தன்னோடு... தன் மார்போடு அணைத்து... உனக்கு நான் இருக்கிறேன் கண்மணி... என்று சொல்லத் துடித்த மனதையும் கைகளையும் அடக்கியவன்... அவளைப் பார்த்தபடி மட்டும் இருந்தான். அவளை அணைக்க முழு உரிமை இருந்தபோதும் அவளிடம் அதைச் செய்ய முடியாத தன் நிலையை எண்ணி வருந்தினான்.

அவனின் பார்வையாலோ... இல்லை, தானாகவே விழிப்பு வந்ததோ தெரியவில்லை. எழுந்தவள்... தன் எதிரே அமர்ந்து தன்னையே பார்த்து அமர்ந்திருந்த பாலாவைப் பார்த்தவள்... பட்டென்று எழுந்தாள். தான் படுத்திருந்த நிலையை உணர்ந்து... அவன் என்ன நினைத்திருப்பானோ என்றபடி எழுந்து போனாள்.

பாலாவிற்கோ தன் பார்வை அவளைத் தொடர்வதைத் தவிர்க்க முடியவில்லை.

கீர்த்தியோ அதை உணர்ந்தாலும் காட்டிக் கொள்ளாமல் நடமாடிக் கொண்டிருந்தாள். அதன் பிறகு விளக்கேற்றி வைத்து விட்டு... தன் தாய், தந்தைக்குப் பூவை அணிவித்து விட்டு அவர்களின் முன் வேண்டியபடி நின்றாள் கீர்த்தி.

பாலா அவர்களைப் பார்த்தபடி... தன்னை மட்டும் நம்பி விட்டுப் போன அவர்களின் நம்பிக்கையைக் காப்பாற்ற அவனுக்கு அவர்கள் துணை புரிய வேண்டும் என்று மனமார வேண்டினான்.

அலுவலகம் செல்லும் வழியில் கீர்த்திக்கு வினோத்திடமிருந்து கால் வந்தது.

ஓரளவு நார்மலாக இருந்ததால்... உற்சாகமாகவே பேசினாள் கீர்த்தி.

"வினோத், இன்னும் பதினைந்து நாளில் வருகிறாயா... என்ன விசயம்?" என்று கேட்க,

அவன் அலுவலகம் வைப்பதற்கான இடம் ஒன்று நல்ல விலையில் கிடைக்கிறது. உடனே அதைப் பேசி முடிக்க வேண்டும் என்றும்... அது மட்டும் முடிந்தால்... விரைவில் இங்கு திரும்ப செட்டிலாக முடிவு செய்திருப்பதைக் கூறினான்.

வினோத்திற்கும் அங்கு இருக்கப் பிடிக்கவில்லை. அவளை அப்படியே விட்டு விட்டு வந்தது போல் இருந்தது. மனதே அங்கு இல்லை. எல்லாம் இங்குதான். கீர்த்தியின் மேல்தான் இருந்தது. ஒருவேளை தாங்கள் யு.எஸ். வராமல் இருந்திருந்தால்... இதெல்லாம் நடந்திருக்காதோ... கீர்த்தியை மிஸ் பண்ணாமல் இருந்திருக்கலாமோ... ராகவன் - மைதிலியின் இறப்பு நடந்திருக்காதோ.... அவர்கள் முகத்தைக் கூடப் பார்க்க முடியவில்லை என்று மருகிக் கொண்டிருந்தான்.

இதற்கு மேலும் அங்கிருந்து இன்னும் எதையும் மிஸ் பண்ணக் கூடாது என்று முடிவெடுத்தவன்... இங்கு செட்டிலாகும் வேலைகளைத் துரிதப்படுத்த... அதன் விளைவே அவனின் இந்தியப் பயணம்.

அவனின் முடிவைக் கேட்டவள்... சந்தோஷத்தில் அவனிடம் துள்ளலாகப் பேச ஆரம்பித்தாள். பழைய கீர்த்தி அவளிடம் திரும்பியிருந்தாள்.

வினோத்தும் அவளுடன் சரிக்குச் சரியாக வாயாட ஆரம்பித்தான். குறத்தி என்று கூப்பிட்டெல்லாம் கிண்டல் செய்யாமல்... தற்போதைய அவளின் உற்சாகத்தைக் கெடுக்காமல்... ஒழுங்காகப் பேசினான்.

பிறகு பாலாவிடமும்... தன்னுடைய முடிவைக் கூறியவன்... தன் தொழில் தொடர்பாகத் தனக்கு அவன் உதவியும் தேவை என்பதைச் சொல்லிப் போனை வைத்தான்.

கீர்த்தி அவன் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தாள்.

கீர்த்தியின் உற்சாகம் பாலாவுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தாலும்... அதற்கு வினோத்தான் காரணம் என்கிற போது மனம் சிறிது சுணங்கத்தான் செய்தது.

29

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாய்க் கழிவது போல் போனது கீர்த்திக்கு.

பாலாவை நினைத்தாலே... அவன் எந்த நேரத்தில் எப்படி நடந்து கொள்வான் என்று அவளால் அனுமானிக்க வேறு முடியவில்லை. காரில் அன்று அப்படி நடந்தான். வீட்டில் அவள் படுக்கையில் படுத்தான். அதன் பிறகு அவன் வீட்டில் அந்த அளவு மோசமாக நடக்கவில்லை. அதே நேரத்தில் சீண்டாமலும் இருக்க வில்லை. அலுவலகத்தில் எம்.டி. என்ற விதத்தில் இருந்து அவன் கீழிறங்கி நடக்கவில்லை.

கீர்த்திக்கு அவனைப் புரிந்து கொள்வதே பெரும் போராட்டமாக இருந்தது. இப்போதெல்லாம் அதுவே தன் பெற்றோரின் நினைவைத் தாண்டி அவளை ஆக்கிரமிக்க ஆரம்பித்து இருந்தது.

அது மட்டும் இல்லாமல்... முன்னர்... கீர்த்தி பாலாவைத் தன் கண்களால் அவன் அறியாத வண்ணம் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பாள். அவன் அதை உணராததால்.... அவன் பார்ப்பானோ என்ற சிக்கல் இல்லாமல், அவனைக் கண்களால் சிறைப் பிடித்துத் தன் மனதினுள் பூட்டி வைப்பாள். அது ஒரு சுகத்தைக் கொடுத்தது. இப்போது அது கூட முடியவில்லை அவளால்... அவள் மேல் உள்ள பார்வையை அவன் எடுத்தால்தானே... அவனின் ஊடுருவும் பார்வையைத் தாண்டி இவள் எங்கு பார்க்க...?

சிந்து... அவளிடம் மட்டும்தான் கீர்த்தி கீர்த்தியாக இருந்தாள். அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க... அவளுடன் கொஞ்சம் அரட்டை அடிக்க... அவள் பள்ளியில்

நடக்கும் போட்டியில் எல்லாம் அவளைக் கலந்து கொள்ளச் சொல்லி... தானே அதற்குத் தயார் செய்தும் கொடுத்தான். இவ்வாறாக அவளது நாட்கள் நகர... அடுத்த வியாழன் மாலையும் வந்தது.

போன வாரம் இருந்தது போல் பெரிய படபடப்பெல்லாம் இல்லை. அது மட்டும் இல்லாமல்... பாலா வேறு மீட்டிங் இருப்பதால் இன்று இரவு வீட்டிற்கு லேட்டாக வர முடியும்... அவனுக்காகக் காத்திருக்க வேண்டாம்.... என்று அவளிடம் சொல்லி... சாப்பிட்டுத் தூங்கச் சொன்னவன்... மறக்காமல் ஸ்பேர் சாவியையும் வாங்கிக் கொண்டான்.

அதனாலோ என்னவோ கீர்த்தியும் அவனைப் பற்றிக் கவலை இல்லாமல்... வீடு வந்தவள்... சாப்பிட்டு அவனுக்கு அவளது அறையில் உள்ள கட்டிலைச் சுத்தம் செய்து விட்டு... பிறகு தன் பெற்றோர் அறையில் உறங்கினாள்.

கடந்த வாரம் அவள் ஹாலில் படுத்திருந்ததிற்கு அவன் ஒன்றும் சொல்லாததால்...

இன்றும் அதே போல் படுத்தவள் உறங்க ஆரம்பித்தாள்.

ஆனால், அவன் அன்றே கோபத்தோடுதான் வந்தான். அவள் படுத்திருந்த நிலைமையைப் பார்த்தவன்... தன் கோபத்தை மறந்தான் என்பதை அவள் தெரிந்திருக்க வாய்ப்பில்லைதான். தெரிந்திருந்தால் அவளது அறையிலேயே படுத்திருந்திருப்பாளோ?

நள்ளிரவு 12 தாண்டி இருந்த வேளையில்... பாலா வீட்டிற்கு வந்தான். அவனுக்கும் நல்ல தூக்கம்தான். எப்போதடா படுக்கையில் விழுவோம் என்று நினைத்தபடிதான் உள்ளே வந்தான். அவன் மனதில் கீர்த்தியைச் சீண்டிப் பார்க்கும் எண்ணம் எல்லாம் இல்லைதான்.

இதெல்லாம்... அவன் அறையில் கீர்த்தி இல்லாததைப் பார்க்கும் வரைதான். ஹாலிலும் இல்லை. தங்கள்

அறையிலும் இல்லை என்றால்... என்று யோசித்தவன், அவள் பெற்றோரின் அறையில் படுத்திருப்பதை உணர்ந்து... அவளைப் பார்க்கச் சென்றான். அவன் வந்தது கூடத் தெரியாமல் அவள் நல்ல உறக்கத்தில் இருக்க...

'இருக்குடி உனக்கு...' என்றபடி... தன்னை ரீஃப்ரெஷ் செய்து வந்தவனின் கண்கள் தூக்கத்திற்கு விடை கொடுத்திருந்தன.

மெதுவாக அவளது அருகில் வந்தவன்... அவளைக் கண்களால் அளவெடுக்க ஆரம்பித்தான். அதுவும் அந்த மங்கலான வெளிச்சத்தில்... அவள் படுத்திருந்த விதம் வேறு அவனை இம்சிக்க ஆரம்பித்தது. அவளும் ஏனோதானோவென்றெல்லாம் படுக்கவில்லை. போர்வையை அவளின் கழுத்து வரை போர்த்தி இருந்தாள்தான். இருந்தாலும் அவள் மேனியின் மேடு பள்ளங்கள் வரி வடிவமாகத் தெரிய... அதற்கே பாலா தடுமாறினான். அவன் இது நாள்வரை அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகள் எல்லாம் அவனை மீறி எழும்ப ஆரம்பித்தன.

இளம் காளையினைக் கட்டி வைத்துப் பின் திடீரெனக் கட்டவிழ்த்தது போல அவனுக்கும் அவனின் இளமை உணர்ச்சிகள் கட்டவிழ, அவனுக்கு மூச்சடைத்தது. இருந்தாலும்.. இது அவனின் உணர்ச்சிகளுக்கான வடிகால் தேடும் நேரமல்ல என்பதை உணர்ந்து... தன்னை அடக்க ஆரம்பித்தான். முழு முயற்சியுடன் தன்னை அடக்கி அதில் வெற்றியும் கண்டவன்... அதன் பிறகே கீர்த்தியை எழுப்பினான்.

வழக்கம் போல் உடனே எழுந்தாள்தான். ஆனால், அவனைப் பார்த்தவள்... அவன் பார்வையில் என்ன உணர்ந்தாளோ.... என்ன நினைத்தாளோ... அவளது கை அவளையும் அறியாமல்... அவளது உடையை எல்லாப் பக்கமும் சரி பார்த்து இழுத்துவிட.... பாலாவிற்கு... கோபமும் சிரிப்பும் சரிசமமாக வந்தது.

'என்கிட்ட இருந்து எத்தனை நாளைக்கு இதையெல்லாம் மறைத்து வைப்பாய் என்று பார்க்கிறேன்...' என்று கணவனாய்க் கூசாமல் எண்ணியவன், அதை வெளியில் சொல்லாமல்...

"கீர்த்தி, வா. அங்க வந்து படு..." என்று அழைத்தான்... நல்ல பிள்ளையாய்.

அதற்கெல்லாம் அடங்குவாளா கீர்த்தி.... "இல்ல பாலா. நான் இங்கேயே படுத்துக் கொள்கிறேன். நீங்க அங்க படுத்துக்கோங்க..." என்று அவனுக்குப் பிடிக்காத பதிலைச் சொன்னாள்.

"அங்கேதான் மற்றவர்களுக்காக ஒரே அறையில் படுக்க வேண்டிய கட்டாயம். இங்கு யாருக்கு நாம் பயந்து நடக்க வேண்டும்? அதனால்..." என்றபோதே அவளது கை அவனது பிடியில் இருந்தது.

அவளின் அருகே நெருங்கி நின்று அடிக்குரலில்... "வாடி... அது தெரியாமத்தான் உன்னைக் கூப்பிடறேனா? விளக்க வந்துட்டா..." என்று அவளின் கண்களைப் பார்த்துச் சொல்ல... குரலில் இருந்த அவனின் உரிமையும்... அவனின் கோபமும்... அவனின் நெருக்கமும்... முதன் முதலில் அவனிடமிருந்து வெளிப்பட்ட அந்த 'டி' என்ற அழைப்பும்.. அவளை அவன் கணவனாக உணரத்தான் செய்தது. அந்த அரை இருட்டில் அவளை உருக்கத்தான் செய்தது. ஆனாலும் அவனின் அழைப்பில் உருகிய மனதை... மீட்டு எடுத்தவள்,

"என்ன டி...யா! பாலா... மைண்ட் யுவர் வோர்ட்ஸ்!" என்றாள் கடுப்பாக.

"ஆமாடி. என் பொண்டாட்டி. நான் மைண்ட் பண்றத பத்தியெல்லாம் அப்புறம் பேசலாம். இப்போ வா!" என்று அவளின் கடுப்பிற்கெல்லாம் சளைக்காமல் அவளை இழுக்க... கைகளை வேகமாக உதறியவள்...

நீ என்ன வேண்டுமென்றாலும் பண்ணிக் கொள். நான் படுக்கப் போகிறேன்... என்பது போல் படுத்துப் போர்வையைத் தன் தலைவரை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

"ஏய்...என்ன... திமிராடி உனக்கு?" என்று அவளின் அவமதிப்பில் அவன் ஆவேசத்துடன் அவள் போர்வையை இழுக்க...

அவனின் வார்த்தையின் ஆவேசத்தை உணர்ந்த வளுக்கு... உள்ளே கிலிதான்... இதுவரை அவள் அறிந்த பாலா தன்மையுடன்... நாகரிகமாக மட்டும்தான் அவளிடம் பேசியிருக்கிறான்.

இந்த அளவு கடுமையாக... வார்த்தைகளில் 'டி' போட்டுப் பேசியது அவளுக்கு அதிர்ச்சியைத் தந்தது. இருந்தாலும் பிடிவாதமாகப் படுத்திருந்தாள் கீர்த்தனா.

இவளிடம் பேசி ஒன்றும் ஆகப் போவதில்லை... என்று முடிவு செய்தவன்... அவள் மேல் போர்வையை வேகமாக இழுத்தவன்... இழுத்த வேகத்தில் அவளையும் தூக்கி யிருந்தான்.

அவன் தூக்கிய நிமிடத்திலேயே பதறியவள்... துள்ளிய மீன் போல் அவனிடமிருந்து அவனை விட்டு இறங்கினாள். பாலா கொஞ்சம் லேசான பிடிமானத்தில்தான் அவளைத் தூக்கி இருந்ததால் அவளால் அவனை விட்டு இறங்க முடிந்தது.

அவனும் அவளை விட்டு விட்டான். அவனை விட்டு இறங்கியவள்... வேகமாகக் கட்டிலின் எதிர்ப்பக்கம் சென்றும் விட்டாள். அந்த அறையில் கட்டில் அறையின் நடுவில் இருந்ததால்...

அவனின் அடாவடி... ஆவேசம் உணர்ந்தவளுக்குப் பேசாமல்... தனது அறையிலேயே கீழேயே படுத்திருக்க

லாமோ என்று தோன்றியது என்னவோ உண்மைதான். இருந்தாலும் அவள் குணம் மாறுமா?

ஆனால், பாலாவுக்கோ... நடு ராத்திரி... அவளோடு கட்டிலில் சரசமாடுவதை விட்டு விட்டு இப்படிக் கட்டிலைச் சுற்றிக் கபடி ஆடிக் கொண்டிருக்கும் தன் நிலையினை எண்ணி நொந்தான். நோவதைத் தவிர வேறு வழியில்லை. தவறு அவன் பக்கம் உள்ளதால்... அவளுக்கு அவனைப் பிடிக்காவிட்டால் கூட அவன் அவளை நெருங்க யோசிப்பான். ஆனால், அவள்தான் வேண்டுமென்றே பிடிவாதம் பிடிக்கிறாளே... தானும் அவள் மனம் வருத்தப்படுவாள் என்று அவள் வழியிலேயே போனால்... கண்டிப்பாக என்றும் வழிக்கு வர மாட்டாள். அதனால்தான் கொஞ்சம் வன்மையாகவும் நடக்க ஆரம்பித்தான் பாலா. அது கூட அவளாகத்தான் இன்று நடந்தது. கீர்த்தி அறையிலேயே படுத்திருந்தால் கூட இப்படி நடந்திருப்பானா என்று தெரியவில்லை.

"ஏன்டி... என்னைப் பார்த்து ரேப் பண்ணப் போற வில்லன் மாதிரி ஆக்ஷன்லாம் பண்ற.... கடவுளே! பாலா... உனக்கா இப்படி?" அவளைப் பார்த்துச் சொல்லித் தலையில் அடித்தான்.

அவனின் இந்தச் செய்கையில்... கீர்த்திக்கே தான் செய்வது கொஞ்சம் ஓவரோ என்று கூட நினைக்க வைத்தது.

கீர்த்தி தன்னைத் தானே சமன்படுத்தி... தன்மையாக, "பாலா... அன்றைக்கும் நான் ஹாலில் தானே படுத்திருந்தேன். இன்று மட்டும் ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்?" என்றாள்.

"அன்னைக்கே உன்னிடம் இப்படி நடந்து கொள்ளவில்லை என்று கோபமா, கீர்த்தி?"

முறைத்தாள் கீர்த்தி.

அவளின் முறைப்பில்... சிரித்தவன்... "டார்லிங்! அன்னைக்கும் இதே கோபத்தோடுதான் வந்தேன். நீ படுத்

திருந்த கோலத்தில் ஒன்றும் சொல்லாமல்... பண்ணாமல் போய் விட்டேன்..." என்று விளக்கம் கொடுக்க...

"உங்களுக்கு எதுக்குக் கோபம் வர வேண்டும்... நியாயமா எனக்குத்தான் கோபம் வர வேண்டும். என் பெட்ல எதுக்குப் படுக்கறீங்க? எனக்கு என் பெட்ல அடுத்தவங்க படுத்தா பிடிக்காது...." என்று அன்று பாலா சொன்ன வார்த்தைகளைப் பிடித்துக் கொண்டு... அன்று தன் மனதில் சாட்டையடி வாங்கிய வார்த்தைகளை... அதே வலியுடன் திருப்பிக் கொடுத்தாள்.

பாலாவிற்கோ... அது வலிக்கவில்லை. மனைவியின் பதிலடியை ரசித்தபடி... "அன்னைக்கு நான் பைத்தியக்காரனா இருந்துட்டேன். இப்போ பைத்தியம் தெளிஞ்சுடுச்சு..." என்றான் கொஞ்சம் கூட யோசிக்காமல்.

மது மேல் இருந்த பைத்தியமா... என்று கேட்கத்தான் நினைத்தாள். ஆனால்... இந்தச் சூழ்நிலையில் கேட்டால்... அது தனக்கே ஆப்பாக முடியும் என்பதால்... நல்லவேளை கேட்கவில்லை. தன் கணவன் என்ற நினைவை விட... அவன் மதுவின் காதலன் என்ற நினைவுதான் அவளுக்கு அதிகமாய் இருந்தது. அவன் தன் மனதில் இருந்தும்... போதாத குறைக்கு அவன் அந்நியமாய் நினைத்து நடத்திய ஒதுக்கம் வேறு... அவளை அவனிடம் நெருங்க விடாமல் செய்தது.

அவள் யோசித்தபடி இருந்தபோதே, அவளின் அருகில் வந்து இழுத்துக் கொண்டு போனான். அவளும் இனி பிடிவாதம் பிடித்தால்... இன்னும் அவன் கோபத்தை அதிகரித்து அது தனக்கே பிரச்சனை ஆகிவிடும் என்பதால்... பேசாமல் அங்கு போய்க் கீழேயே படுத்துத் தொலைப் போம்... என்று அவன் கைப்பற்றி இழுத்தவுடன் அவனோடு போனாள். ஆனால், அந்த எண்ணத்திற்கும் சோதனை வரப் போவது தெரியாமல்...

"ப்ச்ச்... விடுங்க. நானே வருகிறேன்," என்றவளிடம்... வாதம் செய்யாமல் கையை விட்டான் பாலா.

அவனை விட வேகமாக உள்ளே நுழைந்தவள்... அதே வேகத்தில் தன் படுக்கையை விரித்தாள்.

கதவை மூடியவன்... திரும்பி அவளிடம்... கதவில் சாய்ந்தபடி...

"என்ன மேடம் பண்றீங்க?" என்று கேட்க...

"அதான் வந்துட்டனே... இன்னும் என்ன?" என்று பட்டென்று கொடுத்தாள்.

"ஹம்ம்ம்.... அதெல்லாம் சரிதான். இப்போ என்ன பண்ற?"

"பார்த்தா தெரியலை... நீங்க சொன்னபடி படுத்துத் தொலைக்கப் போறேன். இந்த ரூம்ல..." என்று அழுத்திச் சொன்னாள்.

"ஓ... நான் சொன்னபடி..." என்று இழுத்து, "நீயும் அப்படியே கேட்டு உடனே வந்துட்ட..." என்று எகத்தாளமாகப் பேசியவன், தொடர்ந்து, "அதெல்லாம்... நீயே எப்போதும் போல் படுத்திருந்தால்... இல்லை, நான் வந்து கூப்பிட்டவுடன்... இல்லை, அதிகபட்சமாக நான் வற்புறுத்தும்போது கூட வந்திருந்தால்... இப்போது இந்த இடத்தில் படுத்திருக்கலாம். ஆனா... நீ என்னைக் கட்டிலைச் சுற்றிக் கபடி ஆட வச்சேல... தண்டனை வேண்டாம். அதனால... மேல படு... என் பக்கத்துல..." என்று சாதாரணமாகச் சொல்லி அவளை ஆட்டம் காண வைத்தான்.

'இவன் இதெல்லாம் பிளான் பண்ணிப் பண்றானா... இல்ல, நாம செய்யறதை வெச்சுப் பண்றானா...' அவளுக்கே குழப்பமாகி விட்டது. 'இப்போ என்ன பண்ணுவது? நான் படுக்க மாட்டேன் என்று சொன்னால் அதை நூலாகப் பிடித்துக் கொண்டு என்ன செய்வானோ...' என்று தோன்றியது.

இருந்தாலும், "படுக்க மாட்டேன்னா... என்ன பண்ணுவீங்க?" என்றாள்.

"அது சரி... தைரியம்தான் உனக்கு. நான் என்ன பண்ணுவேன்னு தெரியணுமா... சரி, கேட்டுக்கோ. எதை நினைத்துப் பயந்தியோ... இந்த ரூம்ல படுத்தா என்ன ஆகும்னு... நினைத்தாயோ... இல்ல, என்னை நம்பாம... நான் என்ன பண்ணுவேன் என்று தோன்றியதோ... அது அத்தனையும் நடக்கும்..."

இப்போதும் அவன் கதவின் மேல்தான் சாய்ந்திருந்தான்.

ஆனால்... அவன் பார்வை... அவளின் மேல் பதிந்த விதத்திலே அவன் சொன்னதைச் செய்வான் என்று தோன்ற...

கீர்த்திக்கும் அவன் சொன்னவுடன் படுக்க இஷ்டம் இல்லைதான். பிடிவாதம் பிடிக்க வேண்டும் என்றுதான் நினைத்தாள். ஆனால், வறட்டுப் பிடிவாதம் பிடித்து அவன் சொன்ன மாதிரி நடந்து விட்டால்... எல்லாத்தையும் முடித்து விட்டு... 'நான் சொன்னேன். நீ கேக்கலை. அதான் இப்படி நடந்தேன்...' என்று கூலாகச் சொன்னாலும் சொல்வான். அவன் மேல் தவறே இல்லை என்பது போல...

இவள் மட்டும் என்ன... அவன் தொட்டால் எதிர்க்கவா முடியும்? ஆனால், அதன் பிறகு... மனதிலும் தெளிவில்லாமல்... மனதளவில் அவனை நேசிப்பதே இன்னொருவருக்குச் சொந்தமான பொருளை அவருக்குத் தெரியாமல் ரசிப்பது போல் அவளைக் கொல்ல... அவனோடு உடல் அளவிலும் இணைந்து... நினைக்கவே அவளுக்குப் பயம் வந்தது. அது தனக்குக் கிடைத்த அடுத்தவரின் பொருளை அவருக்குத் தெரியாமல் உபயோகிக்கும் திருட்டுத்தனம் போல் தோன்றியது. நினைக்கவே தன் மேல் அருவருப்பாக இருந்தது.

அவளின் இந்த மனநிலையை மாற்றப் பாலாவால் முடியுமா, இல்லை தன்னால் முடியுமா... அப்படி முடிந்தால் மட்டுமே... அவனோடான தன் வாழ்வு நேராகச் சாத்திய மாகும். ஆனால், அது முடியுமா... முடியாதது போல்தான் தோன்றியது அப்போதைக்கு. காலம் என்ற ஒன்று எதையும் மாற்றும் என்பதை விரைவில் உணர வைக்கும் என்று அவளின் புத்தியில் அப்போது உறைக்கவில்லை.

இப்போதைக்கு அவனைத் தடுக்க... மேலே படுப்பது தான் சரி... என்று தோன்ற, பாலா சொன்னால் மீற மாட்டான். அவளிடம் வம்பு பண்ண மாட்டான் என்பதால் அவனோடான தன் வார்த்தைப் போராட்டத்தை நிறுத்தி விட்டு... தன் உணர்ச்சிகளுடன் போராடியபடி படுத்தாள், தன் கட்டிலில்.

"குட். ரொம்ப நாளைக்கப்புறம் ஸ்மார்ட் கீர்த்தினு ப்ரூஃப் பண்ணிட்ட..." என்றபடி கூலாக அவளது அருகில் படுத்தான் அவள் கணவன்.

சற்று இடைவெளிதான் இருந்தது இருவருக்கும். சொன்னபடி அவள் படுத்ததால்... பாலாவும் ஒன்றும் சீண்டவில்லை.

அவள் ஏதாவது மறுத்தால்... வேறு ஏதாவது சான்ஸ் கிடைத்திருக்கும். பாவி... புரிந்து கொண்டு விட்டாள். ஆனாலும் இவ்வளவு புத்திசாலித்தனம் கூடாது தன் மனைவிக்கு என்றபடி படுத்திருந்தான்.

சொல்லி விட்டோமே என்று... அவளின் அருகாமை அவனை இம்சித்த போதும், பிரயத்தனப்பட்டுத் தன்னை அடக்கியபடி படுத்திருக்க...

கீர்த்திக்கோ அவனின் அருகாமை... கணவனே என்றாலும் கூட... அந்த உறவும் சுமுகமாக இல்லை என்ற நிலையில்.. ஒரு ஆண் மகனுடன் இவ்வளவு அருகில் படுக்கின்ற நிலை புதிது என்பதாலும்... சுத்தமாக மூடிய

வில்லை. படுக்கையில் புரளக்கூட முடியவில்லை. ஒரே நிலையில் பத்து நிமிடம் கூடப் படுக்க முடியாமல்... ஒரு கட்டத்தில் எழுந்து உட்கார்ந்து விட்டாள்... அவளால் முடியவில்லை. இவன் வேறு என்ன சொல்வானோ என்றும் நினைத்தாள்.

அவளின் அவஸ்தையை உணரத்தான் செய்தான் பாலா. ஆனால் எதுவும் அவளிடம் கேட்கவில்லை... எங்கே எதுவும் பேசப் போய்... தன்னை மீறி எதுவும் நடந்து விடுமோ என்ற பயம் அவனுக்கு...

அதனால் அவள் உட்கார்ந்திருப்பது தெரிந்தும்... தன்னை அடக்கியபடி கண் மூடியே இருந்தான். அதுவும் சிறிது நேரம்தான். அவள் படுக்காமல் சுவரில் சாய்ந்தபடி கால்களில் கைகளைக் கட்டியபடி தலையை முழங்கால்களில் வைத்துப் படுத்திருந்தாள்.

நீ சொன்னாய். மேலே வந்துவிட்டேன்... இதற்கு மேல் என் இஷ்டம்தான் என்பது போல் இருந்தது அவள் செயல்.

அவளின் செய்கையை மனதினுள் ரசிக்கத்தான் செய்தான். அதே நேரத்தில் அவளை அப்படியே விட்டு விடவும் மனதில்லை.

"என்ன படுக்கலையா?" என்று அதட்டினான்.

"எனக்குத் தூக்கம் வரலை... நான்தான் உங்க மிரட்டலுக்குப் பயந்து வருவேன். தூக்கத்திற்கெல்லாம் உங்க மிரட்டலுக்குப் பயந்து வரத் தெரியாது...." என்றாள்.

அந்தச் சூழ்நிலையிலும் அவளின் குறும்புப் பேச்சு வழக்கத்தில் அவனுக்குப் பதிலடி கொடுத்தாள்.

"ஹம்ம்ம்ம் அப்படியா... கீதும்மா...!" என்று அவளின் அருகே அமர்ந்தவன்... மெதுவாக, கிசுகிசுப்பாக அவள் காதில், "அதையும் வர வச்சுடவா..." எனக் கூற...

அவன் நெருக்கமே அவளுக்குள் பிரளயத்தை ஏற்படுத்த... அவன் குரலில் இருந்த தாபம்... அவளுள் ரசாயன மாற்றத்தை விளைவித்துக் கொண்டிருந்தது.

அவனிடம் மயங்கும் தன் நிலை பிடிக்காமல்... அதைத் தாளாமல்... அவனிடம் கெஞ்சலில் இறங்கினாள்.

"ஏன் பாலா... இப்படி எல்லாம் நடந்துக்கறீங்க? எனக்குப் பிடிக்கலை... ப்ளீஸ் என்னை விட்டுடுங்க... நீங்க பண்றதெல்லாம் நல்லாவே இல்லை... எனக்கு ஒரு மாதிரி இருக்கு... உங்களை இப்படியெல்லாம் நினைக்கவே எனக்குப் பயமாய் வருகிறது.... நீங்க நல்லாத்தானே இருந்தீங்க... ஏன் இப்படியெல்லாம் பண்றீங்க...?" என்று கண்ணீர் மல்கக் கூற.

அதில் எல்லாம் அவன் கொஞ்சம் கூட மசியாமல்...

"நான் பண்றது நல்லா இல்லையா... ஆமாம்ல. புருசனா நான் பண்றது நல்லா இல்லதானே... என்ன பண்ணலாம்... நான் பண்ணிட்டு இருக்கிற காரியத்தை நல்லா ஆக்கிடலாமா... நான் ஏற்கெனவே என் உணர்ச்சியை எப்படியோ அடக்கிக் கொண்டு, உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்... நீ இப்படியே உட்கார்ந்திருந்தால்... என்னிடம் வம்பு வளர்த்துக் கொண்டே இருந்தால்... இந்த நேரத்தில் அப்புறம்... நான் புருசனா.. நல்ல காரியம் எல்லாம் பண்ண வேண்டியதுதான்... உனக்கு ஓ.கே.வா?" என்று சொல்லி அவள் அருகே இன்னும் நெருங்குவது போல் பாவனை காட்ட...

கீர்த்தி அவனைத் தள்ளிவிட்டுப் படுத்தவள்... சுவரோரம் திரும்பி அதனோடு ஒன்றினாள்.

இருவரும் ஒருவரின் அருகாமையை ஒருவரும் கொருவர் விரும்பினாலும்...

பாலா அவளை நெருங்க முடியாமல் தவிக்க... கீர்த்தி நெருங்க மனம் இல்லாதவளாய் அவனைத் தவிர்த்தாள்.

அவள் தூங்கவே இல்லை. புரண்டபடிதான் இருந்தாள்... வெகு நேரம் அவளின் இந்தச் செய்கை தொடர... மனம் தாங்காமலும்...

அவனுக்கும் அவன் உடலையும்... மனதையும் அடக்கும் வழி தெரியாமல்... கட்டிலை விட்டு இறங்கி அவளுக்குத் தனிமை கொடுத்தபடி... வெளியே வந்து படுத்தான்.

அவன் சென்றதை உணர்ந்தவள்... இதைத்தானே நானும் பண்ணினேன். அவனுக்கு ஒரு நியாயம்... எனக்கு ஒரு நியாயமா... என்று யோசித்தவளுக்கு... அவனை மாதிரியே மிரட்டித் தான் இழுத்து வருவது போல் கற்பனை தோன்ற... அவளுக்குப் புன்னகை வந்தது.

'இழுத்துட்டு வந்து... என்ன கீர்த்தி மிரட்டுவ... அவன் அதுக்குத்தானே காத்திருக்கான்... இதுக்குப் பேர்தான் சனியனைத் தூக்கிப் பனியனுக்குள்ள போடுறதா...!'

அவளது மனச்சாட்சி கேட்க.. 'நீ சொல்றதெல்லாம் சரிதான்.. அதுக்காக... பாலாவைச் சனியன்னு சொல்வியா...?' என்று தன் மனச்சாட்சியை அதட்டியவள்... ஒரு மாதிரியான மனநிலையில் வெகு நாட்களுக்குப் பின் நன்றாக உறங்கினாள்.

ஏர்போர்ட்டில்... வினோத்துக்காகக் கீர்த்தியும் பாலாவும் காத்திருந்தனர். கீர்த்தி கடும் கோபத்தில் இருந்தாள் வினோத் மேல்.

15 நாட்களில் வருவதாகச் சொல்லியவன் அதற்கு முன்னமே வரும் சூழ்நிலை வர, அதைப் பாலாவிடம் மட்டும் சொல்லி விட்டு... கீர்த்தியிடம் சொல்ல வேண்டாம்... அவன் வரும் நாள் அன்று, ஏர்போர்ட்டுக்கு அழைத்து வரச் சொல்லி இருந்தான். அதனால் பாலாவும் சொல்லாமல் இருந்து விட... இன்றுதான் கீர்த்திக்குத் தெரியும்.

வரும்போதே வம்போடுதான் வருவானா இந்த வினோத் என்றபடி... வரட்டும் அவன்.... இருக்கு கச்சேரி என்று அவனை அர்ச்சித்தபடி அவனுக்காகக் காத்திருந்தாள்... இருந்தும் அவனை எப்போது பார்ப்போம் என்று ஆவலாக இருந்தாள்.

வினோத்தும் வந்தான்... ஆனால், அவனைப் பார்த்தவுடன்... அவள் கோபமெல்லாம் மறந்து கீர்த்தி பேச ஆரம்பித்தாள். அவள் அவனோடு இயல்பாகப் பேசினாள்... வாயாடினாள்... பாலாவிற்கே இவள் இப்படியெல்லாம் பேசுவாளா என்று தோன்றியது.

வினோத்திற்கோ... கீர்த்தியின் இயல்பான பேச்சில் ஓரளவு தன்னை... தன் துக்கத்தில் இருந்து மீட்டுக் கொண்டு விட்டாள்... எனும்போதே நிம்மதியாக இருந்தது. அதற்குப் பாலா மட்டுமே காரணம் என்பதால்... அவனுக்குப் பாலாவின் மேல் மிகுந்த மரியாதை எழுந்தது.

காரில் பாலாவுடன் முன்னே வழக்கம் போல அவள் அமர்ந்திருந்தாள். வினோத் பின்னால் அமர்ந்திருந்தான். கீர்த்தி அவன் புறம் திரும்பியபடி பேசிக் கொண்டிருந்தாள்.

நன்றாகப் பேசியபடி வந்தவள்... திடீரென்று, "ச்சே! நான் உன்கூடப் போய்ப் பேசிட்டு வரேனே... நீ வர்றத என்கிட்ட சொல்லலேல்ல... போடா. உன்கிட்ட பேச மாட்டேன்... நீ யார்கிட்ட சொன்னியோ... அவங்க கூட மட்டும் பேசு. என்கிட்ட பேசின... கொல வெறி ஆகிடுவேன்!" என்று வினோத்தை முறைத்து விட்டு... திரும்பி நேராக உட்கார்ந்தாள்.

"அய்யோ... என் கீர்த்திச் செல்லம் மலை ஏறிட்டாளே... நான் என்ன பண்ண... என் கீர்த்திய என்கூடப் பேச வைக்க எனக்குச் சப்போர்ட் பண்ணக்கூட ஆள் இல்லையே!" என்று வினோத் வழக்கம் போலப் பேச...

அவனுக்கும் அது வித்தியாசமாய்ப் படவில்லை... கீர்த்திக்கும் அது வித்தியாசமாகப் படவில்லை... இருவரும் ஒன்றை மறந்தார்கள்.

இன்று அவள் இன்னொருவனின் மனைவி... என்பது வினோத்திற்கு...

கீர்த்திக்கு... அவள் பாலாவின் மனைவி என்பதும்... அவன் முன் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதும்!

கேட்ட பாலா அதிரத்தான் செய்தான்... அதிர்ந்தவன், "என்னது... என் கீர்த்தியா! செல்லமா...?" என்றான்.

மனதுக்குள்... கோப அலை ஆர்ப்பரித்தது. கார் அவனது கோபத்திற்கு ஏற்ப வேகமாகச் செல்லத் தொடங்கியது.

காரின் திடீரென்ற வேகத்தில் வினோத் சற்று யோசனையுடன் பாலாவை நோக்க... அங்கு அவனது கோப முகம் கண்ணாடியில் மறையாது தெரிய...

வினோத் சுதாரித்து விட்டான்... அவனின் கோபம் புரிந்தது. அதன் நியாயம் உணர்ந்தவன்... அதற்கு மேல் கீர்த்தியின் மேல் காட்டும் உரிமையில் கவனம் கொண்டான்.

கீர்த்திக்கு அதெல்லாம் புரியாமல் தன் சண்டையிலேயே நின்று கொண்டிருந்தாள். வினோத்தும் ஓரளவிற்கு அவளைச் சமாதானப்படுத்தியபடி வந்தான்.

அவனின் சமாதான முயற்சியில் ஓரளவு இறங்கி வந்தவள், "என்னடா வினோத்... மீசைய ஏன் எடுத்த? நல்லாவே இல்ல உனக்கு... எனக்குப் பிடிக்காதுன்னு தெரியும்ல... என்னைய டென்சன் படுத்தணும்னே வந்தியா... என்னைப் பார்க்க வருவேனு தெரியும். தெரிஞ்சும்... மீசை இல்லாம வர..." என்று கேட்க...

பாலாவின் நிலைமையோ மிகப் பரிதாபம் ஆனது.

'இப்போ அவன் மீசை வச்சா இவளுக்கு என்ன... வைக்கலேனா என்ன... என்னைப் பத்திலாம் இப்படிக் கவலைப்படுவாளா' என்று இருந்தது. தானும் ஒரு நாள் மீசையை எடுத்துவிட்டு வந்து அவள் முன் நிற்க வேண்டும்.

அவள் தன்னைத் திட்டுவாளா... என்று நினைக்கத் தொடங்கியது.

வினோத்தோ... இருவரையும் ஒரு மாதிரியாகப் பார்த்தபடி, கொஞ்சம் நக்கலுமாக, "அதுதான் சினிமால வர்ற மாதிரி என்னை அமெரிக்க மாப்பிள்ளை ஆக்கிட்டீங்களே... அதுனால அமெரிக்காலனாச்சும் எதுனாலும் பொண்ணு செட்டாகுமானுதான் மீசையை எடுத்துட்டு சுத்திட்டு இருக்கேன்..." என்று சொல்ல...

கீர்த்தி....பாலாவைப் பார்த்துப் பின் அமைதி ஆனாள்.

வருத்தமும் இருந்ததோ என்று பாலாவுக்கு மட்டும் தோன்றியது.

பாலாவிற்கு... அவனின் பதிலில் சிரிப்பு வந்ததோடு அசந்துதான் போனான். அவன் நினைத்தது போல சாதாரணம் ஆனவன் இல்லை என்று தோன்றியது.

இருவரின் அமைதியைப் பார்த்தவன்... அதைத் தானே மாற்றும் முயற்சியில்.... "ஹேய்... டேஷ்... டேஷ் கூல் கூல்... சும்மா ஒரு ஃபன்னுக்குச் சொன்னேன். நீ உம்முனு ஆகிடாத!" என்று குறத்தி என்று சொல்லாமல்... டேஷ் என்று சொன்னதைக் கீர்த்தி புரிந்து முறைக்க...

பாலாவின் முன் குறத்தி என்ற சொல்லைத் தவிர்க்க வினோத் அவ்வாறு சொன்னான், பாலாவின் மனநிலை புரிந்தவனாய்!

பாலாவோ, "அது என்ன டேஷ் வினோத்..." என்று புரியாமல் கேட்க... (அதில் என்ன இருக்கோ.... அவன் கவலை அவனுக்கு.)

வினோத்தோ... தயங்கியபடியே, "அது பாலா... உங்க வைஃப...நான் செல்லமாக் கூப்பிடுவேன்... சும்மாவே அவளுக்கு அது பிடிக்காது... நீங்க வேற இருக்கீங்க... உங்களை வச்சே என்னைக் கொலை பண்ணினாலும்

பண்ணிடுவா.. என் வாயால நான் சொல்ல மாட்டேன்பா... வேணும்னா... அவகிட்டயே கேட்டுகோங்க... என்னை ஆளை விடுங்க!" என்று கீர்த்தி கோபத்திற்குப் பயந்து ஜகா வாங்க...

பாலா கீர்த்தியை அது என்ன அப்படி ஒரு செல்லப் பெயர் என்று அவளை நோக்க... பார்த்த அவனே அதிர்ந்தான். உண்மையாகவே கொலை வெறியில்தான் இருந்தாள். வினோத்தை மட்டுமே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"டேய்... நீ மட்டும் சொல்லுடா. பார்க்கலாம்... இன்னைக்குக் கார்ல இருந்து உன்னைத் தள்ளி விட்டுத்தான் போவேன்."

பாலாவின் முன் சொல்லி விடுவானோ என்று பத்ரகாளியாய் நிற்க... அதற்கு மேல் பாலா அதற்கு விளக்கம் கேட்பானா என்ன...

வினோத்தோ, "அம்மா தாயே, நான் எங்க அப்பா... அம்மாக்கு ஒரே புள்ள... நான் சொல்லலைமா!" என்று பரிதாபமாகச் சொல்ல...

அப்போதும் கீர்த்தியின் கோபம் குறையவில்லை. நல்ல வேளை குறத்தி என்று நேரடியாகச் சொல்லவில்லை. தப்பித்தான்... என்று நினைத்தாள்.

இவர்களின் வார்த்தை விளையாடலில்... செல்லச் சண்டையில்... பாலாவிற்குத்தான் தலைவலி வந்தது. எப்போதடா வீடு வரும் என்றிருந்தது...

30

அன்று விடுமுறை தினம். அது மட்டும் இல்லாமல் கீர்த்திகாவும் வந்திருந்தாள். கீர்த்தி பெற்றோர் இறந்த பின்னர்... அவளைப் பார்க்க இன்றுதான் வந்திருந்தாள்.

கீர்த்திகாவின் தங்கைக்கு... அவள் அப்பாவின் இரண்டாவது மனைவிக்குப் பிறந்தவள்... இன்னும் இரண்டு

வார்த்தில் திருமணம்... இங்கேதான் மாப்பிள்ளை பார்த்திருப்பதால்... திருமண வேலைகளினால்... இங்கே உள்ள அவர்கள் வீட்டில் அனைவரும் தங்கி இருந்தனர்.

திருமணப் பத்திரிகையைப் பாலாவிற்கு வைப்பதற்கு வந்திருந்தாள்... கீர்த்தனாவைப் பார்த்தவளுக்குச் சங்கடமாய் இருந்தது... இருந்தாலும் கேட்டாக வேண்டுமென்பதால் துக்கம் விசாரித்தாள்.

அவளும் தாயை இழந்தவள்... தாலி கட்டிய கணவனை அநியாயமாக இழந்தவள்தானே... இழப்பின் வேதனை அவளுக்கும் தெரியும்தான்...

சிந்துவும் வீட்டில் இருந்தபடியால்... ஓரளவு சூழ்நிலையினை மாற்றிக் கலகலப்பாக இருந்தது...

மணி மூன்று ஆகி இருந்தது... வினோத் அலுவக இடம் விசயமாக வெளியே போய் இருந்தான்... குமார்தான் கூட்டிப் போயிருந்தான்.

கீர்த்தனா அவனை எதிர்பார்த்தபடி காத்திருந்தாள்... மூன்றாகி விட்டது... இன்னும் சிறிது நேரத்தில் வருகிறேன் என்று சொல்லி இருந்தானே... இன்னும் வரவில்லையே என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே வினோத்தும் வந்தான். உள்ளே நுழைந்தவன்... அனைவரிடமும் ஹாய் என்று சொல்லிவிட்டு ரெஃப்ரெஷ் பண்ணிவிட்டு வந்து சாப்பிட வருகிறேன் என்றபடி மேலே ஏறினான்.

கீர்த்திகாவைப் பார்த்தான்தான்... 'யார் இந்தப் பெண்?' என்றளவில்தான் அவனது எண்ணம் இருந்தது.

சிந்துவிடம் மட்டும்... "ஹேய் சிந்து டார்லிங்... உங்க அப்பாவும் வந்துட்டாங்க..." என்ற தகவலைச் சொல்லியபடி மேலே ஏறினான்.

"கீர்த்தி அக்கா.... நான் கிளம்புகிறேன்," என்று தன் புத்தகங்களை எடுத்து வைக்கலானாள்.

மேலே ஏறிக் கொண்டிருந்த வினோத்திடம் பாலா... "வினோத்.... என்ன ஆச்சு போன விசயம்...?" எனக் கேட்க,

"டபுள் ஓ.கே... என்னைய பார்த்தாலே தெரியல... வந்து சொல்கிறேன்..." என்றான்.

"சீக்கிரம் வாடா வினோத்... உனக்குப் பிடித்த டிஷ்... மணி மூன்றாகி விட்டது..." என்று அக்கறையோடு சொல்ல...

பாலாவிற்கு மட்டும் புகைந்தது... வினோத்தோடு அவளுக்கு உள்ள 23 வருட உரிமை அவனுக்குப் புரிந்தும் கோபத்தை வரவழைக்காமல் இல்லை... கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டிருந்தான்.

வினோத்திற்கோ... அவனுக்கு இருந்த உற்சாக மனநிலையில் கீர்த்தியின் அக்கறையும் சேர... தன்னை மறந்து, "ஓ.கே. குறத்தி... ஒன் மினிட்ல வந்துடறேன்..." என்று சொல்லிய பின்தான் உணர்ந்தான்... தான் வாய் விட்டதை.

அதை உணர்ந்து, "அய்யோ கீர்த்திடா... என் செல்லம்ல... சாரி சாரி... கீர்த்தி பட்டுல்ல... தெரியாம..." என்று ஆயிரம் கீர்த்தி போட்டான்.

பாலாவை வேறு ஓரக் கண்ணால் பார்த்தபடி... பாலா கோபப்பட்டாலும் பரவாயில்லை... கீர்த்தியைச் சமாதானப் படுத்த வேண்டும். அவளது கோபம் அவனுக்கு மட்டும்தான் தெரியும்.

கீர்த்தி என்ற கீர்த்தனா... பத்ரகாளியாக மாற...

கீர்த்தி என்ற கீர்த்திகா... அவஸ்தையாய் இருக்க...

சிந்துவிற்கோ வினோத்தைப் பார்த்துச் சிரிப்பாய் வர...

கோபம் வந்திருக்க வேண்டிய பாலாவோ வேறு ஒரு நினைவில் மிதந்தான். அது அவனுக்கும் அவன் மனைவி கீர்த்தனாவுக்குமான உறவின் முடிச்சு இன்று நேற்றல்ல... என்றோ விழுந்த முடிச்சு என்ற உணர்வில் தன்னை மறந்து நெகிழ்ந்து இருந்தான்.

சிந்துதான்... "ஹய்யோ அண்ணா... கொஞ்சம் நிறுத்தறிங்களா... கீர்த்தி கீர்த்தின்னு... இந்த அக்கா பேரும் கீர்த்திதான்..."

'என்னது இந்தப் பொண்ணு பேரும் கீர்த்தியா!' அதிர்ந்தவன் ரொம்ப சொதப்பி விட்டோமோ என்றிருந்தது...

'கீர்த்தி செல்லம்... அது இதென்று வேறு சொல்லி விட்டோமே...' என்று சற்று அசடு வழிந்தவன்...

"சாரிங்க..." என்று மெல்லிய குரலில் சொன்னவன்... இப்போதைக்கு இங்கு நிற்க வேண்டாம் என்று மேலேறினான். அதற்கு மேல் கீர்த்திகாவிடம் கவனம் செலுத்தவில்லை.

கீர்த்தனாவின் கோபம்தான் அவன் கவலை இப்போது... முதலிலும் கூறுவான்தான்... அப்போதும் அவள் ஆர்ப்பாட்டம் பண்ணுவாள்தான்... ராகவன் - மைதிலியின் சமாதானத்தில்தான் அடங்குவாள்... அப்போது வராத கவலை... இப்போது அவர்கள் இல்லாததால் வந்தது.

திரும்பி வந்தவன்... "குட்டிமா... இல்ல... தெரியாம சொல்லிட்டேன். நீ வேண்ணா... என்னை எத்தனை அடி வேண்டும்னாலும் அடிச்சுக்கோ!" என்று கெஞ்சிக் கொண்டிருந்தான்.

ஆனாலும் மலை இறங்காத மாரியாத்தா அவதாரத்தில் இருந்தாள்.

பாலாதான் சுதாரித்து... "கீர்த்தி... என்ன பிடிவாதம் இது... அவர்கிட்ட பேசு... வினோத் பசியோட இருப்பார்... சாப்பாடைப் போடு!" என்றான்.

அவளோ சின்னக் குழந்தை போல் பாலாவிடம்... "அவன் அடங்கவே மாட்டான் பாலா... என்னை இப்படிக் கூப்பிடாதடானு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்... அவனுக்கு நான் ஒண்ணும் போட மாட்டேன்... அவனே

போட்டுக்கட்டும்... இல்ல பசியோடவே இருக்கட்டும்..." என்றபடி அவள் வீட்டிலிருந்த போது என்ன பிடிவாதம் பிடிப்பாளோ அந்த மாதிரி இருந்தாள்.

ஆனால், இங்கு அவள் மருமகள் என்ற ஸ்தானத்தில் இருக்கிறாள். அவனோடு தன் வீட்டில் இந்தப் பிடிவாதம் பிடிக்கலாம்... இங்கு அவளது விருந்தாளியாய் வந்திருக்கும் வினோத்திற்கு அது தன்மானக் குறைவு என்பதை மறந்து வினோத்தோடு மல்லுக் கட்டிக் கொண்டு இருந்தாள்.

பாலாவே இதை எதிர்பார்க்கவில்லை... கீர்த்தி மாதிரியான மெச்சூர்டான பெண்ணிடம் இந்த மாதிரியான குழந்தைத்தனத்தை எதிர்பார்க்கவில்லை... வினோத்தை அவஸ்தையாய்ப் பார்க்க... அவனோ இது எல்லாம் தனக்குச் சாதாரணம் என்பது போல்... சாப்பிடப் போக...

கீர்த்தி... பாலாவைப் பார்த்து முறைத்தபடி...

"அவனுக்கு நீங்க சப்போர்ட் பண்ணுனீங்க... அவ்வளவுதான்."

பாலாவோ, 'ஏற்கெனவே உனக்கும் எனக்கும் நல்லாப் போய்ட்டு இருக்கு... இது வேறயா...' என்று நினைத்தபடி வினோத் அருகில் போனான்.

சிந்து எப்போதோ போய் விட்டிருந்தாள்.

கீர்த்திகாதான் நிலைமையைச் சமாளிக்க பாலாவிடம், "நான் பரிமாறுகிறேன் பாலா. விடுங்க!" என்றபடி வினோத்திற்குப் பரிமாறப் போக...

அவனோ, "பரவாயில்லங்க. நானே போட்டுக்கறேன்..." என்று கீர்த்திகாவிடம் சொல்லியவன்... அவனாகவே பரிமாற ஆரம்பித்தான்.

இத்தனை நடந்தும் கீர்த்தனா... அசையாமல் அங்கேயே அமர்ந்து இருந்தாள்...

இப்போது பாலா... மிகுந்த கோபத்துடன்... "கீர்த்தனா... இங்க வா. நீ உன் வீட்டில் இருக்கும் போது அவர்கிட்ட எப்படி வேண்டும் என்றாலும் நடக்கலாம்... அவருக்கு ஒன்றும் தோன்றாது... இங்கு அவர் கெஸ்ட் அவரிடம் நீ இப்படி நடந்தால் அவருக்கு என்ன மரியாதை... அதுவும் இன்னொரு கெஸ்ட் முன்னால்..." என்று சொல்ல...

அவன் சொல்வது அப்போதுதான் புரிந்தது. தன் தவறை உணர்ந்தவள்... எழுந்தாள். ஆனாலும் வினோத்தை முறைத்தபடியே...

"அய்யோ பாலா... நீங்க என்னை அவ கையால... இல்ல இல்ல... கரண்டியால அடி வாங்காம விட மாட்டீங்க போல..." என்று அலற...

அதைப் பார்த்த கீர்த்திகாவுக்கும் சிரிப்பு வர... அது பாலாவையும் தொற்ற... கீர்த்தனாவிற்கு இன்னும் அதிகமாகக் கோபம் ஏறியது.

கீர்த்தனாவின் கோபத்தைப் பார்த்த பாலா வந்த சிரிப்பையும் வாயுள்ளே நிறுத்தி விட்டான்.

அதன் பிறகு... பாலா கீர்த்திகாவை அவள் வீட்டில் விடக் கிளம்ப... வினோத் இங்கிருந்து கீர்த்தியின் கோபத்திற்கு மற்றும் அடிக்கு ஆளாக நேரிடாமல்... அவனுடனே கிளம்பினான்.

போகும் வழியில் பாலா கேட்டான்... "ஏன் வினோத் அவ கோபம்தான் தெரியுதுல்ல. பிறகு ஏன் அவளை... அப்படி கூப்பிடுகிறீர்கள்...?" என்று கேட்க...

பாலா இன்னொன்றும் வினோத்திடம் கேட்க நினைத்திருந்தான்... கீர்த்திகாவை இறக்கி விட்டு வரும் போது அதைக் கேட்கலாம் என்று நினைத்திருந்தான்.

"நானா... கீர்த்தி கோபத்துக்குப் பயந்தேனா... நீங்க வேற பாலா... அவகிட்ட எத்தனையோ பட்டுருக்கேன்...

இதெல்லாம் எனக்கு ஜுஜுபி... ராட்சசி வேலையெல்லாம் பார்ப்பா... அவ மேல எனக்குக் கோபமும் வராது... நானும் அடங்க மாட்டேன். இப்போது கேட்டது போல் எல்லாம் மன்னிப்பு எல்லாம் கேட்க மாட்டேன்... சொல்லிட்டு போய்ட்டே இருப்பேன்!" என்றவன்,

"ஆனா பாலா... அத்தை - மாமா இல்லாம அதை எண்ணி நத்தைக் கூட்டுக்குள் ஒடுங்குவது போல் இல்லாமல் அவ நல்லா இருக்கானா அதுக்கு நீங்கதான் காரணம்... எங்க வீட்டுப் பொண்ணு. அவள எப்படி எல்லாம் வளர்த்தோம் என்று எங்களுக்கு மட்டும்தான் தெரியும்... எங்க எல்லார்க்கும் அவதான் இளவரசி..." என்று நெகிழ்ந்து கூறினான்.

கீர்த்திகாவும் அவன் கூறியதை எல்லாம் கேட்டபடியேதான் வந்தாள். அவளையறியாமல் வினோத் அவள் மனக் குளத்தில் கல்லெறிந்து கொண்டிருந்தான். அவன் குறத்தி... என்று அழைத்ததில் இருந்து... கீர்த்திடா... கீர்த்திமா... கீர்த்தி செல்லம்... என்று கீர்த்தனாவைக் கொஞ்சிய போதெல்லாம் அவள்... மனம்... அவளைத் தாண்டி அவனிடம் சென்று கொண்டிருந்தது... மூன்று வருடமாக அடங்கி இருந்த அவள் மனது ஆதியிடம் சென்று... அதன் பிறகு... இந்த மாதிரி தனக்கும் கிடைக்காதா என்று ஏங்க ஆரம்பிப்பது போல் தோன்றியது.

ஐந்து வயதில் தாயை இழந்து அவள் காட்டிய பாசத்திற்கு ஏங்கியவள்... அது வேறு யாரிடமும் கிடைக்காமல் நின்றவளுக்கு மதுவின் பாசம்தான்... பாலைவனச் சோலையாக இருந்தது. அதே போல் ஆதியின் நினைவுகளில் தத்தளித்தவள்... வினோத்... கீர்த்தனா மேல் வைத்திருந்த பாசம்... அவள் மனது அவளையும் அறியாமல் அவனின்பால் அவளை ஈர்த்ததை அவளும் உணர்ந்தாள்.

கீர்த்திகாவை இறக்கி விட்டு வீடு திரும்பும் வழியில் பாலா... வினோத்திடம்... "நீங்கதான் கீர்த்திக்கு ட்ரைவிங்

சொல்லிக் கொடுத்ததா...?" என்ற சம்பந்தமில்லாத கேள்வியைக் கேட்க,

அவனோ..."இது இப்போது எதற்கு?" என்பது போல் பார்க்க...

"இல்ல... அவதான் சொன்னா... அதுதான் கேட்டேன்..." என்று ஏதோ வாய்க்கு வந்ததை உளற...

"நான்லாம் இல்லை... ராகவ் மாமாதான் சொல்லிக் கொடுத்தார்..." என்ற அவனது பதிலில் முதலில் ஏமாற்றம் அடைந்தான் பாலா.

ஆனால், அதைத் தொடர்ந்து வினோத் கூறியது... அவன் நினைத்ததை உறுதிப் படுத்த, சந்தோஷத்தில் மிதந்தான். தன்னவளை... அவள் தனக்காகப் பிறந்தவள் என்னும் நினைவில் இன்னும் அதிகமாக நேசிக்கத் தொடங்கினான்.

இதையெல்லாம் உணராமல் வினோத் பேசிக் கொண்டிருந்தான்...

"ஆனா... பாலா... உன் வைஃப் இருக்காளே... மாமாகிட்ட ட்ரைவிங் கத்துக்கிட்டு... என்னை வச்சு ரோட்ல ட்ரையல் பார்க்க ஆரம்பிச்சுட்டா... அதுவும் இவளுக்காக ஒரு ஸ்கூட்டில இவளை ஓட்ட வச்சு... இவளை ஸ்கூல்ல விட்டதுக்கப்புறம் நான் அந்த ஸ்கூட்டில ஆபீஸுக்குப் போன கொடுமை இருக்கே... நான் ஸ்கூட்டில வர்றதைப் பார்த்து ஆபீஸ்ல ஒரு ஃபிகர் கூட மாட்டல தெரியுமா..." என்று போலியாக வருத்தப்பட்டுக் கண்களைத் துடைக்க... பாலா அவனை நினைத்துப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்தான்.

அவன் சிரிப்பதைப் பார்த்த வினோத்... "அடப் பாவி... உன் பொண்டாட்டி என்னை என்ன பாடெல்லாம் படுத்திருக்காளு சொன்னா... உனக்கு இவ்வளவு சிரிப்பா... அவளுக்கு ஏத்த புருஷன்தான்!" என முறைக்க...

அந்தப் பயணம் இருவருக்கும் ஒரு சுமுக உறவை ஏற்படுத்தி இருந்தது.

ஒருமையில் ஒருவரை ஒருவர் அழைக்கும் அளவுக்கு... வினோத் மீது சிறிதளவில் இருந்த பொறாமையும் பாலாவிடம் இப்போது இல்லை.

கீர்த்திகாவால் உறங்க முடியவில்லை... வினோத் நினைவே எழுந்தது.

கீர்த்தனாவின் மேல் அவன் வைத்திருந்த பாசமா... அவன் கீர்த்தி என்று அழைத்த விதமா... ஆதியின் மேல் வைத்த தன் காதல் இவ்வளவுதானா... தனக்காக இறந்த அவனுக்குச் செய்யும் துரோகம் இல்லையா... என்று பல வாறாக மனதினைக் குழப்பிக் கொண்டிருந்தாள்.

'நேசம் இரண்டாம் முறை வருமா?' என்று யோசித்தவளுக்கு மனதில் பளீரென்று ஒரு அறை விழுந்தது. தன் தாயை விட்டு... அவள் இறந்ததால் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்த ஒரே காரணத்தால் தந்தையை இத்தனை காலம் ஒதுக்கி வைத்திருந்த முட்டாள்தனத்தை எண்ணி வருந்தினாள்... பாலா கூட மதுவை மறந்து கீர்த்தனாவுடன் வாழ்வதை உணர்ந்துதான் இருந்தாள்... மனம் மீண்டும் வினோத்தைச் சுற்றியே வந்தது... அவன் அவளைக் கொஞ்சம் கூடக் கவனிக்கவில்லை... அந்த அலட்சியம் கூட அவளை அவன்பால் ஈர்த்தது என்று சொல்லலாம்... எனினும் எந்த முடிவும் எடுக்க முடியாமல் மனம் அலைபாய ஆரம்பித்திருந்தது கீர்த்திகாவிற்கு...

கீர்த்திகா... வினோத் பற்றிய எண்ணங்களில் உறங்காமல் தவிக்க...

கீர்த்தனா... வினோத்தின் மேல் கோபத்தில் உறங்க முடியாமல்... கொதித்துக் கொண்டிருந்தாள்.

அதைக் கவனித்த பாலா... "கீது... என்ன நீ... உன்கிட்ட இருந்து இந்த மாதிரி பிஹேவியரை நான் எதிர்பார்க்கவே இல்லை... நான் அறிந்த கீர்த்தி... மெச்சூர்டான பெண்... இந்த மாதிரியா நடப்பாய்?" என்று கேட்க,

"ப்ச்ச்... எனக்கு என்னமோ அவன் அப்படிக் கூப்பிடறது பிடிக்காது பாலா... சொன்னா கேட்கவே மாட்டான்... அவனைக் கூப்பிடாதன்னு சொன்னாலும் அடங்க மாட்டேங் கிறான்... அப்பா கூட சொல்லிப் பார்த்தாரு... அவரால் கூட முடியவில்லை... நிறுத்துவேனா என்கிறான்... அவனைப் போய் மொத்திட்டு... இல்ல நாலு அடி அடிச்சுட்டு வந்தாத்தான் எனக்கும் தூக்கமே வரும்!" என்று கவலையோடும் கோபத் தோடும் சொல்ல...

விட்டால் எங்கே இந்த நேரத்தில் அவன் அறைக்கு அவனை அடிக்கச் சென்று விடுவாளோ... என்று எண்ணி யவன்... இல்லையில்லை... பயந்தவன்,

"உனக்கு அவன் இனிமே உன்னைக் குறத்தினு கூப்பிடக் கூடாது. அவ்வளவுதானே... இனிமே கூப்பிட மாட்டான்... நான் பார்த்துக்கறேன்... அதுக்காக அவனை எல்லாம் அடிக்க வேண்டாம். பாவம் பையன், பொழச்சுப் போகட்டும். விடு..." என்று சமாதானப் படுத்தும் முயற்சியில் இறங்க...

"எங்க அப்பா சொல்லியே அடங்கல... நீங்க சொன்னாத்தான் கேட்கப் போறானா... நீங்க சொல்றதுக்காக மட்டும் இந்த தடவை அவனை விடறேன்," என்றபடி ஓரளவு சமாதானமாகிப் படுக்கப் போனாள்.

எப்படியும் அவள் கோபம் வெகு நேரம் இருக்காது... வினோத்தோடு நாளைக் காலையிலேயே பேசி விடுவாள்... என்பதால் வினோத்தும் அவளைச் சமாதானப்படுத்த வில்லை... இதெல்லாம் அவர்கள் இருவருக்கும் பழக்கமான நிகழ்ச்சிகள் என்பதால்...

கீர்த்தியிடம் பேசிவிட்டு அறையை விட்டு வெளியே வந்தவன்...

வாழ்க்கைப் பயணத்தை நினைத்து வியந்தான் பாலா. இதே 'குறத்தி' என்ற வார்த்தை இவன் வாயில் இருந்து

வராமல்... கீர்த்திகாவை அவ்வாறு அழைக்காமல் இருக்க... ஆதி அவனோடு போராடியதை... கெஞ்சியதை நினைத்த போது சிரிப்புதான் வந்தது... இன்று இவனுக்கே அந்த நிலைமையா என்று நினைத்தபடி... நேராக வினோத் தங்கி இருந்த ரூமிற்குள் வந்தான்.

அவனைப் பார்த்த வினோத் அவனை எதிர் பார்த்திருந்ததைப் போல... "ஹேய் பாலா... ராகவ் மாமா பார்த்த வேலையை நீ பார்க்க ஆரம்பிச்சுட்டியா... அவர்தான் அவர் பொண்ணைச் சமாதானப் படுத்த... எந்த நேர மானாலும் என்னைத் தேடி வருவார்... இப்போ நீ... குட்..." என்று சிரிக்க...

பாலா அவனைப் பார்த்து முறைத்தான்.

"நீ இப்போ எதுக்கு வந்திருக்க தெரியுமா... அவளை அப்படிக் கூப்பிடாத அப்படினுதானே!" என்று சொல்ல...

பாலா பரிதாபமாக ஆம்... என்பது போல் தலையசைக்க...

"அவளுக்குத்தான் பிடிக்கலேல... விட மாட்டியா நீ... அவ கோபப்பட்டுப் படுத்துட்டா... உனக்கென்ன, நீ சொல் லிட்டுப் போயிடுவ... மாட்டிட்டு முழிக்கிறது நான்தான்... நீயும் கல்யாணம் பண்ணிப் பாரு. அப்பத் தெரியும்... ஒரு புருசனா... பொண்டாட்டி கோபமா படுத்தா என்னவாகும் என்று..."

வினோத் பாலாவைப் பார்த்துக் கண்ணடித்தபடி... "ஓ... கோபத்துல உன் ஆளு உன்னை வெளில தள்ளிட்டாளா! அதான் இங்க வந்து நிக்கறியா...?" என்று நக்கலாக வேறு சிரித்து வைக்க...

பாலா... "வினோத்... வேண்டாம்... சிரிக்காத... அவ அங்க என்னைப் படுத்தறா... நீ அதுக்கும் மேல!" என்று எகிற,

"ஒரு ஆம்பளையோட மனசு... ஆம்பளைக்குத்தான தெரியும் பாலா... நீ சொன்னதுக்காக இனிமே குறத்தியை சாரி... சாரி கீர்த்தியை அப்படிக் கூப்பிடல. போதுமா...?" என்று கூற...

பாலாவும் சமாதானம் ஆனான்.

அடுத்த இரண்டு நாளில் வினோத்தும் கிளம்பிச் சென்றான். பாலாவோடு கீர்த்தியின் வாழ்வைப் பார்த்து மன நிம்மதியுடன் கிளம்பினான். இங்கே வந்து ஒரு பெண்ணின் மனதில் சலனம் ஏற்படுத்தியது தெரியாமல்...

பாலாவும் கீர்த்தியும் அலுவலகம் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

பாலா ஏதோ ஒரு பாடலை... அவளைப் பார்த்தபடி ஹம் செய்து கொண்டே ரெடி ஆகிக் கொண்டிருந்தான்.

கீர்த்தி இப்போதெல்லாம்... அவளின் வழக்கத்தை மாற்றாமல் இருக்க...

பாலா எந்த வழியில் அவளை அணுகுவது என்று தெரியாமல்... விழித்துக் கொண்டிருந்தான்.

அன்று கீர்த்தனா... சும்மாவாவது இருந்திருக்கலாம்... அவளும் அவன் பாடியதை என்ன பாடல் என்று கண்டுபிடிக்க மனதிற்குள் ஹம் செய்து பார்க்க... அது சத்தமாக வெளியே வந்து விட்டது.

"என்ன பேபி... என்ன பாட்டு என்று தெரியணுமா...?" என்க,

ஒன்றும் சொல்லாமல்... அவள் தனது வேலையில் கவனமானாள்.

'எமகாதகி... மாட்ட மாட்டேங்கிறாளே....' என்றிருந்தது அவனுக்கு...

ஆனாலும் இப்போது சத்தமாகப் பாடல் வரிகளுடன் பாட ஆரம்பித்தான்...

"நீதானா அந்தக் குயில்... இந்தப் பாலாவின் சொந்தக் குயில்!" என்று வார்த்தைகளை வேறு மாற்றிப் பாட...

கீர்த்தனா நன்றாக முறைத்தாள் - அவனைப் பார்த்து.

"எதுக்கு பேபி இப்போ முறைக்கிற... மாமா பாடினது பிடிக்கவில்லையா...?" என்று அவளிடம் சீண்டலை ஆரம்பிக்க...

அது காலை நேரம் என்பதால்... கீர்த்தனாவும்... தைரியமாக, "இங்க யாரு பேபி... என்னைப் பார்த்தால் பேபி மாதிரி இருக்கா... ஒழுங்கா கீர்த்தினு கூப்பிடுங்க... என்று வார்த்தைகளை விட்டாள்.

அவள் எப்போது வாய் திறப்பாள் என்றுதானே அவனும் காத்திருந்தான்... கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தா விட்டால்... அவன் பாலா இல்லையே... ஆனால், அதுவே அவனுக்குச் சோதனையாக முடிந்தது...

அவள் சொல்லி முடித்தவுடன்... அவளை மேலிருந்து கீழ்வரை பார்க்க ஆரம்பித்தான் பாலா...

கீர்த்திக்கு அவனின் பார்வையிலேயே... சரிதான்... இன்னைக்கு கோட்டாக்கு நம்ம ஏதோ இழுத்து விட்டு விட்டோம் என்று எண்ணம் தோன்றியது... அப்படி என்ன சொன்னோம் என்று அவள் சொன்ன வார்த்தைகளைத் திரும்ப வேறு சொல்லிப் பார்த்தாள்.

"கண்ணால் காண்பதும் பொய்... காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய்... என்று வள்ளுவரே சொல்லி இருக்கிறார் கீது..." என்று சொல்லியபடி அவள் அருகில் வந்தான்.

இப்போ எதுக்கு வள்ளுவரை எல்லாம் இழுக்கிறான் என்று மனம் ஆராய்ச்சியில் ஈடுபட... ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

"சோ... நீ பேபி இல்லைன்னு சொல்லிட்ட... என் காதால கேட்டுட்டேன்... உன்னை நல்லாப் பார்த்துட்டேன்... நீ பேபி இல்லைனு என் கண்ணும் சொல்லிடுச்சு... ஆனா பாரு, வள்ளுவர் குறள்படி தீர விசாரிக்கணும் இல்லையா..." என்று சொன்னவனின் வார்த்தைகள்... அவன் சொன்ன வேகத்திலேயே புரிய...

'இது சரிப்படாது கீர்த்தி... இன்னைக்கு நீ மாட்டுன இவன்கிட்ட... இங்கே யிருந்து போ!' என்று மனச்சாட்சி சொல்ல... அவனிடமிருந்து வேகமாக நகர ஆரம்பித்தவளை... அவன் கையில் இருந்த டை மூலம் மாட்டி அவனிடமே இழுத்தான் பாலா.

"இரு பேபி... ஃபைவ் மினிட்ஸ்தான்... செக் பண்ணிட்டு சொல்றேன்... நீ பேபி இல்ல... குமரிதான் என்று!" என்றவனின் ஒரு கை... அவளின் இடுப்பு வளைவில் அழுந்தப் பதிந்தன. ஜீன்ஸ், மற்றும் டாப் அணிந்திருந்ததால் அவள் டாப்ஸினைத் தாண்டி அவளது வெற்றிடையில் அவனது கை பயணத்தை ஆரம்பிக்க...

கண்களை அவள் கண்களோடு கலந்தான். அவளைப் பார்த்தபடியே அவளைப் பிடித்திருந்த கைகள் அவளை அவனோடு இழுத்து நெருக்கமாக அணைக்க... அவள் அவனை உணர... அவள் மென்மையை அவன் உணர... தன்னை மறந்தான் பாலா... கைகள் அவள் பேபி இல்லை என்பதை உறுதி செய்ய இடையில் இருந்து மேலே பயணத்தை ஆரம்பித்து இருக்க...

பாலா முற்றிலும் தன்னைத் தொலைக்க ஆரம்பித்து இருந்தான்... அவளை விட முடியாமல் அவனோடும் போராட ஆரம்பித்தான்.

கீர்த்தனா... அவனின் இந்தச் செயலில் அதிர்ச்சி அடைந்து அவனிடமிருந்து விலக எத்தனிக்க... அவனோ அவளை விலக விடாமல் மீண்டும் அவனோடு அழுத்தி

அணைக்க... இருவரின் உடலும் அதன் தேவையில் கட்டுப்பாடுகளை மீற ஆரம்பித்து இருந்தன... கீர்த்தனா ஒரு பெண்ணுக்குரிய எச்சரிக்கையில் அவனது கைகளைத் தடுத்து நிறுத்தப் போராடிக் கொண்டிருக்க... பாலா தன்னைக் கட்டுப்படுத்த இயலாதவனாய் அவளிடம் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டப் போராடிக் கொண்டிருந்தான்...

கீர்த்தனாவும்... அவனின் கைகளில்... நெகிழத் தொடங்கி இருந்தாள். இருந்தாலும்... மூளை செய்த எச்சரிக்கையில்... "பாலா! என்னைய விடுங்க!" என்றாள். அது கூட உள்ளே போன குரலில்தான் சொன்னாள்.

தன் மனைவியின் மேல் தான் செய்து கொண்டிருந்த ஆராய்ச்சியில்... அதெல்லாம் அவன் காதில் விழவே இல்லை... கீர்த்தனாதான் அவனின் மோன நிலையை உணர்ந்தவள்... தன்னைச் சுதாரித்து... தன் பலம் கொண்ட மட்டும் முயற்சி செய்து தன்னை அவனிடமிருந்து விடுவித்தாள்... உடனே கீழே இறங்கியும் போனாள்.

பாலா தன்னைக் கட்டுக்குள் கொண்டு வர முடியாமல் போராடினான்... அது அவனால் முடியவில்லை. அவன் கீர்த்தனாவின் பெண்மையில் விழுந்து மீள முடியாமல் தாபத்தில் தவிக்க ஆரம்பித்தான். அவனால் அவன் உருவாக்கிய மோக வலையில் அவனே சிக்கிக் கொண்டு வெளியே வர முடியாமல்... தினறிக் கொண்டிருந்தான்.

கீர்த்தனாவின் நிலையோ அதற்கும் மேல்... தன்னைச் சுதாரித்து ஓடி வந்தாள்தான்... ஆனால், மோக நெருப்பில் அவளும் வெந்து கொண்டிருந்தாள்.

கிட்டத்தட்ட அரை மணி நேரத்திற்கும் மேல்தான் பாலா கீழே இறங்கி வந்தான்... ஒரு முடிவோடு. இனி அவளைச் சீண்டித் தனக்கு ஒரு சோதனை ஏற்படுத்தக் கூடாதென்று... அதன் விளைவை இன்று அனுபவித்து விட்டான்.

இருவரும் காரில் மௌனமாகவே வந்தனர்... அந்த அமைதி இன்னும் கொல்ல... எஃப்.எம்.மை ஆன் செய்தான் பாலா... அதில் ஒலித்த...

'பத்து விரல் பட்டதும் தொட்டதும்தான்
சுடுதா - சுடுதா
ஆசையோடு அச்சமும் வெட்கமும்தான்
வருதா - வருதா...'

என்று பாடல் வரிகளில் கீர்த்தனாவை ஓரக் கண்ணால் பார்த்த பாலா... நம்ம நிலைமை எஃப்.எம். வரை போய் விட்டதா... என்று நினைத்தவன் போட்ட வேகத்திலேயே ஆஃப் செய்தான்.

அன்று முழுவதும் பாலா... அவனது உணர்ச்சிகளை அடக்க முடியாமல் போராடியதுதான் மிச்சம்... அவள் உள்ளம் கீர்த்தனாவிடம் தஞ்சம் அடைந்தது போல்... உடலும் அவளிடம் சேரப் போராடியது.

31

அதன் பிறகு வந்த நாட்களில் பாலா கீர்த்தியிடம் தள்ளியே இருந்தான். அவன் தொட்டால் அவளும் தன் கைகளில் நெகிழ்வதை உணரத்தான் செய்தான்... ஆனாலும் அவனுக்கு அவளின் மனப் பூர்வமான சம்மதத்தோடு அவளை அவனவள் ஆக்க வேண்டும் என்ற காரணத்தினால் தள்ளி நின்றான்.

அதுமட்டுமில்லாமல் தானும் அவளின் அருகாமையில் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறுகிறோம் என்பதையும் உணர்ந்தவன்... தன்னை மீறி எதுவும் நடந்து விடக் கூடாது என்றும் நினைத்தான்.

கீர்த்தனாவும் அவனது விலகலை உணர்ந்து இருந்தாள் தான்... காரணம் தெரியாமலா இருக்கிறாள் அவள்... அன்று அவனின் உணர்ச்சிகளை அறியாதவளா அவள்...!

அன்று கீர்த்திகாவின் தங்கை திருமணம் என்பதால்... குடும்பத்துடன் கிளம்பினர்.

கீர்த்தனா சேலையில் பாந்தமாக இருந்தாள்... பாலாவையும்... கீர்த்தனாவையும் ஒரு சேரப் பார்த்த அருந்ததி - ஜெகநாதனுக்குக் கண்கள் நிறைந்து போனது தான் உண்மை.

கீர்த்தனா சேலையில் இருந்ததைப் பார்த்த பாலாவுக்கு... மனம் எகிறிக் குதித்துக் கொண்டிருந்ததுதான்... ஆனால்... அருகில் நெருங்கவில்லையே அவன்... கூடு கண்ட பூனை அல்லவா! தள்ளி நின்றே ரசித்துக் கொண்டிருந்தான்... அதே நேரத்தில் அவனின் ஏக்கத்தை அவளுக்கு உணர்த்தாமலும் இல்லை.

அவனின் நிலையைத் தெளிவாக உணர்ந்திருந்த கீர்த்திக்கு... அவனைப் பார்க்கப் பாவமாகத் தோன்றினாலும்... அதற்காக அவளை மாற்ற முடியாத நிலையில் இருந்தாள் என்பதே உண்மை...

திருமணத்திற்கு வந்தவர்கள்... மணமக்களை ஆசிர்வதித்து விட்டுக் கீழே உட்கார்ந்திருந்தனர்... பாலாவைப் பார்த்தவுடன் அவனிடம் மது அப்பாவும் திருமணத்திற்கு வந்திருப்பதைச் சொல்ல வந்தாள் கீர்த்திகா... கல்யாண மண்டபத்தில் எந்த அலங்காரமும் இல்லாமல் சாதாரணமாக நின்ற... கீர்த்திகாவைப் பார்த்தவுடன் பாலாவிற்கு... ஆதியின் நினைவில் கண்கள் கலங்கி விட்டன...

அவனின் வருத்தம் புரிந்த கீர்த்திகா தன்னைச் சமாளித்தபடி... பாலாவிடமும் கீர்த்தனாவிடமும் பேச ஆரம்பிக்க...

அப்போது கீர்த்தனாவின் செல்லுக்கு வினோத் கால் பண்ண... கீர்த்திகாவின் மனம்... அது வினோத் என்றவுடன் அந்தத் தொலைபேசி அழைப்பில் சென்றது.

கீர்த்தனா... அதை அட்டென்ட் செய்து பேச ஆரம்பித்தாள்.

"அன்னைக்கு வந்தாங்கல்ல... கீர்த்திகா... அவங்க சிஸ்டர் மேரேஜ்க்குடா... இரு. எனக்கு இங்க சத்தத்தில் கேட்கவில்லை!" என்றபடி அந்த இடத்தில் இருந்து நகர்ந்தாள்.

கீர்த்தனாவை... அவள் போன திசையை இரண்டு கண்கள்... வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

அது வேறு யாருமல்ல. மதுவின் தந்தைதான்.

கீர்த்திகா வினோத் போன் என்றவுடன் பாலாவிடம் அவள் சொல்ல வந்த விசயத்தை மறந்து... ஏதோ பேருக்கு அங்கு நின்று கீர்த்தனா போன திசையைப் பார்த்தபடி சிறிது நேரம் பாலாவிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு... பிறகு அங்கிருந்து போனாள்.

சுற்றுப்புறத்தைக் கண்களால் சுற்றியபடி வினோத்திடம் பேசியபடி இருந்த கீர்த்தனாவின் கண்கள்... சட்டென்று நின்றன. ஒரு நடுத்தர வயதுடையவர் தன்னையே பார்த்தபடி இருந்த காரணத்தால்... ஆனாலும் யாரோ என்றபடி மறுபடியும் பேச ஆரம்பித்தவள்... மீண்டும் அவரின் வெறித்த பார்வையில் பயம் சூழ... வினோத்திடம் சொல்லிவிட்டுப் போனை அணைத்தவள்... பாலாவின் அருகில் போய் அமர்ந்து விட்டாள்.

அவன் அருகில் அமர்ந்த பின்னர்... மறுபடியும் அவரைப் பார்க்க, அவரோ இன்னும் கீர்த்தனாவைத்தான் பார்த்துக் கொண்டிருக்க... மெதுவாய்ப் பாலாவைச் சுரண்டினாள்.

அவளின் செயலில் பாலாவும் அவளை என்னவென்று நோக்க...

"பாலா, உடனே பார்க்காதீங்க... அங்க ஒருத்தர் என்னையவே பார்த்துட்டு இருக்கார்... யார்னு தெரியல...?" என்று அவனிடம் சொன்னாள்.

பாலா சிறிது நிமிடம் கழித்து அவள் சொன்ன திசையில் சாதாரணமாகப் பார்ப்பது போல் பார்க்க... அது மதுவின் தந்தை...

"மாமா...!" என்று சத்தமாகவே வாய் தானாகச் சொல்ல...

கீர்த்தனாவோ... மாமாவா என்றபடி அவரைப் பார்த்தாள்.

பாலா சட்டென்று எழுந்தான்... எழுந்தவன் கீர்த்தனாவையும் கையைப் பிடித்துக் கூடக் கூட்டிப் போனான்.

"மாமானா யார் பாலா?" சந்தேகம் தெளியாமல் கேட்க...

"என்னோட தாய்மாமா... மது அப்பா..." இப்போதைக்கு இது போதும் என்பது போல அத்துடன் நிறுத்த...

கீர்த்தனாவோ... 'என்னது... மது அப்பா... இவனுக்குத் தாய்மாமாவா?' என்று யோசித்தவள்,

"அத்தை அங்க இருக்காங்க... அவங்க பேச மாட்டாங்களா?" என அடுத்த கேள்வி கேட்க...

அதற்குப் பதில் சொல்லும் முன்... செல்வராஜன்... அதாவது மதுவின் தந்தை முன் நின்றனர்.

"மாமா... நல்லா இருக்கீங்களா?" என்று கேட்ட பாலாவிடம், பதில் சொல்லாமல்... வெறித்த பார்வை பார்த்தபடி ஒன்றும் சொல்லாமல் அமர்ந்திருந்தார்.

"மாமா... இது என்னோட மனைவி கீர்த்தனா. இவளையும் உங்க பொண்ணா நினைத்து... எங்க ரெண்டு பேரையும் ஆசிர்வாதம் பண்ணுங்க..." என்று கீர்த்தனாவோடு அவர் காலில் விழுந்தான் பாலா.

கீர்த்தனாவிற்கு ஒன்றும் புரியாமல் பாலா சொன்னபடியெல்லாம்... செய்து கொண்டிருந்தாள்.

இதை எல்லாம் அருந்ததியும் ஜெகநாதனும் பார்த்துக் கொண்டிருந்தனர்தான். ஆனால், அருகில் வரவில்லை.

செல்வராஜனும் காலில் விழுந்த அவர்களை ஆசிர்வதிக்காமல் இருந்தால் அது அவரின் வயதுக்குத் தகுந்த செயல் இல்லை என்பதால் அவர்களைக் காக்க வைக்காமல்... செருமியபடி, "நல்லா இருங்க!" என்றவர், பாலாவைப் பார்த்து...

"உன் அம்மாதான்... வீட்டில் உள்ளவர்கள் மனதை நினைக்காமல்... தான் நினைத்த காரியத்தைச் செய்தாள். ஆனா பரவாயில்ல... தனக்குப் பிறந்த பிள்ளையையாவது பெற்றோர் பேச்சினைக் கேட்கும்படி வளர்த்திருக்கா... நீயும் என் பொண்ணை நினைச்சுட்டே வாழ்க்கையை வீணாக்காமல்... நல்ல முடிவுதான் எடுத்திருக்க... உன் மேல என்னைக்கும் வருத்தமே இல்லை... ஆனா... நீ எங்க குடும்பத்தை முதுகுல குத்தியவங்களோட... பையனா போய்ட்டியேன்ற வருத்தம்தான் எனக்கு..." என்றபோதே அருந்ததியும் அங்கு வர...

செல்வராஜன் கீர்த்தனாவிடம், "நான் வரேம்மா..." என்றபடி, கீர்த்தனாவை மீண்டும் ஒருமுறை பார்த்து, தன் மகள் இருக்க வேண்டிய இடம் என்று நினைத்தாரோ... இல்லை... தன் மகள் ஞாபகம் வந்ததோ! கண்கள் கலங்கிய படி நகர ஆரம்பிக்க...

"அண்ணா!" என்ற அழைப்பில்... கோபத்தில் முகம் சிவந்தவர்... இருக்கும் இடம் உணர்ந்து... பாலாவிடம்...

"நான் என்னைக்குமே அவளை ஏத்துக்க மாட்டேன்... அவள் துரோகத்தை மறக்கவும் மாட்டேன்..." என்று கூற, பாலா தன் தாயைப் பரிதாபமாகப் பார்ப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை...

கீர்த்தனாவிற்குத்தான் சுத்தமாய் ஒன்றும் புரிய வில்லை. மது அவன் தாய்மாமன் மகளா... என்ற எண்ணத்தில் மட்டுமே உழன்றாள்.

அன்று இரவு பாலாவிற்குத்தான் உறக்கம் வர வில்லை... பல சிந்தனைகள்... அருந்ததி வருத்தம்... ஆதி இல்லாததால் கீர்த்திகாவின் தோற்றம்... மதுவின் அப்பாவைப் பார்த்த பிறகு மதுவின் நினைவுகளும் வேறு வந்து அலைக்கழிக்க... அவனுக்கு உறக்கமே வரவில்லை.

சிறிது நேரம் அப்படி இப்படி என்று படுக்கையில் படுத்தவன்... கீர்த்தனாவினைப் பார்க்க, அவளோ நல்ல உறக்கத்தில் இருந்தாள்.

உறக்கத்தில் இருந்த அவளின் அமைதியான முகத்தைப் பார்த்தபடியே இருந்தவன்... கொஞ்சம் கொஞ்சமாய்த் தன்னைத் தன் வருத்தத்தில் இருந்து மீட்டவன்... சிறிது நேரத்தில் கீர்த்தனாவின் கணவனாக மாறினான்.

'ராட்சசி... இங்க ஒருத்தன... காலையில் இருந்து இம்சித்து விட்டு... உனக்கு மட்டும் தூக்கமா... விட மாட்டேன்டி உன்னை!' என்றபடி அவனது மொபைலில் சத்தமாகப் பாடலைப் போட ஆரம்பித்தான்.

அதுவும் அவன் நிலையினை அவளுக்குப் புரிய வைக்கும் பாடல்களாய்...

முதல் பாடலிலேயே கீர்த்தி எழுந்து விட்டாள்தான்... என்ன செய்வது... கேட்க முடியவில்லையே... ஒலித்த ஒவ்வொரு பாடலின் வரிகளும்... அப்படி இருந்தன. தனக் காகவே தேடி எடுத்து வச்சுருக்கானா... நிறுத்தச் சொல்ல லாமா... வேண்டாம். இவள் என்ன சொன்னாலும்... அவன் அதிலிருந்தே அத்தியாயம் எழுத ஆரம்பித்து விடுவான் என்று... பேசாமலே காதை மூடியபடி படுத்து விட்டாள். அதைத் தாண்டியும் பாடல் விழாமல் இல்லை.

கேட்டபடி படுத்திருந்தவளுக்கு அவனது நிலை புரியாமல் இல்லை. இன்று மது அப்பாவிடம் அறிமுகம் செய்தது வேறு அவளை இம்சித்தது... என்ன ஒரு தைரிய

மாய் அறிமுகம் செய்தான். அதுவும் மதுவின் அப்பா விடமே... இதே போல் மதுவிடமும் அறிமுகம் செய்வானா... இவள்தான் என் மனைவி என்று சொல்வானா... அது நடந்தால் எப்படி இருக்கும் என்று நினைக்கும்போதே... ஒருவேளை மதுவிடம் சொல்லி, அவளும் என்னை ஏற்றுக் கொண்டால் தானும்... பாலாவும் இப்போது இருக்கும் நிலை மாறி ஒன்றாக வாழக் கூடுமோ என்று தோன்ற... அதற்கும் மது வர வேண்டுமே...

மதுவிற்குத் துரோகம் செய்கிறோம் என்ற தன் குற்ற உணர்ச்சி மாறுவதற்காகவாவது மது வர வேண்டும் என்ற எண்ணம் அவளை ஆட்சி செய்ய ஆரம்பமாகி இருந்தது...

அவள் மனம் பாலாவோடு வாழத் தனக்குள்ள தடைகளை எப்படி எல்லாம் தாண்டுவது என்று யோசிக்க ஆரம்பித்தது.

ஆனால், அது மதுவின் உண்மையான நிலை பற்றித் தெரிந்த பிறகு மட்டுமே சாத்தியமாகும் என்று தோன்றியது அவளுக்கு.

கீர்த்தியும் விழித்து விட்டாள் என்பதை உணர்ந்த பாலா... அவளிடம் இருந்து எந்த ஒரு பதிலும் வராததால்... வந்த கடுப்பில் அவளை வேறு ஒன்றும் செய்ய முடியாமல்... தன் அருகில் இருந்த தலையணையை அவள் மேல் வீச...

அவளோ கொஞ்சம் கூட அசராமல்... தன் மேல் அவன் வீசிய தலையணையை அணைத்தபடி பேசாமல் படுக்க...

அவளின் இந்தச் செய்கையில் இன்னும் ஏக எரிச் சலுக்குப் போனான் பாலா. அதற்குக் கிடைத்த கொடுப்பினை கூடத் தனக்கு இல்லை என்று.

இருந்தாலும், "அது என்னோட பில்லோ. கீது மேடம். அதைக் கட்டிப் புடிச்சா... என்னைக் கட்டிப் புடிச்ச மாதிரி" என்று உற்சாகமாக வம்பிழுக்க ஆரம்பிக்க...

கீர்த்தனா... அந்தத் தலையணையைத் தூக்கி எறியப் போகிறாள் என்று அவன் நினைக்க... அவளோ அவன் சொன்னது தனக்குக் காதிலே விழாதது போல அந்தத் தலையணையை இன்னும் அழுத்தமாகத் தன் மார்போடு அணைத்து அப்படியே உறங்கியும் போனாள்.

பாலாவிற்கு அவளின் இந்தச் செய்கையில் உள்ளம் துள்ள... அவளைப் பார்த்தபடியே உறங்க முயற்சி செய்தான்.

தன் தலையணைக்குக் கிடைத்த வாய்ப்பு தனக்கும் கிடைக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்று நிச்சயமாய் நம்பினான்.

நாட்கள் அதன் போக்கில் சென்றன.

பாலா... கீர்த்தி உறவு எப்போதும் போல் தாமரை இலைத் தண்ணீர் கதையாகச் சென்றது. பாலாவும் அவள் தனக்கானவள் என்பதைப் பரிபூரணமாக உணர்ந்ததால்... அவளைத் தன்னோடு சேர்த்த விதி... அவனோடு அவளுக் கான உறவையும் ஏற்படுத்தித் தரும் என நம்பியதால்... அவளுக்காகக் காத்திருந்தான். விட்டுப் பிடிப்போம் என்றும் விட்டு விட்டான்...

ஆனால், அவன் செயல்களில் அவன் அவளுக் கென்று இருக்கிறான்... அவன் அவளது உரிமை என்பதைப் புரிய வைக்க முயற்சித்துக் கொண்டிருந்தான். தன் நிலையில் தெளிவானதால் அவன் இயல்பாக இருக்க ஆரம்பித்தான்.

அவனுடைய தொழிலிலும்... அவனுக்கு மிகப் பெரிய ப்ராஜெக்ட் ப்ரபோசல் வந்திருந்ததால், அதில் தன்னை மூழ்கடித்துக் கொண்டான்.

கீர்த்திதான் வழக்கம் போல் அவனின் செய்கையில் குழம்பிப் போனாள். இப்போதெல்லாம் தன்னைச் சீண்டுவ தில்லை... என்னாயிற்று... இவனுக்கு என்று...?

பாலா... அன்று... காரில் சிக்னலில் காத்துக் கொண்டிருந்தான்.

கீர்த்தி முன்னதாகவே அலுவலகம் சென்றிருந்ததால்... இவன் மட்டுமே வந்தான். நேற்று இரவு க்ளையண்ட் மீட்டிங் இருந்ததால்... அலுவலகத்திற்குத் தாமதமாகக் கிளம்பி வந்தான்.

பஸ் நிறுத்தத்தில் நின்ற பெண்ணைப் பார்த்த பாலாவுக்கு அவனையும் அறியாமல் உற்சாகம் வந்தது.

'அது... கீது ஃப்ரெண்ட் கவிதானே...' என்று மீண்டும் பார்த்தான். அவளேதான்...

'இவ எங்க இங்கே? நம்ம ஆளுக்குத் தெரியுமா இவ இங்கு இருப்பது... இல்ல கீர்த்திய பத்தி இவளுக்கு எல்லாம் தெரியுமா... பேசலாமா... வேண்டாமா... என்றெல்லாம் யோசித்தான்.

பிறகு கவி கீர்த்தியின் ஃப்ரெண்ட் என்ற ஒரே காரணத்திற்காகக் காரை நிறுத்தி... அவள் அருகில் சென்றான் பாலா.

இன்டர்வியூ ஒன்றிற்காகக் கிளம்பி இருந்தாள் கவி... அவளுக்கு டெல்லியில் இருக்கச் சுத்தமாய்ப் பிடிக்க வில்லை... பொறுத்துப் பொறுத்துப் பார்த்தவள்... தன் பெற்றோரிடம், நீங்களுமாச்சு... உங்க டெல்லியுமாச்சு என்று சென்னை வந்து விட்டாள்.

ஒரு வாரம் ஆகி இருந்தது... வந்தவள் கீர்த்திக்குப் போன் பண்ண நினைத்தாலும்... அவள் மீது மிகுந்த கோபத்தில் இருந்ததால் போன் செய்யவில்லை. மறக்க மாட்டேன்... என்று எப்படியெல்லாம் பேசினாள்... தான் இங்கிருந்து போன சில நாட்களிலேயே மறந்து விட்டாள்.

எத்தனை போன்... எத்தனை மெயில்... எதில் தொடர்பு கொண்டாலும், தன்னை ஒதுக்க நினைத்தவளிடம், சில நாட்களுக்குப் பிறகு தானும் அவளைத் தொடர்பு கொள்வதை நிறுத்திக் கொண்டாள்.

கீர்த்தி மட்டும் இப்போது மாட்டினால்... அவள் கதை கந்தல்தான் என்ற அளவில் கீர்த்தி மேல் கோபத்தில் இருந்தாள்.

அவள் அருகில் சென்ற பாலா, "ஹாய் கவி!" என்று புன்னகைக்க...

கவி ஒரு நொடி இமைக்க மறந்தாள்.

'பாலா சாரா...!' என்று திகைத்தாள்... அவன் இருக்கும் உயரத்திற்கு இவளிடம் இப்படிப் பேசுவானா என்று தோன்றியது... அதுவும் அவன் அலுவலகத்தில் கூட இவள் இருக்கும்போது அவ்வளவாகப் பேசியதில்லை எனும்போது...

அவனைப் பற்றித் தெரியும்... அவன் அலுவலகத்திற்கு அருகில் இருக்கும் பஸ் நிறுத்தத்தில் எத்தனையோ நாள் அவன் இவளைக் கடந்து சென்றிருக்கிறான். இவள் பார்த்திருக்கிறாள்... அது தனது எம்.டி. பாலா கார் என்பதால்... அப்போதெல்லாம் இவளிடம் பேசாமல் கடந்து செல்பவன் இன்று காரில் இருந்து இறங்கிப் பேசியதில் ஆச்சரியம் அடைவதில் வியப்பில்லைதான். கடைசி நாளில் அன்று பேசிய பழக்கத்திலா இன்று பேசுகிறான் என்று தோன்றினாலும்... தன் யோசனைகளை எல்லாம் விட்டு விட்டு அவனிடம் பேச ஆரம்பித்தாள்.

"என்ன கவி... சென்னையிலயா இருக்கிறீர்கள்?" என்று கேட்க...

ஓரளவு தன்னை நிலைப்படுத்தி அவனுடன் பேச ஆரம்பித்தாள். அவனுக்குத் தெரியாமலே அவனையும் சைட் அடித்துக் கொண்டே... கிடைத்த வாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்திக் கொண்டாள் கவி.

"இல்ல சார்... வந்து ஒன் வீக் ஆகிறது... அங்கே இருக்கவே எனக்குப் பிடிக்கலை... நமக்கெல்லாம் இட்லி... சாம்பார்தான் சரிப்படும். இந்தச் சப்பாத்தி, ரொட்டிலாம் ஒத்தே

வராது. அதுதான் மூட்டை கட்டிட்டு இங்கேயே வந்துட்டேன். மறுபடியும்..." என்று தனக்கே உரிய பாணியில் சொல்ல...

சிரித்த பாலா... "அதெல்லாம் சரி... வந்தவங்க குளோபல் நெட்டுக்குத்தானே வந்திருக்க வேண்டும்... உங்க சேவையெல்லாம் எங்களுக்குத் தேவைன்னு சொன்னேனே கவி... நீங்க போகும்போது கூட!" எனச் சொல்ல,

கவிக்கும் பாலா கம்பெனிக்குச் செல்லத்தான் விருப்பம்... கீர்த்தியிடம் இருந்த கோபத்தினால் மட்டுமே அங்கு செல்லவில்லை. செல்ல விரும்பவும் இல்லை... இதை அவனிடம் சொல்லவா முடியும்...!

அவளின் மனநிலை புரியாத பாலா, "நான் சொன்னதை நீங்க மறந்துட்டீங்க... ஆனா நீங்க சொன்ன வார்த்தையை நான் காப்பாத்திட்டு இருக்கேன்!" என்று சொன்னான். அவள் கீர்த்தியைப் பார்த்துக் கொள்ளச் சொன்ன வார்த்தைகளை நினைவில் வைத்து...

அவள் சங்கடமாய் அவனைப் பார்க்க... "நான் இவ்ளோ சொல்றேன் கவி... ஒரு வார்த்தை நான் மறுபடியும் குளோபல் நெட்-க்கே வருவேன் என்று சொல்ல மாட்டேங்கறீங்க..." எனக் கூற

அவனே சொல்லும்போது மறுப்பது தவறாகப் பட... சரி என்று தலையை ஆட்டியவள்... "அப்போ நான் நாளைக்கு வரட்டுமா?" என்று கேட்க...

"ஏன் கவி, நாளைக்கு என்ன நல்ல நாளா..." என்றபடி காரை நோக்கிப் போக... வேறு வழி இல்லாமல் அவனோடு போனாள்.

கவி மனதினுள்ளே... 'கவி! கிளம்பு அவனோடு... அட்லீஸ்ட் ரொம்ப நாளைக்கப்புறம் அவனை சைட் அடிக்கற சான்ஸ் கிடைச்சிருக்கு... விடாம பிடிச்சுக்கோ!' என்று வேற நினைத்தவள், அந்த யோசனையிலேயே... முன்னே அவன் அருகில் அமரப் போக,

காரில் அமர்ந்த பாலா... அவளுக்குப் பின் பக்கக் கதவைத் திறந்து விட்டவன்... "சாரி... அந்த ப்ளேஸ் ஒன்லி ஃபார் மை வைஃப்!" என்று சொல்ல...

கவி முகத்தில் அதிர்வலைகள்...

'என்ன... பாலாக்கு மேரேஜ் ஆகி விட்டதா... அடிப் பாவி கீர்த்தி... இதைக் கூட என்கிட்ட சொல்லல நீ... போகும்போது வண்டி வண்டியா அட்வைஸ் பண்ண மட்டும் தெரிஞ்சது... அவனுக்கு மேரேஜ்னு சொல்ல வாய் வரலையா உனக்கு... கீர்த்தி வரேன்டி... இத... இத மறச்சதுக்காகவே உன் கூடச் சண்டை போட வர்றேன்...' என்று மனதினுள் நினைத்து நின்றபடியே இருக்க...

பாலாவின் குரலில் கலைந்தவள்... உள்ளே ஏறினாள்... ஏறியவள், 'மது... மதுதானே பாலாவோட ஆள் பேரு... ஹ்ம்ம்ம்... குடுத்து வச்சவ... அவளோட ப்ளேஸ்... ரொம்பத்தான் ஆள் உருகுறாரு...' என்றபடி அவன் திருமணத்தைத் தனக்குச் சொல்லாத கீர்த்தியின் மேல் கொலை வெறியில் வந்தாள்.

அதை எல்லாம் அறியாமல் பாலா, "கவி! அட்லீஸ்ட் உங்க ஃப்ரெண்ட் கீர்த்திக்காகவாவது நீங்க வந்திருக்கலாம்... ஏன் எங்களை எல்லாம் மறந்துட்டீங்க?" என்றுதான் கேட்டான் பாலா.

அவ்வளவுதான் கவி... படபடவென்று கொட்டி விட்டாள், அவன் மனைவியைப் பற்றி அவனிடமே...

"நீங்க வேற சார்... அவ இருக்காங்கிற ஒரே காரணத்துக்காகத்தான் நான் வராம இருந்தேன்... டெல்லி போன பின்னாடி... ஒரு ரெண்டு வாரம் பேசினா... அவ்ளோதான். அதோட என்னை மறந்துட்டா... எத்தனை முறை... எத்தனை வழியில் அவளிடம் தொடர்பு கொள்ள ட்ரை பண்ணினேன் தெரியுமா... ஒரு கட்டத்தில் வெறுத்துப் போய் அவ நம்பரையே டெலிட் பண்ணிட்டேன்..." என்று ஆதங்கம் பாதி...

வருத்தம்... கோபம் பாதியுமாய்ச் சொல்ல, பாலாவிற்கு, கவிக்கு கீர்த்தியின் வாழ்வில் நடந்த ஒன்றுமே தெரியவில்லை என்று விளங்கியது.

மௌனமாகவே வந்தான் பாலா.

"என்னை மறந்துட்டா சார் அவ...." எனும்போதே,

"என்னை என்ன... அவ வினோத்தையே நினைக்க மாட்டா... நான்லாம் என்ன... ஓ! வினோத் தெரியாதுல்ல... அவளுக்கு அவங்க வீட்ல பார்த்த பையன... அவனையே எங்க ரெண்டு பேருக்கும் மேரேஜ் ஆகிறவரைக்கும் அவன் என் மாமா பையன், ஃப்ரெண்ட். அவ்ளோதான். எங்க அப்பா நாளைக்கே இன்னொருத்தன சொல்லி இவன் தான் மாப்பிள்ளை என்று சொன்னால், அப்போ என்ன பண்ணுவது? சோ... இப்போதைக்கு இந்த இடம் காலி என்று சொன்னவதானே... அப்படிப்பட்டவளுக்கு நான்லாம் ஒரு தூசு!" என்று பட்டாசாய்ப் பொரிய... பாலாவிற்கோ அந்த வார்த்தைகள் மனதினுள் பூமாரியைப் பொழிந்தன.

"பாவம் வினோத்... இந்த அப்பா - அம்மா பைத்தியத்த வச்சு என்ன பண்ணப் போறாரோ?" என்று கவி சொல்ல...

'அந்த அப்பா - அம்மா பைத்தியம் மேல நான் பைத்தியம் ஆகிவிட்டேனே... நான் பாவம்தான்!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பாலா அலுவலகம் தொடர்பாகச் சில பொருள்கள் வாங்க... ஒரு கடையின் முன் நிறுத்த... கவி காரிலேயே இருக்கிறேன்... என்று சொன்னதால் அவன் மட்டும் இறங்கினான்.

கவிக்குக் கீர்த்தியைப் பற்றி மனதில் உள்ளதைப் பாலாவிடம் கொட்டியதாலோ என்னவோ, கீர்த்தி மேல் முன்பிருந்த அளவு கோபம் இல்லாதது போல் தோன்ற... அவளிடம் பேச வேண்டும் போல் இருந்தது.

இறங்கிய பாலாவிடம்...

தயக்கத்துடன், "சார்! நான் கீர்த்தி கூடப் பேசணும்... என் மொபைல்ல இருந்து பேச முடியாது. அது டெல்லி நெட்வொர்க்... மாத்தணும். உங்க மொபைல்ல இருந்து பேசலாமா?" என்று கேட்க...

"கவி! இதுக்கா இவ்வளவு தயக்கம்..." என்றபடி தன் மொபைலைக் கொடுத்தான்...

பெர்சனல் சிம்மில் அவளின் பெயரைப் பிரத்யேகமாக வைத்திருந்த காரணத்தால் கவனமாக அலுவலக சிம் தொடர்பில் தொடர்பு கொண்டு ரிங் போனவுடன்... அவளிடம் கொடுத்து விட்டு... கடையினுள் நுழைந்தான்.

பாலாவின் ஒவ்வொரு செய்கையிலும் கவி வாய் பிளந்து நின்றாள். அவன் போனை அவளை நம்பிக் கொடுத்ததோடு மட்டும் அல்லாமல்... அவள் பேசி முடிக்கும் வரை காத்திருக்காமல்... அவளிடமே போனை விட்டுச் சென்றது... இன்னும் ஆச்சரியமாகப் போனது அவளுக்கு.

'தன் மேல் இத்தனை நம்பிக்கையா!' என்று ஆச்சரியப் பட்டாள்.

அவள் கீர்த்தியின் உயிர்த் தோழி என்ற காரணத் தினாலேயே இந்த நம்பிக்கை என்பது அவளுக்கு அப்போது தெரியவில்லை.

பாலாவின் அலுவலக நம்பரில் இருந்து வந்த அழைப்பைப் பார்த்தவள்... 'ஏன் இதிலிருந்து கூப்பிடு கிறார்...?' என்று கீர்த்திக்குத் தோன்றியது.

யோசனையுடனே ஹலோ கூடச் சொல்லாமல்... "என்ன பாலா... இந்த நம்பரில் இருந்து கூப்பிடறீங்க?" என்று கேட்க,

கவியோ, 'என்ன பாலாவா? அந்த அளவு பாலாவோடு பேசுகிறாயா நீ... உன்னைக் கொஞ்சம் பயமுறுத்தறேன்!' என்றபடி... தன் குரலை மாற்றி...

"நீங்க கீர்த்திதானே...?" என்று கேட்க...

கணவனின் நம்பரில் இருந்து பெண் குரல் என்றவுடன் ஒரு நிமிடம் ஆடிப் போனாள் கீர்த்தி. இருந்தாலும் சுதாரித்துக் கொண்டு... "நீங்க யாரு... பாலா மொபைல் எப்படி உங்கிட்ட...?" என்று தடுமாறிக் கேட்க,

"என்னது நான் யாரா... அவர் மொபைல்ல இருந்து இவ்ளோ தைரியமாப் பேசுனா... வேற யாரா இருக்க முடியும்... அவர் வைஃபாதான் இருக்க முடியும்..." என்று கவி அவளோடு விளையாட்டில் இறங்க...

'ஆங்... வைஃபா... என்கிட்டயேவா!' என்று நினைத்த வளுக்கு,

யாரோ விளையாடுகிறார்கள் என்றே தோன்றியது. ஆனாலும் கீர்த்திக்கு யாரோ ஒருத்தி அவளைத் தன னிடத்தில் வைத்துப் பேச... பொறுக்க முடியாமல்...

"ஹலோ, யாருங்க நீங்க... பாலா எங்கே...? மொதல்ல மொபைல அவர்கிட்ட கொடுங்க. உங்களைப் பேசவிட்டுப் பார்த்துட்டு இருக்காரா என்ன...?" என்று எகிற,

அவளின் கோபத்தில்... கவிக்கே டவுட் ஆகிவிட்டது இவளுக்கு ஏன் இத்தனை கோபம்... பாலாவை வே அதிகாரமா கேட்கிறாள் என்றபடி... இன்னும் பேசினாள்.

"என்ன கீர்த்தி... நான் அவர் வைஃபுன்னு சொன்ன நம்பாம பேசறீங்க.... நான் அவர் காதல் மனைவி மது மதுபாலாதான்... கீர்த்தி கீர்த்தி என்று சொல்கிறாரே என்ற போன் செய்து பார்க்கலாம் என்று போன் பண்ணினால்... என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே தொடர்பு துண்டி கப்பட்டது.

கவி பேசிக் கொண்டிருக்கும்போதே... அவளின் மது என்ற வார்த்தையிலேயே கீர்த்தி போனை வைத்து விட்டாள் தன்னை மறந்தாள்... கவிக்கும் மதுவைப் பற்றித் தெரியும் என்று அவள் சிந்தையில் எட்டவில்லை... மது வந்

விட்டாளா... அவள் கிடைத்து விட்டாளா... அதற்காகப் பாலா மொபைலில் இருந்து இப்படி எல்லாம் பேசுவாளா... அவனும் ஏன் அவளைப் பேச விட்டு வேடிக்கை பார்க்கிறான்... இதான் அவன் என்னை லவ் பண்ணின லட்சணமா... உனக்காக நான் இருக்கேனு சீன் போட்டவன்... மது வந்ததும் மறந்து விட்டானா... என்று நினைக்கும் போதே.... கண்களில் கண்ணீர் தாரை தாரையாக இறங்கியது.

இப்போது என்ன நெனச்சுட்டு இருக்கான்... இருக்கு அவனுக்கு...

முகத்தை அழுந்தத் துடைத்தாள். இருந்தாலும் அழுகை நிற்பேனா என்றிருந்தது. பேசினால் கூட வார்த் தைகள் ஒழுங்காக வருமா என்று தெரியவில்லை... இருந் தாலும் மறுபடியும் பாலாவிற்குப் போன் செய்ய...

இப்போது எடுத்தது அவன்தான். "என்ன கீது...?" என்று கவியை அவளிடம் கூட்டிச் செல்கிறோம் என்று சலுகை யாக... கவிக்குக் கேட்காமல் மெதுவாக வேறு பேச...

"கீதுவா...!" என்று அதிர்ந்தவளிடம்... "இன்னும் டென் மினிட்ஸ்ல... நாங்க அங்க இருப்போம்... இப்ப வைக்கிறேன்..." என்றபடி அவளை ஆட்டம் காண வைத்து போனை வைத்தான்.

பாலாவின் பேச்சில் எந்தவொரு வித்தியாசமும் தெரியாததால்... கொஞ்சம் அமைதி ஆனாள். அவனின் கீது என்ற அழைப்பில் அவன் மனதில் தான் இருப்பது புரிந்தது. நாங்க அங்க இருப்போம் என்று சொன்னதால்... அவனோடு இன்னொருவர் இருக்கிறார்கள் என்பதினை உறுதிப்படுத் தியவள்... மதுதான் வந்து விட்டாள் என்று நினைத்தாள். ஆனாலும் மனதோ மது வந்தால் என்ன ஆகும் என்று தவிக்க ஆரம்பித்து இருந்தது. அவள் உரிமையாய்ச் சொன்ன 'பாலாவின் மனைவி' என்ற வார்த்தையில் தேகம் எல்லாம் தணலாய்க் கொதிக்க ஆரம்பித்தது.

அதன் விளைவு, அலுவலகத்தில் இருந்து இறங்கி அந்தக் கட்டடத்தின் நுழைவாயிலில் நின்று பாலாவுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

பாலா இல்லாமல் தன்னால் இருக்கவே முடியாதோ என்று முதன் முதலில் உணர ஆரம்பித்தாள். மது பாலாவின் அருகினில் இருக்கிறாள் என்ற உணர்வே அவளை அடியோடு அறுக்க... கணவனின் வருகையினை நோக்கியபடி... நிற்கக் கூட முடியாமல்... கண்கள் சிவந்தபடி நெஞ்சம் பதைபதைத்து நின்றாள் அந்தப் பேதைப் பெண்.

32

பாலா அந்தக் கட்டடத்தினுள் நுழையும் போதே நுழைவாயிலில் நின்ற கீர்த்தியைப் பார்த்து விட்டான். அதே நேரத்தில் அவள் முகத்தைப் பார்த்த பாலா... அதிர்ந்தபடி...

'கவி கோபத்தில திட்டிட்டாளோ... அழுதிருப்பா போல... சே! இதுக்குத்தான் கவியைக் கூட்டிட்டு வந்தோமா... அவளோட தனிமையைப் போக்கலாம்னு பார்த்தா... இவ முதலுக்கே மோசம் பண்ணிடுவாளோ!' என்று எண்ணியவன்,

கவியிடம் திரும்பி... "ஏங்க கீர்த்திய ரொம்ப திட்டிட்டீங்களா... முகமே சரி இல்ல..." என்று மனதினுள் இருந்த கடுமை தெரியாமல் கேட்டான்.

"நீங்க வேற சார்... இனிமேதான் இருக்கு அவளுக்கு... நான் இன்னும் பேசவே ஆரம்பிக்கலை... கவின்னு சொல்லாம நான் ஒரு சின்ன சர்ப்ரைஸ் கொடுத்தேன்... அதுல அம்மணி ஆடிப் போய் நிற்கிறாங்க... ஆனா அதுக்காக எதுக்கு இங்க வந்து நிக்கறானு தெரியல..." என்று அவளும் யோசனையுடன் சொல்ல...

"அப்படி என்ன சர்ப்ரைஸ்...!" என்றபோது, குரலில் லேசாக எரிச்சலும் எட்டிப் பார்க்க...

அவனிடமே உன் மனைவி போல பேசினேன் என்றா சொல்ல முடியும்...

கொஞ்சம் வழிந்தவளாய்... "அது எனக்கும் கீர்த்திக்கும் மட்டும்..." என்று சொல்ல...

'என்ன சொல்லி வச்சாளோ... இப்படி இருக்காளே!' என்றிருந்தது அவனுக்கு.

கீர்த்தி நின்ற இடத்தில் காரை நிறுத்தினான்... கவி இறங்குவதற்காக....

அவனைப் பார்த்தவளுக்கு அழுகை பொங்கியது. அதை அடக்கியபடி நின்றாள்... கண்களில் கண்ணீர் குளம் கட்டியிருந்தது... எப்போ அணை உடையும் என்று காத்திருந்தன கண்ணீர்த் துளிகள்.

'என்னாச்சு இவளுக்கு... ஏன் இப்படி நிற்கிறா...?'

பாலா மட்டும் அப்போது காரை விட்டு இறங்கியிருந்தால் அவனோடு ஒன்றியிருந்திருப்பாளோ... என்னவோ... அவன் நேரம் இன்னும் சரி ஆகவில்லை போல... அவன் இறங்கவில்லை.

ஆனால்... இறங்கிய கவியைப் பார்த்தவள்... ஒரு கணம் அதிர்ந்தாள்... கண்ணில் இருந்து கண்ணீர்த் துளிகள் சட்டென்று கரை தாண்டியது ஆனந்தத்தில்... மதுவை எதிர்பார்த்து... துக்கத்தில் துவண்டிருந்த மனம்... கவியைப் பார்த்து ஒரு நிமிடம் சந்தோசத்தில் அதிர... இப்போது கண்கள் கண்ணீரை நிறுத்தி... சந்தோச அலையைப் பரவ விட்டன.

கன்னத்தில் வழிந்திருந்த கண்ணீரை... வேக வேகமாகச் சந்தோசமாகத் துடைத்தவள்...

"கவி! நீயா...!" என்று துள்ளியபடி ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.

"லூசாடி நீ... இப்படித்தான் பேசுவியா நீ...?" என்று முறைக்க...

தன்னைப் பார்த்ததும் கீர்த்திக்கு வந்த எல்லையற்ற சந்தோசத்தைப் பார்த்த கவிக்கு அவள் மேல் இருந்த கோபம் எல்லாம் எங்கோ காணாமல் போயிற்று... அவளுக்கும் உற்சாகம் பிறக்க... கோபம் எல்லாம் மறந்து தோழியை அணைத்தாள்.

பாலாவிற்கோ, 'உள்ளே நுழையும் போது நின்ற கீர்த்தியா இது... வரும்போது இருந்த முகமும்... இப்போது இருக்கும் முகமும் ஒன்றா... எப்படி மாறி விட்டாள்... திருமணத்திற்குப் பின் இத்தனை சந்தோசமாக அவளைப் பார்ப்பது இதுவே முதல் முறை...' என்றிருந்தது.

அதைத் தன் கண்களில் தவறாமல் நிரப்பியபடி காரை நிறுத்தச் சென்று விட்டான்

கவி... கீர்த்தியிடம், "உன்கிட்டெல்லாம்... பேசவே கூடாது. போடி... என்னை மறந்துட்டேல்ல..." எனக் கொஞ்சம் வருத்தத்துடனும் பேச...

கீர்த்தி... "சாரிடி... என் கவிக் குட்டில... என்னைப் பார்த்தா பாவமா இல்லை..." என்று கெஞ்சியவள்,

"நான் பண்ணினது... தப்புதான்... சரினு சொல்லல... ஏன்னு சொல்றேன்..." என்று மெல்லிய குரலில் வருத்த முடன் கூற...

"சோ... தெரிஞ்சே பண்ணி இருக்க..." என்றவளிடம் தலையை மட்டும் ஆட்டினாள்.

கவிக்கு இப்போது கோபம் அதிகமாக வரத் தொடங்கியது... இருந்தாலும் அடக்கியவள்...

தூரத்தில் பாலா அவர்களை நோக்கி வருவது தெரிய...

"ஆனாலும்... நீ பாலாக்கு மேரேஜ் ஆனதைக் கூட சொல்லலேல்ல... அதுக்கே உன்னைப் போட்டுத் தள்ளணும்...அது தெரியாம வழக்கம் போல அவரை சைட் வேற அடிச்சுட்டேன்... எல்லாம் உன்னாலதான்... பாவி..." என்று அடிக்க...

கீர்த்தி... "அப்போ நான் பேசாதது, கவலை இல்லை... இதுதான் உனக்குக் கோபமா... அதான் போன்ல அப்படி பேசுனியா... நான் பயந்தே போய்ட்டேன்..." என்று கூற...

"பயந்துட்டியா... ஆமா... நான் கூட கேட்கணும்னு நெனச்சேன்... மதுன்னு சொன்ன வுடனே ஏன் பேயடிச்ச மாதிரி போனை வச்சுட்ட... வந்து பார்த்தா அந்தக் கோலத் திலதான் நிக்கிற... அவ பேயா என்ன... ஆனா... நம்ம ஆளு..." என்ற போது,

முறைத்த கீர்த்தியைப் பார்த்து, "சாரி சாரி... உனக்குக் கோபம் வரும்... என் ஆளு..." என்றபடி தொடர,

இப்போதும் முறைத்த கீர்த்தியைப் பார்த்து, "ச்சே! இப்போதான் அவர் வேற ஒருத்தி ஆளோ... சொல்ல விடு... ஆனா... பாலாவுக்கு மதுனா... ரொம்ம்ப இஷ்டம் போல..." என்றவள், இன்னும் தன் தோழி கோபத்தில் இருப்பதை உணர்ந்து...

'என்னாச்சு இவளுக்கு... என்ன சொன்னாலும் முறைக்கிறா...' என்று தோழியை உற்றுப் பார்த்தவளின் கண்களில் அவளது வித்தியாசங்கள் உறுத்த... கழுத்தில் கிடந்த கனமான சங்கிலியில் அதிர்ந்து... கால்களைப் பார்க்க... அதில் மெட்டி தெரிந்தது.

'அவளுக்குத் திருமணம் ஆகிவிட்டதா... தன்னிடம் சொல்லக் கூட நினைக்கவில்லையே...' என நினைக்க... போன கோபம் எல்லாம் திரும்பி வந்தது. கோபத்தில் கத்த ஆரம்பிக்கும்போது பாலாவும் வந்து விட்டான்.

அவன் வந்ததைப் பார்த்தவள்... அவளிடம் இருந்த கோபத்தில்... அவளிடம் பேசாமல், "சார்... நான் கிளம்பு றேன்... இதுக்கு மேல இங்கிருந்தா... இவ என் ஃப்ரெண்டுனு சொன்னா... எனக்குத்தான் அசிங்கம்..." என்று கிளம்ப...

"என்னாச்சு கவி... ஏன்... கீர்த்தி மேல இவ்ளோ கோபம்...?" என நிலைமை தெரியாமல் பாலா கேட்க,

அவளின் வித்தியாசங்களைக் கவி உணர்ந்ததை... கீர்த்தியும் உணர்ந்து... கவியின் கோபத்தில் டென்சனான கீர்த்தி, இப்போது பாலாவின் மேல் பாய்ந்தாள்.

அதில் அவளையுமறியாமல் குரலும் உயர்ந்தது.

"என் கல்யாணத்த அவகிட்ட ஏன் சொல்லலைனு கேக்குறா பாலா சார்... உங்களுக்குத் தெரியுமே... ஏன் நான் சொல்லவில்லை என்று... சொல்லுங்க. கேக்குறால்ல..." எனச் சொல்ல...

அதிர்ந்தாள் கவி.

'என்ன... பாலாகிட்ட இப்படிப் பேசுறா இவள்... என்ன ஆச்சு இவளுக்கு?' என்று யோசித்தவள்.... பாலாவைப் பார்க்க...

அவனோ... "கீது... என்ன இது... இங்க நின்னுட்டு இந்த ஆர்ப்பாட்டம் பண்ற... வா!" என்று கையைப் பிடிக்க...

கவிக்குத் தலை சுற்றியது. என்ன நடக்குது இங்க... இவ ஏன் இப்படிக் கத்துறா... பாலா வேற... கீதுனு கூப்பிடறார்... அவ கையெல்லாம் பிடிக்கிறார்... என்னவோ நடந்திருக்கிறது தன் தோழி வாழ்வில் என்பதை உணர்ந்தவள்... தன் கோபத்தை எல்லாம் தூரப் போட்டுத் தோழியின் அருகில் கனிவுடன் செல்ல...

அவளின் கனிவில் கீர்த்தி அவள் மேல் சாய்ந்தாள் அழுதபடி.

யாரிடமும் திறக்காத தன் எண்ணங்களை... பாலாவின் மேல் இருந்த கோபத்தை... இன்று இருக்கும் நிலைமையை... அவளிடம் கொட்ட வேண்டும் போல் இருந்தது. விளைவு பாலாவைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற ஆரம்பித்தாள்.

"கவி... நீ... நீ போன பின்னால்... என்னோட வாழ்க்கையில என்னவெல்லாமோ நடந்து விட்டது... இவன்..." என்று ஆரம்பிக்க...

மனைவி புலம்ப ஆரம்பித்தால்... என்ன நடக்கும் என்று தெரிந்ததால்... அதை உணர்ந்தவன்... அங்கிருந்த ஆட்டோ ஒன்றில் இருவரையும் ஏற்றிக் கீர்த்தி வீட்டிற்கு அனுப்பினான்.

கவிக்கு ஒன்றுமே புரியவில்லை... தோழியின் புலம்பலும் அழுகையும்... கவியைத் தன்னிலையை மறக்கடிக்க... பாலா ஆட்டோவில் ஏறச் சொன்னவுடன் ஏறி விட்டாள்.

கீர்த்தி வீட்டில் கீர்த்தி அம்மா இருப்பார்கள். அவர்களைப் பார்த்தால் இவள் சமாதானமாவாள். எனவே அங்கு செல்வதுதான் சரி என்று ஏறியும் விட்டாள்.

கீர்த்தி சற்றுத் தெளிவில்தான் இருந்தாள்... அதனால் அமைதியாகவே வந்தாள்.

ஆட்டோவில் மௌனமே ஆட்சி செய்ய... தோழிகள் இருவரும் கீர்த்தி வீட்டிற்கு வந்தனர்... அவள் வீட்டின் கதவு பூட்டியிருப்பதைப் பார்த்த கவி...

'ஆன்ட்டி எங்க போயிருப்பாங்க...?' என்ற யோசனையில் இருக்க...

கீர்த்தி தன் கைப்பையில் இருந்து சாவியை எடுக்க, அதிர்ந்தாள் கவி...

அவளிடம் சாவியை நீட்டிய கீர்த்தியின் கண்களில்... வெறுமை குடி கொண்டிருக்க...

கவிக்கோ... கதவைத் திறக்கவே நடுங்கின அவள் கைகள்.

அவள் நினைத்ததை எல்லாம்... கேட்க முடியாமல்...

"ஆன்ட்டி எங்கே... வெளியில போயிருக்காங்களா... கீர்த்தி...?" என்று தடுமாறினாள்.

பதில் இல்லை கீர்த்தியிடம்.

திறந்தாள் கவி... அதிர்ந்தாள்.

நேராக மாட்டியிருந்த புகைப்படத்தில்... அவளால் நம்ப முடியவில்லை... கீர்த்தியைப் பார்த்தவளுக்கு அழுகை ஆறாகப் பெருகியது.

அவளுக்கே தாங்க முடியாமல் கதற... கீர்த்தியோ உணர்வுகளைத் துடைத்தவளாய்... தன் தாய் தந்தையைப் பார்த்தபடி...

"என்ன கேட்ட கவி... வெளில போயிருக்காங் கன்னா.... இல்லடி... இந்த உலகத்த விட்டே... என்னை விட்டே... ஜோடியா... போய்ட்டாங்க என்னை மறந்துட்டு... ஏன் கவி... எனக்கு ஒரே சந்தேகம்தான்... என்னை விட்டுட்டுப் போக அவங்களுக்கு எப்படி மனசு வந்துச்சுனே தெரியல... என்ன அவசரமா போய்ட்டாங்க... ஆக்சிடென்ட்னு சொன்னாங்க... போய்ப் பார்த்தா... அப்பா... என் அப்பா... கீர்த்தி... கீர்த்திமா... கீர்த்திடானு... வாய் ஓயாமப் பேசுவாரு... ஒரு வார்த்தை கூடச் சொல்லாம... போய்ட்டார்..." என்றவள், கண்ணில் இப்போது நீர் வழியச் சுவரில் சாய்ந்தாள்.

அவளுக்கு ஆறுதல் சொல்லக் கூட முடியாமல் திணறினாள் கவி. அவளிடம் பேச முடியாமல்... தடுமாறி னாள்... அவளாலே முடியவில்லை... கீர்த்தியை எங்கு சமாதானப்படுத்துவது...? இருந்தும் அவள் அழுவதைத் தாங்காமல் அவளை ஆறுதல் படுத்த... கீர்த்தியின் புறம் திரும்பியவள் இன்னும் அதிர்ந்தாள்... அங்கு பாலா - கீர்த்தி புகைப்படம் இருந்ததைப் பார்த்து... அவளால் முடியவில்லை... அவளுக்கே பயமாய் இருந்தது... என்னவெல்லாம் நடந் திருக்கிறது... அவள் தங்கள் திருமணப் புகைப்படத்தைப் பார்த்து அதிர்ந்ததைக் கீர்த்தியும் பார்த்தாள்.

ஆனாலும் தொடர்ந்தாள் கீர்த்தி... அவளைப் பார்த்துக் கொண்டே, "உனக்கு பாலா சார்னா... ரொம்ப பிடிக்கும்ல கவி... உனக்கு மட்டும் இல்லை... என் அம்மாக்குக் கூட... அதான் என்னை விட்டுட்டுப் போறதைப் பற்றிக் கூட கவலைப்

படாம... அவர்கிட்ட நீங்க என் பொண்ண பார்த்துக்கு வீங்கன்னு நான் சந்தோசமா போறேன்னு... அவங்க புருசனோட போய்ட்டாங்க... ரெண்டு பேரும் என்னைப் பத்தி யோசிக்காம... அவங்களே என்னை நினைக்காம போய்ட் டாங்க... நான் எதுக்காக அழணும்... அழ மாட்டேன்... தெரி யுமா?" என்றவள் சொன்னதற்கு எதிராக இன்னும் கதற...

கவிக்குத் தாளவில்லை, அதற்கு மேல்...

"கீர்த்தி, என்னைப் பாரு... என்ன நடந்தது... பாலாவை ஏன் நீ மேரேஜ் பண்ணினாய்... அவர் மதுவத்தானே லவ் பண்ணினார்னு சொன்ன... அது சும்மாவா?" என்று கேட்க...

இல்லை என்று மறுத்தவாறு சொன்னவள்...

"அவர் மதுவ லவ் பண்ணதினாலதான் என்னைக் கல்யாணம் பண்ணினார்..." என்று சொல்ல...

கவிக்கு ஒன்றும் விளங்கவில்லை...

"என்னடி சொல்ற...? எனக்கு ஒண்ணுமே புரிய வில்லையே... உன்னை இந்த நிலைமையிலே பார்ப்பேன்னு சத்தியமா நான் நினைக்கவே இல்லையே... ஆன்ட்டி... அங்கிள் இல்லாம நீ எப்படிடி... எனக்கே வலிக்குது கீர்த்தி... அவங்கன்னா உயிரே விடுவியேடி... அய்யோ! இது தெரியாம நான் கோபமா வேற இருந்தேனே... சொல்லுடி. என்னடி நடந்தது...? வினோத் கூட உன்னை விட்டுட்டாரா... பாலாவை எப்படி கீர்த்தி நீ... அவர் இன்னொரு பொண்ணை லவ் பண்றாருன்னு தெரியும்ல... தெரிந்தும் நீ ஏன் இப்படிப் பண்ணின?" என்று அவளும் குலுங்கி அழ...

கீர்த்தி கண்களில் வழிந்த கண்ணீரைக் கூடத் துடைக்கப் பிடிக்காமல்... கசந்த வார்த்தைகளாய்ப் பேசலானாள்.

"எல்லாம் என்னை இப்படி அழ விட்டுப் போயிருக் காங்கல்ல... அவங்களுக்காகத்தான்..." என்றபடி தன் வாழ்வில் நடந்ததை... தன் தந்தையின் நெருக்கடி... அதைப்

பாலாவிடம் சொல்லிய சூழ்நிலை... அதை அவன் தன் சுயநலத்திற்குப் பயன் படுத்திய வேதனை... தன் பெற்றோருக்காகத் தன் வாழ்வைப் பாலாவிடம் பணயம் வைத்த கொடுமை... அது கடைசிவரை தெரியாமல் அல்ப ஆயுளில் போன தன் தாய்... தந்தை இறப்பை... அதில் பரிதாபப்பட்டுத் தன்மேல் தன் கணவன் கொண்ட... காதலை... மொத்தமும் சொன்னாள். அவன் மேல் தனக்கு வந்த காதலைத் தவிர...!

பாலாவா... இப்படியா... ஒரு ஹீரோ போல அவனைத் தான் நினைக்க... அவனோ ஒரு சின்னப் பெண்ணின் கஷ்ட காலச் சூழ்நிலையினைத் தனக்குச் சாதகமாக்கி அவள் வாழ்வைச் சின்னாபின்னமாக்கி விட்டு... இப்போது காதல் என்ற போர்வையில் அவளை மிரட்டிக் கொண்டிருக்கிறானா... பாலாவின் மேல் அவள் வைத்திருந்த அத்தனை நல்ல அபிப்ராயமும் மணல் மேடு சரிவதுபோல் மண்ணோடு மண்ணாகச் சரிந்தது.

"ராஸ்கல்...!" என்றாள் கடும் கோபத்தில்...

இப்போதுதான் கீர்த்தி சுய நினைவுக்கு வந்தாள். தன்னவனை... அதுவும் அவனைப் பிடிக்கும்... ரசிக்கும்... ஒரு பெண்ணின் வாயில் இருந்து வந்த வார்த்தைகளில் தெளிந்தாள்.

"கவி! என்ன சொல்ற?" என்று கோபமாகப் பார்க்க...

அதை யெல்லாம்... கவனிக்கும் நிலையில் கவி இல்லை. கூடான மனநிலையில் இருந்தாள்... அவளுக்கு இருந்த மன நிலையில்... அவளைப் பொறுத்தவரை பாலாவை ஒரு காமுகனாக நினைக்கத் தோன்றியது.

கீர்த்திக்கு இஷ்டமில்லாத வாழ்வை அவளிடம் திணித்து விட்டு... இப்போது அவளைத் தனக்கு இணங்கி நடக்க டார்ச்சர் வேறு செய்கிறானா... கேட்க ஆளில்லாமல் போய் விட்டாள் என்ற நினைப்பா... என்ற எண்ணங்களில் இருந்தவள்,

"கீர்த்தி... நீ... கவலைப் படாத. உனக்குக் கேட்க ஆளில்லை என்று நினைத்தானா... அவன்?"

அவள் பாலாவைக் கண்டபடி ஒருமையில் எல்லாம் பேசுவதைக் கேட்க முடியவில்லை கீர்த்திக்கு...

"கவி..." என்றவளைத் தவிர்த்து...

அவள் ஆத்திரத்தில் பேசிக் கொண்டிருந்தாள். "எல்லாம் பண்ணிட்டு... இப்போ உன்னைத் தினம் தினம் டார்ச்சர் வேறு செய்கிறானா... அவனோட வாழச் சொல்லி..." எனும்போதே,

'டார்ச்சரா... அய்யோ! இவ ஏன் இப்படில்லாம் பேசுறா... பேசாம ஒண்ணும் சொல்லாம இருந்திருக்கலாமோ?' என்று நினைத்தவள்...

"இவன் மாதிரி ஆளை எல்லாம்... போலீஸிடம் மாட்டி விட்டு முட்டிக்கு முட்டி தட்டி... கம்பி எண்ண வைக்கணும்... பணம் இருந்தா என்ன வேணும்னாலும் பண்ணுவாங்களா...?" என்று பாலாவை ஒரு தேர்ட் ரேட் போல் பேசிக் கொண்டே போக...

கவி சொன்ன போலீஸ் என்ற வார்த்தையில் சுத்தமாகத் தெளிந்தாள் கீர்த்தி. "ஷட் அப் கவி... விட்டா ஓவரா பேசிட்டே போற... அவரைப் பத்தி என்ன தெரியும்னு நீ இப்படிலாம் பேசுற!" என்றவளைப் பார்த்துக் கவி விழிக்க ஆரம்பித்தாள்.

"நான்தான் அவர்கிட்ட போய் நின்னேன்... அவர் ஒண்ணும் என்னைக் கம்பெல் பண்ணி... கல்யாணம் பண்ணலை. அவரும் என்னதான் பண்ணுவாரு... சொல்லு. அவர் அப்பாவுக்கே வேற வழி இல்லாம செஞ்சார்... அது கூட குற்ற உணர்ச்சியோடதான் இத்தனையும் பண்ணினார்... அது தெரியாம பேசாத நீ... என்ன பண்றது... எல்லாம் விதி. அதுக்காக நீ கண்டபடி பேசுற... அவன் இவன்னு...! டார்ச்சர் பண்றான்னு... நான் சொன்னேனா... டார்ச்சர் பண்றானாம்... இவ பெருசா வந்து பார்த்த மாதிரி...

லாக்கப்ல தள்ளி முட்டிக்கு முட்டி தள்ளச் சொல்வியா... என்ன சொல்லித் தள்ளுவ...? அதுக்கு நான் விடுவேனா...?" என்று மூக்கு விடைக்க அவளிடமே சண்டைக்கு வந்த கீர்த்தியை... தன் தோழியைப் புரிந்தும்... புரியாத மாதிரியாக... நம்பியும்... நம்பாத மாதிரியாகப் பார்த்தாள் கவி.

கீர்த்தியும் பாலாவை விரும்புகிறாளோ... தான் அவனைப் பற்றிச் சொல்வதை அவளால் தாங்க முடிய வில்லை என்றால் என்ன அர்த்தம்... தன் கணவனைக் காதலிக்கும் காரணத்தினால் மட்டுமே... அவனைப் பற்றித் தான் சொல்வதைக் கேட்க முடியாமல் அவளுக்கு ஆதர வாகப் பேசும் தன்னிடமே சண்டை போடுகிறாள்... என்று நினைத்தவள்... இதை அவள் உணர்ந்திருப்பாளா என்ற சந்தேகம் வேறு வந்தது.

'எப்படி இருந்தவள்... இந்த நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டு விட்டானே...' என்று இன்னும் பாலாவின் மேல் கோபம் வருவது போல இருந்தது அவளுக்கு.

"கீர்த்தி!" என்றாள் மெதுவாக.

"ப்ளீஸ் கவி... பாலாவைப் பத்தி தப்பா பேசாத... என்னால தாங்கல முடியவில்லை..." என்று தன் தோழியின் முகம் சுருங்கியதைப் பார்க்கப் பிடிக்காமல் சொல்ல...

"கீர்த்தி! என்னைப் பாரு... கண்ணைத் துடை. நீ... நீ பாலாவை விரும்புகிறாயா...? என்கிட்ட மறைக்காமல் சொல்லுமா....!" என்று அவள் கண்களைப் பார்த்துக் கேட்க...

தன் காதலைச் சொல்லாத போதிலும்... தன் தோழி தன் மனதினைப் படித்து விட்டதை உணர்ந்து... அவள் கண்களைப் பார்க்க முடியாமல்... அவள் சொன்ன வார்த்தை யின் உண்மையில் தலை குனிந்தவள்... கண்ணீரை மட்டுமே கவிக்குப் பதிலாகத் தந்தாள்... அவள் நினைத்துக் கேட்ட வார்த்தை உண்மை என்று...

கவி... கீர்த்தியின் இந்த நிலை தாங்காமல் தன்னுடன் சாய்த்துக் கொள்ள, அவள் மடிமீது சாய்ந்தாள். அவளுக்கும் ஒரு ஆறுதல் தேவையாக இருந்தது... அது கவியின் மடியில் கிடைக்க... இருவரும் ஒன்றும் பேசாமல் அப்படியே இருந்தனர்.

அந்த மௌனத்தைக் கூடக் கீர்த்திதான் கலைத்தாள்.

"கவி..." - என்ற கீர்த்தியிடம்,

"ம்ம்..." என்று மட்டும் சொன்னாள் கவி.

"என்னைப் பார்த்தா உனக்குச் சிரிப்பா வருதுல்ல..."

"ஆமா.... நீ வந்ததுல இருந்து எனக்குக் காமெடியா சொல்லி கிச்சுகிச்சு காட்டற... எனக்குச் சிரிப்பு வர வேண் டியதுதான்..." என்று கீர்த்தியைப் பார்த்து முறைக்க...

"இல்லப்பா... அன்னைக்கு அவன் வேற ஒருத்திய மனசுல வச்சுருக்கறவன்... சும்மா கூட நினைக்கக் கூடா துன்னு சொன்னவ... இன்னைக்கு அவனையே விரும்ப றேன்னு சொல்றாளேன்னுதான்..."

எழுந்து அமர்ந்தாள் கீர்த்தி. புகைப்படத்தில் இருந்த பாலாவைப் பார்த்தபடி பேசினாள்.

"எப்படிடி எனக்கு இவன் மேல காதல் வந்தது... என்னோட சூழ்நிலையினைத் தந்திரமாகத் தன் வாழ்க்கை யில் பயன்படுத்தியவன்... இன்னொரு பெண்ணை நேசித் தவன்... நான் எப்படி இவன் மேல் பைத்தியம் ஆனேன்... எனக்கே தெரியவில்லை... என் பாலாதானே அவர்... கவி..." என்று கவியைப் பார்த்துப் பொம்மைக்கு ஏங்கும் குழந்தை போலக் கேட்டாள்.

கவிக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அமைதியாக இருக்க... கீர்த்தியே தொடர்ந்தாள்.

"ஆனால்... மது வந்து இதே கேள்வியைக் கேட்டால் நான் என்ன சொல்வேன் கவி...? பாவம் பாலா. நான்தான்

அவரை டார்ச்சர் பண்ணிட்டு இருக்கேன் தெரியுமா... எனக்குப் பாலாவை ரொம்ம்ம்ப பிடிக்கும்... ஆனா... என்னால் அவரோட சேர்ந்து வாழ முடியலையே... என்னால் முடியலை... அவர் என்னை நெருங்கும் போதெல்லாம் மதுவோட ஞாபகம்தான் வருது... அந்தப் பொண்ணுக்குத் துரோகம் பண்ற மாதிரிதான் தோணுது கவி... நான் அவர் கிட்ட மாட்டல... என்கிட்ட மாட்டிட்டு அவர்தான் ரொம்ப கஷ்டப் படுகிறார்...." என்றபடி... எழுந்து அந்தப் புகைப்படத்தை எடுத்துத் தன் கையால் அவனது முகத்தைத் தடவியவள்... அதில் இருந்த அவன் முகத்தை ரசித்தவள்...

"கவி... உன்னைச் சொல்வேன்ல... சைட் அடிக்கா தேன்னு. ஆனா நான் என் ஆளப் பார்த்து செமயா சைட் அடிப்பேன் தெரியுமா...? இப்போதான் அடிக்க முடிய வில்லை..." என்றவள் சட்டென்று நிமிர்ந்து...

"இனிமேல் நீ பார்த்த அவரை... அவ்ளோதான்... நீ வேற ஆளப் பார்த்துக்கோ... எனக்கு மட்டும்தான் அவர்... ப்ச்ச்... இல்ல, அவர் மதுவோட பாலா... அவருக்கு மதுவ எவ்ளோ பிடிக்கும்னு தெரியுமா... ஏன் கவி பாலா வாழ்க்கையில மதுவுக்கு முன்னால் நான் வரல... அப்போ அவர் என் பாலாவாத்தானே இருந்திருப்பார்..." என ஆரம் பித்த இடத்திற்கே வர,

அவள் புலம்பல்களில் கவிதான் அடி வாங்கினாள். எப்படி இருந்த கீர்த்தி இந்த அளவிற்கு மாறி இருக்கிறாள்... ஓரளவிற்குத் தீடமாக முடிவெடுப்பவள்... அவளே இந்த அளவிற்குக் குழம்பி இருக்கிறாள்... என்றால்... அதற்குத் தன் திருமண வாழ்க்கையின் நிச்சயமின்மை பற்றிய பயமே காரணம் என்று தோன்றியது.

மது என்ற ஒரு வார்த்தையிலேயே கலங்கி நின்றிருந்த... தன் தோழியின் முகம் கண் முன் தோன்றிக் கவியைக் கலங்கடிக்க...

கீர்த்தி வாழ்க்கையைப் பற்றிய கவலையில் ஆழ்ந்தாள் கவி.

பாலாவின் மனநிலையோ அங்கு அலுவலகத்தில் இருப்புக் கொள்ளவில்லை... மனம் தன் மனைவியைச் சுற்றியே வர... மதியத்திற்கு மேல் கிளம்பி விட்டான்.

மணி இரண்டு ஆகி இருந்தது... கீர்த்தி பேசிப் பேசி... ஒரு கட்டத்தில் சோர்விலோ... இல்லை, தன் மனப் பாரத்தை எல்லாம் கவியிடம் இறக்கி வைத்ததாலோ தூங்கி விட்டாள்.

கவிக்குத் தூக்கம் எல்லாம் வரவில்லை... காலையில் சாப்பிடாமல் வேறு வந்தது... பசி வயிற்றைக் கிள்ள உடகார்ந் திருந்தாள். கீர்த்தி பற்றிதான் அவள் எண்ணமெல்லாம் சுற்றி வந்தது.

அழைப்பு மணி அழைக்க, கதவைத் திறந்தாள்.

பாலாதான்! கையில் சாப்பாடு பார்சலோடு வந்திருந் தான்.

ஒன்றும் சொல்லாமல்... வழி விட்டாள்.

அவளது செய்கையிலேயே அவளுக்கு 'எல்லாம்' தெரிந்து விட்டது என்பதை உணர்ந்தான் பாலா... அவன் 'எல்லாம்' என்று நினைத்தது... எல்லோருக்கும் தெரிந்தது போல் பாலா - கீர்த்தி காதல்... கல்யாணம் என்ற வரையில் தான்... கீர்த்தி அழுதிருப்பாள் என்றால் அது பெற்றோரின் மரணத்தை நினைத்துக் கவியிடம் சொல்லி அழுதிருப்பாள்... அந்த வகையில்தான் அதிகபட்சமாக நினைத்தான்... வேறொன்றும் தோன்றவில்லை... வினோத்திடமே சொல் லாதவள்... கவியிடமா சொல்லி இருப்பாள் என்றே நினைத் தான் பாலா.

உள்ளே நுழைந்தவன்... கீர்த்தியைப் பார்வையால் தேட...

"உள்ளே படுத்துருக்கா..." என்ற கவியின் வார்த்தை யில்,

தங்கள் அறையினுள் அவளைப் பார்க்கச் சென்றான். அவர்களது புகைப்படம் கட்டிலில் கிடக்க... 'இது ஏன் இங்க இருக்கு...' என்றபடி அதை எடுத்தவன் வெளியே வந்தான்.

கவியிடம், "ரொம்ப அழுதாளா என்ன..." என்று கேட்க...

தலையை மட்டும் ஆட்டினாள் கவி.

"ப்ச்ச்... உங்களுக்கே தெரியும்... அவ அப்பா... அம்மான்னா அவளுக்கு எவ்வளவு இஷ்டம் என்று..." சொல்ல ஆரம்பிக்க -

கவியோ நேரடித் தாக்குதலில் இறங்கினாள்.

"ஏன் பாலா சார் இப்படிப் பண்ணுனீங்க... நீங்க இப்படிலாம் செய்வீங்கன்னு நான் எதிர்பார்க்கவில்லை!" என்று குரல் கம்மக் கேட்டவளை... சட்டென்று நிமிர்ந்து பார்த்தான் பாலா.

அடிபட்ட புலியின் வலியின் வேதனையுடன்... சத்தியமாக அவன் எதிர்பார்க்கவில்லை. கீர்த்தி இவளிடம் எல்லாம் சொல்லி இருப்பாள் என்று.

"என்... என்ன கவி?" என்று தடுமாற...

"எனக்கு எல்லாம் தெரியும் சார்... சொல்லிட்டா கீர்த்தி... அவ என்ன பாவம் பண்ணினாள்... அப்பா... அம்மா மேல் பாசம் வைத்த ஒரே காரணத்தினால் மட்டுமே இன்று இந்த நிலைமையில் இருக்கிறாள். நீங்க நினைச் சிருந்தா அதை மாத்தியிருக்கலாம்தானே... சார்...! அவளுக்குத் தேவையான பணத்தினை உங்களால் கொடுத் திருக்க முடியும்தானே சார்... அவளோட நிலைமையைப் பயன்படுத்திகிட்டீங்க... எப்படி முடிந்தது இது உங்களால... உங்களுக்குக் கீழ் எத்தனையோ பொண்ணுங்க வேலை பார்க்கிறோம்... ஏதோ ஒரு நம்பிக்கையில எங்க அப்பா அம்மாலாம் அனுப்பறாங்க... ஒரு முதலாளியா எங்களைக்

காப்பாத்தறத விட்டுட்டு... நீங்க கூட எங்க சூழ்நிலையை யூஸ் பண்ற ஒரு அதிகார வர்க்கமாத்தான் இருந்துருக்கீங்க... உங்க கிட்ட இதை எதிர்பார்க்கவில்லை சார்....

"அவ்வளவா நான் பழகுனதில்லை உங்க கூட... ஆனாலும் உங்க குணம் எனக்குப் பிடிக்கும்... எவ்வளவு பெருமையா சொல்லிட்டு இருப்பேன் தெரியுமா... கீர்த்தி கூட கிண்டல் பண்ணுவா. பாலா சார்க்கு ஏன் இவ்ளோ சப்போர்ட் பண்ணுறேனு... நான் சொல்வேன், உங்க பார்வையில இருக்கிற கண்ணியம் ஒன்று போதும்... உங்களுக்கு சப்போர்ட் பண்ண. ஆனா... இன்னைக்கு அத்தனையும் கீர்த்தி சொன்ன வார்த்தைகளில் போய் விட்டது. உங்க காதலைக் காப்பாற்ற ஒரு அப்பாவிப் பொண்ணைப் பலிகடா ஆக்கும் அளவிற்கு மனச்சாட்சி இல்லாத ஆளா நீங்க... உங்க பார்வையில கண்ணியம் இருந்து என்ன பிரயோசனம்... யாரை நம்புறதுன்னே தெரியல... நல்லவர்னு நம்பித்தானே உங்ககிட்ட சொல்லி மோசம் போனா கீர்த்தி... சத்தியமா... எனக்குக் கோபம் ஆறல... ஆனா அந்த லூசு உங்க மேல பைத்தியமாயிருக்கா... அதான் இவ்ளோ பொறு மையா பேசறேன் நான்... நீங்க மட்டும் அந்த மது..." என்றவளை இடையில் நிறுத்தினான் பாலா.

"நீங்க... என்னைப் பற்றி எல்லாம் பேசலாம்... மதுவப் பற்றிப் பேசாதீங்க... எனக்கும் மதுவுக்குமான உறவைப் பற்றி உங்களிடம் பேச நான் விரும்பவில்லை. அது எனக்கும் கீர்த்திக்கும் உள்ள பிரச்சனை..." என்று கவி மதுவைப் பற்றிப் பேச வருவதை விரும்பாமல் தடை செய்தான்.

தான் செய்து வைத்திருக்கிற காரியத்தால் மதுவை யாரும் தப்பாகப் பேசுவதை அவனால் அனுமதிக்க முடிய வில்லை.

கவியும் அமைதி ஆகிவிட்டாள்... அவன் மதுவை விட்டுக் கொடுக்காமல் பேசியது வேறு அவளுக்கு மனதின்

ஓரத்தில் வலிக்க... அவன் பேசுவதை வேதனையோடு கேட்க ஆரம்பித்தாள்.

"ஆமாம்... நான்... கீர்த்தியோட நிலைமையை யூஸ் பண்ணிக் கொண்டேன்... அதற்காக இப்போது வருத்தப் படவில்லை... ஒரு காலத்தில் வருத்தப்பட்டேன்... கீர்த்திக்குத் துரோகம் செய்கிறோமோ என்று. ஆனால் இப்போதெல்லாம் அதற்காகச் சந்தோசம்தான் படுகிறேன்... என் காதல் உட்பட... மதுமேல் எனக்கு வந்த காதல் முதல்... கீர்த்தியின் பிரச்சனை வரை... கீர்த்தி எனக்குக் கிடைப்பதற்கான முழு முதல் அடிப்படைக் காரணங்கள் எனும்போது நான் ஏன் வருத்தப்பட வேண்டும்...? இவை எல்லாம் எங்கள் இருவரின் வாழ்வில் வராவிட்டால்... நான் ஒரு மூலையில்... அவ ஒரு மூலையில் என்று வேறு யாருடனாவது இணைந்திருப் போம்... என் கீர்த்தி எனக்குக் கிடைக்கவே... மது மூலம் எனக்குக் காதலை உணர வைத்து... அதன் காரணமாகக் கீர்த்தியை என் வாழ்வில் இணைக்க முடிந்தது... இதில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வலிதான்...

"ஆனாலும்... வலிகள் மட்டுமே இல்லை வாழ்க்கை... அதில் சுகங்களும் இருக்கும். அதைத் தேடிப் போனால் வலியின் சுவடுகள் மெல்ல மெல்ல மறையும். கீர்த்தி அப்பா... அம்மா இறந்ததில்தான் நான் பரிதாபப்பட்டு அவளை ஏத்துக் கிட்டேன்னு நினைக்கலாம்... நீங்க என்ன... அங்க அழுதழுது படுத்திருக்காளே என் மனைவி... அவகூட அப்படித்தான் நினைக்கிறா... ஆனா... எனக்குக் கீர்த்தி மேல காதல் வந்ததுக்கு அது மட்டும் காரணம் இல்லை... அவளின் காதலும்... அவள் எனக்கு உணர்த்திய கணவன் என்ற உரிமையும் மட்டுமேதான்..." என்று நிறுத்தியவன்....

"என் மேல அவளுக்கு இருக்கும் உரிமை... அவளுக்கு மட்டும் என்று நினைக்கும்வரையில் அவ என்னோட வாழ மாட்டா... அது எனக்குத் தெரியும்... ஆனா கண்டிப்பா ஒரு நாள் உணர்வாள்... அந்த நாள் விரைவில்

வரும். அதனால்தான் என் மேல அவளுக்கு இருக்கும் காதல் எனக்குத் தெரிந்தும் அவளாக என்னிடம் சொல்லும் வரையில் காத்திருக்கிறேன்..." என்று முடித்தான் பாலா.

அவன் வார்த்தைகளின் உண்மை... காதல் புரிய... கவியும் மௌனமானாள்... ஆனாலும் மதுவை இப்போதும் அவன் விட்டுக் கொடுக்காமல் பேசியதும் அவளுக்குக் கொஞ்சம் வருத்தம்தான்... கவியும் பாலாவிடம் அதற்கு மேல் தன் பேச்சை வளர்க்கவில்லை...

பாலா கீர்த்தியைப் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கையும் ஓரளவு வரச் சமாதானமானாள்.

அதன் பிறகு பாலாவே பேச்சை மாற்றினான்...

"கவி, கீர்த்திக்கு உங்கள மாதிரி ஒரு ஃப்ரெண்ட கிடைக்க அவ கொடுத்து வைத்திருக்க வேண்டும்... அவள் கொஞ்சம் பழையபடி மாற வேண்டும் என்றால் நீங்க அவ கூட இருக்க வேண்டும்... ப்ளீஸ்!" என்று கூறிச் சினேக மாய்ப் புன்னகைத்து... அவளை அழைத்து வந்ததன் காரணத்தையும் சொல்லாமல் சொல்ல...

அவன் மனதில் உள்ளதைத் தெளிவாகச் சொன்ன தால்... கவிக்கும் அவன் மேல் முழுமையாக என்றில்லா விட்டாலும்... நம்பிக்கை உண்டாக...

அவள் பாலாவுடன் சேர்ந்து வாழத் தன்னால் ஆன முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று நினைத்தாள்...

பாலா தான் வாங்கி வந்திருந்த சாப்பாட்டை அவளைச் சாப்பிடச் சொல்லிவிட்டு... மனைவியைத் தேடிச் சென்றான்.

மனைவியின் அருகில் வந்தவன்... அவளையே பார்த்தபடி அமர்ந்துவிட்டான். கவியிடம் தன்னைப் பற்றி அவள் சொன்னது அவனுக்கு மனதில் வலிதான் என்றாலும்... தன் மனதில் இருப்பதை எல்லாம் அவளிட மாவது கொட்டியிருக்கிறாளே என்ற வகையில் அவனுக்கு நிம்மதிதான் அளித்தது.

பாலா அலுவலகத்தில்... கீர்த்திக்காக... அவள் வாழ்க்கைக்காகவே சேர்ந்தாள் கவி.

33

கவியின் வரவுக்குப் பிறகு... கீர்த்தி தன் மனதை அவளிடம் கொட்டிய பிறகு... பழைய கீர்த்தியாக அவளிடம் மாற்றங்கள் வரத் தொடங்கி இருந்தன.

பாலா முதல் அருந்ததி... சிந்து வரை உணர்ந்திருந்தனர்.

கவியின் வழக்கமான பேச்சு... குறும்பான விசயங்கள் கீர்த்தியைத் தனிமையில் இருந்து முற்றிலுமாக வெளிக் கொணர்ந்து கொண்டிருந்தது.

அதிலும் சிந்துவும் கவியும் சேர்ந்தால்... பாலா - கீர்த்தியின் நிலை கேட்க வேண்டாம்... பாலா கூடத் தப்பித்து விடுவான். கீர்த்திதான் மாட்டுவாள்...

கவி மட்டும் இருந்தால் கூட அவள் வாயை அடைத்து விடுவாள்... சிந்து அருகில் இருந்தால்... அது கூட முடியாது... முகம் சிவக்கச் சிவக்க இருவரும் திணறடிப்பர்.

சிந்துவை... சின்னப் பெண்... என்று திட்டிக் கூடப் பார்த்தாகி விட்டது. அடங்கவில்லை அவளும்...

காலையில் அலுவலகத்தினுள் நுழைந்த கீர்த்தியிடம்... வழக்கம் போல் வம்பு வளர்க்க வந்தாள் கவி.

"என்னடி உன் ஆளைக் காணோம்.... தனியா வர்ற!" எனும்போதே காரை பார்க் செய்து வந்த பாலா உள்ளே நுழைய...

"அதானே... மனுசன் விட்டு விடுவாரா உன்னை..." எனும்போதே...

கீர்த்தி முறைக்க...

"ஹலோ மேடம்... இந்த ரொமான்ஸ் லுக்கை எல்லாம்... அதோ வர்றாரே நம்ம பாஸ்... அவர்கிட்ட காட்டு... எவ்வளவுன்னாலும் அவர் தாங்குவாரு..." எனப் பாலாவைப் பார்த்தபடி சொல்ல...

பாலாவும் அவர்களைப் பார்த்தும் பார்க்காதது போல் கடந்து போனான்.

'கீர்த்தி காலையிலேயே மாட்டிட்டா போல கவிகிட்ட... அவ என்ன சொன்னாலும் என்னை வேற வந்து தாளிப்பா... என் பொண்டாட்டி...' என்று மனதினுள் நினைத்தவனாய்... தனது அறைக்குள் நுழைந்தான்.

"ஹேய், போடி. காலையிலேயே வந்துட்டா... வேலையப் பாரு!" என்று முறைத்தவளிடம்...

"ஓ... அம்மணி கம்பெனி ஓனர் இல்ல. தெரியாம பேசிட்டேனே...!" என்று இழுத்த கவியை,

"ஏண்டி படுத்தற... நீ வேலையைப் பாரு... பார்க்காட்டிப் போ... எனக்கு என்ன வந்தது?" என்று கூறிய கீர்த்தி, தன் கம்ப்யூட்டரில் பார்வையைப் பதிக்க...

கவியும் தன் வேலைகளில் கவனத்தைத் திருப்பினாள்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழிந்து... கீர்த்திக்குப் போன் செய்தான் பாலா, அவள் எம்.டி.யாக.

கீர்த்தி மற்றும் கேசவன் அவனது அறையில் இருந்தனர்.

கீர்த்தியிடம் பாலா... "நீங்க... டீம் லீட்ல இருந்து பண்ணிய ப்ராஜெக்ட்... கம்ப்ளீட் டெலிவரி நெக்ஸ்ட் மன்த்தோட முடியுது. சோ... இனி ரிசோர்ஸ் எல்லாம் ரிலீஸ் பண்ணிடலாமா... ஏனென்றால்... அப் கம்மிங் ப்ராஜெக்ட்டுக்கு ரிசோர்ஸ் அலோகேசன் பண்ணணும்..." என்று கேட்க...

கேசவனிடம் திரும்பிய பாலா அவனிடம்... "இது பெரிய ப்ராஜெக்ட் கேசவ்... டைம் அண்ட் ரிசோர்ஸ் கோட்

பண்ணிக் கொடுத்துட்டேன். நீங்க கீர்த்தியோட டீம்ல இருந்து இந்த ப்ராஜெக்டுக்குத் தேவையான ரிசோர்ஸ செலக்ட் பண்ணிட்டு... அதன் பிறகு ரெக்ரூட்மெண்ட் டீம்க்கு மெயில் அனுப்புங்க!" என்றவன்...

"கீர்த்தி, நீங்களும் செக் பண்ணிட்டு...ரிலீஸ் பண்ணப் போறவங்கள எனக்கும் கேசவனுக்கும் மெயில் பண்ணுங்க..." என்றபடி தன் வேலையில் கவனம் செலுத்த...

கேசவன் கீர்த்தியைப் பார்த்து ஏதோ சொல்லச் சொல்ல...

கீர்த்தியும்... "பாலா...!" என்றாள்.

"என்ன...?" பார்வையால் கேட்டபடி அவளிடம் திரும்பினான்.

"இந்த ப்ராஜெக்ட் ஆரம்பித்து நெக்ஸ்ட் மன்த்தோட ஒன் இயர் ஆகப் போகுது... சோ டீம் மெம்பர்ஸ்...ப்ராஜெக்ட் சக்ஸஸ்சுக்கு டீம் பார்ட்டி கேட்கிறார்கள்..." என்று கூற...

அதே நேரம் கேசவனும், "ஆமாம் சார்... என்னோட டீம் மெம்பெர்ஸும்..." எனக் கூற,

"ஓ!" என்று சொன்னபடி... சில வினாடிகள் யோசித்து விட்டு... "ஓ.கே..." என்றவன்... தன் குறிப்பில் அந்த ப்ராஜெக்ட் ஆரம்பித்த நாளை நோட் செய்தவன்... இந்த வருடம் அதே நாளில் ட்ரீட்டையும் முடிவு செய்தான்.

அவன் அந்த அலுவலகத்தின் எம்.டி.யாக மட்டுமே அப்போது இருந்ததால்... அந்த நாள் தனது மனைவியின் பிறந்த நாள் என்பதை மறந்து விட்டான் போல் பாலா.

கீர்த்திக்கு அது தனது பிறந்த நாள். தன் பெற்றோரின் திருமண நாள் என்பதால் திகைத்தாள். ஆனால் கேசவன் இருந்ததால் வேறு எதையும் சொல்லாமல் வெளியே வந்தாள். தேதியை மாற்றவும் இயலாமல் அனைவருக்கும் மெயில் வேறு அனுப்பப்பட்டுவிட்டது. கீர்த்தியும் அத்துடன் அந்த விசயத்தை விட்டு விட்டாள்.

அன்றுதான் ஞாபகம் இல்லாமல் போனது பாலாவுக்கு... அது கூடத் தவறில்லை. ஆனால் அவளது பிறந்த நாள் அன்றும் அவன் மறந்ததுதான் அவன் நேரம்... வேறென்ன சொல்ல...?

முக்கியமான நாள் அன்று பாலாவிற்கு... அந்தப் பெரிய ப்ராஜெக்ட் ப்ரோபோசல் இன்று எழுத்து மூலம் கன்ஃபார்ம் ஆகும் நாள்.

ஒரு ராசியான கோட் வைத்திருப்பான்... இந்த மாதிரியான தினங்களில் அணிய... இது ஆதியின் பழக்கம்... அவனோடு பழகிப் பாலாவிற்கும் தொற்றிக் கொண்டு விட்டது.

குளித்து விட்டு வெற்று மார்புடன் வெறும் துண்டுடன் குளியலறையில் இருந்து வந்தவன்... அந்தக் கோட்டைத் தேட... காணவில்லை. பொறுமையாக மறுபடியும் தேட...

ஆனால், கண்ணில் படவில்லை.

"கீர்த்தி!" என்று கத்தினான்...

கீழே இருந்த அருந்ததி... "என்னாச்சு இவனுக்கு... ஏன் இப்படிக் கத்துறான்... போய்ப் பாரும்மா!" என்று தன் மருமகளை மேலே அனுப்பினாள்.

கீர்த்தியும் அதே நினைவில் வேகமாக உள்ளே நுழைந்தாள்.

உள்ளே நுழைந்தவள்... அவன் நின்ற கோலம் பார்த்து... கொஞ்ச நாளா அமைதியா இருக்கிறானே என்று நினைத்திருந்தால்... மீண்டும் ஆரம்பித்து விட்டானோ... என்று அவன் அருகே செல்லத் தயங்கியபடி நிற்க...

"கீர்த்தி, இன்னைக்கு... அந்த ப்ராஜெக்ட் ரிட்டர்ன்ல சைன் பண்ணணும்... கிளையண்ட் வந்திருக்காங்க... இந்த மாதிரி டேஸ்ல நான் ஒரு ராசியான கோட் தான் போடுவேன்... எல்லாம் இந்த ஆதியால் வந்தது... பழக்கப் படுத்திட்டுப் போய்ட்டான்... இப்போ அதைக் காணோம்...

நீ எங்கேயாவது மாற்றி வைத்தாயா...?" என்று சீரியஸாகப் பேச....

அவன் தீவிரத்தில் கீர்த்தியும் நம்பி உள்ளே வந்தாள்.

அவள் அருகே வந்தாளா இல்லையா... என்று கூடக் கவனிக்காமல்... திரும்பித் தன் தேடுதலைத் தொடர்ந்தான்..

அவன் அருகில் சஞ்சலத்துடன் வந்தவள்...

"தள்ளிக்கங்க. நான் பார்க்கிறேன்... என்ன கலர்?" என்றபடி அவள் தேட ஆரம்பிக்க...

"அதோட பேண்ட் கீழே இருந்துச்சு..." என்றபடி குனிந்து கீழே எடுக்கப் போக... கீர்த்தியின் மேல் அவன் வெற்று மேனி தீண்டியது...

அதில் அவள் தடுமாறினாலும்... வெளியில் நிதானமாக இருப்பது போல் தேடிக் கொண்டிருந்தாள். அதை அவன் உணர்ந்தாலும்... சகஜமாக... அவளின் மேல் தன் தீண்டலை ரசித்தவாறு... ஏதோ பாடலை ஹம் செய்யத் தொடங்கினான்.

"கூகூஉ குக்கூஉ..."

வாய் விட்டுப் பாடினான்.

இப்போது விசிலடித்தான்... அதன் முதல் வரியை...

"சங்கமத்த நினைக்குது..." என்று வாய் விட்டுப் பாடினான். அதன் பிறகு சில வரிகள்... ஹம்... விசில்.. வார்த்தை.. என்று மாறி மாறி வந்தன.

கீர்த்திக்கோ ஏகக் கடுப்பு.

"இவனுக்கு வேற வேலை இல்லை... ஆரம்ப வரியையும் பாட மாட்டான்... தனக்குத் தேவையான... என்னை இம்சைப்படுத்தற வரியை மட்டும் பாடிட்டு... அவன் பாட்டுக்குப் போயிடுவான். நான்தான் அன்னைக்கு முழுதும்... அது என்ன பாடல்... பாடல்னு நெட்ல தேடி மண்டை காயணும்.

பாடுறதுன்னா ஒழுங்கா ஃபர்ஸ்ட் லைன்ல இருந்து பாட வேண்டியதுதானே!" என்று நினைக்கும்போதே அவள் தேடிய கோட் கிடைக்க... அவனிடம் நீட்டினாள்.

"தேங்க்ஸ் பேபி..." என்றபடி தன் வேலையைத் தொடர்ந்தான். வேறு எதுவும் செய்யாமல்.

ஆனாலும் பாடுவதை நிறுவத்தாமல்...

கோட்டைக் கையில் கொடுத்த அவளைப் பார்த்த படியே...

"உன்னைக் கரை சேர்க்காமல் எந்தன் அலை ஓயாது...
காமன் கணை ஏவல் எனைக்
காவல் மீறத் தூண்டுதே..."

என்று கண் சிமிட்டிப் பாட...

சட்டென்று வெளியேறினாள். ஆனால், அவன் பாடல் வரிகள் மட்டும் அவளைத் தொடர்ந்து இம்சையின் தள்ளின.

ஆனால், ஃபுல் மூடோட இருந்தான். நம்மகிட்ட ஒண்ணும் வம்பு பண்ணவில்லை. அதுவும் அந்தக் கோலத்தில்... ஏன் என்ற மாபெரும் சந்தேகமும் கீர்த்திக்குத் தோன்றியது. அதை அவனிடமா... கேட்க முடியும்! இவனைப் புரிஞ்சுக்கவே முடியலைடா சாமி... என்றவளிடம், இப்போ அவன் உன்னை வம்பு பண்ணலைனு உனக்கு வருத்தமா? உன்னைக் கூடத்தான் எனக்குப் புரிஞ்சுக்க முடியலை கீர்த்தி... என்று மனச்சாட்சி அவளுக்குப் பதில் கவுண்ட்டர் கொடுக்க... அவளாகவே அவளுக்குள் அசடு வழிந்தாள் கீர்த்தி.

காரில் அலுவலகம் போகும்போது கூட... இதே வரிகளை அவன் பாட... முறைத்தபடியே வந்தாள்.

இறங்கப் போகும் முன், அவளிடம், "என்ன கீது மேடம், ரொமான்ஸ் சீன் எதிர்பார்த்து ஏமாந்திட்டீங்களா...

இன்னைக்குக் காலையில..." என்று வேண்டுமென்றே வெறுப்பேற்ற...

"உங்களுக்குப் பாவம்னு கோட் எடுத்துக் கொடுக்க வந்தேன்ல... எனக்கு வேணும்..." என்றபடி இறங்க...

"என்ன பேபி வேணும்... நீ கேட்டா நான் தர மாட்டேன்னா சொல்வேன்..." என்று சீண்ட,

"உங்களை எல்லாம் திருத்த என்னால முடியாது. நான் போறேன்..." என்றவளிடம், கோபத்தை விட நாணம்தான் இருந்தது.

அதைப் புரிந்த பாலா... "என்னடா என் பொண்டாட்டி ஃபுல் ஃபார்ம்லா இருந்திருப்பா போல... மிஸ் பண்ணிட்டோமோ..." என்று உண்மையாக வருந்தியவன்... அன்று வியாழக் கிழமை என்பதால்... கீர்த்தி வீட்டில் அவளைப் பார்த்துக் கொள்வோம் என்று சந்தோஷமாக க்ளையண்ட் மீட்டிங்கிற்காகச் சந்திக்க இருந்த ஹோட்டலுக்குக் காரைத் திருப்பினான்.

கீர்த்தி நெட்டில் கூகுளில் எப்படித் தேடிப் பார்த்தாலும் அந்தப் பாடல் கிடைக்காமல் போக... எரிச்சலுடன் உட்கார்ந் திருந்தாள்.

அந்த நேரம் கவியும் அவள் இடத்திற்கு வர...

"என்னடி... ஓவர் டென்சனா இருக்க... என்னாச்சு... பாலா வரலேன்னா...?"

"கவி..." என்று அவளை முறைக்க நினைத்தவள்... சட்டென்று முகத்தை மாற்றிக் கொண்டு... கொஞ்சம் உற்சாகமாகத் தோழியைத் தாஜா செய்தபடி,

"கவி, எனக்கு ஒரு பாட்டு மிடில் லைன்தான் தெரியுது. முதல் வரி என்னன்னே தெரியலை. நான் சொல்றேன்... உனக்குத் தெரியுதான்னு பார்க்கறியா..." என்ற தோழியை ஒரு மாதிரியாகப் பார்த்தாள் கவி.

"ஏன்டி... இதுதான் உன் டென்ஷனுக்குக் காரணமா...?" என்று கேட்க...

விழிகளில் வேண்டுமென்றே அப்பாவித்தனத்தைத் தேக்கியபடி... தலையை ஆட்டினாள் கீர்த்தி.

"நல்லா வருவேடி... நீ சொல்லித் தொலை..." என்று கேட்டவளிடம்...

பாலா காலையில் பாடிய வரிகளைப் பாடிக் காட்டினாள்.

அவள் சொன்ன வரிகளைக் கேட்டவள்... இது பாலாவின் திருவிளையாடல் என்று அப்பட்டமாகப் புரிய...

"ஏன்டி... அது எப்படி இந்த வரிகள் மட்டும் தெரியும் கீர்த்தி..." - தெரிந்தும் தோழியின் வாயைக் கிளற... விழித் தாள் கீர்த்தி. எங்கே வாய் விட்டு விடுவோமோ என்று.

"சரி சரி. நீ போ. நானே தேடிக்கிறேன்..." என்று நழுவப் பார்க்க...

"ரொம்ப பண்ணாதடி... பாலாதான பாடினது. உன்னை நல்லா சுத்த வைக்கிறார்டி.. அது மட்டும் நல்லாத் தெரியுது..." என்று கிண்டல் செய்ய... முறைத்தாள் கீர்த்தி.

"பாட்டை மட்டும் கண்டுபிடிச்சுச் சொல்லு. தேவை யில்லாததைப் பேசாதே..." என்க...

"சரி. அப்போ நான் போறேன்..." என்று கவியும் முறுக்க...

"செல்லம்ஸ்ல... உன் கீர்த்திக்கு ஹெல்ப் பண்ண மாட்டியா?" என்று கெஞ்சல் + கொஞ்சலில் இறங்க...

"இந்தக் கெஞ்சலை எல்லாம் பாலாகிட்ட காட்டி இருந்தா... அவர் ஏன் உன்னை இப்படித் தேடப் போறார். இவ்வளவு என்கிட்ட கேக்குறவ... அவர்கிட்டயே கேட்க வேண்டியதுதானே?" என்று சொல்ல...

"அது தெரியாமத்தான் உன்கிட்ட வந்து நிக்கிறேன், ஏன்டி... நீ வேற உன் பங்குக்கு என்னைப் போட்டுப் பாக்காதே. ஒழுங்கா சொன்ன வேலையை மட்டும் பாரு."

ஒருவாறாக... இருவரும் சமாதானமாகி... மீண்டும் கூகுளில் அலசிய அலசலில் பாடல் கிடைக்க...

ஆளுக்கொரு ஏர்-போனில் அதன் வரிகளைக் கேட்க ஆரம்பித்தனர்.

செங்கமலம் சிரிக்குது... சங்கமத்தை நினைக்குது...
செங்கமலம் சிரிக்குது... சங்கமத்தை நினைக்குது...
கூகூகுக்குகூகூகூ....
கூகூ எனக் கூவும் குயில் சின்னச் சின்னச் சத்தத்தில்
அந்திப் போர் நடத்தும்
செங்கமலம் சிரிக்குது... சங்கமத்தை நினைக்குது...
கூகூகுக்குகூகூகூ....
கூகூ எனக் கூவும் குயில் சின்னச் சின்னச் சத்தத்தில்
அந்திப் போர் நடத்தும்
செங்கமலம் சிரிக்குது... சங்கமத்தை நினைக்குது...

முத்தம் இடும் மாலை வேளை
மூடு விழா நாடகமோ
நித்தம் இதழ் தேடும் நேரம்
நாணம் எனும் நோய் வருமோ?
பூமாலை கூடாது பாய் தேடக் கூடாது
எல்லை தனைத் தாண்டாது
பிள்ளை எனத் தாலாட்டு
மஞ்சள் தரும் நாள் கூறு
வஞ்சம் இல்லை தாழ் போடு
காமன் கணை ஏவல் எனைக் காவல் மீறத் தூண்டுதே
செங்கமலம் சிரிக்குது... சங்கமத்தை நினைக்குது...
செங்கமலம் சிரிக்குது... சங்கமத்தை நினைக்குது...

மங்கை இவள் தேகம் நோகும்
மோகனமாய்த் தாளமிடு
கங்கை நதி பாயும் நேரம்
காதில் ஒரு சேதி கொடு
நாள்தோறும் ராக்காலம்
ஏதிங்கே பூபாளம்
இன்பக் கதை காணாது கண்கள் இமை மூடாது
உன்னைக் கரை சேர்க்காது எந்தன் அலை ஓயாது
சேவல் அது கூவும் வரை நாணம் ஓய்வு காணுமே

செங்கமலம் சிரிக்குது... சங்கமத்தை நினைக்குது...
செங்கமலம் சிரிக்குது... சங்கமத்தை நினைக்குது...
கூகூ எனக் கூவும் குயில் சின்னச் சின்னச் சத்தத்தில்
அந்திப் போர் நடத்தும்
செங்கமலம் சிரிக்குது... சங்கமத்தை நினைக்குது...
செங்கமலம் சிரிக்குது... சங்கமத்தை நினைக்குது...

சத்தியமாய் கவிக்குச் சிரிப்பினை அடக்க முடிய வில்லை.

"பாவம்டி பாலா... ரொம்பத்தான் ஏங்கிப் போயிருக் கார்."

"உன்னைக் கரை சேர்க்காமல் அந்த அலை ஓயாதா...?"

"ஆமா, உன்னை எந்தக் கரையில சேர்க்கப் போகிறார். ஷிப் வச்சா... இல்ல போட்லயா? சத்தியமா முடியலைடி!" - வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தாள்.

சுற்றுப்புறம் மறந்து சிரித்த கவியை...

"ஏய், அடங்குடி..." என்று பல்லைக் கடித்து அதட்டி னாலும் அடங்குவாளா அவள் என்று தொடர்ந்தாள்.

"சங்கமத்தை நினைக்குதாம்ல...

காமன் கணை ஏவல் எனைக் காவல் ஏறுதாம்ல...

பாவம்டி பாலா... ஏங்க வச்சுட்டடி மனுசனை..."

என்று அன்று முழுவதும் அவள் கிண்டல் தொடர... அவளை அடக்க வழியில்லாமல்... அவளிடம் சொன்னதுதான் தான் செய்த தவறு என்று புரியாமல்... இதற்கெல்லாம் காரண கர்த்தா பாலா என்று பாலாவின் மேல் கோபம் திரும்பியது.

அலுவலகம் வராவிட்டாலும் அன்று மாலை பாலாவே வந்து அவளை பிக்கப் செய்ய வந்தான். அவளது வீட்டிற்குப் போவதால்... காரினுள் அவன் காலையில் பாடிய பாடலைப் போட்டவன்... அதில் தனக்குத் தேவையான வரிகள் வந்த போது தானும் சேர்ந்து பாட... கவி செய்த கிண்டலில் ஏற்கெனவே கோபத்தில் இருந்தவள்... வேகமாக ஆஃப் செய்தாள். அவனோ சிரித்தபடி ஆன் செய்ய... நடக்கப் போகும் விபரீதம் புரியாமல்... மாறி மாறி... தங்கள் விளையாட்டைத் தொடர்ந்தனர்.

விளையாட்டு வினையும் ஆகியது.

ஒரு கட்டத்தில்... பாலாவே, "என்னடி பிரச்சனை இப்ப உனக்கு?" என்றான்.

"இதைக் காலையிலயே ஒழுங்காப் பாடித் தொலைக்க வேண்டியதுதானே.... அதுவும் அங்க இங்கனு பாடி... தேவையில்லாம டென்ஷன் எனக்கு.."

"இதுல என்ன டென்ஷன் உனக்கு?" என்றவனை முறைத்தபடி... கவி கேலி செய்ததைக் கூற...

பாலா முறைத்தான். "ஏன்டி... நியாயமா பார்த்தா எனக்குத்தான் கோபம் வரணும். உனக்கு என்ன கோபம்? நம்ம மானத்தை இல்ல... என் மானத்தைக் கவிகிட்ட ஏலம் விட்டுட்டு வந்து... என்கிட்டயே கோபம் வேறயா உனக்கு... கவியிடம் நீ இதெல்லாம் சொல்வியா என்ன?" - கொஞ்சம் கோபமும் இருந்தது, அவன் வார்த்தைகளில்.

"இல்லை..." - தயங்கியபடி சொன்னாள்.

"நான் சும்மாதான் எனக்கு முதல் வரி தெரியலேன்னு கேட்டேன். ஆனா அவ வரியைக் கேட்டதும் நீங்கன்னு புரிஞ்சுகிட்டா. நான் என்ன பண்ண?" என்று கொஞ்சம் கூடப் புரியாமல் பேசியவளை...

"ஆமா... நான் என்ன உன்னைப் பார்த்துக் கோவில்ல போடுற பஜனைப் பாடலா பாடியிருப்பேன். கடவுளே... அதுவும் நான் பாடின மத்த லைன்ஸ் போதாதாடி... அதுவே அவளுக்கு நான்தான் உன்கிட்ட பாடியிருப்பேன்னு சொல்லி யிருக்கும். அவளுக்கெல்லாம் என்னைப் பற்றித் தெரியுது. இதை அவகிட்ட போய்க் கண்டுபிடிச்சுத் தான்னு கேட் டிருக்கியே... உன்னையெல்லாம் வச்சுக்கிட்டு நான் என்ன தான் பண்ணப் போறேனோ...?" என்று தலையில் அடித்தான் பாலா.

அவன் கவலை கவிக்குத் தெரிந்து விட்டது என்று.

ஏற்கெனவே டென்ஷனில் இருந்த கீர்த்தி... காலையில் அவனிடம் அவள் உணர்ந்த ஏமாற்றமா... இல்லை, கவியின் கிண்டலிலா... இல்லை, இப்போது அவன் சொன்ன, 'உன்னை வச்சுட்டு என்ன பண்ணப் போறேனோ?' என்ற வார்த்தை யிலா... எதுவோ.... ஒன்று அவளைச் சுட்டது.

என்ன பேசுகிறோம் என்று தெரியாமல்...

"ஆமா. எனக்கு உங்களைப் பத்தி ஒண்ணும் தெரியாது. என்னைத் தவிர... அத்தனை பேருக்கும் உங்களைப் புரியுதா... வேணும்னா ஒவ்வொருத்தர் கிட்டயும் போய் நான் டியூசன் எடுத்துட்டு வரவா?" என்று படபடவென்று பேசியபடி வாய் விட ஆரம்பித்தாள்.

"ஒண்ணு பண்ணுங்க. அப்படியே உங்க மதுவையும் கூட்டிட்டு வாங்க. அவதானே உங்களை நல்லாப் புரிஞ்சு வச்சுருக்கிறவ. அது மட்டுமில்லாம... இந்த ரொமான்ஸ்ல எல்லாம் உங்களை எப்படிப் புரிஞ்சுக்கறதுன்னு அவளைத்

தவிர வேற யாரும் எனக்கு டியூசன் எடுக்க முடியாதுல்ல..." என என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் ஆர்ப்பரிக்க...

"கீர்த்தி... வாயை மூடு." - கோபத்தின் எல்லையில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்.

அதற்கெல்லாம் அசராமல் கீர்த்தி வாய் மூடாமல்... அதனால்.. தான் அடையப் போகும் விபரீதம் புரியாமல் பேசினாள்.

"ஏன்னா... அவதான் லைவ் ட்ரையல் எனக்கு... கூட்டிட்டு வாங்க அவளை... உங்க மூடுக்கு ஏத்த மாதிரில்லாம் எப்படி இருக்க வேண்டுமென்று டெமோ காட்டச் சொல்வோம். நானும் கத்துக்கறேன்..." என்று ஏக வசனத்தில் கணவனின் கோபம் புரியாமல் கண்டபடி பேச...

அவன் கார் எகிறிய வேகத்தில் அப்போதுதான் அவன் முகம் பார்க்க... அதில் இருந்த கோபத்தின் அளவில்... தானாகவே வாயை மூடினாள். இப்போது அவள் பேசிய பேச்சின் அர்த்தம் விளங்க... உள்ளுக்குள் உதறல் எடுத்தது.

இருந்தாலும்... 'என்ன... நான் உண்மையைத்தானே சொன்னேன். என்கிட்டயே இந்தக் காட்டு காட்டறவர்... லவ் பண்ண பொண்ணுகிட்ட ஒண்ணும் பண்ணாம... அதுவும் ஒரு கிஸ் கூட இல்லாம... இருந்திருப்பானா... நான் சொன்னவுடனே உண்மை சுட்டிருக்கும். அதுதான் துரைக்குக் கோபம் எகிறது...' என்று அவளுக்கு அவளாகவே சமாதானமும் ஆனாள்.

ஆனாலும்... தேவையில்லாமல் பேசி விட்டோமோ... என்று மனச்சாட்சி அவளைச் சாட...

சற்றுக் குறுகுறுத்த மனதுடன் மீண்டும் பாலா முகத்தைப் பார்க்க..

அது கரை காணாத கோபத்தில் இருந்தது.

மனதில் கிலி பரவியது கீர்த்திக்கு.

அபார்ட்மெண்ட் வாசலில் அவளை இறக்கி விட... கீர்த்தி வீட்டினுள் பயத்துடன்தான் உள்ளே நுழைந்தாள்.

இங்க வேற வந்துருக்கோம் இன்னைக்கு... அவன் என்ன சொல்லப் போறானோ... இல்லை, என்ன செய்யப் போறானோ... என்று நினைக்கும் போதே மனமும் உடலும் அச்சத்தில் நடுங்கியது.

வாயை விடாமல் இருந்திருக்கலாமோ என்று அப்போது தான் நிதர்சனமாய்த் தோன்றியது. ஆனால், அது காலம் கடந்த ஞானோதயம் என்பது சற்று நேரத்தில் புரிய வைத்தான் பாலா.

கோபத்தின் மொத்த உருவமாக... புயலென உள்ளே நுழைந்தவன்... அவளது அறையில் யோசனையுடன் நிற்பதைப் பார்த்தவன்... யோசிக்காமல் அவளைத் தன்னோடு இழுத்து... ஆவேசமாகத் தன் இதழை.... அவள் இதழுடன் சேர்த்தான்.

கீர்த்திக்கு என்ன நடக்கிறது என்று புரிவதற்கு முன்னரே... அவள் இதழ்களில் தன் வன்மையை... கோபத்தைக் காட்ட ஆரம்பித்தான் பாலா... காதலைக் காட்டுவதற்குப் பதில்.

'உன் மது...' என்ற வார்த்தையில்... தான் வலுக் கட்டாயமாக மறக்க நினைக்கும் மதுவின் நினைவுகளைக் கீர்த்தி கிளறி விட... அது தந்த தன் மனதின் வலிக்கு மருந்தைக் கீர்த்தியின் இதழில் தேட ஆரம்பித்தான். வலியின் அளவு அதிகம் போல்... மருந்தின் தேவையும் அதிகமாகவே இருந்தது.

அவள் தன்னைச் சுதாரிக்கும் முன்னரே இத்தனை யும் நடக்க... இப்போது வலுக்கட்டாயமாக விலக நினைக்க...

முதல் முத்தம்... அதுவும் இதழ் முத்தம்... அவளால் அவனோடு... அவன் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் திண்டாடினாள். தனது கணவனின் இதழ்த் தீண்டலில் காதல் இருந்திருந்தாலே... தடுக்க நினைப்பவள் அவள். முரட்டுத்தனமாகத் தன்னில் பதிந்த அவனது இதழ்களோடு

ஒன்ற முடியாமல்... விலக நினைக்க... அது இன்னும் அவளுக்கு வினையாக மாறி இன்னும் அழுத்தமாக மாறத் தொடங்கியது.

அவள் விலகலை உணர்ந்தவனுக்குக் கோபம் தலைக் கேற... அவளை மென்மையாக ஆள நினைத்திருந்த அவனே.. அவளைக் காயப்படுத்த ஆரம்பித்தான். கீர்த்தி அவனைத் தடுக்க முடியாமல் துவண்டாள். அவனை விலக்கவும் முடியாமல்... இதழிலும்... மனதிலும் வலி தாங்க முடியாமல் கண்கள் கண்ணீரை உகுத்தன.

அவளின் கண்ணீர் தன் முகத்தில் பட... பாலா அப்போதுதான் நிதானத்திற்கு... தன் நிலைக்கு வந்தான். அவளின் வலியை உணர்ந்தவன்... தள்ளி நிறுத்தினான். ஆனாலும் அவன் கோபம் குறையாமல்,

"ஏன்டி, நல்லவனாவே இருக்க விட மாட்டீங்களாடி... உன்கிட்ட என்னை மொத்தமாக் குடுக்கறதுக்குத்தான் அவ என்னை நெருங்க விடலையோ என்னவோ... அவளைப் போய்... ச்சே! இப்போ நீ அனுபவிச்சது உனக்கு மட்டும் இல்ல. எனக்கும்தான் முதல் அனுபவம். இன்னொரு தடவை நீ மதுவைப் பத்தி என்கிட்ட பேச நினைச்ச... உனக்குத்தான் ஆபத்து. இந்த மாதிரிதான் அனுபவிப்ப என்கிட்ட..." என்று கண்களில் ரௌத்திரமுடன் பேசியவன்.... மறுபடியும் அவளை இழுத்துத் தன் இதழ்களை அவளிடம் படர விட்டவன்... தானாகவே விட்டும் போனான்.

அவள் அவனிடம் சேர யார் காரணமாக இருந் தாளோ.. அந்த மதுதான்... அவளேதான் இன்றைய அவலோடான அவனின் முதல் இதழ் தீண்டலுக்கும் காரணமாக இருந்தாள்.

கீர்த்திக்கு அழுகை அழுகையாக வந்தது. இதழைத் தடவியவளுக்கு அதிலிருந்த ரத்தம் அவன் கோபம் சொல்ல... இன்னும் அழுகை கொப்புளித்தது. அவள் யாருக்கு என்ன

துரோகம் செய்தாள்? தன் வாழ்வில் மட்டும் ஏன் இப்படி யெல்லாம் நடக்கிறது? தன் பாலாவா இப்படி எல்லாம் செய்தான்? கோபம் வந்தால் தன் உணர்வுகளை... இல்லை... என் உணர்வுகளைக் கூட மறந்து விடுவானா...? தனக்கு எதுவுமே தன் வாழ்வில் ஒழுங்காக நடக்காதா என்று மனம் கனத்தது.

அப்படியே சுவரில் சரிந்தவளாய் அமர்ந்தவளின் முகம் எதிரே இருந்த ஆளுயரக் கண்ணாடியில் தெரிய... கலவரமானாள் கீர்த்தி.

கன்னங்களில் வழிந்திருந்த கண்ணீர்... இதழ்களில் காயம்... கலைந்த கேசம்.. கண்களில் இருந்த நிராசை... இது... இது... இதே மாதிரிதானே! இல்லையில்லை, இதை விட மோசமாய்... அவளும் நம்மிடம் வந்தாள். நினைவுகள் மனதைப் பிசையத் தடுமாறினாள் கீர்த்தி.

நீண்ட நாட்களாய் அவள் மனதின் அடியில் புதைந் திருந்த அந்தச் சம்பவம் அவள் முன் நின்றது. அதிர்ந்தாள் கீர்த்தி. தன் தாய் தந்தையால் சாதாரண விஷயம் என்று மறக்கடிக்கப்பட்ட சம்பவம் இன்று அவள் முன் பூதாகரமாக உருவெடுத்து நின்றது.

அவள் கண் முன்... அன்று தன்னிடம் நிராதரவாய் நின்ற அந்தப் பெண்ணின் முகம் தோன்ற...

அதே நிலை இன்று தன் முகத்தில் தெரிகிறதோ என்று கண்ணாடியில் மீண்டும் தன்னையே பார்த்தாள் கீர்த்தி.

அந்தப் பெண்... முகத்தில் பல அறைகள் வாங்கி யிருந்தாள் போல. முகம் வீங்கியிருந்தது. ஆனால், அந்தக் கண்களில் தான் காப்பாற்றப்பட்டு விடுவோம் என்ற பெரும் நம்பிக்கை இருந்ததோ? அவளை நான் ஏமாற்றி விட்டேனா! தான் முயன்றிருந்தால் அவளைக் காப்பாற்றி இருந்திருக்க லாமோ... அவள் வேதனைதான் என்னை இந்த நிலைக்குத் தள்ளி விட்டதா? நம்பி வந்தாள் என்னிடம். நம்பிக்கைத்

துரோகம் செய்து விட்டேனா... அம்மா பேச்சினைக் கேட்காமல் இருந்திருக்கலாமோ... சுயநலமாய் இருந்து விட்டேனோ... தன் தாய் தந்தையின் அகால மரணம் கூட... தன் மகளை மட்டுமே நினைத்துப் பார்த்தவர்கள்... தன் மகள் போல் தான் அந்தப் பெண்ணும் என்று எண்ணி... காப்பாற்ற நினைக்காமல்... சுயநலமாய் முடிவு எடுத்தனரே... அதுதான் காரணமோ... என்னவெல்லாமோ தோன்ற...

இன்று... அன்று பார்த்த... அந்தச் சம்பவம் அவள் முன் தோன்ற... மனதில் புதைந்திருந்த நினைவுகளுக்கு உயிர் தந்தாள் கீர்த்தி.

34

கிட்டத்தட்ட ஐந்து வருடத்திற்கு முன்... ஊட்டியின் அழகான காலை வேளை. கீர்த்தி கையில் கேமராவுடனும் கழுத்தில் மாட்டிய மொபைலுடனும் அந்த ஹோட்டலை விட்டு வெளியே வந்தாள்.

ஊட்டியின் அழகான அந்தக் காலைப் பொழுதைத் தன் கேமராவில் பத்திரப்படுத்த...

வினோத் அதற்கு முந்தைய வாரம்தான் தன் தாய், தந்தையுடன் அமெரிக்காவில் செட்டிலானான். ராகவ் - மைதிலிக்கு இஷ்டம் இல்லைதான் இதில்... வினோத் பிடிவாதம் பிடித்த ஒரே காரணத்தினால் அனுமதிக்க... கீர்த்தி மட்டும் அவர்கள் போகக் கூடாது என்று ஒரே பிடிவாதம் பிடித்தாள். அவளின் பிடிவாதத்தில் விஸ்வம், மோகனா கூடத் தயங்க...

மைதிலிதான், "அவ கிடக்குறா... அவ ஒரு ஆளுன்னு..." என்று சொல்லி அனுப்பி வைத்தாள்.

அவர்கள் சென்ற பிறகு இருவரிடமும் கோபத்தில் இருந்த மகளை ஓரளவு தேற்றி... அவளுக்கு மாறுதல் ஏற்பட... ஊட்டிக்கு வந்திருந்தனர் ராகவனும் மைதிலியும்.

கீர்த்தி அப்போது தனது பொறியியல் முதலாமாண்டு இறுதியில் இருந்தாள்.

இங்கு வந்தவள் ஊட்டியின் இயற்கை எழிலில் தன் மனதைப் பறிகொடுத்தவள்... அதன் அழகில் குதூகல மானாள். வந்து அன்றோடு மூன்று நாட்கள் ஆகியிருக்க... அன்று காலையில்தான் கீர்த்தனா அவள் பெற்றோருக்குத் தெரியாமல் வெளியேறியிருந்தாள்.

அவர்களிடம் சொல்லி விட்டுப் போகத்தான் அவளது விருப்பம். ஆனால், வேண்டாம் என்று தடுத்து விட்டால்... அதன் பிறகு எந்த ஒரு காரியத்தையும் செய்ய மனது வராது அவளுக்கு. அதனாலேயே சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி விட்டாள் கீர்த்தி.

கழுத்தில் கிடந்த மொபைலைப் பார்த்தவள்... அது வினோத் பயன்படுத்திக் கொண்டிருந்த போன். போகும்போது அவளிடம் கொடுத்துப் போயிருந்தான்.

'பெருசா போனை மட்டும் கொடுத்துட்டுப் போயிட்டான். இந்தப் போன் மட்டும் எதுக்கு...?' என்று வினோத்தை அர்ச்சித்தபடி வந்தவள்...

அந்தக் காலை வேளையில் ஊட்டியின் அழகை ரசித்து, தன் கேமிராவில் நிரப்பிக் கொண்டே... ஹோட்டலை விட்டுச் சற்றுத் தள்ளியே வந்து விட்டாள். அதை உணர்ந்தாலும் இயற்கை அழகு அவளைப் போக விடாமல் செய்ய.. அவள் தன் வேலையை அதாவது புகைப்படம் எடுத்தவாறு சுற்றிக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது.

முகம் முழுவதும் காயத்துடன்... அறை வாங்கிய தடங்களுடன்... தலைவிரி கோலமாய் ஒரு பெண்ணை அந்தச் சாலையின் சந்திப்பில் பார்த்தாள்.

பார்த்த முதல் பார்வையிலேயே முகம் சுழித்தாள் கீர்த்தனா.

ஏனென்றால் அருகில் வந்த அந்தப் பெண்... போதை மருந்துகளின் தாக்கத்தில் இருந்தாள். அவளால் நிற்கக் கூட முடியாமல் அவள் அருகில் வந்தாள். அவள் கோலம் பரிதாபம் தர வைத்தாலும்... அவளின் போதைப் பழக்கம் தந்த நடுக்கத்தை உணர்ந்தவள்...

அந்தப் பெண்ணைத் தாண்டிக் கடந்து செல்ல முற்பட.. அவள் கைகளால் தடுத்தாள். அவளால் பேச முடியவில்லை போல்... அவள் விரல்கள் கூடப் போதையின் விளைவாக நடுங்கின போலத் தோன்றியது.

"ப்...ளீ...ஸ்..." என்றாள்.

"ப்ளீஸ்..." என்ற வார்த்தைக்கே அவள் வாய் குழற... கீர்த்தனா அவளை அற்பமான புழுவைப் பார்ப்பது போலப் பார்க்க... அந்தப் பெண்ணின் பார்வையோ கீர்த்தியின் பார்வையின் மேல் எல்லாம் இல்லை. அது அவள் மாட்டி யிருந்த மொபைலின் மேல் இருக்க...

அவள் கண்களில் எதிலிருந்தோ அந்த மொபைல் தான் அவளைக் காப்பாற்றப் போகும் ஆயுதம் போல் ஆர்வத்துடன் பார்த்தாள்.

வேகமாக, அந்த மொபைலைக் காட்டி... அவளிடம் கை நீட்டினாள்.

சட்டென்று கீர்த்தி பின்வாங்க...

அவள்... நடுக்கத்துடன் கைகள் அவளை நோக்கிக் குவிக்க... கீர்த்தனாவிற்கு என்ன செய்வதென்றே தெரியாமல் மொபைலை அவளிடம் கொடுக்க....

அவளின் கை நடுக்கத்திலும்... அவசர அவசரமாக வாங்கினாள். வேகமாக அதில் ஏதோ எண்களைப் போட்டாள். பத்து நம்பர்களைப் போடுவதற்கே அவள் பெருமுயற்சி செய்தாள் என்று சொல்ல வேண்டும். கீர்த்தியோ அலட்சிய மாகப் பார்த்தபடி மட்டும் நின்றாள்.

யாருக்குப் போன் செய்தாளோ... அந்த நபர் எடுக்கவில்லை போல.

அவள் கண்களில் கண்ணீர் பெருக... மீண்டும் முயற்சி செய்ய... அப்போதும் எடுக்கப்படவில்லை.

'மது...' - ஆம். அவள் மதுபாலா என்பது கீர்த்திக்குத் தெரியவில்லை. அவள் முயற்சி செய்தது பாலாவுக்கு என்பதும் அறியவில்லை அப்போது.

மது துடித்தாள்... மனதினுள்.

"பாலா, எடுடா... என்னைக் காப்பாத்துடா..." என்று மனதினுள் அத்தனை கடவுளையும் வேண்டியபடி... மீண்டும் முயற்சி செய்யப் போக...

கீர்த்தி இம்முறை... "நான் போகணும்... தேடுவாங்க. மொபைலைக் கொடுங்க..." என்று கேட்டாள்.

கீர்த்தனாவுக்கு ஏனோ பரிதாபம் எல்லாம் வரவில்லை. நிறையப் படங்களில் பார்த்திருக்கிறாள் அவள். போதை தேவைப்பட்டால்... எப்படியாவது அடைய வேண்டும் என்று நினைப்பார்களாம். அவர்கள் அதற்காக என்ன வேண்டும் என்றாலும் செய்வார்கள். அதுபோல்தான் இந்தக் கேஸும் போல... என்று நினைத்தாள்.

கேவலம் ஒரு போனுக்காகக் கை குவித்ததையும், அவளின் பதற்றமும் கீர்த்தியை இவ்வாறுதான் நினைக்க வைத்தன. போதை மருந்திற்காகக் கூட யாரையாவது தன் மொபைலில் இருந்து அழைத்திருப்பாளோ என்று எண்ணி யவள்... இங்கு இருப்பது நல்லதல்ல என்று நினைத்தபடி அந்த இடத்தை விட்டுப் போகலாம் என்று எண்ணியே போனைக் கேட்டாள்.

ஆனால் மதுவோ போனைத் தராமல் தன் கைகளுக்குள் இறுக்கமாக வைத்துப் பத்திரப்படுத்த...

கீர்த்திக்குக் கோபமே வந்து விட்டது. போனை மதுவிடம் இருந்து வலுக்கட்டாயமாகப் பறிக்க முயன்றாள். ஆனால், மதுவோ அந்த மொபைலை இறுகப் பற்றியிருந்தாள். அது மட்டுமே இப்போது தன் பாலாவிடம் தன்னைச் சேர்க்க இருக்கும் ஆதாரம்... என்று நினைத்தவள், அதைக் கெட்டி யாகப் பிடித்துக் கொள்ள... அவளிடமிருந்து அதைக் கீர்த்தி யால் பறிக்க முடியவில்லை.

வினோத் கொடுத்த போன் என்று ஞாபகம் வர... தன் முழுப் பலத்தையும் காட்டி அதைப் பறிக்க முயன்றாள் கீர்த்தி. ஆனால், அந்தப் போன்தான் தன் காதலன் தன்னை அடையக் காரணமாக இருக்கும் மூலம் என்று எண்ணிய மது... கீர்த்தியின் கைகளில் அதைத் தராமல்... அந்தப் போனே 'பாலா...' என்பது போல் இறுக்கமாகப் பற்றியிருக்க... கீர்த்தியால் அதை வாங்க முடியவில்லை.

இருவரின் போராட்டமும் இப்படியே தொடர... இப்போது மொபைல் ரிங் அடிக்க... மது எடுத்துப் பார்த்தாள். அது அவளின் பாலாவின் அழைப்புதான் என்பதைப் பார்த்தவள்... சந்தோஷமும்... அழுகையும் மாறி மாறி வர... அவனிடம் பேசப் போக... கீர்த்தி இப்போது பறிக்க ஏதுவாக அமைந்தது.

மதுவுக்கு வேறு வழி தெரியாமல்... கீர்த்தியிடம் மண்டியிட்டபடி அமர்ந்து விட்டாள்.

அவள் வாழ்க்கையே இந்த அழைப்பில்தான் உள்ளது போல....

"ச்சே..." என்றபடி... "பேசித் தொலை...." என்பது போல் வேறு பக்கம் பார்க்க ஆரம்பித்தாள் கீர்த்தி.

"ஹலோ, இந்த நம்பரிலிருந்து மிஸ்டு கால் வந்திருக்கு... மூன்று முறை!" என்று வந்த அவளின் நினைவால் தூக்கம் கெட்டு அதிகாலைதான் உறங்கியிருந்த பாலாவின் உறக்கம் கலையாத குரலில்..

தன்னை அடக்க முடியாமல்... நீண்ட நாட்களுக்குப் பிறகு கேட்ட அவன் குரலில் வார்த்தைகள் வராமல்... அழுகை வெடித்தது மதுவிற்கு.

பாலா அதிர்ந்து எழுந்தான். சுத்தமாகத் தூக்கம் கண்களை விட்டு அகல... அவளின் அழுகையே அது அப்பட்டமாக மது என்பதை உணர்த்த...

"மது... மதும்மா, எங்கடா இருக்க? என்னாச்சும்மா?" என்றவனுக்கு அதற்கு மேல் அவனுக்கும் சந்தோஷத்தில வார்த்தைகள் வரவில்லை. ஏழு மாதமாகத் தொலைந்து போயிருந்த அவன் மதுவின் குரலில்...

மதுவுக்குப் பேசவே முடியவில்லை. ஆனாலும் அவள் இப்போது பேசியாக வேண்டும். இல்லாவிட்டால் அந்த சைக்கோவிடம் மறுபடியும் மாட்டி விட்டால்... அவன் பெயரை யாவது அவனிடம் சொல்ல வேண்டும்... என்று பேச ஆரம் பித்தாள்.

"ப்ப்ப்பாப்பல்லாஆஅ..." என்றாள்.

பாலாவிற்குத் தாங்க முடியவில்லை. துடிப்பும் உற்சாகமும் மட்டுமே இருக்கும் மதுவின் குரலைக் கேட் டிருந்த பாலாவுக்கு... அவளின் தடுமாற்றமான குரல் அவன் உயிர்வரை அவனை அறுக்க... பதற்றமுடன், "என்.... என்னடி ஆச்சு? ஏன் இப்படிப் பேசுற? யார் நம்பர் இது? என்னால் முடியலடி... நீ இல்லாம நரக வேதனைடி... என்ன ஆபத்துல மாட்டிருக்க... எனக்கு ஒண்ணுமே தெரிய லையே...! உன்னைக் கடத்தி வெச்சுருக்காங்களா... மது?" என மறுமுனையில் பதறினான் பாலா, கண்ணீருடன்.

"ம்ம்ம்...." என்று தலையாட்டினாள் மது.

கீர்த்தி இவளை எல்லாம் கவனிக்கவே இல்லை.

"உன்னால பேச முடியவில்லையா மது... பக்கத்துல யாராவது இருக்காங்களா... இருந்தா குடு. எந்தப் பாவி

இப்படிப் பண்ணினான்ம்மா... அய்யோ!" ஆத்திரத்திலும் காதலிலும் துடித்தான், காதலனாக.

மது... கீர்த்தியை அழைத்தாள். சைகையால்தான். அவளால் பேச முடியவில்லை. தன் நிலைமீது.. பாலாவிடம் பேச முடியாத இந்தக் கேவலமான நிலை மீது அவளுக்கே வெறுப்பாக வந்தது.

கீர்த்தியும் வந்தாள் அவள் அருகில் வேண்டா வெறுப் பாக... அவளுக்குப் புரியவில்லை. துடித்துக் கொண்டிருந்த அந்த இரு காதல் உள்ளங்களின் துடிப்பு.

பாலாவிடம் பேசச் சொல்லி போனை அவளிடம் கொடுக்கப் போனாள் மது. ஆனால், சற்றுத் தொலைவில் காரைப் பார்த்தவள்... அதன் அடையாளம் உணர்ந்தவள்... தங்களைச் சுற்றி வேறு யாராவது தென்படுகிறார்களா என்பது போலப் பார்க்க... அந்தக் காலை வேளையில் யாருமே அங்கு இல்லை. அவள் கீர்த்தியை ஒருமுறை நன்றாகப் பார்த்தாள். தன்னிடமிருந்து இந்தப் போனையே வாங்க முடியாதவளா... தன்னை அவனிடமிருந்து காப்பாற்றப் போகிறாள். அவள் இனி இங்கிருக்கும் ஒவ்வொரு நொடியும் இந்த அப்பாவிப் பெண்ணும் தன்னோடு மாட்டிக் கொள்வாள் என்றே தோன்றியது.

தன்னால் அந்தச் சிறு பெண்ணிற்கும் ஆபத்து நேர்வதை விரும்பாத மது, பாலாவிடம் அவள் மொபைலில் இருந்து பேசி விட்டோம். இனி, அவன் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கை வந்தது. இவள் இந்த இடத்திலிருந்து அவனிடம் மாட்டாமல் போக வேண்டும். தன்னையே காரணம் இல்லாமல் கடத்தி வைத்திருக்கும் சைக்கோ அவன்... இவளையும் சின்னாபின்னமாக்கி விடுவான். மதுவின் இயல் பான தாயுள்ளம்... தன்னைக் காப்பாற்றும் வழிகளை மறந்து... கீர்த்திக்காக யோசிக்க ஆரம்பித்தது.

ஒரே நொடிதான்... இவை எல்லாம் அவள் மனதில் தோன்றியவுடன்....

சட்டென்று போனைக் கட் செய்தவள்.. அதைக் கீர்த்தி கையில் ஒப்படைத்தாள். அவளைப் போகச் சொல்லி வலுக்கட்டாயமாகத் தள்ளியும் விட்டாள்.

கீர்த்திக்கு அவள் எண்ணம் எல்லாம் தெரியவில்லை. புரியவும் இல்லை.

"இவ எதுக்கு இப்ப போகச் சொல்றா? போன் பேசிட்டா போல... அதுதான் போல..." என்றவளாய்,

"விட்டது தொல்லை..." என்று கையில் வந்த மொபைலுடன் நகரப் போக... அந்தக் காரும் அவர்கள் அருகே வந்துவிட... நின்று விட்டாள்.

மொபைல் இப்போது மீண்டும் அடிக்க... மது பரிதாபமாக அதைப் பார்த்தாள். அதன் அழைப்பு அவளது பாலாவின் காதல் மனம் கொண்ட கதறலாகத் தோன்ற... செய்வதறியாமல் நின்றாள். மனம் முழுவதும் அவன் நினைவுகளும்... கீர்த்திகாவின் நினைவுகளும் மட்டுமே சுற்றிக் கொண்டிருந்தன. இந்த ஏழு மாதங்களும்... நினைக்கவே கசந்தது அவளுக்கு.

காரில் இருந்து இறங்கியவனைப் பார்த்தாள். நன்றாகப் பார்த்தாள் கீர்த்தி. அவன் கீர்த்தியைப் பார்த்தபடி மதுவை இழுத்துக் காருக்குள் நுழைத்தான். மது போராட்டமெல்லாம் பண்ணவில்லை. அவள் போராடினால்... மதுவைக் கடத்தி வைத்திருக்கிறான் என்று கீர்த்திக்குத் தெரியும். ஒருவேளை தனக்காக அவளும் அவனுடன் போராடலாம். அதில் கண்டிப் பாக அவளும் தன்னுடன் இந்த அயோக்கியன் கையில் மாட்டினாலும் மாட்டுவாள் என்ற ஒரே காரணத்தினால்... அவனை எதிர்க்காமல் உள்ளே போனாள் மது.

போகும் போது மதுவின் கண்கள்... கீர்த்தியை நம்பிக்கையுடன் பார்த்தன.

தன் காதலன் பாலா அவளுடன் பேசுவான். அவள் மூலம் தான் காப்பாற்றப்படுவோம் என்று.

மதுவின் அந்தப் பார்வையில் கீர்த்திக்கே ஏதோ தவறு நடப்பது போல்தான் தோன்றியது.

ஆனால், தன் மேல் தவறில்லாதவள்... அவன் சொன்னவுடன் ஏன் காரில் ஏறி உட்கார்ந்தாள் என்று தோன்றவும் செய்தது.

மது உள்ளே உட்கார்ந்தவுடன்... அவளின் இந்தச் செயலை அவனும் எதிர்பார்க்கவில்லை போல... அங்கு நின்றிருந்த கீர்த்தியின் புரியாத பாவனையில் ஒன்றும் செய்யாமல்...

"ஒழுங்காப் போயிடு. இவ என் தங்கைதான். போதை மருந்துக்கு அடிமையாகிட்டா..." என்றபடி ஏறினான்.

அவன் காரை எடுத்தானோ... இல்லையோ... ஓயாமல் வந்த போனை அட்டெண்ட் செய்தாள் கீர்த்தி.

"ஹலோ!" என்று சொன்ன கீர்த்தியின் குரலில்,

மொத்தமும் உடைந்தான் பாலா. அது தன் காதலியின் குரல் இல்லை என்பதை உணர்ந்து, "இப்போ... இந்தப் போன்ல இருந்து பேசினாங்களே... அவங்க எங்கே? அவ என்..." வலியுடனும் தடுமாறியும் விழுந்தன வார்த்தைகள். எங்கே தன் மதுவைத் தவற விட்டு விட்டோமோ என்று பரிதவித்தான்.

"அவங்க இப்போதான் இங்கிருந்து போனாங்க..." என்று ஆரம்பித்தவள்... தன்னருகில் மீண்டும் நின்ற காரின் சத்தத்தில் காதிலிருந்து போனை எடுத்தாள்.

அவளருகில் வந்த அவனிடம்... தன்னையும் அறியாமல் பயத்தில், "அவங்களுக்குத்தான் போன்..." என்று வார்த்தை விட... ஒன்றும் சொல்லாமல் கண்களில் கோபத்துடன் திரும்பி சன்னலோரத்தில் அமர்ந்திருந்த மதுவைப் பார்த்தவன்... கீர்த்தி கையில் இருந்த அவள் போனைப் பறித்தவன்... சட்டென்று கீழே எறிந்தான். அது மது - பாலா

காதலைப் போல்... மீட்க வழியில்லாத படுபயங்கரமான பள்ளத்தில் விழுந்தது.

மதுவால் எதையும் தடுக்க முடியவில்லை. தனக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பும் பறிபோனது என்றே தோன்றியது. மதுவின் கண்கள் கீர்த்தியை நிராசையுடன் பார்த்தன. தன் பாலாவுடன் இனிச் சேரவே முடியாது என்பது உறுதியானது போல் இருந்தது. சோர்ந்து படுத்து விட்டாள்.

கீர்த்தியிடம் வந்தவன், "அவன் இவளுக்கு ட்ரக்ஸ் கொடுக்கிற ஆளு. இதே மாதிரிதான் இவளும் போன் மூலம் மாட்டிக்கிட்டா. நீயும் அவனிடம் மாட்டக் கூடாதுன்னுதான் போனை எறிஞ்சுட்டேன்..." என்று அலட்சியமாகக் கூறிவிட்டுத் தன் காரில் ஏறி மதுவுடன் மறைந்தான்.

ராகவன் - மைதிலி இருவரும் கீர்த்திக்கு ஹோட்டல் அறையில் பெரிய மண்டகப்படி நடத்திக் கொண்டிருந்தனர்.

"போன் வாங்கிக்கலாம். இன்னைக்கு இவ யார் கிட்டயாவது மாட்டி இருந்தானா என்ன பண்றது? அந்தப் பொண்ணு போதையில் இருந்தாளாம். போன் கேட்டாளாம். ஒருத்தன் வந்தானாம். போனைத் தூக்கி எறிஞ்சுட்டானாம். இவ... வேற ஏதாவது ஆபத்துல மாட்டியிருந்தா... என்ன பண்றது?" - மைதிலி புலம்பிக் கொண்டிருக்க...

ராகவனோ, "விடு சுமதி... நம்ம பொண்ணு பத்திரமா வந்துட்டால்ல... விடு!" என்று சமாதானப்படுத்த...

கீர்த்திக்கு மட்டும்... மதுவின் பார்வை அவள் மனதினுள் என்னவோ செய்து கொண்டிருந்தது. என்னிடம் என்ன எதிர்பார்த்தாள்... ஒருவேளை அவன் அயோக்கியனோ... அவனிடமிருந்து அவளைக் காப்பாற்றுவேன் என்று எதிர்பார்த்தாளா? பிறகு ஏன் அவனுடன் எந்தப் பிரச்சனையும் செய்யாமல் போனாள்? போனில் பேசியவன் யார்? அவன் குரலில்... அவன் என்ன ட்ரக் சப்ளை பண்றவனா... எதற்கு அத்தனை உருக்கம் அவன் குரலில்...

தலை வலிக்க... தன் தாயிடமே தன் சந்தேகத்தையெல்லாம் சொல்ல...

மைதிலியோ, "அவ ஏன் ஒண்ணும் சொல்லாம காரில் ஏறி உட்கார்ந்தா.. கண்டிப்பாக அவ அண்ணாவாத்தான் இருப்பான். போன்ல பேசுனவன் பேசுனதை வச்சே அவனை எப்படிம்மா தெரியும். எது எப்படியோ அந்தப் பொண்ணு ஏன் அவனோட அமைதியாப் போனா? அதை மட்டும் யோசி. அவளுக்கு அண்ணன்னு வேற சொன் னான்ல. இந்தக் காலத்துப் பொண்ணுங்க எல்லாம் ஏன் தான் இப்படி இருக்காங்களோ?" என்று மதுவைத் தவறான கண்ணோட்டத்தில் பேச...

மது... அவள் மகளைக் காப்பாற்றவே அவனோடு போராடாமல் போனாள் என்பதனை மைதிலியாலும் உணர முடியவில்லை.

தாயின் வார்த்தைகளில் சமாதானம் ஆனபோதிலும்...

"வினோத் போனை உடைச்சிட்டான்மா... நல்லவன்னா ஏன்மா போனை உடைக்கணும்... எனக்கென்னமோ டவுட்டா இருக்கு..." என்று கேட்க,

"கீர்த்திமா... அவன்தான் சொன்னான்ல. ட்ரக் சப்ளை பண்றவன்னு... ஒருவேளை உன் நம்பரை வச்சு உன்னை ஃபாலோ பண்ணினால்... அவன்கிட்ட நீ மாட்டாம இருக்கத் தான் போனைத் தூக்கி எறிஞ்சிருப்பான்.. ஒழுங்கா வந்த வேலையை மட்டும் பார்ப்போம். இல்லேனா... இன்னைக்கே ஊருக்குக் கிளம்புவோம்!" என்று மைதிலி போர்க் கொடி தூக்க... கீர்த்தியும் அதை விட்டு விட்டாள். ஆனாலும் மனதில் உறுத்திக் கொண்டே இருந்தது. மைதிலியின் வார்த்தைகள் தான் அவளைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி அந்தப் பெண்ணின் மேல்தான் தவறு இருக்கும் என்பதனை விதைத்தது.

ஆனாலும் அவள் கண்களின் வலி. அதன் நிராசை எல்லாம் அவ்வப்போது வந்து அவளை இம்சைப்படுத்தும்.

ஒருவேளை நல்ல பெண்ணோ... இதை மட்டும் அவளால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. போதையின் தாக்கத்தில் இருந்த அவளை நல்ல பெண் என்று அவளால் ஏற்க முடியவில்லை.

நாளடைவில் இந்தச் சம்பவம் அவள் பெற்றோரின் வார்த்தைகளினால்... அவள் நினைவில் இருந்தே போய் விட்டது என்று சொல்லலாம். ஆனாலும் மதுவின் பார்வை யும்... அந்தப் போன் குரலின் வலியும்... காரில் வந்தவனின் முகமும் அவள் மனதில் அழியாத இடத்தில் இருந்தன.

அது ஒருபுறம் இருக்க...

பாலாவும் அந்த நம்பரைத் தொடர்பு கொள்ள முயன்று அதை விசாரிக்க... அது வினோத்தின் பெயரில் இருந்ததால்... வினோத்தும் அப்போது யு.எஸ்.எில் இருக்க... அந்தப் போன் மூலம் ஒன்றும் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது என்பதை மட்டும் அவள் அறிவாளா என்ன...?

கீர்த்தி இப்போதும் உணரவில்லை. தான் பார்த்தது மது என்பதும்... அன்று பேசியது யாரோ ஒரு ட்ரக் சப்ளை செய்பவன் அல்ல... பாலா என்பதெல்லாம்.

மது ஒன்றும் சொல்லாமல்... போராடாமல் அவனோடு போனது... தானும் அந்த அயோக்கியனிடம் மாட்டி விடாமல் இருக்கவே என்றும் நினைக்க முடியவில்லை.

இன்று அவளுக்கு மனதில் அந்தச் சம்பவம் பூதாகர மாகத் தோன்றியது.

ஒருவேளை கடவுள் ஒரு பெண்ணைக் காப்பாற்றும் சந்தர்ப்பத்தைத் தனக்குக் கொடுத்திருப்பாரோ... தான் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தவில்லையோ... அதனால்தான் நான் இப்படி கதி இன்றித் தவிக்கின்றேனோ என்று தவித்தவள்... மனமார வேண்டினாள் கடவுளிடம். அந்தப் பெண் மட்டும் நல்ல பெண்ணாக இருந்திருந்தால்... இல்லை, ஆபத்தில் மாட்டியிருந்தால்... தனக்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கிடைக்க

அருள வேண்டும் என்று... அப்படிக் கிடைத்தால் அவளைக் கண்டிப்பாகக் காப்பாற்றுவேன்... என்ற உறுதியுடன் தன் கண்களைத் துடைத்தாள்.

கீர்த்திக்கு அந்த வாய்ப்புக் கிடைக்குமா... கிடைத்தாலும் மதுவை அவள் காப்பாற்றுவாளா... இல்லை, மதுவைக் காப்பாற்றப் போய்த் தானும் மாட்டுவாளா? அப்படி மாட்டிய இருவரையும் பாலா காப்பாற்றுவானா? விதி அவளோடு மீண்டும் விளையாடும் நோக்கில் அவளைப் பார்த்துச் சிரித்தது.

அடுத்த நாள் காலை கீர்த்தி வழக்கம் போல் எழுந்தாள். அவள் உதடுகளில் பாலாவின் நேற்றைய அத்து மீறல் நன்றாகத் தெரிந்தது.

எழுந்து வந்தான் பாலா.

கீர்த்தியைப் பார்த்துப் பேசவில்லை. அவனுக்குக் கோபம் ஆறவில்லை. அவளின் இதழைப் பார்த்தவனுக்கு அவன் மேலேயும் கோபம் வரத்தான் செய்தது.

"இன்னைக்கு ஆபீஸ் வர வேண்டாம். இங்கேயே இரு. ரெண்டு நாள் இங்கேயே இருக்கலாம்..." என்றபடி வேறு ஒன்றும் சொல்லாமல் அலுவலகம் சென்று விட்டான் பாலா.

கவிக்குத்தான் அவன் பதில் சொல்ல முடியவில்லை.

ஃபீவர் என்று மட்டும் சொல்ல....

"என்ன ஃபீவரா?" என்று மாலை கீர்த்தியின் வீட்டில் இருந்தாள்.

கீர்த்தியும் அவளை எதிர்பார்க்கவில்லை.

கீர்த்தியைப் பார்த்தவளுக்கு அவள் காயம் தவறாமல் தெரிய... "என்னடி... ஃபீவர்னு சொன்னார் பாலா. ஏன்... என்ன நடந்துச்சு?" என்று கவலையோடு வினவ...

"கவிக்குத் தெரிஞ்சுடுச்சுன்னு நேத்தே ஆடினான்... இது வேறயா?" என்று மனதிற்குள் நொந்தாள் கீர்த்தி.

"சொல்லித் தொலை... பாலா இப்படிப் பண்ற அளவுக்கு என்ன பண்ணுன?" என்று அவள் மேல் ஏகக் கடுப்பில் கேட்க...

நடந்ததைச் சொன்னாள் கீர்த்தி... கொஞ்சம் பயத்தோடு.

"கவி... அவர்கிட்ட நீ இதெல்லாம் பத்திப் பேசாதே. டென்சன் ஆகப் போறார்..." என்றும் வேறு சொல்லி வைத்தாள்.

"ஆமா. நீ பண்ணி வச்சிருக்கிற காரியத்துக்கு நான் என்ன உனக்குச் சப்போர்ட் பண்ணி வேற அவர்கிட்ட பேசப் போவேன்னு நினைக்கிறியா... எப்படிடி இப்படி மாறுன? எதையும் யோசிச்சுப் பண்ணுவ... பேசுவ. அவரே மறக்க நினைக்கிற விசயத்தைப் போய்... அவ எங்கே இருக்கானு கூடத் தெரியாம தவிக்கிற அவரை இப்படிப் பேசி நோகடிச்ச..." என்று கவியும் அவளைத் திட்ட...

"அவருக்கு ரொம்ப சப்போர்ட் பண்ணாதே. என் மேல தப்பு இருக்கப் போய்த்தான் நேத்து அவர் பண்ணின காரியத்துக்குச் சும்மா விட்டேன். இல்ல..." என ஆற்றாமையுடன் பேச...

"இல்லேன்னா என்ன பண்ணியிருப்ப? திருப்பி நீ பாலாவைக் கடிச்சிருப்பியா? பார்த்துடி. என்னைக்காவது நீ பாலாகிட்ட மாட்டும்போது செத்த... ட்ரெயிலரே பட்டையக் கிளப்புது. மெயின் பிக்சர்... நினைக்கவே முடியலை!" என்று கிண்டல் செய்ய... மலையேறினாள் கீர்த்தி.

கையில் கிடைத்த நியூஸ் பேப்பரைச் சுருட்டியபடி அவளைத் துரத்த... கவி சோபாவின் மேல் ஏறி நின்று கவி அவளுக்கு ஆட்டம் காண்பிக்க...

கதவு... தாழ் போடாமல் சாத்தியிருந்ததால்... கதவைத் தள்ளியபடி உள்ளே நுழைந்தான் பாலா.

அவனைப் பார்த்த தோழிகள் இருவரும் சங்கோஜமாக உணர்ந்து... வெட்கத்துடன் கவி சோபாவின் மேல் இருந்து இறங்க... கீர்த்தி... பேப்பர் சுருளைக் கீழே வைத்தாள்.

கவி அவளிடமிருந்து நழுவி... தன் ஹேண்ட்பேகை எடுத்தவள்... "பாலா சார், உங்க வைஃப்க்கு ஃபீவர்னு பார்க்க வந்தா... உங்க மேல உள்ள கோபத்தை எல்லாம் என்கிட்ட காட்டுறா பாவி. இனி நீங்க பார்த்துக்கோங்க..." என்க...

"கையில் மாட்டுன... செத்தடி!" எனக் கீர்த்தி மீண்டும் கோதாவில் இறங்க...

பாலாவின் பின்னால் இருந்த காரணத்தினால், "யாரு கீர்த்தி... யார்கிட்ட மாட்டுனா... அதெல்லாம் உனக்குத்தான்..." என்று கீர்த்திக்கு அழகு காட்டியவள்,

"கீர்த்தி! பை... சார்! பை..." என்று அவர்கள் பதிலை எதிர்பார்க்காமல் வெளியேறினாள்.

அவளை அடிக்கத் துரத்தியவளை... கைகளால் தடுத்து நிறுத்தியவன்... அவளைப் பிடித்தபடியே கதவை லாக் செய்தான்.

"என்ன அடுத்த டெலிகாஸ்ட்டா?" என்று நக்கலாகக் கேட்க,

அவனுக்கும் காலையில் இருந்த கோபம் எல்லாம் இல்லை. அதுவும் தோழியர் இருவரையும் பார்த்த கோலத்தில் கோபம் சுத்தமாகப் போய் இருந்தது.

அவன் முகத்தைப் பார்த்தவள்... கோபமாகக் கேட்கிறானா... இல்லை, நக்கலாகக் கேட்கிறானா... என்று பார்க்க,

அதில் தொனித்த கிண்டலில், "இதை நான் வேற டெலிகாஸ்ட் பண்ணணுமா... படம் பார்த்தே கதை சொல்லிட்டா!" என்று அவனை நொடிக்க...

சிரித்தே விட்டான் பாலா. சற்று நேரம் அவளைப் பார்த்தபடி இருந்தவன்... "சாரி, கீது!" என்றான்.

'எதுக்கு நேத்து நடந்ததுக்கா...?" - கீர்த்தி கேட்க,

"இல்லை."

அடப் பாவி என்பது போல் அவனைக் கீர்த்தி பார்க்க...

"நேத்து நடந்தது எல்லாத்துக்கும் சாரி கேட்கலை. அதுக்கெல்லாம் இந்தப் பாலா சாரி கேட்க மாட்ட[illegible]. அது என் உரிமை..." எனச் சொல்ல,

கீர்த்தியின் முகத்தில் அவளையும் அறியாமல் செம்மை பரவ... அவனைப் பார்க்க முடியாமல் தலை குனிந்தாள்.

அவளைத் தன் விரலால் நிமிர்த்தியவன்... அவள் இதழ்களின் காயத்தில் தன் விரலை வைத்தவன்...

"இதுக்கு சாரி!" என்றான், வலியுடன்.

அவனின் முகச் சுணக்கத்தைத் தா[illegible]காமல், "நானும் சாரி..." என்றாள்.

அவன் புரியாமல் பார்க்க...

"உங்க மதுவைப் பத்தித் தப்பா.." என்றபோதே, அவள் இதழ் அவனால் சிறை பிடிக்கப்பட்டிருந்தது.

மென்மையாக அவளிடம் தன் எதிர்ப்பைக் காட்டியவன்...

"அடங்க மாட்டியாடி... சொல்லாதன்னு சொன்னா... கேட்கிறியா?" என்ற போதுதான் அவள் சொன்ன, 'உங்க மது...' என்ற வார்த்தையும்... அதற்குத் தன் கணவன் தந்த தண்டனையும் புரிந்தது. ஆனால், இது நேற்றுப் போல் வலிக்கவில்லை. இனிக்கத்தான் செய்தது.

35

வினோத் அடுத்த இரண்டு நாளில் இங்கு வர... பாலாவோ அலுவல் விஷயமாக அமெரிக்காவிற்கு ஒரு வாரப் பயணமாகப் பறந்திருந்தான்.

வினோத் வந்திறங்கிய அடுத்த நாளே அவன் கிளம்பி விட்டான்.

வினோத் குடும்பம் தற்காலிகமாகக் கீர்த்தியின் வீட்டிலேயே தங்கினர்.

வினோத்தும் தன் அலுவலகம் தொடர்பான விசயங்களில் பிஸியாக இருந்தான்.

அவர்கள் வந்த சந்தோஷத்தில்... கீர்த்திக்கு விஸ்வம், மோகனாவோடு அந்த வாரம் கழிய... அவள் நினைவுகளில் எழும்பிய மதுவின் நினைவுகளும்... மனதில் ஆழத்தில் மறுபடியும் சென்றது.

வீட்டில் பாலாவும்... கீர்த்தியும் தொடர்ந்து நான்கு நாட்கள் இல்லாதது வீடே வெறிச்சோடி இருந்தது. கீர்த்தி இல்லாததால் சிந்துவின் நடமாட்டமும் அதிகமாயில்லை.

ஜெகநாதன் அருந்ததியிடம்... "கீர்த்தி எப்போ வருவாம்மா?" என்று கேட்க,

"பாலா வந்த பின்னால்தான் வருவாள். ஏன் கேட்கறீங்க?" என்று கேட்டாள்.

"இல்ல. ஒண்ணுமில்ல..." என்றவர், சொன்ன வார்த்தைகளிலேயே ஏதோ இருப்பது தெரிய...

"என்னங்க... எதுவா இருந்தாலும் மனசுல வச்சுப் புழுங்காம வெளியில சொல்லிடுங்க. அதுதான் உங்க உடம்பு இருக்கிற கண்டிசனுக்கு நல்லது!" என்று அவரின் உடல் நிலையைக் கருதியவளாய் அருந்ததி கேட்டாள்.

அவரோ, "நம்ம குணா இருக்கான்ல... அவனுக்குப் பேத்தி பிறந்திருக்காம். நம்ம வீட்டிலயும் எப்போ குழந்தைச் சத்தம் கேட்கும்னு இருக்கு. இவங்க ரெண்டு பேரும் தள்ளிப் போடறேன்னு ஏதாவது பண்ணி வைக்கப் போறாங்க. சொல்லி வை... முதல் குழந்தை மட்டும் பெத்துக் குடுத்துட்டு... அதுக்கப்புறம் என்ன வேணும்னாலும் பண்ணட்டும்..." என்று சொன்னவரைப் பார்வையாலே எரித்தாள்.

ஏற்கெனவே இவர் படுத்திய பாட்டில் தன் மகன் செய்த காரியங்களை எல்லாம் தெரிந்தவள் அல்லவா அவள்!

"ஏன் இப்போ பேரனோ பேத்தியோ வேணும்னு பிடிவாதம் பிடிச்சு... ஹாஸ்பிடல்ல மறுபடியும் படுக்கப் போறீங்களா... என்ன?" என்று கடுமையாகக் கேட்டவள்,

"அது அவங்க இஷ்டம். பெத்துக் குடுத்தாங்கன்னா... வச்சுக் கொஞ்சுவோம். இல்லையா... பேசாம இருப்போம். இதைப் போய் அவன்கிட்ட கேட்டுறாதீங்க..." என்று முகத்தில் அடித்தாற்போல் சொன்னாள்.

மகனின் நிலை தெரியாதவளா... என்ன? அவன் கீர்த்தியோடு போராடிக் கொண்டிருப்பதை... அவள் அறியாமல் இல்லை. மகனை நினைத்துப் பெருமூச்சு விட்டபடி... கணவனை மட்டும் அடக்கியவளாய்... தங்களுக்கு அந்தக் கொடுப்பினை எல்லாம் கிடைக்குமோ கிடைக்காதோ... என்று தன் மனதை அடக்க முடியாமல் திணறினாள்.

'நாம என்ன தப்பாக் கேட்டோம்... இவ ஏன் இந்த ஆட்டம் ஆடுறா...?' என்று நினைத்தபடி தன் அறைக்குச் சென்றார் ஜெகநாதன்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே, தன் அம்மாவைப் பார்க்க உள்ளே நுழைந்த சிந்துவை அவர்கள் இருவரும் கவனிக்கவில்லை.

அவர்களின் உரையாடலை ஓரளவு கேட்டவளுக்கு...

'ஹை... கீர்த்தி அக்காவுக்குப் பாப்பா பிறந்தா... ஒரே ஜாலிதான் நமக்கு...' என்று உற்சாகத்தில் துள்ளினாள்.

நாட்கள் சென்றன. தன் பயணத்தினை முடித்து... பாலாவும் இந்தியா திரும்பினான்.

அந்த நட்சத்திர அந்தஸ்து கொண்ட ஹோட்டல் வழக்கமான அதன் களையில் இருக்க...

வினோத் மற்றும் கவி இருவரும் அமர்ந்திருந்தனர். பாலா - கீர்த்திக்காக அவர்கள் இருவரும் காத்திருந்தனர்.

கவி வினோத்துடன் போனில் மட்டுமே பேசியிருக்கிறாள். கவியுடன் அவனை அறிமுகப்படுத்துவதற்கே கீர்த்தி இந்தச் சந்திப்பினை ஏற்பாடு செய்திருந்தாள்.

வினோத்தை இப்போதுதான் முதல் முறையாகப் பார்த்தாள் கவி.

'ஆள் நல்லாத்தான் இருக்கான். ஹ்ம்ம்... கீர்த்தியைத் தான் மிஸ் பண்ணிட்டான்...' என்று வழக்கம் போல் தன் சைட் அடிக்கும் பணியை ஆரம்பித்தாள்.

அவள் பார்ப்பதை உணர்ந்த வினோத்... நக்கல் கலந்த குரலில், "கவி... என்ன என் முகத்தில அப்படியே ஏமாளின்னு தெரியுதா?" என்று கேட்க...

கவிதான் அவனைக் கீர்த்தியோடு வைத்து ஓட்டியிருக்கிறாளே... அதனால அவன் இப்படிக் கேட்க...

கவிக்கு மனம் வருந்தியது. கீர்த்தி ஏன் இப்படிப் பண்ணினாள் என்று சொல்லத்தான் துடித்தது. ஆனால், முடியாத நிலையில் இருந்தாள். அதனால்... தடுமாறிய வளாய், "அப்படில்லாம் இல்ல..." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே... பாலா, கீர்த்தி, சிந்து மற்றும் கீர்த்திகாவும் வந்தனர்.

அவர்களைப் பார்த்தவள்... குறும்புடன், "நீங்க தப்பிச் சிட்டீங்க. ஆனா... பாவம் பாலா மாட்டிக்கிட்டாரு... கீர்த்தி கிட்டேனு நினைத்தேன்..." என்று சொல்ல,

சிரித்த வினோத், "இரு... இரு... கீர்த்திகிட்ட சொல் றேன்," என்றான்.

"சொல்லிக்கோங்க. கீர்த்தியே இதைத்தான் சொல்றா!" என்று அசால்ட்டாகச் சொல்ல...

வினோத் அவள் பாவனையில் சற்று அதிகமாகச் சிரிக்க...

அவர்களைப் பார்த்தபடி வந்த நால்வரின் கண்ணிலும் அது பதிந்தது.

பாலா... கீர்த்தியிடம் தலை சாய்த்து அவள் காதில்... "நம்ம தலதான் உருளுது போல... பாரு, நம்ம ரெண்டு பேர் வாழ்க்கையும்... பார்த்து ஊரே சிரிக்குது..." என்க,

கீர்த்தி கொடுத்த அக்மார்க் ரொமான்ஸ் லுக்கை... பாலா சந்தோஷமாக அனுபவித்தான்.

அவன் சொல்லியவுடன் சிந்துவும்.. கீர்த்தியைத் தன் புறம் கீழாக இழுத்து, "அக்கா, கவி அக்கா... வினோத் அண்ணா... சூப்பர் காம்பினேஷன். ரெண்டு பேரும் ஒரு இடத்தில் இருந்தா... செம ஜாலி போங்க. இன்னைக்கு லஞ்ச் சூப்பரா போகும்..." என ஜாலி மூடில் சொல்ல...

கீர்த்தனாவோ... "சிந்து, வர வர ரொம்பப் பேசுற. நீ இப்படிப் பேசுறதுக்கெல்லாம்... மஞ்சு அக்கா என்னைத்தான் தப்பா எடுத்துக்கப் போறாங்க..." என்று அவளை அடக்கிக் கூட்டி வந்தாள்.

கீர்த்திகாவிற்கோ மனம் தாங்கவில்லை.

வினோத் வருகிறான் என்று பாலா சொன்னதற்காகவே இங்கு வந்தாள். அலை பாய்ந்த அவள் மனதை அடக்க முடியாமல்...

ஆனால், அவனோ இன்னொரு பெண்ணுடன்... நினைக்கும்போதே பதறிய எண்ணம்... அவளுக்கு அவள் மனதைப் புரிய வைத்தது.

அவள் மனம் அவனிடம் ஏதோ எதிர்பார்த்தது உண்மைதான்.

ஆனால், 'காதலையா...?'

காதல்தான். இன்று அவன் இன்னொரு பெண்ணிடம் சிரித்துப் பேசும்போது வந்த வலி அது உண்மை என்று சொன்னது. முதல் காதலின் அவலமே இன்னும் நெஞ்சை விட்டுப் போகவில்லை எனும்போது இது வேறா? அதுவும் அவன் இவளை ஏற்றுக் கொள்வானா? அவன் மனதில்

வேறு யாரும் இருந்தால்? இந்தப் பெண் யார்? - என்றெல்லாம் நினைக்கவே தலை சுற்றியது.

இருந்தாலும்... இனி திரும்பிப் போக முடியாது என்ற நிலையால், மனதில் பெரும் வலியுடன் அவர்களோடு வந்தாள்.

கவி, வினோத்திடம், "நல்ல ஜோடிப் பொருத்தம்..." என்று கீர்த்தி - பாலாவைப் பார்த்துக் கூற,

மனதில் பொறாமையின்றி ஒத்துக் கொண்ட வினோத்தின் மேல் கவிக்கு மரியாதைதான் கூடியது.

"அது யாரு வினோத்... செமையா இருக்காங்க, ரவி வர்மா ஓவியம் மாதிரி..." என்று கீர்த்திகாவைப் பார்த்தவள், வழக்கம் போல ஆரம்பிக்க,

"நீ ரவி வர்மா ஓவியம் முன்ன பின்ன பார்த்திருக்கியா... அது இப்படித்தான் இருக்குமா?" எனக் கலாய்க்க,

"ஹலோ... பார்க்க ஓவர் பியூட்டியா இருந்தா இப்படித்தான் நாங்கள்ளாம் சொல்லுவோம். சொன்னா அனுபவிக்கக் கத்துக்கோங்க பாஸ். நோ ஆராய்ச்சி," என்றவளைப் பார்த்துச் சிரித்த வினோத், கீர்த்திகாவையும் ஒரு பார்வை பார்த்து வைத்தான்.

'ஒரு வேளை இவளும் மற்றப் பெண்களைப் போல் இருந்தால், ரவி வர்மா ஓவியமும் தோற்று விடுமோ!' என்ற எண்ணம் தோன்றியதை அவனால் தவிர்க்க முடியவில்லை தான்.

கவி, கீர்த்திகாவை ஒருவரை ஒருவர் அறிமுகப் படுத்தி வைத்த கீர்த்தனாவிற்கு, வினோத்தைக் கவிக்கு அறிமுகப்படுத்தும் அவசியத்தைக் கவியும் வினோத்தும் வைக்கவில்லை. அவர்கள் வருவதற்கு முன்னரே இருவரும் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொண்டு பேசிக் கொண்டு இருந்ததால்.

உற்சாகம் மட்டுமே அவர்கள் அனைவரிடமும் இருந்தது.

கீர்த்திகா மனதில் வருத்தம் இருந்தாலும், வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவர்களுடன் பேசினாள், மகிழ்ச்சி யாகவே.

அனைவரும் அவர் அவருக்கான ஐட்டங்களை ஆர்டர் செய்ய...

வினோத் மட்டும் எதுவும் சொல்லாமல் இருக்க...

பாலா, அவனிடம்...

"என்ன வினோத்... நீ ஒண்ணும் சொல்லல..." என்று கேட்க,

கீர்த்தனா மட்டும் வினோத்தைப் புரிந்து, அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

'இவ எதுக்குச் சிரிக்கிறா!' என்று தோன்றியது பாலாவுக்கு.

கீர்த்தனாவும் காரணம் இல்லாமல் சிரிக்கவில்லை.

தன் குடும்பமும் வினோத் குடும்பமும் சேர்ந்து இந்த மாதிரி வெளியில் சாப்பிடும்போது, கீர்த்தனா இருக்கிற அத்தனையையும் ஆர்டர் செய்வாள். எல்லாவற்றிலும் ஒரு வாய் அல்லது டேஸ்ட் மட்டும்தான் செய்வாள். கீர்த்தனா, வினோத் டேஸ்ட் ஒரே மாதிரி இருக்கும் என்பதால், அவள் ஆர்டர் செய்யும் அனைத்தும் வினோத் வயிற்றுக்குள்ளே செல்லும். எனவே கீர்த்தனாவுடன் வெளியில் சென்றால், அவன் எதுவும் ஆர்டர் பண்ண மாட்டான். இன்றும் அதே போல் அவனுக்கென்று அவன் எதுவும் சொல்லவில்லை.

இதை நினைத்துச் சிரித்தாள் கீர்த்தனா. இன்று அவளும் அதே மாதிரிதான் இருவருக்கும் பிடித்த வகைகளைச் சொல்லி இருந்தாள்.

இதை வினோத் சொல்ல, பாலா நிலைமைதான் சொல்ல முடியாத அளவிற்குக் கவலைக்கிடமானது.

'டேய்... எங்கிருந்துடா வந்து எனக்கு ஆப்பு வைக்கற..,' என்று நினைத்தவன், ஒன்றை மறந்தான்.

'பாலாதான் அவர்களுக்கிடையே வந்தான் என்பதை!'

கீர்த்தனாவைப் பார்த்துப் பாலா பகிரங்கமாக முறைக்க, அதை வினோத்தும் கவனிக்காமல் இல்லை.

கீர்த்தி, பாலாவின் முறைப்பு தெரிந்தும், கவனிக் காதவள் போல் வினோத்திடம்,

"டேய்... எப்போ பாரு என் கிட்டேயே பங்குக்கு வா... என் தட்டுல இருந்து எடுத்தா, மவனே கையை ஒடிச்சுடு வேன்," எனறு சொல்ல,

கவி, "அய்யோ வினோத்... இது தெரியாம உங்க பக்கத்துல உட்கார்ந்துட்டேனே..." என்று போலிக் கலவரம் ஆக,

வினோத், சிந்துவிடம், "டார்லிங்... வாட் அபௌட் டு ஷேர் தெ ஃபுட் வித் மீ..." எனக் கேட்க,

"அண்ணா... கீர்த்திகா அக்கா கிட்ட கேளுங்க... நான் ஏற்கெனவே கம்மியாத்தான் சொல்லி இருக்கேன்," என்று கீர்த்திகாவை மாட்டி விட,

கவி, சிந்துவுக்கு ஹை-ஃபை கொடுத்துக் கொள்ள,

கீர்த்திகாவிற்கோ அவன் கேட்பானோ என்று நினைக்க...

வினோத்தோ, "ஓ.கே... நான் எனக்குத் தனியாவே ஆர்டர் பண்ணிக் கொள்கிறேன்..." என்று சொல்லிக் கீர்த்திகாவின் எண்ணத்தில் மண் போட்டான்.

"கீர்த்தி... நீ மட்டும் மீதி வை... அப்புறம் இருக்கு..." என்று கீர்த்தியிடம் சொன்ன வினோத், அவள் சொன்ன ஐட்டங்களையே தனக்கும் சொல்ல, அவன் சொல்லி முடிக்கும் வரை காத்திருந்தான் பாலா.

இப்போது பாலா தன் வேலையைக் காட்டினான்.

தான் சொன்ன வகைகளை எல்லாம் கேன்சல் செய் தான்.

"இது என்ன கூத்து..." என்றபடி, கீர்த்தி, பாலாவைப் பார்க்க,

"நீ எப்படியும் வச்சிடுவ... நான் அதுல ஷேர் பண்ணிக் கிறேன்... வினோத்தான் சொல்லிட்டான்ல..." என்று பாலா, கீர்த்தியைப் பார்த்துக் கொண்டே சொல்ல,

'இதுங்க ரெண்டும் இதுக்கு முன்னாடி எங்கேயும் போனதில்லையா? இல்ல... இவன் அவளைக் கவனிக்கவே இல்லையா?' என்று யோசனையில் வினோத் ஆழ்ந்தான்.

கீர்த்தனாவுக்கு முதன் முதலாகப் பாலாவைச் சீண்டும் வாய்ப்புக் கிடைத்தது.

'என் சாப்பாடா உனக்கு வேணும்...?' என்று மனதிற்குள் சொல்லியவள்,

தான் சொன்ன வகைகளை எல்லாம் மாற்றினாள்... பாலாவுக்குப் பிடிக்காத மட்டன் வகைகளாக.

பாலாவிற்கு அவளின் நோக்கம் புரிய... 'இப்போது எனக்கு வேண்டாம்...' என்று பின்வாங்க மனதும் வர வில்லை. வினோத்திற்குப் பயந்தும், எங்கே மனைவி சாப்பாட்டில் கை வைத்து விடுவானோ என்று பயந்து, அவன் சொல்லவில்லை.

சிந்து, "ம்...ம்... பாலா அண்ணா... கலக்குறீங்க, நடத்துங்க, நடத்துங்க..." என்று கிண்டல் செய்ய,

பாலா, சிந்துவை, "ஏன்டா நீ வேற... என் நெலம புரியாம..." என்று அடக்கினான்.

கீர்த்திகாவை மட்டும் பாலா அவஸ்தையாய்ப் பார்த்தான்.

அவளோ பாலாவை ஆச்சர்யமாகப் பார்த்துக் கொண் டிருந்தாள்.

இவன் மட்டன் சாப்பிட மாட்டான் என்ற காரணத்தாலே மதுவும் அதைச் சாப்பிட மாட்டாள்.

இவனோ இப்போது கீர்த்திக்காகச் சாப்பிடுகிறான் என்ற நினைவில் அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பாலாவின் காதல்... வினோத்தின் பாசம்... கவியின் தோழமை... என்று கீர்த்தியின் மேல் பொறாமையே வந்து விடும் போல இருந்தது கீர்த்திகாவிற்கு. இது எல்லாம் ஒரு காலத்தில். தான் அனுபவித்த காலம் ஞாபகம் வந்தது.

'ஆதியின் காதல், மதுவின் தாய்மை கலந்த தோழமை, வினோத் அளவிற்கு இல்லை என்றாலும் பாலாவும் அவள் மேல் கொஞ்சம் போல் அக்கறை காட்டு வான் அப்போது...' என்று பழைய நினைவில் அவளையும் மீறிக் கண்கள் கசிவது போல் இருந்தன.

பாலா சாப்பிட முடியாமல் சாப்பிட்டுக் கொண்டிருப் பதைப் பார்த்துக் கீர்த்தனாவிற்கு ஒருபுறம் பாவமாகத் தோன்றினாலும்...

'நானா அவனைச் சாப்பிடச் சொன்னேன்!' என்று அவனைக் கண்டு கொள்ளாமல் சாப்பிட,

கவிக்கு மட்டும் புரிந்தது, தன் தோழி ஏதோ வில்லங்கம் செய்கிறாள் என்று. ஆனால், என்ன ஏது என்று தெரியவில்லை.

'இவ பட்டும் கூட அடங்கல போல...' என்று மட்டும் நினைத்தவள், அதன் பிறகு தன் உணவில் மட்டும் கவனம் செலுத்தினாள்.

வினோத்... கீர்த்தனா, சிந்து, கவி இவர்களோடு பேசிக் கொண்டே வம்பிழுத்துக் கொண்டே சாப்பிட்டான்.

கீர்த்திகாவைத் தங்களுடன் இழுத்துப் பேசியபடி சாப் பிட்டுக் கொண்டிருந்த கீர்த்தனா, ஒன்றைக் கவனித்தாள்.

அது... கீர்த்திகாவின் பார்வை வினோத் மேல் அவ்வப் போது சாய்வதை! அதை உணர்ந்தவளுக்கு முதலில் அது

சாதாரணமாகத் தோன்றினாலும், கொஞ்சம் உன்னிப்பாகக் கவனிக்க... அவள் உணர்ந்தே பார்க்கிறாள் என்ற உண்மை புரிய... 'சரி... வினோத்தின் ரியாக்சன் என்ன?' என்று நினைத்து வினோத்தைக் கவனிக்க, அவனோ கீர்த்திகாவை எல்லாம் கவனிக்கவில்லை... கவி மற்றும் சிந்துவோடு வாயாடுவதில்தான் குறியாக இருந்தான். எல்லாவற்றையும் நோட் செய்தவள், 'அவளை விட்டுப் பிடிப்போம்' என்று மனதோடு கூறிக்கொண்டாள்.

அனைவரும் ஒருவழியாக அரட்டை அடித்து, பின் சாப்பிட்டு, வீட்டுக்குக் கிளம்ப ஆயத்தமாயினர். பாலா மட்டும் எதிலும் கலந்து கொள்ளாமல் அமைதியாக இருந்தான். அவனுக்கு நிற்கக் கூட முடியவில்லை. வாமிட் வருவது போல் இருக்க... யாரிடமும் ஒன்றும் சொல்ல முடியாமலும் தவித்தான்.

வீட்டுக்கு எப்போதடா போவோம் என்றிருந்தது. 'உனக்குத் தேவையாடா... இப்படியெல்லாம் செஞ்சாத் தான் உன் மனசு அவளுக்குப் புரியுமா என்ன? ராட்சசி... பிடிக்காதுன்னு தெரிஞ்சே என்னைச் சாப்பிட வெச்சுட்டா...!' என்று பற்றிக் கொண்டு வந்தது.

வெளியில் எதுவும் காட்டாமல், 'கீர்த்திகாவை வேறு அவள் வீட்டில் விட வேண்டும்... என்ன செய்வது?' என்று தவித்தவன், தன் சூழ்நிலை உணர்ந்து...

வினோத்திடம்... கவியோடு கீர்த்திகாவையும் வீட்டில் சேர்க்கும் வேலையை ஒப்படைத்து, "கீர்த்தி பத்திரம்..." என்று ஒரு முறைக்கு இருமுறை சொல்லியபடி, கீர்த்திகாவை வீட்டிற்குச் சென்றதும் மறக்காமல் போன் செய்யுமாறு கூறி அனுப்பியவன்,

கீர்த்தியையும், சிந்துவையும் வேகமாக இழுத்துக் கொண்டு, தன் காரை நோக்கிச் சென்றான்.

கீர்த்திகாவைப் பாலா இத்தனை தூரம் பத்திரம் என்று தன்னிடம் சொன்னதையும், அவளிடம் போன் செய்யுமாறு சொன்னதையும் வினோத்தும் மனதில் குறித்துக் கொண்டான்.

கவியுடனும் கீர்த்திகாவுடனும் பயணித்த வினோத், கவியோடு அரட்டை அடித்தபடி வர, எரிச்சலின் உச்சத்திற்கே போனாள் கீர்த்திகா. கவியை முதலில் இறக்கி விட்டவன், கீர்த்திகாவிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் அமைதி யாகவே காரை ஓட்டி வந்தான். 'எல்லார் கிட்டேயும் வாயடிக் கிறான்... என் கிட்டே மட்டும் பேஸ்ட் போட்டு ஒட்டின மாதிரி வருகிறான்!' என்று பொருமினாள் கீர்த்திகா.

கீர்த்திகாவின் தங்கை திருமணத்திற்குப் பின் அவளது குடும்பம் இங்கேயே தங்கி இருந்தது. அவளது கிராமத்திற்குப் போகாமல், அவளது அப்பா அவரது தொழிலைக் கூட இங்கேயே இருந்து கவனித்துக் கொண்டார். ஏனென்றால், கீர்த்திகாவை அந்தக் கிராமம் ஏற்கெனவே, 'என்னாயிற்று... ஏன் இன்னும் திருமணம் செய்யாமல் இருக்கிறீர்கள்?' என்று கேள்வியுடன் நோக்கும். இப்போது சின்னவள் திருமணம் முடிந்து அங்கே போனால், தன் மகளைக் கேள்வியாலும், பார்வையாலும் கொன்றே விடுவார்கள் என்று இங்கேயே தங்க முடிவு செய்து, அதைச் செயல்படுத்தவும் செய்து விட்டார். மகளின் வாழ்க்கையை நினைத்து, மனதினுள்ளே ஆழ்ந்து போயிருந்தார் அவர்.

கீர்த்திகாவின் வீட்டில் அவளை இறக்கி விட்ட வினோத்,

"கீர்த்தி..." என்று தயங்கியவன், ஏதோ சொல்ல வருவது போலும்... ஆனால் சொல்லத் தோன்றாமலும், அவளைப் பார்த்தான்.

தயங்கி நின்ற அவனைப் பார்த்த கீர்த்திகா...

"என்ன வினோத்... எதுவா இருந்தாலும் சொல்லுங்க!" என்றவுடன்,

அவள் சொன்ன வார்த்தையில் தைரியமான வினோத், "கீர்த்தி... நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க...

எங்க கீர்த்தனா கிட்ட கூடச் சொல்வேன்... ஆனா உங்க கிட்டச் சொல்றதா வேண்டாமா என்று எனக்குத் தெரிய வில்லை. பொண்ணுங்க வீட்டை விட்டுப் போகும்போது நெற்றியில பொட்டு வைக்க வேண்டும். நெற்றியில் இரண்டு புருவத்துக்கு மத்தியில இருக்கிற பாயின்ட், யாராலும் வசியப் படுத்தக் கூடியது. அறிவியல் பூர்வமா, மத ரீதியாப் பல காரணம் இருந்தாலும், பொண்ணுங்க புருவ மத்தியில பொட்டு வைப்பதற்கு இதுவும் ஒரு காரணம். நீங்க உங்க ஆதிய... இந்தப் பொட்டு கூடச் சம்பந்தப்படுத்தாம... நான் சொன்ன விஷயத்தை மட்டும் மனசுல வெச்சு உங்களை மாத்தப் பாருங்க. உடனே இல்லைன்னாலும், அட்லீஸ்ட் கொஞ்சம் டிரை பண்ணப் பாருங்க..." என்று கூறியவன், அவள் ஒன்றும் சொல்லாமல் நிற்பதைப் பார்த்தவன்,

'அப்பா... அடி வாங்கல நாம... டேய் வினோத் செல்லம்... அவ அப்படியே நிக்கட்டும்... இந்தக் கேப்ல எஸ்கேப் ஆகிக்க...' என்றபடி விடை பெறக் கூடத் தோன் றாமல், காரில் ஏறிப் பறந்தான்.

அவன் கூறிய வார்த்தைகளின் திகைப்பிலே உள்ளே நுழைந்தவள், கண்ணாடியில் தன் முகம் பார்க்க, அதில் பொட்டில்லாத தன் முகம் ஆதியை நினைவு படுத்த... அவன் அணிவித்த மாங்கல்யத்தை அவனது கையாலே அறுத்து எறிந்த காட்சி நினைவில் வர... அதே நேரம் மதுவிடம் அவன் இவளுக்காக வாங்கிய சத்தியமும் ஞாபகம் வர,

அவன் சொன்ன வார்த்தைகள் இன்னும் காதில் எதிரொலித்தன.

'மது... நீ எனக்காக... என் கீர்த்திக்காக ஒரு ப்ராமிஸ் பண்ணிக் கொடு. இவளுக்கு நீதான் இன்னொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டும். உன் ஃபிரெண்ட் நான் சொன்னா பண்ண மாட்டா... செய்ய மாட்டா... ஆனால் நீ சொன்னால் அவள் உன் வார்த்தையை மீற மாட்டாள். அதனால்தான் அவளிடம் கூடக் கேட்காமல்

உன்னிடம் நம்பிக்கை வைத்துக் கேட்கிறேன்,' என்று அவன் கடைசி நிமிடங்களில் மதுவிடம் கேட்ட வார்த்தைகள் எதிரொலித்தன.

'என் கீர்த்தியை... அவ... வேற கோலத்துல என்னால ஆகக் கூடாது. அதுக்கு நான் காரணம் ஆகக் கூடாது...' அவன் புலம்பல்கள் அவள் மனதில் ரணமாய் வலித்தன.

அவன் வார்த்தைகளை மறுக்க முடியாமல் மது சத்தியம் செய்ததும்... அதன் காரணமாக மதுவோடு கீர்த்தி பேசாமல் இருந்ததும்... மதுவின் துன்பம் தாளாத பாலா அவளிடம் பேசி, அவளைச் சமாதானம் செய்து, அவளை மதுவோடு பேச வைத்ததும், மீண்டும் அவளைப் பார்க்க வர நினைக்கையில் அவள் காணாமல் போனது... என்று எல்லாம் அவளைச் சுழற்றி அடிக்க,

மனம் தவிக்க ஆரம்பித்தாள் கீர்த்திகா.

பாலாவால் காரை ஓட்டவே முடியவில்லை. கீர்த்தி சற்றுப் பயந்து கூடப் போய்விட்டாள்.

"பாலா... என்ன பண்ணுது?" என்று தவிப்பாய்ப் பார்க்க,

அவளின் அக் மார்க்கான ரொமான்ஸ் லுக்... அது தான் முறைப்பை அவளுக்குக் காட்டியவன், பேசாமல் காரை ஓட்டியபடி வந்தான்.

அவன் முறைப்பை எல்லாம் தன் உதட்டுச் சுழித்தலில் தள்ளியவள், 'ஒண்ணும் பயப்படுற மாதிரி இல்ல போல...' என்று தைரியமானவள், சிந்துவிடம் தன் அரட்டைக் கச்சேரியைத் தொடர்ந்தாள்.

ஒரு கட்டத்திற்கு மேல் அவனால் வாமிட்டைக் கண்ட்ரோல் பண்ண முடியாமல், காரைச் சாலையின் ஓரத்தில் நிறுத்தியவன்,

இறங்கி எடுக்க ஆரம்பித்தான்.

பதறி விட்டாள் கீர்த்தி. காரினுள் இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கொண்டு அவனருகில் போக,

பட்டென்று அவளைத் தள்ளி விட்டவன்,

"தள்ளிப் போடி... தெரிஞ்சுதான பண்ணின... இப்போ எதுக்குப் பதறுற? தண்ணிய எடுத்துட்டு வந்துட்டா பெரிய இவளாட்டம்..." எனும்போதே மறுபடியும் எடுக்க,

அவனின் கோபத்தில் சிந்து ஒன்றும் புரியாமல்... அவன் கீர்த்தியைத் திட்டுவதையும் பொறுக்க முடியாமல்,

"என்னக்கா ஆச்சு! ஏன் அண்ணா திட்டறாங்க உங்களை...?" என்று பாலாவின் கோபத்தில் பயந்து மிரண்ட விழிகளுடன் கேட்க,

"ஒண்ணும் இல்ல சிந்து... நீ போய்க் காரில் உட்கார்!" என்று அவளை அனுப்பப் பார்க்க,

பாலாவோ, "சிந்து... அந்த வாட்டர் பாட்டிலை வாங்கு..." என்று சொல்லி, சிந்துவை அவர்கள் இடையில் நிறுத்த, கீர்த்தி முகம் சுருங்கித் தன் கையில் இருந்த தண்ணீர் பாட்டிலை நீட்டினாள் சிந்துவிடம்.

கீர்த்தியின் முகம் சுணங்குவதைப் பார்த்த சிந்து ஒரு மாதிரி கலவரம் ஆகிவிட்டாள்.

இருவரையும் மாறி மாறிப் பார்த்தபடியே இருந்தாள். மொத்தச் சாப்பாட்டையும் வெளியேற்றிய பின்னரே நார்மலானது அவனுக்கு. தண்ணீரில் வாய் கொப்புளித்துத் தன்னை அலம்பியவன் காரில் ஏறி உட்கார்ந்தான். வயிறு மொத்தமும் காலியாகி இருந்தது.

தன் நிதானத்திற்கு வந்து, தன்னை நிலைப்படுத்திப் பின் காரை எடுக்கப் போக,

"நான் டிரைவ் பண்ணவா பாலா...?" என்றவளின் வார்த்தைகளை அலட்சியம் செய்தவனாய்க் காரை எடுத்தான்.

ஓரளவு நார்மலான பாலாவைப் பார்த்த கீர்த்தி, அவனைச் சீண்ட ஆரம்பித்தாள்.

"சிந்து... இன்னைக்கு உங்க அண்ணாவுக்கு ஒண்ணு தெரிஞ்சிருக்கும். பிடிக்காத, ஒத்து வராத விஷயத்தை எல்லாம் அடுத்தவங்களுக்காகச் செய்யணும்னு நினைத்தால் என்ன ஆகும்னு..." என்று சொல்ல,

புரியாமல் கேட்டாள் சிந்து,

'இப்போ அண்ணா, என்ன பிடிக்காத விஷயத்தைச் செஞ்சாங்க?"

கீர்த்தியோ, "அது உங்க அண்ணாவுக்குப் புரியும்..." என்று அவனுக்கு நேராய்ப் பார்த்து, உறுத்து விழித்த அவன் கண்களைத் தைரியமாகச் சந்தித்து இதைச் சொன்னாள் கீர்த்தி.

'இவ இப்போல்லாம் ரொம்பப் பேசுறா... எத, எது கூடச் சம்பந்தப்படுத்திப் பேசுறா... எகத்தாளமா வேற...' என்று நினைத்தவன், சீண்டலாய்ப் பதிலடியும் கொடுத்தான்.

"பாப்பா... உன் அக்காவுக்கு அடிக்கடி என் கிட்ட இருந்து பனிஷ்மெண்ட் வாங்கணும் போல இருக்கு. பார்த்துப் பேசச் சொல்லு... அப்புறம் பனிஷ்மெண்ட் சிவியராகப் போகுது!" என்று அவளை நக்கலாகப் பார்த்துக் கண் சிமிட்டியபடியே சிந்துவிடம் கூற,

கீர்த்தி முகம் சிவந்தவளாய், 'சின்னப் பிள்ளை கிட்டப் பேசுற பேச்சைப் பாரு...' என்று மனதில் நொடித்தவளாய், சாலையில் கவனம் செலுத்துவது போல் வெளியே பார்க்க ஆரம்பித்தாள்.

சிந்துவின் கலக்கம் அப்போதுதான் போனது. பாலா அண்ணாவுக்கு உண்மையிலேயே கோபம் இல்லை போல. வாமிட் வந்ததில் கோபத்தில் பேசி இருக்கிறார் என்று நினைத்தவள்,

பாலாவைக் கிண்டல் செய்யத் தொடங்கினாள்.

"ஏன் அண்ணா... நாங்க எல்லாரும் அக்கா வாமிட் எடுப்பாங்களான்னு எக்ஸ்பெக்ட் பண்ணிட்டு இருக்கோம்... அவங்களுக்குப் பதில் நீங்க எடுத்திட்டு இருக்கீங்க..." என்று ஒரு போடு போட,

'சின்னப் பிள்ளை அவள் என்று நினைத்தோமே...' என்று சிந்துவை முறைத்தாள்.

பாலா காரை நிறுத்தியே விட்டான்.

"அம்மா தாயே... என்னை விட்டுடு. உன் வாயை இங்கே திறந்த மாதிரி எங்கேயும் திறந்திடாதே! என் மானம் சும்மா ஃப்ளைட்ல கூட இல்ல, ஜெட்ல ஏறிப் போகும் போல..." என்று சொல்ல,

கீர்த்திதான் சிந்துவைத் தாளித்தபடி வந்தாள்.

"சின்னப் பொண்ணாவா பேசுற! இதுதான் உனக்கு ஸ்கூல்ல சொல்லித் தர்றாங்களா? இதுல உனக்குப் பாப்பான்னு வேற செல்லம்..." என்று பாலாவிற்கும் வேறு திட்டு.

அவளின் திட்டுகளை எல்லாம் அப்பாவி போல் வாங்கியபடி வந்தவள்,

இறங்கி...

பாலாவின் காதில் மட்டும்...

"அவங்க மட்டும் ராகவ் அங்கிளையும், மைதிலி ஆன்ட்டியையும் எப்படி ஓட்டுவாங்க... அது தப்பு இல்லையாம்... நான் கேட்டது தப்பாம்!" என்று சொல்ல, அவள் சொன்னது கீர்த்தி காதிலும் விழ,

'ஐயோ... இவ எதுக்கு இவ அப்பா அம்மாவை இழுக்குறா... டேமைத் திறக்கப் போறா நம்ம ஆளு!' என்று இவன் நினைக்க,

அவளோ, "அடிங்க... எனக்கேவா...!" என்றபடி துரத்த, அவளுக்கு அழகு காட்டியபடி அவள் கையில் சிக்காமல் ஓடியே போனாள் சிந்து.

அவள் தன் கையில் சிக்காமல் ஓடுவதைப் பார்த்துக் கலகலப்பாய்ச் சிரித்த கீர்த்தி...

"சேம் சைட் கோல் போடுறா... பாவி!" என்று பாலாவிடம் சொல்லியபடி, வீட்டினுள் நுழைந்தாள்.

அவள் மனம் விட்டுச் சிரித்த சிரிப்பில், பாலாவும் நிம்மதி அடைந்தான்.

பாலா அசதியில் சற்றுக் கண் அசர, கீர்த்தி மட்டும் யோசனையில் இருந்தாள்.

அது கீர்த்திகாவின் பார்வை மாற்றம்.

அரை மணி நேரம் யோசித்தவள், முடியாமல், 'சரி, பாலாவிடமே கேட்டு விடுவோம்,' என்று அவன் கட்டிலில் ஏறி, உறங்கிக் கொண்டிருந்தவனின் அருகில் அமர்ந்தாள்.

"பாலா... பாலா..." என்று அவள் எழுப்பிய விதத்தில் சற்றுப் பதட்டத்துடன் எழுந்தவன், தன் அருகில் அமர்ந்திருந்த கீர்த்தியைப் பார்த்து, நம்ப முடியாமல் விழித்தான்.

கீர்த்தி வீட்டில்தான் அவர்கள் இருவரும் ஒரே கட்டிலில் உறங்குவர். இங்கு, பாலா வற்புறுத்தவில்லை. தானாக அவள் வர வேண்டும், தன் உரிமைகளை அவள் எடுக்க வேண்டும் என்று நினைத்த காரணத்தால்...

அதனால் அருகில் அமர்ந்திருந்த மனைவியை விழித்தபடி பார்த்து இருந்தவனிடம்,

அவன் விழிப்பதையும் யோசிக்காமல், தன்னையும் உணராமல், கீர்த்திகா பார்வையினால் வந்த சந்தேகம் மட்டும் மனதில் இருக்க, அதை அவனிடம் சொல்ல...

பாலாவும் தங்களைப் பற்றி மறந்து விட்டுத் தீவிரமானான்.

"உண்மையா கீர்த்தி நீ சொல்வது... ஆனா, என்னால நம்ப முடியவில்லை. அவங்க அப்பா, அவ அம்மா இறந்த பின்னால் திருமணம் செய்து விட்டார் என்ற ஒரே காரணத்திற்காகத் தள்ளி வைத்தவள்... இன்று வரை பேசாமல் இருக்கிறாள்!" என்று கூறிக் கீர்த்தியைத் திகைக்க வைத்தான்.

"ஆனா பாலா, அவ பார்த்தா... அதுல ஒரு ஆர்வம் இருந்துச்சு... அதுல ஏதோ இருக்கு, பார்க்கலாம்... ரொம்ப நாள் மறைச்சு வைக்க முடியாதுல்ல..." என்றவளிடம்,

பாலாவும் இப்போது ஒரு மாதிரியான குரலில்,

"ஆமா கீர்த்தி... ரொம்ப நாள் மறைச்சு வைக்க முடியாது!" என்று கூற, அவனின் குரல் மாற்றம் அவளுக்கு வித்தியாசத்தை உணர்த்த... சட்டென்று அவனைப் பார்க்க... அவனின் பார்வை அவளுக்குள் பிரளயத்தை உருவாக்க... இப்போதுதான் தன் நிலை உணர்ந்தாள். மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டாள்.

'பெட்ல ஏறி, இவன் பக்கத்துல உட்கார்ந்தே... தன் பார்வையில் உன் சம்மதத்துக்காக ஏங்கி நிற்பவனிடம் இன்னொரு பெண்ணின் காதல் பார்வை மாட்டாதா என்று அவனிடமே கேள்வி வேறு. 'கீர்த்தி! நீ ஓவர் ஸ்மார்ட் தான்...' என்று தன்னையே கிண்டல் செய்தவள், தன்னைச் சமாளிக்கும் விதமாகக் கொஞ்சம் கெத்தாகத் தொனியை மாற்றியவள்,

"சரி, சரி... இதுதான் என் சந்தேகம். நீங்களும் கொஞ்சம் இந்த விஷயத்தில் கவனம் வெச்சுக்கோங்க..." என்று கறாராகச் சொல்லியபடி எழ,

அவள் தன்னைத் தானே சமாளிக்கும் விதத்தைப் புரிந்து நக்கலாகத் தலை சாய்த்துப் பார்த்தான் பாலா.

'ஐயோ... நாம முறைத்துப் பார்த்தாலே 70 எம்.எம். ஃபிலிம் ஓட்டுவான். இப்போ சினிமாஸ்கோப் ஃபிலிமே

காட்டுவானே!' என்று நினைத்துக் கட்டிலை விட்டு இறங்க நினைக்க...

இப்போது அவனது கரங்களில் அவள் கரம் அடைக்கலமாகி யிருந்தது.

அவன் தளர்வாகத்தான் பிடித்திருந்தான். எடுத்தால் வந்துவிடும். அவளுக்குத்தான் அதை விடுவிக்க மனமில்லை. அவஸ்தையாய் அவனை நோக்க... அவன் கண்களில் பெரும் காதல் தெரிய... அதில் தாபமும் வழிந்தோட... அதில் தன்னைத் தொலைத்தவளாய் எழும் எண்ணம் இல்லாமல் அவனின் தோள்களிலேயே துவளப் போனவளின் மனதில்... மதுவின் நினைவு எங்கிருந்துதான் வந்ததோ தெரியவில்லை. அடிபட்ட உணர்வில் சட்டென்று பின்வாங்கினாள் கீர்த்தனா. உணர்ச்சிகள் எல்லாம் சுத்தமாய் வடிய, அவளுக்கே அவளைப் பிடிக்காமல், கட்டிலில் இருந்து இறங்கி, முகம் வெளுத்தபடி வெளியேறினாள் கீர்த்தி.

பாலா ஏதும் சொல்லவில்லை... தடுக்கவும் இல்லை. அவள் நிலை தெரியாதவனா... இல்லை, புரியாதவனா?

'கீது... நீ என்னிடம் இன்றைக்கு உன்னைத் தெரியாமல், உணராமல் உன் உரிமையில் என் அருகில் வந்தாய்... இதேபோல் உன் உணர்வோடு, உன் உறவை... உன் உரிமையை என்னிடம் நீயாகவே நிலை நாட்டும் நாள் வெகு தூரம் இல்லை...' என்று தன் மனதிற்குள்ளாகச் சொல்லியபடி, விட்டத்தை வெறித்தபடி பார்த்துப் படுத்திருந்தவனை... விதி கூடப் பரிதாபமாக நோக்கியது.

அவனைக் கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாமா என்று கூட நினைத்தது.

36

அந்த அழகான காலையில், பாலாவிற்கு முன் எழுந்தாள் கீர்த்தி. முந்தின நாள் பாலா இரண்டு மணி அளவில்தான் வீட்டிற்கே

வந்தான். வந்திருக்கும் புது ப்ராஜெக்டிற்காக... அதன் முதற் கட்ட ஆயத்த வேலைகளில் இருந்ததால், இரவும் பகலும் வேலை செய்தான்.

கீர்த்திக்குக் கூடச் சந்தேகம் வந்து விட்டது. தன்னை அவாய்ட் செய்யத்தான் இப்படி இருக்கிறானோ என்று. கேட்டே விட்டாள்.

"கீது... நீ நம்ம ஆபீஸ்லதானே வேலை பார்க்கிறாய்... உனக்குத் தெரியாதா அது எவ்ளோ பெரிய ப்ராஜெக்டுன்னு... ரிசோர்ஸ் அலோகேசனே முடியல... நீ கூட இன்டர்வியூ எடுத்துட்டுத்தானே இருக்கே! இன்னும் 20 எக்ஸ்பீரியன்ஸ் ரிசோர்ஸ் தேவை. டென்சனா வேற இருக்கு. ஒரு மாதத்தில் ஸ்டார்ட் பண்ணணும். உன்னை, கவியைக்கூட அதில் மாற்றலாம்னு இருக்கோம்... ரிசோர்ஸ் செட் ஆகலேன்னா..." என்று உண்மையான நிலையைச் சொன்னவன், "நீ மட்டும் மாமாவைப் பார்த்து ஒரு லுக் விட்டேன்னா போதும்... ப்ராஜெக்டாவது, வேலையாவது..." என்று தன் கணவனாகத் தன் வேலையைக் காட்ட, தானாக நகர்ந்தாள் கீர்த்தி.

இரண்டு மணி அளவில் வந்தவன், "நாளை காலை ஏழு மணிக்கெல்லாம் செல்ல வேண்டும். எழுப்பி விடு...." என்று சொல்லித்தான் உறங்கப் போனான்.

நாட்காட்டியில் நேற்றைய தேதியைக் கிழித்தவளின் கண்களில் இன்றைய தேதி... நாளைய தேதியின் விசேஷம் சொன்னது. அது அவளின் பிறந்த நாள் மற்றும் தன் பெற்றோரின் திருமண நாள். நினைவுகள் தந்த தாக்கத்தில் சுவரோடு சாய்ந்தாள். உதடுகளை அழுந்தக் கடித்தபடி தன் தாய் தந்தையின் நினைவுகளைத் தனக்குள்ளாக அடக்க... அதன் விளைவு... அழுகை எல்லாம் வரவில்லை. சிறிது நேரம் அவர்கள் நினைவில் கரைந்தவள், தன்னை ஏன் அன்று அவ்வளவு அவசரமாகப் பார்க்க வந்தனர்... தன்னைப் பார்க்க வராமல் இருந்திருந்தால்... என்றெல்லாம்

ஓடிய தன் சிந்தனையைச் சுழற்றியவளுக்கு... அசிரத்தையாய் இன்னொன்றும் ஞாபகம் வந்தது.

இதே நாளில்தான் அவளும் பாலாவும் லிஃப்ட்டுக்குள் மாட்டினோம் என்பதுதான் அது.

அன்று அந்தக் குறுகலான அறைக்குள் தன்னைப் பார்க்காமல் கூட நின்றவனா இன்று எவ்வளவு பெரிய பரந்த இடத்திலும், எத்தனை பேர் மத்தியிலும், தன்னைத் தன் பார்வை வட்டத்துக்குள் கொண்டு வருகிறவன்.

புன்னகையுடன் ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருந்தவனின் முகத்தைப் பார்வையால் வருடினாள்.

அலை அலையாகப் பிரிந்திருந்த அவன் கேசத்தைத் தன் கையால் கலைக்க ஆசைதான்...

அவனோடு ஒன்றி, அவன் மார்போடு தலை வைத்துத் துயில ஆசைதான்...

அவன் கைகளில் எப்போதும் கட்டுண்டு கிடக்க ஆசைதான்...

அவன் செல்லச் சீண்டலில் கரைய ஆசைதான்...

அவன் ஆண்மையில் தன் பெண்மை தொலைக்க ஆசைதான்...

அவன் மோகத்தில் தன் தேகம் நெகிழ ஆசைதான்...

இத்தனையும் அவள் மனது வைத்தால் நடக்கும். ஆனால், எது தடுக்கிறது? அவன் தனது உயிரான போதும்... அவன் உறவாக முடியவில்லையே ஏன்? எது தடுக்கிறது? அவன் என் உரிமை இல்லை என்ற உணர்வா? இல்லை, அதை உணர மறுக்கும் தன் பிடிவாதமா? இந்தப் போராட்டம் இன்னும் எத்தனை நாளைக்கு? - என்றெல்லாம் பல்வேறு சிந்தனைகளின் தாக்கத்தில் இருந்தவள், அவன் படுக்கையில் லேசாகப் புரள்வது தெரிய, தன்னிலைக்கு வந்தாள்.

அவன் அருகில் சென்று,

"பாலா... டைம் ஆறு ஆகுது... கெட்அப்..." என்று கூற,

எழுப்பியவளின் கைகளைப் பிடித்துத் தன்னோடு சேர்த்து இழுத்து, மீண்டும் உறங்க ஆரம்பித்தான்.

"பாலா... என்ன விளையாட்டு இது?" என்று கைகளை இழுக்க முயற்சிக்காமலே சொல்ல,

"சும்மா இருடி... எப்போ பாரு நொய் நொய்னு..." என்றபடி கண்களை மூடிப் படுத்தவன், ஐந்து நிமிடம் கழித்து அவனாகவே அவளை விடுவித்தான்.

அவனைப் பார்த்தபடி அப்படியே இருந்தவளைப் பார்த்து, வந்த சிரிப்பைத் தன் இதழோரமாய் அடக்கியவன்,

"இப்போ போகலாம் பேபி..." என்று அவளிடம் சொல்ல, அப்போதும் அவள் தன் நிலையில் இருந்து மாறவில்லை. அதற்கு மேல் எதுவும் சொல்லாமல் அவன் எழுந்து போனான்.

அவனின் உடல் வெப்பம் பரவிய தன் கைகளை எடுத்துத் தன் கன்னத்தில் வைத்தபடி அமர்ந்திருந்தவளைப் பாலாவும் கவனிக்கத் தவறவில்லை.

'உனக்கு நம்ம கல்யாண நாள் வர்ற வரைதான்டி டைம்... அதுக்கப்புறம்... உன்கிட்டல்லாம் மயிலே மயிலே இறகு போடற கதை எல்லாம் இல்ல... இறகைப் பிடுங்கிற கதைதான்...' என்று மனதினுள் நினைத்தபடி குளியலறைக்குள் நுழைந்தான் பாலா. ஆனால், நாளை வரப்போகும் பிறந்த நாளை மறந்து விட்டான்.

அன்று அவள் தன் கோபச் சூறாவளியில் அவனைச் சுழன்றடித்து... அதற்கடுத்த நாளில் இருந்து தென்றலாய்ச் சாமரம் வீசப் போவதை அவன் அறிவானோ?

சென்னையின் பிரபல புத்தகக் கடையில் வினோத் புத்தகங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருக்க... கீர்த்திகாவும் அந்தக் கடையினுள்தான் இருந்தாள். தன் சித்தியுடன் வந்திருந்தாள்.

அவள் எங்கும் தனியாக அனுப்பப்பட மாட்டாள். அதுவும் பிரதாப் விடுதலை ஆன பின்னர் சுத்தம். அப்படி யாரும் வர முடியாவிட்டாலும், டிரைவர் துணையுடன்தான் எங்கும் போக முடியும்.

புத்தகங்களைப் பார்வையிட்டுக் கொண்டே வந்தவள், எதிர்ப் பால்கனியில் நின்ற வினோத்தை எதிர்பாராத விதமாகப் பார்த்தவளின் உள்ளம் துள்ள, தன்னை அறியாமல் அவன் முன் நின்றாள் கீர்த்திகா.

அவள் வந்ததைக் கூட உணராமல் அவன் போனில் பேசிக் கொண்டிருந்தான்.

வேறு யாரோடு... கீர்த்தனாதான்!

"ஏய்... நான் மூணு கடை எறி இறங்கிட்டேன், நீ சொன்ன புக் கிடைக்கல... இதுதான் கடைசி. இங்கேயும் கிடைக்கவில்லை என்றால் என்ன பண்ண...?" என்று கேட்ட படியே திரும்பியவன், கீர்த்திகாவைப் பார்த்து விட்டான்.

"....."

"சரி, சரி. அங்கேயும் போய்ப் பார்க்கிறேன். உன்னோட அடம் இருக்கே... சரி, வை. கீர்த்திகா இங்கே வந்திருக்காங்க."

"....."

"தெரியல... இப்பத்தான் பார்க்கிறேன். நான் உனக்குக் கண்டிப்பா வாங்கிட்டு வர்றேன்," என்றபடி போனை வைத்தவன் கண்களில், கீர்த்திகாவின் நெற்றியில் இருந்த கருப்புப் பொட்டு கண்களில் பட... அதைக் கவனித்தவன், அதைப் பற்றி அவளிடம் உடனே கேட்கவில்லை.

மனதினுள் மட்டும், 'நாம் சொன்னதால வெச்சிருக் காளா... நான் சொன்ன வார்த்தைக்கு இவ்வளவு மதிப்பா!' என்ற எண்ணம் தோன்றியது.

"ஹாய்... என்ன இந்தப் பக்கம்...?" என அவன் வினவ,

'புக் ஸ்டாலுக்கு எதுக்கு வருவாங்க...?' என்று மன தினுள் சொன்னவள்,

"புக் வாங்கத்தான்... வீடு ஷிப்ட் பண்ணிட்டீங்களா?" என்று கேட்டாள்.

"ஹ்ம்ம்ம்... மாறிட்டோம். கீர்த்தி வீட்டுக்குப் பக்க மாகவே... பாலாதான் இவ்ளோ சீக்கிரம் அதை வாங்க ஹெல்ப் பண்ணினார்..." என்றான்.

இனி என்ன பேச...? இருவருக்குமே தெரியவில்லை. சற்று நேரம் அமைதியாகக் கழிய, கீர்த்திகாவுக்கு அந்த மௌனம் பிடிக்காமல், அதை உடைக்கும் வகையில் ஏதாவது பேசி ஆக வேண்டுமென்று,

"நீங்களும் புக்ஸ்லாம் படிப்பீங்களா? என்ன மாதிரி யான புக்ஸ் படிப்பீங்க?" என்று பேச்சினை வளர்க்க ஆரம்பித்தாள் கீர்த்திகா.

"....."

வினோத்தோடு பேசி வைத்த கீர்த்தனாவுக்கோ...

'கீர்த்திகாவா வந்திருக்காங்க... வினோத் அநேகமா இன்னைக்கு நம்மகிட்ட கண்டிப்பா அவளைப் பத்தி ஏதாவது சொல்வான்... பார்க்கலாம்... நாம நினைப்பது மாதிரிதான் போகுதான்னு... நல்லது நடந்தா சரி...' என்று நினைத்தபடி,

சந்தோஷமாகப் பாலாவின் அறையில் நுழைந்தாள், இந்த விஷயத்தைச் சொல்ல.

சொன்னாள்தான். 'அப்படியா?' என்று மட்டும் கேட்டு விட்டுப் பாலா ஒரு யோசனையுடனே இருந்தான்.

"என்ன பாலா... நான் எவ்ளோ பெரிய விஷயம் சொல்றேன்... அப்படியான்னு கேட்கிறீங்க..." சோகமான பாவனையோடு அவள் கேட்க,

"வேற என்ன என்னைப் பண்ணச் சொல்ற..." என்று சற்று எரிச்சலாகக் கேட்டான்.

அவனது விட்டேற்றியான குரலில் சட்டென்று நிமிர்ந்தாள் கீர்த்தி.

"ஏன் பாலா... ஆதி இருந்த இடத்தில வினோத்தை நினைக்க முடியலையா?" என்றவளின் கேள்வியில்...

"ஆபீஸ்னு கூடப் பார்க்க மாட்டேன். நான் என்ன நினைச்சு யோசிச்சுக்கிட்டு இருக்கேன்... நீ என்ன பேசுற? அவளுக்கு வினோத் மாதிரி ஒருத்தன் கிடைச்சா இந்த உலகத்தில் சந்தோஷப்படுற இரண்டாவது ஆள் நான்தான்."

"மொத ஆளு மதுவா பாலா...?" என்று அப்பாவி போல் வேண்டுமென்றே கேட்க,

முகம் மாற, "தெரியுதுல்ல... அதைக் கேட்க வேறு வேண்டுமா? உனக்கு வேற ஏதாவது வேணும்னா நேரடியாக் கேளு..." என்றவனின் பார்வை, அவள் இதழ்களில் நிலைக்க,

முறைத்தாள்.

"இனி நீ இந்த ஆபீஸ்ல வேலைக்கு வர்றதைப் பத்தி நான் வேறு மாதிரி முடிவு எடுக்க வேண்டும் போல..." என்றவனிடம்,

"ஏன்... நான் என்ன பண்ணினேன்?" என்று அவள் இம்முறை உண்மையாகவே தெரியாமல்தான் கேட்டாள்.

"நீ ஒண்ணும் பண்ண மாட்டேங்கிற... பண்ண விட மாட்டேங்கிற... அதுதான் பிரச்னை..." என்று அவளின் கணவனாக மாற முயன்றவன், இருக்கும் இடம் உணர்ந்து, தலையைக் குலுக்கித் தன்னைச் சரி செய்தபடி,

"என் செல்லம்ல... போங்க... வேலை நிறைய இருக்கு... நீ இப்படி நின்னு பேசி என்னைத் திசை திருப்பாதே!" என்று கெஞ்சலாகச் சொன்னவனிடம், அவன் வார்த்தைகளைக் கேட்காமல்,

"நீங்கதான் டைவர்ட் பண்றீங்க. நான் என்ன சொல்ல வந்தேன்... நீங்க என்ன பேசிக்கிட்டு இருக்கீங்க..." எனும்போதே அவனுக்குப் போன் வர, எடுத்து அட்டெண்ட் செய்தவன், அவளைப் போ எனச் சைகையாலே கூற...

கோபத்தில் கீர்த்தி கையில் வைத்திருந்த பேனாவை அவன் மேல் தூக்கி எறிய, அதை லாவகமாய்ப் பிடித்தபடி தன் பேச்சினைத் தொடர்ந்தவன், தன் கட்டை விரலை மட்டும் உயர்த்தி, இடமும் வலமுமாய் அவளைக் கேலி பண்ணுவது போல ஆட்ட...

வேறு வழி இன்றி...

'போடா... பெரிய முதலாளின்னு சீன் போடுறியா?' என்று மனதிற்குள் மட்டும் சொல்லியபடி...

வெளியேறினாள் கீர்த்தி.

பாலா என்ன நினைத்து யோசனை செய்தானோ, அது வினோத் – கீர்த்திகா சந்திப்பில் தப்பாமல் நடந்தது.

கீர்த்திகாவின் கேள்வியில் வினோத்...

"நீங்க வேற... நான் புக்ஸ்லாம் அவ்வளவா படிக்க மாட்டேன். ஒன்லி நெட்தான். எங்க வீட்ல வளர்த்து விட்டிருக்கோமே செல்லப் புள்ள... அவளுக்குத்தான். இன்னைக்கு மட்டும் கொண்டு போய்க் கொடுக்கல... ஃபைட் சீன்தான்."

"ஓ..." என்று முதலில் சொன்னவள்,

"ஏன்... பாலா வாங்கிக் கொடுக்க மாட்டாரா?" எனக் கேட்க,

'என்ன...?' என்பது போல் பார்க்க, அவன் விழிகள் அவள் விழிகளை உற்றுப் பார்த்தன.

"என் கிட்ட அவ கேட்டா... அதுதான் தேடிப் பார்க்கிறேன்..." என்று மட்டும் சொன்னான். அதுவும் ஒரு மாதிரியான குரலில்... வேறு ஏதும் பேசாமல்...

அவளுக்கோ பொறாமை. அவனுக்கோ, 'ஏன்... தான் வாங்கிக் கொடுக்கக் கூடாதா? திருமணம் முடிந்து வேறொரு வீட்டுக்குப் போனால், எல்லாம் முடிந்து விடுமா என்ன? கீர்த்தி எங்க வீட்டுப் பெண்...' என்று மனதிற்குள் பொரும,

அங்கு கனமான சூழ்நிலை நிலவ ஆரம்பித்தது.

சற்று நேரம் இருவரும் பேசாமலே அங்கிருந்த புத்தகங்களை மட்டும் பார்வை இட்டனர்.

வினோத்தான் வேறு வழி இல்லாமல் பேச ஆரம் பித்தான். தற்போதுள்ள சூழ்நிலையை மாற்ற, கிண்டலுடன்...

"நீங்க ஏன் ஒரு பாடிகார்ட் தனியா வெச்சுக்கக் கூடாது கீர்த்திகா...?" என்று நக்கல் தொனியில் கேட்க,

'என்ன...?' என்பது போல் கீர்த்திகா பார்க்க... சிரித்தவன்,

"இல்ல... எங்க போனாலும் யாராவது ஒருத்தர் கூட வருகிறார்களே... இந்தக் காலத்தில் இப்படியா?" என்று உண்மையாகவே கேட்டான்.

சற்று அசௌகரியமான பார்வை பார்த்தவள், "இல்ல... அது வந்து..." தயங்கியவள், சொல்ல முடியாமல் வேறு பக்கம் பார்த்தாள்.

"சரி, விடுங்க... சும்மா கிண்டல் பண்ணினேன். பாலா கிட்ட கேட்காம கீர்த்தி ஏன் என் கிட்ட கேட்டாள்னு ஏன் கேட்டீங்க...? நாம் சின்ன வயசுல... சின்ன வயசுல என்ன... அவ பிறந்ததுல இருந்தே என்னோட உறவு அவளோட இருக்கு... அதனால என் கிட்ட கேட்கிறா... உங்களைக் கூடத்தான் பாலா, கூடப் பிறக்காத தங்கை மாதிரித் தாங்கறார். அன்னைக்குக் கூட கவியும்தான் என் கூட

வந்தா... உங்களை மட்டும் பத்திரம்... பத்திரம்னு சொல்லி விட்டுட்டுப் போனார். ஆதி மேல அவ்வளவு நட்பு..." என உளமாரக் கூற,

கீர்த்திகாவிற்குப் பாலாவின் அக்கறை பெருமை தர... முகம் மலர்ந்தாள்.

"அது... ஆதிக்காக மட்டும் இல்ல... நான் மதுவோட ஃபிரெண்ட், அதனாலதான்..." என்று அவனைப் பார்த்த... அவனோடு பேசுகிற உணர்வின் தாக்கங்களில் வார்த்தை களை விட்டாள்.

"ஓ..." என்றவன், அதோடு விட்டு விட்டான். ஆனால், கீர்த்திகா ஆரம்பித்தாள்.

இருவருக்கும் இடையே கீர்த்தனா, பாலா வந்தனர். ஆனால், பேசியது கீர்த்திகா என்பதால், மதுவின் பேச்சு தானாக விழுந்தது.

"காலேஜ் டேஸ்ல இருந்த பாலாவா இது அப்படின்னு தோணுது. இப்போ எல்லாவற்றிலும் பொறுமை... அனை வரையும் அரவணைத்துச் செல்லும் பாங்கு... இது எல்லாம் அப்போ சுத்தமா பாலா கிட்ட இல்லை. அப்பா... என்ன ஒரு கோபம் வரும் தெரியுமா அவங்களுக்கு! இப்போ நினைக்கவே எனக்குப் பயம் வரும்," என்று சிலாகித்தவள், "இந்த ஐந்து வருடம்... பாலாவுக்கும் எனக்கும் பல பாடங் களைக் கற்றுக் கொடுத்து விட்டது " என்று கடந்த ஐந்து வருட வேதனையில் தன்னைக் கலந்தாள். பேச்சினை நிறுத்தினாள். அங்கிருந்த புத்தகங்களை வெறுமையுடன் நோக்கினாள்.

அவள் ஆதியின் மரணத்தைப் பற்றிப் பேசுகிறாள் என்று வினோத்திற்குப் புரிய, அதிலிருந்து அவளை மீட்க...

"நீங்களும் பாலா கூடத்தான் படிச்சீங்களா?"

"ஹ்ம்ம்... ஆனா அவங்க கூட இல்ல... பாலாவும் ஆதியும் எங்களோட சீனியர். நானும் மதுவும் இங்கதான் வீடெடுத்துத் தங்கிப் படித்தோம்." வார்த்தைகள் தன்னை மறந்த நிலையில் வந்து கொண்டிருந்தன.

அவனும் கேட்டுக் கொண்டே கீர்த்தி கேட்ட புத்தகத்தின் பெயரை அவளிடமும் சொல்லி இருவரும் தேட,

"மது யாரு... உன்னோட ஃபிரெண்டா? வார்த்தைக்கு வார்த்தை சொல்றீங்க!" என்று சாதாரணமாகக் கேட்க,

"இல்ல... அதுக்கும் மேல... என்னோட இன்னொரு தாய் மாதிரி..." என்று உணர்ச்சி வசப்பட்டாள் கீர்த்திகா.

இப்போதும்...

"ஓ..." என்று சொன்னவன், கூடுதலாக "கிரேட்..." என்றும் சொல்ல,

"பின்ன... பாலா மாதிரி கோபக்கார ஆளையே தன்னோட காதல்ல கரைய வெச்சவ அவ... கிரேட்டாதான் இருப்பா..." என்ற தன் தோழியின் பெருமைகளைப் பறைசாற்ற ஆரம்பிக்க,

வினோத், தன் காதில் விழுந்த வார்த்தைகளில், இதுவரை ஏனோதானோவென்று கேட்டுக் கொண்டிருந்த பாவனை மாறி... கீர்த்திகாவைப் பார்க்க,

அவளோ... எதைப் பற்றியும் யோசிக்காமல் பேசியபடி,

"வினோத்... இதோ இருக்கு கீர்த்தி கேட்ட புத்தகம்..." என்று அதைக் கொடுக்க,

அதை வாங்கக்கூட மறந்து நின்றவன், தீவிரமான பாவத்துடன்,

"மது யாருன்னு சொன்னீங்க... பாலாவோட லவ்வரா?" என்று தான் கேட்டதை நிச்சயப்படுத்தும் ரீதியில் கேட்க,

கீர்த்திகா... புரியாமல் அவனைப் பார்த்து,

"ஆமா... ஏன் கேக்க..." எனும்போதே மதுவைப் பற்றி அவனிடம் தேவையில்லாமல்... அதுவும் மது - பாலா காதலை வேறு உளறி விட்டோமே என்று தோன்ற,

இருந்தாலும்...

'கீர்த்திக்குத்தான் மதுவைப் பற்றித் தெரியுமே... சொன்னால் என்ன, ஒன்றும் ஆகாது...' என்று,

"கீர்த்திக்கும் மது பாலாவை விரும்பியது தெரியும். உங்க கிட்ட சொல்லாமல் இருந்திருக்கலாம்..." என்றாள், அவன் கேட்காத தகவலாய்.

அதிர்ச்சியாய் நின்றான் வினோத். ஆனாலும் அவனுக்கு, மது என்ன ஆனாள்? ஒரு வேளை பாலாவை விட்டு விட்டு வேறொருவனைத் திருமணம் செய்து கொண்டாளா? தெரிய வேண்டிய நிலையில் இருந்தான்.

"மதுவைப் பாலா ஏன் மேரேஜ் பண்ணவில்லை...?" சாதாரணமாகக் கேட்பது போலக் கேட்க...

கீர்த்திகா சோகமானாள்.

"அவ இப்போ எங்கே இருக்கான்னே தெரியலை. பாலா அவளுக்காக நாலு வருஷமாக் காத்திருந்துவிட்டு... கடைசியில அங்கிள் ஆபரேஷன் என்று வரும்போது... கீர்த்தியை அவருக்குப் பிடிச்சது போலிருக்கு... மேரேஜ் பண்ணிக்கிட்டார்..." என்று முடிக்கவில்லை...

வினோத் அந்த இடத்தை விட்டு நகர்ந்திருந்தான். அவனின் வேகமான நடையிலேயே... பின்னால் பார்க்கும் போதே அவனின் விரைவான பாங்கு அவளுக்கு அவன் கோபத்தைச் சொல்ல,

'இவன் ஏன் இப்படிப் போறான்? கீர்த்தி கூட இவ்வளவு கோபப்பட்டிருக்க மாட்டா... இவனுக்கு என்ன வந்தது... மது - பாலா காதலில்...' என்றபடி அவனையே பார்த்தபடி நின்றவள்,

'பாலாவிடமும் சொல்லி வைத்து விடுவோம்...' என்று போனை எடுத்துப் பாலாவிடம் சொல்ல...

பழைய பாலாவாக அவன் இருந்திருந்தால், கீர்த்திகாவிடம் கோபத்தைக் கொட்டியிருப்பான். 'இப்படி உளறியிருக்கிறாளே...' என்று, வந்த கோபத்தினை அடக்கியவன்,

"சரி. நான் பார்த்துக் கொள்கிறேன்..." என்று மட்டும் சொல்லிப் போனை வைத்தான்.

அவன் சொன்ன விதத்திலேயே கீர்த்திகாவிற்கு அவன் கோபம் புரிய, 'பாலா - மது காதலை வினோத்திடம் கூறி, தப்பு செய்து விட்டோமே...!' என்று மனம் அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

கீர்த்திகாவிடம் பேசி வைத்த பாலா... உடனே கீர்த்தனாவைத் தனது அறைக்கு அழைத்தான்.

ஏதோ அலுவலக வேலை தொடர்பாக இருக்கும் என்று நினைத்தே கீர்த்தி வந்தாள்.

"உட்கார்..."

அவனின் முகமே, அவன் கூப்பிட்டது அலுவல் வேலை இல்லை என்பதை உணர்த்த...

"என்ன பாலா... என்ன விஷயம்? ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க...?" என்று கேட்டவளுக்கு...

வினோத் - கீர்த்திகா சந்திப்பு ஞாபகம் வர, 'எதுவும் தப்பாக நடந்து விட்டதோ... பாலா முகமே சரியில்லையே... என்னாச்சோ...?' என்று அவனைப் பார்த்தபடியே இருக்க, அவனும் அவளையே யோசனையுடனே பார்த்துக் கொண்டிருக்க,

"இதுக்குத்தான் கூப்பிட்டீங்களா? எனக்கு வேலை இருக்கு... போகணும்..." என்று கடுப்படிக்க,

அவளின் கோபத்தைக் கண்டு கொள்ளாதவன்,

"கீர்த்தி - வினோத் பற்றி நீ என்னவெல்லாமோ சொன்ன... அதெல்லாம் நடக்காம அவங்க ரெண்டு பேரும் நம்மைப் பற்றிப் பேசியிருக்காங்க. கீர்த்தனா மதுவைப் பற்றி வினோத் கிட்ட சொல்லியிருப்பா போல... பையன் செம கோபத்தில கிளம்பிட்டானாம்..." என்று சொல்ல, கீர்த்தி மொத்தமாய்ப் பயம் சூழ அவனைப் பார்த்தாள்.

"அவன் என் கிட்ட கேட்டால் என்ன சொல்ல... அய்யோ! பயமா இருக்கே..." என்று குரல் நடுங்கக் கேட்டாள்.

"நடந்ததை எல்லாம் சொல்லணும்," என்றான். அது அவனுக்கும் சொல்லிக் கொள்வது போல இருந்தது.

என்ன என்பது போல் நிமிர்ந்தாள் கீர்த்தி.

"வேண்டாம் பாலா... அவன் ரொம்பக் கஷ்டப்படுவான். கோபத்தில உங்களைக் கூட என்ன செய்வான்னு தெரியல. மதுவைப் பத்தித்தானே தெரிஞ்சிருக்கு... சமாளிச்சுக்கலாம்..." என்று தேற்றியவாறே சொல்ல,

"தப்பு பண்ணினோம் இல்ல... ஃபேஸ் பண்ணித்தான் ஆகணும். அதிலும் நம் தவறினால் பாதிக்கப்பட்டவன்..." என்ற வார்த்தையில் அவனிடம் நிலைத்த அவளின் விழிகளைப் பார்த்தபடி.

"அவன் அடித்தாலும் வாங்கிக் கொள்வேன். இனியும் அவனிடம் மறைக்கக் கூடாது கீர்த்தி. இது அவனது தன்மானப் பிரச்னை. இன்னொரு பெண்ணைக் காதலித்த ஒருவனை ஏற்றுக் கொண்ட பெண், தன்னை ஏன் காதலிக்க வில்லை என்று அவனைக் கொல்லும். சொல்லிடலாம் கீர்த்தி..." என்றவன், கீர்த்தியின் மௌனமே சம்மதத்தைச் சொல்ல, பாலா வினோத்திற்குப் போன் செய்தான், தன் அலுவலகம் வரச் சொல்லி.

வினோத் மனம் அதே போல்தான் தவித்தது. 'இன்னொருத்தியைக் காதலித்தவனை எப்படி... அதிலும் காணாமல் போன ஒருத்தியை இன்னும் தேடிக் கொண்

டிருப்பவனை... இதற்கு அத்தை மாமா எப்படி ஒத்துக் கொண்டனர்? அவனை விட எதில் நான் குறைந்தேன்? அப்படி என்ன காதல் அவன் மேல்? ராகவ் – மைதிலி இறந்த வீட்டில்தான் அவன் பார்த்தானே, அவளின் காதலை! பாலாவின் மேல் பொறாமை ஆக வந்தது. கீர்த்தி மேல் கோபம் கோபமாக வந்தது. ஒரு பெண்ணின் காதலைக் கூட... அதுவும் கூடவே வளர்ந்த பெண்ணின் காதலைக் கூட அடைய முடியாத தன் மேலேயே இப்போது கோபம் வந்து தொலைக்க, என்ன செய்கிறோம் என்று தெரியாமல் காரில் அதிக வேகத்தில் உலவினான்.

பாலாவின் போன் வர, இரண்டு முறை கட் செய்தவன், 'அவனிடம் கோபப்பட்டு என்ன பிரயோஜனம்' என்று போனை எடுத்துப் பேசியவன், பின் அவன் அழைப்பை மறுக்க முடியாமல், பாலா அலுவலகம் நோக்கிச் சென்றான்.

"பாலா... அவன்கிட்ட உண்மையைச் சொல்லணுமா?" என்று பத்தாவது முறையாகக் கேட்டவளிடம்,

அருகே வந்து அமர்ந்தான்.

"ஏன் இப்படிப் பயப்படுற? என்ன செய்வான்? என்னைத் திட்டுவானா... இல்லை, அறைவானா? நாலு அடி கூடக் கொடுப்பானா? வாங்கிக் கிட்டாப் போச்சு! உனக்காக எல்லாம் இல்ல..." என்று சொன்னவன், அவளே தன் வாழ்க்கை என்று நினைப்பதை, அவளுக்குத் தன்னைப் புரிய வைக்கும் விதமாக,

"எனக்காக... என் வாழ்க்கைக்காக..." என்று சொல்லி நிறுத்த,

அது எல்லாம் அவள் மனதில் பதியும் நிலையில் இல்லை... தலையில் ஏறும் நிலையிலும் இல்லை. அவள் வேறொரு நினைவில் இருந்தாள்.

"அப்படிப் பண்ணினால் கூடப் பரவாயில்லை..." என்று சொல்லியவளை,

"அடிப்பாவி..." என்க,

அவனின் கிண்டலை எல்லாம் அவள் கவனிக்க வில்லை.

"அவன் என்னை உங்களை விட்டுக் கூட்டிட்டுப் போயிட்டா... நாடகம்தான் போட்டேன்னு..." என்று கண்கள் அலை பாய... மனதில் தவிப்பாக அவனையே பார்த்தபடி கேட்ட மனைவியை மனதில் பாரத்தோடு பார்த்துக் கொண் டிருந்தான் பாலா.

தன்னை மனதில் வைத்துக் கொண்டு, அதை உணர்ந்தும் கூட வாழ்க்கையை அவனோடு வாழ முடியாமல் தவிக்கும் கீர்த்தியைப் பார்த்து... அவள் நிம்மதிக்காவது தான் அவள் வாழ்க்கையில் குறுக்கிடாமல் இருந்திருக்கலாமோ என்று தோன்றியது.

திடீரென்று அவளே ஏதோ ஒரு வழி இருப்பது போல் உணர்ந்தவள், விழிகளில் ஒளியுடன் உற்சாகத்துடன் துள்ளிய படி,

"பாலா... ஒரு ஐடியா... அப்பா கிட்ட நீங்க கொடுத்த பணம்... அதை மறந்துட்டேன் நான்... அதை அடைக்கிற வரை நான் வர மாட்டேன்னு சொல்லலாமில்ல..." என்று முகம் மலர அவனைப் பார்த்தாள்.

அவள் வாழ்க்கையில் பல திட்டங்களைத் தீட்டிய அவனுக்கே திட்டம் சொன்னாள்... தான் அவனை விட்டுப் போகாமல் இருக்க.

இன்னும் ஏதாவது வழிகள் இருக்குமா என்று யோசித்தவளை... எங்கே அவனை விட்டுப் போய் விடு வோமோ என்று பரிதவித்த தன் மனைவியைத் தன் அருகே இழுத்து அமர்த்தியவன்,

அவளைத் தன்னோடு இறுக அணைத்துச் செல்ல மாய்த் திட்டினான்.

"ஏய் லூசு... அவன் உன்னைக் கூப்பிட்டா நான் கூட்டிட்டுப் போடான்னு விட்டுடுவேனா! நீ என்னை விட்டுப் போறேன்னு சொன்னாலே நான் உன்னை விட மாட்டேன்..." என்று அவளை இன்னும் இறுக்கமாக அணைத்தான்.

"நீ என் உயிர்டி... என்னை விட்டு என் உயிர் என்னைக்கு..." என்றபோதே,

அவன் வாயைத் தன் கைகளால் அடைத்தாள்.

சிறிது நேரம் ஒருவரை ஒருவர் பார்த்தபடி மோன நிலையிலேயே இருக்க, பாலா முதலில் நிதானத்திற்கு வந்து,

"ஆனாலும் உன் திட்டம் இருக்கே... மத்த எல்லா விஷயத்துலேயும் ஓவர் ஸ்மார்ட்டா இருக்க... என் பொண்டாட்டியா நீ தத்திதான்!"

என்று சொன்னவுடன், முறைத்த மனைவியைப் பார்த்து நகைத்தவன்,

"உடனே முறைக்காதே! ஏன்டி... நீ பணத்தைக் காரணமாக் காட்டி அவன் கிட்டச் சொன்னா... அவன் தலையை அடமானம் வைத்தாவது என்னிடம் கொடுத்து, உன்னைக் கூட்டிட்டுப் போயிடுவான். பாசக்காரன் வேற அவன்... ஐடியா கொடுக்கிறாளாம்..." என்றவனிடம் தான் சொன்னதை உணர்ந்து வெட்கப்பட்டு, அவனுள் இன்னும் ஆழமாக அடங்கினாள்.

மெல்ல மெல்ல... கீர்த்தனா அவனுக்குள் கலந்து கொண்டிருந்தாள். ஆனால், என்று முழுமையாகக் கலக்க...?

37

பாலா அறையினுள் நுழைந்த வினோத்தைப் பார்த்த கீர்த்திக்குப் பக்கென்று இருந்தது. எப்போதும் உற்சாகம் தவழ்ந்த முகமாக இருக்கும் அவன், இன்று சுத்தமாய்த் தனது உற்சாகமெல்லாம் வடிந்து, தளர்ந்தபடி உள்ளே நுழைந்

தான். உள்ளே நுழைந்தவன், உட்கார்ந்திருந்த கீர்த்தியைப் பார்த்தான்.

பார்த்தான்... அவ்வளவுதான்! அதற்கு மேல் ஒன்றும் இல்லை.

தன்னைப் பார்த்தாலே உற்சாக வார்த்தைகளுடன் சந்திக்கும் வினோத்... இன்று அவளிடம் ஒரு சொல் கூடச் சொல்லாமல் அவளைத் தவிக்க விட்டான்.

"வினோத்..."

"நான் சொல்றதைக் கேளு..." என அவனின் பாரா முகத்தைத் தாங்க முடியாமல், தளுதளுத்த அவளிடம் கூடத் திரும்பாமல், பாலாவிடம் திரும்பி,

"பாலா... எதுக்கு வரச் சொன்ன...? சீக்கிரம் சொல்லு..." என்று விட்டேற்றியாக அவனிடம் பேச,

"வினோத்... என் கூடப் பேச மாட்டியா?" என்று கீர்த்தி, அவன் அவளைத் தவிர்த்ததைத் தாங்க முடியாமல் பேசப் போக...

"பாலா... நீ கூப்பிட்டாய் என்றுதான் வந்தேன். இவளை என் கிட்டே பேசச் சொல்லாதே! ஏற்கெனவே மனசு நொந்து வந்திருக்கிறேன்..." என்று மீண்டும் பாலாவிடமே பேசினான் அவன்.

"வினோத்... பொறுமையா இரு. நான் எல்லாம் சொல்றேன். அது மட்டும் இல்ல... நீ நினைக்கிற மாதிரி கீர்த்தி மேல எந்தத் தப்பும் இல்ல... எல்லா..." என்று கூறும் போதே,

"உனக்கு எப்படித் தப்பாத் தெரியும் பாலா... காத்திருந்து ஏமாந்து போனவன் நான்தான் தெரியுமா? அப்போ கூட வலிக்கல... ஆனா இன்னொருத்தியை நேசிச்ச உன்னோட மனசு புரிஞ்ச அளவுக்கு ஏன் என்னோட மனசு புரியலை... அவளுக்குத் தெரியாதா... எனக்கு அவளைப்

பிடிக்கும் என்று!" தன் மனதில் உள்ளவற்றை உண்மையாகச் சொல்லிக் கேட்டான்.

அவன் நிலைமை புரியமலிருக்க, அவள் என்ன ஒன்றும் தெரியாதவளா! ஆனால், அழ மட்டுமே முடிந்தது.

குமுறலில் இருந்தவன் கொட்டிக் கொண்டிருந்தான்.

இத்தனைக்கும் காரணகர்த்தாவாக இருந்தவனோ... அவன் சொல்வதைக் கேட்பதை விட... இதன் பிறகு தான் சொல்லப் போகும் உண்மையினைச் சொன்னால் என்ன ஆகுமோ என்று அவனைச் சமாதானப்படுத்தும் வகையில் தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தான்.

"சரி... திருமணம் செய்யப் பேசி வைத்திருக்கும் என்னையே தள்ளி நிறுத்தியவள், தாய்-தந்தை மனதில் இருப்பவனைத்தான் தன் மனதில் அனுமதிப்பேன்... அதுவும் அவன் மனைவியாகும் போதுதான்... இப்படியெல்லாம் பெரிய இவளாட்டம் பாச வார்த்தை பேசி என்னை வாயைத் திறக்க விடாம என் கழுத்தை அறுத்துட்டா... ஆனா உன் காதல் அவளைச் சாய்ச்சிடுச்சாம்... சொன்னா என் கிட்ட... ஆனா இப்போதான் தெரியுது... நீ எவ மேலேயோ வெச்ச காதல்தான் இவள் உன் கிட்ட விழ வெச்சதா?"

என்று நக்கலில் வேறு வார்த்தைகள் விழ...

பாலாதான் ஆரம்பித்தான்.

"வினோத்... ப்ளீஸ்... கீர்த்தியைத் திட்டாதே!" என மீண்டும் இடையே சொல்ல,

"பாலா... இப்போதும் எனக்கு வருத்தம் இல்ல... அவ நல்லா இருந்தா எனக்கு சந்தோஷம்தான். ஒரு வார்த்தை என் கிட்ட உன்னைப் பத்திச் சொல்லியிருக்கலாம். அன்னைக்கும் வலி இருந்தது... இன்னைக்கு கீர்த்திகா சொன்னவுடன் இன்னும் அதிகமாகி விட்டது. நீ ஒண்ணும் தப்பா எடுத்துக்காதே... மனசோட ஆழத்துல இருந்தது

இன்னிக்கு வெளியில வந்துருச்சு. இப்போதும் எப்போதும் எனக்கு அவ மேல இருக்கிற பாசம் குறையாது. அது அவளுக்குத் தெரிஞ்சா சரி."

அவனின் வார்த்தைகளில் கதறினாள் கீர்த்தி.

"வினோத்... என்னை மன்னிச்சுக்கோ... சத்தியமா நீ இவ்ளோ மனசு வேதனைப் படுவேன்னு எனக்குத் தெரியாது. என்னை மாதிரியேதான் நீயும் இருப்பேன்னு தப்புக் கணக்குப் போட்டுட்டேன். நான் எப்போதுமே உன் செல்லக் குறத்திதான். என் கிட்டப் பேசாம இருக்காதே... என்னால தாங்க முடியாது..." கீர்த்தி இடையே பேச,

"தெரிஞ்சிருந்தா மட்டும்... சரி, விடு..." அவளைப் பார்க்காமலே பேச,

"தெரிஞ்சிருந்தா கூட அவ என்னைத்தான் மேரேஜ் பண்ணியிருப்பா!" என்றான் பாலா. அவன் குரலில்... வலியுடன்... அவர்களின் திருமணம் நடந்த சம்பவம் பற்றி அவன் கூறுவதற்கான திடமும் வந்திருந்தது.

வலிக்குக் காரணம்... கீர்த்தியை அன்று... தன்னை நம்பித் தன் சூழ்நிலையைச் சொல்லி... தன்னால் அவள் இக்கட்டில் நின்ற அவலம் நெஞ்சில் தோன்றியது. அந்த முடிவைச் சொல்லும் கடைசி நேரத்தில் கூட... அவள் கடனாகக் கேட்டுப் பார்த்தது நினைவுக்கு வர... அவன் மேலேயே அவனுக்குக் கோபம் வந்தது. அப்போது அவனுக்கு மது... மது... மது மட்டும்தானே நினைவில் இருந்தாள். சுயநலக்காரன்... என்று தன்னையே திட்டிக் கொண்டான்.

பாலாவின் வார்த்தையைக் கேட்ட வினோத்தோ, வேறு விதமாக நினைத்தான்.

"அதுதான் அன்னைக்குப் பார்த்தேனே... அவ உன் மேல வெச்சிருந்த காதல... எங்க எல்லாரையும் விட நீ அவளுக்கு எவ்வளவு முக்கியம் என்று... பிறகு நீ சொல்ல மாட்ட..." கூடாக அவனும் வார்த்தைகளை விட்டான்.

'அய்யோ... இவன், அவ அன்னைக்குச் சொன்ன வார்த்தைகளை எல்லாம் சொன்னால் அவ்வளவுதான். இப்போதான் ஏதோ பக்கத்துல வந்திருக்கா... மறுபடியும் ஏறிக்கிடுவாளே! சாண் ஏறினால் முழம் சறுக்குகிற மாதிரியே நடக்குதே!' நொந்தான் பாலா. அதற்கு மேலும் அவனைப் பேச விட்டால் நன்றாக இருக்காது என்பதை உணர்ந்த பாலா, பதறியபடி...

"இல்ல வினோத்... நான் சொல்ல வந்தது என்னன்னா... என் மேல அவளுக்கு இருந்த காதல்னால இல்ல... அன்னைக்கும் அவ பெற்றோர் மேல இருந்த பாசத்தினாலதான் என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சா."

"என்ன பாலா சொல்ற? எங்க அத்தை மாமா உன்னைக் கல்யாணம் பண்ணச் சொல்லி இவளைக் கட்டாயப்படுத்தினாங்களா... என்ன உளர்ற...?" என்று தப்பாக நினைத்து அதை வேறு கேட்க...

"ப்ளீஸ் வினோத்... என்னைச் சொல்ல விடு... அதுக்கப்புறம் நீ எதுவா இருந்தாலும் பேசு..." என்றவன், சொல்ல ஆரம்பிக்க, கீர்த்தி... அழுகையுடனும் பயத்துடனும் இருவரையும் பார்க்கப் பிடிக்காமல், தலை குனிந்தபடி அமர்ந்திருந்தாள்.

பாலா சொல்லச் சொல்ல, வினோத் அதிர்ந்தான். அடி வரை கீர்த்தியைப் பார்க்க... அவன் பார்வையை உணர்ந்த கீர்த்திக்கு அழுகையுடன் விசும்பலும் சேர...

பாலா, அவளின் பெற்றோர் இறந்தவரை சொன்னான். இப்போதும் மறைத்தான்... கடைசியாக அவர்கள் இருவரும் அவனை வந்து பார்த்ததையும், அதற்கான விஷயத்தையும்...

வினோத்தின் கண்கள் கோபத்தில் சிவந்திருந்தன. அவனால் பாலா சொல்லச் சொல்லக் கேட்க முடியவில்லை. தங்கள் வீட்டுப் பெண்ணை... அதுவும் கஷ்டம் என்றால்

என்ன என்றே அறியாமல்... அன்பும் நேசமும் மட்டுமே தெரியுமாறு தாங்கித் தாங்கி வளர்த்த தங்கள் வீட்டு இளவரசிக்கு இந்த நிலைமையா?

வாழ்க்கையையே அடமானம் வைக்கும் அளவுக்கு... அவ்வளவு பெரிய ஆளாயிட்டாளா இவ... கீர்த்தனா செய்த காரியத்தை நினைத்து, உச்சகட்ட ஆவேசத்திற்கு ஆளானவன்...

"நிறுத்து பாலா..." வார்த்தைகளில் தீப்பொறி பறக்க,

"இதற்கு மேலும் நீ எதுவும் சொல்ல வேண்டாம்," என்றவன், கீர்த்தியின் புறம் திரும்பினான்.

"ஏய்... நிமிர்ந்து என்னைப் பாரு. இவன் இப்ப... இங்கே சொன்னதெல்லாம் உண்மையா...?" என்று நிறுத்தி, நிதானமாக அழுத்திக் கேட்டான். வார்த்தைகளில் இழுத்துப் பிடித்திருந்த கோபம் உக்கிரனாய்க் காட்டியது.

நிமிர்ந்தவள், அவன் பார்வையின் உக்கிரம் தாங்காமல், மீண்டும் தலை குனிந்தாள்.

"கேட்டுட்டு இருக்கேன்ல... சொல்லு. எனக்குப் பதிலை! இவன் சொல்றானே... கேவலம் பணத்துக்காக இவனைக் கல்யாணம் பண்ணினாய் என்று... நீ சொல்லு. நாங்க அப்படி வளர்க்கலை. சொல்லு. அப்படில்லாம் இல்லேன்னு சொல்லு..." என்று வெறி பிடித்தவன் போல் கத்தி அவளை உலுக்கினான்.

தலையை மட்டும் ஆட்டினாள். 'ஆம்' என்று...

அடுத்த நொடி... ஆவேசத்துடன் பளாரென்ற அறை அவள் கன்னத்தில் விழுந்தது.

பாலா அதிர்ந்து விட்டான். தன் மேல் கோபப்படுவான் என்று எதிர்பார்க்க... கீர்த்திக்கு அவன் விட்ட அறையில் கலங்கியவன்... சட்டென்று கீர்த்தியைப் பிடித்துத் தன் பக்கம் இழுக்க...

அவளோ அசையாமல்... அந்த இடத்தை விட்டு நகராமல்... வினோத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கண்களில் மட்டும் கண்ணீர் வழிய... வினோத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் சிலையாக.

"வினோத்... திஸ் இஸ் டூ மச்... என் முன்னாடியே அவளை அடிக்கிற... என்னதான் உனக்கு அவ மேல உரிமை இருந்தாலும்..." - பாலாவும் ஆத்திரமானான்.

"ஓ... சார்க்குக் கோபம் வேற வருதோ... இங்க அடிச்சா அங்க வலிக்குதா? இன்னைக்கு உனக்கு வலிக்குதா? எங்க வீட்டுப் பெண்ணோட வாழ்க்கையில விளையாடியிருக்கியே... எங்களுக்கு எப்படி வலிக்கும்! எத்தனை வருசம்டா உனக்குத் தெரியும் அவளை? நாங்க எப்படி வளர்த்தோம்னு தெரியுமா... பாவி. எப்படிடா மனசு வந்துச்சு. எவளோ ஒருத்திக் காக... அவ கருமம் பிடித்த காதலுக்காக... உன்னை எல்லாம் சொல்லக் கூடாதுப்பா... இவளைச் சொல்லணும்..." என்று மறுபடியும் கீர்த்தி மேல் பாய்ந்தான்.

"கருமம் பிடித்த காதலா..." என்று மனம் திடுக்கிட்டான் பாலா. உள்ளங்கையை மடக்கித் தன் ஆற்றாமையை... கோபத்தினை அடக்கினான் பாலா. கீர்த்திக்காக.... அவள் ஒருத்திக்காக மட்டுமே... மதுவின் காதலுக்குக் கிடைத்த அவப்பெயரைத் தாங்கிக் கொண்டான் பாலா.

"நீ எதுக்கு அழற... அதான... எங்க எல்லாரையும் அழ வச்சுட்டேல்ல... மாமாவும் அத்தையும்... இப்படிப் போய்ச் சேர்ந்துட்டாங்களேனு... உன்னை விட்டுட்டுப் போயிட்டாங் களேனு... அவங்களோட சாவு இப்படி ஆகிடுச்சேனு... நான் மருகாத நாள் இல்லை. இன்னைக்குச் சொல்றேன்டி. நல்ல வேளை போய்ச் சேர்ந்தாங்க. அவங்க மட்டும் உயிரோட இருந்திருந்தா... பாவி! உன்னைப் பார்த்தே... அணு அணுவா... செத்துப் போயிருப்பாங்க.

"எந்த தைரியத்தில் இந்தக் காரியம் பண்ணுன... இவன் உன்னைக் கல்யாணம் பண்றேன்னு சொன் னானே... அதுக்குப் பதிலா... வேறு ஏதாவது..." அதற்கு மேல் அவளிடம் பேசப் பிடிக்காமல் நிற்க...

அவன் தாய் தந்தையின் இறப்பைப் பற்றிக் கூற... இன்னும் அதிகமாக அழுகை வர... பாலாவிற்குத் தாங்க முடியவில்லை. தன்னை வினோத் திட்டி இருந்தால் கூட அவனுக்கு ஒன்றுமில்லை. கீர்த்தியை அடித்ததை.. அவளைத் திட்டுவதை அவனால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.

"வினோத்... இதோட நிறுத்திக்க. இதுக்கு மேல அவளைப் பற்றி ஒரு வார்த்தை சொன்ன... நான் மனுசனா இருக்க மாட்டேன்."

"என்னடா பண்ணுவ...?" வார்த்தைகள் தடித்தன... இருவருக்கும்.

"அவ மேல உனக்கு இருக்கிற பாசம்... உனக்கு அவளைப் பேசி இருந்ததால் மட்டும்தான் உன்கிட்ட உண்மையைச் சொல்லணும்னு நினைத்தேன். பொறுமை யாவும் பேசிட்டு இருக்கேன். அவ்வளவுதான். நாங்களும் சொல்லிட்டோம். இனி நாங்க எங்க வாழ்க்கையைப் பார்த்துக்கறோம். நீயும் உன் வாழ்க்கையைப் பார்த்துக்கோ. இப்போ நீ கிளம்பலாம்..." என்றவனிடம்,

"என்ன கிளம்பலாமா! எதுக்கு? அவளைக் கேக்குற துக்கு ஆள் இல்லாம நீ அவளைத் தெருவுல இழுத்து விடுவ தற்கா... அவ யாரு மதுவா! அவ வர்ற வரைக்கும்... உனக்கும்... ஊருக்குக் காட்டவும்... சுகத்துக்கும் பொண்டாட்டி வேணும் இல்ல. அவ வரலேனா... இவளையே கன்டினியூ பண்ணலாம். வந்துட்டா... இவளைக் கழட்டி விடலாம்னு பிளானா! அதுக்குக் கேக்குறதுக்கு ஆள் இருக்கக் கூடாதுனு பார்க்கிறியா?"

அவன் ஒவ்வொரு வார்த்தையிலும் கோபத்தின் சிகரத்தில் ஏறிக் கொண்டிருந்தான் பாலா.

ஆக மொத்தம் பாலாவின் பொறுமை யெல்லாம் பறந்து விட்டது.

"டேய்... என்ன ஓவராப் பேசிட்டே போற... தப்பு செஞ்சிட்டோம்னு... நீ கேக்கறதுக்கு... சொல்றதுக்கு எல்லாம் பொறுமையா... அமைதியா இருந்தா... ஓவராப் பேசிட்டுப் போற. என்னடா பண்ணுவ? நீ சொல்லு..." - இவனும் எகிற ஆரம்பித்தான்.

"நீ பேசுவடா... அவதான் உன்கிட்ட மயங்கிக் கிடக்கிறாளே... அதை அவ வாயால வேற சொன்னாளே... உன் காதல்தான் அவ அப்பா, அம்மா பாசத்தை விடப் பெருசா போச்சுனு. அதுதான் அவளை விட்டுட்டுப் போயிட்டாங்கனு.... அன்னைக்கு உன் மேல விழுந்து அழுதாளே... பிறகு ஏன் சொல்ல மாட்ட..." என்று ஏழரையை இழுத்து விட்டான் வினோத்.

கீர்த்தி சட்டென நிமிர்ந்தாள். "என்ன... நான் சொன்னேனா... அன்று கதறி அழுதபோது சொன்னேனா... அதன் பிறகுதான் பாலா... ச்சே... தான்தான்... இன்று அவன் தன்னோடு வாழ நினைக்கும் காரணமா?" என்று குமுற...

பாலா மொத்தமும் கலங்கிப் போனான்.

"வந்த வேலை முடிஞ்சுடுச்சு இல்ல. என்னைப் பத்தியெல்லாம் தெரிஞ்சுடுச்சு இல்ல. நீ கிளம்பு!" என்று மீண்டும் அவனை மிரட்ட...

இப்போது வார்த்தையில் அனல் பறக்கவில்லை. தவிப்புதான் தெரிந்தது. கீர்த்தி என்ன சொல்வாளோ... என்ன நினைப்பாளோ என்று பதறியது மனம்.

"ஏய்... இவனைப் போயா நம்புற நீ... என்னைக்காவது நீ இவனை நினைச்சு கண்ணைக் கசக்கிட்டுதான் வந்து நிக்கப் போற என்கிட்ட... இவன் ஒரு நல்ல பாம்பு... சுயநலப் பிசாசு. இவனைப் போய்... எப்படி கீர்த்தி..." என்று கீர்த்தியை எச்சரித்தவன்... அவள் இருந்த நிலை பொறுக்காமல்,

"வந்துடும்மா... என் கூட. இவன் எக்கேடோ கெட்டுப் போறான். நான் கொடுக்கிறேன் அந்தப் பணத்தை. இவன் மூஞ்சியில தூக்கி எறியறேன். வந்துடுடா. உன்னோட காதலுக்கு எல்லாம் இவன் அருகதை இல்லாதவன். நாளைக்கே அந்த மது வந்தா... உன்னை நடுத்தெருவில தான் நிக்க வைப்பான். பணக்காரத் திமிரு. என்ன வேணும்னாலும் செய்வான்..." என்று அவளிடமே கெஞ்ச...

வெறித்த பார்வையில்... "நீ போ. உன் வாழ்க்கையைப் பார்த்துக்கோ. அப்படி ஒரு நிலைமை வந்தாக் கூட எனக்குக் கவலை இல்லை. ஏன்னா... எனக்கு யாரு இருக்கா? என்னைப் பத்திக் கவலைப்பட... கேட்க ஆளில்லாத அனாதைதானே நான்... கீர்த்தின்னு ஒருத்தி இருந்தா... ஆனா, உன்னோட அத்தை மாமா இறந்தப்பவே அவளும் அவங்களோட செத்துப் போயிட்டானு நினைச்சுக்கோ..." என்று முடித்தாள்.

அவள் என்ன நினைக்கிறாள் என்றே தெரியவில்லை.

'தான் பேசிய வார்த்தைகளாலேயே பாலா இவளைக் காதலித்தானா...' அவனாக என்னை நேசிக்க வில்லையா! என்னைப் பரிதாபப்பட்டுக் கூட அவன் விரும்பவில்லையா? நான்தான் அவனிடம் வாயை விட்டு விட்டேனா... என் காதலைச் சொல்லி அவனை என்னோடு வலுக்கட்டாயமாக இழுத்திருக்கிறேனா...' கண்கள் பாலாவை நோக்க...

மனைவியின் நிலை புரிந்து... தவித்துப் போனான்.

வினோத் வெளியேறி விட்டான். கீர்த்தி 'அனாதை' என்று சொன்னது மனதினை அரித்தது. அவன் வெளியேறும் போதும்.

அவனின் தளர்வான நடையில் கவி ஏதோ நடந்திருக்கிறது என்று அவனிடம் பேசக் கீழிறங்கி வந்தாள்.

அவன் ஒவ்வொரு வார்த்தையிலும் கோபத்தின் சிகரத்தில் ஏறிக் கொண்டிருந்தான் பாலா.

ஆக மொத்தம் பாலாவின் பொறுமை யெல்லாம் பறந்து விட்டது.

"டேய்... என்ன ஓவராப் பேசிட்டே போற... தப்பு செஞ்சிட்டோம்னு... நீ கேக்கறதுக்கு... சொல்றதுக்கு எல்லாம் பொறுமையா... அமைதியா இருந்தா... ஓவராப் பேசிட்டுப் போற. என்னடா பண்ணுவ? நீ சொல்லு..." - இவனும் எகிற ஆரம்பித்தான்.

"நீ பேசுவடா... அவதான் உன்கிட்ட மயங்கிக் கிடக்கிறாளே... அதை அவ வாயால வேற சொன்னாளே... உன் காதல்தான் அவ அப்பா, அம்மா பாசத்தை விடப் பெருசா போச்சுனு. அதுதான் அவளை விட்டுட்டுப் போயிட்டாங்கனு.... அன்னைக்கு உன் மேல விழுந்து அழுதாளே... பிறகு ஏன் சொல்ல மாட்ட..." என்று ஏழரையை இழுத்து விட்டான் வினோத்.

கீர்த்தி சட்டென நிமிர்ந்தாள். "என்ன... நான் சொன்னேனா... அன்று கதறி அழுதபோது சொன்னேனா... அதன் பிறகுதான் பாலா... ச்சே... தான்தான்... இன்று அவன் தன்னோடு வாழ நினைக்கும் காரணமா?" என்று குமுற...

பாலா மொத்தமும் கலங்கிப் போனான்.

"வந்த வேலை முடிஞ்சுடுச்சு இல்ல. என்னைப் பத்தியெல்லாம் தெரிஞ்சுடுச்சு இல்ல. நீ கிளம்பு!" என்று மீண்டும் அவனை மிரட்ட...

இப்போது வார்த்தையில் அனல் பறக்கவில்லை. தவிப்புதான் தெரிந்தது. கீர்த்தி என்ன சொல்வாளோ... என்ன நினைப்பாளோ என்று பதறியது மனம்.

"ஏய்... இவனைப் போயா நம்புற நீ... என்னைக்காவது நீ இவனை நினைச்சு கண்ணைக் கசக்கிட்டுதான் வந்து நிக்கப் போற என்கிட்ட... இவன் ஒரு நல்ல பாம்பு... சுயநலப்

பிசாசு. இவனைப் போய்... எப்படி கீர்த்தி..." என்று கீர்த்தியை எச்சரித்தவன்... அவள் இருந்த நிலை பொறுக்காமல்,

"வந்துடும்மா... என் கூட. இவன் எக்கேடோ கெட்டுப் போறான். நான் கொடுக்கிறேன் அந்தப் பணத்தை. இவன் மூஞ்சியில தூக்கி எறியறேன். வந்துடுடா. உன்னோட காதலுக்கு எல்லாம் இவன் அருகதை இல்லாதவன். நாளைக்கே அந்த மது வந்தா... உன்னை நடுத்தெருவில தான் நிக்க வைப்பான். பணக்காரத் திமிரு. என்ன வேணும் னாலும் செய்வான்..." என்று அவளிடமே கெஞ்ச...

வெறித்த பார்வையில்... "நீ போ. உன் வாழ்க்கையைப் பார்த்துக்கோ. அப்படி ஒரு நிலைமை வந்தாக் கூட எனக்குக் கவலை இல்லை. ஏன்னா... எனக்கு யாரு இருக்கா? என்னைப் பத்திக் கவலைப்பட... கேட்க ஆளில்லாத அனாதைதானே நான்... கீர்த்தின்னு ஒருத்தி இருந்தா... ஆனா, உன்னோட அத்தை மாமா இறந்தப்பவே அவளும் அவங்களோட செத்துப் போயிட்டானு நினைச்சுக்கோ..." என்று முடித்தாள்.

அவள் என்ன நினைக்கிறாள் என்றே தெரியவில்லை.

'தான் பேசிய வார்த்தைகளாலேயே பாலா இவளைக் காதலித்தானா...ஃ அவனாக என்னை நேசிக்க வில்லையா! என்னைப் பரிதாபப்பட்டுக் கூட அவன் விரும்பவில்லையா? நான்தான் அவனிடம் வாயை விட்டு விட்டேனா... என் காதலைச் சொல்லி அவனை என்னோடு வலுக்கட்டாயமாக இழுத்திருக்கிறேனா...' கண்கள் பாலாவை நோக்க...

மனைவியின் நிலை புரிந்து... தவித்துப் போனான்.

வினோத் வெளியேறி விட்டான். கீர்த்தி 'அனாதை' என்று சொன்னது மனதினை அரித்தது. அவன் வெளி யேறும் போதும்.

அவனின் தளர்வான நடையில் கவி ஏதோ நடந் திருக்கிறது என்று அவனிடம் பேசக் கீழிறங்கி வந்தாள்.

வந்தவளிடம்... கலங்கினான் வினோத்.

"கவி... அவ... அவ விசயம் எல்லாம் தெரியுமா உனக்கு? அந்த ராஸ்கல்... அவளை என்ன பண்ணி வச்சுருக்கானு தெரியுமா...? எங்க கொண்டு வந்து நிறுத்தி யிருக்கான்... சின்னப் பொண்ணு அவ. சிதைச்சுட்டான் அவ வாழ்க்கையவே... இவ இப்படி நிக்கிறதைப் பார்க்கத்தான்... நாங்க தாங்கியும் ஏங்கியும் வளர்த்தோமா... முடியலை... கீர்த்தி அனாதைன்னு என்கிட்டயே சொல்றா. அவ கண்ணைக் கசக்குனாலே எங்க யாராலயும் தாங்க முடியாது. இன்னைக்கு..." என்றவன் நிமிர்ந்து,

"அவனுக்காக என்கிட்டயே நீ போடானு சொல்றா..." என்று புலம்பித் தீர்த்தான்.

"வினோத்... அவங்க பண்ணினது எல்லாம் தப்புதான். ஆனா... பாலா... அவரோடதப்பெல்லாம் உணர்ந்துட்டார். பாலா... நிச்சயமா நம்ம கீர்த்தியை விட்டுட மாட்டார். அவளோட வாழத்தான் அவரும் போராடிட்டு இருக்கார். கீர்த்திதான் இன்னும் தப்பு பண்ணிட்டு இருக்கா..." என,

"என்ன சொல்ற கவி? புரியலை..."

"அது... அது..." - தயங்கினாள் கவி.

"பாலாவும் கீர்த்தியும் இன்னும் வாழவே ஆரம்பிக்கலை. கீர்த்தி அவரை ஏத்துக்க முடியாம திண்டாடுறா. ஆனா, பாலா இல்லாமலும் அவளால் இருக்க முடியாது. இன்னும் சொல்லப் போனா... பாலா அவளோட சம்மதத்திற்காகக் காத்துட்டு இருக்கார்..." எனக் கீர்த்தி - பாலா தற்போதைய நிலையினைச் சொல்ல...

"இது வேறா?" - வினோத் முற்றிலும் உடைந்தே போனான்.

ஆக மொத்தம்... கீர்த்தி வாழ்க்கை... உடைந்து போன கண்ணாடிச் சிதறலாய்த் தோன்ற...

நேராகச் சென்றது.... மதுபாட்டிலின் துணை நாடி.

பாலா... அப்படியே நின்றிருந்த கீர்த்தியின் அருகில் நெருங்க...

"என் பக்கத்துல வந்தீங்க... நான் மனுசியா இருக்க மாட்டேன்..." என்றவளின் வார்த்தைகளில் இருந்தது ஆவேசம். கண்களில் தீப்பொறி பறந்தது.

"கீது, நான் சொல்றதைக் கேளு..." என்ற அவனின் வார்த்தைகள் காற்றில் பறக்க... அவனின் அறையை விட்டு வெளியேறினாள்.

"ச்சே!" என்று பாலாவால் மேசையைத்தான் கோபத்தில் தட்ட முடிந்தது.

அலுவலகம் என்பதால் அவனால் வேறு ஒன்றும் செய்ய இயலவில்லை.

கொஞ்சம்... கொஞ்சமாய் வெளிவரத் துடித்த கீர்த்தி யின் காதல் மனம் மீண்டும் அதன் கூட்டுக்குள் அடைந்தது.

மிகுந்த போதையில்... வினோத் காரை ஓட்டி வந்து கொண்டிருந்தான். எண்ணம் முழுக்க... கீர்த்தி மட்டுமே இருந்தாள். ஆத்திரத்தில் கண் சிவந்து உள்ளம் கொதிக்க... அவளின் வாழ்க்கை இனி என்ன ஆகும்? காதலிப்பாளாம். ஆனால் வாழ மாட்டாளாம். பைத்தியக்காரி! அவன் என்ன இவளை வைத்து அழகு பார்த்துக் கொண்டிருக்கிறானா... பாவி! பாலாவை நினைக்க... இன்னும் கோபம் வந்தது. நல்லவன் மாதிரி இருந்து... ராஸ்கல்! என்ன வேலை யெல்லாம் பண்ணியிருக்கிறான்... என்றவாறு வந்தவன்...

போதையில் உக்கிரமும் சேர... என்ன செய்கிறோம் என்று தெரியாமல்... ஓரமாய் நின்ற மரத்தின் மேல் மோதி விட்டான். நல்ல வேளை. கட்டாயம் போட்டாக வேண்டும் என்பதால் சீட் பெல்ட் போட்டிருந்தான். அதனால் பெரிதாக அடிபடவில்லை. நெற்றியில் மட்டும் ரத்தம் வழிந்தது. ஆனால், அதன் வலியெல்லாம் பெரிதாக இல்லை அவனுக்கு.

கீர்த்திகாவுக்கு... தான் மதுவினைப் பற்றிப் பேசியதில் ஏதோ தவறு நடந்து விட்டது என்பது பாலாவின் அழுத்தமான வார்த்தைகளில் தெரிந்தது. மேலும் வினோத் கோபம் வேறு அலைக்கழிக்க... அதற்கு மேலும் வீட்டில் இருக்கப் பிடிக்காமல்... என்னவோ ஏதோ என்று பாலாவைப் பார்க்கக் கிளம்பி விட்டாள்... தனியாக.

பாலாவைப் பார்க்க வந்த வழியில்... வினோத் அவள் பார்வையில் மாட்டினான். இது எதிர்பாராத நிகழ்வா... இல்லை, விதியின் பொம்மலாட்டத்தில் நடக்கும் நாடகமா... தெரியவில்லை. இல்லை, கீர்த்திகா வாழ்க்கை வினோத்தால் மறுவாழ்வு அடையப் போகும் அச்சாரமா... சென்னை மாநகரின் ஏதோ ஒரு தெருவில் மோதி இருந்த வினோத்... அவளின் கண்களில் பட்டான். அவன் அடிபட்ட அடுத்த பத்தாவது நிமிடத்தில்... ஏதோ கூட்டம் என்று இவளும் பதட்டத்துடன் போக... பார்த்தது வினோத்தை!

அலறியடித்துக் கொண்டு முன்னே சென்றவள்... அவனைக் காரிலிருந்து இறக்கி... மருத்துவ மனைக்கு விரைந்தாள். அங்கே... அவனுக்கு அவன் குடித்திருந்த காரணத்தால்... சிகிச்சை எடுக்கத் தயங்க... வேறு வழியின்றி... பாலாவிற்குக் கால் செய்தாள். அவனும் அதற்கான நடவடிக்கைகளில் இறங்க... ஒருவாறாக அவனுக்கு ட்ரீட் மெண்ட் ஆரம்பிக்கப்பட்டது.

"எதுக்குடி இப்போ அழுதுட்டு வர்ற... மனுசன் இருக்கிற நெலமையில... இப்படியே அழுதிட்டு வந்தேனு வச்சுக்க... அப்படியே இறக்கி விட்டுட்டுப் போயிடுவேன். கவி கூட வான்னா... பிடிவாதம் பிடிச்சு வந்த... நான் சொல்றதை எதுவும் கேட்டிராதே..." என்று கீர்த்தியின் அழுகையில்... எரிச்சலான பாலா... அவளை வேறு அர்ச்சித்துக் கொண்டே வந்தான்.

அவன் சொல்வதை என்று கேட்டாள் அவன் மனைவி!

அழுதபடியே... "மாமா, அத்தை வேற ஊர்ல இல்லை. இந்த நேரத்தில... எல்லாம் என்னாலதான்..." என்று இன்னும் வேகமாக அழ...

பாலா இப்போது அவளைச் சமாதானப் படுத்தும் விதமாக...

"சின்ன அடிதான் கீர்த்தி... கீர்த்திகா சொன்னா. சொன்னா கேளும்மா!" என்க,

"உயிர் போனதையே சின்ன ஆக்ஸிடெண்ட்னு சொன்ன ஆள்தானே நீங்க... நான் நம்ப மாட்டேன். எனக்கு வினோத்தைப் பார்க்கணும்..." அவனின் வார்த்தைகளை நம்பாமல் சிறு குழந்தை போல் தேம்பி அழ,

கடுப்பானான் பாலா. "ஏன்... இப்ப ஓவரா சீன் போடற... பெரிசா அடி இல்ல... டாக்டர் நாளைக்கு வீட்டுக்குப் போகலாம்னு சொன்னார்னு சொல்றேன். கேட்காம அழுதிட்டே வர... அவன் என்னடானா... ஓவரா கத்திட்டு... தண்ணியைப் போட்டுட்டுக் காரை மரத்தில விட்டுருக்கான். என்ன சீன் போடுறீங்களா... ரெண்டு பேரும். யார் பாசத்துல பெரிசுன்னு... சொன்னதைக் கேட்டானா! ரெண்டு நாளு விட்டத்தைப் பார்த்துட்டு உட்கார்ந்துட்டுப் போவானா... அதை விட்டுட்டு தண்ணியடிச்சானாம். மரத்தில மோதினானாம். இவ மாஞ்சு மாஞ்சு அழறா. நாங்கள்ளாம் அஞ்சு வருசமா உக்காந்துருக்கல. இப்போ நீ பேசாம வரல... நேரா வீட்டுக்குக் காரைத் திருப்பிடுவேன்..." என்று உச்சஸ்தாயியில் கத்த...

கப்சிப் ஆனாள் கீர்த்தி.

அமைதியாக வந்த கீர்த்தியைப் பார்த்தவன்... அவள் கன்னத்தில் வினோத்தின் கைவிரல் தடம் நேரம் ஆக ஆக நன்றாகத் தெரிய ஆரம்பித்திருந்தது.

"என்ன தைரியம் அவனுக்கு.... என் முன்னாலேயே அடிச்சுட்டான். படு பாவி. இவ படுத்தற பாட்டுக்கு... எனக்குத்தான் கோபம் வரணும். எனக்கே இன்னும் அந்த

தைரியம் வரல... கோபம் வந்தா அடிக்கத் தைரியம் வராம... ஏதேதோ செய்றேன்..." என்றபோதே,

'அவன் அடிச்சுட்டான்னு ஃபீல் பண்றியா... இல்ல... உன்னால செய்ய முடியாததை அவன் செஞ்சுட்டான்னு கோபம் வருதா உனக்கு...' என்ற மனச்சாட்சிக்கு... எனக்கு மட்டும்தான் அவளை அடிக்கவும்... அணைக்கவும் உரிமை. வேற யாருக்கும் இல்லை. இன்னொரு தடவை அவன் என் கீர்த்தனா மேல கை வைக்கட்டும்... என்று மனதினுள்ளே பதில் சொன்னான்.

அப்போது வினோத் போட்டு உடைத்த உண்மையும் ஞாபகம் வர.... இன்னைக்கு நைட் நமக்குக் கச்சேரிதான் இருக்கு போல... என்றவனுக்கு ஒன்று தெரிய வாய்ப்பில்லை. வினோத்தைப் பார்த்து விட்டுத் திரும்பி வரும்போது... வினோத் சொன்னது மட்டும் இல்லை... பாலாவின் கடந்த காலமும் கீர்த்திக்குத் தெரியப் போகிறது... என்று.

அவனின் கடந்த காலம் தெரியும்போது.. மதுவின் பாலாவின் மீதான அளப்பரிய காதல் அறிய வரும்போது... கீர்த்தியின் நிலை என்னவாக இருக்கும்? பொறாமைப் படுவாளா... கோபப்படுவாளா... வேதனைப்படுவாளா... தன்னவனை அவளுக்காக விட்டுக் கொடுப்பாளா?

- இரண்டாம் பாகத்தில் தொடரும் -